ஜாதகாலங்காரம்

Δ. 864
.134
120120

கீரனூர். நடராசரா லருளிச் செய்த

சாதகாலங்காரம்.

REGISTERED — COPY-RIGHT.

ஸ்ரீ முருகைய செட்டியர் — தி. கோ. [illegible]

T. G. ஜானகிராம் நாயகர் உத்திரவின்படி
A. முருகையசெட்டியாரால்,
சென்னை-பூமகள் விலாச பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.
விலை] 1934 [ரூபா-2

... Page Printed ... V. Press, Madras.
ஸ்ரீ அ. இ. ஈ. முருகைய செட்டியர் சித்தாந்த பதிப்பு வாக்கியம்

120130

D. 8:4
N34

[illegible]

செப்பனிடுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

ஜனவரி மாதம் வருடம் 1984

செப்பனிட்டு முடித்த

ஜனவரி மாதம் வருடம் 1984

ஆராய்ச்சி நிலையத்தின் கையொப்பம்

முன்னுரை

தோன்றி நின்றழியும் தொடுகடற் புவியிலுள்ள மாந்தர்கள் தங்கள் வாழ்நாளின் இன்ப துன்பங்களை ஆராய்ந்தறிந்துணர்ந்து துன்பத்திற் சூழாமல் இன்பத்தில் மகிழாமல் இடர்சித்தங்கொண்டு விலக்குவனவற்றை விலக்கி கொள்வனவற்றைக் கொண்டு ஆதற் கேற்றவாறு ஞான[illegible] உய்யும் வண்ணம் வேதசாகைகளில் ஒன்றாகிய (ஜோதிஷயக் கண்டவன் ஜோதிடன்.) இச்சோதிட சாஸ்திரத்தை கண்ணின்மணி போலக் கருதப்பெற்று வழங்கி வருகின்றது.

கீரனூர். நடராஜ ரென்பவர் கி. பி. 1725-ம் வருடத்திற்குமுன் வடமொழியி லியற்றியிருந்த ஜாதகசாரம், சாராவளி, பாராசரியம், சந்தானதீபம், பிரகஜ்ஜாதகம், சர்வார்த்த சிந்தாமணி, மணிகண்ட கேரளம், சம்புநாதம் முதலிய பல சோதிட நூல்களின் சாராம்சத்தை யநுசரித்து மட்டுகொண்டு தமிழில் சாதக அலங்கார மெனப் பெயர் தந்து விருத்தமெனும் நன்பாக்களால் செய்துவைத்தனர். அது கற்றோர்க்கன்றி மற்றோர்க்குப் பயன்படாதென யான் 1900-ம் வருஷத்தில் அதற்கு மூலமும் - விரிவுரையும் அச்சிட்டுக்கொண்டு வந்தனன். இப்போது சென்றுபோன என்பதைப் பொருள் என்னும் ஆதி என்பதைச் ஆதி எனச் சொற்களை மாற்றி திரிவுபடுத்தி இருக்கும் அச்சிட்டது உலகோர்க்கு என்ன பிரயோஜனமோ அறிவிர் மதியோர். வாங்குகிறவர் **ஆதி-உண்மையமைப்பை** இன்னதுதானென்று மோசம் போகாது ஆராய்ச்சி செய்து வாங்கிக் கற்று சித்தியை அடையும்படி வேண்டுகின்றோம்.

இப்படிக்கு,

அ. இ. ரா. முருகைய சோதிடர்,

அநுப்பபாளையம்,

கோயமுத்தூர் ஜில்லா.

ரிஜிஸ்டர் அறிவிப்பு

இதனால் அச்சுக்கூடத் தலைவர் முதலிய யாவருக்கும் தெரிவிப்பது யாதெனில்:—

சோதிட சார்வபௌமராகிய கீரனூர்-நடராஜரால் அருளிச்செய்த "சாதகாலங்காரம்" மூலத்தை ம-௱-௱-ஸ்ரீ, மா. வடிவேலுமுதலியார் அவர்களால் விரிவுரை எழுதி ரிஜிஸ்டர் காபிரைட் சுதந்திரத்தை என்னுடைய தகப்பனார், டி. கோபால்நாயகரால் கிரயத்திற்குப் பெற்றுக் கொண்டு என்னால் அச்சிட்டு வெளிப்படுத்தி யிருப்பதால் ஷை ஆதி விரிவுரையையும், டைடில் பேஜியில் * இச்சோதிட நூலைப் பரிசோதித்த அப்பாபாளையம், ஸ்ரீமான். அ. இ. ரா. முருகையசோதிடரின் ஆப்டோன் படத்தை யமைத்து ரிஜிஸ்டர் செய்திருக்கும் ஷை டிசைன் பிரகாரமும், யாதாமொருவர் நூதனமாக எழுதி அச்சிடுவாரேல், ரிஜிஸ்டர் காபிரைட் ஆக்டு விதிப்படி ஷை டைடில் டிசைன் காபிரைட் பினால் ரிஜிஸ்டர் ஆக்டு விதிப்படியும் யான் கோரும் நஷ்டத்திற்கும் பினல் கோட்டு செக்ஷன் குற்றத்திற்கும் உத்திரவாதிகளாகவேண்டுமென்பதைக் கவனிக்கக் கோருகின்றேன்.

இப்படிக்கு,

டி. கோ. ஜானகிராம் நாயகர்,

கொண்டன் பிரஸ், புரொப்ரைடர்,

நெ. 16, காளத்தியப்ப முதலி வீதி,

வேப்பேரி போஸ்டு, மதராஸ்.

* அ. இ. ரா. முருகைய சோதிடர் ரிஜிஸ்டர் மதிப்பாய் வாங்கவும்.

உ

ஸ்ரீகுரு துணை

சாதகாலங்காரம்

மூலமும் ஆதி-விரியுரையும்

பொதுப்பாயிரம்

விநாயகர் துதி

சீருலவுபுவியினார் சனனகாலயினில்
  நின்றநவக்கிரகத்தா னிகழ்த்துபலன்புகலும்
ஏருலவும்வடமொழியைச் செந்தமிழ்ச்சாதகநூல்
  எனத்தமியேனுரைசெய்ய வெழில்வேதமுனிவன்
பாருலகிற்குருகுலபா ரதக்கதையைவழுத்தப்
  பயிலும்வடகிரிமிசையிற் பரிந்துமருப்பதனால்
சீருலவவரைந்தருளுந் தெய்வதவாரணத்தின்
  செழுங்கமலத்தாளிணையைச் சிரத்தனில்வைத்திடுவாம்.

(இ - ள்.) சீர்-சமுத்திரமானது, உலவு-சூழ்ந்திருக்கின்ற, புவியில் - இந்நில வுலகத்தின்கண், நார் - (வாழ்கின்ற) மனுஷர்கள், சனனகாலயின்-பிறக்குங் காலத்தில், நின்ற - நிலைபெற்றிருந்த, நவக்கிரகத்தால் - ஒன்பது கிரகங்களின் வரிசைக்கிரமத்தால், நிகழ்த்து - நடத்தப்படுகின்ற, பலன் - பிரயோசனங்களை, புகலும்-சொல்லுகின்ற, ஏர் உலவும்-அழகு பொருந்திய, வடமொழியை-சமஸ் கிருத பாஷையிலிருந்த (சோதிடங்களை), செந்தமிழ் - இயற்றமிழில் (மொழி பெயர்த்து), சாதகநூல் என - சாதகாலங்காரம் என்னும் (பெயரால்), தமி யேன்-கல்வியறிவில்லாத எளியேனான், உரைசெய்ய - சொல்லுதற்பொருட்டு, பார் உலகில்-பரந்த இவ்வுலகத்திலே, குருகுல - குரு குலத்தாராகிய (துரியோத னுதியர் விஷயமான), பாரதக் கதையை - பாரதம் என்னும் பேருடையதான ஒரு கதையை, எழில் - அழகிய, வேதமுனிவன் - வேதவியாசரானவர், வழுத்த - முற்காலத்தில் சொல்ல, பயிலும் - இருக்கின்ற, வடகிரிமிசையில் - மேருமலையை ஏடாகக்கொண்டு அதனிடத்தில், பரிந்து - விரும்பி, மருப்பதனால் - தமது கொம்பை (எழுத்தாணியாகக்) கொண்டு, சீர் உலவ - சிறப்பாக, வரைந்தருளும் - எழுதியருளிய, தெய்வதவாரணத்தின் - தெய்வீகத்தன்மையுடைய யானைமுக விநாயகக் கடவுளின், செழுங்கமலம் - செந்தாமரைபோலும், தாளிணையை - உபய திருவடிகளையும், சிரத்தனில் - தலையின்கண், வைத்திடுவாம் - அணிந்து கொள்வோம், எ-று.

ஒரு கருமஞ்செய்வோர் அக்கருமம் முட்டின்றி முடித்தற்கு முன்னர் விநாயகக் கடவுளை வணங்குதல் முறைமையாதலால், இந்நூலாசிரியரும் தாம் சொல்லத் துணிந்த சாதகாலங்காரம் நிறைவேறற்பொருட்டு அக்கடவுளை இக் கவியால் சிறப்பாக வணங்கினார் என்பதாம்.

நடராஜர், சிவகாமசௌந்தரி, சத்தி, கணபதி, சண்முகன் இவர்கள் துதி

வைத்தபலபூதபே தங்களெழுவகையின்
மன்னுமுயிர்க்குயிராகி மணியொளிகளிலங்கு
பைத்தலைவளரவரசன் வியாக்கிரமாமுனியும்
பணியநடம்புரிபரமன் பங்கயத்தாடொழுது
கைத்திகிரிநெடுமாலொ டலர்விரிஞ்சன்மகவான்
கருணைபெறவணங்குசிவ காமசௌந்தரியின்
சத்திகணபதியமர ருறுசிறைமீட்டருளும்
சண்முகன்பொற்கமலமலர் தலைக்கணிவோமன்பாய்.

(இ - ள்.) வைத்த-உண்டாக்கப்பட்ட, பல-அநேகவகையாகிய, பூதபேதங்கள் - பூதசம்பத்தாலுண்டாகின்ற, எழுவகையில் மன்னும்-எழுவகை தோற்றங்களாக நிலைத்திருக்கின்ற, உயிர்க்கு-உயிர்களுக்கு, உயிராகி-உயிராகியும், மணியொளிகள் இலங்கு - ரத்தினங்களின் தேஜஸ் விளங்கிக்கொண்டிருக்கின்ற, பைத்தலை வளரவரசன் - பெரிய படத்தலையையுடைய பதஞ்சலி முனிவரும், வியாக்கிரமாமுனியும்-வியாக்கிரமபாதரும், பணிய-பணிந்து நமஸ்காரஞ்செய்ய, நடம்புரி - ஆனந்தத் தாண்டவஞ் செய்கின்ற, பரமன் - நடராஜப் பெருமானது, பங்கயம் தாள்தொழுது - தாமரைபோலுந் திருவடிகளைத்தொழுது, (பிறகு) கை, திருக்கரத்தின்கண், திகிரி - சக்கராயுதத்தையுடைய, நெடுமாலொடு - விஷ்ணுவுடன், அலர் - தாமரைமலரில் வசிக்கின்ற, விரிஞ்சன் - பிரமதேவன், மகவான் - இந்திரன், கருணைபெற - (ஆகிய இவர்கள்) திருவருளைப் பெறுதற்பொருட்டு, வணங்கு-பணிகின்ற, சிவகாம சௌந்தரியின்-சிவகாம சுந்தரியினுடைய, பொற் கமல மலர் - பொன்போலுஞ் சரணாரவிந்தங்களையும், அமரர்-தேவர்களுடைய, உறுசிறை - மிக்க விலங்கை, மீட்டு - நீக்கி, அருளும் - திருவருள்செய்த, சண் முகன் - ஆறுமுகக்கடவுளுடைய, பொற்கமலமலர் - பொன்போலுஞ் சரணாரவிந்தங்களையும், அன்பாய்மிக்க ஆவலோடு, தலைக்கு அணிவோம் - சிரத்திலணிந்துகொள்வோம், எ-று. 2

சமயகுரவர், திருத்தொண்டர் இவர்கள் துதி

அன்புருவாந்திருநாவுக் கரசர்வெண்ணெய்நல்லூர்
ஆதிசைவகுலதிலக ராகியவன்றொண்டர்
என்புருவாக்கியஞான சம்பந்தரெழில்சேர்
ஏதமறுவேதமதை யின்றமிழாலுரைத்த

இன்புருவாகியவாத வூரரறுபான்மூவர்
புகலடியார்முண்டகத்தாள் என்றலைமேற்கொண்டே
முன்புபெரியோர்வகுத்த சாதககரத்தில்
மொழிபொருளைச்சுருக்கிமுறை யேபுகலுவாமே.

(இ - ள்.) அன்பு உருவாம்-அன்பே திருமேனியாகக்கொண்ட, திருநாவுக் கரசர்-திருநாவுக்கரசு என்னும் அப்பர் சுவாமிகள், வெண்ணெய் நல்லூர்-திரு வெண்ணெய் நல்லூரிலிருந்த, ஆதி சைவகுல திலகராகிய-ஆதிசைவ பிராமண குல திலகராகிய, வன்றொண்டர்-சுந்தரமூர்த்தி சுவாமிகள், என்பு-எலும்பை, உருவாக்கிய-நல்ல பெண்ணுருவாகச் செய்த, ஞானசம்பந்தர்-திருஞான சம்பந்த சுவாமிகள், எழில்சேர்-அழகுபொருந்திய, ஏதம் அற-குற்றமற்ற, வேதமதை-இருக்கு முதலிய வேதங்களை, இன்தமிழால் உரைத்த-இனிய தமிழ் வேதமாகத் திருவாய்மலர்ந்தருளிய, இன்ப உருவாகிய-அமிர்த சொரூபமாகிய, வாதவூரர்-மாணிக்கவாசக சுவாமிகள், அறுபான்மூவர்-அறுபத்துமூன்று நாயன்மார்கள், (ஆகிய இவர்களுடைய) முண்டகத்தாள்-தாமரை மலர்போலுந் திருவடிகளை, என் தலையில் கொண்டு-என்னுடைய தலையில் வைத்துக்கொண்டு, முன்பு-பூர்வத்தில், பெரியோர் வகுத்த-சோதிடத்தில் வல்லவர்களால் சொல்லப்பட்டிருந்த, சாதககரத்தில் - சாதகமென்னும் சமுத்திரத்தில், மொழி-சொன்ன, பொருளை-சோதிட அரும்பொருளை, சுருக்கி-சுருக்கமாக்கி, முறையே-வரிசைக்கிரமமாக, புகலுவாம்-சொல்லுவோம், எ-று. 3

ஆசிரிய வணக்கம்

வாமமுதற்பலசமய வகைநூலாகமங்கள்
மன்னுசிவசமயசாஸ் திரவுண்மையெலாம்
தாமுமிகவுணர்ந்தடியார் பரிபாகமறிந்து
தயவுடனேதிருநோக்கால் சஞ்சிதங்களகற்றி
ஓமவிதியுஞ்சமய பேதமுமுரைத்தே
நேராகநிலைநிறுத்தி யுண்மையுமெய்யுயிர்க்குப்
பூமலிதன்செல்வமுங் காட்டியருள்வழங்கும்
புகழ்ஞானபாஸ்கரன் பொன்னடியைப்பணிவாம்.

(இ - ள்.) வாமமுதற் பல சமயவகை நூல்-வாமம் பசுபாதம் முதலிய உட் சமயம் ஆறின் நூல்களும், ஆகமங்கள்-இருபத்தெட்டு ஆகமங்களும், மன்னுசிவ சமய சாஸ்திர உண்மை-விளங்குகின்ற சித்தாந்த வேதாந்த-சாஸ்திரங்களும், (ஆகிய) பலவும்-எல்லாவற்றையும், தாமும் மிகவுணர்ந்து-நன்கு ஆராய்ந்தறிந்து, அடியார் பரிபாகமறிந்து-தம்மிடத்து அடிமைப்பட்ட சீடர்களது பரிபக்குவத்தை யறிந்து, திருநோக்கால்-தமது திருநாட்டத்தால், தயவுடன்-மிக்க இரக்கத் துடன், சஞ்சிதங்கள் அகற்றி-சஞ்சித முதலிய வினைகளை நீக்கி, ஓம விதியும்-உபாசனைக்கிரமத்தையும், சமயபேத முதல்-சமயபேதங்களையும், உரைத்து-

உபதேசித்து, ஓர் எழுத்தில் ஐந்தெழுத்திருக்குந்தன்மையும்-ஒரு எழுத்தில் பஞ்சாக்ஷரங்களும் கூடியிருக்குந் தன்மையையும், மெய் உயிர்க்கு-உண்மையையுணர்த்தி ஜீவர்களுக்கு, பூமலிதன் சேவடியும் - அழகிய தம்முடைய திருவடியையும், காட்டி-விளக்கி, அருள் வழங்கும்-திருவருள் செய்கின்ற, புகழ் - கீர்த்தியையுடைய, ஞானப்பிரகாசன் - ஞானப்பிரகாசன் என்னுந் திருப் பெயரினையுடையனாகு ஆசிரியனது, பொன்னடியை பணிவாம்-பொன்போலுந் திருவடியை வணங்குவோம், எ-று. 4

நூல் வரலாறு

ஆதவன்புக்கவன்வேத வியாசன்பராசரனும்
அத்திரிரோமசன்வசிட்ட னவிமரிசிநாரதனும்
போதமிபனைகண்டயவனன் செளனகன்மநுபிருகு
புகழ்சனகனுங்கீரன் காசிபன்கார்க்கியனும்
ஓதியசாரதன்முதனீ ரொன்பதின்மர்கூடி
உரைசெய்தநான்கிலக்கத் தைம்பதினாயிரமாம்
சீர்பெறுஞ்சோதிடத்திற் றெரிந்தெடுத்தவுண்மை
நிறைந்தபொருடனைக்கருத்தி னினைத்துமிகத்தானே. 1

(இ-ள்.) ஆதவன் சாரதன்-ஆதவன், புக்கவன், வேதவியாசன், பராசரன், அத்திரி, உரோமசன், வசிட்டன், மரீசி, பௌலசன், யவனன், சௌனகன், மநு, பிருகு, சனகன், அங்கீரன், காசிபன், கார்க்கியன், நாரதன், முதல் - முதலிய, ஈரொன்பதின்மர் கூடி-பதினெண்பேர்களுஞ் சேர்ந்து, உரை செய்த நான்கு இலக்கத்து ஐம்பதினாயிரம்-சொல்லிய நான்கு லக்ஷத்து ஐம்பதினாயிரம் கிரந்தங்களைக்கொண்ட, சீர்பெறுஞ் சோதிடத்தில்-சிறப்புற்ற சோதிடங்களில், தெரிந்தெடுத்த-சலித்தெடுக்கப்பட்ட, உண்மை நிறைந்த பொருள்தனை-பூர்த்தியாக மெய்ம்மை விளங்குகின்ற பொருளை, கருத்தில் மிக நினைந்து-என் இதய மனத்தில் மிகுதியுஞ் சிந்தனைசெய்து,* எ-று. 5

இதுமுதல் நான்கு செய்யுட்கள் குளகம்.

தானசபதபசீல கோவிந்தகோத்திரத்தான்
தன்முலைதிட்டைக்குடிமேவுஞ் சாமசமுத்திரமாம்
மாணபரன்திருமலையன் காரணவன் மேவும்
மறைமுனிபராசரமுநிவன் வாமதுநாராயணன்
தேனுலவுபொழில்வெதிரி வனப்பாமகத்தன்
திருவருள்பெற்றிடுஞ்சிதா னந்தசிவயோகி
ஞானபரன்றருள்வேதன் சீழமுத்தார்மேவும்
காராயணாரியரோர் கவின்றவடமொழியும்.

(இ-ள்.) தானசபதபசீல கோவிந்த கோத்திரத்தான்-தருமம் செபம் தவம் ஆசாரம் முதலியன மிகுதியும் செய்பவரான கோவிந்த-கோத்திரத்திலே, தன்முலைதிட்டைக் குடிமேவும்-தன்முலைதிட்டையென்ற வழியிலுள்ளார் குலத்திலே பிறந்தவராய், சாம சமுத்திரமாம் மாணபரன்-சாமவேதத்தை மற்றிலே கற்றுணர்ந்தவராய், திருமலையமர்கள்-இருந்த திருமலையையர்களாரும், அவனவன் மேவும் மறைமுனி பராசரமுநிவன் வாமது நாராயணன்-அவர் அடிச்சேர்ந்தாரும் வேதவியாசர்க்கு வரப்பிரசாதன் என்று சொல்லப்படுகின்றவருமாகிய நாராயண ஐயங்காரும், தேன் உலவு பொழில் வெதிரிவனப் பாமகத்தன் திருவருள் பெற்றிடும் - தேன் பொருந்திய சோலைசூழ்ந்த வெதிரிகாச்சிரமத்திற்குத் தலைவனது திருவருளைப் பெற்ற, சிதானந்த சிவயோகி ஞானபரன் அருள்-சிதானந்த யோகியாரளித்த, வேதன்-பிரமகுலத்தவனான, சீழமுத்தார் மேவும்-சீழமுத்தாரில் வசிக்கின்ற, நாராயண-காராயணராயர், இவர் மூவர்-(ஆகிய) இவர்கள் மூவரும், கவின்ற வடமொழியும்-சொல்லியருளிய மைம்பிருத கிரந்தங்களையும், எ-று. 6

இந்நூற்கு முதனூலாராய்ச்சி

மொழிசுருதியாகமசாஸ் திரங்களுஞ்சோதிடத்தின்
முதனூனிதபலபாக முழுதுமுணர்ந்தகாவியமும்
ஒழியாதசமயசாஸ் திரதருக்கவிதியும்
உணருமந்திரார்ச்சனைவே தியனுமுறைதந்ததுரும்
பழியாதபல்பாகஞ் சாதகநிலைமையும்
பரிவிட்டகவிதம் பகர்ந்தநூலும்
அழியாதவட்டவைசுவரியம் திடப்படுத்திய
டலங்காரசாதகத்தி னடையுமிகவோர்ந்தே.

(இ-ள்.) மொழிசுருதி யாகமசாஸ்திரங்களும் - சொல்லப்பட்ட வேதம் ஆகமம் சாஸ்திரமாகிய இவைகளையும், சோதிடத்தின் முதனூனித பலபாக முழுதும் - காவியமும்-சோதிடத்தின் முதனூல் வரிசைக்கிரமம் கணிதம் பலன் சொல்லும் பாகங்கள் பெருநூல் முதலியவைகளையும், ஒழியாத சமயசாஸ்திர தருக்கவிதியும்-வைதிகசைவம் கற்றுணரும் நீங்குதலில்லாத சித்தாந்தசாஸ்திரங்கள் தருக்கங்கள் முதலியவைகளையும், உணரும் - கற்றுணர்ந்த, மந்திரார்ச்சனை வேதியன் - மந்திரார்ச்சனை வேதியன் என்போன், உரைத்தருளும்-சொல்லிய, பழியாத-குற்றமில்லாத, பலபாகம் சாதக நிலைமையும் பயில் அரிட்டம் கவிதம் பகர் நூல்-பெரும்பலபாகம் முதலாகச் சொல்லப்பட்ட நூல்களையும், அழியாத-கெடாத, அட்டவைசுவரிய விதிப்படி யோக-எட்டுவித ஐஸ்வரியங்களை யெடுத்துக்காட்டும் விதிபோல், அலங்கார சாதகத்தின் அடையும் மிக ஓர்ந்து-சாதகாலங்காரத்தின் கிரமங்களையும் ஒன்றுபடவுணர்ந்து, எ-று. 7

இதுவுமது

ஓராசாரத்துச்சார வர்பாராசாரியம்
உயருஞ்சாதகந்திபட்டபராசரத்துடனும்

சீராருஞ் சருவார்த்தம் பெறுசிந்தாமணியும்
செப்பியகேரளஞ் சம்புநாதமுதற்றெரிந்து
பேராரும்பாவகங்க டொறும்பலனைப்பிரித்துப்
பிறைகதிர்செவ்வாய்புந்தி பிருகுசனியரசன்
கூராரும்வாளரவு முதலோரைத்தொழுதே
கூறுகின்றேனவரருளைக் கொண்டுமிகத்தானே.

(இ - ள்.) ஜாதகசாரம் சாராவளி பாராசாரியம் - ஜாதகசாரம் சாராவளியையும் பாராசாரியத்தையும், உயரும் சந்தானதீபம் பிருகசாதகமும் - மேன்மையுடையதான சந்தானதீபத்தையும் பிருகத் சாதகத்தையும், சீர் ஆரும் சர்வ அர்த்தம் பெறு சிந்தாமணியையும் - சிறப்புப் பொருந்திய பலன்களை ஆழ்ந்த பொருளுடன் பெற்றிருக்கின்ற சிந்தாமணியையும், செப்பிய கேரளம் சம்புநாத முதல் தெரிந்து - சொல்லிய கேரளஞ் சம்புநாதமுதல் அங்கிய பாவநாதன்களையு முணர்ந்து, பேர் ஆரும் பாவகங்கள் தோறும் பலனைப் பிரித்து - இன்னின்ன பாவமென்று பேர் பெற்றிருக்கின்ற பன்னிரண்டு பாவகங்களின் பலன்களை யெல்லாம் பிரித்து, பிறை கதிர் செவ்வாய் புந்தி பிருகு சனியரசன் கூர் ஆரும் வாளரவு முதலோரைத் தொழுது - சந்திரன் முதலிய நவக்கிரகங்களைத் தொழுது, அவரருளை மிகக் கொண்டு - அந் நவக்கிரகங்களுடைய திருவருளை மிகுதியும் அடைந்து, கூறுகின்றேன் - இந்நூலைச் சொல்லுகின்றேன், எ-று. 8

நூலின் பெயரும் உட்பொருளும்

கொண்டுதமிழ்ச்சாதகா லங்காரமெனப்பேர்
குறித்தரிட்டஞ்சயம்ராஜ யோகமுமங்கிசையும்
மண்டியகட்டாட்சியுச்சம் பகைநீசம் பலன்கள்
மருவுதிரேக்காணமுடன் மூலதிரிகோணம்
கண்டிடும்வேளைக்குணக்க ளோரைமகாதசையும்
காலசக்கரமுதலா வங்கிசையாஞ்சக்கரமும்
பிண்டியலக்கினமுதலாய்ப் பன்னிருபாவகத்தில்
விரித்தபலனிவைதெரிந்து விளம்பவுற்றனரே.

(இ - ள்.) கொண்டு - மேலே சொல்லப்பட்ட நூல்களையெல்லாம் ஆதாரமாகக் கொண்டு, அரிட்டம் சயம் ராஜயோகம் அங்கிசை கட்டு ஆட்சி உச்சம் பகை நீசம் பலன்கள் மருவு திரேக்காணம் மூலத்திரிகோணம் கண்டிடும் வேளைக் குணங்கள் ஓரை மகாதசையும் காலசக்கரமுதல் அங்கிசையாம் சக்கரமும் - அரிட்டமுதல் அங்கிசச்சக்கரமீறாயும், பிண்டியலக்கின முதலாய்ப் பன்னிரு பாவகத்தில் விரித்த பலன் - பொருந்திய லக்கினமுதல் பன்னிரண்டு இராசிகளையும் சார்ந்த பன்னிரண்டு பாவகத்திலும் சொல்லவேண்டிய பலன்களுமாகிய, இவை தெரிந்து - இவைகளை யெல்லாம் நன்கு விளக்கி, தமிழ்ச் சாதகாலங்கார மெனப் பேர் குறித்து - இந்நூற்குச் சாதகாலங்காரம் என்று பேரிட்டதாகும், எ-று. 9

அவையடக்கமும் சோதிடக்கிரந்தமும்

உற்றதொகைசா னிலக்கத்தைம்பதினாயிரமென்
றுரைத்தவடமொழி வெற்றிநெறிகதினைகவித்
பெற்றிமேவிச நாற்றிசொருபங்கின்பொருளைப்
பேருலகிற் சாதகாலங்கார மென்றே
வெற்றிசெறிசெந்தமிழ்புணர்ந்துறும் பெரியோர்
வீற்றிருக்குஞ் சபைதனில்யான் விளம்பியபுன்மொழியிற்
குற்றமுரையார்கருணை புரிவரறியாத
குதலைமொழிக் குழவியின்சொற் குறித்தறிவார்போல.

(இ - ள்.) வெற்றிசெறி செந்தமிழ்புணர்ந்துறும் பெரியோர் வீற்றிருக்குஞ் சபைதனில் - மிக்க ஜயத்தைப் பெற்றதாகிய இயற்றமிழ்க் கல்வியை நன்கு ஆராய்ந்தறிந்த பெரியோர்கள் கூடியிருக்கின்ற சபையின்கண், உற்ற தொகை சான்றிலக்கத் தைம்பதினாயிரம் என்றுரைத்த வடமொழி வெற்றின் பொருந்திய நான்கு லட்சத்தைம்பதினாயிரமென்று சொல்லுந் தொகைச்சுலோகங்களையுடைய மைமிருத மகோபின்கண், ஒரு கடுகினைவிற்பெற்றிடு மங்கிசத் தாற்றிலொரு பங்கிலொருபங்கின் பொருள்களை - ஒரு கடுகினளவின் நூறுபங்கிலொரு பங்கின் பொருள்களையே, பேர் உலகில் - இவ்வுலகத்தின்கண், சாதகாலங்காரம் என்று விளம்பிய புன் மொழியில் - சாதகாலங்கார மென்கிற பெரிய பேரை வைத்துச் சொல்லிய அற்ப சொற்களில், அறியாத குதலை மொழிக் குழவியின் சொற்குறித்தறிவார்போல - புத்தியறியாத குழந்தைகள் பேசுஞ்சொற்களில் குற்றம்பாராது குணங்கொள்வதுபோல, குற்றமுரையார் - யாதொரு குற்றத்தையு முரையாமல், கருணைபுரிவர் - கிருபைசெய்வர், எ-று. 10

சாதகமென்ப தின்னதெனல்

குறித்திடுசாதகமென்ப தவரவர் தம்வினையின்
குணங்களறிந்தயன் விதித்த கொள்கையுளதன்றே
மறித்துமவரவர்தமக்குவரும் பலபாவகத்தின்
வகையறிந்துபெரியோர்கள் வழுத்திடுசொல்லதனைப்
பிரித்தறிந்துசயம்வருமென் றுளமகிழ்ச்சிபொங்கப்
பின்னகடம்வருதற்குப் பீதியென்கொலென்று
செறித்துருமசாஸ்திரத்தின் சாந்திசெய்தபின்னும்
சிறைநத்தகையம் பெறுவதற்கே நிகழ்த்தினர்சாதகமே.

(இ - ள்.) குறித்திடு சாதகம் என்பது - சாதகம் என்று சொல்லப்படுவது என்னவென்றால், அவரவர் தம் வினையின் குணங்களறிந்து அயன் விதித்த கொள்கையுளது அன்றே - ஜீவர்களின் வினைகளையறிந்து அவ்வவர்களுக்குத் தக்கவாறு நன்மை தீமைகளை அநுபவிக்கும்படி பிரமதேவன் ஏற்படுத்திய அவ்வொழுங்கும், மறித்தும் அவரவர்தமக்கு வரும் பலபாவகத்தின் வகையறிந்து

மீண்டும் அவர்களுக்கு வரும் பலன்களைப் பிரியப்படுத்தி, பெரியோர்கள் வழுத்திய சொல்லுதலைப் பிரித்தறிந்து - பெரியோர்களால் சொல்லப்பட்ட சோதிடங்களைப் பகுத்துணர்ந்து, சுபம்வரும் என்று உளம் மகிழ்ச்சிபொங்கத் தன்மை வருமென்றால் மனத்துச்சந்தோஷிக்கவும், பின் அசுபம் வரின் அதற்குப் பிரதியென் கொல், என்று-பிறகே அசுபம் வருவதாயிருந்தால் அதற்குப் பிரதி யாது என, தெரிந்தரும சாஸ்திரத்தின் விதிசாந்தி செய்து-தருமசாஸ்திரத்தில் சொல்லியபடியே சாந்தியாதிகள் செய்து, நிறைந்த சுபம் பெறுவதற்கே நிகழ்த்தினர் சாதகம்-பூரண நன்மையை யடைவதற்கே சாதக நெறிமுறைப் பெரியோர்கள் சொன்னதாகும், எ-று. 11

சாதகபலனோதுமுறை

சாதகத்தைலனுரைத்து முறைமையைக் கேண்மடவார்
தமக்குமணப் பொருத்த மனைத்தானபார்க்குமுனம்
பெயர்த்தசுபொருத்தம்பார்ப் பதற்குமுன்னரச்சப்
பொருத்தம்பார்ப்பதுபோது முகூர்த்தங்கடமக்கே
ஓதியசக்கரந்திட்டிப் பிராணனெறிவேலை
உணர்வதற்குமுன் விதித்த புதுவனர்தல்போதும்
நீதியுடன் பலபாகம் பார்ப்பதற்கு முன்னே
நிறைபீவன் றிளைபதிந்து வெழுத்தாக சாதகமே.

(இ - ள்.) சாதகத்தைப் பலன் உரைத்து முறைமையைக் கேள்-சாதகமானது அவரவர்களுடைய பலாபலன்களைச் சொல்லுகின்ற தன்மையைக் கேள், மடவார் தமக்கு மணப்பொருத்தம்-பெண்களுக்கு விவாகப் பொருத்தம், அனைத்தான் பார்க்குமுனம்போது - அங்ஙனம் பார்க்கின்ற அக்காலத்தில், சுபப்பொருத்தம் பார்ப்பதற்கு முன்னர் - சுபப்பொருத்தம் பார்ப்பதற்கு முன்னமே, ரச்சப் பொருத்தம் பார்ப்பதுபோதும்-விருக்ஷ (கழுத்து) பொருத்தம் பார்ப்பது போதும், முகூர்த்தங்கள் தமக்கு - ஒவ்வொரு முகூர்த்தங்களுக்கும், ஓதிய சக்கரம் திட்டி-சொல்லப்பட்ட சக்கரதிருஷ்டி, பிராணனெறிவேலை உணர்வதற்கு முன்-ஆயுட்காலம் இவையிளைத் தெரிந்து சொல்வதற்கு முன், விதித்த வழி உணர்தல்போதும் - ஏற்படுத்தப்பட்ட சூத்திரங்களைத்தெரிந்து கொள்வது போதும், நீதியுடன் பலபாகம் பார்ப்பதற்கு முன்னே-கிரமப்படி பல பிரிவுகளைப் பார்ப்பதற்கு முன்னர், நிறைநீவனிளைபதிந்து விழுத்தாக சாதகமே-ஆயுட்கால நிர்ணயத்தைத் தெரிந்து சாதகம் ஏற்படுத்தக்கடவர், எ-று. 12

மாணுக்கன் விதி

சாதகவாரிதியதனிற் சிறந்திலங்கு மெனவுஞ்
சாற்றுபலபாகமுறைத் தமிழ்ப்படுவ லதனில்
ஓதியசற் பலனறிந்து பகர்வதற் கேயுரிய
உத்தமசற் குணம்பொருந்து மையறிவுடைமை நீதி

சதிர்ப்பெரியோர்சிறந்தவன் பெரியோர்கடமை
வழிநிற்குமாணாக்கனிளைக்குமுடையனாவான்
நிதானமுற நினைபோதர மருதமிகுவார்த்தை
செறித்திமொழுக்கமுக்கே செப்புமாணுக்கனாமே.

(இ - ள்.) சாதகவாரிதியதனிற் சிறந்திலங்குமெனவும் சாற்றுசாதக சாஸ்திரம் என்னும் கடலுள் சிறந்து விளங்குவனவும், பலபாகமுறையும் தமிழ் படுவனதனில் ஒதிய - பலவகைப்பட்ட நற்றமிழ்ப் பாடல்களால் சொல்லப்பட்ட, அதிலுள்ள பலன்களை அறிந்து சொல்வதற்கு, உரிய உத்தம சற்குணம் பொருந்து அறிவு மையுறீதி சதிர் பலவகைத் தெரிவோன்-பொருந்திய உத்தமகுணம் பொறுமை நல்லறிவு தருமசாஸ்திரப்படி நடத்தல் தானம் வழங்குதல் முதலிய காரியங்களை யுடைய பல சாஸ்திரங்களிலும் ஆராய்வோனும், பெரியோர்கள் தம்மை எதிர்த்து ஏது சொல்லாமல் இணக்கமுடையனாய்-பெரியோர்களிடத்தில் அடக்கம் உடையவனும், சிறந்தெழுதியபோதும் அமுதமிகு வார்த்தை செறித்திடும்-இனிமையான சந்திரனைப்போலும் இனிய திருவசனங்கள் நிறைந்து, யாவருக்குமுக்கே செப்புவது நுணம்-நல்ல பிரயத்தனத்துக்குச் சொல்லுமென்னவனாகும், எ-று. 13

இலக்கினதாரமும் கேள்வியும்

செப்பியசோதிடபலாபலம் பகர்வதற்கேவில்
தெரிசேதத்தின்விழுச் சாயைதெரிந்தென்னாத்
தப்பாதுவேகண்டுருகுஞ் சாயிண்டத்தொளையின்
தன்மையெப்படியறிந்து இலக்கினை நூல்
ஒப்புடன்லக்கினசந்து கண்டாலக்காலே
உயர்கடிகாலக்கினமுந் திசையுணர்ந்துகண்டு
விப்பிரர்சோதிடல்லோர் சரணமதைப்போற்றி
பிராமணர்க்குப்பழுபாகம் விளக்கும்சாதனமே.

(இ - ள்.) செப்பிய சோதிட பலாபலம் பகர்வதற்கு-சொல்லப்பட்ட பலாபலன்களைச் சொல்லுவதற்கு, இரவிதேசத்தின் விழுச்சாயை தெரிந்தென்னச் சூரியன் செல்லும் ஆகாயம் முதல், தேசாந்தர சாயைப் படிகளைக் கணக்குப் பண்ணி, தப்பாது கண்டுருகுஞ் சாயிண்டத் தொளையின்-அதிலே காணப்படும் சாயிண்டத் தொளையின், தன்மைபெறு தன்மையை யுடைய, மருவிபுத்தி பொருத்தி, இலக்கினங்கள் நன்குணர்ந்து-இலக்கின கணிதம் செய்து, ஒப்புடன் லக்கின சந்து கண்டால்-சமத்துவமாக நில லக்கின சந்தி வரும் லக்கின முதலும் தம்முன் முறையாக காணப்பட்டால், அக்காலம்-அப்பொழுது, உயர்கடிகாலக்கின சந்தியை உணர்ந்து கண்டு-உயர்ந்த கடிகாரநீதியாய் லக்கினத்துடன் செய்து கண்டு, விப்பிரர் சோதிடல்லோர் சரணமதைப் போற்றி-பிராமணர்கள் சோதிடத்தில் வல்லவர்களாகிய அவர்களுடைய பாதம்

போற்றி, விளம்பினர்க்கு-சொன்னவர்களுக்கு, பலபாகம்-பலபலவகை நுதன்மை, மிக விளக்கும்-மிகவும் நன்றாய் விளக்கும், எ-று. 14

ஆக்கியோன் பெயர்

விளங்கியதோர்சகாத்தமா யிரத்தைந்நூற்றின்மேல்
மேலெண்பத்தேழுவிசு வாவசுவாமாண்டில்
களங்கமிலாவடமொழியைத் தான்றெளிந்துகண்டு
காசினியிற்சாதகா லங்காரமெனவே
வளங்குலவும்புகழ்பெறுநற் கீரனூர்வாழும்
வள்ளல்சேவடிநாதன் வரவுருவாய்வந்தோன்
உளங்களிகூர்ந்தருள்ஞான யோகநடராசன்
உரைத்தனனிப்பொருளுணர்ந்தோர்க் குண்மைதருந்தானே.

(இ-ள்.) விளங்கியதோர் சகாத்தமாயிரத்தைந்நூற்றின் மேல்மேலெண்பத்தேழு-விளங்குகின்ற சாலிவாகன சகாப்தம் 1587-ல், விசுவாவசுவாம் ஆண்டில்-விசுவாவசு என்னும் வருஷத்தில், களங்கமிலா வடமொழியைத் தான் தெளிந்து கண்டு-குற்றமில்லா சமஸ்கிருத பாஷையிலிருப்பதை தெரிந்து கொண்டு, காசினியில்-இவ்வுலகத்தில், சாதகாலங்காரம் என - சாதகாலங்காரம் என்னும் இந்நூலை, வளங்குலவும் புகழ்பெறும் கீரனூர் வாழும் வள்ளல் சேவடிநாதன் வரவுருவாய் வந்தோன்-வளப்பந்தங்கிய கீரனூரில் வாழும் வள்ளலாவானும் சேவடி நாதனது வரப்பிரசாதமே ரூபமாய் வந்தவனும், உளங்களி கூர்ந்தருள் ஞானயோக-மனங்களித்து அருளுகின்ற ஞானயோகங்களில் வல்லவனுமாகிய, நடராஜன்-நடராஜன் என்னும் பேருடையோன், உரைத்தனன்-சொன்னான், இப்பொருள்-இந்த சொல்லப்பட்ட விஷயங்களை, உணர்ந்தோர்க்கு-அறிந்துகொண்டவர்களுக்கு, உண்மை தரும்-(இந்நூலானது) உண்மையை விளக்கிக் காட்டும், எ-று. 15

பொதுப்பாயிரம்

சம்பூரணம்

பொதுலட்சணம்

துவாதசபாவக விவரம்

இலக்கின முதல்

முதலாவது பாவகம்

சீர்பெறுஞ்சன்மலக்கினத்ததிபர் சேர்த்திவிதிருத்திமெய்த்தப்
பேர்தருபலன்கண்மெய்த்திறஞ்சொரூபம்விருத்தியுதாமமத்தகமும்
ஏர்பெறுமுடாங்கஞ்சிந்திதங்கிலேசமிலக்கணங்கீர்த்திமூர்த்திகளும்
பார்தருஞ்சுபசந்தோஷமும்வயதும் பகர்தநுத்தானமென்றுரைக்கும்.

(இ-ள்.) சீர்பெறுஞ் சன்ம லக்கினத்ததிபர் - சிறப்புப் பொருந்திய ஜன்ம லக்கினாதிபதிகள், சேர்த்திவிதிருத்திடும்-பொருந்திய தன்மையைக் கொடுத்திடும்படியான, அந்தப்பேர் தருபலன்கள்-அந்தப்பேரை விளக்கும் லக்கினத்தாலான பலன்களாவன, மெய்-சரீரமும், திறம்-காந்தியும், சொரூபம்-ரூபமும், விருத்தி - செல்வமும், உதாமம் - இரத்தமும், மத்தகமும் - சிரமும், ஏர்பெறு-அழகிய, உடாங்கம்-பிரதியங்கமும், சிந்திதம்-நினைப்பும், கிலேசம்-மனவாட்டமும், இலக்கணம்-இலட்சணமும், கீர்த்தி-சிறப்பும், மூர்த்திகளும்-மூர்த்திகாரமும், பார்தரும்-உலகத்தில் வைக்கவேண்டிய, சுபம்-சுபகாரியங்களும், சந்தோஷம்-சந்தோஷமும், வயது-ஆயுள் முதலியவை தெரியச்சொல்லுமிடத்து, தநுத்தானமென்று உரைக்கும்-முதற்றானமென்று அறிக்குரைக்கும், எ-று. 1

இதற்கு இலக்கினபாவச் சிறப்புலட்சணமாம்.

இரண்டாவது பாவகம்

உரைத்திடுஞ்சவுபாக்கியந்தனங்குடும்ப மொளிசெவிநேத்திரம்
வித்தை, தரைப்பெருஞ்செல்வமுடன்புகல்வாக்கு சாத்திரக் கேள்வி
கண்முற்றும், விரைத்தெழுகமனமனமுத்தேச மேம்பட விரும்பு
செம்பொன்னும், இரைத்திடுமாக்கினமிரண்டிடத்தி னிலைமைகண்
டுரைசெய்வர் நின்றே.

(இ-ள்.) இரண்டு இடத்தில்-இரண்டாவது வீட்டில், உரைத்திடுஞ் சவுபாக்கியம்-சொல்லுகின்ற பூரணபாக்கியமும், தனம்-செல்வமும், குடும்பம்-குடும்பமும், ஒளிசெவி நேத்திரம்-பிரகாசமிகுந்த நேத்திரமும், வித்தை-கல்வியும், தரைப்பெருஞ் செல்வமுடன்-உலகத்தின்கண் மிக்கநிதியும், புகல்வாக்கு-வசனமும், சாத்திரக்கேள்விகள் முற்றும்-சர்வசாஸ்திர விசாரணையும், விரைத்தெழு கமனம்-விரைந்தெழுகின்ற நடையும், மனம்-மனசும், உத்தேசம்-உத்தேசமும்,

மேம்பட விரும்பும்-மிகுதியாக இச்சிக்கின்ற, செம்பொன்னும்-பொன்னிதியும் (செல்வமும்), நிரைத்திடு-வரிசைபடுத்துகின்ற, நவரத்தினம்-நவரத்தினமும், (ஆகிய இவைகளை) நின்று - நிதானித்தறிந்து, உரைசெய்வர் - (ஆன்றோர்) சொல்லுவார்கள், எ-று. 2

இதற்கு சேத்திரபலனே சிறப்பு லட்சணமாம்.

மூன்றாவது பாவகம்;

நின்றிடுமூன்றாமிடத்திற்றிருபாலுரைசெய்யும்பலன்கள்
வென்றிகொள்போகமடிமையாள்கானம் வீரியஞ்சத்துவந்துணைவர்
பொன்றிடாதணியகாதுநோய்கன்னபூடணம்புசித்திடுங்கலன்கள்
துன்றுவிக்கிரமஞ்சேவகவிருத்தி சூழ்தயிரியமுஞ்சொல்வர்.

(இ-ள்.) நின்றிடும் மூன்று ஆம் இடத்தில்-வரிசைக்கிரமமாக விருக்கின்ற மூன்றாமிடத்தைக் குறிக்குமிடத்தில், திருபால் உரைசெய்யும் பலன்கள்-அவர்களால் சொல்லுகின்ற பலன்கள், வென்றிகொள் போகம்-வெற்றி பெறுகின்ற போகமும், அடிமையாள்-ஆள் அடிமைகளும், கானம்-சங்கீதமும், வீரியம்-பராக்கிரமமும், சத்துவம்-பொறுமையும், துணைவர்-கனிஷ்ட சகோதரர்களும், பொன்றிடாதணிய காதுநோய்-நீங்காத ஆபரணமும் காதுநோயும், கன்னபூடணம்-கர்ணபூஷணமும், புசித்திடும் கலன்கள்-சாப்பிடும் பாத்திரங்களும், துன்று விக்கிரமம்-நெருங்கிய வீரமும், சேவக விருத்தி-உத்தியோகாபி விருத்தியும், சூழ்தயிரியங்களும்-கூடிய தயிரியங்களும், சொல்வர்-(ஆகிய இவைகளைப்) பலனாகச் சொல்லுவார்கள், எ-று. 3

இதற்கு கனிஷ்டசகோதர பலனே சிறப்பு லட்சணமாம்.

நான்காவது பாவகம்

சொல்லியவித்தைவாகனஞ்சுபங்கள் சூழும்வியாபாரமுமனையும்
வெல்லுமேம்பாடுஞ்சவுக்கியமன்னை விரும்புநல்லுறவினராகும்
நல்லகிட்சேபம்பரவிஷயங்க ணறைகமழ்பாற்பசுவினோடு
வல்லதோர்தேவதானமிப்பலனை வழுத்துநான்காமிடங்கொண்டே.

(இ-ள்.) நான்காம் இடங்கொண்டு-நான்காவது வீட்டைக் கொண்டு, சொல்லிய வித்தை-படிக்கின்ற கல்வியும், வாகனம்-வாகனமும், சுபங்கள்-சுப காரியங்களும், சூழும் வியாபாரமும்-நெருங்கிய வியாபாரமும், மனையும்-வீடும், வெல்லு மேம்பாடும்-கீர்த்தியும், சவுக்கியம்-சௌக்கியமும், அன்னை-மாதாவும், விரும்பு நல்லுறவினர் ஆகும்-விரும்புகின்ற உறவினரும், நல்ல கிட்சேபம்-நல்ல புதையலும், பரவிஷயங்கள்-அன்னிய ஸ்திரீபுருஷ விஷயங்களும், நறை-சுகந்தமும், கமழ்பால்-(பசும்பால்) பாக்கியமும், பசுவினோடு-பசுக்களும், வல்லதோர்-வலிவுடையதான, தேவதானம்-தேவாலயமும், இப்பலனை-(ஆகிய) இப்பலன்களை, வழுத்தும் - சொல்லக்கடவர், எ-று. 4

இதற்கு மாதுரு பலனே சிறப்புலட்சணமாகும்.

ஐந்தாவது பாவகம்

கொண்டதோர் மாமன்றாய் பெறும்புதல்வர் குலவுபூருவஞ்
செய்புண்ணியமும், தண்டமிழ்வாணர் புகல்பிரபந்தந் தரித்திடுங்
கர்ப்ப மந்திரங்கள், மிண்டியவித்தை விதரணம்புத்தி விரும்புமிப்
பலனெலா மறிந்தே, கண்டுரைத்திடுவ ரைந்தாமிடங்கொண்டே
கற்றுணர்ந்தருளு மாதவரே.

(இ-ள்.) கற்று உணர்ந்தருளும் மாதவர் - சோதிட நூலை நன்றாய்ச்சியில்வல்ல பெரியோர்கள், ஐந்தாம் இடம் கொண்டு - இலக்கினத்திற்கு ஐந்தாவது இடத்தைக்கொண்டு, கொண்டதோர் மாமன் - அம்மான்வர்க்கமும், பிதா-தந்தை வர்க்கமும், பெறும்புதல்வர்-பெறுகின்ற பிள்ளைகளும், குலவு பூருவம்செய் புண்ணியமும்-பூர்வபுண்ணியமும், தண்டமிழ்வாணர் புகல்பிரபந்தம் - இனிய தமிழ் பிரபந்தம் பெறலும், தரித்திடும் கர்ப்பம்-தங்கும்கர்ப்பமும், மந்திரம்-மந்திரங்களும், மிண்டியவித்தை-சத்காலக்ஷேபமும், விதரணம்-விசாரணையும், புத்தி-புத்தியும், (ஆக) விரும்பு-விரும்பப்பட்ட, இப்பலனெலாம்-இப்படிப்பட்டபலன்களெல்லாவற்றையும், அறிந்து-தெரிந்து, உரைத்திடுவர்-சொல்லுவர், எ-று. 5

இதற்குப் புத்திர பலனே சிறப்புலட்சணமாம்.

ஆறாவது பாவகம்

மாதுகேள்வியாதி சத்துருபீடை மற்றுமாயுதங்களா விரணம்
ஓதியஞாதியால்வருந் துன்பம் யுத்தமெய்வாதை பொற்கண்டம்
பேதமாங்கள்வர் புனல்மடந்தையரால்பிறங்கு பாம்பாலுநோயுளது
நீதிசேர் பிரதானிக்குமுஞ்சிறைவிலின்மையாறு மிடங்குறித்தே.

(இ-ள்.) மாதுகேள் - பெண்ணே கேட்பாயாக, ஆறும் இடங்குறித்து-ஆறாவது வீட்டைக்கொண்டு, வியாதி-வியாதியும், சத்துரு-பகையும், பீடை-துக்கமும், மற்றும்-இன்னும், ஆயுதங்களால் இரணம்-ஆயுதகாயங்களும், ஓதிய-சொல்லப்பட்ட, ஞாதியால்வரும் துன்பம்-தாயாதிகளால் உண்டாகும் வழக்கும், யுத்தம்-சண்டையும், மெய்வாதை-சரீரத்தில் நோயும், பொற்கண்டம்-பொல்லாத ஆபத்தும், பேதம் ஆம்-மாறுபாட்டையுடைய, கள்வர்-திருடரால் பயமும், புனல்-சலத்தால் பயமும், மடந்தையரால்-பெண்களால் துக்கமும், பாம்பால்-பாம்பினால், நோய்-அபாயமும், உளது-உண்டாவதும், நீதிசேர் பிரதானிக்கும்-அதிகாரஞ் செலுத்துதலும், சிறைவிலின்மை - சிறைப்படுதலுமாகிய பலன்களைச் சொல்வர், எ-று. 6

இதற்குச் சத்துருபலனே சிறப்புலட்சணமாம்.

ஏழாவது பாவகம்

சூழ்த்திடுங்கமனை மணமடந்தையர்க்குங் குமரர்கடமக்கு நல்வினயம்
கீர்த்திடு விபகாரந்தமர்கட செவ்வியோருதவி சன்மானம்
பிறித்தறிவியாபாரம் மணம்புரிதன்பின் மனையாள்வியம்பெறுதல்
மதிக்கயல்விழியா யெழுடன்கொண்டெழுத்தூவர் மறைமொழிப்புலவோர்.

(இ - ள்.) மதிக்கயல்விழியாய்-சுழல்கின்ற சேற்கண்டையோடுங் கண்களை யுடையவளே!, மறைமொழிப்புலவர்-வேதசாஸ்திரச் செய்த சோதிடவல்லவர்கள், எழுடன்கொண்டு-ஏழாவது ஸ்தானத்தைக்கொண்டு, சூழ்த்திடும்-சொல்லப்பட்ட, கமனம்-கூடுதலும், மடந்தையர்க்கும்-பெண்களுக்கும், குமரர்கள் தமக்கும்-ஆடவர்களுக்கும், மணம்-விவாகமும், நல்வினயம்-சந்தோஷமும், கீர்த்திடு-கொடுக்கின்ற, விபகாரம்-விவகார விசாரணையும், தமர்கட்டம்-சுற்றத்தார் கூட்டமும், செவ்வியோர் உதவிசன்மானம்-அரசர்கள் கொடுக்கும் வெகுமானமும், பிறித்தறி வியாபாரம்-கொள்ளல் விற்கலான வர்த்தகமும், மணம்புரிதல்-கலியாணம் கூடுதலும் போகங்களும், பின்-பிறகு, மனையாள்விடம் பெறுதல்-மனைவியின் வியோகமும், (ஆகிய இவைகளை) எழுத்துவர்-சொல்லுவர், எ-று. 7

இதற்குக் களத்திரபலனே சிறப்புலட்சணமாம்.

எட்டாவது பாவகம்

புலைநுழம்படையால் வாதைசேருபுத்தம் பொருப்பின்மேலேறி
வீழ்த்திடுதல், கிலெபெறும்வியாதி விக்கினம்கிலேசை கீள்பலதுன்பமோ
டிரணம், செலவிஞறட்டம் விழுக்காடு, செறிபகைமரணமித்தனையும்,
உலகினிலுயர்ந்தோ ரட்டமபலன்கள் ளைரசெய்வாருண்மையெடுத்
திட்டே.

(இ - ள்.) உலகினில் உயர்ந்தோர்-உலகத்திலுள்ள பெரியோராயுள்ளோர், உண்மையெடுத்திட்டு-பலிக்கும் உண்மையறிந்து சொன்னபடி, அட்டம பலன்கள்-எட்டாவது வீட்டைக்கொண்டு, புலைநுழம் படையால் வாதை-ஆயுதங்களால் துன்பமும், சேருபுத்தம்-யுத்தஞ்செய்தலும், பொருப்பின்மேல் ஏறி வீழ்த்திடுதல்-மலையின்மேலேறி விழுதலும், கிலெபெறும் வியாதி-கிலேசத்திருக்கும் வியாதியும், விக்கினம்-இடையூறும், கிலேசம்-கிலேசமும், கீள் பல துன்பம்-இன்னும் அநேக துன்பங்களும், இரணம்-இரணமும், செலவிஞறட்டம்-அதிக செலவினால் கட்டமும், விழுக்காடு-பெருமையும், செறிபகை-நெருங்கிய விரோதமும், மரணம்-மரணமும், (ஆகிய) இத்தனையும், இவைகளெல்லா வற்றையும், உரைசெய்வார்-சொல்லுவார், எ-று. 8

இதற்கு ஆயுட்பலனே சிறப்புலட்சணமாம்.

ஒன்பதாவது பாவகம்

பெற்றிடுந்தந்தைதகப்பயில்கருமம் பெருமைசேர்பாக்கியமடங்கள்
உற்றதோர்பரமபுண்ணியங்குளமுயர் திருப்பணியுபதேசம்
வெற்றிசேர்தீர்க்காவணம்புகழ்கூடம் விரும்பியசெல்வமீதெல்லாம்
கற்றறிந்தோர்களொன்பதாமிடத்தாற்கருணையும்பெறமொழிந்திடுவோர்

(இ - ள்.) கற்றறிந்தோர்-சோதிடநூலில் வல்லவர்கள், ஒன்பதாம் இடத்தால்-ஒன்பதாவது வீட்டைக்கொண்டு, பெற்றிடுந்தந்தை-பெற்றெடுத்த தகப்பனும், மகம் பயில்-யாகாதிகிருத்தியமும், கருமம்-தானதருமமும், பெருமைசேர் பாக்கியம்-கீர்த்தியும் செல்வமும், மடங்கள்-சத்திரம் சாவடிகளும், உற்றதோர் பரமபுண்ணியம்-மேலான புண்ணிய கருமமும், குளம்-தடாகமுண்டாக்கலும், உயர்திருப்பணி-தேவாலய பிரதிஷ்டையும், உபதேசம்-குருவினிடத்தில் உபதேசம்பெறுதலும், வெற்றிசேர் தீர்க்காவணம்-ஜெயம் பொருந்திய தண்ணீர்ப்பந்தல் சோலைகள் வைத்தலும், புகழ் கூடம்-பெருமைக்கு கிணறு வெட்டுவித்தலும், விரும்பிய செல்வமீதெல்லாம்-இவைமுதல் இன்னும் கிலேசமில்லாத செல்வங்கள் யாவற்றையும் அநுபவித்தலும், கருணையும்பெற-ஜீவகாருண்ய முதலியவைகளை, மொழிந்திடுவோர்-சொல்லுவார், எ-று. 9

இதற்கு பிதிர்பலனே சிறப்பு லட்சணமாம்.

பத்தாவது பாவகம்

மொழிந்திடும்பல புண்ணியம்புவியாளல் முயன்று பட்டணங்கடை
பித்தல், மொழிந்திடுங்கரும மிரக்கமெய்ஞ்ஞானம் பூசனைமனைபிதாப்
பலங்கள், ஒழிந்திடுமினிய தேவதாபத்தி யுயர் சவுரியம் பிரதாபம்,
இழிந்திடுமிரவு கருப்பமுநன்கலைவயுமினை பத்தாமிடப்பெயரென்னே.

(இ - ள்.) பத்தாம் இடப்பெயர்-பத்தாவது வீட்டைக்கொண்டு சொல்ல வேண்டிய பலன்கள், மொழிந்திடும் பல புண்ணியம்-சொல்லப்பட்ட அநேக தர்மங்களும்; புவியாளல்-அரசாளுதலும், முயன்று பட்டணங்கள் தாபித்தல்-முயற்சிசெய்து தன்பெயரால் பட்டணங்கள் உண்டாக்குதலும், மொழிந்திடுங்கருமம்-அங்கிய கல்வியும் (சற்கருமம் துற்கருமம்), இரக்கம்-தயையும், மெய்ஞ்ஞானப்பூசனை-ஞானம் தெய்வபூசையும், மனைவி-மனையாளும், பிதா-தகப்பனும், பலங்கள்-செய்யாவங்களும், ஒழிந்திடும்-ஒழித்தலும், இனிய-நல்ல, தேவதாபத்தி-தெய்வபத்தியும், உயர்சவுரியம்-உயர்ந்த பராக்கிரமமும், பிரதாபம்-பிரதாபமும், இழிந்திடும்-இழிவாகிய, இரவு-இரவில் சையோகமும் உத்தியோகமும், கருப்பம்-கர்ப்பமும், நன்-உணவும், கலைவயும்-போஜன விருத்தியும், (ஆகிய) இவை-இவைகளாகும், என்னே-என்று சொல்லக் கடவாய், எ-று. 10

இதற்கு கன்மபலனே சிறப்பு லட்சணமாம்.

பதினோராவது பாவகம்

மூத்திருந்தவர்சேவித்திடும்பேர்க ளிளங்கொடிமனைவிபொன்வித்தை
மின்னியலாபம்பயிர்பரிவேழம் விளங்குகல்விதண்டிகையும்
உன்னியமனத்தி னிக்கரும்பீது முத்தரியந்செறிவையும்
பன்னியபதினோ ரிடங்கொண்டு பரிந்துரைபுரிவர்பாவலரே.

(இ - ள்.) பலனைச்சோதிடத்தில் வல்லவர்கள், பதினோராம் இடமென்று பதினோராவது வீட்டைக்கொண்டு, என்றும் மூத்தவர்-மூத்தசகோதரர்களும், சேவித்திடும்பேர்கள்-சேவை செய்பவர்களும், இளங்கொடி மனைவி-இளையமனைவியும், பொன்-பொன்னும், வித்தை-வித்தையும், மின்னிய லாபம்-லாபமும், பயிர்-பயிரும், பரி-குதிரையும், வேழம்-யானையும், விளங்கு கல்வி-கல்விப்பத்தியும், தண்டிகை-பல்லக்கும், உன்னிய மனத்தின்-நினைக்கின்ற மனத்தின்கண், இக்கரும்பீதும்-அன்பம் ஒழிவும் விதமும், உத்தரியம் அடையானது, செறிவையும்-நெருக்கத்திலிருப்பதும், (ஆகிய இவைகளை) பரிந்துரை புரிவர்-விரும்பிச்சொல்வர், எ-று. 11

இதற்கு ஆதாயபவனென்று பெயர் வழக்கமாம்.

பன்னிரண்டாம் பாவகம்

பிரவமதியதேசத்திலுத்தியோகம் பணச்செலவுடனுதம்போகம்
பெரியசயனசவுக்கியம்விவாதம் வினைத்தொழில்புரிகன்மம்
ஆகுதோர்தானம்புண்ணியந்தியாகம் மருண்மகஞ்சார்வஞ்சகவிருத்தி
செவ்வேள்கொடியோனருளிதுவல்பெரியோர் செப்புவர்துவாதசபவமே.

(இ - ள்.) பெரியோர்-சோதிடநூலில் வல்லவர்கள், துவாதசபவன்பாவம்-பன்னிரண்டாவது வீடுபவன் பாவமும், அயலிதேசத்தில் உத்தியோகம்-இதரதேசத்தில் உத்தியோகமும், பணச்செலவு-திரவியசெலவும், உதம்போகம்-அடையும்போகமும், பெரிய சயனசவுக்கியம்-நித்திரைச் சவுக்கியமும், விவாதம்-விவாதமும், வினைத்தொழில் புரிகன்மம்-தொழிற்றுறைச் செய்கையும், ஆகுதோர்-ஆவதாகிய, தானம்-தருமமும், புண்ணியம்-புண்ணியமும், தியாகம்-பரோபகாரமும், மருண்மகம்-யாகதிகிரியையும், சார்வஞ்சகவிருத்தி-தொழில் வகைவிருத்தியும், (ஆகிய இவைகளை) செவ்வேள்கொடியோன் அருளிதுவல்-முருகக் கடவுளின் திருவருளால், செப்புவர்-சொல்லுவார்கள், எ-று. 12

இதற்குச் சயனபவனென்று பெயர்வழக்கமாம்.

பன்னிரண்டு பாவகங்களின் பொதுவிலக்கணம்

சம்பூரணம்.

காரககிரகங்கள்

சாற்றியபிதுர்கா ரகன்பகற்கிரவி சனிபிதுர்க்காரக னிசிக்குப்
போற்றியவன்னை காரகன்பகற்குப் புகர்நிசிக் கிந்துகாரகனும்
ஏற்றமாக்துணைவர் காரகன்செவ்வா யெழிற்சுதற் காரகனரசன்
ஆற்றியவாயுட் காரகன்சனியில் லாடனக்கே புகராமே.

(இ - ள்.) சாற்றிய பிதுர்காரகன் பகற்கிரவி-சொல்லப்பட்ட பகலுக்குப் பிதுர்காரகன் சூரியனும், சனி பிதுர்க்காரகன் நிசிக்கு-இரவிற்குப் பிதுர்காரகன் சனியாம், போற்றிய அன்னைகாரகன் பகற்குப் புகர்-பகலுக்கு மாதுர்காரகன் சுக்கிரனும், நிசிக்கு இந்துகாரகனும்-இரவிற்கு மாதுர்காரகன் சந்திரனும், ஏற்றமாக்துணைவர் காரகன் செவ்வாய்-உயர்ந்த சகோதரகாரகன் அங்காரகனும், எழிற் சுதன் காரகன் அரசன்-அழகிய புத்திரகாரகன் குருவாம், ஆற்றிய ஆயுட் காரகன் சனி-பொறுக்கின்ற ஆயுள்காரகன் சனியாம், இல்லாள் தனக்குப் புகராம்-களத்திரகாரகன் சுக்கிரனும், எ-று. 13

ஆனதோர்சரீர காரகன்வெய்யோ னங்கனைவாகன வகைக்கும்
தானுமேபிருகு காரகன்கன்மத் தனக்கெழிற் காரகனரசன்
ஞானமும்வித்தியா காரகன்புத்தி கனதனகாரகன் வேந்தன் [ப்பே.
தேனமர்மொழியாய் விலக்கினுதினையப்போற் றெரிந்துகாரகர் பலன்செ

(இ - ள்.) ஆனதோர் சரீரகாரகன் வெய்யோன்-எடுத்துள்ள உடலுக்குக் காரகன் சூரியனும், அங்கனை வாகன வகைக்குந் தானுமே பிருகு காரகன்-காமனை முதலியவற்றிற்குக் காரகன் சுக்கிரனும், கன்மந் தனக்கு எழிற்காரகன் அரசன்-கர்மத்திற்கு அழகிய காரகனாயுள்ளவன் குருவாம், ஞானமும் வித்தியா காரகன் புத்தி-ஞானமும் வித்தைக்குங் காரகன் புதனும், கனதன காரகன் வேந்தன்-செல்வத்திற்குக் காரகன் குருவாம், தேன் அமர் மொழியாய்-தேன்போலும் இனிக்குஞ் சொல்லையுடைய பெண்ணே! இலக்கினுதினையப்போல்-இலக்கின முதலிய பன்னிரண்டு பாவகங்களை யறிந்து பலன் சொல்லுதல்போல், தெரிந்து-இவ் விஷயத்தையும் நன்கு அறிந்து, காரகர் பலன்-காரககிரகங்களா லுண்டாகும் பலாபலன்களை, செப்பு-நீ சொல்லுவாய், எ-று. 14

கிரக தேவதை

அதாவது இன்ன கிரகம் இன்ன தேவதை யாகுமெனல்.

வேறு

ஆனவெள்ளிகுரு வயனுருமே
வானவிந்துபுதனு கன்மாபனும்
பானுஞ்சேயுஞ் சிவனெனப்பன்னுவர்
மானவஞ்சிய தேவதை மக்ஙனே.

(இ - ள்.) ஆனவெள்ளி குரு அயனுரும்-பொருந்திய சுக்கிரனும் குருவும், பிரமனுடைய அம்சமானவர்களும், வான இந்து புதனும் கன்மாபனும்-பெருமை பொருந்திய சந்திரனும் புதனும் விஷ்ணு அம்சமானவர்களும், பானும் சேயும் சிவன் எனப்-சூரியனும் அங்காரகனும் சிவன் அம்சமானவர்களும், மான வஞ்சிய தேவதை மக்ஙன்-சனி அதிக தேவதையு மாவார்களென்று, பன்னுவர்-சோதிடநூல் வல்லவர் சொல்லுவார்கள், எ-று. 15

கிரக வலிவு

அதாவது இன்ன காலங்களில் இன்ன கிரகங்களுக்குப் பலம் அதிகம் எனல்.

வேறு

அடுபக்ஷபுத்தி வைபாக்கிபலமதாகும்
வடதிக்கிற்பலனல்லோர்க்கு வளர்பக்கத்தனக்குமீத
திடமுறுமபரபக்கத் தீயோர்க்கேபலமதாகும்
படவாரவல்குன்மாதே பலனாகம்விளம்புங்காலே.

(இ - ள்.) படவாரவல்குல் மாதே - சர்ப்பத்தினது படம்போலும் நிதம்ப ஸ்தானத்தைப் பெற்றிருக்கின்ற பெண்ணே!, பலனாகம் விளம்புங்கால்-கிரகங்கள் செய்யும் பல பலன்களைப் பிரித்துச் சொல்லின், அசுபர்க்கு-பாபக் கிரகங்களுக்கு, அடல்தக்ஷயனத்தில் பலமதாகும்-பலம் பொருந்திய தக்ஷணாயனமாகிய ஆடிமாத முதல் ஆறுமாதங்களும் பலமாகும், நல்லோர்க்கு-சுபக்கிரகங்களுக்கு, வடதிக்கில் தைமாதமுதல்-ஆறுமாதங்களாகிய உத்தராயண காலத்திலும், வளர்பக்கம் தனக்கும்-வளர்பிறைக் காலங்களிலும், பலன்-பலமாம், தீயோர்க்கு-பாபக்கிரகங்களுக்கு, திடம் உறும்-பலமுள்ளதாகிய, அபரபக்கம்-தேய் பிறையில், பலமதாகும்-பலமாம், எ-று. 16

வேறு

பொன்னும்புதனுமுதயத்திற் பொருந்திவ்வலியரேயாவர்
மன்னுசனியுங்கரும்பாம்பும் வலியரத்தமனமாகில்
மின்னுங்கதிருங்குசனுமுச்ச மேவில்வலியர்விளம்புங்கால்
அன்னுமதிசுக்கிரனீர்க்கீழ்ச் சூழ்ந்தால்வலியராவரே.

(இ - ள்.) பொன்னும் புதனும் உதயத்தில் பொருந்தில் வலியரே யாவர் - குருவும் புதனும் ராசியில் பிரவேசிக்கும்போது ஆரம்பத்திலேயே பலன்

கொடுப்பவராவார்கள், மன்னுசனியும் கரும்பாம்பும் அத்தமனமாகில் வலியர்-நிலைபெற்றசனியும் ராகு (கேதுவும்) கடைசி அஸ்தமனமாகில் பலன்கொடுப்பவ ராவார்கள், மின்னுங் கதிருங்குசனும் உச்சமேவில் வலியர்-பிரகாசியா நின்ற சூரியனும் அங்காரகனும் உச்சமாகில் பலன் கொடுப்பவராவார்கள், அன்னும் மதிசுக்கிரன் நீர்க்கீழ் சூழ்ந்தால் வலியராவர்-சந்திரனும் சுக்கிரனும் ஜலராசியில் வலியவராவார்கள், எ-று. 17

இன்ன கிரகத்திற்கு இன்னகிரகம் வலிவுடையதெனல்.

செய்யும்புத்திரனைக்கதிசத்த செவ்வாய்வலிதுசெவ்வாயில்
வெய்யசனியும்வலியுமதினை விடவேயரசன்மிகவலியன்
துய்யவரசன்றனில்வெள்ளி வலியனவனிற்சோமன்மிகும்
பையசனிக்குக்கதிர்வலிது பானுவிற்பாம்பேவலிதே.

(இ - ள்.) செய்யும் புத்திரனைக்கு செவ்வாய் அதிகவலிது-புதக்கிரகத்தைப் பார்க்கிலும் அங்காரகிரகம் வலிவுடையதாம், செவ்வாயில் வெய்ய சனியும் வலிவு-அங்காரகிரகத்தைப் பார்க்கிலும் சனிகிரகம் வலிவுடையதாம், அதனை விட அரசன் மிகவலியன்-அந்தச் சனிகிரகத்தைப் பார்க்கிலும் குருமிகவும் வலிவுடையவனாவான், துய்யவரசன் தனில் வெள்ளி வலியன்-அந்தக் குருவைப் பார்க்கிலுஞ் சுக்கிரன் மிகவும் வலியவனும், அவனிற் சோமன்மிகும்-அவனைப் பார்க்கிலும் சந்திரன் வலிவுடையனாவான், பையசனிக்கு கதிர்வலிது-அந்தச் சந்திரனைப் பார்க்கிலும் சூரியகிரகம் வலிவுடையதாம், பானுவில் பாம்புவலிது-அந்தச் சூரியனைப் பார்க்கிலும் இராகு கேதுக்கள் வலிவுடையராவார்கள், எ-று. 18

கிரகங்களுக்கு இன்னின்ன ஸ்தானங்களில் பலன் எனல்.

உச்சமுச்சாங்கிசைநல்லோருடனு நல்லோருடன்வீட்டும்
மெச்சுமுறவோருடனுமவர் வீட்டுமித்திராங்கிசையில்
அச்சமறவேயவரவருக் காசமானவங்கிசையில்
இச்சையுடனேயுதிப்பலனு மிதனிற்பிழைத்தாலிலைப்பலனே.

(இ - ள்.) உச்சம் உச்ச அங்கிசை-உச்சவீட்டிலும் உச்ச அங்கிசையிலும், நல்லோருடனும் நல்லோருடன் வீட்டும்-சுபக்கிரகங்களோடும் அவர்களுடைய ஆட்சிவீட்டிலும், மெச்சுமுறவோருடனும் அவர் வீட்டும்-நட்புக் கிரகங்களோடும், அவர்களுடைய ஆட்சிவீட்டிலும், மித்திராங்கிசையில்-நட்புக்குரிய அங்கிசையிலும், அச்சமறவே அவரவருக்கு ஆசமான அங்கிசையில்-அச்சமில்லாதபடி அவரவர்களுக்கு ஆட்சியாக ஏற்படும் அங்கிசையிலும், இச்சையுடனே யுதிப்பலனும்-விருப்பத்துடன் கிரகங்கள் இருக்குமானால் அந்தச்சாதகன் நல்ல பலனையடைவான், இதனிற் பிழைத்தால் பலன் இல்லை-இந்தக் கிரமப்படி யில்லாவிடின் அந்தச் சாதகனுக்குப் பயனில்லை, எ-று. 19

இன்ன தானங்கள் இவ்வளவு பலனுடையவை யெனல்.

வேறு

உச்சமொன் றுடன் காலொன் றுகேந்திரம்
அச்சமுக்கா லதிபதி யோர்பலம்
மெச்சகட்புக் கரைப்பலமிக்ககால்
நச்சநீசர்பாலனெனச் சொல்லுமே.

(இ - ள்.) உச்சம் ஒன்றுடன்கால்-உச்சஸ்தானத்தில் ஒன்றேகால் பலனும், ஒன்று கேந்திரம்-கேந்திரஸ்தானத்தில் முழுப்பலனும், அச்சம் முக்கால்-பகைஸ்தானத்தில் முக்காற்பலனும், அதிபதி யோர்பலம்-ஆட்சிஸ்தானத்தில் முழுப் பலனும், மெச்ச கட்புக்கரைபலம்-நட்புஸ்தானத்தில் அரைப்பலமும், நச்சநீசர் பலன் மிக்ககால் என-நீசஸ்தானத்தில் கால்பலமுமாகவே, (கிரகங்களைத் தேர்ந்து) சொல்லும்-நூற்கள் சொல்லாநிற்கும், எ-று. 20

காலங்களில் வலிவுடைய கிரகங்கள்

சந்துசெவ்வாய் சனியிந் திராப்பலன்
வேந்தகுருதவன் வெள்ளிபகற்பலன்
போந்தபுந்திக்கெப் போதும்பலனளாம்
கூந்தல்வேளியக் குங்குமக்கொங்கையாய்.

(இ - ள்.) கூந்தல் வேள் இயக்குங்குமக்கொங்கையாய்-கூந்தலையும் பனைத்தெழுந்த ஸ்தனபாரங்களையு முடையவளே! சந்து செவ்வாய் சனி இந்து இராப் பலன்-சொல்லப்படுகின்ற அங்காரகன் சனி சந்திரன் இவர்களுக்கு இராக்காலத்திற் பலனும், வேந்தன் ஆதவன் வெள்ளி பகற்பலன் - குரு சூரியன் சுக்கிரன் இவர்களுக்குப் பகற்காலத்தில் பலனும், போந்தபுந்திக்கு எப்போதும் பலனளாம்-புதனுக்கு எக்காலத்திலும் பலனுண்டாம், எ-று. 21

ஆயவோரைக் கதிபர்க்கதிற்பலன்
ஆயவாரத் ததிபர்க்கதிற்பலன்
ஏயதிங்கட் கதிபர்க்கதிற்பலன்
காயும்வில்லிற் கதிர்சுபனாமே.

(இ - ள்.) ஆய ஓரைக்கதிபர்க்கு அதிற் பலன்-அந்தந்த ஹோரைக்கும் அதிபர்களுக்கு அவைகளில் பலனும், ஆயவாரத்து அதிபர்க்கு அதிற்பலன்-அந்தந்த வாரத்தலைவர்களுக்கு அந்தந்த வாரங்களிற் பலனும், ஏயதிங்கள் அதிபர்க்கு அதிற் பலன்-பொருந்திய மாஸங்களுக்கு அதிபர்களுக்கு அந்தந்த மாதங்களிற் பலனும், கதிர் காயும் வில்லில் சுபன் ஆமே-சூரியன் தனுமதியில் சுபக்கிரகமா யிருப்பான், எ-று. 22

புதனுக்குச் சிறப்பு விதி

ஆனபுந்தி சுபரோடடுத்திடில்
தானுநற்சுபனாகுவன் றாழ்வுறும்

ஈனதீயருட னிருந்தால்விழி
மானனாவன் மன்னுவன் றீயனும்.

(இ - ள்.) ஆனபுந்தி சுபரோடு அடுத்திடில் தானும் நற்சுபனாகுவன் - புதன் சுபக்கிரகங்களுடன் கூடினால் தானும் சுபனாவன், தாழ்வுறும் ஈனதீயருடன் இருந்தால் விழிமானன் ஆவன் தீயரும் மன்னுவன் - இழிந்த பாபக்கிரகங்களோடு சேர்வானாகில் அவனும் பாபியே யாவன், எ-று. 23

கிரக சுபாசுபங்கள்

நிறைமதியுந்தமனியனும் நிறைந்தசுபக்கிரகம்
சீர்க்கவிஞர்முக்காற் சுபக்கிரகம்புகரே
குறையுமரைச்சுபன் றேய்ந்த மதியுங்காற்சுபனும்
கூறுசனிபாம்புமுழுப் பாவிகளேசெவ்வாய்
அறையுமுக்காற்பாவியரைப் பாவிகதிரவனே
அனிபாவருடன்கூடிப்புதன் பிறைகாற்பாவி
இறைசனிபாம்புடன்கூடிற் சனிபோலப்பாவி
மிக்கமவாசியிற்புதனே முக்காற்சுபனே.

(இ - ள்.) நிறைமதியும்-பூரணசந்திரனும், தமனியனும்-குருவும், நிறைந்த சுபக்கிரகம் - முழுசுபக்கிரகங்களாம், சீர்க்கவிஞர்-சுக்கிரன், முக்கால் சுபக்கிரகம்-மூன்றுபங்குவரைக்கும் சுபக்கிரகமாம், புகர் - புதனுமவன், குறையும் அரைச்சுபன்-குறைந்தகாரிய இரண்டு பங்குவரைக்கும் சுபக்கிரகம், தேய்ந்தமதி-தேய்பிறைச் சந்திரனானவன், காற்சுபன் - ஒருபங்குவரைக்கும் சுபக்கிரகமாம், கூறு-சொல்லப்படுகின்ற, சனி-சனிஸ்வரனும், பாம்பு-ராகு கேதுக்களும், முழுப் பாவிகளே-முழுமைக்கும் பாவக்கிரகங்களே யாவார்கள், செவ்வாய்-அங்காரகன், அறையும்-சொல்லுகின்ற, முக்கால் பாவி-மூன்றுபங்குவரைக்கும் பாவக்கிரகமாம், கதிரவனும் - சூரியனும், அனி-வரிசையாகிய, பாவருடன் கூடும் - பாவக்கிரகங்களோடு கூடுகின்ற, புதன்-புதனும், அரைப்பாவி-இரண்டு பங்குவரைக்கும் பாபக்கிரகங்களாம், பிறை - பாவருடன் கூடிய தேய்பிறைச் சந்திரன், கால்பாவி-ஒருபங்குவரைக்கும் பாவக்கிரகமாம், இறை-குருவானவர், சனியுடன்-சனியினோடாவது, பாம்புடன்-இராகு கேதுக்களோடாவது, கூடின்-சேர்ந்தால், சனிபோல-சனி எப்படி முழுப்பாவியோ அப்படியே, சனி-முழுப்பாவக்கிரகமாவார், இந்து-பூரணசந்திரனானவன், அமாவாசியில் - அமாவாசைதினத்தில், புதனோடிருக்க-புதக்கிரகத்துடன் சம்பந்தப்பட்டால், முக்காற் சுபன் - மூன்று பங்குவரைக்கும் சுபக்கிரகமாவான், எ-று. 24

இதில் பாம்பு என்று பொதுவாகச் சொல்லினமையின் இராகு கேதுக்க ளிருவரையும், பிறை என்றதற்குத் தேய்ந்த சந்திரன் என்றும், இந்து என்றதற்கு வளர்ச்சந்திரன் என்றும் கொள்ளவேண்டும்.

கிரக நட்பு

ஆதவனுக்குறவு திங்கள் செவ்வாயும்பொன்னும்
அம்புலிக்குப்புதனுஞ் செங்கதிருமிருவர்நேசம்
நீதிசெறிசேய்க்குறவு குரு திங்கள் வெய்யோன்
நின்றபுதன்றனக்குச் சுக்கிரனிரவிநேசம்
ஓதியபொன்றனக்குறவாங் கதிர்திங்கள்செவ்வாய்
உயர்வெள்ளிக்குறவு சனியுடன் புந்தியிருவர்
பூதலமேற்சவுரிக்கே புதனுஞ் சுக்கிரனும்
பொருந்தியநல்லுறவென்றே போற்றிடுவர்புலவோர்.

(இ-ள்.) ஆதவனுக்கு-சூரியனுக்கு, திங்கள்-சந்திரனும், செவ்வாய்-அங்காரகனும், பொன்-குருவும், உறவு-நட்புக்கிரகங்களாம், அம்புலிக்கு-சந்திரனுக்கு, புதன்-புதனும், செங்கதிர்-சூரியனும், இருவர்-ஆகிய இருவரும், நேசம்-நட்புக்கிரகங்களாம், நீதிசெறி-நியாயம் நிறைந்த, சேய்க்கு-அங்காரகனுக்கு, குரு-குருவும், திங்கள்-சந்திரனும், வெய்யோன்-சூரியனும், உறவு-நட்புக்கிரகங்களாம், நின்ற-நிலைபெற்ற, புதன் தனக்கு-புதனுக்கு, சுக்கிரன்-சுக்கிரனும், இரவி-சூரியனும், நேசம்-நட்புக்கிரகங்களாம், ஓதிய-சொல்லப்பட்ட, பொன் தனக்கு-குருவுக்கு, கதிர்-சூரியனும், திங்கள்-சந்திரனும், செவ்வாய்-அங்காரகனும், உறவு-நட்புக்கிரகங்களாம், உயர் வெள்ளிக்கு-உயர்ந்த சுக்கிரனுக்கு, சனியுடன் புந்தி யிருவர்-சனியும்புதனுமாகிய இருவரும், உறவு-நட்புக்கிரகங்களாம், பூதலமேல்-உலகத்தில், சவுரிக்கு-சனிக்கு, புதன்-புதனும், சுக்கிரன்-சுக்கிரனும், பொருந்திய நல் உறவு-ஒன்றாய் நெருங்கிய நட்புக்கிரகங்களாம், என்று-என்று, புலவோர்-சோதிடநூல் வல்லவர்கள், போற்றிடுவர்-சொல்லுவார்கள், எ-று. 25

கிரக சமம்

போற்றியசெங்கதிர் தனக்குச்சமன்புந்தியொருவன்
புனிதமதிக்கினைசெவ்வாய் குருசனிசுக்கிரனே
ஏற்றசெவ்வாய்க்கினை சனிசுக்கிரனிருவர்தாமே
இனியபுதற்குச்சமனுஞ் சனிசெவ்வாயாரன்
நாற்றிசையென்னரசனுக்கே சவுரியொருவன்
கலைதிகழுஞ்சுக்கிரற்கினைபொன் னவில்செவ்வாயிருவர்
தோற்றியிடுஞ்சனி தனக்கே சமனதாகுமே
துய்யவியாழந்தனையே சொல்வரித்தராமே.

(இ-ள்.) போற்றிய செங்கதிர் தனக்கு-சொல்லப்பட்ட சூரியனுக்கு, புந்தி ஒருவன் சமன்-புதன் ஒருவனே சமத்துவமுடையவனும், புனிதமதிக்கு-பரிசுத்தமான சந்திரனுக்கு, செவ்வாய் குரு சனி சுக்கிரன்-அங்காரகன் குரு சனி சுக்கிரன் (இவர்கள்), இனை-சமத்துவமுடையவர்களாம், ஏற்ற செவ்வாய்க்கு-சிறந்த அங்காரகனுக்கு, சனி சுக்கிரன் இருவர் தாமே இனை-சனி சுக்கிரன்

இவர்கள் இருவருமே சமத்துவமுடையவராம், இனிய புதற்கு-நல்ல புதனுக்கு, சனி செவ்வாய் ஆரன் சமன் ஆம்-சனி அங்காரகன் குரு (இவர்கள்) சமத்துவமுடையவராம், நால்திசை என் அரசனுக்கு-நான்கு திசைகளின் ஜனங்களாலும் நன்கு மதிக்கப்படும் குருவுக்கு, சவுரி ஒருவன்-சனி ஒருவனே, சமன்-சமத்துவமுடையவனும், கலை திகழ் சுக்கிரற்கு-தன்மை விளங்குகின்ற சுக்கிரனுக்கு, பொன்-குருவும், நவில்-சொல்லப்படுகின்ற, செவ்வாய்-அங்காரகன், இருவர்-ஆகிய இருவரும், இனை-சமத்துவமுடையவர்களாம், தோற்றியிடும் சனி தனக்கு-தோற்றுகின்ற சனிக்கு, துய்ய வியாழம் தனை-பரிசுத்தமான குருவை, சமனதாக-சமத்துவமுடைய கிரகம், என்று-என்றிவ்விதமாக, சொல்வர்-(சோதிடர்கள்) சொல்லுவார்கள், எ-று. 26

சொல்லிரவிக்குப்பகை சுக்கிரன்சனியோரிருவர்
சோமனுக்குப்பகையில்லை சொல்லுமெக்காலே
அல்லலறுஞ்செவ்வாய்க்குப் பகைபுந்தியொருவன்
ஆனபுந்திக்குப்பகை யம்புலியொன்றாரும்
நல்லவியாழந்தனக்குப் புதன் வெள்ளிபகையாம்
நாடியசுக்கிரற்கிரவி மதிதிங்கள்பகையே
வல்லசனிதனக்கிரவி இந்துவுடன்செவ்வாய்
மட்டுமேபகையென்று வழுத்துவரெக்காலும்.

(இ-ள்.) சொல் இரவிக்கு-சொல்லுகின்ற சூரியனுக்கு, சுக்கிரன் சனி ஓர் இருவர்-சுக்கிரன் சனி இவர்களிருவரும், உறுபகை-மிக்க பகைவர்களாம் (சத்துருக்களாம்), சோமனுக்கு-சந்திரனுக்கு, எக்காலும் சொல்லவும்-எந்த காலத்தில் சொல்லுவதானாலும், பகையில்லை-சத்துருவே கிடையாது, அல்லல் அறும் செவ்வாய்க்கு-துன்பமற்ற அங்காரகனுக்கு, புந்தி ஒருவன் பகை-புதன் ஒருவனே சத்துருவாவான், ஆன புந்திக்கு-சொல்லப்பட்ட புதனுக்கு, அம்புலி ஒன்று ஆரும்-சந்திரன் ஒருவனே சத்துருவாம், நல்ல வியாழம் தனக்கு-நல்ல குருவுக்கு, புதன் வெள்ளி பகையாம்-புதனும் சுக்கிரனும் சத்துருக்களாம், நாடிய சுக்கிரற்கு-அந்த சுக்கிரனுக்கு, மதி இரவி திங்கள் பகை-சொல்லப்பட்ட சூரியனும் சந்திரனும் சத்துருக்களாம், வல்ல சனி தனக்கு-வலிமையுள்ள சனிக்கு, இரவி இந்துவுடன் செவ்வாய் மட்டுமே-சூரியன் சந்திரன் அங்காரகன் ஆகிய இவர்கள் மாத்திரமே, எக்காலும்-எக்காலத்திலும், பகையென்று-சத்துருக்களென்று, வழுத்துவர்-பெரியோர்கள் சொல்லுவார்கள், எ-று. 27

நட்பு, ஆட்சி, உச்சம், பகை, நீசம் இவைகள் அறிய

இவை இன்ன ராசிக்கு இன்ன கிரகம் நட்பு இன்ன கிரகம் ஆட்சி என்பதைத் [illegible]

1. மேஷத்திற்கு

வெள்ளியும்புதனுநட்பு விளக்கியசெவ்வாயாட்சி
ஒள்ளியகதிரோனுச்ச முயர்[illegible]சனிநீசமாகும்
தெள்ளியமதியோன்பொன்[illegible]ன் சீரியராகுகேது
உள்ளதும்பகையாமென்[illegible]யோதினர்மேடத்தோர்க்கே.

(இ - ள்.) மேடத்தோர்க்கு-மேஷராசிக்கு, வெள்ளியும் புதனும் நட்பு-சுக்கிரனும் புதனும் மித்துருக்களாம், விளக்கிய செ[illegible]ய் ஆட்சி-அங்காரகன் சுயக்ஷேத்திராதிபதியாம், ஒள்ளிய கதிரோன் உச்[illegible]-சூரியன் உச்சஸ்தானமாம், உயர்சனி நீசமாகும்-உயர்ந்த சனிக்கு நீசஸ்தானமாகும், தெள்ளிய மதியோன் பொன்னன் சீரிய ராகு [illegible] பகையாம்-சந்திரன் குரு ராகு கேது இவர்களுக்கு சத்துரு க்ஷேத்திரமாம், என்று-என்று, ஓதினர் பெரியோர் சொன்னார், எ-று.

இதன் விவரம்

மேஷராசியானது சுக்கிரனுக்கும், புதனுக்கும் மித்துரு க்ஷேத்திரமென்றும், அங்காரகனுக்கு ஆட்சிஸ்தானமென்றும், சூரியனுக்கு உச்சஸ்தானமென்றும், சனிக்கு நீசஸ்தானமென்றும், சந்திரன், குரு, ராகு, கேது இவர்களுக்கு சத்துருக்ஷேத்திரமென்றும் சொல்லவேண்டு மென்பது. 28

2. ரிஷபத்திற்கு

செய்சனிபுதன்பொன்னட்புச் சீரியபுகரோனாட்சி
தூயதோர்மதியேயுச்சம் துயர்தரும்பாம்புநீசம்
காய்கதிர்பகையேயாகும் கண்டனரிடபத்தன்னில்
ஓதியபொருள்களெல்லா முண்மையாயுரைக்கலாமே.

(இ - ள்.) இடபத்தன்னில்-ரிஷபத்திற்கு, செய் சனி புதன் பொன் நட்பு-அங்காரகன் சனி புதன் குரு இவர்கள் மித்துருக்களாம், சீரிய புகரோன் ஆட்சி-சிறந்த சுக்கிரன் சுயக்ஷேத்திரனும், தூயதோர் மதியே உச்சம்-பரிசுத்தமிக்க சந்திரன் உச்சனும், துயர்தரும் பாம்பு நீசம்-துன்பத்தை விளைப்பவனான இராகு கேதுக்கள் நீசர்களாம், காய்கதிர் பகையேயாகும்-சூரியன் சத்துருவாவனும், கண்டனர்-என்று பெரியோர் [illegible]ன்னார், (ஆகையால்) ஓதிய பொருள்கள் எல்லாம் உண்மையாய் உரைக்கலா[illegible]சொல்லப்பட்ட கிரக [illegible]ங்களெல்லாம் உண்மையாய் உரைக்க[illegible]ன்னே யாகும், எ-று.

இதன் விவரம்

ரிஷப ராசியானது அங்காரகன், சனி, புதன், குரு இவர்களுக்கு மித்துரு க்ஷேத்திர[illegible]ன்றும், சுக்கிரனுக்கு சுயக்ஷேத்திரமென்றும், சந்திரனுக்கு உச்சஸ்தானமென்றும், இராகு கேதுக்களுக்கு நீசஸ்தானமென்றும், சூரியனுக்கு சத்துருக்ஷேத்திரமென்றும் சொல்லவேண்டு மென்பது. 29

3. மிதுனத்துக்கு

சந்திரன்சனிசேயக்கன் ராகு[illegible]குருசெவ்வாய்பாம்பு
முந்தியநட்பதாகு முனிவிலா[illegible]புதனேயாட்சி
உந்தியபகைவேட்தா [illegible]ச்சம[illegible]விக்குநீசம்
தந்திடுசந்திரோன்மாற்றுன[illegible]மிதுனத்தோர்க்கே.

(இ - ள்.) [illegible] மிதுனத்தோர்க்கு-இழுக்கிலை யடையாத மிதுனத்திற்கு, சந்திரன் சனி அக்கன் ராகு குரு செவ்வாய் பாம்பு மூந்திய நட்பதாகும்-சந்திரன் சனி சுக்கிரன் குரு செவ்வாய் ராகு கேது இவர்கள் நண்பர்களாம், முனிவு இல்லாப் புதன் [illegible] - [illegible] புதன் சுயக்ஷேத்திரக்காரனும், தந்திடும் கதிரோன் மாற்றான் [illegible] சத்துருவாவன், எ-று.

இதன் விவரம்

மிதுனராசியானது சந்திரன், சனி, சுக்கிரன், குரு, அங்காரகன், ராகு, கேது இவர்களுக்கு மித்துருக்ஷேத்திரமும், புதனுக்கு ஆட்சிஸ்தானமும், சூரியனுக்கு சத்துருஸ்தானமுமா மென்பது. 30

4. கடகராசிக்கு

மேதைநேயாட்புதிங்கள் விளங்கியவாட்சியாகும்
சீதையேபொன்னேயுச்சஞ் சிறந்திடும்செவ்வாய்நீசம்
ஓதியகதிரோனக்கன் ஓங்கியராகுமந்தன்
போதவேபகையாமென்று போற்றினர்கடகத்தோர்க்கே.

(இ - ள்.) கடகத்தோர்க்கு - கடகலக்கினத்திற்கு, மேதை-புதன், நட்பு-மித்துருவாம், திங்கள் - சந்திரன், விளங்கிய ஆட்சியாகும் - விளங்கப்பட்ட சுயக்ஷேத்திரனும், சீதையே - இலக்குமிபோன்ற பெண்ணே!, பொன்னேன்-குரு, உச்சம் - உச்சனும், சிறந்திடும் செவ்வாய் - சிறந்த அங்காரகன், நீசம்-நீசமாம், ஓதிய-சொன்ன, கதிரோன் அக்கன் ஓங்கிய ராகு மந்தன் போதவே பகையாம்-சூரியன் சுக்கிரன் ராகு சனி இவர்கள் சத்துருக்களாம், என்று போற்றினர்-என்று பெரியோர்கள் சொன்னார்கள், எ-று.

இதன் விவரம்

கடகலக்கினமானது புதனுக்கு நட்புஸ்தானமும், சந்திரனுக்கு சுயக்ஷேத்திரமும், குருவுக்கு உச்சஸ்தானமும் செவ்வாய்க்கு நீசஸ்தானமும், சூரியன், சுக்கிரன், ராகு, சனி இவர்களுக்கும் பகையுமாமென்று சொல்லல் வேண்டு மென்க. 31

5. சிங்கவிராசிக்கு

அர்க்கனதுமனையதாகு மருவகதிராட்சியாகும்
முந்தியதுமமுச்ச முனிவிலா[illegible]

மந்தனேபுகரோனுதிவணிகனே யாவேறிங்கள்
தந்திடும்பகையேயிக்கன் அனைத்தனைச்சாற்றினரே.

(இ - ள்.) சிங்கத்தனக்கு - சிங்கராசிக்கு, அர்த்தனை உறவதாகும் - குரு மித்துருவாவன், அருங்கதிர் ஆட்சியாகும் - சூரியன் சுயக்ஷேத்திரனுவான், மூத்திய ஆமன் உச்சம்-மூற்பட்ட ஆமனுவான் உச்சனுனவன், முனிவிலாநீசம் அட்டம்-அற்ப நீசனுமாவான், மந்தனே புகரோனுதி வணிகனே யாவே திங்கள் தந்திடும் பகையே-சனி, சுக்கிரன், புதன், செவ்வாய், ராகு, கேது, சந்திரன் ஆகிய இவர்கள் சத்துருக்களாவார்கள், எனச்சாற்றினர்-என்று சொன்னார்கள், எ-று.

இதன் விவரம்

சிங்கலக்கினமானது குருவுக்கு மித்துருக்ஷேத்திரமும், சூரியனுக்கு சுயக்ஷேத்திரமும், ஆமனுக்கு உச்சஸ்தானமும், மற்றைய கிரகங்களுக்கு சத்துருஸ்தானமுமாம் எனக் கொள்ளவேண்டும். 32

6. கன்னிராசிக்கு

திங்களோடரவுசெவ்வாய் செம்பொன்னே மந்தனின்ளுேர்
தங்கியுறவதாகுஞ் சாற்றியபுதனேயாட்சி
பொங்கியபுதனேயுச்சம் புகரவனீசமாகும்
செங்கதிர்பகையேயாகுந் தெரிவையுறவென்றுசெப்பே.

(இ - ள்.) தெரிவையற்கு-கன்னியாராசிக்கு, திங்களோடு அரவு செவ்வாய் செம்பொன்னே மந்தன் இன்ளுேர்தங்கிய உறவதாகும் - சந்திரன் ராகு கேது அங்காரகன் குரு சனி இவர்கள் நட்பினவராவார், சாற்றிய புதனே ஆட்சி பொங்கிய புதனே உச்சம் - புதனுனவன் சுயக்ஷேத்திரனும் உச்சனுமாவான், புகரவன் நீசமாகும் - சுக்கிரன் நீசனுவான், செங்கதிர்பகையே யாகும் - சூரியன் சத்துருவாவன், என்று செப்பு - என்று சொல்லுவ, எ - று.

இதன் விவரம்

கன்னியாராசிக்கு சந்திரன், ராகு, கேது, அங்காரகன், குரு சனி இவர்கட்கு நட்பு க்ஷேத்திரமும், புதனுக்கு சுயக்ஷேத்திரமும், உச்சக்ஷேத்திரமும், சுக்கிரனுக்கு நீசக்ஷேத்திரமும், சூரியனுக்கு சத்துரு க்ஷேத்திரமுமாம் எனக் கொள்ளவேண்டு மென்க. 33

7. துலாராசிக்கு

பண்டிதன்பொன்னனங்கி பாம்புடனிவர்கடாமும்
தண்டிடாவுறவாமாட்சி தரும்புகருச்சங்காரி
வண்டமிழ்க்கதிரோனீசம் வாழ்மதிபகையதென்று
கொண்டதோர்துலாத்திறைக்கு கூறலாமென்றுகோதைமாதே.

(இ - ள்.) கோதைமாதே-(கூந்தலின் கண்) புஷ்பமாலையைத் தரித்திருக்கின்ற பெண்ணே!, கொண்டதோர் துலாத்திறைக்கு-எடுத்துக்கொண்ட ஒப்பற்ற துலாத்திற்கு, பண்டிதன் பொன்னன் அங்கி பாம்புடன் இவர்கள் தாமும் தண்டிடா உறவாம்-புதன் குரு அங்காரகன் ராகு கேது ஆகிய இவர்கள் நட்பினராவார், தரும் புகர் ஆட்சி-சுக்கிரன் சுயக்ஷேத்திரனுவான், காரி உச்சம்-சனி உச்சனுவான், வண்டமிழ்க்கதிரோன் நீசம்-வளப்பம் பொருந்திய தமிழில் வல்ல சூரியனுனவன் நீசனுவான், வாழ்மதி பகை-சந்திரன் சத்துருவாவான், என்று கூறலாம்-என்று சொல்லலாம், எ-று.

இதன் விவரம்

துலாராசியானது புதன், குரு, அங்காரகன், ராகு, கேது இவர்களுக்கு மித்துருக்ஷேத்திரமும், சுக்கிரனுக்கு சுயக்ஷேத்திரமும், சனிக்கு உச்சக்ஷேத்திரமும், சூரியனுக்கு நீசஸ்தானமும், சந்திரனுக்கு சத்துரு க்ஷேத்திரமுமாம் எனக் கொள்ளவேண்டு மென்க. 34

8. விருச்சிகத்துக்கு

பனிமகன்சங்கன்நட்புப் பார்மகனுட்சிபாம்பு
முனிவிலாவுச்சமாகு முழுமதிநீசமாகும்
இனியபினையருக்கன்பொன்னு நீலனும்பகையதென்றே
முனிவிலாத்தேளிறைக்கே முறைமையாய்மொழிவர்மாதே.

(இ - ள்.) மாதே-பெண்ணே!, முனிவிலாத்தேளிறைக்கு-கோபமற்ற விருச்சிகத்திறைவனுக்கு, பனிமகன் சங்கன் நட்பு-புதன் சுக்கிரன் இவர்கள் மித்துருக்களாவார்கள், பார்மகன் ஆட்சி-அங்காரகன் சுயக்ஷேத்திரனுவான், பாம்பு முனிவிலா உச்சமாகும்-இராகு கேதுக்களிருவரும் [illegible] உச்சராவார்கள், முழுமதி நீசமாகும்-சந்திரன் நீசனாவான், இனியபினை அருக்கன் பொன்னும் நீலனும் பகை-சூரியனும் குருவும் சனியும் பகைவர்களாவார்கள், என்று மொழிவர்-என்று சொல்லுவார்கள், எ-று.

இதன் விவரம்

விருச்சிகராசியானது புதன், சுக்கிரன் இவர்களுக்கு மித்துருஸ்தானமும், அங்காரகனுக்கு சுயக்ஷேத்திரமும், இராகு கேதுக்களுக்கு உச்சஸ்தானமும், சந்திரனுக்கு நீசஸ்தானமும், சூரியனுக்கும், குருவுக்கும், சனிக்கும் சத்துரு க்ஷேத்திரமாகுமென்று அறிந்துகொள்ளவேண்டு மென்பது. 35

9. தநுசுராசிக்கு

பகலவன்புகரோன்காரி பாம்புசற்புதனேயித்து
இகலிலாவுறவதாகு மிறைவனேயாட்சியாகும்

கலயிருநிலையேபுச்ச காட்டியவட்டநீசம்
நிலமகன்பகையேயாகு நெடியவோர்தனுவினுக்கே.

(இ-ள்.) நெடிய ஓர் தநுவினுக்கு-ஒப்பற்ற தநுராசியினுக்கு, பகலவன் புகரோன் காரி பாம்பு நற்புதன் இந்து இகல் இல்லாத உறவதாகும்-சூரியன் சுக்கிரன் சனி இராகு கேது புதன் சந்திரன் இவர்கள் மித்துருக்களாவார்கள், இறையவன் ஆட்சியாகும்-குரு சுயக்ஷேத்திரனுவான், கலயிருநிலையே புச்சம்-தன்மை மிகுந்த உயர்ந்த அத்தமயிடத்தே, நிலமகன் பகையேயாகும்-அங்காரகன் சத்துருவாவான், காட்டிய அட்டம் நீசம்-(அகநுக்கே) இதற்கட்டம ஸ்தானம் அதாவது கடகம் நீசமாகும், எ-று.

இதன் விவரம்

தநுசானது சூரியன், சுக்கிரன், சனி, இராகு, கேது, புதன், சந்திரன் இவர்கட்கு மித்துருஸ்தானமும், குருவுக்கு சுயக்ஷேத்திரமும், செவ்வாய்க்கு பகையும், அதற்கட்டமஸ்தானமாகிய கடகமும் நீசஸ்தானமுமா மென்றறிய வேண்டு மென்பது. 36

10. மகரத்துக்கு

பண்டிதனேறுகக்கன் பாம்புடனுறவதாகும்
மண்டியசனியேயாட்சி மங்கலனுச்சனாகும்
கொண்டதோர்குருவேநீசங் கூறியகதிரோன்திங்கள்
கொண்டநற்பகையேயாகுங் காட்டியமகரத்தோர்க்கே.

(இ-ள்.) காட்டிய மகரத்தோர்க்கு-சொல்லப்பட்ட மகரத்திற்கு, பண்டிதனேறு கக்கன் பாம்புடன் உறவதாகும்-புதன், சுக்கிரன், இராகு, கேது இவர்கள் மித்துருக்களாவார்கள், மண்டிய சனியேயாட்சி-மிகுந்த சனி சுயக்ஷேத்திரனுவான், மங்கலன் உச்சனாகும்-அங்காரகன் உச்சனுவான், கொண்டதோர் குருவே நீசம்-எடுத்துக்கொண்ட குரு நீசமாவான், கூறிய கதிரோன் திங்கள் கண்ட நற்பகையே யாகும்-சொல்லிய சூரியனும் சந்திரனும் சத்துருக்களாவார்கள், எ-று.

இதன் விவரம்

மகர லக்கினமாவது புதன், சுக்கிரன், இராகு, கேது இவர்களுக்கு மித்துரு க்ஷேத்திரமும், சனிக்கு சுயக்ஷேத்திரமும், அங்காரகனுக்கு உச்சஸ்தானமும், குருவுக்கு நீசஸ்தானமும், சூரிய சந்திரர்களுக்கு சத்துரு க்ஷேத்திரமா மென்றறியவேண்டு மென்பது. 37

11. கும்பத்துக்கு

ஞான்றமாப்புதனும்வெள்ளி யிறையவேனுறவதாகும்
இன்றிறற்சனியேயாட்சி செப்பியநட்பமுச்சம்

கண்டதோர்நாமனீசங் கலைமதிபுலிசேய்பாம்பு
கொண்டநற்பகையேயாகுங் குறித்திடுங்கும்பத்தோர்க்கே.

(இ-ள்.) குறித்திடுங் கும்பத்தோர்க்கு-சொல்லப்படுகின்ற கும்பத்திற்கு, ஞான்றமாப் புதனும் வெள்ளி இறையவேன உறவதாகும்-சூரியன், புதன், சுக்கிரன், குரு இவர்கள் மித்துருவாவார்கள், இன்திறல் சனியேயாட்சி-மிக்க வலிய சனி சுயக்ஷேத்திரனுவான், செப்பிய நட்பம் உச்சம்-சொல்லிய நண்ணிய உச்சனுவான், கண்டதோர் நாமன் நீசம்-காணப்பட்ட நாமன் நீசனுவான், கலைமதி புலிசேய் பாம்பு கொண்ட நற்பகையேயாகும்-சந்திரன், அங்காரகன், இராகு, கேது இவர்கள் சத்துருக்களாவார்கள், எ-று.

இதன் விவரம்

கும்பலக்கினமாவது சூரியன், புதன், சுக்கிரன், குரு இவர்களுக்கு மித்துரு க்ஷேத்திரமும், சனிக்கு சுயக்ஷேத்திரமும் உச்சஸ்தானமுமாகும்; நாமனுக்கு நீசஸ்தானமும், சந்திரன், அங்காரகன், இராகு, கேதுக்களுக்குச் சத்துரு க்ஷேத்திரமுமாமென் றறியவேண்டு மென்பது. 38

12. மீனத்துக்கு

அரவொடுசனியேதிங்க ளருக்கனேயுறவதாகும்
பரவியகுருவேயாட்சி பார்க்கவனுச்சனாகும்
தரைமகிழ்புதனேநீசன் தரைமகன்பகையதாகும்
கரவிலாக்கயலினுக்கே கனக்குழைமடந்தைகேண்மோ.

(இ-ள்) கனக்குழை மடந்தை கேண்மோ-கட்டுவிட்டொளிருங் குழை பூண்ட கன்னியே கேள், கரவு இல்லாக் கயலினுக்கு-வஞ்சகமில்லாத மீனத்திற்கு அரவொடு சனியே திங்கள் அருக்கனே உறவதாகும்-இராகு, கேது, சனி, சந்திரன், சூரியன் இவர்கள் மித்துருக்களாவார்கள், பரவிய குருவேயாட்சி-பரவுகின்ற குரு சுயக்ஷேத்திரனுவான், பார்க்கவன் உச்சனாகும்-சுக்கிரன் உச்சனுவான், தரைமகிழ் புதனே நீசன்-உலகத்தாரால் மகிழப்படுகின்ற புதன் நீசனுவான், தரைமகன் பகையதாகும்-அங்காரகன் சத்துருவாவான், எ-று.

இதன் விவரம்

மீனராசியாவது இராகு, கேது, சனி, சந்திரன், சூரியன் இவர்களுக்கு மித்துரு க்ஷேத்திரமும், குருவுக்கு சுயக்ஷேத்திரமும், சுக்கிரனுக்கு உச்சஸ்தானமும், புதனுக்கு நீசக்ஷேத்திரமும், அங்காரகனுக்கு சத்துரு க்ஷேத்திரமுமாமென் றறியவேண்டு மென்பது. 39

குளிகன் வேறு

களிப்பானகுளிகன்வகை பார்த்திடுவாயின்னே
கதிரவனுக்கிருபத்தாறுயிரவிற்பத்தாம்

மினிர்திங்களிருபத் திரண்டிரவிலாறும்
மேற்செவ்வாய்பதினெட்டா மின்னிவியிரண்டாம்
ஒளிர்புதனுக்கீரேழா மிரவிருபத்தாறும்
ஓதுகுருபத்திரவி லுயரிருபானிரண்டாம்
குளிர்வெள்ளிக்கிருமூன்று மாலைபதினெட்டாம்
கூறுசனிக்கோரிரண்டா மேழிரண்டாகிநிக்கே.

(இ - ள்.) களிப்பான குளிகன்வகை பார்த்திடுவாய் மின்னே-பெண்ணே! சந்தோஷத்தைக் கொடுக்கின்ற குளிகைக்காலத்தைச் (சொல்லுகின்றேன்) பார், கதிரவனுக்கு இருபத்தாறும் இரவிற் பத்தாம்-ஞாயிற்றுக்கிழமைக்குப் பகலில் இருபத்தாறு நாழிகைவரைக்கும், இராத்திரியிற் பத்துநாழிகை வரைக்குமாம்; மினிர் திங்கள் இருபத்திரண்டு இரவில் ஆறும்-விளக்கும் திங்கட்கிழமைக்குப் பகலில் இருபத்திரண்டு நாழிகைவரைக்கும், இராத்திரியில் ஆறுநாழிகை வரைக்குமாம், மேல் செவ்வாய் பதினெட்டாம் மின்னியில் இரண்டாம்-செவ்வாய்க்கிழமைக்குப் பகலில் பதினெட்டு நாழிகைவரைக்கும், இராத்திரியில் இரண்டு நாழிகைவரைக்குமாம்; ஒளிர் புதனுக்கு ஈரேழாம் இரவிருபத்தாறும்-விளக்கும் புதன் கிழமைக்குப் பகலிற்பதினான்கு நாழிகை வரைக்கும், இராத்திரியில் இருபத்தாறுநாழிகைவரைக்குமாம்; ஓது குருபத்து இரவில் உயர் இருபானிரண்டாம்-வியாழக்கிழமைக்குப் பகலில் பத்து நாழிகை வரைக்கும், இராத்திரியில் இருபத்திரண்டு நாழிகைவரைக்குமாம்; குளிர் வெள்ளிக்கு இருமூன்று மாலைபதினெட்டாம்-வெள்ளிக்கிழமைக்குப் பகலில் ஆறுநாழிகை வரைக்கும், இரவில் பதினெட்டு நாழிகை வரைக்குமாம்; கூறு சனிக்கோரிரண்டாம் ஏழிரண்டாம் நிக்கே-சனிக்கிழமைக்குப் பகலில் இரண்டுநாழிகை வரைக்கும், இராத்திரியில் பதினான்கு நாழிகைவரைக்குமாம், எ-று.

இப்படிக்கில்லாமல் வேறுவிதமாகவும் குளிகைகாலஞ் சொல்லுவாருளர். அவையாவன:

பகற்குளிகன்

"ஞாயிறு முகூர்த்த மேழா நம்மதிக் காறுஞ் செவ்வாய்க்
கேயனைவந் தாகும் புந்திக் கிரண் டாம்பொன் மூன்றும்
தூயசுற் புகர்க் கிரண்டாஞ் சனிக்கொன் றதாகும்
ஆயவிம் முகூர்த்தத் தோடே யறிந்திடுங் குளிக னென்னில்."

இராக்குளிகன்

"கதிரவன் றனக்கு மூன்றுங் கவின்மதிக் கிரண்டாகும்
சதிபெறு செவ்வாய்க் கொன்றுஞ் சாற்றிய புதற்கே ழாகும்
மதிவளர் பொன்னுக்காறு மன்புகர்க் கைந்தா நான்கு
திமிரமற் சமுகூர்த்தங் காட்டிய பகலேபோற் சொன்னோ."

என்பதனாலறிக. இது மாதாந்தரம். 40

நவக்கிரக தேசம்

இது இன்ன கிரகத்திற்கு இன்னதேசம் உரியதென்பதை விளக்குகின்றது.

வேறு

பாரெலாஞ்சசிகதிரோ னிருவர்க்குமாரும்
பனிவரைகேகயத்தினிடை பாம்புசனிநாடாம்
ஏருலவுங்கேகயத்தொட்டெழில்விந்தமட்டும்
இந்துசுதன்பூமியன்றே வியப்புயர்நல்லோர்கள்
காரிசெறியும்விந்தமுதற் கௌதமைமட்டாக்
கனகனுக்காங்கிருஷ்ணைவரை காப்பியனுடாமே
சீருலவுகிருஷ்ணைமுத லங்கை வரையத்தச்
செவ்வாயின்தேயமென்று செப்புவர்நல்லோரே.

(இ - ள்.) பாரெலாம் - உலகமுழுமைக்கும், சசி கதிரோன் இருவர்க்கும் ஆரும் - சந்திரசூரியர்கள் இருவர்க்கு முரியதாகும், பனிவரை கேகயத்தின் நடு- இமயமலைக்கும் கேகயதேசத்திற்கும் இடையிலுள்ள தேசங்கள், பாம்பு சனி நாடாம் - இராகு கேது, சனி இவர்களுடைய நாடாகும்; ஏர் உலவும் கேகயம் தொட்டு-அழகிய கேகயதேசத்திலிருந்து, எழில் விந்தம் மட்டும்-அழகிய விந்திய பர்வதம் வரைக்கும், இந்துசுதன் பூமி-புதனுடைய தேசங்களாம், காரி செறியும் விந்தமுதல் கௌதமை மட்டாக - மேகம் நிறைந்த விந்தியபர்வதத்திலிருந்து கௌதமை வரைக்கும், கனகனுக்கு ஆம்-குருவுக்குரிய தேசங்களாம், கிருஷ்ணை வரை-கௌதமையிலிருந்து கிருஷ்ணைவரைக்கும், காப்பியன் நாடாம்-சுக்கிரனுக் குரிய தேசங்களாம், சீருலவு கிருஷ்ணைமுதல் இலங்கைவரை - சிறப்புப் பொருந்திய கிருஷ்ணையிலிருந்து இலங்கைவரைக்கும், அத்தச் செவ்வாயின் தேயம் - அங்காரகனுடைய தேசங்களாம், என்று - என்று, நல்லோர் செப்புவர்-பெரியோர் சொல்லுவார், எ-று. 41

மூலத்திரிகோணம்

வேறு

குலவியமூலத்திரிகோணந்தானே கூறிடிற்சிங்கமே ரவிக்காம்
நிலவிடபத்திற்கிடமாடுசெய்க்கென்ப விகழ்த்திடுகன்னியே புதற்காம்
விலகியவில்லேபொன்னனுக்காகும் வெள்ளிக்குக்கோலேனவிளம்பு
நலமுறுசனிக்கேகும்பமதாகு நறுமணங்கமழ்குழன்மாதே.

(இ - ள்.) நறுமணம் கமழ் குழல்மாதே - நல்லபரிமளத்தால் வாசனையை வீசுகின்ற கூந்தலையுடைய பெண்ணே! குலவிய மூலத்திரிகோணம் கூறிடின்-விளங்கிய மூலத்திரிகோணத்தைச் சொல்லுங்கால், சிங்கம் ரவிக்காம்-சிங்கராசி சூரியனுக்காகும், இடபம் நிலவினுக்கு - ரிஷபராசி சந்திரனுக்காகும், ஆடு செய்க்கு-மேஷராசி அங்காரகனுக்காகும், கன்னியே புதற்கு ஆம் - கன்னியாராசி புதனுக்காகும், விலகிய வில்லே பொன்னனுக்கு - தனுராசி குருவுக்காகும், கோல்

வெள்ளிக்கு-துலாராசி சுக்கிரனுக்காகும், மகரம் மேடம் சனிக்கேயாகும்-மகரராசி சனிக்கே யாகும், என்ப-என்று சொல்லுவர் பெரியோர், எ-று. 42

ஆண், பெண், அறிய

பாரின் மந்தன் பரிந்தொற்றைராசியின்
சேரிற்கிலான் பிள்ளைஜெனித்திடும்
சீருலாவிய செவ்வாயிரட்டையில்
போராவோடு நிற்கிற்பெண்பிள்ளையே.

(இ-ள்.) பாரின் — உலகத்தில், மந்தன் - சனியானவன், ஒற்றைராசியில், ஜனன லக்கினத்திற்கு ஒற்றை ராசியில் சேர, பரிந்து நிற்கில் - இருப்பானாகில், ஆண்பிள்ளை ஜெனித்திடும் - ஆண்பிள்ளை பிறக்கும், சீர் உலாவிய செவ்வாய் இரட்டையில்போர் அராவொடு நிற்கில் - சிறந்த அங்காரகனானவன் இரட்டித்த ராசியிலிருப்பானேல், பெண்பிள்ளை செனித்திடும்-பெண்பிள்ளை பிறக்கும், எ-று.

லக்கினத்தில் சந்திரனிருக்கில் பெண், தோஷமில்லை. விருத்தி சந்திரனாகில் ஆண், நல்லோர் காணில் வயது - 48.

ஒற்றை, இரட்டை ராசிகளின் விவரம்.

ஒற்றை இராசி: மேஷம், மிதுனம், சிங்கம், துலா, தனுசு, கும்பம் என்பன. இவைகட்கு ஆண்ராசியென்றும் விஷமராசியென்றும் பெயர்.

இரட்டைராசி: ரிஷபம், கடகம், கன்னி, விருச்சிகம், மகரம், மீனம் என்பன. இவைகட்கு பெண்ராசி யென்றும் பெயர். 43

வேறு

பிள்ளைமதிவெள்ளிசன்மத் திருக்கிலக்கவீடு
பெண்ணுகும்ராசியெனிற் பெண்ணுகப்பிறக்கும்
தென்னுமொற்றைராசிபின்னும் ரெட்டைராசிமுன்னும்
இக்களோரையினிற்பெண்ணே செனித்திடுமேரெட்டை
உள்ளராசிகளொற்றை யம்சம்பெண்ணுகும்
உயர்பெண்ணுங்கிரகங்க ளுதசன்மத்திருக்க
வெள்ளிமுதற்பெண்கிரகம்பார்க்கிற் பெண்பிறக்கும்
மேலிரவிகுசன்புந்தி யிரட்டையுமின்னும்.

(இ-ள்.) பிள்ளைமதிவெள்ளி - வளர்சந்திரனும் சுக்கிரனும், சன்மத்திருக்கில்-இலக்கினத்திலிருந்தால், அந்த வீடு - அந்த லக்கினமானது, பெண்ணுகும் ராசியெனில்-பெண்வீடாயிருந்தால், பெண்ணுகப்பிறக்கும்-பெண்பிள்ளையாகவே பிறக்கும், தென்னும் ஒற்றைராசி பின்னும் ரெட்டைராசி முன்னும் - தெளிந்த ஒற்றைராசியைப் பின்னுகவும் ரெட்டைராசியை முன்னுகவும் கொண்ட, இக்கள் ஓரையினில் - சந்திர ஓரையாகில், பெண்ணே செனித்திடும் - பெண்பிள்ளையே பிறக்கும், ரெட்டையுள்ள ராசிகள் ஒற்றை அம்சம் - ஆண்ராசியில் பகலிற் காணும் கணிதப்படி ஒற்றையம்சமாயிருந்தால், பெண்ணுகும்-பெண்பிள்ளையே

பிறக்கும், உயர் பெண்ணும் கிரகங்கள் உதசன்மத்து இருக்க-பெண்கிரகங்கள் லக்கினத்திலிருந்தாலும், வெள்ளிமுதல் பெண்கிரகம் பார்க்கில்-அதை சுக்கிரன் முதலிய பெண்கிரகம் பார்த்தாலும், பெண்பிறக்கும்-பெண்பிள்ளை பிறக்கும், மேல்-தவிர, இரவி குசன் புந்தி-சூரியன், அங்காரகன், புதன் ஆகிய இம்மூவரும், இரட்டையுமின்னும்-பெண்ராசியிலிருந்தால் பெண்பிள்ளையே பிறக்கும், எ-று. 44

பெண்கிரகங்கள்:—சந்திரன், சுக்கிரன், இராகு இவர்கள்.

மின்னுகலைநிறைந்தமதி மேவிலாண்பிறக்கும்
விரவுமொற்றை முற்பாதியிரட்டையும்பிற்பாதி
என்னிலாண்பிள்ளையொற்றை ராசிதனிலிரட்டை
ஏற்றநவாம்சிசந்தனை மேன்மிடிலாமானே
மன்னவன்சூரியனொற்றை ராசியுறிலானும்
வரும்புருடராசிதனிற் புருஷக்கோண்மருவ
பின்னுமதுசன்மமதாய் புருஷக்கோள்நோக்கப்
பிறந்திடுவதாண்பிள்ளை யெனப்பேசலாமே.

(இ-ள்.) மின்னுகலை நிறைந்த மதிமேவில் ஆண்பிறக்கும்-அந்த இரட்டைராசியிலேயே வளர்பிறைச்சந்திரனிருந்தால் ஆண்பிள்ளை பிறக்கும், விரவும் ஒற்றை முற்பாதி இரட்டையும் பிற்பாதியெனில் ஆண்பிள்ளை-கலந்த ஒற்றை ராசியின் முற்பகலாகிய சூரிய ஓரையானாலும், இரட்டை ராசியிற் பிற்பகலாகிய சூரிய ஓரையானாலும், ஆண்பிள்ளை பிறக்கும், ஒற்றைராசிதன்னில் இரட்டை யேற்ற நவாம்சிசம் ஜனனம் என்றிடில் - ஆண்ராசியில் பெண்ராசியைப் பெற்ற நவாம்சிசம் பாலிற் சனனமாயின், ஆனேயாம் - ஆண்பிள்ளையே பிறக்கும், ஒற்றைராசியில் மன்னவன் சூரியன் உறில் ஆனும்-ஆண்ராசியில் குருவும், சூரியனுமிருந்தால் ஆண்பிள்ளை பிறக்கும், வரும் புருடராசி தன்னில்-ஆண் ராசியிலே, புருடக்கோள் மருவ - ஆண்கிரகங்கள் இருந்தாலும், பின்னும் - மேலும், அது-அந்த ஆண்ராசியானது, சன்மமதாய்-சன்மலக்கினமா யிருந்தாலும், புருஷக்கோள் நோக்க-அதைப் புருஷக்கிரகங்கள் பார்த்தாலும், பிறந்திடுவது, ஆண்பிள்ளையென - ஆண்குழந்தையென்று, பேசலாம் - சொல்லலாம், எ-று. 45

புருஷக்கிரகங்கள்:—சூரியன், செவ்வாய், குருக்கள்.

பேசும்பெண்புருஷக் கோளிரண்டுஞ்சன்மம்
பெற்றிருக்கத்தானபலன் பிரித்துப்பார்த்து
நேசமுடனுறவுங்கிரகப் பலமும்பார்த்து
நிச்சயித்தாலப்பெண்ணென்றே நிகழ்த்தவேண்டும்
தேசமெல்லாம் புருஷலக்கினத்தானேனோ
தேசிகமுறைமிற்பெண்ணுக்கு இந்தகள்வெட்பியோர்

பாசமுடன் பெண்வீட்டி லிருக்கிற்பெண்ணாம்
பார்த்திபனும் புருஷமினை பற்றிநிற்கில்.

(இ-ள்.) பேசும் பெண்புருஷக்கோள் இரண்டிருந் சன்மம் பெற்றிருக்க- சொல்லுகின்ற பெண்கிரகங்களும் ஆண்கிரகங்களும் கலந்து சன்மலக்கினத்தி லிருந்தால், தானபலன் பிரித்துப்பார்த்து-வீட்டின்பலனை பாகித்துப்பார்த்து, நேசமுடன் உறை கிரகபலனும்பார்த்து நிச்சயித்து-(அப்படியிருக்கின்ற) இட வலிமையும், கிரகங்களின் வலிமையும் பார்த்து நிச்சயித்து, ஆண் பெண் என்று நிகழ்த்தல் வேண்டும்-ஆண்பிள்ளையென்றும் பெண்பிள்ளையென்றுஞ் சொல்ல வேண்டும், தேசபெறு புருஷலக்கினத்தால் ஆணே-சென்மித்தது புருஷலக்கின மானால் ஆணாகவும், சேய் இழையில்-பெண்லக்கினமானால், பெண்ணாகும்-பெண் ணாகவும் பிறக்கும், பெண்வீட்டில்-பெண்வீட்டில், திங்கள் வெய்யோன் பாசமுட னிருக்கின்-சந்திரனும் சூரியனும் கட்டுடனிருந்தால், பெண்ணாகும்-பெண்பிள்ளை பிறக்கும், புருஷனை பற்றிநிற்கில்-ஆண் வீட்டில் (அந்த இருவரு) மிருந்தால், பார்த்திபனும்-ஆண்குழந்தை பிறக்கும், எ-று. 46

நிற்கின்றவைக் கேழுக்கதிபர்சுபராசி
நேர்த்தசுபரோடுகூடி நெடியசுபர்நோக்க
விற்கொண்டதுதலாய்க்கேந்திரத் திருக்கவவர்கள்
மேவுதிசைதனிலிரட்டைப்பிள்ளை செனித்திடுமால்
தற்கொண்டமாட்சியுறிற் பிள்ளைரெட்டையாகா
சந்திரலக்கினத்திபன் மூன்றிடத்தோன்கூடி
அற்கொண்டவராவுறினு நோக்கினுமேயிரட்டை
யாமிவர்களாண்பெண்ணென் றறிந்துரைப்பர்பெரியோர்.

(இ-ள்.) நிற்கின்றவைக்கு ஏழுக்கதிபர்-ஏழாமிடத்திற்கும், எட்டாமிடத் திற்கும் உரிய கிரகங்கள், சுபராசி-சுபக்கிரகங்களாய், நேர்த்த சுபரோடு கூடி- தாம் கூடுவதற்குரிதான சுபக்கிரகங்களோடு சேர்ந்து, நெடிய சுபர் நோக்க- பார்வைக்குரிய இடங்களிலும் சுபக்கிரகங்களிலிருந்து பார்க்கிலும், விற்கொண்ட துதலாய்-வில்லைப்போலும் நெற்றியையுடையாளே! கேந்திரத்து இருக்க-அவர் கள் கேந்திரத்திலிருந்தாலும், அவர்கள் மேவு திசையினில்-அந்தக் கிரகங்களின் மகா திசைகளில், இரட்டைப்பிள்ளை செனித்திடும்-இரட்டைப் பிள்ளைகள் பிறக்கும், தற்கொண்டமாட்சியுறின்-அந்தக் கிரகங்களில், ஏதாவதொன்று சுபக்ஷேத்திரம் பெற்றிருக்குமானால், பிள்ளைரெட்டையாகா - இரட்டைபிள்ளை பிறக்கமாட்டார்கள், சந்திரலக்கினத்து அதிபன்-சந்திரலக்கினதிபதியானவன், மூன்று இடத்தோன் கூடி-மூன்றாமிடத்ததிபனோடு சேர்ந்து, அற்கொண்ட அரவு உறினும் நோக்கினும்-ராகுவுடன் கூடினாலும், அந்த ராகுவின் பார்வை யைப் பெற்றாலும், இரட்டையாம்-இரட்டைப் பிள்ளைகளே பிறக்கும், இவர்கள் ஆண்பெண்ணென்று - இந்தப்பிள்ளைகள் ஒன்று ஆணென்றும் ஒன்று பெண் ணென்றும், பெரியோர் அறிந்து உரைப்பர்-சோதிடவல்லவர் தெரிந்து சொல்லு வார்கள், எ-று. 47

வேறு

பெரிதுளவாரிருமை பெண்ணாணறிந்து
பரிதியுதயம் பார்க்குங்கடிகையைத்
அரிதாமைந்தாற் றொகையினிற்போக்கி
வருகுவதாண்பெண் ணெனவகுத்திடுவாய்.

(இ-ள்.) பெரிது உளவிருமை பெண் ஆண் அறிந்து - பெரிதாக மதிக்கப் படுகின்ற ஏழு வாரங்களில் இது பெண் வாரமென்றும், இது ஆண் வாரமென்றும் உணர்ந்து, பரிதியுதயம் பார்க்கும் கடிகையை - சூரியோதய முதலாகப் பார்க் கின்ற நாழிகையை, அரிதாமாய் ஐந்தால் தொகையினிற்போக்கி-ஐந்தால் ஒன்றே கால் நாழிகை வீதம் கழித்து, வருகுவது - பிறந்து எப்பொழுது வருவதோ அதை அறிந்து, ஆண் என-ஆண்பிள்ளை யென்றும், பெண் என - பெண்பிள்ளை யென்றும், வகுத்திடுவாய்-சொல்லுவாய், எ-று.

இதன் விவரம்

ஒருவாரத்திற்குரிய ஏழு நாட்களையும் இது ஆண்வாரம் என்றும் இது பெண் வாரம் என்றும் அறிந்து ஒன்றேகால் ஒன்றேகால் நாழிகையாகக் கழிக்க வேண் டும். அப்படி கழிக்கும்போது குழந்தை பிறந்தால் ஆண்வாரமாயின் முதல் ஒன்றேகால் நாழிகைக்கு ஆண்பிள்ளை யென்றும் பெண்வாரமாயின் முதல் ஒன்றே கால் நாழிகைக்கு பெண்குழந்தை யென்றும் கணிக்கவேண்டும். இப்படியே மற்றைய ஒன்றேகால் நாழிகைகளையும் ஒன்று ஆண் ஒன்று பெண், ஒன்று பெண் ஒன்று ஆண் என்று மாறிக்கொண்டே வந்தால், எந்த நாழிகையிற் பிறந்ததோ அந்த நாழிகை பெண்ணென்று வந்தால் பெண்ணாகவும் ஆணென்று வந்தால் ஆணாகவும் கொள்ளவேண்டும். 48

ஆண், பெண் நாட்களின் விவரம்

வருத்திடும்வார மதிபுகர்பெண்ணாம்
தொருத்தசெம்மந்தன் அரியன்பொன்னும்
பருத்திடுமாணும் பகர்புதனமிசம்
நிகழ்த்தொன்றுமாண் பெண்ணாகிடுமிரண்டே.

(இ-ள்.) வருத்திடும் வாரம் மதிபுகர் பெண்ணாம் - சொல்லப்பட்ட வாரங் களில் திங்களும்வெள்ளியும் பெண்நாட்களாம், தொருத்த செம்மந்தன் அரியன் பொன்னும் பருத்திடும் ஆணும்-கணிக்கப்பட்ட செவ்வாய், சனி, ஞாயிறு, வியா ழம் இந்நாட்கள் ஆண் நாட்களாம், பகர் புதன் அமிசம் - சொல்லுகின்ற வாரத் தின் அம்சமானது, நிகழ்த்தின் ஒன்று ஆண் ஒன்று பெண்ணாகிடும் இரண்டே- ஆண் பெண் என்னும் இரண்டு குணங்களையும் பெறுமென்றறியவேண்டும், எ-று.

இலக்கின நிச்சயம்

உதயாதிகடிகையதனை மூன்றாற் பெருக்கிக்கீழ்க
புத்திரசேடந்தனையா டாதியென்னிச்

சிதையாமற்பார்க்கிலிலக் கினமாகுமந்தத்
திரிகோணமாகுது மாகுமேயின்னம்
முதற்காணும்லக்கினத்துக் கேழாகுந்தானம்
முதற்கொண்டுதிரிகோண மாகுமாகும்
மதயானையிருமருப்புக் கனகவெற்புவாச
வனசமுகைப்பாதுமுலை வஞ்சியரே கேளாய்.

(இ-ள்.) மதயானை யிருமருப்புக் கனகவெற்பும் வாசவனச முகைபோலும் முலைவஞ்சியரே கேளாய் - மும்மதங்கொண்ட யானையி னிருமருப்புக்களையும் பொன்மலையையும் வாசம் வீசுகின்ற தாமரை மொட்டையும் ஒப்பான முலையை யுடைய பெண்ணே! நீ கேட்பாயாக, உதயாதி கடிகைதனை முக்காலும்விட்டு அன்று உதயமுதல் ஜெனனம் வரைக்கும் ஏற்பட்ட கடிகையை பன்னிரண்டு பெருக்குக் கொடுத்து, உற்ற சேடந்தன்னை - செல்லுபோய் வந்த மிச்சத்தை, ஆடாதி எண்ணி சிதையாமல் பார்க்கில் - மேஷம் முதலாக எண்ணிப் பார்த்தால், லக்கினமாகும் - லக்கினம் ஏற்படும், அந்தத் திரிகோணமாகுதுமாகும் - அந்தத் திரிகோணமா யிருந்தாலுமிருக்கும், இன்னம் முதற்காணும் லக்கினத்து ஏழாகுந்தானம் முதற்கொண்டு திரிகோணமாகுதும் ஆகும் - முன்னே கண்டறிந்த லக்கினத்திற்கு ஏழாம் வீடு முதலாகக் கொள்ளின் அதற்குத் திரிகோணமாகுலும் ஆகும், எ-று. 50

சந்திர லக்னாதிபதி எந்தவீட்டி லிருக்கின்றதோ அவனுக்கு 1-4-5-7-9-10-அல்லது 7-வது வீட்டிலாவது அந்த 7-க்கு ஒன்பதாவது ஜன்மலக்கினமாயின் நிச்சயம்.

1-3-4-5-7-9-10-சந்திரன் எந்தவீட்டி லிருக்கின்றனனோ அந்த வீட்டுக் குடையவன் நின்றது ஜனன லக்கினமாகும் அல்லது 1-3-4-5-7-9-10-இவைகளில் எந்த வீடாவது லக்கினமா யிருந்தாலும் அல்லது அந்த வீட்டில் நின்றாலும் லக்கின நிச்சய மெனப்படும்.

வேறு

வஞ்சியேயொற்றையிலக் கினமுற்பாதி
மார்த்தாண்டன்ஹோரை பிற்பாதிமதியோரை
மிஞ்சிகின்றவொட்டைக்கு முன்றிங்கள்ஹோரை
மீந்திடும்பிற்பாதிக்கோ வெய்யோன்ஹோரையதாம்
செஞ்சொன்மதியோரையதே காணுமாயின்னே
செயிழையேபிறக்குமெனச் செப்பலாகுமற
கஞ்சமலர்கண்பிரவி யோரையதேயாகிற்
காளையேபிறக்குமென வேகருதல்வேண்டும்.

(இ-ள்.) வஞ்சியே-ஓ பெண்ணே!, ஒற்றை லக்கினம் முன்பாதி மார்த்தாண்டன் ஹோரை-ஆண் லக்கினத்தில் முன்பாதி சூரியஹோரையும், பின்பாதி மதியோரை-பின்பாதி சந்திரஹோரையுமாகும், மிஞ்சிகின்ற ரெட்டைக்குமுன் றிங்கள் ஹோரை-பெண் லக்கினத்தில் முன்பாதி சந்திரஹோரையும், மீந்திடும் பின்பாதிக்கு வெய்யோன் ஹோரையதாம் - மிகுந்திருக்கும் பின்பாதிக்கு சூரியஹோரையுமாகும், செஞ்சொன்மதி ஹோரையதே காணுமாயின் செய்இழையே பிறக்கும் எனச் செப்பல் ஆகும் - சந்திரஹோரையிற் ஜெனித்ததாயின் பெண்பிள்ளையே பிறந்ததென்று சொல்லலாம், கஞ்சமலர் கண்பு இரவி ஹோரையதே யாகில் காளையே பிறக்குமெனக் கருதல் வேண்டும் - தாமரையை மலர்விக்கும் சூரியஹோரையிற் ஜனனமாவதானால் ஆண்பிள்ளையே பிறக்குமென்று சொல்லலாம், எ-று. 51

இராசிவடிவு முதலியன

வேறு

செப்பிய ராசி வடிவுதன் னுரைக்கிற் சிவந்திடுந் தகருரு மேடம், செரிந்திடு அவனப் பெற்றமே யிடபஞ் செயம்பெறு மிதுனமென்பதுவும், ஒப்பொடு வீணைகை மடந்தையுடனே போது தண்டாயுதம் பச்சை, ஒளிருரு ஞண்டென கடகருன்றிரு முன்றித பாதிரிமலர்நிறமாம், வெற்படர்சிங்கம் புகைநிறமதங்கன் மின்கனி யோடமே நடத்தும், மெல்லியலழுக்கு வெள்ளைநிறமான் னிறந்தாள் விருதலாம் புருடனுங் கரத்தில், தப்பிலாத்துலைக்கா லேவ்வனநிறை கற்றுன்பயல் வலக் கையிற் பிடிப்போன், தங்கிய விருச்சிகங் கருந்தேளாந் தக்கதேயென் டிவை புகழ்வே.

(இ-ள்.) மேடத்தின் ரூபம் ஆட்டைப்போலிருக்கும் அதன் நிறம் சிவப்பாகும்; ரிடபத்தின் ரூபம் ஆட்டைப்போலிருக்கும் அதன் நிறம் சிவப்பேயாகும்; மிதுனத்தின் ரூபம் ஆண் பெண் இரண்டாயிருக்கும், அது கையில் வீணை, மயில், தண்டாயுதம் இவைகளைத் தாங்கியிருக்கும், அதன் நிறம் பச்சையாகும்; கடகத்தின் ரூபம் நண்டுருவமாகும் அதன் நிறம் பாதிரிப்பூவின் நிறமாகும்; சிங்கத்தின் ரூபம் சிங்கமாயிருக்கும் அதன் நிறம் புகைபோலிருக்கும், கன்னியின் ரூபம் பெண்வடிவா யிருக்கும், ஓடம் நடத்தும், அதன் நிறம் அழுக்குப்படிந்த வெள்ளைப்பொன்னிறம், துலாத்தின் ரூபம் புருடவடிவாகும், கையில் தராசுக் கோல் பிடித்திருக்கும் அதன் நிறம் இலவம்போ லிருக்கும்; விருச்சிகத்தின் ரூபம் கருந்தேள்போ லிருக்கும் அதன் நிறம் கறுப்பாகும், எ-று. 52

வேறு

வேய்ந்தனுபுருடன் குதிரைபோலரைக்கீழ் மின்னிருதாணிறம் பொன்னும், ஆயமீன்மகரங் காதுநல்லதனை மானுமாமழுக்குவெண் ணிறமா, மேயதோர்கும்பம் புருடனுஞ்சிரத்தி லெடுப்பதுங் குடங் கரு நிறத்தோன், பாயகயல்கொண்டை யிரண்டுமீன் புழுவாம் பகர்நிற மழுக்குறுஞ்சிவப்பே.

(இ-ள்.) தனுசின் ரூபம் புருடவடிவம் குதிரைப்போல் அரைக்கீழ் இரண்டு தாளிருக்கும், அதன் நிறம் பொன்னும்; மகரத்தின் ரூபம் மீனும், அதன் நிறம் அழுக்குப்படிந்த வெள்ளைநிறமாம்; கும்பத்தின் ரூபம் குடத்தைச் சிரத்தி லேந்தியிருக்கின்ற புருடவடிவாம், இதன் நிறம் கறுப்பாம்; மீனத்தின் ரூபம் இரண்டு கெண்டைமீன்போ லிருக்கும், அதன் நிறம் அழுக்குப்படிந்த சிவப்பாகும், எ-று. 53

இராசி விதிப்பு

வேறு

சொல்லுமேடத் தனுமகரம் நலங்குகிருண்டுக் தன்டுடனே
வெல்லுமிவைகள் கிராத்துறவாய் விதிப்பாங்கண்ணுல் விருடவும்
சொல்லுங்கும்பங் கோல்மீனஞ் சிங்கம்பெண்டேள் ராசுதம்
சால்விற்பொழுதே விதிதெரிய பிராசிக்குறவை தாக.

(இ - ள்.) சொல்லுகின்ற மேடம், தனுசு, மகரம், கடகம், மிதுனம், இடபம் ஆகிய இவ்வாறு இராசிகளும் பொழுது விடியும்வரைக்கும் சந்திரனுக்கு உதவியிருந்து விதிப்பனவாகும். சொல்லுகின்ற கும்பம், துலாம், மீனம், சிங்கம், கன்னி, விருச்சிகம் ஆகிய ஆறு இராசிகளும் பகற்காலத்தில் சூரியனுக்கு உதவியிருக்கக் கண் தெரியப்பட்டனவாகும், எ-று. 54

இனியசிங்கம் மேருதாட்டோ டீரவிபு திக்கிற் குருடாகும்
கன்னிதன்டு தேளண்டுக்குங் கங்குற்பொழுதிற் கண்ணில்லை
அதுசமகர மிராசிசெவிடாத் தாரகத்தே தும் பகற்செவிடாம்
மனிதன்கும்பம் பகன்முடமா மருவுமீனம் மிராமுடமாம்.

(இ - ள்.) சிங்கம், இடபம், மேடம் இம்மூன்று ராசிகளுக்கும் சூரியன் உதயமாகுதல் கண் குருடாகும்; கன்னி, மிதுனம், கர்க்கடகம் ஆகிய இம்மூன்று ராசிகளுக்கும் இராத்திரியிற் கண் தெரியாது; தனுசு, மகரம் இவ்விரண்டிற்கும் இராத்திரியிற் காதுகேளாது; துலா, விருச்சிகம் இவ்விரண்டிற்கும் பகலிற் காதுகேளாது; கும்பமானது பகலில் முடமாகும், மீனமானதும் இராத்திரியில் முடமாகும் எ-று. 55

கிரகங்களின் சாதி, நிறம் முதலியன

வேறு

ஆதவன்பவளநிறம் புருடக்கோசன்சனும் கிரணமைந்துடையோன், அம்புலிதவளநிறம் வைசியப்பெண்ணணி கிரணம்பெழுமுன்னும், ஓதியசெயான்செந்நிறமசு அரத்தகிரணமேழுளனும், ஓங்கிய பச்சை நிறம்புதன்வைசிய அரவாணியொன்பது கிரணன், பீதகன் புருடன் குங்குமநிறத்தோன் பிராமணன்தசகிரணத்தோன், பிருகு பெண்வெண்மை பார்ப்பனி செண்பெற்றதும் கிரணமேயுடையோன், அதனுங்காரி மைவண்ணசூத்திரன் குத்திரன் சிருதியாக்கிரணன், குழ் கருமபாம்பு செம்பாம்பிருகோளுஞ் சொல்வர் னக்குலமென்றே.

(இ - ள்.) சூரியன் பவளநிறமும், புருடக்கிரகமும், க்ஷத்திரியனும், ஐந்து கிரணமுடையவனுமாவான்; சந்திரன் வெண்மைநிறமும், வைசியனும், பெண் கிரகமும், இருபத்தொரு கிரணமுடையவனுமாவான்; அங்காரகன் செந்நிறமும், க்ஷத்திரியனும், ஏழு கிரணங்களுடையவனுமாவான்; புதன் பச்சை நிறமும், வைசியனும், அலிக்கிரகமும், ஒன்பது கிரணமுடையவனுமாவான்; குரு புருடக்கிரகமும் குங்குமப்பூநிறமும், பிராமணனும் பத்துக் கிரணமுடையவனு

மாவான்; சுக்கிரன் பெண்கிரகமும், வெண்மைநிறமும், பிராமணனும், பதினாறு கிரணமுடையவனுமாவான்; சனி கறுப்பு நிறமும், அலிக்கிரகமும், சூத்திரனும், நான்கு கிரணமுடையவனுமாவான்; இராகு, கேதுக்கள் இருவரையும் சனிசா தியாரென்று (கற்றறிந்தோர்) சொல்லுவார்கள், எ-று. 56

சொல் மேயாவிக்குத் சிரகமத்தியினிற் றுலக்குகூசிலாமல் மேகிரு க்குத், அம்பிகொம்புளதாம் வெண்பிறைதனக்கே சொற்றனர் கொம் பிலேயன்று, வல்லிசெவ்வாய்க்குச் சிரசுமேலாய் வளர்ந்தெழு கூரிய கொம்பாம், மாலவன்றனக்கே சிரத்தொரு புறத்தின் மருவியகொம் புளதாகும், வெள்ளிதகற்கே சென்னிமத்தியினுமுடு கொம்பெனகவில் வர், நாடுசுக்கிரற்கு சென்னியின்பக்க கலமுடன் செறித்திடுகொம் பாம், அல்லல்சேர் காரிருமைகப்பாம்பு மாகிடுமிவர்கடமக்கும், அறுத்திடமுப்பட்டிருந்து நீழ்கொக்குமாகிய கொம்புளதாமால்.

(இ - ள்.) சொல்லுகின்ற சூரியனுக்குத் தலைமத்தியில் கூரில்லாமல் விளங்கி மேலோர்க்கும் கொம்புண்டு. சந்திரனுக்கு அப்படிப்பட்ட கொம்பு ஒன்றுமில்லை. அங்காரகனுக்கு தலையின்மேலே வளர்ந்தெழுந்த கொம் பொன்றுண்டு புதனுக்குத் தலையில் ஒருபக்கத்தில் ஒரு கொம்புண்டு. குருவுக்கு தலைமத்தியில் ஒருகொம்புண்டு. சுக்கிரனுக்கு தலையின் பக்கத்தில் நிறைந்து வளர்ந்த ஒரு கொம்புண்டு. சனிக்கும், இராகு கேதுக்களும் அறுக்கப்பட்டுக் கீழாக வளர்ந்துள்ள கொம்புகள் உள, எ-று. 57

பஞ்ச பூதக்கிரகம்

வேறு

கண்டபஞ்சபூதமாய் நின்றவாறு கருதுவாய் செவ்வாயே பிருதிவி யாகும், மிண்டியசுக்கிரன் றுனப்பானபூதம் மேலானவக்கினியே குருவ தாகும், தொண்டிருந்தவாயுவேபுத்தியாகும் குலவிய நன்னுதன்மாதே கூறக்கேளி, கொண்டதுறு மாகாய மானபூதம் கோதற்ற சனி யென்றே குறித்தார் மேலோர்.

(இ - ள்.) காணப்பட்ட (கிரகங்கள்) பஞ்சபூதமாய் நின்ற வாறாறைச் சொல்லுமிடத்து அங்காரகன் பிருதிவிபூதமாவன். சுக்கிரன் அப்புபூதமாவன். குரு தேயுபூதமாவன். புதன் வாயுபூதமாவான். குற்றம்பொருந்திய சனி ஆகாய பூதமாவனென்று பெரியோர்கள் சொன்னார்கள். இதை விளங்கிய நன்னுதலை யுடையபெண்ணே நீ கன்றாய்க்கேள், எ-று.

இச்செய்யுள் இங்ஙனம் புகன்றாலும், அப்புக்கிரகம் சந்திரனும், சுக்கிரனு மென்றும், தேயுக்கிரகம் குருவும், சூரியனுமென்றும், ஆகாசக்கிரகம் இராகுவும், கேதுவும், சனியும் என்றும் கூறுஞ் சில நூற்களுமுள. 58

இராசிமான சங்கை

வேண்டியமேடமகரத்தோ டரிவலன்றுதும் பெண்ணுமாமிவைகை கசமயிருந்தசோறுட்டில், சண்டியகீதார் சாமைபிரண்டின் கூட்டிக் கண்ட விலைக்கமாமதுவையெழிற் காஞ்சிகாசி, நீண்டதில்லைதும் பெங்க ளூர் தனக்குஞ்சாயை நின்றதுபார்த்தாற் குறைந்துறுங்குமேடம், மாண்டகைக்சேர் விழுச்சாயை கண்டறச்சன்மமாகுமினை லக்கினத்தி யறிந்துசெப்பாய்.

(இ - ள்.) உயர்ச்சியையுடைய இலங்கைக்கு மேடத்தில் நாலேகால் நாழி கையென்று சொல்லும் சோழநாட்டில் அயச்சாயை, பாதச்சாயை என்றிவை இரண்டையுங் கூட்டிக்கண்ட தொகையாகும்; சிதம்பரம், காஞ்சி, காசி, பெரிய பெங்களூர் இவைகளுக்குச் சாயைநின்ற அளவைப்பார்த்தால் மேடமானது குறைந்திருக்கும். ஆண்டுண்மை பொருந்திய விழுச்சாயை தோன்றினால் சென்மமாகு மினையக்கண்டு லக்கின சுத்தியை யறிந்து சொல்லுக, எ-று. 59

இலக்கினத் தியாச்சியம்

வேறு

செப்பிடுமே டமிடபம் கன்னியுந் துலாவும்
திகழுமீன முற்பாகத் தரைக்கடிகை தானும்
ஒப்பநுளிங் கக்கும்பம் கோன்மிதுனம் தானும்
உரைப்பாரிடப் பாகத்தி லரைக்கடிகை யென்றே
தப்பறுதேள் மகரமுடன் கயல்கடகந் தனக்கே
சாற்றுவர்பிற் பாகத்தி லரைக்கடிகை யென்றே
மைப்பொருகண் ணியமருப்புக் கொங்கைகல்லா யிதனை
வயங்குவிட காலமென மறையுணர்ந்த மேலோர்.

(இ - ள்.) சொல்லப்படுகின்ற மேடம், இடபம், கன்னி, துலா ஆகிய இந்நான்கு லக்கினங்களுக்கும் தொடக்கத்தில் அரைக்கடிகையும், சிங்கம், கும்பம், தனு, மிதுனம் ஆகிய இந்நான்கு லக்கினங்களுக்கும் மத்தியபாகத்தில் அரைக்கடிகையும், விருச்சிகம், மகரம், மீனம் கடகம் ஆகிய இந்நான்கு லக்கினங்களுக்கும் கடைசியில் அரைக்கடிகையும் விஷகாலமென்று சோதிட நூலுணர்ந்த பெரியோர்கள் சொல்லுவார்கள், எ-று. 60

பிரசவவீடு முதலியன அறிய

செயுதிக்கு மனிமிருக்குள் திசைகடகந் சிங்கம்
சென்மலக் கினமாகி லுற்றதற்கு முதல
ஆமிருக்குங் கன்னிதுலர் சென் மிதுனமேடக்காம்
ஆடிடமகரும்பம் மதத்தோமேற்கு

வெயுண்டதோளணக்கே விரிச்சிகக்கோலாயின்
விளக்கமார்வேத்தனர் திசைபெனவெனிளம்பாய்
தெதவின்மிறைமெய்திடத் தில்லெனர்பிறைக்கே.
செப்பியெபெய்னக்கி னிறைறையென த்திர்க்கே.

(இ - ள்.) மூங்கிலே நிகர்த்த தோள்களையுடைய பெண்ணே! கடகமும் சிங்கமும் சென்மலக்கினமாயிருந்தால் அக்குழந்தை பிறந்தவீடு தென்முகவா யிருக்கும், கன்னி, துலை, மீனம், மிதுனம் ஆகிய லக்கினங்களானால் வடக்கா கும். மேடம், இடபம், மகரம் கும்பலக்கினமானால் மேற்காகும். விருச்சிகம் தனுசு இந்த லக்கினங்களானால் கிழக்காகும் என்றுசொல்லி அங்ஙனம் பிறந்தது தேய்பிறையாயின் எண்ணெய் குறைவு, வளர்பிறைக்கு எண்ணெய் நிறைவென்க என்பதாம், எ-று. 61

நிறைந்தபெண்ணு மிலக்கினத் திறுதியும்
நின்றிருக்குங்குறைத் திருக்குமத்யாயின்
பிறந்தவிலக்கினந்தான் சமாயிற்றீபம்
புறம்பாகுமுபயமெனிற் றிபமிருனாமென்ப
அறைந்தசனியங்கிச வீடாகில் திக்கரி
யம்புவிலைப்பார்க்க விருளகமிருதயாகும்
சிறந்தமதிக்குஞ்சேய்க்கு மங்கிசவீடதனைச்
செவ்வனைசனிபார்க்கிலே செளிப்புலக்கிதிலவாய்.

(இ - ள்.) நிறைந்த லக்கினம் பெண்ணுமாகில் முற்பாதியுமாகில் பிரச வித்த அறையில் அம்மனை தீபப்பிரகாசமாயிருக்கும், பிற்பாதியாகில் பிரகாசம் குறைந்திருக்கும், பிறந்த லக்கினம் சரலக்கினமாயின் விளக்குத்தெண்ணம் உபயமாகில் பின்பக்கத்தில் தீபமிருக்கும், சரலக்கினமாயின் பெரிதுள் குத்த வீடாகும், சொல்லப்படும் சனியின் அங்கிசவீடாயிருந்த சனியும் சந்திரனைப் பார்ப்பானாகில் அது இருட்டு வீடாகும். அது சந்திரனுக்கும் அங்காரகனுக் கும் லக்கினம் அம்சமாகி சனிபார்த்தாலும் அப்பிரசவம் கழனிகட்டு என்பதாம், எ-று. 62

தெரிவைக்குத் துன்பமில்லை லக்கினத்தாதிக்கே
இடமுடையோரத்தமெனிற் தென்மொழிக்குத் துன்பம்
மருவியலக்கினமுதற்சந் திரனிருக்குமட்டும்
மன்னுமிதாகமடைவார்கள் மருவியநிருப்பர்
சருவியதப்பர்காணிற் முன்னேறன் அம்சினைவிற்
சனிகுசன்பார்த்திடிற்றனே சந்தசவுறுந்தியென்

பெருமையுடனிருந்தகோ ளிறைவர்தமைக்கொளும்
பெறுமென்றேமொழிவார்க ளுறையைப்பார்மிகத்தானே.

(இ - ள்.) (எந்த லக்கினத்திற் செனனமேயோ) அந்த லக்கினத்தில் உதயத்தில் செனனமானவனை தாய் யாதொரு துன்பமுமில்லாமல் பிரசவிப்பாள், அதின் அத்தமானால் தாய் துன்பப்பட்டே பிரசவிப்பள். சென்மலக்கினமுதல் சந்திரனிருக்கும் வீடுவரைக்கும் இருக்கும் கிரகங்கள் எத்தனைபேர் அத்தனை பேர்கள் அப்பொழுது சமீபமாகவிருப்பார்கள், லக்கினத்தை சுபக்கிரகங்கள் பார்த்தால் சீக்கிரத்தில் பிரசவமாகும். சனியாவது அங்காரகனாவது பார்த்தால் மிகவும் வருத்தத்தோடுகூடிப் பிரசவமாகும், மிக்க கீர்த்தியுடன் லக்கினத்திலிருக்கும் கிரகங்களின் நிறமுதலானவைகளைக்கொண்டு அந்நிறமாகவும் வடிவமுதலியன அக்குழந்தையும் பொருந்தியிருக்குமென்று பெரியோர்கள் வெருவாய்ச் சொல்லுவார்கள், எ-று. 63

தானருகேயிருந்திடவார்பருவங்கூறில்
சனியிருந்துகண்டக் காற்றலைநரைத்தகறுப்பி
ஈனமிலாக்குசனிருந்து காணின்முதுவயதே
யிசையுமிந்திவப்பாக விருப்பளமங்கலியாம்
நாளிலமென்குருவெள்ளி சசியிருந்துகண்டால்
நாரிசுமங்கிலிவாலை கறுப்புதன்மதுமையாம்
மானிலமேற்பாம்பிருந்தா லகாசாரமடந்தை
மக்குதுர்லேகித்து வந்திடுங்கண்டேர.

(இ - ள்.) லக்கினத்தில் சனியிருந்தாலும் பார்த்தாலும் சமீபத்தில் தலைநரைத்துப்போன கருப்பியிருப்பாள், அங்காரகனிருந்தாலும் பார்த்தாலும் முதிர்ந்த வயதுடைய சிவந்த நிறமுள்ள விதவையிருப்பாள், குரு சுக்கிரன் சந்திரன் இவர்களிருந்தாலும் பார்த்தாலும் சுமங்கலியாகிய இளம்பெண் இருப்பாள், புதனிருந்து கண்டால் கறுப்புடையவளிருப்பாள், இராகு, கேதுகளிருந்தாலும் பார்த்தாலும் அகாசாரப் பெண்ணிருப்பாள், அன்றிக் குழவியும் மாலைபோட்டுக்கொண்டு வருமென்றுணர்க, எ-று. 64

கண்டுமொழிமாதவின் றன்பருவகாரி
கதிர்குருபுவருக்கண்டால் விருத்தையாகும்
மண்டுவெள்ளிசேயபார்க்க வயதுநடுவாகும்
மதிபுதனுக்கண்டக்கா லவள்வாலையாவள்
மிண்டுமுடவனிருந்தால் கிழப்பாதனுஞ்சேய்
மேவில்வெந்துகட்டினதோர் வீடாகுமென்னே
பண்டிசசிபார்க்கிலகம் புதியதுவேயாகும்
பரிதிக்குமரக்கிரண்ட பதியெனச்சொல்வாரே.

(இ - ள்.) இனித்தாயின் வயதினைச் சொல்லுமிடத்து சனி, சூரியன், குரு இம்மூவரும் லக்கினத்திருந்தாலும் பார்த்தாலும் அவள் கிழவியாவாள், சுக்கிரன் அங்காரகன் இவர்கள் பார்க்க இருக்க நடுவயதுடையவளாவாள், சந்திரன் புதன் இவர்கள் இருக்க பார்க்க இளவயதுடையவளாவாள், சனியிருந்தால் கண்டால் அவ்வீடு பழமை பூர்வீகமா யுள்ளதாகும், அங்காரகனிருந்தால் பார்த்தால் வெந்து கட்டிய வீடாகும், சந்திரன் இருந்தால் பார்த்தால் அது நூதன வீடாகும், சூரியன் பார்த்தால் கண்டால் மரங்கடைந்த பட்டணமாகுமென்று பெரியோர் சொல்லுவார், எ-று. 65

சொல்லும்புதன்பார்த்திருந்தாற் சித்திரவீடாகும்
சுக்கிரன்பார்த்திருந்தக்காற் சுசிவீடதாகும்
வில்லரசனிருந்துகண்டாற் கெட்டியகமாகும்
மின்னனையார்விரும்புசுவை வெய்யவனேயுரைப்பாம்
நல்லமதிக்குப்பாகுஞ்சேய் துவர்ப்பைநாடும்
நாலுவகைச்சுவையுந்தேவ கசிப்பைபனிப்பால்
வல்லதுங்குமந்தாம் வெள்ளிபுளிப்பாகும்
அனிகாரிகைப்பிலக் கினத்திசையில்சிரசே.

(இ - ள்.) சொல்லப்படும் புதன் பார்த்தும் இருந்தாலும் அது சித்திரவீடாகும், சுக்கிரன் பார்த்தாலும் இருந்தாலும் சுத்த வீடாகும், குருவிருந்து கண்டால் கெட்டி வீடாகும், தவிரப் பெற்றதாய் விரும்புஞ் சுவையைச் சொல்லுமிடத்து சூரியன் அதில் சந்திரனிருந்தால் காரத்தையும் உப்பையும், அங்காரகனிருந்தால் துவர்ப்பையும், புதனிருந்தால் நான்குவகை ருசிகளையும், குருவிருந்தால் மதுரத்தையும், சுக்கிரனிருந்தால் புளிப்பையும், சனியிருந்தால் கைப்பையும் விரும்புவார் என்பதாம், எ-று. 66

சிரசசராசியிருக்க விருக்கவிளக்கையும்
திரங்கிரப்பாவர்கள்பார்க்கிற் றீர்க்கமுறுத்திடம்
முக்காமருவுமலக்கினத்துக் கிருபாலுநான்கு
மோதுசந்தனிருந்தாருடன் கூடியிருப்பர்
இரவிபுத்திபனிருகேந்திரத்திருக்கிற்கிழக்காம்
இரணியன்கேதிருகேதி யிருந்திடுத்தாமே
அரவுசெவ்வாய்சனமத்தி லுபதிக்குத்திருப்பாகும்
அணியுமதிசேர்க்காரிக் கதேமற்றுவாசல்.

(இ - ள்.) சராசி புதயமாக சுக்கிரனிருந்தால் விளக்கைசற்று சிவேபுகக முன்கூறிய லக்கினத்தில் ஜனிக்க பாப கிரகங்கள் பார்த்தால் தீபம் கிட்டியாயு நிலைமாறுமலு யிருக்கும், உபயலக்கின முதயமாகில் பிரசவ அறையிலிருந்த விளக்கை யெடுத்துவிட்டு வேறு விளக்கை வைப்பார்கள், லக்கினத்திற்கு இரண்டு

பக்கங்களிலுமுள்ள மூன்று பத்து வீடுகளில் எத்தனைக் கிரகங்கள் இருக்கின்றனவோ அத்தனைப் பேர்கட்ட விருப்பார்கள், சூரியன், புதன், சனி இவர்கள் கேந்திரத்தேறி யிருந்தால் அவ்வீட்டுக்கு கிழக்கு வாசலில் சென்மமாம் குரு கேந்திரத்திருந்தால் வடக்கு வாசலாகும், இராகு, கேது, அங்காரகன் இவர்கள் லக்கினத்தி லிருந்தாலும் வடக்கு வாசலேயாகும், இலக்கினத்தில் (இரண்டாமிடத்தில்) சனி யிருந்தால் மேற்கு வாசற்படியுள்ள வீடாயிருக்கும், எ-று. 67

வாசமுறுமூன்றுமிற் பதினொன்றிற்பாவர்
வந்திருக்கச்சனிபத்தா மினையதனிற்சார
நீசமடந்தையரிருக்கு புரிவர்பரிகாரம்
நீண்டசனிசுபர்மனையி லேறிநல்லோர்காணின்
ஆசனிவினைத்தொழில்செய் காரியருகிருப்பர்
ஆமென்றேசொருதியரிக் கூறைத்தாராய்ந்தோர்
தேனுறுநறக்கலைதிங்கள் முகமயிலே
செப்பினரிப்பயனைக் தெரிந்துகொள்த்தானே.

(இ-ள்.) தேசமிக்க கலைகள் நிறைந்த பூரண சந்திரன்போலு முகத்தையுடைய பெண்ணே! பலாபலனைத் தெரிந்துகொள்ளும்படி மூன்று, ஆறு, பதினொன்றும் இடங்களிற் பாபக் கிரகங்கள் வந்திருக்க, சனி பத்தாம் வீட்டிற் சேர்ந்தாலும் நீசப்பெண்களிருந்து பெற்றவருக்கு பரிகாரம் செய்வர், அச்சனி சுபக்கிரகங்களின் வீட்டிற் சேரினும், சுபக்கிரகங்கள் கண்டாலும் குற்றமுள்ள சனத்தொழில் செய்யும் பெண்கள் சமீபத்திருப்பார்கள் என்று சோதிட நூல் வல்லோர் ஆராய்ந்து சொன்னார்கள், எ-று. 68

செப்பரியதொர்பலாபலம் பகரவேண்டிற்
செங்கதிரோன்முதலவரோர் செறிபலங்கண்டெடுத்தே
ஒப்புடனேசனித்தநவக் கிரகபுடங்கண்டே
யுயர்ஞாமன்முதலவர் குளிர்காதிரைவர்
தப்பறவேயெண்ணி லக்கினபுடமுமாகச்
சாற்றிடும்பத்தொன்பதெனத் தகும்புடங்கள்வரைந்தே
இப்புவியிலுரைத்தவர்க்கே சித்திக்கும்பலன்கள்
எனச்சகருநூல்மொழிப்புலவ ரியம்பினர்கடாமே.

(இ-ள்.) ஒரு சாதகனுக்குச் சொல்லுதற்கரிய பலாபலனைச் சொல்லவேண்டி யிருந்தால் சூரியன் முதலான நவக்கிரகங்களின் நெருங்கிய பலங்களைத் தெரிந்து சன்மகாலத்து நவக்கிரக ஸ்புடஞ்செய்து ஞாமன் முதலிய ஐவரையும், குளிகன் முதலிய நால்வரையும் எண்ணி லக்கினஸ்புடம்பண்ணிப் பின் பத்தொன்பான் புடங்களையும் செய்துபார்த்து இவ்வுலகத்தின்கண் சொன்னவர்க்குத்தே பலன்கள் சித்திக்கும் என்று சோதிடநூலில் வல்ல புலவர்கள் சொன்னார்கள் எ-று. 69

இயம்புசன்மமனைகளங்கிச பக்கத்தனில்
இனி துதிக்கின்ற நவக்கிரகமிருக்கப்படிசரியே
நயம்பெறுமற்றங்கிசைசரி துதித்திடினேயந்த
நவக்கிரகமிருக்குமந்த் திரபதமறிந்தே
செயம்பெறுவேயின்மனை வீடுதெத்தவிட்டிற்
செறிந்திருக்கும்விபரமெல்லாந் தெரிந்தெண்ணிக்கண்டே
பயன்பெறுசொற்பலபாகம் லக்கினமேமுதலாய்ப்
பன்னிரண்டுவீட்டிற்கும் பலன்களறிந்துரைப்பாய்.

(இ-ள்.) சொல்லப்பட்ட லக்கின வீடானது நவாம்சகத்தில் ஐந்தாவது பங்கில் உதிக்குமானால் நவக்கிரக மிருக்குங் கிரமங்கள் சரியே, தவிர மற்றைய பங்கில் உதித்திடின் அந்த நவக்கிரகங்களிருக்கும் நட்சத்திர பாதமறிந்து அவைகள் இருக்கும் வீடு, அதித்தவீடு இவைகளில் நிறைந்திருக்கும் விவர மெல்லாவற்றையும் நன்றாய்த் தெரிந்து எண்ணிப்பார்த்து பயன்பெறுதலான பல பாகங்களை லக்கின முதலாயுள்ள பன்னிரண்டு வீட்டிற்கும் அறிந்து சொல்லுக, எ-று.

வேறு

உரைசெறிகிரகட்பாசியுச்சங்க ளரும்பகைநீசமுஞ்சமமும்
நிறைபெறுமனைபார்வையுந்தொழிலுங் கதுக்காரகமுமாரகமும்
வரவுமரபுநிறமுமேய்வடிவும் வளிசெறிபலங்குறிர்ப்பலமும்
புரவுறத்தேர்ந்துகண்டிடும்புலவர் புகன்றபலன்கள்சித்திக்கும்.

(இ-ள்.) சொல்லுகின்ற கிரகங்களின் நட்பு, ஆட்சி, உச்சம், பகை, நீசம், சமம், வீடு பார்வை, தொழில், காரகம், மாரகம், மரபு, நிறம், ரூபம், வடிவம், பலன்கள், துர்ப்பலன்கள் ஆகிய இவைகளை யெல்லாம் தேர்ந்து கண்டுணர்ந்த சோதிடப் புலவர்கள் சொல்லுகின்ற பலன்கள் (சாதகர்களுக்கு உண்மையாகச்) சித்திக்கும், எ-று. 71

பாலாரிஷ்டம்

வேறு

லக்கினத்தேதன் மூன்றாறிற் பாவரெல்லாம்
தன்னிலுடனே மரணம் லக்கினத்தில்
திக்கெனச்செவ்வாயிருக்கச் சேயெட்டாறில்
சேர்ந்தசனிகூடிலோ மரணமாஞ்சன்மத்
தக்காரெட்டிற்சசிதானிருந்தபார்க்கத்
தலங்கியாயன் கோண்டிடன்றே சொல்லிடுவர்கள் நோர்
மிக்கசெவ்வாயேழிலெட்டில் பார்த்தானிடன்மை
விளம்புவரற்பாயுளென மீன்புரைகண்மாதே.

(இ - ள்.) மீனைப்போலும் விளங்குகின்ற கண்களையுடைய பெண்ணே! லக்கினம், விருச்சிகமாகி, மூன்று ஆறாமிடங்கள் இவைகளில் பாபக்கிரகங்க ளெல்லாம் கூடியிருந்தால் அந்தக் குழவி உடனே மரிக்கும். லக்கினத்தில் அங்காரக னிருந்தாலும், செவ்வாய், எட்டு, ஆறாமிடங்களில் சனியுடன் கூடியிருந் தாலும் மரணமாகும். ஜென்மலக்கினத்திற்கு ஆறு, எட்டாமிடங்களில் சந்திர னிருந்து அவனைச் சுபக்கிரகங்கள் பார்த்தால் அக்குழவிக்கு வயது கால்சே யாகும். அங்காரகன் ஏழிலும், சூரியன் எட்டிலுமிருந்தால் அந்தக் குழந்தைக்கு அற்ப ஆயுளாகும் என்று பெரியோர் சொல்லுவர், எ-று. 72

தேயுமதிலக்கினகேந் திரத்திலெட்டின் மேவிச்
செய்முதற்பாவரைக்கூடின் மரிக்குஞ்சன்மத்தில்
ஏயசசிக்கிருபாலும் பாவர்நிற்கிலெட்டேழ்
நான்கிடத்திற்றீக்கோள்க ணிற்கிலுமற்றசேயும்
தாயுஞ்சாமெனவுரைப்பர் சுபக்கோள்பார்த்திடினே
தாயுடன்சிசுக்குமென வேசாற்றலாகும்
மாயகதிர்பாக்கியத்திற் சுபர்நோக்கிலாமல்
மருவச்சிபருடனே முன்னவரிட்டமதாம்.

(இ - ள்.) தேய்பிறைச் சந்திரன் லக்னத்திலும் கேந்திரத்திலும், எட்டாமிடத்திலு மிருந்து அங்காரகன் முதலிய பாபக் கிரகங்களோடு சேர்ந் தால் அக்குழவி பிறந்தவுடனே மரிக்கும். சந்திரனுக்கு இரண்டு பக்கங்களிலும் பாபக்கிரகங்க ளிருந்தாலும், எட்டு, ஏழு, நாலாமிடங்களில் பாபக்கிரகங்க ளிருந்தாலும் பிறந்த குழந்தையும் தாயும் சாகும், அச்சந்திரனை சுபக்கிரகங்கள்

பார்த்தால் குழந்தையும், தாயும் பிழைக்கும் சூரியன் பாக்கியஸ்தானத்தில் சுபக் கிரகங்களின் பார்வையைப் பெறாமலிருந்தாலும், சந்திரன் சுபக்கிரகங்களோடு சேர்ந்தாலும் அரிட்டமாகுமென்று பெரியோர் சொல்லுவார், எ-று. 73

பிறந்த நட்சத்திர வார துர்ப்பலம்

வேறு

ஆயசித்திரைதிங்க ளணிகுசனுத்திராடம்
ஞாயிறுபரணிகேட்டை நற்குருவாரமாகும்
ஏயவாபுதனவிட்ட மிரேவதிசனியேயாகும்
தூயபூராடம்வெள்ளி யிதிற்சன்மத் துயரஞ்செய்யும்.

(இ - ள்.) சித்திரையிற்சேர்ந்த திங்கள்கிழமையிலும், உத்திராடஞ்சேர்ந்த செவ்வாய்க்கிழமையிலும், பரணிசேர்ந்த ஞாயிற்றுக்கிழமையிலும், கேட்டையிற் சேர்ந்த வியாழக்கிழமையிலும், அவிட்டத்திற் சேர்ந்த புதன்கிழமையிலும், ரேவதியிற்சேர்ந்த சனிக்கிழமையிலும், பூராடத்திற்சேர்ந்த வெள்ளிக்கிழமை யிலும் ஜெனனமாகுமேல் மிகுந்த துன்பத்தருவதாகும், எ-று. 74

செய்யமட்டமத்திற்பாவர் சேர்ந்திடுஞானேழாம்
ஐயமாம்பிறைமத்திருந்த லைனுக்காங்கண்ணுங்கூனம்
மெய்யலக்கினத்திற்செவ்வாய் சிக்கினும்வியமாறெட்டில்
வையமேசாரிசெவ்வாய் பற்றின்மெய்க்கரிட்டம்பன்னும்.

(இ - ள்.) லக்கினத்திற்கு எட்டாமிடத்தில் பாவக்கிரகங்கள் சேர்ந்திருந் தால் ஏழுநாள் ஆகாததாகும், அப்படி தவறி பிழைக்குமாயின் கண் ஊனமாகும். லக்கினத்திற் செவ்வாயிருந்தாலும், பன்னிரண்டு, ஆறு, எட்டாமிடங்களில் சனி, அங்காரகன் இவர்களிருந்தாலும் தேகத்திற்கு அரிட்டமே செய்யும், எ-று. 75

வேறு

பண்ணுஞ்சன்மமுடனேழிற்பாவரிருக்கப்பாவர்கடாம்
அன்னவின்மதியுடன் கூடவணியதாகவருமரிட்டம்
எண்ணுந்தேய்ந்தபிறை வியத்திலேழிலொன்றிற்பாவர்களு
நண்ணிலரிட்டங்கேந்திரத்தினட போரிருக்கவுய்வாரே.

(இ - ள்.) சன்மத்திலும், ஏழாம் இடத்திலும் பாவக்கிரகங்களிருந்தாலும், பாவக்கிரகங்கள் சந்திரனுடன் கூடியிருந்தாலும் சீக்கிரத்தில் அரிட்ட முண்டா கும்; தேய்ப்பிறைச் சந்திரனுடன் பன்னிரண்டு, ஏழு, ஜென்மம் ஆகிய இவ் விடங்களிலே பாபக்கிரகங்கள் பொருந்தியிருந்தால் அரிட்டமேயாகும். ஆனால், கேந்திரத்தில் சுபகிரகங்களிருந்தால் உயிர் பிழைப்பர், எ-று. 76

உப்புயிரவிசனிசெவ்வாயுடப் புக்குறைந்தமதிகளன்கும்
மெய்யாம்வியம்பாக்கியமெட்டி லொன்றியவர்கண்மேவிடமே
பையவித்தப்பதிகடமைப் பண்பாயசன்பாராரேனல்
ஐயவரிட்டம்பொன்னேருக்க மாறுவிருப்பனவிமயிலே.

(இ - ள்.) அழகிய மயில்போன்றவளே! சூரியன், சனி, அங்காரகன், தேய்பிறைச்சந்திரன் இந்நான்கு கிரகங்களும், இலக்கினத்திற்கு பனிரண்டாமிடத்திலும், ஒன்பதாமிடத்திலும், எட்டாமிடத்திலுமிருந்து கூடினாலும், இந்தவிடங்களை குரு பார்க்காதிருந்தாலும், அரிட்டமேயாகும். குரு பார்த்தால் உயிர் பிழைத்திருப்பர், எ-று. 77

அவனியீதெட்டைந்தொன்றி லானவியத்திற்பாக்கியத்தில்
தபனன்செவ்வாய்சனிமதியந் தாமுங்கூடிநின்றாலும்
சுவனமுடனே தனித்தனியே கருதுமிவற்றினின்றாலும்
எவனும்பிறக்கிலிப்பாரின் மேவுமரிட்டமெய்துவனே.

(இ - ள்.) இவ்வுலகத்தில் எட்டு, ஐந்து, ஜென்மம், பன்னிரண்டு, பாக்கியம் ஆகிய இவ்விடங்களின், சூரியன், அங்காரகன், சனி, சந்திரன் இவர்கள் கூடியிருந்தாலும் அந்தந்த வீடுகளில் தனித்தனியே முறையே யிருந்தாலும் அப்போது ஜென்மிக்கும் குழவி அரிட்டத்தை யடைந்தே தீரும், எ-று. 78

வேறு

எண்ணியலக்கினத்தோன் பிரமலக்கினத்திலேறில்
ஒண்ணியேபாவர்தாறு முற்றிடி லூரோகியாவன்
திண்ணமாமிவர்கடாமுந் திரிகோணகேந்திரத்தில்
நண்ணிடின்மூர்க்கனவன் கஞ்சமலர்க்குழலின்மானே.

(இ - ள்.) வாசனைபொருந்திய மலர்களையணிந்த கூந்தலையுடைய மானே! லக்கினாதிபதியானவன் எட்டாமிடம் அல்லது ஆறாந்தானத்திலேறியிருந்தாலும், பாபக்கிரகங்களோடு சேர்ந்தாலும் அச்சாதகன் ரோகியாவான்; இத்தக்கிரகங்கள் இடமாகத் திரிகோண கேந்திரஸ்தானத்தில் சேர்ந்தால் மூர்க்கனுவான். எ-று. ()

மானேகேள்குதிரைமூல மகமுதற்காலுமின்னும்
ஈனரேவதியுங்கேட்டை யாயிலியமிவையீற்காலும்
ஊனநாழிகையோர்நான்குட்டானது மூன்றுமென்றுக்கும்
ஆனதந்தையவர்மூன்றினொன்றிற் செய்க்குமரிட்டம்.

(இ - ள்.) பெண்ணே கேட்பாயாக. அஸ்வினி மூலம் மகம் இந்நக்ஷத்திரத்து முதற்பாதத்திலும், ரேவதி, கேட்டை, ஆயில்யம் ஆகிய மூன்று நக்ஷத்திரங்களின் கடைப்பாதத்திலு முண்டாகும் நான்கு நாழிகைகளில், ஜெனனமாயின் முதல்நாழிகையில் தந்தைக்கும், இரண்டாவது நாழிகையில் தாய்க்கும், மூன்

றாவது நாழிகையில் சகோதரர்களுக்கும், நான்காவது நாழிகையில் குழந்தைக்கு அரிட்டமாகும். எ-று. 80

உறுந்தசன்மலக்கினதிபுடன் சோமனுறைவீட்டாதி
பெறும்பகையென்னிரண்டு பிறக்குஞ்சேய்பிழைத்திடாது
குருந்தசன்மலக்கினதிபுடன் குளிகனுஞ்சனியுங்கூடல்
அறைந்திடாய்கள்ளராலே யடிப்பட்டேயிறப்பானென்றே.

(இ - ள்.) லக்கினாதிபதியோடு, சந்திரனுக்கும் வீட்டுக்கதிபனும் பகையாயின் அங்கே பிறக்கின்ற குழந்தை பிழைக்காது. லக்கினாதிபதியோடு குளிகனுஞ் சனியுஞ் சேர்ந்தால் கள்ளர்களால் அடிப்பட்டிறப்பானென்று சொல்லுவாயாக, எ-று. 81

அன்றவனுதித்தநக்ஷத்திரத் திதிராசியந்தம்
ஒன்றிடிலுடனேயந்த முற்றிடுமென்றேசெட்டோன்
வென்றிகொள்வெள்ளிநோக்க விரவுநாண்மூன்றுமாமென்ன
நன்றிலாப்பாவர்நோக்கில் வந்தநாளிற்றுமேபோமே.

(இ - ள்.) ஜெனனகாலத்தில் ஏற்பட்ட நக்ஷத்திரம், திதி, லக்கினம் இவைகள் அந்தமாயிருந்தால் அக்குழவி உடனே யிறக்கும், குருநோக்க எட்டே நாள், சுக்கிரன் நோக்க மூன்றுநாள், அந்தக் குருவை கொடிய பாபக்கிரகங்கள் நோக்கச் ஜெனித்த நாளிலேயே இறக்கும், எ-று. 82

கனிமொழிசெப்பட்டமாதி லக்கினத்தாதிகூடி
வலியகேந்திரத்தினிற்க மருவியவெட்டினோரும்
பொலிவுறமொருவர்நிற்கப் பூமியிற்பிறந்தபாலன்
ஒலிகடலுலகில்லெட்டாண் டுள்ளுயிர்க்கரிட்டஞ்சொல்வாய்.

(இ - ள்.) சொற்செப்பின்ற அட்டமாதிபதியானவன் லக்கினாதிபதியோடு கூடி பலம்பொருந்திய கேந்திரத்திலேறி நிற்க, அந்த அட்டமத்தில் வேறுயாராவதொருவர் பலமாயிருந்தால் பிறந்தகுழந்தைக்கு எட்டு வருஷத்திற்குள்ளாக அரிட்டஞ் சொல்லுக, எ-று. 83

உன்னலக்கினமேயாதி யிருவர்லக்கினத்துணிற்க
மென்னவெட்டிலிந்து மேவிடக்காரிதானும்
தென்னுமட்டமஞ்சன்மங்க ளிரண்டையுஞ்சேர்ந்துநோக்கப்
பின்னைமெய்க்கரிட்டமென்றே பேசினார்பெருமையோரே.

(இ - ள்.) லக்கினாதிபதியும், இரண்டாமிடத்தானும் இருவரும் லக்கினத்திலிருக்கவும், எட்டாமிடத்தில் சந்திரனிருக்கவும், சனி அட்டமஸ்தானத்தையும் ஜன்மத்தையுங் கூர்ந்துபார்க்கப் பிறந்த குழந்தைக்கு, அரிட்டமாகுமென்று பெரியோர் சொன்னார், எ-று. 84

வேறு

பெருமைசேர் திங்கள் சென்மமதாய்ப் பெருங்பாவர்கள் முன்னூறிருப
இருமைசேர் பின்னும் இனங்கொளா திருக்கினரிட்டமிரவியோன் திங்
கதிலைய்யட ஒன்பதிலிருக்க வொருவரவரைப் பாராரேல்
அருமையுடனேயுதித்திடுஞ்சேய்க் கரிட்டமென்றே யறைவாரே.

(இ - ள்.) ஒரு சாதகனுக்குச் சென்மலக்கினம் விருச்சிகமாயிருந்து பாபக்கிரகங்கள் முன்னும் வீட்டினிலிருந்து பின்னும் வீட்டில் சுபக்கிரகங்களிருந்தால் அரிட்டமேயாகும். சூரியன் லக்கினத்திலாவது ஒன்பதாமிடத்திலாவது இருந்து ஒருவரும் இவரைப் பாராதிருப்பாரேல் அப்படி பிறக்கும் குழந்தைக்கு அரிட்டமென்றே சொல்லுவார், எ-று. 85

அறைமருந் தகர்தேன் சன்மமதாய் அட்டமத்தி லுறைசனியும்
நிறையுஞ் சுபர்கள் பார்வையின்றி நிற்கிலரிட்டஞ் சன்மத்தில்
இறையாக்காரியாம்பிருக்க வெழிற்சேர்மணிருக்கிடினும்
நறையார்கதிரோன் சேய்கூடிக் குளிரார்நினைக்கிலுமே.

(இ - ள்.) சொல்லுகின்ற மேடமும், விருச்சிகமும் சென்மலக்கினமாய் அட்டமத்திலிருக்கும் சனியும் சுபக்கிரகங்களினது பார்வை யில்லாமலிருந்தால் அரிட்டமாகும். சென்மத்தில், குரு, சனி, இராகு, கேது இவர்களிருக்க ஏழாமிடத்தில் சந்திரனிருந்தாலும், சூரியனும் அங்காரகனும் சேர்ந்திருந்தாலும் பத்துநாள்களில் அக்குழவி வருந்தி மரிக்கும், எ-று. 86

இறைமாந் துறவென்மதிக்கொரு பாலிரவிமாற்றுமறுபுறமொரு பால
கறைமாறுமரவமெதிர்த்து மதிக் கடியேமடுக்குநடமாக
நிறைவாஞ்சசிவாழுமிரண்டு நிலவாரவர் நீயுரைகேள்
அறையாலையிலிற்கரும்பென்னவுயிர் கத்திரியாலறுநிறமவன்.

(இ - ள்.) சந்திரனிருக்கு மிடத்திற்கு ஒருபக்கத்தில் எதுவு கிரகங்களுமில்லாமலிருக்க, மற்றொருபக்கத்தில் இராகுவும் எதிர்த்து அச்சந்திரனுக்குமேல் அட்டமமும், சந்திரனும், இராகு, கேதுக்களும் இல்லாமல் மாறினும் அக்குழவி ஆலைவாய்க் கரும்புபோல் கத்திரியால் மடியும், எ-று. 87

சிறவனுதித்த இலக்கினத்திற் சேய்ந்தமிறைவும் பாவிகளும்
அறிவாம் வியத்திலிரண்டிலெட்டில் அடைந்த பாவர்தானிருக்க
உறுகேந்திரத்தைச் சுபர்பாரா தொழியிற் குழவிக்கு மரிட்டம்
பெறுமீனகர்க்கடகமுதிற் கேழிற் பாவர்பெறிற்பிணியாம்.

(இ - ள்.) குழந்தை பிறந்த லக்கினத்தில் தேய்பிறைச் சந்திரனும், பாபக்கிரகங்களும், பன்னிரண்டு, இரண்டு, எட்டு இவ்விடங்களிலும் பாபக்கிரகங்களும் சேர்ந்திருக்க, கேந்திரத்தைச் சுபக்கிரகங்கள் பாராதிருப்பாரேல் குழந்

தைக்கு அரிட்டமுண்டாகும். மீனம், கர்க்கடகம், விருச்சிகம் இவைகள் தமக்கு ஏழாமிடத்திற் பாபக்கிரகங்களைப் பெற்றிருந்தால் ரோகம் பீடிக்கும், எ-று. 88

பிணியார் நெறிற்பாவருமாய்ப் பெருஞ்சென்மத்தில் வியபரத்
துணிவோ மெட்டாமிடத்திற் கேந்திரத்திற்பாவர் சூழ்ந்திருக்க
அணியார் குழவியுடன் றாய்க்கு மரிட்டஞ் செவ்வாய்சனிகோணம்
பணியார்மதியைப் பொன்பாரா திருக்கவரிட்டம் பாலனுக்கே.

(இ - ள்.) ஆறு, ஏழாமிடங்களிற் பாவக்கிரகங்களும், சென்மத்தில் சூரியனுமிருக்கவும், எட்டாமிடத்திலும், கேந்திரத்திலும் பாவக்கிரகங்களும் சூழ்ந்திருக்க அப்போது குழந்தைக்கும் தாய்க்குமே அரிட்டமுண்டாம். அங்காரகன், சனி இவர்கள் திரிகோணத்திலிருக்கவும் சந்திரனைக் குரு பாராதிருக்கவும் குழந்தைக்கு மாத்திரம் அரிட்டமுண்டாம், எ-று. 89

பாலவென்னோமதியமொடு பாவி சென்மத்தும் பாவருறில்
ஆலுங்குழவிக்கரிட்டமதாம் மிகவியாறிலகற்கேழில்
சாலுஞ்செவ்வாய்சனிநிற்கத் தகப்பன்சிறுவருடனிருவர்
தாலுந்தேய்ந்தமதிபாவர் நடுவீதிற்றுஞ்சிவனும்போம்.

(இ - ள்.) சன்மத்தில் வளர் சந்திரனும் சன்மலக்கினத்திலும் பாபக்கிரகங்களிருந்தால் குழந்தைக்கு அரிட்டமே. சூரியன் ஆறாமிடத்திலும், அதற்கேழில் அங்காரகனும், சனியுமிருக்க தகப்பன், குழந்தையுடன் சாவர், தேய்பிறைச்சந்திரன் பாபக்கிரகங்களுக்கு நடுவே சேர்ந்திருக்குமாகில் தாயும் இறப்பள், எ-று. 90

போமோமாறுமிடப்பிறைக்கேழ் பொருந்தச் செவ்வாய்சனிநிற்க
ஆமே தாய்பிள்ளைக்கரிட்டமடா சென்மத்திற் பாம்புசனி
காமார்நான்கிற் சேயேழிற் பனனுமிறஞ்சாற்றுமரணம்
சோமார்சனிசெவ்வாயேழிற் குழவிக்கரிட்டஞ் சொல்வாரே.

(இ - ள்.) ஆறாமிடத்தி லிருக்கும் சந்திரனுக்கு ஏழில் அங்காரகனும், சனியுமிருந்தால் தாய்க்கும் பிள்ளைக்கும் அரிட்டமாம். சென்மத்தில் இராகு, கேது, சனி இவர்களும், நான்காமிடத்தில் அங்காரகனும், ஏழில் சூரியனுமிருந்தாலும் மரணமேயாகும். சனியும், செவ்வாயும் ஏழிலிருந்தால் குழந்தைக்கு அரிட்டமென்று சொல்லுவர் பெரியோர், எ-று. 91

வாரார்முலையாய் சன்மமெட்டாமதனைக் காரேறுமுட்டொடு வியத்தில்
கூரார்பாவர் தேய்பிறையைக் கூடுவதற்குநான் கெட்டில்
ஓயார்பாவருறிற்குழவிக்கரிட்டம் பன்னிரண்டெனப் தினில்
காரார்சனிசெவ்வாய்பாம்பு கலந்துற்றுறுங்கடிதரிட்டம்.

(இ-ள்.) கச்சிருக்கிய தனத்தை யுடையாளே! சன்மத்திலும் அட்டமத்திற்கு ஆறிலும், ஏழிலும், எட்டிலும், பன்னிரண்டிலும் பாபக்கிரகங்கள் தேய்பிறைச் சந்திரனைக்கூட, அதற்கு நாலிலும், எட்டிலும் பாபக்கிரகங்க ளிருந்தால் குழந்தைக்கு அரிட்டமாம், பதினொன்றிலும், ஒன்பதிலும், சனி, அங்காரகன், இராகு, கேது இவர்கள் கலந்திருந்தாலும் குழந்தைக்கு அரிட்டமாகும், எ-று. 92

விடியசன்மத்தனிற்பிறையுங் கவின்சுக்கிரனுங்கலந்திருக்க
நெடியவேழிற்சனிநிற்க விதிதல்லாமலின்சனியும்
கொடியசசியுமொருகாலிற் கூடியிருக்கச்சன்மத்திற்
படியும்பிறையைச்சுபர்நோக்கா திருக்கிற்பாலன்றாயுடன்சாம்.

(இ-ள்.) சன்மத்தில் சந்திரனும் சுக்கிரனுங் கலந்திருக்கவும், ஏழில் சனியிருக்கவும், இதல்லாமல் சனியும், சந்திரனும் ஒரே நட்சத்திரகாலிற் கூடியிருக்க சன்மத்தில் நின்ற சந்திரனைச் சுபக்கிரகங்கள் பாராதிருந்தால் குழந்தையும் தாயு மிறப்பார்கள், எ-று. 93

காறுங்கேதுங்கரும்பாம்புங் கருதுநாலி லுற்றிடவே
மாறுங்குழவிக்குமரண மாகுமொன்பதாமிடத்தில்
பானுமியைந்திற்கோளுநிலும் பன்னிரண்டாமிகதிருடனே
நூனும்வியத்திலுற்றிடினும் புதல்வன்றந்தையுடன்மரணம்.

(இ-ள்.) காலன்கின்ற கேதுவும் இராகுவும், நான்காமிடத்திலிருக்க குழவி மரிக்கும் ஒன்பதாமிடத்திற் சூரியனும், பன்னிரண்டாமிடத்தில் வேறு கிரகங்களிருந்தாலும், சனி, சூரியனுடன் கூடி பன்னிரண்டாமிடத்தி லிருந்தாலும் பிள்ளையும் தந்தையு மிறப்பார்கள், எ-று. 94

மரணமைந்திற்கதிர்மதியு மந்தன்செவ்வாயுடன்கூடிக்
கிரணமுற்றேயிருந்தக்காற் கேளாய்குழவிபிதாமரணம்
புரணமசாருருவெட்டின் மூன்றிற்பாவருடனிருக்கத்
திரமாம்பாவர்நோக்குமுன் செய்க்குமரிட்டஞ்செப்பிடிலே.

(இ-ள்.) ஐந்தாமிடத்தில் சூரியன், சந்திரன், சனி, அங்காரகன் இவர்கள் கூடியிருந்தால் அக்குழவியும், தந்தையும் மரணமாவார். மாறாக சுக்கிரன் எட்டாமிடத்திலாவது, மூன்றாமிடத்திலாவது பாபக்கிரகங்களோடு இருந்தாலும் அவர்களுடைய பார்வையைப் பெற்றிருந்தாலும் குழந்தைக்கு அரிட்ட முண்டாகும், எ-று. 95

செய்யும்பரிதிக்கெட்டதனிற் செவ்வாய்மந்தனுடன்கூடி
உய்யுஞ்சுபர்கணோக்கிலா தற்றுப்பிதாவேயுறுமரணம்
வையமதிக்கேழெட்டினவ பன்பாமிடத்திற்பாவர்களும்
துய்யமற்றேயிருந்தக்கா லருங்குழவிபிதாவிறவே.

(இ-ள்.) சூரியனிருக்குமிடத்திற்கு எட்டாமிடத்தில் அங்காரகனும் சனியும் கூடியிருந்து சுபக்கிரகங்களின் பார்வை யில்லாவிட்டால் தந்தை மரணமாவான், சந்திரனிருக்கு மிடத்திற்கு ஏழு, எட்டு, ஒன்பதாமிடங்களில் பாபக்கிரகங்களிருந்தால் குழந்தையும் தகப்பனும் சாகும், எ-று. 96

உறுமேபாவக்கிரகமுட னிருந்தமதியின்கிரணமெனின்
இறுமேசன்மமெட்டிற்கே புந்தகுழவிதான்மரணம்
பெறுமேபரிதிகிரணமிதிற் பேசும்பாவருடன்கூடச்
சிறுவானென்றிற்சனிசெவ்வாய் சேர்ந்தகப்பன்றாய்மடிவர்.

(இ-ள்.) பாவக்கிரகங்களுடனிருந்த சந்திரன் கிரணமானாலும், அச்சந்திரன் சன்மத்திற்கு எட்டாமிடத்திலிருந்தாலும் அந்தக் குழந்தை மரணமாகும், சூரியகிரணத்தின் பாபக்கிரகங்களுடன்கூட எட்டாமிடத்தில் சனி, அங்காரகன் இவர்கள் சேர்ந்தால் தகப்பனும், தாயும் சாவார்கள். எ-று. 97

வெண்பா

பூராட மூன்றாலும் பூசத் திடையிரண்டும்
சீராகச் சித்திரையிற் செல்லவையும்—ஊர்காட
உத்திரத்துக் காலு முயிர்ப்பார் தந்தைதாய்
புத்திரனைப் பெற்றெடுத்த போது.

(இ-ள்.) காட்டிலைமுலையாளே! பூராடத்து மூன்றாலும், பூசத்து இடையிலுள்ள இரண்டு காலும், சித்திரையிற் சென்ற இருகாலும், உத்திரத்திற்கு ஒருகாலும் புத்திரனைப் பெற்றெடுத்தால் தாய் தந்தையர் உயிர்ப்பார்கள், எ-று. 98

நட்சத்திரபலன்

அச்சுவினி

செய்கருமம் வழுவாமற் செய்வன்மடவார்க்கேயன் பிரியத்திரன்
பொய்சொல்லா னுபரணப் பிரியனற்ப கோபிபெரும் புகழேயுள்ளான்
தூயவிழி சிவந்திருப்பன் மார்பகல முளன்சமர்த்தன் றாயுறும்
நேயமிலா வெற்றியுயர்ந் தேயிருப்பன் சாத்தனைக பதியினனே.

(இ-ள்) அச்சுவினி நட்சத்திரத்தில் பிறந்தவன் செய்தொழில் தவறில்லாமல் செய்வன், பெண்கள் விருப்பத்தன், தருமஞ் செய்வான், தைரியசாலி, பொய்யுரையான், சர்வாபரணத்திலும் விருப்பமுடையான், சிறுகோபி, மிக்க கீர்த்திமான், கண்கள் சிவப்பன், மார்பகன்றவன், மகா சமர்த்தன், பரிசுத்தன், சந்தேகமின்றி வெற்றி யுயர்ந்திருக்கப் பெற்றவன், சாந்தகுணன் என்னும் இவ்வியல்களை யுடையனாவான், எ-று. 99

பரணி

அன்னைபிதா வுக்கினியன் ஞானியற்ப சித்திரைய னற்பகோபி
தன்மைவா னிச்சவரியன் மானபுகழ்ச் சேர்ந்துத்தாம் பூலப்பிரியன் [கும
மன்னுமுடைத் திடனிடம்பி ளிடப்புறத்தின் மறுவனருஞ் சமர்த்தனு
பன்னியுரைப் பிரிப்பிரியன் மோவாய்க்கட் டைச்சிறியன் பரணியானே.

(இ-ள்) பரணி நட்சத்திரத்திற் பிறந்தவன் தாய் தகப்பன்மாருக் கினியவன், ஞானி, சிறு சித்திரையும் அற்ப கோபமு முடையான், தருமவான், செல்வன், பெருமையோன், தாம்பூலப்பிரியன், இடமாக்குடையவன், தேகத்தின் இடது பாகத்தில் மறு ஒன்று உடையவன், மிக்க சாமர்த்தியன், பெண் சொற்களில் விருப்பமுடையன், மோவாய்க்கட்டை சிறுத்திருப்பான், என்னும் இவ்வியல்களை யுடையவனாவான், எ-று. 100

கார்த்திகை

கொள்ளுமாச வர்க்கத்திற் பிரியனற்ப சித்திரையன் கூறுஞ்
செஞ்சொல், தெள்ளியசா தூரியன்பொய் சொல்லியுமே பொருள்
சேர்க்குந் திறத்தோன்புத்தி, உள்ளவன்மன் னவர்க்கினியன் சன்மா
னென் றேகபல முடையகோமான், கள்ளமன மூர்த்தின்மறு வழுத்
துரைக்குந் தானிவான்கார்த் திகையினனே.

(இ-ள்) கார்த்திகை நட்சத்திரத்தில் பிறந்தவன், ரசவர்க்கங்களில் விருப்பமுடையவன், அற்ப சித்திரையோன், சொற் சாதுரியன், பொய்பேசியும் பொருள் சம்பாதிக்கவும் வல்லமை யுடையோன், மிக்க புத்திசாலி, அரசர்களுக்

குப் பிரியமான பரிசு பெறுவோன், இடகாத்திரமுடையவன், வஞ்சகன், மனத்தன், மார்பில் மறுவுடையோன், வழக்குத்தொடுக்குந் தனித்த மனமுடையோன் என்னும் இவ்வியல்களை யுடையோனாவான், எ-று. 101

உரோகணி

சீரதிகதாகமுளன்சொன்ன துகேட் பான்புவனிற் படனுறும்
பாரிலன்னமிடுந்தீமானிரும்புவியா பாரிநெய்பால்பழமுமுள்ளான்
நெருமிருவிழிபருத்துப்புருவமுஞ்சற் றேநெருங்குநேயனென்னும்
தூரமுரையாலுள்ளங்கா லுயுரைத்தன் றிடைநடை ரோகணியினனே.

(இ-ள்) உரோகணி நட்சத்திரத்தில் பிறந்தவன் தண்ணீர் அதிகம் விரும்புவான், சொன்னசொல் கேட்பான், பண்டிதனும் அரசனுமாவான், அன்னதானஞ் செய்வான், இரும்பு வியாபாரி, நெய் பாற்களில் விருப்பமுள்ளான், இரண்டு கண்களும் பருத்து வெற்றி நெருக்கமுள்ளான், வஞ்சகம் பேசான், வலுத்த உள்ளங்காலுடையோன், இடத்த நடையன் என்னும் இவ்வியல்களை யுடையோனாவான், எ-று. 102

மிருகசீரிடம்

காலைமுழுக்குப்பிரியன்சாஸ்திர மயிரழகன்கல்வியுள்ளான்
கோவியத்தின்டேகன்மனவண்ணம்வெளி விடானினியகூத்திற்பாட்டில்
ஆசைவுஞ்சங்கராருந்தாம்பூல செயதிரனைத்ததுமுடிப்பான்
வேளாருக்காரினற்றயுயர்ந்திருக் குஞ்ஞானிமிருகசீரத்தினனே.

(இ-ள்) மிருகசீரிட நட்சத்திரத்தில் பிறந்தவன், காலையில் ஸ்நானஞ் செய்வதில் விருப்பமுடையோன், பராக்கிரமனுடையவன், மயிரில் அழகுடையவன் கல்விமான், இன்னிய தேகத்தின் மட்கருத்தை வெளிவிடாதவன், கூத்திலும், பாட்டிலும், தாம்பூலத்திலும் விருப்பமுடையன், நினைத்த காரியத்தை முடிக்கவல்லவன், வேளாபுதமேத்திய சுகியோன், உயர்ந்த வெற்றியுடையோன் ஞானி என்னும் இவ்வியல்களை யுடையவனாவான், எ-று. 103

திருவாதிரை

பொய்யுரைசொல்வன்கீர்த்திமான்றரித் திரனொடியன்பொருத்துநோய
வெய்யபசியுகன்சுத்தவான் குத்தியழகனிருவிழிசிவப்பன் [ன்
தூய்யபலவான்கோபியுறவுடைய துயர்த்திருக்குந்தன்மைமுள்ளான்
ஐயமறவுலகுதொழிலொருமனியாய் விளங்கியவாதிரையினனே.

(இ-ள்) திருவாதிரை நட்சத்திரத்தில் பிறந்தவன் பொய் பேசுவான், கீர்த்தியுள்ளவன், தரித்திரன், உயர்ந்தவன், கணுக்களில் நோயுடையவன், சிறுகன், சுத்தமுடையன், குடுமியழகுடையவன், கண்கள் சிவப்புடையவன், பலமுடையவன், கோபி உறவுடையவன், பெருத்த மூக்குள்ளவன் யாவர்க்கும் சன்னிபன் என்னும் இவ்வியல்களை யுடையவனாவான், எ-று. 104

புனர்பூசம்

திருந்திசொற்சாதுரியனகங் காரிவிசாலபுயன்சிக்கனத்தன் [ன்
வருந்திநெடுவழிநடப்பன்கடினமொழி யான்கள்ளன்மலர்போற்கைய
பரிந்தகுணபுத்திமான்பொய்சொல்லான் பித்தமுடன்பலர்க்குநேயன்
பெருந்தியவைந்தாம்வயதிற்கால் முடமாவன்புனர்பூசத்திறனே.

(இ - ள்.) புனர்பூச நட்சத்திரத்தில் பிறந்தவன் சொற்சாதுரியன்; அகங்காரி பரந்தபுயத்தன், சிக்கனத்தன், நெடுவழி நடப்போன், கடினமாய் வார்த்தையாடுவன், கள்ளன், மலர்போல் கையன், புத்திமான், பொய்சொல்லான், பித்ததேகி, பலர்க்கும் விருப்பமுடையான், ஐந்தாம் வயதில் கால் முடமாவன் என்னும் இவ்வியல்களை யுடையனாவான், எ-று. 105

பூசம்

வாசியுடையவன்வழக்கையுரைத்திடு கள்வன்ருத்திரவசனமுள்ளான்
நேசமுடன்மாதாவைத்தந் தையையாதரித்திடுநெடியனுடன்
தேசொழுக்கத்தனவான்கண்மூக்கழகன் பசிபொறான்றிகழுஞ்சாந்தும்
பூசிடிக்கப்பிரியன்குணவான்பாக் கியமுள்ளன்பூசத்திறனே.

(இ - ள்.) பூசநட்சத்திரத்தில் பிறந்தவன் குதிரையுடையான், வழக்குரைக்கும் கள்ளன், ருத்திரவசனன், தாய்தந்தையர்களை ரட்சிப்பன், நெடியன், ஒழுக்கமுள்ளான், தனவான், கண்களும் மூக்கும் அழகன், பசிபொறுக்கான் வாசனை வஸ்துக்களை தரிப்பதில் பிரியமுடையவன், நல்ல குணமுடையவன் செல்வத்தன் என்னும் இவ்வியல்களை யுடையவனாவான், எ-று. 106

ஆயிலியம்

செஞ்சொற்சாதுரியன்சதுருநேயன் மனதுக்கன்றிரிவான்காட்டில்
பஞ்சைபோற்சிறுதின்றிதின்பனன்னை பிதாவுக்கினியன்பக்தியுள்ளான்
வஞ்சமிலாதவர்க்குமெளிதஞ்சொல் லன்சதனான்வலிமையோருக்
கஞ்சிடான்விழிபுருவமுயர்ந்தொதுக்கி யிருக்குமாயிலியத்தோனே.

(இ - ள்.) ஆயிலிய நட்சத்திரத்தில் பிறந்தவன் சொல் சாமர்த்தியன், பகையை விரும்புவோன், மனத்தில் துக்கமுடையான், காட்டில் திரிவோன், சிற்றுண்டி விரும்பன், தாய்தந்தையர்களுக்குப் பிரியமுடையோன், புத்திமான், வஞ்சகமில்லாமல் எவரையும் எளிதஞ்செய்வோன், சதுமுடையவன், தன்னைப் பார்க்கிலும் வலிவுடையார்க்கும் அஞ்சாதவன், விழியும் புருவமும் உயர்ந்து ஒதுங்கியிருப்போன் என்னும் இவ்வியல்களை யுடையோனாவான், எ-று. 107

மகம்

இலைமுறுக்கலர்விழிதொண்டை ஆதளைபோற்செவ்விதழ்மாதே
பலதிசையிற்சஞ்சாரப்பிரியமுள்ளன் செளந்தரியனாவன்பிருத்த

புலவன்முழுக்குப்பிரியன்சுகந்தப் பரிமளப்பிரியன்பொன்னுமுள்ளான்
வலதுபுறமறுவுடையனியாயன்றப் பித்திரையன்மகத்திறனே.

(இ - ள்.) மகநட்சத்திரத்திற் பிறந்தவன் இலைமலர்போலும் முறுக்கமலர் போலும் விழியையும், தொண்டைபோலும் ஆதளைபோலும் செவ்வித இதழையும் பெற்ற பெண்ணே! பலதிசைகளிலும் சஞ்சரிக்கப் பிரியமுள்ளான்; அழகுடையோன், இசைப்புலவன், ஸ்நானப்பிரியன், வாசனை வஸ்துக்களில் பிரியன், செல்வமுள்ளான், வலது பக்கத்தில் மறுவுடையான், நியாயஸ்தன், அறபகித்திரை செய்வோன் என்னும் இவ்வியல்களை யுடையோனாவான், எ-று. 108

பூரம்

இதமானவசனமுளான்கல்விமான் சிவந்திருக்குமிருகணுளான்
மதியதனைவருத்தமெய்த்தேடு வன்வருங்கருமத்தினைமுன்காண்பான்
இதமானவியாபாரிகடினமொழிப் பலசினைவிரும்புகெஞ்சன்
பொதுமாதர்களைவெல்வானைக தந்தமுகன்பூரத்திறனே.

(இ - ள்.) பூரநட்சத்திரத்தில் பிறந்தவன் பிரியவசனமுள்ளான், கல்விமான், சிவந்தகண்ணுடையான், வருத்தப்பட்டுச் செல்வந்தேடுவன், பின்வருங் காரியங்களை முன்னே நினைப்பவன், வியாபாரி, கடினவசனன், பல எண்ணமும் எண்ணுவோன், வேசிகள் பிரியன், சிறுடம்பு, பற்களும் அழகுடையவன் என்னும் இவ்வியல்களை யுடையனாவான், எ-று. 109

உத்திரம்

கைப்பாதவுரையன்முன்கைவலியன் வித்தையுளனழகாங்கண்வாயுள்ளா
மயமார்களைவிரும்புவன்கோபி மருமுகமார்பதனிலுள்ளோன் [ன்
பொய்யாதகுரவிற்கடுவான் சிறப்பதியன்பொருத்தமுடத்தி
தெய்யாரகடைதருமன் ஞானவானுத்திரத்திறனே.

(இ - ள்.) உத்திரநட்சத்திரத்தில் பிறந்தவன் வஞ்சகமில்லாமல் பேசுவோன், வலிவுடையான், கல்விமான், அழகிய கண்களையும் வாயையுமுள்ளான், பெண்களிடம் விரும்பன், முன்கோபி, முகத்திலும் மார்பிலும் மறுவுள்ளான், பொய்யில்லாதவன், ஞானம் விரும்பன், அற்ப பசியுள்ளான்; பத்திசெய்வோன், கடையுள்ளவன், தருமவான், ஞானி, என்னும் இவ்வியல்களையுடையவனாவான், எ-று. 110

அஸ்தம்

வஞ்சமதமதன்கல்விமானற்ப பசியன்மதுவாக்கைவாழ்வோன்
இன்பமுமன்னதியுடையானரு ளமுதியன்கடினவினையபுத்தி
பின்வயதிற்றனமுடையன் சிறுகன்மார்படைகன்பின்புறக்கானல்லோன்
அன்புடனீரடைஞ்சிரப்பத்தியுள்ளன் றருமனத்தத்திறனே.

(இ - ள்.) அஸ்தநட்சத்திரத்தில் பிறந்தவன் கோபி, கல்விமான், திருப்தியுள்ளான், தருமவான், இன்பக்குறிப்புள்ளான், சூரன், அழகன், கடினவசனன், புத்திமான், பின்வயிறு திறனுள்ளவன், சிறுகன், அகன்றமார்பன், பின்கால் அழகன், ஸ்தானவிருப்பன், குருபத்தியுள்ளான் என்னும் இவ்வியல்களையுடையவனுவான், எ-று. 111

சித்திரை

பலமானசரீரவான்மார்பகல னடைகடியன்பரிந்துசொல்வான்புலை
விடயதற்குணனடைநற்பிரியன் முகத்தபுத்திக்குறிசினன்பன்
நிலைமைபெறுந்திட்டவசனன்முகத்துறுநன் மறுவுளனித்திரையுமற்பன்
செலவுசெய்யான்சவுரியவான் றூக்கமுளான்கோபிசித்திரையிற்றேனே.

(இ - ள்.) சித்திரை நட்சத்திரத்தில் பிறந்தவன் பலமுள்ள உடலுள்ளான், அகன்றமார்பன், கடினமானநடையன், பிரியவசனன், நல்லகுணமுள்ளவன், தமோகுணவன், யாவர்க்கும் நண்பன், திடவாக்குடையவன், முகத்தில் மறுவுள்ளவன், அற்பநித்திரை செய்வோன், செலவு அதிகஞ்செய்யான், சௌரியவான், ஊக்கமுள்ளவன், கோபி என்னும் இவ்வியல்களையுடையனுவான், எ-று. 112

சோதி

பல்லவர்க்கும்பிரியன்போசனப்பிரியன் மறுவுடையிடப்பற்றவாழ்வோன்
கல்வியல்சேர்தேவதாபத்தியுந் தனவிச்சையுளான் [தேகன்
ராசசேவைக்கல்வியுளான்றாய்தந்தைக்கினியன் விசுவாசமுளானழகன்
சொல்லுநெறியுளன்காத்தாயுதம்பிடிப்பன்தியாகவான்சோதியினே.

(இ - ள்.) சோதி நட்சத்திரத்தில் பிறந்தவன் பலபேரிடத்தும் பிரியன், போசன விருப்பமுடையான், இடையில் மறுவுள்ளான், தேவதாபத்தியும் தனத்தர இச்சையுமுள்ளான், ராசசேவைக்குரியான், கல்வியுள்ளான், தாய் தந்தையர்களிடத்தில் பிரீதியுள்ளான், யாவரிடத்தும் விசுவாசி, வலுத்த தேகமுள்ளான், நெறியாய்ப்பேசுவோன், ஆயுதம் பிடிப்போன், தியாகமளிப்போன் என்னும் இவ்வியல்களையுடையனுவான், எ-று. 113

விசாகம்

வேறு

சொல்லுமுகத்தின் மறுநெடிய னீதியிற்பிரியன் சுற்றமாரர்க்
கினியன் சொல்லடக்குங்குணத்தன், நல்வசனன் பொறையுடையனான்
நடையார்சேயன் நாடியதோர் தலைமார்பி னரையின் மறுவினனும்,
செல்வமுளான் சதுர்வேதன் குணவான்கோபி சேவையுளான் விசார
மிலான் தெய்வபத்தியுள்ளான், வில்வாளுமேகத்தாரகுணமுமுளாரும்
மிகவடத்துந்தியாகியாம் விசாகத்தினே.

(இ - ள்.) விசாகநட்சத்திரத்தில் பிறந்தவன் முகத்தில் மறுவுடையான், நெடியன், நீதிமான், கீர்த்திப்பிரியன், சுற்றத்தார்க்கும் அரசர்க்கும் இனியன், சொல்லடக்குங் குணமுடையவன், நல்வசனன், பொறுமை யுடையோன், பெண்கள் நேயன், தலை மார்பு இடுப்பு இவைகளிலும் மறுவுடையன், செல்வமுள்ளான், சதுர்வேத நிபுணன், குணவான், முன்கோபமுள்ளான், தேவதாசேவை செய்வோன் விசாரமில்லான், தெய்வபக்தியுள்ளான், வில் வாள் இவைகளைத் தாங்குங்கரத்தன், யானை குதிரை இவைகளைச் செலுத்துவோன், தியாகி என்னும் இவ்வியல்களையுடையவனுவான், எ-று. 114

அனுடம்

சனமில்லாதற்குணவான் றும்புசெய்ப்பிரியன்
எவரெவருமபுகழ்சதுர னினியபுத்தியுளனும்
நாளிலுமொருத்திக்கு நீதிமான் றாயன்
நயனக்கண்சிவந்திருக்கு நாதியர்சன்மானி
மானிலையர்க்கினியன் மயிரழகன்மார்பகலன்
மாதாவைத்தந்தைதனை மகிழ்ந்தியரக்ஷித்திடுவோன்
ஆலைப்போல்வேகமுள னற்சொல்லனல்ல
ஐஸ்வரியவான்கோபியா மனுஷத்தானே.

(இ - ள்.) அனுட நட்சத்திரத்தில் பிறந்தவன் நற்குணவான், தாம்பூலப்பிரியன், யாவராலும் புகழப்படும் கண்ணியன், புத்தியுள்ளவன், எல்லாருக்கும் ஆதிக்கத்தக்க நீதிமான், பரிசுத்தன், சிவந்தகண்ணுள்ளான், நாதியன், மானி, பெண்களுக்கினியன், மயிரழகன், மார்பகலன், மாதாபிதாக்களை ரட்சிப்போன், ஆனைபோலும் வேகமுள்ளான், நல்வசனம் வசனிப்போன், ஐஸ்வரியவான், கோபி என்னும் இவ்வியல்களையுடையனுவான், எ-று. 115

கேட்டை

நாட்டமகன் துஷ்டனைக்கன் பொய்யனுமாயன்
தருமத்தியுளனிரவான் குரூரகோபி
நாடியவுன்முச்சடனி நாடேறும்பிரியன்
வர்ற்புத்தியுளநெடியன் றுமையினாசுதிப்பன்
வாட்டமிலாச்சித்தன்டிதின்பன் மன்னர்க்கினியன்
மயிர்கடையும்விழிசிவப்பும் வைப்பாதமறுவன்
கேட்டமொழி திறங்கொள்ளான் பொய்மையைமெய்யாக்கிடுவோன்
கேள்வியுளன்கடினச்சொல்லன் கேட்டையானே.

(இ - ள்.) கேட்டை நட்சத்திரத்தில் பிறந்தவன் நாஸ்திகன், துஷ்டன், துஷ்டர்கள் நேசன், பொய்யன், உபாயன், பக்தியுள்ளான், இரக்கமாட்டான், மிகுந்தகோபி, உன்மத்தனுள்ளான், ஸ்தானப்பிரியன், நல்லபுத்தியுள்ளான், கெடு

யன், தமையனை ரட்சிப்பான், சிற்றுண்டி பிரியன், ஆசாரக்கினியன், மயிர்நனி யும் கண்களும் சிவக்கப்பெற்றவன், வலது பக்கத்தில் மறுவுடையான், கேட்ட சொல்லைத் திறமாகச் சொன்னமாட்டான், பொய்யை மெய்யாக மாற்றி விடு வான், நற்கல்வியுள்ளான், கடினச்சொல்லான் என்னும் இவ்வியல்களை யுடை யவனாவான், எ-று. 116

மூலம்

மண்டியபசிக்கிரைப்பிரியன் புறந்தாருநன்னதனும்
வழுவாமற்செய்கருமஞ் செய்யத்திமானும்
திண்டிறலாயுதத்தன்றுற் சினனுஞ்செய்திடுவன்
திகழ்தந்தைதாய்க்கினியன் சிறந்தகுவைசிலன்
கண்டசிறுதின்றிதின்னப் பிரியவான்லோபி
கண்சிறுக்கச்சிவந்திருக்குங் கல்விமானுடும்
மிண்டுகலைசெய்திடுவ னுறவினரைச்சேரான்
முன்கோபிகொடியனாகும் மூலத்தாரே.

(இ-ள்.) மூல நட்சத்திரத்திற் பிறந்தவன், மிக்க சித்திரைப்பிரியன், புறங்காலழகுடையவன், செய்கருமம் வழுவாமற் செய்வோன், பத்திமான், ஆயு தத்தால் சீவிப்போன், தந்தைதாய்க்குப் பிரியன், தவிசெறியுடையான், சிறு தின்றிதின்போன், லோபி, கண் சிறுத்துச் சிவந்திருப்போன், கல்விமான், சொற்றுலைகளையே செய்வோன், பந்துக்களைச்சேரான், முன்கோபமுள்ளான், மிகக்கொடியன் என்னும் இவ்வியல்களை யுடையவனாவான், எ-று. 117

பூராடம்

மெய்க்கெடியன்சிறுநெற்றியான் வாசனைப்பிரியன்
விசாரமுனையசத்தன்பன் மேற்கருமம்பார்ப்பன்
செய்யசிற்றுண்டிப்பிரியன் மாதாவுக்கினியன்
சேர்ந்தவரைரக்ஷிப்பன் சிவந்தநீள்விழியன்
கைகாலுயர்ச்சியுளான் சவுந்தரியன்விசாலன்
கள்வனுமவீரியவான் காலங்கைபுயமகலியன்
பொய்ச்சொல்லன்சந்தோசப் பிரியன்பின்னோர்க்கினியன்
பொறுதிதானவனாகும் பூராடத்தாரே.

(இ-ள்.) பூராட நட்சத்திரத்திற் பிறந்தவன் நெடியவன், சிறுத்த நெற்றி யுடையான், வாசனைப்பிரியன் விசனமுள்ளான், மன்னர்க்குச் சினேகன், உயர்ந்த உத்தியோகஞ் செய்வன், சிற்றுண்டிப்பிரியன், மாதாவுக்கினியன், தம்மை யடைந்தவரை ரட்சிப்பன், சிறுத்துச் சிவந்திருக்கும் கண்களுள்ளான் நீண்ட கைகால்களுள்ளான், சௌந்தரியவான், விசாலன், கள்வன், சூரன், காலங்களிலும் புயங்களிலும் அகலமுள்ளான், பொய்ச்சொல்லான், தேசயாத்திரைப்பிரியன், பின்னு ளவர்க்கினியன், தருமவான் என்னும் இவ்வியல்களை யுடையவனாவான், எ-று. 118

உத்திராடம் வேறு

நற்றமர்க்கினியன்முகத்துமறுவான் சீரமுடையான்பலவா
புத்திமானுயர்ந்தார்க்கசலவசன போசனப்பிரியனிக்கஞ்சான் [ன்
பத்திமானுறவுக்கினியன்மாம்பி பிறர்பொருள்வேண்டாதாயன்
உத்தமர்க்கினியனிறைந்தசொற்பிரியா யுன்னுமுத்திராடத்திறத்தோனே.

(இ-ள்.) நினைக்கின்ற உத்திராட நட்சத்திரத்திற் பிறந்தவன் பெண்களுக் கினியவன், முகத்தில் மறுவுள்ளான், சீரமுடையவன், பலவான், புத்தி மான், உயர்ந்தார்க்கு நல்லவன், நீண்டமூக்குள்ளான், நல்லவார்த்தையாடுவோன், போசனப்பிரியன், சலத்திற்கு அஞ்சான், மானி, பிறர்பொருளை விரும்பான், தாயன், நல்லவர்களுக்கு நல்லவன், நியாயமீவோன் என்னும் இவ்வியல்களை யுடையவனாவான், எ-று. 119

திருவோணம்

தக்கதோர்கல்விமானொருபோகஞ்சற்றினிற்கோபமாறிவன்
பக்குமுன்பின்பார்த்துநடப்பன் பதிவுசெய்காதுயர்ந்திருக்கு
மைமக்களுக்கினியன்பரிமளப்பிரியன் மயிர்முடியழகனுற்சாகன்
சிக்கனவானுமேற்பவர்க்கீயான் திகழ்திருவோணத்தானே.

(இ-ள்.) விளங்குகின்ற திருவோண நட்சத்திரத்திற் பிறந்தவன், தகுந்த கல்வியுடையோன், ஒருபோகன், கொஞ்சத்திற் கொஞ்சம் கோபங்கொண்டு மாறு வோன், முன்னும் பின்னும் பார்த்து நடப்பன், உன்னத்தால் உயர்ச்சியைப்பெற் றவன், பெண்களுக்கினியன், வாசனைவஸ்துக்களிற் பிரியன், மயிரழகன், உற்சா கன், சிக்கனவான், ஏற்பவர்க்கீயான் என்னும் இவ்வியல்களை யுடையவனாவான். எ-று. 120

அவிட்டம்

நெறிபெருக்கருமந் தன்சொன்மேலோரை வின்றவர்க்கஞ்சிடான்
றியாகி, உடல்நெடியா சிறுமுயர்ந்திருப்பன்றெருவர் சொற்பொருள்
ளுண்பிரியன், பெறுமவர்க்கினியன் மடந்தைபாக்கன்பன் பெரும்பொ
ருட்டேடுவனழகன், அறிவுடைனக்கிப் பிறர்பொருள்வவ்வா னவிட்ட
நக்ஷத்திரத்தானே.

(இ-ள்.) அவிட்ட நட்சத்திரத்திற் பிறந்தவன், நேரான தொழில்செய் வோன், யாவர்க்கும் பயப்படான்; தியாகி, புறவடி, நாசி இவைகள் உயர்ச்சியைப் பெற்றிருப்பன், ஒருவன் சொல்லையும் பொறுக்கமாட்டான், மாமிசபட்சணப் பிரியன், தந்தைதாய்க்குப்பிரியன், பெண்களுக்கினியன், செல்வமிட்டுவன், அழ கன், அறிவுள்ளோன், பிறர்பொருள் அபகரியான் என்னும் இவ்வியல்களை யுடையவனாவான், எ-று. 121

சதயம்

பத்தியில்லாமல்வெகுண்டசொற்பொறுநவான் பழுதிலாரோகவா
னினியன், புத்திமான்கைகால்வலியன்வாய்முகன் பொய்பேசுறன்மன்ன
வர்க்கினியன், வித்வான்சூரன்மாதருக்கன்பன் மிகுந்தூராடவும்பிரி
யன், சத்ருசயன்செல்வனுளான் வழக்குரைப்பான் சதயநக்ஷத்திரத்
தானே.

(இ - ள்.) சதயநட்சத்திரத்திற் பிறந்தவன் கோபிக்குஞ்சொல்லைப் பொறுத்தவன், ரோகவான், இனியன், புத்திமான், கைகால் வலியுள்ளோன், வாய் அழகன், பொய்பேசாதவன், அரசர்க்கினியன், வித்துவான், சூரன், பெண்களுக்கின்பன், ஸ்நானப்பிரியன், சத்துருவைச் செயிப்போன், செல்வமுள்ளோன், வழக்குரைப்போன் என்னும் இவ்வியல்களை யுடையவனுவான், எ-று. 122

பூரட்டாதி வேறு

பூரட்டாதிபொருள் பிறர்பொருத்துச்சொல்
கேரிட்டார்வழக்கன் பாவியக்கன்பினு
வாரிட்டார்முலை மாதொருக்கீவிலான்
ஓரிட்டார்கல்வி மாறுசிபுன்னவன்.

(இ - ள்.) பூரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்தவன் பிறர்சொல் பொறுக்காதவன், வழக்குரைப்பான், பாவியும், செய்வியும் பிரியன், பெண்களுக்கு ஈயாதான், கல்விமான், ஆசிடறுவோன், அழகுடையவன் என்னும் இவ்வியல்களையுடையவனுவான், எ-று. 123

உத்திரட்டாதி வேறு

சித்தசீராடிதமருளன்கோன் நீதியான்பிறர்க்குபகாரி
வித்தைதாம்பூலப்பிரியன்சஞ்சாரன் விபூஷணாதமர்புடையன்
புத்திமான்மாதர்க்கினியசாதுரியன் பொய்யன்மற்றவர்தொழிற்புரிவா [ன்
உத்தமர்க்கினியன்வழக்கினிலவலா னுத்திரட்டாதிகாரனே.

(இ - ள்.) உத்திரட்டாதி நட்சத்திரத்திற் பிறந்தவன் சீராட்டுப்பிரியன், சுறுத்தாளை மிருதியுடையவன், கோன்சொல்லுவோன், நீதியோன், பிறர்க்கு பொன்னுபகாரஞ் செய்வோன், வித்தையிலும் தாம்பூலத்திலும் பிரியன், தேசசஞ்சாரி, பரந்த ஞானமுடையவன், பரந்தமார்புடையவன், புத்திசாலி, பெண்களுக்கினியன், சாதுரியன், பொய்யன், அந்நியர்களுடைய தொழிலை விரும்பிச் செய்வான், நல்லவர்க்கு நல்லவன், வழக்குதொடுப்பதில் பலவான் என்னும் இவ்வியல்களை யுடையவனுவான், எ-று. 124

ரேவதி

மெல்லியரிடத்திற்சாலவேபிரியன் மிகுந்தசெல்வம்பரிதொன்விளக்கும்
நல்லவன்பிறர்சொற்கேட்டினும் குணவானயனகிங்காரமேமானும்
சொல்லுரையிற்சாதுரியந்தனைத் தொழும்பத்திபுள்ளபுத்தியினன்
இல்லையென்னுரையான்பழிக்கிடங்கொடாதவியல்பினுனிரேவதியானே.

(இ - ள்.) இரேவதி நட்சத்திரத்திற் பிறந்தவன் பெண்களிடத்தில் மிகவும் பிரியன், பரிதொன் மிகுந்த செல்வத்துடனிருப்பான், நல்லவன், பிறர் சொல் கேட்பான், நல்லகுணவான், கண்கள் அழகுடையோன், வாய்சாதுரியன், பிராமணர்களை வணங்கும் பத்தியுள்ள புத்தியுடையோன், இரப்போர்க்கு இல்லையென்னாதவன், பழிபாவத்திற்கு அஞ்சுவோன் என்னும் இவ்வியல்களை யுடையவனுவான், எ-று. 125

நட்சத்திரப் பொதுப்பலன்

முற்றிற்று.

நட்சத்திரப் பாதபலன்

அச்சுவினி

சீர்பெறுகோளன் சஞ்சலன்பாவி செறிந்திடும் ரூபமேயில்லான்
சொற்பிய பிறக்கனத்தியர்க்கன்பு செய்குவன் கபதிறுதற்கால், நார்
செறிபிறரின் குணத்திதனையறிவன் சவுந்தரவானவம் புரிவான் - சாத்திர
நூன்முறைக்குந் தானமுப்பார்வைதரு மிருகாவினிற் சனித்தோன், வர்
மேபெறுகளித விச்தையிற் பிரியனினினுபத்திய புகல்வன் - இசைத்
திடுமூலரோகி கற்கருமமென்னுறுவன் மூன்றதாங்காலோன், போர்
செறிபுடம்புவலிதா காமதிக புத்திமான் சோதிடமறிவான் - புரந்தரன்
காமிசத்தியவானும் புகழுறாற்காலினி லுதித்தோன்.

(இ - ள்.) அச்சுவினி நட்சத்திரத்து முதற்பாதத்தில் பிறந்தவன் கோள் சொல்லுவோனும், மனச்சஞ்சலனும், பாவியும், நல்ல ரூபமில்லாதவனும், பிறர்க்கு உறவும், அந்நியர்களிடத்தில் பிரீதிகாட்டுபவனுமாவான். இரண்டாவது பாதத்திற் பிறந்தவன் பிறர் மனபாவங்களை யறிபவனும், அழகுள்ளவனும், நன்மை செய்பவனும், சாத்திரங்கள் முறையிலேப்படியான மெய்ஞ்ஞானத்தில் உட்பார்வை யனுமாவான். மூன்றாம் பாதத்திற் பிறந்தவன், சோதிடவித்தையிற் பிரியமுள்ளானும், நல்ல புத்திகளை எடுத்துச்சொல்லுவானும், மூலரோகமுள்ளானும், நல்ல காரியங்களையெல்லாம் நினைப்பவனுமாவான். நாலாம்பாதத்தில் பிறந்தவன் போர்செய்தலில் உடம்பு வலிதுவிளைப்பவனும், அதிக புத்தியுள்ளவனும், சோதிடம் உணர்வானும், இந்திரபோகனும், காமியும், சத்தியவானும் ஆவான், எ-று.

பரணி

காலமாந் திவெப்பன் மிகுபராக்கிரமன் கனபலன் தியர்நிபுள்ளான்-
கருதலர்சிங்கஞ் செந்நிறமயிரான் காணுமே பரணியின் முதற்கால்,
கோலமானி நிபுணனும்லசியன் குணமுள்ளான் புத்திமான்காமி-கூறிய
தருமசாத்திரமுரைப்பன் குலவியபரணிகா லிரண்டாம், சாலவுங்
கோபி புருட்சியுள்கண்ணான் தன்னியன்மானிசந்தோஷி - சற்குண
னெடியோனுகு மூன்றுக்கால்சாற்றிய பரணியாமதன்மேல், தாவிதே
சுத்தன் கோபியாமாசர் தன்னுசேவகத்தவமுள்ளான் - அர்ச்சனன்
கருவியாகுமே பரணிநான்கா காற்கணிறுற் சொல்லே.

(இ - ள்.) பரணிநட்சத்திரத்து முதற்பாதத்தில் பிறந்தவன் வெப்பனும், பராக்கிரமனும், பலசாலியும், தீநியுள்ளவனும், பகைவர்களை ஜயிக்கும் சிங்கம்போல் வெல்வோனும், சிவந்த ரோமமுடையவனுமாவான். இரண்டாவது பாதத்தில் பிறந்தவன் மானியும், நிபுணனும், அலசியக்காரனும், நற்குணனும், புத்திமானும், காமியும், தருமவானும், தரும சாத்திரஞ் சொல்லுவோனுமாவான். மூன்றும் பாதத்தில் பிறந்தவன் கோபி, வட்டம்போன்ற கண்ணனும், தனியனும், மானியும், சந்தோஷித்தனும், சற்குணனும், தேகநீட்டியனுமாவான். நாலாம் பாதத்தில் பிறந்தவன் சுத்ததேகமுடையவனும், கோபியும், அரசனிடஞ் சேவகஞ்செய்வோனும், அர்ச்சனையுள்ளவனுமாவான், எ-று. 127

கார்த்திகை

சொல்லுமாசாரான் வித்துவான் பிரபுதோன்றிய விபவமுள்ள
வனும்-சூரனுநேசன் புத்திமான்ரோகி தோன்றிடுமவனின் முதற்கால்,
வெல்லுமாசாரவீனன் மானிடர்கள் வெறுத்திடுகோபமுள்ளவனும்-
வெற்றிசேர்பிறரைச் சேர்ப்பவனுமன்னை விரும்பிடான் கார்த்திகை
யிருகால், புல்லுவன் பட்டமடந்தையர் தன்னைப் புத்தியிலான் மிகு
சூரன், பொருந்திடாக் கோபிகருவி பொல்லாங்கைப் புரிகுவனுமொரு
மூன்றில்-அல்லுமாம்பிடியன் கலைவல வறியானுமனத் தாபமேயுள்ளான்-
அடைந்திலான் பொறுமையுக்கவான் ரோகியாகு காற்காலதன்
பொருளே.

(இ - ள்.) கார்த்திகை நட்சத்திரத்து முதற்பாதத்தில் பிறந்தவன், ஆசாரமுள்ளவனும், வித்துவானும், பிரபுவும், இலாபசேகரனும், சூரனும், பசப்பிரீதியுள்ளவனும், புத்தியுள்ளவனும், ரோகியுமாவான். இரண்டாவது பாதத்தில் பிறந்தவன் ஆசாரவீனத்தவமுடையவனும், கோபியும், ஜெயசாலிகளைச் சிநேகராகச் சேர்த்துக்கொள்பவனும், சாஸ்திரங்களை விரும்பாதவனுமாவான். மூன்றும் பாதத்தில் பிறந்தவன் அட்டபெண்களைச் சேருபவனும், புத்தியில்லாதவனும், மிகுந்த சூரனும், கோபியும், தீமையையே செய்பவனுமாவான்.

நாலாம் பாதத்திற் பிறந்தவன் தரித்திரனும், சாஸ்திரம் கல்லாதவனும், மனஸ்தாப முடையவனும், பொறுமை யில்லாதவனும், உக்கவானும், ரோகியுமாவான், எ-று. 128

உரோகணி

பொருளுமுள்ள னிலைச்சலான்காமி புறத்தியார்க் கியற்றுவன்
றன்பம்-பொறையிலான்வர்மி ரோஷவான்ரோகி பொருந்துரோகணி
முதற் காலன், அருளுயர்சாந்த குணமுளான்ரோகி யாசாரன் சத்
தியவாக்கி-அயர்ந்ததோர்பெண்ணை மணப்பன்வாய்ச்சால னன்புளனு
மிருகாலன், குருவருட்கணித வித்தைதசங்கீதன் கூறியமந்திரன் சக
வான்-குலவியபஞ்ச காவியமறியுங் கொள்கையானுகு மூன்றுங்கால்,
இருளிலாதத்துவ னந்நியருடைமைக் கிச்சைசெய்புத்தியா னரிசி-
னந்திறைசொலன் ரோகணிகாற்கா லினில்வருமோன்பல னுரைக்கில்.

(இ - ள்.) உரோகணி நட்சத்திரத்து முதற்பாதத்தில் பிறந்தவன் பொருளும் அழகுமுள்ளவனும், அலைச்சற்படுவோனும், ஆசையும், அந்நியர்களுக்குத் துன்பஞ் செய்வோனும், பொறுமையற்றவனும், வர்மியும், ரோஷமும், ரோகமுள்ளவனுமாவான். இரண்டாவது பாதத்தில் பிறந்தவன் கிருபை பொருந்தியுள்ளவனும், உயர்ந்த சாந்தகுண முள்ளவனும், ரோகியும், ஆசாரமுள்ளவனும், உண்மைபேசுவோனும், விரும்பிய பெண் ஒன்றையே விவாகஞ் செய்துகொள்பவனும், வாய்ச்சாலனும் ஆசையுள்ளவனுமாவான். மூன்றும் பாதத்தில் பிறந்தவன் கணித வித்தை யறிவோனும், சங்கீத முணர்வோனும், மந்திரவாதியும், சகவானும், பஞ்சகாவியங்க ளறிவானுமாவான். நாலாம் பாதத்திற் பிறந்தவன் உண்மை பேசுவோனும், அந்நியர் சொத்தில் ஆசை கொள்வோனும் பெண் போகத்தில் விருப்பமுடையவனுமாவான், எ-று. 129

மிருகசீரம்

உரைத்திடுதனவான் சத்துருசங்காரனுயர்தால தேகனுங்கோபி,
உண்மையாசாரவீனன் ராசுதனுமோகுமான் றலைமுதற்காலோன்,
தரைக்குருகல்வழுக்கே புனைப்பவனுந்தேசிசாது மிதனைசாம்பெறுமேன்-
சத்தியவாக்கி யரிவையர்லோலன் சாற்றிடு மிரண்டதாங் காலோன்,
உரைக்குநல்லுதார குணமுளனல்ல னுத்தமன்சாதுசந்தோஷி, உசித
வாசாரன் புத்திமான்சீமா னுற்றமூன்றும்பதந் துதித்தோன்,
விரைத்தடிமபுத்திசத்தியன் சாதுமேனிய தருமனற்காமி, வீரியன்
சோபிவஞ்சகனென்றே விளம்புகாற்பாதமினியே.

(இ - ள்.) மிருகசீரிட நட்சத்திரத்து முதற்பாதத்தில் பிறந்தவன் சொல்வித்தக்க தனவானும், சத்துருக்களை ஜயிப்பவனும், உயர்தேகனும், கோபியும், ஆசாரமிலாதவனும், ராட்சசனுமாவான். இரண்டாவது பாதத்தில் பிறந்தவன்

வழக்குரைப்பவனும், உத்தேசிப்பவனும், சாதுவும், மிருதுவாக்கியனும், உண்மை பேசுபவனும், ஸ்திரீலோலனுமாவான். மூன்றாம் பாதத்தில் பிறந்தவன் உதார குணமுள்ளவனும், உத்தமனும், சாதுவும், சந்தோஷமுள்ளவனும், ஆசாரனும், புத்திமானும், சீமானுமாவான். நாலாம் பாதத்தில் பிறந்தவன் புத்திமானும், மெய்யுரைப்பவனும், சாதுவும் தருமவானும், காமியும், கோபியும், வஞ்சகனு மாவான், எ-று. 130

திருவாதிரை

இனியநல்வசன குணமுளான்மகாத்துமா மௌனவான் காரியத்திளியன்-இயலுறுநல்ல வாதிரைமுதற்கா லினில்தருக்குணத்திறு மென்ப-தனியுரைவயச்சா லமுனிட்டுரான் தருக்கியன்கருவிதிரைசையிலான் தருதியாயமடைவா ருடன்புணர்ந்திடுவன் சாற்றியபாதமோரிரண்டில், குனியுநல்வாத ரோகமுள்ளோரான் கோபிதன் இருமையுமில்லான் கோளறுமத்த காரியந்தமக்கேகுணமிலான் காலொரு மூன்றில், துனியுநல்விவேகி யுறவினர்பகையான் றேன்றியவினைமயனுந்தன்-தூர்ப்புத்தியுத்தத யுடையுளான் பொல்லாத்தூர்ச்சனனெனுங் காண்கென்றே.

(இ-ள்.) திருவாதிரை நட்சத்திரத்து முதற்பாதத்தில் பிறந்தவன் நல்ல பேச்சுள்ளவனும், நல்லகுணமுள்ளவனும் மகாத்துமாவும், மங்கையர்களுக்கு இனியனுமாவான். இரண்டாவது பாதத்திற்பிறந்தவன் பேசுவதில் சமர்த்தனும், வீட்டோனும், தர்க்கவானும், நீட்சையில்லாதவனும், தக்கபெண்களைப் பொசிப்பவனுமாவான். மூன்றாம் பாதத்தில் பிறந்தவன் குனிக்கின்ற வாதரோகமுள்ளவனும், கோபியும், தாட்சணியமில்லாதவனும், கோளுரைப்பவனும், பெண்களுக்குப் போககுணத்தைத் தாதவனுமாவான். நாலாம் பாதத்தில் பிறந்தவன் விவேகமுள்ளவனும், சுற்றத்தார்க்கு விரோதியும், சனாபுத்தியுடையவனும், அழுக்குப்பட்டிருக்கு முடம்புள்ளவனும், தூர்ச்சனனுமாவான், எ-று. 131

புனர்பூசம்

என்றுமெய்துலப் பிணுக்கமற்பொரி யிசைக்கிடு செவிடனுங் காமி-எனமயிர் னினிபுனர்பூச முதற்காலினி லிசைக்கோன், தானதியயித்த நூட்டமனதேகி சோம்பலாசாரமு மில்லான்-தூக்கமேமித்தம பொருக்குவனிருகா றேன்றியதிர் காட்டமனமிகவே, அன்றிதிக்குட்டரோகியாஞ்சாதா மலேச்சலைக்கொண்ட மதியான்-மத்தமுறுத்தரோகவான் தீர்க்கவயதுளான் பாதமுமைந்தனில், அன்றியிற் பிரியமுள்ளவன் குள்ளனல்லவ னழகுளானென்றே-பாடியபார்வை யெழுத்தை மறிவனுற் பதமறிந்துணர் தனக்கே.

(இ-ள்.) புனர்பூச நட்சத்திரத்து முதற்பாதத்தில் பிறந்தவன் அலைகக முள்ளவனும், பிணுக்கனும், [illegible], செவிடனும், காமியும், பஞ்சிமயிர்

போலும் ரோமமுள்ளவனுமாவான். இரண்டாவது பாதத்தில் பிறந்தவன் பித்தஞ்சேர்ந்த உஷ்ணதேகமுடையவனும், [1]சோம்பியும், ஆசாரமற்றவனும், தூக்ககாரனுமாவான். மூன்றாம் பாதத்தில் பிறந்தவன் குஷ்டரோகியும், சாதுவும், அலைச்சற்காரனும், காவியமறியாதவனும், தந்தரோகமுள்ளவனும், தீர்க்காயுசுள்ளவனுமாவான். நாலாம் பாதத்தில் பிறந்தவன் [2]நல்ல காரியங்களில் பிரீதியுள்ளவனும், குள்ளனும், நல்ல அழகுள்ளவனும், பார்வை லக்ஷணமுணர்ந்தவனுமாவான், எ-று. 132

பூசம்

தனக்கொடியமாதே குலேசிட்டுரான் றருமவான் கோபி புத்தியுளான்-தாழ்வுறுந்தீர்க்க வயதுளான்றியன் றருபுனர் பூசநான் முதற்கால், தினத்தினிற்பிரபு சர்வவியாபகனுஞ் செனங்களைத் தாபரித்திடுவான்-செப்பியதிதானி யக்கியாசிகேகி சேர்ந்திடு மிரண்டதாம் பதத்தில், இனத்தினற்கினியன் புத்திமான்ஞானி யினியசந்தோஷியா நேசன்-இனத்தினுநல்ல காரியமுடிப்ப னெழில்பெறு மூன்றதாங்காலான், மனத்தகுசண்டை யுடையவன்கோபிவாஞ்சையா ஞரியர் தனக்கே-மகிழ்ந்திடுமகனன் பூசனனாழ்கால் வரும்பல னறிந்துணர்மின்னே.

(இ-ள்.) தனபாரத்தைப் பொறுமைக் கொடிபோல் துவளுகின்ற பெண்ணே! பூசநட்சத்திரத்து முதற்பாதத்தில் பிறந்தவன் குலரோகியும், சிஷ்டனும், தருமவானும், கோபியும், புத்திசாலியும், தீர்க்காயுசுள்ளவனும், கொடியனுமாவான். இரண்டாவது பாதத்திற் பிறந்தவன் பிரபுவும், சர்வகாரிய விக்கினனும், செனங்களை வருத்துவோனும், தியானமுள்ளவனும், யாகிதேகனுமாவான். மூன்றாவது பாதத்தில் பிறந்தவன் சுற்றத்தார்க்கினியனும், புத்திசாலியும், ஞானியும், சந்தோஷியும், பக்ஷபட்சமுள்ளவனும், சுற்றத்தாரால் நல்லகாரியம் முடிப்பவனுமாவான். நாலாம் பாதத்தில் பிறந்தவன் சண்டைக்காரனும், கோபியும் பெண்களிடத்தில் மிக்க பிரியனுமாவான், எ-று. 133

ஆயிலியம்

மின்னியதனமும் பெண்வடிவுள்ளான் மேன்புத்தி யுடையவன் சந்தோஷி-மிகுநல்லாறு தொழில்புரிந்திடுவன் வேண்டுமாயி லியத்தின் முதற்கால், அன்னியரோடு தொழில்புரிந்திடுவ னழகுள னேக்கருமுள்ளான்-ஆசாரன் தீயதைடையன் தூர்ப்புத்தியுடையனுங்கா லிரண்டதற்கே, நன்னியற்கோபி காரியவஞ்சப்பன் ஞானியாலசியனுனிபுணன்-நலமில்லார்த்தை பற்றியேயுரைப்ப னாமிகுபாத மூன்றதற்கே, பொன்கொலைசம் புரிபவன்சுபன்போல் லாங்குசெய் பவர்க்கினியன்-புலைச்சியர்சங்கம் பண்ணுவனேயைப் புணர்ந்திடு நான்கதாங் காலே.

(இ - ள்.) ஆயிலிய நட்சத்திரத்து முதற்பாதத்தில் பிறந்தவன் மிகுந்த செல்வமுடையவனும், பெண்ரூபன்தனும் நல்ல புத்தியுடையவனும், சந்தோஷசித்தனும், பற்பல வேலைகளைச் செய்பவனுமாவான், இரண்டாவது பாதத்தில் பிறந்தவன் அந்நியர்களிடம் வேலையைச் செய்வோனும், அழகுள்ளவனும், ஏக்கமுடையவனும், ஆசாரமுடையவனும், தீயவழியில் நடப்பவனும், அற்பபுத்தியுடையவனுமாவான். மூன்றாம்பாதத்தில் பிறந்தவன் கோபியும், மனைவியை வதைப்பவனும், ஞானியும், தாமதகுணத்தனும், நிபுணனும் கலையில்லா சொற்களைப் பேசுபவனுமாவான். நாலாம்பாதத்திற் பிறந்தவன் பொன்னை மிகுதியும் அழிப்பவனும், கொலைசெய்பவனும், சுகவானும், தீயவர்கட்கு நல்லவனும், பலநச்சியர்போகம் விரும்புவோனும், ரோகஸ்தனுமாவான், எ-று. 134

மகம்

கரவிலைப்போலப் பயமுளசிவந்த கண்ணனாம்பே ராசையான்புகி-
கருதிடுசிவந்த மெய்யினன்செவந்த முஞ்சியான் மகமுதற்காலான்,
போகியான்புத்தி யனலவடிவுடையோன் பொருட்செலவான் சந்
தோஷி-பொன்னிறக் கண்ணன் காதிலேநோயுடையோன் பொருந்திய
காலிரண்டதற்கே, சாலவும்பலவான் மிக்கநோயுள்ளான் சாது பொல்
லாதவன் கடினன்-தாமிகவாசை யுடையவன் தூயன் தருதிகாலின்
மூன்றினிலுதித்தோன், சிலைநுனி பேச்சினைக்கேட்பன் சிரங்குட
லேநுபமுற்றிடுவன் சிந்தைநோயுடையோன் மதுரவாசகனுந் தெளிவு
தூரை நாற்பதமாமே.

(இ - ள்.) மகநட்சத்திரத்து முதற்பாதத்தில் பிறந்தவன் எமனைப்போல் பயம்விளங்கும் சிவந்தகண்ணனும், மிகுந்த ஆசையுடையவனும், மதிநுமியும், சேவிப்பவனும், செவந்தமயிருடையவனுமாவான். இரண்டாவது பாதத்தில் பிறந்தவன் நல்ல புத்தியில்லானும், குற்றமுடையோனும், பொருட்செலவில் விருப்பமுடையவனும், பொன்போன்ற கண்ணனும், காதுநோயுடையவனுமாவான். மூன்றாம்பாதத்தில் பிறந்தவன் பலசாலியும், நோயுள்ளவனும், சாதுவும், பொல்லாதவனும், கடினவார்த்தை யாடுவோனும், பேராசையுடையவனும், பரிசுத்தனுமாவான். நாலாம்பாதத்தில் பிறந்தவன் சீலமுடையவனும், பெண்பேச்சைக் கேட்பவனும், சிரங்கும் வேறு ரோகங்களுமுடையவனும், மனவியாகுலமுடையவனும், இனியவாக்குடையவனுமாவான், எ-று. 135

பூரம்

ஆமெனுஞ் சீரனின்சொலன்கோபி யாசாரன்சவுரியன் சிறுவீ
டாக்க மில்லாதான் - வியாபாரஞ் செய்வா னன்பூரம் முதற்கா
லான், தாமெனு முழவுத் தொழில்புரி துடுஞன் தாகமுங்கிலே
சமு முளோன் - தானுமுச்சாயம் பிரபலனில் லாதவனெனப்
திரண்டதாங் காற்கே, நாமெனுங் குணவா னுத்மேன் பாட்டா

மானுங்கும்-நாடியமூன்றாம் பதமெனும் பொருளே நாட்டினி துரைப்பர்
நல்லோரே, தோமுறாத்துக்கக் குருவடுவுள்ளான் சொற்றிடு நிந்தை
யெபுரிவ-சோர்வுறுமறையோர் தெவதூஷணத்தைச் சொல்வனுன்
னெனக் கருதே.

(இ - ள்.) பூரநட்சத்திரத்து முதற்பாதத்திற் பிறந்தவன் தீரனும், இனிய வசனனும், கோபியும், ஆசாரமுள்ளவனும், சௌரியவானும் சிறுவீட்டை யுடையவனும், செல்வமில்லாதவனும், வியாபாரஞ் செய்பவனுமாவான். இரண்டாவது பாதத்தில் பிறந்தவன் உழவனும், தாகமும் கிலேசமுள்ளவனும், பிறர்சகாயமில்லாதவனுமாவான். மூன்றாம் பாதத்தில் பிறந்தவன் நற்குணனும், மேம்பாட்டையுடையவனும், கீர்த்திமானுமாவான். நாலாம் பாதத்திற் பிறந்தவன் துக்கமும், வடுவுள்ளவனும், நிந்திப்பவனும், பிராமணர்களையும் தெய்வங்களையும் தூஷிப்பவனுமாவான், எ-று. 136

உத்திரம்

கண்டெனமிருது வசனனுங் கீர்த்தி கன்னியன் தீரனிங்கிதனும்-
கருதியகலைதேர் மேன்விருப்புடையான் காணுமுத்திர முதற்காலோன்,
கொண்டிடுங்காமி தரித்திர னன்னெண் கோதுறுசஞ்சலசித்தன் - கூறிய
நித்த யாசகனுங் குலவியவிருபதத் துதித்தோன், அண்டிடும்
பிணக்கன் பழுதிலாவுரையா னுக்களைமேய்த்திடு மவனும்-ஆனவாசார
மானதாமூன்றி லரியபிறப்புடையவனே, வண்டணுநான்றி மறந்தி
டான்பிறரை மதித்திடான் தூஷணமறுவன்-வாலிபத்தன்னிற் றாயை
யிழந்திடுவன் வழங்குவர் நான்கெனப் பெரியோர்.

(இ - ள்.) உத்திரநட்சத்திரத்து முதற்பாதத்தில் பிறந்தவன் இனியவசன முரைப்பவனும், கீர்த்திமானும், கன்னியனும், தீரனும், நல்லவனும், சுற்றத்தார் மேல் வாஞ்சையுடையவனும் ஆவான், இரண்டாவது பாதத்தில் பிறந்தவன் காமியும், தரித்திரனும், ஊண்விருப்பனும், குற்றமுள்ள சஞ்சல மனமுடையவனும், யாசகனுமாவான். மூன்றாம் பாதத்தில் பிறந்தவன் பிணக்கனும், உண்மையுரைப்போனும், பசுமேய்ப்பவனும், ஆசாரமுடையவனு மாவான். நாலாம்பாதத்தில் பிறந்தவன் நன்றிமறவாதவனும், பிறரை மதிக்காதவனும், தூஷணிப்பவனும், வாலிபத்தில் தாய் இறக்கப் பெறுவோனுமாவான், எ-று. 137

அஸ்தம்

பெரியதோர்கலைகம் பண்ணுவித்திடுவன் பேசியபொய்யனும்கர்வி-
பிணக்கனுசாரன் பசுக்கடம்பிடத்திற் பிரியனுமத்தத்தின் முதற்கால்
அரியதோர்குணவான் செய்தொழிலறிவா னுனேதோர்வாலிபந்தன்னில்-
அன்னைபோம்பாட்டோ டட்டமிப்பிரிய னதியுரையுடையனுமிரண்டில்,
தரியலர்போலு மனத்தினன் றந்தை தானமுஞ்சிறுவயததனில்-தந்திர

வாதி ரோகிவியாபாரி சாற்றிடுமென்றதாங் காவலன், உரியகன்னடையா
ளிகையானெடியேது றேதாசக்தோஷவானாகும்-உசிதனுமென்போக் கினி
யன்மெய்க்கீர்த்தி யுடையனுமாம் காற்பலமறியே.

(இ - ள்.) அஸ்த நட்சத்திரத்து முதற்பாதத்தில் பிறந்தவன் கலகஞ் செய்வோனும், பொய்யனும், கர்வமுடையவனும், பிலுக்கனும், ஆசாரமுடையவனும், பசுப்பிரியனுமாவான். இரண்டாவது பாதத்தில் பிறந்தவன் சுகுணனும், செய்யுங்காரிய முணர்வோனும், வாலிபத்தில் தாயைச் சாக்கொடுப்பவனும், ஆடல் பாடல்களிற் பிரீதியுடையவனுமாவான். மூன்றாம் பாதத்தில் பிறந்தவன் பகைவர்போன்ற மனத்தனும், சிறுவயதில் தகப்பனை சாக்கொடுப்பவனும், மகா தந்திரசாலியும், ரோகஸ்தனும், வியாபாரியுமாவான். நாலாம்பாதத்தில் பிறந்தவன் நன்னடக்கை யுடையவனும், கொடையாளனும், நீண்டவனும், சந்தோஷமானவனும், மேன்மையானவனும், தாய்க்கு இன்பமுடையவனும், கீர்த்தியுடையவனுமாவான், எ-று. 138

சித்திரை

அறிந்திடாப்பொல்லாக் காரியம்பண்ண வறிகுவனேத்திரரோகி-
ஆக்குவான்வியாக்கி யானம்சஞ்சாரி யாகிடுஞ்சித்திரை முதற்கால்,
பெறுந்தனிவசனன் தேகபோஷணையன் பெரும்பிடியாளனேடிபோனும்-
பேணியதபசி சஞ்சலனென்றே பேசவர்மாகிலாரிரண்டால், செறிந்
திடுகீர்த்தி மான்பராக்கிரமன் திடமுறும்வித்துவான்ஞானி - செப்பு
நன்னடையோ னறிவுடையாளன் றிரியமதி யுதித்தோனும், எறிந்தி
டும்பகைவர் தலைவணங்கிடத் தெயப்புத்தியான்யமுள்ளான்-எதமற்
றிடுநாற் காலினுக்கென்றே வியம்புவர் மேன்மைபெற்றோரே.

(இ - ள்.) சித்திரை நட்சத்திரத்து முதற்பாதத்தில் பிறந்தவன் பொல்லாத காரியங்களைச் செய்பவனும், கண்ரோகக்காரனும், வியாக்கியானஞ் செய்பவனும், சஞ்சாரியுமாவான். இரண்டாவது பாதத்தில் பிறந்தவன் நல்லொழுக்கமுடையவனும், தன்தேகத்தைப் போஷித்துக் கொள்ளுவோனும், தரித்திரனும், கொடியவனும், தபசியும், சஞ்சல சித்தனுமாவான். மூன்றாம்பாதத்தில் பிறந்தவன் கீர்த்திமானும், பராக்கிரமசாலியும், வித்துவானும், ஞானியும், நன்னடக்கையுடையவனும், நல்லறிவுள்ளவனுமாவான். நாலாம்பாதத்தில் பிறந்தவன் பகைவர்களை வணங்கும்படி செய்துகொள்வோனும், ஜயபுத்தியுடையவனும், ஜெயசாலியுமாவான், எ-று. 139

சோதி

பெற்றிடுதீரன் சொற்பனன்ஞானி பிரபுவை யடைந்திடுமினிதிருப்
பன் - பெருமைசேர்வித்தைப் பிரசங்கிசாது பேசியசோதியின் முதற்
கால், உற்றதற்றிடவா ஒருபாய்ச்சாலன் புத்திமான்காரியவாதி-

உண்மையனாக்கு ரங்கவான்காமி யோதுகாவிரண்டாம் பலனே, வெற்
றிவிற்றெழிலன் குரூரனுங்குடிலன் மேவுநன்னடையிலானக்கையியற்
றுவான்சோதி ஏனைப்புமூன்றாகு மெதும்பதந் தனித்திடுவோனே,
சொற்றிறன்சோரி கலகமேற்பிரியன் தூர்ச்சனன் சீலவான்காமி-சோர
னும்சான்காம் பதத்தினிலுதித்தோன் றேற்றிடும்படிவமைத் தோனாய்.

(இ - ள்.) சோதி நட்சத்திரத்து முதற்பாதத்தில் பிறந்தவன் தீரனும் சொப்பனங்காணுவோனும், ஞானியும், பிரபுசேவகமுள்ளவனும், வித்தியா சாதுரிய பிரசங்கியும் சாதுவுமாவான். இரண்டாவது பாதத்தில் பிறந்தவன் திடவானும், வாய்ச்சாலக்காரனும், புத்திசாலியும், காரியக்காரனும், உண்மை பேசுவோனும், அங்காரங்கக்காரனும், காமியுமாவான். மூன்றாம் பாதத்தில் பிறந்தவன், வில்வித்தைக்காரனும், குரூரனும், மூடக்கனும், தீயவழியில் நடப்பவனும், கலகஞ் செய்பவனுமாவான். நாலாம்பாதத்தில் பிறந்தவன் சொல் சாதுரியனும், கோபியும், கலகத்தி லாசையுடையவனும், தூர்ச்சனனும் சீலமுள்ளவனும், காமியும், சோரனுமாவான், எ-று. 140

விசாகம்

அமைத்திடுவஞ்சன் கல்விமானுரு மறிவன்சோதிட சௌக்கிய
வான்-அறிவுறும்புலவன் வணிபம்புரிவா னுந்மேவிசாகத்தின் முதற்
கால், தமைப்புகழ்ந்திடுவோர் மந்திரன்காமி சத்தியனீதிமான் ரோகி-
சரசவானுந்சசு தோஷிவிங்கிதவான் சாற்றிருகாற்பல னென்பாய்,
இமைத்திடுபவான் சோரனுங்கள்வ னினியகாரியமறிந் திடுவன்-
எழில்பெறும் பான்றீ கமனன்வாய்ச்சால னேதற மூன்றதாங்
காலான், அமைப்பெறும்புத்தி யுடையனும்யோகி யருத்தமுடையவன்
ஞானி-அழுகுறுமந்திர மொன்றுளனெடியோ னாம்வாய்ச் சாலனாம்
பதமே.

(இ - ள்.) விசாகநட்சத்திரத்து முதற்பாதத்தில் பிறந்தவன் வஞ்சகனும் கல்விமானும், சோதிடமுணர்ந்தவனும், சௌபாக்கியவானும், புலவனும், வியாபாரியுமாவான். இரண்டாவது பாதத்தில் பிறந்தவன் தன்னைத்தானே புகழ்ந்துக் கொள்வோனும், மந்திரவாதியும், காமியும், உண்மைபேசுவோனும், நீதியோடு நடப்பவனும், ரோகியும், சரசக்காரனும், சந்தோஷித்தவனும், கல்வவனுமாவான். மூன்றாம் பாதத்தில் பிறந்தவன் பலமுள்ளவனும், சோரபோகப் பிரியனும், குள்ளனும், நல்ல காரியங்களையெல்லாம் உணர்பவனும், அந்நியஸ்திரீ விருப்பமுடையவனும், வாய்ச்சாலக்காரனுமாவான். நாலாம் பாதத்தில் பிறந்தவன் அரியபுத்தியுடையவனும், யோகியும், செல்வமுடையவனும், ஞானியும், ஒருதாரமுடையவனும், வாய்ச்சாலக்காரனுமாவான், எ-று. 141

அநுஷம்

பகுமுனனீதி யிக்கிதமறிவான் பண்புடைசத்தியவானும் - பகரு
மாசாரன் மந்திரசீலன் பற்றியவநுஷத்தின் முதற்கால், இதமுள

புன்னாக்குழலினிற்பிரிய னிசைத்தவாய்ச் சாலனும்புத்தி-எய்திய கெடிப்
பன் மாணிகாமியனு மிருபதப்பொருளென வுரைப்பர், விதமுளபுத்தி
மான் சவுந்தரியன் மென்குர லோசையானெழுதும்-வித்தைசாதுரிய
னெடுப்புளானென்றே விளம்புமூன்றும் பதமதற்கே, அதற்குச்செயும்
விதைவாக் கன்பாதுவேரியன்னிய தமையர்களுள்ளான் - அன்புறு
மோசை நாணமுமுடைய னகிர்சிரங்குடையனுந் தெரியே.

(இ - ள்.) அனுஷ நட்சத்திரத்து முதற்பாதத்தில் பிறந்தவன் நல்ல பதவியுடையவனும், நியாயக்காரனும், சத்தியவானும், ஆசாரக்காரனும், மந்திரசக்தி சொல்வோனுமாவான், இரண்டாவது பாதத்தில் பிறந்தவன் புன்னாக்குழலிசையிற் பிரியமுள்ளவனும், நல்ல வாய்ச்சாலக்காரனும், சிறந்த புத்தியுடையவனும், மானியும் காமியுமாவான். மூன்றாம் பாதத்தில் பிறந்தவன் புத்திசாலியும், அழகுடையவனும், மெல்லிய குரலையுடையவனும், வித்தியா சாதுரியனுமாவான். நாலாம் பாதத்தில் பிறந்தவன் நச்சுச் சொல்லுடையவனும், பரத்துரோகியும், தமையர்களை யுடையவனும்) மோசஞ்செய்பவனும், நாணுபவனும், குடையுடையவனுமாவான், எ-று. 142

கேட்டை

தெரிந்துதானெழுத வல்லவன்கர்வி செயும்பரி காசியாங்காத்தி-
செறிவிளையாட்டு நகைச்சந்தோஷி சீர்மிகுங்கேட்டையின் முதல்கால்,
பொருந்துசங்கீதப் பிரியன்வாய்ச்சாலி புகழுநல்லீகையான் சுகவான்-
போகிகன்மனத்தன் ரோகியாமென்றே புகலுவ திரண்டதாங்காலே,
திருந்துகண்ரோகி பசவுளன்கலகன் செப்பியவீனபுத்தியினன்-செய்
குவன்பிறர்கா ரியந்தனைதன்றே சீர்பெறுஞ் சாதுமூன் றாங்கால்,
அரிந்திடுங்கலைப் பிரியன்முன்கோபி வஞ்சகன்குரூரமே புரிவன்-வர்
திடுங்குலத்தின் மேன்மைகூறிடுவன் மன்னியவிரிந்தாரென.

(இ - ள்.) கேட்டை நட்சத்திரத்து முதற்பாதத்தில் பிறந்தவன் எழுதவல்லவனும், கர்வியும், பரிகாசஞ்செய்பவனும், விளையாட்டுச் செய்கையுடையவனும் சந்தோஷித்தவனுமாவான். இரண்டாவது பாதத்தில் பிறந்தவன் சங்கீதப் பிரியனும், வாய்ச்சாலக்காரனும், ஈகையுள்ளவனும், சுகவானும், போகியும், கன்மனத்தை யுடையவனும், ரோகியுமாவான். மூன்றாம் பாதத்தில் பிறந்தவன் கண்ரோகமுள்ளவனும், பசவுடையவனும், கலகக்காரனும், ஈனபுத்தியுடையவனும், அந்நியர் தொழில்களைத் தனதென்று நினைத்துச் செய்பவனும், சாதுவுமாவான். நாலாம் பாதத்தில் பிறந்தவன் கலைஞ்செய்வதின் பிரியமுடையவனும், முன்கோபக்காரனும், வஞ்சகனும், குரூரத்தையே செய்பவனும், தன் குலமேன்மையைச் சொல்லிக் கொள்வோனுமாவான், எ-று. 143

மூலம்

தானுணுமுனைவிற் கிழங்கின்மேற்பிரியன் சாத்தியபாபமே புரி
வன் - தாழ்விலா ரோகி யுன்மத்தனென்றே சாற்றுவர் மூலத்தின்
முதற்கால், வானுயர்புலவன் வயிற்றுநோயுடையோன் சத்தியவான்
புத்தியுளனும்-வளமுடைமானி பசுமுள்ளவனு மருவுகாலிரண்டினில்
வந்தோன், ஈனமாம்பில்லி சூனியமறிவா னெழிலுளான் சோம்பலான்
காமி-இனியகற்களிமேற் பிரியனுமூன்றி லென்னிய பலமிக்கேதன்ப,
கோனெனும்பலவா னிபுணனுஞ்சாது கோபமேமிக்குவன் ஞானி-
கூறுசத்துருவை யடக்குவன் கழுத்திற்கொண்ட கோயுளதனதன்றே.

(இ - ள்.) மூலநட்சத்திரத்து முதற்பாதத்தில் பிறந்தவன், கிழங்குவகைகளிற் பிரியமுள்ளவனும், பாபத்தொழில்களையே செய்பவனும், ரோகவிதனும், பித்தங் கொண்டவனுமாவான். இரண்டாவது பாதத்தில் பிறந்தவன் வித்துவானும், வயிற்றுநோயுடையவனும், பொய்பேசுவோனும், நல்லபத்தியுள்ளவனும் மானியும், யாவரிடத்திலும் இன்பமுள்ளவனுமாவான். மூன்றாம் பாதத்தில் பிறந்தவன், பில்லி, சூனியம் இவைகளைக் கற்றுக்கொள்பவனும், அழகுள்ளவனும், சோம்பலுள்ளவனும், காமியும், நல்லபழக்கவிடத்தில் பிரியங்கொண்டவனுமாவான், நாலாம்பாதத்தில் பிறந்தவன் நல்லபலமுள்ளவனும், காரியவல்லவனும், பகைவர்களை ஜெயிப்பவனும், கண்டமாலை யுடையவனுமாவான். ()

பூராடம்

மதிவாணைக்க முடையவன்சேயோ யிலாதவன் விகாதமே புரி
வன் - இயம்பிடுதான்மத் திமவுதாமென்பர் பூராடத்தின் முதற்கே,
பேதுறம்போகி சகுத்தியோனும் பெட்புறுந் திகெடுதமில்லான் -
பேணுயாம்வேசை கமனமின்னுரைப்பர் பெரியவ திரண்டதாங்
காற்கே, மாறிலாச்சுகவான் பாக்கியவான்மாதா வாவிபத்தன்னிலேறு
மரிப்பன்-வளர்பெருநோயன் முனமுளன்றெளிவன் மன்னிய மூன்று
தாங்காலே, விறிலான்முதாரி ஜெயுளன் திருடன் விளம்பியவாத
வான் பலவான்-மேவியதுரோகி சிறுவயதிற்சாம், விளம்பிடுதத்தை
நாற்காற்கே.

(இ - ள்.) பூராடநட்சத்திரத்து முதற்பாதத்தில் பிறந்தவன் மிக்கவணக்கமுடையவனும், புத்திரப்பேறு இல்லாதவனும், சச்சரவை உண்டாக்குபவனும், சூரனும், நடுவயதுமனைக்கு விருப்பவனுமாவான். இரண்டாவது பாதத்திற் பிறந்தவன் போகியும், அழகுள்ளவனும்; சிநேகர்களிருக்கப் பெறுதவனும், அறிவீனனும் வேசிலோலனுமாவான். மூன்றாம் பாதத்திற் பிறந்தவன் சுகவானும், செல்வமுடையவனும், வாலிபதசையில் தாயை இறக்கப் பெறுவனும்,

பெரிய வியாதிக்காரனும், நற்குணனும், தெளிவுடையவனுமாவான். நாலாம் பாதத்தில் பிறந்தவன் பயமில்லாதவனும், முதுகுகோபுள்ளவனும், திருடனும், அபவாதம்சொல்வனும், ஆரோகியும், தந்தையைச் சிறுவயதிலேயே இறக்கப் பெறுவனுமாவான், எ-று. 145

உத்திராடம்

ஏர்பெறுநல்ல புத்திமானீகையான் றருநூல்பல வறிவன் - வதி லாதாசான் றனையுபசரிப் புகலுத்திராடத்தின், முதனாங்காலிலுயர் பெருவாக்கி யுலோபியாம் பிழுக்கனாற்றிடவான் - உச்சிதமாய்க்கருமம் சாச்சியத்தியற்று முட்டெனிரண்டாகியகாற்கே, கரியகர்வி பெருமொழி யானன் குரூரனுங் கலக்கிலாமனதான் - கோபியாந்தூல வடிவுடனென்றே கூறுமுன்றென்றதேர்க்காற்கே, வீரியனல்ல தன்மமேமுடிப்பன் விசே ஷகாரியமுளான்லோக - வியாபாரமுடையன் பட்சமுள்ள வேன் றியமாதபமும் வந்தோன்.

(இ - ள்.) உத்திராட நட்சத்திரத்து முதற்பாதத்தில் பிறந்தவன் அழகு வாய்ந்த நல்லபுத்திசாலியும், ஈகைக்குணமுடையவனும், பிரபலசர்வ சாஸ்திரங் களையும் அறிபவனும், குருவையுபசரிக்கின்றவனுமாவான். இரண்டாம் பாதத் தில் பிறந்தவன் நல்ல வாச்சாலியனும், உலோபியும், பிழுக்கனும், திடவானும், மேன்மையான கருமங்களை ரகசியத்தில் நன்றாய்ச் செய்பவனுமாவான். மூன் றாம்பாதத்தில் பிறந்தவன் கர்வியும், பெருநோக்காய்ப் பேசுவோனும், குரூரனும், கலங்கிய மனத்தனும், கோபியும், ஸ்தூலதேகனுமாவான். நாலாம்பாதத்தில் பிறந்தவன் வீரியமுடையவனும், தருமஞ்செய்பவனும், விசேஷகாரியங்களுள்ள வனும், வியாபாரியும், சுற்றத்தார்களுக்குப் பட்சமுள்ளவனுமாவான், எ-று. ()

திருவோணம்

வித்திடும்புத்தி யானூலதேதி மைமந்திரியான் மேரசாரனும்- பனிதுமுற்சாகி கலகவான்கர்வி யாந்திருவோணத்தின் முதற்கால், சத்தியம்பிரம ஞானியாங்காமி தடவிலான்லோபியாஞ் சிநேகம்-தானி லாதென்றே சாற்றுமவிரண்டதாகிய காலதாம் பலனே, தத்திடுங்காமி ரோகிநற்போகி தனமுளான் மெத்தவே புதாரன் - தயவிலாதென்றே புரைத்திடுவார்க டரும்பத மூன்றினும்பயனே, சித்திர அதல்வேசை யர் விருப்புடையான் சீலவான் தருமவான் தியாகி-சிதப்புளான் தன வான் பயிர்தொழிலுஞ் செய்புகாற் சரமல ஊணகமே.

(இ - ள்.) திருவோண நட்சத்திரத்து முதற்பாதத்தில் பிறந்தவன் புத்தி சாலியும், அலைதேகியும், பின்னேசனில்லாதவனும், போகவானும், நிலைபெற்ற உபகாரியும், கலைக்காரனும், கர்வியுமாவான். இரண்டாம் பாதத்தில் பிறந்த

வன் பிரமஞானியும், காமியும் தாட்சண்ணிய மில்லாதவனும், லோபியும், சிநேக மில்லாதவனுமாவான். மூன்றாம் பாதத்தில் பிறந்தவன் காமியும் ரோகியும், போகியும், செல்வமுள்ளவனும், உதாரகுணஸ்தனும், தயவில்லாதவனுமாவான். நாலாம்பாதத்தில் பிறந்தவன் வேசிலோலனும், சீலமுடையவனும், தருமஞ்செய் பவனும், கீர்த்தியுள்ளவனும், தனவானும், பயிர்த்தொழிலுடையனுமாவான், எ-று. 147

அவிட்டம்

வகையிலான்காமி பகிபொருண்மனதில் வசையுறுகிலேசனிட்டு ரன் - வளம்பெறு தூலசரீரவான் கரியன்மருவிய வவிட்டத்தின் முதற்கால், தகையிலான் மனதினிற் பேதகமுடையான் சத்தியன் புத்திமான்பிரியன் - சாத்திரவாதி யுக்கமுள்ளோனுந் தருமவானிரு பதமென்ப, திகைசெறிகுணவான் குறைகியமெய்யன் சேர்த்திடு திட முளன்மானி-செப்புநன்னடையான் செந்திறவானுந் தெரித்திடு மூன்றா நாங்காலில், தொகையிருதனவான் குரூரனுந்தூல தேகவான் கர்வி பேதகனும் - அலங்கியரோம வழகுடையோனுஞ் சேர்வுறு நாற் பாதத் தொட்டோன்.

(இ - ள்.) அவிட்ட நட்சத்திரத்து முதற்பாதத்தில் பிறந்தவன் வகையில் லாதவனும், காமியும், பகிபொருக்காதவனும், கிலேசனும், நிட்டூரனும், ஸ்தூல தேகனும், கருப்பனுமாவான். இரண்டாவது பாதத்தில் பிறந்தவன் கெட்டவ னும், வஞ்சகனும், சத்தியனும், புத்திமானும், சரித்திரனும், சாத்திரவாதியும், விடாமுயற்சியோனும், தருமவானுமாவான். மூன்றாம் பாதத்தில் பிறந்தவன் குணசீலனும், இளைத்த சரீரமுள்ளவனும், திடவானும், நன்னடக்கை யுடையவ னும், செவப்பனுமாவான். நாலாம் பாதத்தில் பிறந்தவன் தனவானும், குரூரனும், தூலதேகத்தனும், கர்வியும், வஞ்சகனும், மயிர் அழகுடையவனுமாவான், எ-று.

சதயம்

தொட்டதற்குணவா னழகுளானுதாரன் சகியனும்விப்பிரர்மே லும்-அலங்கியபக்கன் மேலுறும்பிரிய னிதியுளான்சதயமொன்றாங் கால், பொட்டெனக்கோப முடையவன்கிலேசி பொருந்துறும்பேதகம் புரிவான்-புனிதமதில்லா னிழிகுலத்தன்னிற் பொருந்துபி னிரண்ட தாங்காலே, பட்டிறங்கருமப் பொறுத்துடன் முடிப்பன் பசியுடன் வயிற்றினோ யுள்ளான்-பண்புடன்பித்தன் சேவகாலிருந்தி பண்ணு வன் மூன்றதாம்பதமே, கட்டழையுணர்வா னுத்தேசிமானி காரியகா ரியமுடிப்பான்-கல்லெலன்கலவா னுற்பதமென்றே யுரைப்பர் நான்மறை யோரே.

(இ - ள்.) சதய நட்சத்திரத்து முதற்பாதத்திற் பிறந்தவன் குணவானும் அழகனும், உதாரனும், வீரனும், பிராமணர்மேலும் பசுக்களிடத்திலும் பிரீதியுள்ளவனுமாவான். இரண்டாம் பாதத்திற் பிறந்தவன் கோபியும், லோபியும் வஞ்சகனும், ஆசாரமில்லாதவனும், இழிகுலத்தானுமாவான். மூன்றாம் பாதத்தில் பிறந்தவன் நல்ல காரியங்களை யெல்லாம் முடிப்பவனும், பசியுள்ளவனும், வயிற்றுநோயனும் பித்தனும் சேவகாவிர்த்தி செய்பவனும் புத்திசாலியுமாவான். நாலாம்பாதத்தில் பிறந்தவன் கட்டம் தெரிபவனும், உத்தேசியும், மானியும், நினைத்தகாரியம் முடிப்பவனும், நல்லவனும், சுகவானுமாவான், எ-று. 149

பூரட்டாதி

மறையவன்பரக்க முகமுளான் பலவான் மனைவிமேற் பிரியன் போர்புரிவன் - மனவுணர்வுடைய வுத்தேசிகவான் மன்னுபூரட் டாதிமுதற்கால், இறையவன் சேவ்ட மந்திரமறிவ னினைத்திடான் மனதுமேயொல்கி-யவர்க்குமேவணங்கிக் காரியமுடிப்போ னிருபாதஞ் சந்தோஷவானும், பொறையுளானல்ல நடையுடைப்புலவன் பிறர் மனைப் போசனப்பிரியன் - போதஞ்செய்பித்த ரோகியனுரும் புத்திமான் பேசிடுமூன்றில், தனபுகழ்குணவான் சத்திய னழகன் ருந்வது சிநேகிதப்பிரியன்-சற்றொழில்புரியுஞ் சுகமுளன்சாற்று நாற்பதமுறுபவரே.

(இ - ள்.) பூரட்டாதி நட்சத்திரத்து முதற்பாதத்தில் பிறந்தவன் பிராமணனும், அகன்றமுகத்தானும், பலவானும், பெண்சாதிமேற் பிரியனும், யுத்தம் புரிபவனும், நல்லுணர்ச்சியுடையவனும், உத்தேசியும், சுகவானுமாவான். இரண்டாவது பாதத்தில் பிறந்தவன் கடவுள் மந்திரமறிவோனும், மனமிளைக்காதவனும், யாவரிடத்தும் வணங்கிக் காரியமுடிப்பவனுமாவான். மூன்றாம் பாதத்தில் பிறந்தவன் சந்தோஷவானும், பொறுமையுள்ளவனும், நல்ல நடையுடையவனும், புலவனும், அந்நியர் வீட்டுப் போஜனத்தில் பிரியமுடையவனும், பித்தரோகியும், புத்திமானுமாவான். நாலாம் பாதத்தில் பிறந்தவன் குணவானும், சத்தியனும், அழகுள்ளவனும், சிநேகிதருள்ளவனும், நல்ல தொழிலுடையவனும், சீமானுமாவான், எ-று. 150

உத்திரட்டாதி

நடைபொறுங்கோபி சஞ்சலன்றுதர நாடியவுடம்பினின் மயிரன் - நலம்பெறுமிரட்டன் பிரதானமென்றே நவில்வருத்திரட்டாதி முதற்கால், வீடுறும்சோகக் காரனுஞ்சாது நிறைந்திடுமியகற் குணவான்- தீதெக்குன்னடையா னறிவுளானென்றே திகழ்த்துமி ரண்டதாங் காற்கே, கேடுறுபுத்தியிலான் பக்திமான்முன் கோபிசந்தோஷிகேம் மயிரான் - கோளருமூன்றாங் காற்பலனென்றே கூறுவர் மறையுணர்

புலவர், பீடுஞ்சொற்கேட்டான் மிகவாதம் பேதியனுதாரனற் பமிசை-பெறுவான்கோபி இலேசவானுரும் வெட்புநாற்காற்பலன் றேனே.

(இ - ள்.) உத்திரட்டாதி நட்சத்திரத்து முதற்பாதத்தில் பிறந்தவன் கோபியும், சஞ்சலனும், நாதாவும், மயிர்நிறைந்த தேகனும், இரோட்டனுமாவான். இரண்டாவது பாதத்தில் பிறந்தவன், சோகமுடையவனும், சாதுவும், தரித்திரனும், நல்லகுணவானும், நன்னடையுடையானும், அறிவுள்ளவனுமாவான். மூன்றாம்பாதத்தில் பிறந்தவன், புத்தியில்லாதவனும், பக்திமானும், முன்கோபியும், சந்தோஷியும், செம்மயிருடையோனும், கோளுரைப்போனுமாவான். நாலாம்பாதத்தில் பிறந்தவன், புலவர் சொல்லின் வாட்டமுடையவனும், பேதியுடையவனும், குடும்பியும், கோபியும், இலேசமுள்ளவனுமாவான், எ-று. 151

ரேவதி

தேன்மொழிமேற் பிரியனுநிபுணன் செறிகுணவித்துவான்பான் மைசெப்பியலேசி சந்தோஷமுள்ளான் றிடம்பெறுரேவதி முதற்கால், நானிலுஞ்சோரன் றீரமாமனத்தன் சவுக்கியன்கோபிகற்காமி - சஞ்சலன் மிருதுவாஞ் சரீரத்தன்றனிரு காற்பலனென்றே, யான் மொழிபுத்தி யிலாதவன்பாவியுடிறனை தனமிலானுரும்-பரித்திடுமுதாரன் குணமிலானென்றே பகருமூன்றாம் பதமதற்கே, நானிலுந் தீரன் சத்தியவாக்கி நவின்றிடுங் குலத்தினிற்கேட்டன் - நாடிய சுகவான் சத்துருசங்காரி நலம்பெறுநாலாம் பதமே.

(இ - ள்.) ரேவதி நட்சத்திரத்து முதற்பாதத்திற் பிறந்தவன் கலைப்பிரியனும், நிபுணனும், வித்துவானும், லேசியும், சந்தோஷமுள்ளவனுமாவான். இரண்டாவது பாதத்தில் பிறந்தவன், சோரனும், தீரனும், சௌக்கியனும், கோபியும், காமியும், சஞ்சலனும், மெல்லிய சரீரமுள்ளவனுமாவான். மூன்றாம் பாதத்தில் பிறந்தவன், புத்தியில்லாதவனும், பாவியும், வஞ்சகனும், தரித்திரனும், உதாரனும், நற்குணமில்லாதவனுமாவான். நாலாம் பாதத்தில் பிறந்தவன் தீரனும், சத்தியவசனனும், நற்குலத்தனும், சுகவானும், சத்துருவைச் செயிப்பவனுமாவான், எ-று. 152

நட்சத்திரப் பாதபலன்

முற்றிற்று.

இராசிகளிற் சந்திரனின்ற பலன்

மதிமேடத்தினின்ற பலன்

பன்னிருராசிகடோறுஞ் சந்திரன்றானின்றபலன் பகர்வர்மேடத்தின் மதிநிற்கப்பிறந்தோன், மின்னுவிழியிரண்டு சற்றேறசிவந்திருக்குங்காமி மிருதுவாசனத்திடுவன் சீக்கிரசந்தோஷி, பொன்னீளமிகத்தேடியுடனே செலவுபுரிவோன் புயவலன்வீரியன்மடவார் கலவிக்குவலியன், சென்னிதனின் மறுவடுவோன் றானஞ்சபலனுக்கும் சலங்கண்டஞ்சுவன் முழந்தாட் செறிபிணியுள்ளவனும்.

(இ - ள்.) மேடமுதலிய பன்னிரண்டு ராசிகளிலும் சந்திரனிருக்கும் பலனைப் பெரியோர் சொல்லுவர். அவற்றில் சந்திரன் மேடத்திலிருக்கப் பிறந்தவன், கண்கள் சிவந்திருண்டும், காமியும், அாசனத்தனும், சீக்கிரசந்தோஷியும், திரவியந்தேடி யழிப்பவனும், வீரியனும், ஸ்திரீபோகவலியுடையவனும், தலையில் மறுவுடையனும், சபலசித்தனும், சலத்திற்குப் பயப்படுவோனும், முழங்காலில் நோயுள்ளவனுமாவான், எ-று. 153

மதி இடபத்தினின்ற பலன்

உள்ளமகிழ்க் குருமதி யிடபத்திலிருக்க வுற்பவித்தோன் குணக்கிருமையுடை னல்லனுபன், தெள்ளியராசியின் முகத்திற் பக்கத்தின் மறுவோன் தியாகவான் றொடைவுதனம் பருத்திருமனுள்ளனும், பின்னைகண்முக்கியுள்ளான் பெண்பெறுவன் பொறுமை பெரும்பசியனிருசொல்லன் பின்புசந்தோஷிப்பன், கள்ளவிழியார்க்கினிய னண்பருக்குகண்டபின் கண்டுடுமத்திம வர்த்தோன் சவுக்கியபாக்கியவான்.

(இ - ள்.) சந்திரன் இடபத்திலிருக்கப் பிறந்தவன் நற்குணனும், கருணையுள்ளவனும், சௌந்தரியவானும், காமியும், முகத்திலொருபக்கத்திலும் மறுவுடையவனும், தியாகவானும், தொடையும் முகமும்பருத்த இருமனுள்ளவனும் பின்னைகளையும், பெண்களையும் பெறுபவனும், பொறுமைக்காரனும் பெரும் பசியனும், இருவார்த்தைக்காரனும், பின்சந்தோஷியும், பெண்களுக்கினியனும், சிநேகருக்குச் சிநேகனும் மத்திமவயதுடையவனும் பாக்கியவானுமாவான், எ-று.

மதி மிதுனத்தினின்ற பலன்

வான்மிதுன சசிபலன் மின்னார்மகிழுஞ்சுரதன் மகிழ்துரதன், சிவந்தக்கண்ணன்னன்மயிர் சுருண்டேயிருப்பன், தாண்மிகவுகுதகன்

பெறுவனமுகன் சத்தியவான்சாப்பாட்டி னிற்பிரியன் மருப்புத்திமானும், பான்மைசெறி பட்டுடுக்கப்பிரியவான் முகத்திற் பரிக்குமறுவுளன் பிரியவாக்குமிகுராசவான், தேனனைய மொழிமடவார் கொண்டாடிப்புகழ்வர் திடமாயுன் னதமாகச் செறிந்திருக்கு நாசி.

(இ - ள்.) சந்திரன் மிதுனத்திலிருக்கப் பிறந்தவன் பெண்களுக்கினியனும், தாதனும், சிவந்த கண்ணனும், சுருண்டமயிரனும், சூதனும், அழகனும், உண்மையாளனும், போஜனப்பிரியனும், புத்திசாலியும், பட்டுடுக்கப் பிரீதியுடையவனும், முகத்தில் மருவுள்ளவனும், இன்பவசனனும், பெண்கள் புகழ்விருப்போனும், திடத்துடன் செறிந்த மூக்குடையவனுமாவான், எ-று. 155

மதி கர்க்கடகத்தனின்ற பலன்

நாசமிலாக் கடகத்தின் மதியுலவச் சனித்தோன் நன்னுபலன் மடவாரை நடைபுரிந்துசயிப்பன், விசிவனைத்தோடுவ னன்புடைய கண்பருடையோன், வீடுநிகமாய்க்கட்டி மேவுவன் மெய்க்குறளன், நேசமுறு மனக்கள்ள னுத்தேசமுள்ளான் நிலையில்லாத் தனம்படைத்து நிணிலத்திலிருப்பன், பாசமுடை னனைவருக்கும் பருத்தகழுத்தானும் பாவுசாம வுபாயமெனவே பகரவேண்டும்.

(இ - ள்.) சந்திரன் கர்க்கடகத்திலிருக்கப் பிறந்தவன் பலசாலியும், பெண்களை வெல்பவனும், வினைத்தோடுபவனும், மிகுந்த சிநேகர்களையுடையவனும், அதிக வீடுகளைக்கட்டி வாழ்பவனும், குள்ளனும், கள்ளனும், உத்தேசியும், மிக்க செல்வத்துடனிருப்பவனும், பாசமுள்ளவனும், பருத்த கழுத்துள்ளவனும், சமயோசிதவுபா[illegible]வான், எ-று. 156

[illegible] சிங்கத்தினின்ற பலன்

வேண்டிடுஞ்சிங் கத்தினில் [illegible] சந்திரனிருக் கும்பலன்கள் மிகு கொடியன் கெடுக்கதுப்பன் மின்னா[illegible]க்குப் பகைவன், நீண்டமலைதிற் காட்டிற் சஞ்சரிக்கப்பிரியன் கெயமில[illegible]ப்பசிதாக முடையனுண்பிரியன், கின்டிடுதாம்பூல கேயன்மசேதுக்க[illegible] தியாகிபெழில் பராக்கிரமன் றிரபுத்திபுளனும், ஆண்டகர்வித நக[illegible]யான் விசாலமுளவுதனன் அற்பகாரியக்கோபி யாவனெனச் சொல்லே.

(இ - ள்.) சந்திரன் சிங்கத்திலிருக்கப் பிறந்தவன் கொடி[illegible]யனும், கதுப்பனும், ஸ்திரீகட்குப் பகைவனும், மலையிலும் காட்டிலும் வசிக்க[illegible] பிரியமுடையனும், கேசமின்னாதவனும், பசியும் தாகமுமுடையவனும், [illegible]ண்பிரியனும், தாம்பூலப்பிரியனும், துக்ககனும், தியாகியும், பராக்கிரமசாலி[illegible], ஸ்திரபுத்தியுள்ளவனும், கர்வியும், பரந்த முகத்தனும், அற்பகாரியத்திலுங் [illegible] கோபமுள்ளவனுமாவான், எ-று. 157

மதி கன்னியினின்ற பலன்

சொல்லுங் கன்னியிற்சோமன் குழ்பலன்கள்பகரில் சுகவான் சத்தியவாக்கி சுர[illegible]த்திற்பிரியன், கல்வியிற்சாத்திர வகையில் வல்ல வன்மெய் யிளைத்தோன் காயமுமுன்னதன் லச்சையுடன் படுநற்கரு மன் வெல்லுமேம் பாடுடையான் றர்மசிந்தையாளன் சுதேசசந்திற் சஞ்சாரி மிருதுவாக்கு முளனும், நல்லவர்கள் பலராலே பூசிதம் பெற்றிடுவன் நாரியரே பிள்ளைகொஞ்சமா நவிலுங்காலே.

(இ - ள்.) சந்திரன் கன்னியிலிருக்கப் பிறந்தவன் சுகம், சத்தியம், சுரதம், கல்வி, சாத்திரவகை இவைகளில் வல்லவனும், அழகிய இளைத்த சரீரமுள்ளவனும், லச்சையோடுகூடிய கருமமியற்றுபவனும், மேம்பாடுடையவனும், தர்மவானும், சுதேசவாசியும், இனிய வசனனும், நல்லவர்களால் பூசிக்கப் பெற்றவனும், கொஞ்சம் பிள்ளைகளைப் பெறுபவனுமாவான், எ-று. 158

மதி துலாத்தினின்ற பலன்

காலேகோலிட்டத்தினிற் சந்திரனிருக்கும் பலன்கள் கன்னியரைச் சயித்திடுவன் கல்வியிற் பண்டிதனும், மேலெகிந்திரியங்களி[illegible]தியமுடையோன்-விப்பிரர் தேவர்களிடத்திற்பிரியன் வெகு சாந்தன், கோலேபோ லிளைத்தசையாய் பிரகிருதி யிலேயான்-கொள்ளவும் விற்கவும்வல்லன் குலமாதருடையன், மாலெதிட்டமர் பகைவனு மங்கவினன்-மனதிற் சந்தோஷமிலான் வன்மனுங்கண்டீர்.

(இ - ள்.) சந்திரன் துலாவிலிருக்கப் பிறந்தவன் [illegible]ர்களிடத்தில் வெற்றி, கல்வி, சாதுரியம், போகம், நியமம், சுகம் [illegible]வைகளையுடையவனும், பிராமணர் தேவர்களிடம் பிரியமுள்ளவனும், [illegible]ளைத்த சரீரமுள்ளவனும், பசுவியாபாரியும், வணிகத்தில் [illegible]னும், போரில்வல்லவனும், அங்கவீனனும், சந்தோஷமில்லாதவனும், [illegible]னுமாவான், எ-று. 159

மதி விருச்சிகத்தினின்ற பலன்

கண்டீர் சந்திரப[illegible]ன் விருச்சிகத்தின் பலன்கள்-கருதுங்காற் றிரண்டமுழங்[illegible]டையவனுமவன், கொண்டாடும் வாலிபத்திற் பிதாவை [illegible]டுவன்-கொடிய சேஷ்டையனச்சங் கொள்வாதுளானன், செ[illegible]ண்டாடுஞ் செங்கைமன்னர் பூசித்தருளிடுவன்-செனங்களறியாதெரா[illegible]த்துச் செய்குவன் பாபத்தை, மிண்டாரும் பக்ஷிமிருகம் பிடிக்குங்கை[illegible]ன்-விழிமார்பும் பருத்திருக்கு மெனப்பலன்கள் கூறே.

(இ - ள்) சந்திரன் விருச்சிகத்திலிருக்கப்பிறந்தவன் திரண்டமுழங்காலும், வாலிபத்திற்றந்தையை யிழத்தலும், சேஷ்டையும், அச்சமும், மன்னர் பூசித்

தலையும், நோய் கொட்படுதலும், பாபஞ்செய்தலும், பட்சி மிருகங்களைப் பிடித்தலும், விழி மார்பு பருத்திருத்தலு முடையவனுமவான், எ-று. 160

மதி தநுசு நின்றபலன்

கூறுந்தனுராசியிற்சந் திரனின்றபலன்கள் - கூன்முதுகுள்ள பலவான் குலவியகம்பீரன், வீறுநிதிக்கினியவனு[illegible]ம் சாகிசிற்பமறிவன் - மிகுமாசையுளன்வெல்லுந் சொல்லன்வீரியவான், கேளுமிதாசித்தியத்தைச் செலவுசெய்த்தியாகி-செய்யபுயந்திரண்டிருக்கும் திண்கவிதையறிவான், மாறுசெய்தெதுமரைத்து விப்பன்வசிகரனும்-மணிகளணிந்திடு கழுத்தும் வதனமுநீண்டிருப்பன்.

(இ - ள்.) சந்திரன் தனுசிலிருக்கப் பிறந்தவன் கூன்முதுகும், பலமும், கம்பீரமும், செல்வமும், உற்சாகமும், சிற்பமறிதலும், மிகுந்த ஆசையும், வெற்றிவசனமும், வீரியமும், பிதிரார்ச்சிதத்தைச் செலவுசெய்தலும், திரண்டபுயமும், கவியறிதலும், தம்மவர்களைத் தாஷித்தலும், வசீகரமும், மணிகளணியும் கழுத்தும், நீண்டமுகமு முடையவனுவான், எ-று. 161

மதி மகரத்தினின்றபலன்

நீண்டமகரச்சசிக்குப் பலத்தனமுமில்லான் நிறைந்தகாவியத்தெரிவா னிதியுதவாவழுத்தன், பூணிடசவுபாக்கியவான் கேடானசொல்லே புகலுங்காமியகமனன் புயபலவானுவான், வேண்டியவிச்சைகளுடையன் சோம்பனிங்கிதனும் பின்னையார்புகழுமுகன் மெய்க்கிருதைமில்லான், ஆண்டகைமையுமனைவியைத்தன் மைந்தரைக்கொண்டாடி அவனியிலிருப்பனென வுரைத்தார்கள் செயவாய்.

(இ - ள்.) சந்திரன் மகரத்திலிருக்கப் பிறந்தவன் தரித்திரமுள்ளமையும், காவியமுணர்தலும், உலுத்தத்தனமும், சௌபாக்கியமும், கெட்ட வசனமுரைத்தலும், காமமும், புயபலமும், வேண்டியவிச்சைகளும், சோம்பலும், இதமும், பெண்கள் மகிழ்தலும், கிருதையில்லாமையும், ஆண்டகைமையும், மனைவியையும், பிள்ளைகளையும் கொண்டாடுதலும் உடையவனுவான், எ-று. 162

மதி கும்பத்தினின்றபலன்

செய்யகும்பச்சசிபலன்களிடும்பின்மதுவுணுஞ் சி[illegible]கருமமழிக்கவுமாக் கவும்வல்லியன்சிலிலோர், தையலுக்குமகிழ்ச்சசை யுறும்பாவி கொடியன் சரீரமதுநீண்டிருப்பன் காலுடையும்பெரியன், துய்யகழுத்தும்கொடியன் பெருமுதுகன்வழிகள் துலைவாகநடக்கவல்லன் சாந்தமலர்ப்பிரியன், மெய்யினைமப்புயர்ந்துசிக் கென்றமயிருள்ளான் விரவுபெருந்துயிரெனை வேலிவிரும்பவேண்டும்.

(இ-ள்.) சந்திரன் கும்பத்திலிருக்கப் பிறந்தவன் இடும்பில் மருவும் சில தருமங்களை அழிக்கவும் செய்யவும் வன்மையும், சிலர் மனைவியரிடத்தும் தன் பெண்ணினிடத்தும் இச்சைவைத்தலும், கொடுமையும் சரீரசீட்சியும், காலும் இடையும் பெருத்திருத்தலும், கழுத்து நீட்சியும், மூக்குபெருத்தலும், கொலை தூரம் நடத்தலும், சாத்தரும், புஷ்பத்தில் பிரியமும், காம்புயர்ந்து தெரிதலும், சிக்கனமயிரும், ஆண்குறிநீட்சியு முடையவனுமாவான், எ-று. 163

மதி மீனத்தி னின்றபலன்

விளம்பியமீனச்சசிக்குப் பலவீரிற்பிறக்கும் மீன்முதற்செந்துக்க
ளின்மேல் மிகப்பிரியனுவன், வளம்பெரியபோகபாக் கியவஸ்துக்களி
லும் மருவுகிரகங்களிலு மனமுடையனுவன், உளமதனிற்பரதார
விருப்புடையனழகன் உற்றகுலமகளிடத்து முறவுடையன்சமவான்,
இளம்பிறைசேர்நுதலதனிற் சிந்தூரதிலதம் எழுதியிளையோர்மனதை
யிழுக்குமடமானே.

(இ-ள்.) நெற்றியில் பொட்டிட்டு இளைஞர் மனதை மயக்கும் பெண்ணே! சந்திரன் மீனத்திலிருக்கப் பிறந்தவன் மீன் முதலிய செந்துக்களிற் பிரீதியுடைமை, போகபாக்கிய வஸ்துக்களிலும் கிரகங்களிலும் பிரீதியுடைமை, பரதார விருப்பமுண்மை, அழகுடைமை, தன் மனைவியிடம் விருப்பம், சமத்துவம், பெண்களை மயக்குதல் முதலியவைகளை யுடையவனுவான், எ-று. 164

இராசிகளிற் சந்திரனின்றபலன்

முற்றிற்று

இராசிகளிற் சனிநின்ற பலன்

சனி மேட விருச்சிகத்தின் பலன்

வேறு

மேடத்திற்றேளிற்சனி மிகுமாயனுமிமூர்க்கன்
தேடிடுந்திரவியந்தான் பிரயிக்கச்செய்திடுசொல்வன்
ஓடுதேசாந்திரிக்கேகட் டென்பெயர்க்கிறதாலவன்
கேடுயுதனமுமில்லான் கொலைசெய்தேதிரிற்பன்றுமே.

(இ-ள்.) மேடத்தில் சனிநின்றால் மாயருபியும், மூர்க்கனும், உற்றுரை விரும்பாதவனும், பிறரைப் பிரயிக்கச்செய்வோனும், விருச்சிகத்தில் சனிநின்றால் கட்டுப்படுபவனும், தேகம் அழியப்பெறுபவனும், தரித்திரனும், கொலை செய்பவனுமாவான், எ-று. 165

சனி இடபதுலாத்தினின்ற பலன்

நிற்குமோரிடபத்தன்னி னிற்கிற்பெண்கட்குநேசன்
நற்குணன்மறதியில்லான் நரியர்பலரைச்சேர்வன்
முற்கோலிற்சனிநிற்கின் முற்றியதனவானவன்
சற்குணன்கியாதியுள்ளான் றருவனூர்மணியமாவன்.

(இ-ள்.) இடபத்தில் சனி நின்றால் பெண்கட்குநேசனும், நற்குண முள்ளவனும், மறதியில்லானும், பல பெண்களைப் புணர்வோனும், துலையில் சனி நின்றால் தனவானும், நற்குணனும், கீர்த்திமானும், மணியக்காரனு மாவான், எ-று. 166

சனி மிதுனகர்க்கடக கன்னியினின்ற பலன்

ஆனதோர்மிதுனக்கன்னி தனிற்சனியமர்ந்தகாலை
தானமாம்புதல்வர்தம் தகைமையில்லார்க்குமான்பன்
வானுறுகண்டிற்காரி மருவிற்றாய்மகன்பெண்ணில்லான்
ஈனவான்ஞானஅறிவீனன் மக்கிளைபல்லவன்மூர்க்கன்.

(இ-ள்.) மிதுனத்திலும், கன்னியிலும் சனிநின்றால் பிள்ளைகள் கொஞ்சமும் தீயர்க்கு நல்லவனும், கர்க்கடகத்தில் சனிநின்றால் தாய், மகன், பெண் இவர்களிலாதவனும், ஈனகுணனும், அறிவீனனும், சுற்றத்தைப்பல்லவனும், மூர்க்கனுமாவான், எ-று. 167

சனி சிங்கத்தினின்ற பலன்

மூல்லமாஞ்சிங்கவீட்டின் முனிவுறுசனிதானிற்கில்
சாலவாசாரமில்லான் சுகமில்லான்றாட்சியுள்ளான்
சிலமாக்குலம்விளக்கப் பெற்றிடுஞ்சேயுமில்லான்
வேலைவாரிதியையன்னை முனிந்திடுவிழியினளே.

(இ-ள்.) சிங்கத்தில் சனிநின்றால் ஆசாரமில்லாதவனும், சுகமில்லாதவனும், தாழ்மையில்லாதவனும், பிள்ளையில்லாதவனுமாவான், எ-று. 168

சனி தனுசுமீனத்தினின்ற பலன்

(இ-ள்.) லக்கின முதலிய நான்கு வீடுகளுக்குள் கிரகங்களிருந்தால் கேதாரயோகமாம். இதன் பலன்கள், உழுதுபயனைத்தேடுதலும், சுற்றத்தார்க்கன்பாயிருத்தலும், சுகவானும், ராஜபூசிதனும், நற்குணமா யிருத்தலுமாம், எ-று.

உள்ளதோர்மூன்று வீட்டி லுற்றிடிற்கூடயோகம்
மெள்ளவேபலனைகேக வித்தையுள்ளவனுற்சாகி
தெள்ளியபோகவானுந் திரவியந்தேடுஞ்செல்வன்
கொள்ளவும்விலைகள்கூறி விற்கவுங்கருதிப்புள்ளோன்.

(இ-ள்.) லக்கினமுதலிய மூன்றுவீட்டிற்குள் கிரகங்களிருந்தால் கூடயோகமாம். அதன் பலன்கள், அநேக வித்தை[illegible]ள்ளவனும், உற்சாகியும், போகவானும், திரவியந்தேடுஞ்செல்வனும், வியாபாரியுமாயிருத்தலாம், எ-று. 260

ஆள்சகம்பெயரன்பு லேழு கிரகமுமர்ந்திருக்கில்
சீனயோகமென்பர் திதன்பலனிதிமான்பக்திகோர்
தான்றொழுதிடைதருந்திருக்குஞ் சரசவான்பிரக்கசின்
கேள்சுபகாமன்சென்மத் தேழுநிற்கவயோகம்.

(இ-ள்.) இலக்கினத்திற்கு இரண்டாம் வீட்டிலே எழுகிரகங்களுமிருந்தால் அகயோகமாம். அதன் பலன்கள் நீதிமானும், பெரியோரை வணங்குவோனும், [illegible]க்ஷாபுவுள்ளவனும், சுபகாரியகர்த்தனுமா யிருத்தல். சென்மத்திலேயே எழுகிரகங்களு மிருந்தால் கவயோகமாம், எ-று. 261

யோகமாக்கவுயோக முறுதனந்தசற்றுமில்லான்
பாகமாயினைத்திருப்பன் செல்வனான்பகிர்த்தேசாம்பன்
தோகைகேள்பொல்லான்சிற்ப காரியத்தொழிற்குவல்லன்
வாருடன்புவிசஞ்சார வல்லமையுள்ளனுமே.

(இ-ள்.) அதன், அதாவது கவயோகத்தின் பலன்கள், தரித்திரனும், இளைத்த சரீரமுள்ளவனும், செலவுக்காரனும், சோம்பலுள்ளவனும், பொல்லாதவனும், சிற்பியும், புவிசஞ்சாரவல்லவனுமா யிருத்தல், எ-று. 262

உச்சபலன்

முற்றிற்று.

சகடயோக பலன்

அறுவனம்மனனுங் காறெட்டோடீரியத்
திங்களாறுதி யெய்யதி யிருக்கிற்க்கள்
சகடயோக பிறந்தார்க்கெல்லாம்
[illegible] துன்பம் விளையுமட்டீ.

(இ-ள்.) ஆறு எட்டு பன்னிரண்டு இவ்விடங்களில் சந்திரனிருந்தால் சகடயோகமாம். இந்தயோகத்தில் பிறந்தவர்களுக்கெல்லாம் துன்பமும் அரிட்டமு முண்டாகும், எ-று. 263

யோகபலன்

வேறு

விளையும்புதனுஞ்சூரியனும் விரும்பியெட்டினன்கொன்றில்
வளையக்கூடின்மன்னவனு மதியுங்கதிருமுடன்கூடி
இளையாதன்மகன்மத்தி லிரண்டிலிருக்கக்கீர்த்தியுளன்
கிளையாரவிபொன்பன்னொன்றிற் கேடில்சன்மத்துறிலரசே.

(இ - ள்.) புதனும், சூரியனும், எட்டு நான்கு லக்கினம் இவ்விடங்களில் கூடில் அரசனவன். சந்திரனுஞ் சூரியனுமொன்றாய்க் கூடி லேட்டது தர்ம கர்மத்திலும் இரண்டாமிடத்து மிருந்தால் கீர்த்தி புள்ளவனவன். சூரியன் குரு பதினொன்றில் குற்றமில்லாது லக்கினத்திலிருந்தால் அரசனவான், எ-று. 264

அரசேயெட்டொன்பதுபத்தி லணிசன்மத்திலிரவிபுகர்
சிரசாயிருக்கப்பூபதியாஞ் சேருஞ்சனியுஞ்சூரியனும்
நிரைசேர்த்தொன்றாய்கவமாதி னிற்கிற்கீர்த்திமானவன்
உரைசேர்மற்றேரிடத்திவர்க ளுறையிற்கூத்தாடியுமாவான்.

(இ - ள்.) சூரியனும், சுக்கிரனும் எட்டு ஒன்பது பத்து லக்கினம் அவ்விடங்களிலிருந்தால் அரசனவான். சனியுஞ் சூரியனுஞ் சேர்ந்து ஒன்பது ஆறு இவ்விடங்களிலிருந்தால் கீர்த்திமானவான். இவர்கள் மற்ற விடங்களி லிருந்தால் கூத்தாடியாவான், எ-று. 265

ஆறாம்வெள்ளியிரவிசெவ்வா யனுக்குப்பத்திற்பன்னொன்றில்
காமேயைந்தொன்பதிரண்டிற் றரிக்கிலரசாதிபனவன்
தோமார்செவ்வாயிரவிபுத்தி யெங்கேயேனுந்தொடர்ந்திற்கில்
நமேசெல்வம்படைத்திருப்ப னவ்வான்றமருக்கொருகாலம்.

(இ - ள்.) சுக்கிரன், சூரியன், அங்காரகன் இவர்கள் சேர்ந்து பத்து பதி னொன்று ஐந்து, ஒன்பது இரண்டு இவ்விடங்களிலிருந்தால், அரசனவான். அங்காரகன், சூரியன், புதன் எவ்விடமாவது தொடர்ந்திருந்தால் சுற்றத்தார்களுக் கொருகால முதவாமல் செல்வம் அதிகமாகப்பெற்றிருப்பான், எ-று. 266

காசம்பொதிந்[illegible] கடு லுவணமதியங்காரிகுசன்
தேசமுடனேயொருவீட்டி னிற்கிலரசனுமாகி
தேசந்தன்னிலிருந்தமன்னர் [illegible]தடும்பொருளிற்றீக்[illegible]
பூசல்புரிந்தேதனைக்கொண்டு [illegible]மிக்கரசாயிருந்திடுவன்.

(இ - ள்.) சூரியன், [illegible] சந்திரன், சனி, அங்காரகன் இவர்கள் ஒரே வீட்டில் கூடியிருந்தால் [illegible] தேசங்களில் அரசர் தேடும்பொருள் [illegible] [illegible] சண்டை செய்து அவைகளைக் கொண்டு அரசசெலுத்து வோனவான், எ-று. 267

இருந்தகதிர்சந்திரனுச்சமேய்தக் குருகன்னியிலிருக்கத்
திருந்துருடத்திற்சனியிருக்கச் செவ்வாய்[illegible]றைதேயுமிலுறாய்
பொருந்தில்ராசயோகமதாம் பொன்னும்[illegible]குருமுச்சமதாய்
இருந்தாற்பூமிக்காசாகி யிப்பார்புரப்பனெனச்சொல்லும்.

(இ - ள்.) சூரியன் சந்திரன் இவர்கள் உச்சத்திலிருந்து குரு கடகத்திலும், சனி கும்பத்திலும், செவ்வாயும் புதனும் எழிலுமிருந்தால் ராசயோகமாம். குரு வும் சுக்கிரனும் உச்சம்பெற்றிருந்தால் பூமிக்கரசனு மரசாள்வான், எ-று. 268

சொல்லுமுன்றுகிரகங்கள் சுவமாயுச்சமானாலும்
வில்லிலைசசமேடத்தில் வெய்யோனுச்சமாயினும்
நல்லவிருசுவொன்மதியு மயங்கிக்கடமேயுமிருந
அல்லவைவேயபூமிப்புரக்கு மரசனுக்கன்றோ.

(இ - ள்.) மூன்று கிரகம் உச்சமானாலும், தனுவில் குரு ஆனியிலும், மேடத்தில் சூரியன் உச்சம்[illegible], சுக்கிரனும் குருவும் சந்திரனும் விசேஷமாய்க் கூடி லக்கினத்திலிருந்தாலு[illegible] யாவான், எ-று.

கண்டபாக்கியாதிபனும் குருவும்வெள்ளியிருவோரும்
பின்னுமொன்றிலிருந்திடினும் வேந்தன்பாக்கியாதிபத்தில்
ஆன்றுமுநின்றிடினும் [illegible] தரசாய்த்தனவானுமே
பெண்டிதானநடமணம்புரிந்து பிரதாபங்கள்பெறுகுணவான்.

(இ - ள்.) பாக்கியாதிபதியும் சுக்கிரனும் கூடிச் சன்மத்தி லிருந்தாலும், குரு பாக்கியஸ்தானத்தி லிருந்தாலும், பிறர் தேசத்தில் அரசனாகித் தனவானும் ஒரு பெண்ணை மணம்புரிந்து பிரதாபங்களைப்பெறுங் குணவானுமான், எ-று. 0

குணமார்தன்மகன்மாதி கூடித்சுபக்கோளுடன்கூடி
மணமார்தன்மகன்றத்தின் மருவியிருக்கின்மன்னவனும்
உணர்வாயிவர்களிருவருட னொன்றாந்தானத்துடன்கூடப்
புணர்வாரெங்கேயிருந்தாலும் பூமிபுரக்கும்பூபாலனும்.

(இ - ள்.) தர்மகர்மாபதி சுபக்கிரகங்களுடன்கூடி தன்ம கர்மத்திலேயே யிருந்தால் அரசனவான். இந்த இருவரோடு நந்தாம்வீட்டுக்கதிபனும் ஒன்றாய்க் கூடி யெங்கேயிருந்தாலும் அரசனே யாவான், எ-று. 271

புரக்கும்வாயுயோகந்தைப் புகலும்புகர்க்குருக்காரிக்கு
திரைக்குத்திரிகோணங்கடனி லிருபனிருக்கவர்க்கைத்தில்

பரக்குமதியக்தானிருக்கப் பரிதிமதிகேந்திரத்திருக்க
விரைக்குங்குமார்முலையானே வினவாயிதற்குப்பலன்சொல்வாம்.

(இ-ள்.) சுக்கிரனுக்கும் சனிக்கும் திரிகோணத்தில் குருவிருக்க அவர்களுக்கேழில் சந்திரனிருக்க சூரியனுஞ் சந்திரனுங் கேந்திரத்திருந்தாலும் வாயு யோகத்தைச்சொல்லுவர் வாசக்கமழும் முலையாய்! இதற்குப் பலனைக்கேள், எ-று.

சொல்லும்விசாலக்ஷேத்திரமு மழகுநல்லரூபசரீரமுமாய்க்
கல்வியுளனுந்தனவானுங் கீர்த்திமான் பிரபலனும்
நல்லகுணமுள்ளமனுமாய் நாடுக்கியாபாரியாய்
வல்லவனுமாய்ப்பரதாரம் வஞ்சித்திருக்கும்வஞ்சகனுமாம்.

(இ-ள்.) விசால க்ஷேத்திரமும், அழகிய ரூபசரீரமுமாய் கல்வி யுள்ளவனும் தனவானும், கீர்த்திமானும், பிரபலனுமாய், நல்ல குணமும், தருமிஷ்டனுமாய், வியாபார விர்த்தியுடையவனும், பரதாரவஞ்சகனுமா யிருப்பானும், எ-று. 273

வேறு

வஞ்சமற்றபுதயோகஞ் சன்மத்திலிறையும்
மன்னவன்கேந்திரத்தின்மதி மதிக்கிரண்டி லங்குசனும்
விஞ்சகுசற்கொருமூன்றிற் சனியிருக்கும்பலன்கள்
மிகுபலசாஸ்திரமதிவன் விரவுபராக்கிரமன்
செஞ்சொல்புகழுத்திசா தூரியன்மிகுசாமர்த்தியன்
செய்பகைராம்பரக்குஞ் சீர்மனமுமாவான்
கஞ்சமுகைதமனியவெற்பும் மிபக்கோடென்னக்
கதித்தவிம்மும்புளகமுலைக் கன்னியீதுகேளாய்.

(இ-ள்.) லக்கினத்தில் குருவும், குரு கேந்திரத்தில் சந்திரனும், அவனுக் கிரண்டில் அங்காரகனும், அவனுக்கு மூன்றில் சனியுமிருப்பது புதயோகமாம்; அதன் பலன், பல சாஸ்திரமதியவனும், பராக்கிரமனும், மோட்சசாதுரியனும், மிகுந்த சாமர்த்தியனும், அர்ச்சனுமாவனென்று தாமரை மொக்கையும் பொன் மலையையும் யானைக்கொம்பையு மொத்துக் கதித்த விம்மும் முலையை யுடை யாளே! நீ கேட்பாயாக, எ-று. 274

சந்திரன்செவ்வாய்கூடிச் சத்தமத்திலிருக்கச்
சந்திரமங்களயோகந் தாரணியபாசாளவன்
இந்திரக்கும்லக்கினகேந் திரத்திற்பொன்னிருக்க
இருங்கசகேசரியோக மெழுதிறைத்தமதிக்குச்
சந்தரஞ்சேர்லக்கினத்தா றேழெட்டாமிடத்தில்
சுபக்கிரகம்பார்க்கினிற் சொலுராஜயோகம்

பக்கமுலக்கினத்திற் சனிசெவ்வாயிருக்கப்
பாருகுருபரிகெண்ப துதில்ராஜயோகம்.

(இ-ள்.) சந்திரனும், செவ்வாயுங்கூடி சத்தமவீட்டிலிருந்தால் சந்திரமங் களயோகமாகும்; அதனால் [illegible]. சந்திரனிருக்கும் லக்கினகேந்திரத் தில் குருவிருந்தால் கஜகேசரியோகமாம். அந்த பூர்ணசந்திர லக்கினத்திற்கு ஆறு, ஏழு, எட்டாமிடங்களில் சுபக்கிரகங்கள் பார்த்தாலும், இருந்தாலும் ராஜ யோகமாம். லக்கினத்தில் சந்திரனும் செவ்வாயுமிருந்து, சூரியனும், குருவும், முறையே பத்திலும் ஒன்பதிலும் இருந்தாலும் ராஜயோகமாம், எ-று. 275

வேறு

சோமனுக்கிரண்டிற் சனியுறிற்சுனபாயோகம்
தாமிதமாமுன்றத்தை யார்ச்சித்ததனங்களில்லைக்
காமுறுமிவனொருவன் காசினிக்கரசனுக்குத்
தாமிருமனைக்கோடுத் தருதிரப்பதிவென்றுனே.

(இ-ள்.) சந்திரனுக்கு இரண்டாமிடத்தில் சனியிருந்தால் சுனபாயோக மாகும், அதன் பலன் பிதுரார்ஜிததனமில்லை. ஆனால், அச்சாதகன் ஒரு அரச னுக்குச் செல்வமீட்டித் தருவியாய் வாழ்வன், எ-று. 276

மருகசிகேந்திரன் மன்னவனிற்கவந்த
அரசன்றன்கேந்திரத்தி லம்புலிதானுமிற்கில்
விரவுமற்றிடத்திலமற்றோர் மேவியதோஷம்பாரே
ஒருவர்க்கண்டாலுமேதாயிகேசரியாம்யோகம்.

(இ-ள்.) சந்திர கேந்திரத்தில் குருவிருக்கவும், குருகேந்திரத்தில் சந்திரன் இருக்கவுமாகும் [illegible] மற்றக் கிரகங்கள் இருக்கும் தோஷமானது நீக்கத் தக்கது [illegible] கஜகேசரியோகமாகும், எ-று. 277

வேறு

இரவிக்குப்பன்னிரண்டில் சுக்கிரன்றான் கூடி
இருந்தக்காலதுவெசி யோகமென்றிசைப்பார்
புரவலரால்பூசிப்புறு நால்வகையோசனைக்கும்
புத்திரஞ்சேர்செல்லாம் புகழ்ந்திருப்பதும்
பாவியும்வெருப்பாபுகளைப் பரப்பன்
பரிஇருந்சுக்கிரன்ரப் பதியுடுவன்மை
விரிஞ்சிதிகோண்கனர்மைக் கொண்டானில்
வெள்ளிபுதன்குருவிருக்கில் வெகுபலனுண்டாமே.

(இ-ள்.) சூரியனுக்குப் பன்னிரண்டில் சுக்கிரனிருந்தாக்கால் அதுவே வெசியோகமாம். அதன்பலன், அரசரால் பூசிக்கப்படுதல், நால்வகை யோசனைக்

கும் புத்தி. நல்லோரால் புகழப்படுதல், பூமியாட்சி இவைகளும், சுக்கிரன் வாப ஸ்தானத்திலும், திரிகோணங்களாகில் ஐந்து ஒன்பதாமிடங்களில் சுக்கிரனும், புதனும், குருவும் கூடியிருந்தாலும் வெகுபலன்களுண்டாம். எ-று. 278

வடிவுடன்கர்க்கடகத்திற் பொன்னவனுமிருந்து
வன்மையுடன்லக்கினத்தில் வான்சசியைப்பார்க்கப்
படிமிசையோர்காண்டாங்க லக்கிசயோகமென்றே
பலனிதற்குவெகுபலனும் பாக்கியமுமுண்டாய்த்
தொடியிடைமாதர்கள்பலரைத் தாகமனம்புரிந்தே
தொன்னூற்றுறும்வயது தொடங்கவருமளவும்
அடிகமழுமலரணைமேல் லநுராகம்புரிந்தே
காசினியிலிருப்பனெனக் கருதியிரும்நூலே.

(இ-ள்.) குரு கடகத்திலிருந்து லக்கினத்திலிருக்குஞ் சந்திரனைப் பார்த்தால் அக்கிச யோகமென்று சொல்லுவார்கள். அதன் பலன் வெகு பலனும், பாக்கியமு முண்டாய் பெண்கள் பலரை விவாகம் புரிந்து தொண்ணூற்றுவயதளவுக்கும் மலரணைமேலிருந்து அநுராகம் புரிந்துபூமியில் இருப்பனென்று இந்நூல் சொல்லும், எ-று. 279

உடுசன்மநக்ஷத்திரந்தனையிற் சென்றநாழிகையை
ஓசிரத்திற்கழித்த பலனுதயமுதலாகப்
பெருஞ்சசியின்லக்கினமா மோராலக்கினமும்
பிறந்தசன்மலக்கினமும் பன்னிரீகையிடும்
மருவிலாயிந்நான்கு மீனையுச்சவீடாய்
வயங்கனிறையோகமெனவே வழுத்தவென்றே
கறையகலக்கலைநிறைந்த சந்திரபோலுமும்
கமழ்மலர்போதுமுகக் கன்னியரசோவாய்.

(இ-ள்.) ஜென்ம நட்சத்திரத்திற் சென்ற நாழிகையை ஐந்தைத்தால் ராசிபோனதுக்கு உதயமுதலாகக் கழித்துவந்த மிச்சம் சந்திரலக்கினமாம். அந்தச் சந்திர லக்கினமும், ஓராலக்கினமும், ஜென்மலக்கினமும், சந்திரனிருக்கும் வீடுமாகிய இந்நான்கு உச்சவீடாயிருந்தால் இராசயோகமென பூர்ண சந்திரனைப் போலும் தாமரை மலர்போலும் முகத்தையுடைய பெண்ணே! சொல்லக் கேளாய், எ-று. 280

வேறு.

ஓராலக்கினங்கடிகாலக்கினம் முதித்தானம்
சோராயிம்முன்றுவீடு முச்சமாய்வின்னோர்காணப்
பாராளும்ராஜயோக மிருமினோர்க்கின்மன்னும்
பேராயோர்மனைவைக்காணிற் றலைவனும்பேசக்காலே.

(இ-ள்.) ஓராலக்கினத்தையும், ஜென்மலக்கினத்தையும், கடிகாலக்கினத்தையும் உச்சன் பார்த்தால் ராஜயோகமாம். இம்மூன்று வீட்டைப் பார்க்கில் அரசனும், ஒரு வீட்டைப்பார்க்கில் தலைவனும், எ-று. 281

சோமனுக்காறேழெட்டிற் சுபக்கிரகங்கணின்றால்
ஆமதியோகமிதன்பலன்சாமுதக்காலே
சேமிப்போர்க்கதிப்பக் குறைவில்லாமுமுன்னான்
தீமையற்றவரைவென்றுசெய்திடுமுதிபதியுமாவான்.

(இ-ள்.) சந்திரனுக்கு ஆறு, ஏழு, எட்டாமிடங்களில் சுபக்கிரகங்களிருந்தால் அதிக யோகமாம். அதன் பலன்: சுகிர்தாளும், சவுரியங்கள் நிறைந்தவனும், பலமுள்ளவனும், பகைவர்களை ஜெயிக்கும் சேனாதிபதியுமாவனும், எ-று.

இந்துவுக்கிரண்டாம்வீட்டி லினியரோனிருந்தக்காலே
முந்தியசுனபாயோக மிதன்பலன்செப்பக்காலே
சந்ததந்தனவான்ராஜ சன்மானம்புத்தியுள்ளான்
அந்தரப்புவிக்கொண்டுக் கதிக்கிந்தகீர்த்தியானும்.

(இ-ள்.) சந்திரனுக்கு இரண்டாவது வீட்டில் சுபக்கிரகங்களிருந்தால் சுனபாயோகமாம். அதன் பலனைச் சொன்னால் எப்போதுந் தனவானும், ராஜ சன்மானனும், நல்ல புத்தியுள்ளவனும், உலகமெல்லாம் துதிக்கும் கீர்த்திமானு மாவனும், எ-று. 283

வேறு.

வித்தகபுதனுங்குரு வுச்சமேயாயிடச்
சொற்சுக்கிரன்கோணமுற்சேர்ந்திட
இன்சொற்பெருமை குசனும் பெயதிதோன்
அஞ்சியார்க்கு மரசுபுரிவனே.

(இ-ள்.) புதனும், குருவும், உச்சர்களாகவும், சுக்கிரன் கோணமிலேறவும், அங்காரகன் மேஷத்திலிருக்கவும் பிறந்தவன் யாவர்க்கும் அஞ்சாமல் அரசாள்வான், எ-று. 284

ஆறும்லக்கினத் திதானபதினோரத்
தோறுமிரின்க சுபதியோகமாம்
ஆனியாக்கெடங் கனக்கமுள்ளான்
கேறுமெப்பதிநுனைசுடவனே.

(இ-ள்.) லக்கினத்திலும், நான்காமிடத்திலும் சுபக்கிரகங்க ளிருந்தால் சிம்டாஸனயோகமாம். அதன் பலன்: பக்க கோடியும், சுகமுள்ளவனும், அதிக செல்வனும், பாக்கியமுள்ளவனும், எ-று. 285

பாவமற்றிடு லக்கினப்பார்த்திபம்
கேவுமிரண்டிலும் சுபர்மூன்றிலேயிருக்க
தாவுநான்கெனுந் தானத்திலானுமில்
கோவுமாகிக் குலாவியிருப்பினே.

(இ - ள்.) லக்கினாதிபதிக் கிரண்டிலும், மூன்றிலும், நாலிலும் சுபக்கிர கங்களிருந்தால் அரசனென வாழ்வான், எ-று. 286

வேறு

குலவுமிரண்டாம்ராசி யுச்சமானாலும்
குளிர்மதிபொன்புகரிவரி லெவர்நின்றாலும்
இலகிதமாயிரண்டதர்மிடஞ் சராமேயாயின்
இராஜயோகத்திற்கா லாந்திரமதாயின்
உலவுமரையுபயம் பூரணராஜயோகம்
உரைசெய்புவிவர்லாபத் தாதிறுமினிதாகும்
புலவகலைசெய்குளித்த வடிவேலேந்தியாய
புவியின்மேயோர்மயங்கப் புரிகயற்கண்ணனே.

(இ - ள்.) புலால்நாற்றம் நீங்க செய்குளித்த வேலையும் உலகத்தில் வாலி பர்களை மயக்குகிறவையும் பெற்ற கயலையும் ஒத்த கண்களையுடையாளே! லக்கினத் திற்கு இரண்டாம் வீடு உச்சமானாலும், அல்லது அந்த வீட்டில், சந்திரன், குரு, சுக்கிரன் இவர்களில் யாராவது இருந்தாலும், அந்தவீடு சராராசியாயிருந்தால் கால் ராஜயோகமும் ஸ்திரராசியாயிருந்தால் அரை ராஜயோகமும், உபயராசியா யிருந்தாலும் பூரண ராஜயோகமுமாகும். அன்றி இக்கிரகங்கள் லாபஸ்தானத்தி லிருந்தாலும் நல்லதேயாகும், எ-று. 287

ஆறுமூன்றிற்பத்தாறிற் பன்னொன்றிற்பாவர்
அமரிலேவுபசயமா மான திரிகோணத்
தாமூன்றுகேந்திரத்தி லுச்சக்கடனிற்
தன்மனைவிற்சுபர் நிற்கத் தகுராஜயோகம்
தேமூன்றமமுதசனி யிருக்கராசிக்குத்
செறியுமதிபதிகளையுஞ் சென்மமதுசிக்குள
பாமூன்றின திபதியு மற்றோர்பாமலில்
பக்கத்துச்சனிபார்க்கிற் சன்னியாசியோகமதே.

(இ - ள்.) லக்கினத்திற்கு மூன்று, ஆறு, பத்து, பதினொன்று இடங் களில் பாபக்கிரகங்களிருந்தால் உபயசரமா[illegible] திரிகோணத்திலன்றி மூன்று கேந்திரங்களிலும் சுபக்கிரகங்கள் இருந்தால் ராஜயோகமாம் மூன்றிலும்

சந்திரனிருந்த வீட்டிலும் அந்த இடாதிபதியையும், சென்ம ராசியில் மூன்று வீட்டதிபதியும், லெவிருவரும் பாபராம் சனிமட்டும் பார்த்தால் சந்நியாசி யென்று சொல்லவேண்டும், எ-று. 288

பகருமச்சுக்கிரன் [illegible] த்திலிருந்து
பாக்கியமான்றாய் [illegible] அரசன்றாலும்
சகமதில் [illegible] இருந்தால் [illegible] யோகம்
சன்மலக்[illegible]
நிகிலஸ்தமதே [illegible] தின்னுபார்க்கில்
நிலமெலாம்புரக்குறும் ராஜயோகம்
கர்க்கடலக்கினத்திற் சசிக்கேழ்செவ்வாய்
தன்னையிடலராஜயோக மென்பார்கலைவோர்.

(இ - ள்.) சசிக்கு இரண்டாமிடத்தில் சந்திரனும், மூன்றில் குருவுமிருந் தால் ராஜயோகமாம். ஜன்மலக்கினம் விருச்சிகமாயிருந்து அந்த வீட்டை அங் காரகன் இருக்கினும் பார்க்கினும் உடையவனானாலும் ராஜயோகமாம். அன்றி கடகலக்கினத்துச் சந்திரனுக்கு எழில் அங்காரகன் இருந்தாலும் ராஜயோக மென்றே பெரியோர் சொல்லுவர், எ-று. 289

வேறு

கல்லேந்தார்கன்னிசென்ம லக்கினமாகச்சுக்கன்
மெல்லவேயுச்சமாக விளிவிடைவேந்தன்மேவச்
சொல்லியபாவர்கூடிச் சூழ்ந்திடாதிருக்கின்மன்னும்
வல்லதன்புவிமுற்ற மன்னர்களுடையாள்வன்.

(இ - ள்.) கன்னியாலக்கினம் ஜென்மமாக சுக்கிரன் உச்சமாகவும், குரு துலையிலிருக்கவும், பாபக்கிரகங்கள் பாராதிருந்தால் மன்னவனாவான். அப்படி யானால் தன்னுடைய வேற்றரசர்கள் நாட்டையு மாள்வன், எ-று. 290

அருநகர்க்கடக சென்ம மாகவேயிரவிபொன்னும்
கோருமேயுச்சமாகக் குளிர்புதன்வெள்ளிதானும்
சேருதன்வீட்டினிற்க பாக்கியாதிதாமும்
மீறுங்கேந்திரத்தினிற்க வெணாரச்சியம்புரப்பன்.

(இ - ள்.) கர்க்கடகந் ஜென்மமாக சூரியனும், குருவும் உச்சமாகவும், புத னும், சுக்கிரனும் சுயக்ஷேத்திரத்தி லிருக்கவும், பாக்கியாதிபதி கேந்திரத்தி லிருக்கவும், அநேக ராஜ்ஜியங்களையாளுவன், எ-று. 291

வேறு

புரக்குமப்புகழுடையச்சம் பொருந்த [illegible] இரண்டாமிடம்வெள்ளி
இருக்கவராகுமிகுநாச [illegible] கூடப்பலவானுந்த

தருக்கியிருக்கவெகுபூமி தனக்குமன்னன்றனுகிப்
பெருக்கும்வித்தைப்பிரபலமே பிரசங்கிக்குந்துரையாவான்.

(இ - ள்.) புதன் உச்சமும், இரண்டாமிடத்தில் சுக்கிரனும், வளரும் பிறைச் சந்திரனும், குருவும் கூடிப் பலமா யிருக்கவும் வெகு பூமிக்கு அரசனும் வித்தியா சாமர்த்தியனும் பிரசங்கிக்குந் துரையுமாவான், எ-று. 292

துரையாஞ்சனிக்குஞ்சுக்கிரற்கு நடுவேசோமன்றானிருந்தால்
உரையனபாயோகமிதிற் பலன்கனதியுள்ளன்போகி [ன்
திரையாண்மன்னர்கைப்பொருளைத் தான்கைக்கொள்வன்குலசிரேட்ட
புரையாசாரபாவன்றனிய வான்புரக்கிராமனியாமே.

(இ - ள்.) சனிக்கும், சுக்கிரனுக்கும் நடுவே சந்திரனிருந்தால் அனபா யோகமாம். அதன் பலன்; கீர்த்தியுள்ளவனும், போகியும், பிற அரசர்கள் கைப் பொருள்களைக் கொள்ளுவோனும், குலசிரேஷ்டனும், ஆசாரனும், தானியமுள்ள வனும், கிராமாதிகாரியு மாவனும், எ-று. 293

வேறு

உதித்தருளுஞ் சென்மாதிபதிலாபாதி
    ஒருமித்தைந்தாமிடத்திலுகந்துநிற்க
விதித்தருள்வாகனத்தாதி மூன்றும்வீட்டில்
    மேவிடவவ்வீட்டுக்குப் பத்தாமாதி
துதித்தசன்மாதிபனுடனே யைந்தின்மேவத்
    தோன்றியிமசேதனவுஞ் சூழ்புவிக்குள்
கதித்ததுரையாயச்செங்கோல் செலுத்தியிக்கக்
    காசினியெல்லாம்புரப்பன் காணுங்கண்டாய்.

(இ - ள்.) சென்மலக்கினாதிபதியும், லாபாதிபதியும் கூடி ஐந்தாமிடத்தில் ஒத்துருவா யிருக்கவும், வாகனாதிபதி மூன்றும்வீட்டி லிருக்க, அவ் வீட்டுக்குப் பத்தாம் வீட்டோன் சன்மாதிபதியோடு ஐந்தில் மேவினால் இமசேதனவும் சூழ் கின்ற புவிகளுக்கரசனும் செங்கோல் செலுத்தி உலகமாள்வான், எ-று. 294

கண்டருளுநீசபங்க ராசயோகம்
    காணும்வகைநீசத்தா னத்துவேந்தும்
இண்டிறல்சேர்ந்திடும்மம்மனை யுச்சவேந்தும்
    திங்கள்கேந்திரத்தன்னிற் சேர்ந்தானாகில்
மண்டியிடுநீசபல னொழிந்துகீர்த்தி
    மகாராஜராஜனென வாழ்ந்திடுவன் புவியில்
கொண்டபலர்நீசத்தி லிருந்தாலும்பெருநீசன்
    குடிகெடுவெல்லாக் கோளுமன்றே.

(இ - ள்.) நீசபங்க ராஜயோகமாவது நீசஸ்தானாதிபதியும் அந்த வீட்டுக்கு உச்சனும், சந்திரகேந்திரத்திலிருந்தால் நீசபலன் நீங்கி கீர்த்தியோடு மகாராஜனென உலகில் வாழ்வன். அநேக கிரகங்கள் நீசத்திலிருந்தாலும் ஒரு கிரகம் நீசங்கெட்டாலும் எல்லாக் கிரகங்களும் நன்றாகும், எ-று. 295

வேறு

கோலிலக்கினமாயந்தக் கோலிற்சுக்கிரனுமேவ
மாலினெண்மதியமாறு மிடத்திற் குருவிருந்தே
சாலவேகுருவுச்சத்திற் றங்கிமேமதியைப்பார்க்கில்
இலமெய்ஞ்ஞானியாகச் செகமெலாம்புரப்பன்றானே.

(இ - ள்.) துலாமே லக்கினமாயிருந்து அதில் சுக்கிரனிருக்கவும், சந்திரன் ஆறுமிடத்திலிருக்கவும், குருவுச்சத்திலிருந்து சந்திரனைப் பார்க்கவு மானால் மெய்ஞ்ஞானியாய் உலகத்தை யாள்வான், எ-று. 296

வேறு

தானமேறுமாதூருந் தானத்தானத்
    தானத்திலேயிருக்குந் தகைமைகேளீர்
வானசெவ்வாய்ருசிகயோ கம்புதன்பத்திரயோகம்
    மகிழ்குருவம்சயோகஞ் சுக்கிரனேயாகில்
மானமாளவயோ கஞ்சனிதனக்கே
    வருஞ்சசயோகமென வேயழுத்தலாகும்
என்மதவர்தம்மி லேயொருவர்நிற்கில்
    இராசயோகமென வேவிளம்பலாமே.

(இ - ள்.) மாதூர்ஸ்தானாதிபதி அந்த ஸ்தானத்திலேயே யிருக்கும் தன் மையைக் கேளீர். அவன் செவ்வாயின் ருசியோகம், புதனுயின் பத்திரயோகம், குருவாயின் அம்சயோகம், சுக்கிரனுயின் மாளவயோகம், சனியாயின் சசயோகம் என்று சொல்லலாம். இவர்களில் ஒருவர் நின்றாலும் ராஜயோக மென்றே சொல்லலாம், எ-று. 297

ஆமேடமெருதுமிது னங்கன்னி
    ஐந்திடத்துமலகருமா மமர்ந்துநிற்கில்
பூமேடைதனிற்புவியிலும் ராஜயோகம்
    போற்றிடுவரேயின்னம் புகலக்கேளாய்
மாமேதாவன்து கேந்திரத்தும்
    இலட்சியமிடத்திராக மிருந்ததாகில்
நேமியையாள்கமாம் யோகமாகும்
    சீமானுமவன்ராஜ யோகந்தெரியப்பே.

(இ - ள்.) மேடம், இடபம், மகரம், கடகம், கன்னி என்னும் இவ்வைந் திடங்களில் யாதாமொருவிடத்து குருகாகமாகிய இராகு அமர்ந்து நிற்பது மல்லாமல் இன்னமும் கட்டாயமாய் அவ்விராகுக்கு 1-4-7-10-ஆகிய நான்கு கேந்திரங்களிலும் இடைவிடாமல் எந்த க்ரகமாவதிருந்தால் பர்வதயோகமாகும். அதனால் பூமேடையில் வித்திரை செய்யும் மோனருவன். அதுவே ராஜயோக மென்றுஞ் சொல்லுக, எ-று. 298

வேறு

[illegible]திரிகோணத்தானத்தாதி
தப்[illegible]சமாய்த் தலத்துறில்ராஜயோகம்
ஒப்புடனிரவிபக்க மிரண்டிலுறுமுயர்கோளுற்றால்
அப்படிப்புயவெண்சா மரையுடையரசனுமே.

(இ - ள்.) திரிகோணத்தில் அந்த ஸ்தானாதிபதி உச்சமாய் அதிலே யிருந் தால் ராஜயோகமாம். சூரியனுக்கு இருபக்கமும் சுபக்கிரகங்க ளிருந்தால் இரு வெண்சாமரமுடைய அரசனாவான், எ-று. 299

அரசனேழிற்செவ்வாய் யாறிற்பன்னொன்றிற்காரி
இரவிமுன் றுநான்கி லிராகுவுமிவாரேனும்
பாவியேதிற்பாகிற் பாஸ்கரயோகமென்பாம்
இரவிமுன்பணிபோற்குரூ மிராமிதனவியம்புமானே.

(இ - ள்.) பெண்ணே! குரு ஏழிலும், செவ்வாய் ஆறிலும், சனி பதினொன் றிலும், மூன்று, நான்கில் சூரியன் இராகு இவர்களில் யாரேனுமிருந்தால், பாஸ்கர யோகமென்று சொல்லி, இவர்களுக்கு சூரியன்முன் பணிபோற் குரூ மிராமென்றுஞ் சொல்லுக, எ-று. 300

ஏயலக்கினமீனத்தோற மெழிற்றண்டினண்டெருத்தில்
நேயமாய்க்குருக்கோவின்று நின்றிடில்ராஜயோகம்
ஆயலக்கினமேகும்ப மதனிற்பொன்னனுமகப்புக்கி
தூயநல்லுச்சமாகத் துரைகலவைக்காசாய்ச்சொல்லாய்.

(இ - ள்.) மீனலக்கினத்தோடந்த மிதுனத்திலும், கடகத்திலும், ரிஷபத்தி லும், இராகுவொன்று நின்றால் ராசயோகம், கும்பலக்கினத்தில் குருவிருக்க புதன் உச்சமாக நல்ல துரையாகி அரசனென்று சொல்லுவாய், எ-று. 301

சொல்லியசென்மந்தன்னிற் சோமனுங்குருவுங்கூடி
நல்லதோர்பத்துதானிற் சுக்கிரனுமத்தாதிக்க
அல்லலற்றிவரையுச்ச மானதோர்சனியுங்காண
வல்லமையரசர்க்கொப்பாய் வாழ்வன்மானிலத்தின்மாதே.

(இ - ள்.) பெண்ணே! லக்கினத்தில் சந்திரனும், குருவும் கூடியிருந்து பத்து, தானத்தில் சுக்கிரனிருந்து இவர்களை உச்சனான சனி கண்டால் அரசனுக் கொப்பாக வாழ்வன், எ-று. 302

மாதேகேடன்மயோகவரை கன்மயன்னனேனும்
தானதப்புங்கூடியெந்தத் தலத்திலிருந்தபோதும்
ஒதியவொருவர்விட்டு லொருவர்மாறியிருக்க
போதுமாருதசெல்வம் பொருந்திமாராஜயோகம்.

(இ - ள்.) பெண்ணே! கேள் தன்மயோகவிதம் [illegible] யோடு ஒன் பதாமிடத்தானுங்கூடி எந்தவிடத்திலிருந்தபோதிலும், [illegible] வீட்டி லொருவர் மாறி மாறி யிருந்தபோதிலும் [illegible] செல்வமிருந்[illegible] மாம், எ-று. 303

யோகமாமிலக்கினதி யிருந்தவீடுடையோனுச்சம்
ஆதக்கேந்திரத்துற்றாலும் பர்வதயோகமாமே
ஏகமாமினையோன்றாம் மிருந்தவக்கிசத்தோன்றுனும்
வாருகேந்திரகோணத்தில் வரின்மன்னர்மன்னனுமே.

(இ - ள்.) இலக்கினாதிபதியிருந்த வீட்டுக்குடையவன் உச்சமாயினும் கேந் திரத்திலிருந்தாலும், பர்வதயோகமாம். லக்கினாதிபதியும், அம்சாதிபதியும் கேந்திரகோணத்தி லிருந்தால் இராஜாதி ராஜனாவான், எ-று. 304

மன்னியசன்மமுன்பின் மனைக்கிறையிருவர்கூடி
பன்னுகேந்திரத்திருக்கிற் பர்வதயோகமென்ப
மின்னனையார்க்குநேயன் வெகுசவுக்கியவான்வேந்தன்
துன்னியகீர்த்தியுள்ளான் நூரகாதிபதியுமாவான்.

(இ - ள்.) சன்மலக்கினத்திற்கு முன் பின் வீடுகளுக்கதிபர்கள் சேர்ந்து கேந்திரத்திருந்தால் பர்வதயோகமாம். அதன் பலன்: ஸ்திரீலோலனும், சௌக் கியனும், அரசனும், கீர்த்திமானும், நரகாதிபதியுமாதலாம், எ-று. 305

ஆகதோர்பணபரத்தி லடுத்தலக்கினத்திற்சோமன்
நாதனுங்கேந்திரத்திற் றமனியன்றனுமேவ
வாகனர்க்கசுயோகமிதமதுவுச்சமாகக்
கூடவிலக்கினத்திற் சேருதீடிற்செங்கோல்வேந்தாம்.

(இ - ள்.) பணபரத்திலும், லக்கினத்திலும், சந்திரனிருந்து கேந்திரத்தில் குருவிருந்தால் இந்திரயோகமாம், புதன் உச்சமாக, சுகர் அம்சத்திலிருந்தால் அரசனாவான், எ-று. 306

வேறு

ஆதியமகத்தின் மூத்தோனுதத் திராவியாகபதிமுதலினிற் செவ்வாய், அத்தமுன்றுங் காவிடத்தில் புத்திரபிட்ட மாத்திரயபாதத்தில், வாகு சேர் சேர்த்தியுமா தானிடத்து மருவிய மந்தனுமிருக்க, வண்சேர் சுமைபுதலடிக்கரசன் மருவுகோணியிருகாதும், பாகுசேர்மொழி

யாய் சித்திரை மூன்றும்பாதத்திலுந் சுக்கிரனையும், பலந்திரயக் காணந்தவாங்கிசையும் பாவிய துவாத சாங்கிசையும், மோகமாந்திரிங்கி சாவைங்கிசைராசி முதலிந்தவகைக்கெல்லாங்காறும், முறையினிலுதித் தோனரசனென்றே மொழிவர் முன்னூ லுணர்ந்தவரே.

(இ - ள்.) மகத்து முதற்பாதத்தில் சூரியனும், அஸ்வினி முதற்பாதத்தில் அங்காரகனும், அஸ்தம் மூன்றும் பாதத்தில் புதனும், அவிட்டம் மூன்றும் பாதத்திலும், சுவாதி இரண்டாம் பாதத்திலும், சநியும், மூலமுதற்பாதத்தில் குருவும் ரோகணி இரண்டாம் பாதத்திலும், கற்கண்டையொத்த விளியசொல்லை யுடையாளே! சித்திரை மூன்றும் பாதத்திலும் சுக்கிரனும் இருக்கவும் திரேகாணம், நவாங்கிசம், துவாதசாங்கிசம், திரிசாங்கிசம், இத்தராசிகளிலிருக்கவும் பிறந்தவன் அரசனாவானென்று வேதமுணர்ந்த பெரியோர் சொல்லுவர், எ-று.

மொழிந்திடுஞ்சிங்கத் தரசனுமிருக்க முறையினில் வெள்ளிகும் பத்தில், மயன் முமாலித் துமுச்சமாயிருக்கமுதலிவர் நால்வருமடைவே, ஒழிந்துறுமுச்சமெய்திட ராஜயோகமாங் கடகராசியினில், ஒண்மதி யரசன்கூடவு மாசனொருவனு மேழினிருக்கக், கழித்தவல்ல சுத்து மொருவரைக் காணக்குழுவவி ராஜயோகமதாம், கருதிடுமொருகோ ளுச்சமாய் மற்றோர்சானன் பாட்சியிலிருக்க, வழிந்திடுங்கருவே வெள்ளிமீனத்தின் மன்னவன்காரி வில்லிடத்தில், மதுதாதற்கன்னி யிடத்தின்மாலிருக்க மன்னனாகுவனே.

(இ - ள்.) சொல்லப்படும் சிங்கத்தில் குருவும், கும்பத்தில் சுக்கிரனும், புதன் சந்திரனிவர்கள் உச்சத்திலிருக்கவும், அன்றி இவர்கள் நால்வருமே உச்சமாயினும் இராஜயோகமாம். கடகராசியில் பிரகாசம் பொருந்திய சந்திரனும், குருவும் கூடினும் குருத்தனியே யேழிலிருந்தாலும் மற்றைய வீட்டினருள் ஒருவர்காணவும் இராஜயோகமென்று சொல்வர். ஒருகிரகமுச்சமாய் மற்றவர்கள் நட்பு ஆட்சிகளிலிருந்து சுக்கிரன் மீனத்திலும், குருவும், சநியும், தநுசிலும், புதன் கன்னியிலுமிருக்கப் பிறந்தவன் அரசனாவான், எ-று. 308

ஆகுவாகனத்தோனருளுறக் கடகத்தரசனுமிரவி மேஷத்தில், அம்புலிமகன் சுக்கிரனொருதேறவோரர்கள் யோகமென்றுரைப்பார், வாருசேர் வெள்ளிலக்கினத்திருக்கமதி யுச்சமாயிருக்க, மன்னவன் சுதிரோன் றன்னகத்திருக்க மருவு நல்லரசயோகமதாம், ஏகமாமதிக் காறேழுட னெட்டிலேழிற புதன்பிருகுவிருக்க, இராஜயோகமதாம் மாம்பலாதேழுவினிய தன்வகத்துரியன்முன்போல, மோகமால் வெள்ளி யுச்சமாய்த்தனுவின் முனிவிலாசநிருருவிருக்க, முன்தம்த விடத்தங்காரகனிருக்க முறையோகமென்றுரைப்பார்.

(இ - ள்) பெருச்சாளி வாகனத்தையுடைய கணபதியின் கிருபையால் கடகத்தில் குருவும், மேஷத்தில் சூரியனும், சந்திரன் குமாரனாகிய புதனும், சுக்கிரனும், ரிஷபத்திலுமிருக்க ராஜயோகமென்று சொல்லுவர். சுக்கிரன் லக்கினத்திலும், சந்திரன் உச்சமாகவும், குருவும் சூரியனும் சுயக்ஷேத்திரத்திலு மிருக்கவும் ராஜயோகமாம். சந்திரனுக்கு ஆறு, ஏழு, எட்டாமிடங்களில் புதனும், சுக்கிரனு மிருக்கவும் ராசயோகமாம். இராகு கேதுக்கள் தவிர மற்றைய ஏழு கிரகங்களும் சுயக்ஷேத்திரங்களிலேயே யிருக்கவும், சுக்கிரன் உச்சமாய், தநுசில் சந்திரனும், குருவுமிருந்தாலும், விரிச்சிகத்தில் அங்காரகனிருந்தாலும் ராசயோகமென்றே சொல்லுவர், எ-று. 309

உரைசெறிகுருவும் புவிதநிருச்சமுயர்குசன் புந்தியேழிடத்தில், உறைந்திடச்சநியுஞ் சுறவுறராஜயோகமுச்சங் கதிர்பெறவும், அரசனுந்தனுசிலுறினு மேஷத்திலம்புலி பொன்புகிருக்க அரசயோகமதாமே திலக்கினமாயம்புலி நிறைபுகண்டேறப், பாவிய வாறுகோரு மம்மதியைப் பார்க்கவந்தியத்தின் மன்னவனும், பாக்கிய தனலாபதி சந்திரனும் பண்போடுங் கேந்திரத்திருக்கப், பிருகுலாபத்தியாட்சியா யிருக்கப் பிரபலராஜயோகமதாம், பெருகுமால் வெள்ளிசநியுமேகூடிற் பெறுமுகசவுந்தரமுளனும்.

(இ - ள்.) குரு சந்திரன் சூரியன் இவர்கள் உச்சத்திலும், அங்காரகனும் புதனும் ஏழிலும், சநி மகரத்திலுமிருந்தால் ராசயோகமாம். சூரியன் உச்சமடையும் குரு தநுசிலும், மேஷத்தில் சந்திரனும், குருவும், சுக்கிரனு மிருந்தாலும் ராசயோகமாம். ரிஷபலக்கினமாய்ச் சந்திரன் கடகத்திலும், மற்றைய ஆறு கிரகங்களும் சந்திரனைப் பார்க்கவுமானால் அந்தியத்தில் ராசயோகமாம். பாக்கியம், தனம், லாபாதிகளும், சந்திரனும் கேந்திரத்திலிருக்க சுக்கிரன் லாபஸ்தானத்தில் ஆட்சியாயிருக்க பிரபலமான ராசயோகமாம். அன்றி புதனும், சுக்கிரனும், சநியும் கூடினால் முகத்தில் சுந்தரமுள்ளவனாவான், எ-று. 310

உள்ளதோர்கடக லக்கினமாகவுயர் குசன்குரு விருவருமாய், உற்றதோர் மேஷமன்றிக்கேறு முறைத்திடப்பாவரை யொழித்துத், தெள்ளிரையாக வுறையத்திடற்றீர்க்க சிவியாந்துரகாதிய நியாம், செய்ய லக்கினமா றேழுடனெட்டிற் செப்புமித்தலங்க ளொன்றினிலும், கள்ளமாய்ப்பாவ ரன்றிநல்லோர்கள் காதலித்திடைவிடா திருக்கில், கருதிய ராசியோகமாயிதற்குக்கனபலன் மந்திரியாகி, வள்ளலாய்ச் சேனைத் தலைவனாய்க், கலைமாதர்கள் பலர்க்குநாயகனாய் வாலிபமுதலாய் வெகுதனம் படைத்து வாழ்வனென்றுரைப்பர் மாதவரே.

(இ - ள்.) லக்கினங் கடகமாக அங்காரகன், குரு இவர்களுக்கும் மேடாதியும், கடகாதியனும் இவர்களோடு சேர்ந்து பாவக்கிரகங்களோடு சேராமலிருந்தால் தீர்க்காயுள்ளவனேம். அன்றிக் குதிரைச்சேனைக் கரசனுமாவன். லக்கினம், ஆறு, ஏழு, எட்டு இவ்விடங்களில் நல்லோர்கள் இடைவிடாதிருந்த நல்லாயி

யோகமாம். இதற்குப் பலன் மந்திரி, மன்னர், சேனைத்தலைவர்களில் எவனைப் பெண்களுக்கும் நாயகனாய் வாலிபமுதல் மிக்க செல்வம் பெற்று வாழ்வனென்று சொல்லுவர் பெரியோர், எ-று. 311

மாதுகேண்மாலா யோகமம்புலிக்கு மன்னியபத்தினிற் குருவும்,
வந்துதானிருக்கிற் றடைபடாதிய மருவுசேர்க்கைத்திடனுமாம், இதிய
விரண்டி லிருவருமைந்திலுங் கூடியேயிருக்கில், உடைப்பர்கத்
திரியோக பலன்களும மொன்றையுமாக வொட்டாது, நீதநவொளர்தி
நான்கு பத்தேழிற் சோவொன்பதின் மருவிருக்கில், செப்பிடுமரச
கேந்திரயோகந் தெரிபலன் மகம்புரிந்திடுவன், நீதியாய்த் தனங்கேடி
வாழ்ந்திருப்பனே மிவிற்றமர் முதற்பலரும் கேயமாய்த்துதிக்கத் தனி
மனுஷனுமாய்த் திருபர்கொண்டாடவே யிருப்பான்.

(இ - ள்.) பெண்ணே கேள்! சந்திரனுக்குப் பத்தில் குருவிருந்தால் மாலா யோகமாம். இதின் பலன் தனவானும் சேனைதிபதியுமாவானும். இரண்டிலும் ஐந்திலும் இருவருமே கூடினால் சத்திரியோகமாம். எக்கருமத்தையு மாகவொட்டாமல் தடைசெய்யும். ஒன்று, நான்கு, பத்து, ஏழில் ஒன்பதுபேரு மிருந்தால் அரசகேந்திர யோகமாம். இதன்பலன் யாகஞ்செய்தல், நீதியாய்த் தனம் தேடுதல், சுற்றத்தார்களும் அரசரும் புகழ்வாழ்தல் என்பவைகளாம், எ-று. 312

இருளுமசேர்பத்திலொன்றி னிற்கிரகமிருந்திடில் விக்கயோகமதாம்,
திரண்பலன்றா துகடத்துதான் றிரிக்கேதுவின்னலாற் கலகமிட்டிடு
வன், ஒருமைசேர்சன்மந்தனிலேயாவ சோரேழிலைந்தயலிருக்க வதிலே
மனைவ யோகங்கள் பொய்புரைப்பழுதுமின்றெ வெகுதினமிருப்பான்,
பருமைசே ருச்சகேந்திரந்தனிற் பாவர்கள்மேவியே யிருக்கில்,
பாவியாக்குருமன்னவனுக்கிப் பார்த்தனக்கிரசனுமிருப்பன், அமைசே
ரொன்றைந் தொன்பதிற்கிரக மதுநிறதிக்கட்டாடலியோகம், அதன்
பலன் தீர்க்க வாயுளுண்டாகி மைதுவிந்தனியுமழிவொன்.

(இ - ள்.) பத்தில் நான்கில் கிரகமிருந்தால் விக்கயோகமாம். இதின்பலன் தூதுநடத்தல், கலகஞ்செய்தல், அன்பபடுதலும், சன்மத்தில் பாவரும் ஏழில் சுபமிருந்தால் அவயோகமாம். இதின் பலன் பொய் பேசுதலும், வெகுநாட்சிறை யிருத்தலும், உச்சகேந்திரங்களில் பாவிகளிருந்தால் பாவி, குருராஜனாவனும், ஒன்று, ஐந்து ஒன்பதாமிடங்களில் கிரகமிருந்தால் கெண்டாடலி யோகமாம். இதன் பலன், பூமியில் தீர்க்காயுசோடிருத்தலாம், எ-று. 313

உற்றமெய் லாபமதிற்கிரகங்க ளுறில்வச் சிரயோகமாகுமவன், ஒரு
மைகல்லேவொரொன்றேழிலிருக்க வுண்மை [illegible] வச்சிரயோக, மற்று
றுபலன தீர்க்காயுளுங்கீர்த்தி மன்னியபெருமையு முள்ளவனும், மன்ன

வன் சனிசெவ்வாய் கதிர்நால்வர் மருவியமூன்று மிடத்திருக்கப்,
பெற்றிடி லுச்சாங்கிசஞ் சுயாங்கிசங்கள்பெறின் மகாராஜயோகந்தான்,
பெருமையிந்நால்வர் சென்மமீதிருக்கப் பிறைதனைதகத்துறிற்புவியில்,
குற்றமிலா மகாராஜன் மெய்யிற் குறைவற மறைந்திருக்க, கோளொரு
நால்வர் மதிதனைக்காணக், கொற்றவனெனக்கூறாய்.

(இ - ள்) சரீரம் லாபம் இவைகளில் கிரகமிருந்தால் இலேயோகமாம். உழவனும், சுபர், ஒன்று ஏழிலிருந்தால் வச்சிரயோகமாம், தீர்க்காயுளும், கீர்த்திமானுமாதலாலும், குரு, சனி, அங்காரகன், சூரியனிவர்கள் மூன்றிலிருந்தாலும், உச்சாங்கிசம் சுயாங்கிசம் பெற்றாலும், மகா ராஜயோகமாம். இந்நால்வரும் சன்மத்திலிருந்து சந்திரன் தன் வீட்டிலிருந்தால் குற்றமற்ற ராசனும், வளர்பிறைச் சந்திரனிருந்தாலும் மேல் நாலுகிரகங்கள் அவனைப் பார்த்தாலும் அரசனுமாவான் என்று சொல்லுக, எ-று. 314

கூறுமிந்நிசேயுச்சமாய்ச்சன்மங் குலவுமின்மிதுன மேற்பாரில்,
கொற்றவன்சென்மத் திங்கொடுசனியுங் குசனுமேகூட வில்லதனில்,
ஏறிடக்கதிர்மேடத்துறமன்னு மிவையதமுன் புராதனபூமி, இழந்து
போய்விடும் விடபலக்கினமா யிதிற்பிறை சனிகுருவெய்யோன்,
பேருடனிருக்கில் ராஜயோகமதாம் பின்னுமேகன்னிலக் கினமாய்ப்,
பிறைமகனுச்ச மாகநாலிடத்திற் பிருகுசந்திரன்குரு விருக்க, வீழுட
னைந்தா மிடத்தினிற்சனிசேய் மேவியேயிருவரு மிருக்க, வெற்றிறற்
குணங்க ளுள்ளமன்னவனு மேதினிநீதியாய்ப் புரப்பன்.

(இ - ள்.) சந்திராங்காரர்கள் உச்சம், சன்மம், தநுசு, மிதுன மிவைகளிலானால் கொற்றவனும், சென்மத்தில் சந்திரனோடு சனியும் அங்காரகனும் கூடி தநுசில் ஏறவும், சூரியன் மேடத்துறவும், அரசனும், புராதன பூமியை யிழப்பவனும், ரிஷபலக்கினமாய் அதில் சந்திரன், சனி, குரு, சூரியன் இவர்களிருந்தால் ராஜயோகமும், கன்னிலக்கினமாய் புதன் உச்சமாயும் நான்கில் சுக்கிரன், சந்திரன், குரு இவர்களும், ஐந்தில் சனி அங்காரகர்களுமிருந்தால் மேதினியை நீதியோடாளும் வெற்றியுள்ள அரசனுமாவான், எ-று. 315

புரக்குமேகன்னி லக்கினமதிற் புந்தியும்பதினிற் புகரும்,
பொன்பிறைமூவர் கூடியேயிருக்கப் பூபதியாகியு மிருப்பான், பறக்கு
மெய்சிங்க மாயதிற்செவ்வாய் பரிந்துலவேழிடந் தன்னில், பனிமதி
யரச னிருக்கவேதனுவிற் பானுவின்வித்திரன் மேவ, இரக்கமாய்
மைந்தர் தானுமில்லா [illegible] விப்புவிபுரக்குமன் னவனும், என்னியபத்
திற்சதயதிறைன்றிற் சனி லக்கினத்தரசன், வருக்கடபிரான்
டிற் புதன்குசனிருக்க வாகனாதிரவிய மருவ, மாநிலம்புரக்கு மேந்
திரனுவன் வாளயில்போல்விழி யாளே.

(இ-ள்.) கன்னிலக்கினத்தில் புதனும், பத்தில் சுக்கிரனும், குருவும் சந்திரனும் கூடியிருந்தால் பூபதியும், சரீரம் சிங்கமாய் அதில் அங்காரகனும் ஏழிற் சந்திரனும், குருவும், நாலில் சனியுமிருந்தால் பின்மேயில்லாத அரசனும், பத்தில் சந்திரனும், பதினொன்றில் சனியும், லக்கினத்தில் குருவும், இரண்டில் புதனும் அங்காரகனுமிருந்தால் வாகனம் இரவிய முதலியவையுள்ள அரசனுவானென்று வேல்போல் கண்ணாய்! நீ அறிக, எ-று. 316

வேறு

நாடியகேந்திரத்தன் னதிபனுந்
தேடியமூலத்திரி கோணத்ததிபனும்
கூடியகேந்திர மிக்கோணமின்றியில்
உண்டியதுரகத் தரசனென்றோதே.

(இ-ள்.) கேந்திரஸ்தானாதிபதியும் மூலத்திரிகோணாதிபதியும் கேந்திரத் தேறினால் குதிரைக் கரசனென்று சொல்லுக, எ-று. 317

உரைத்திடலாப மொன்பதுபத்தும்
விரித்திடுமந்த வீட்டினிற்கதிபனைப்
பொருந்திய துனைப்படி பொருந்துமவ்வீட்டோன்
வருத்தமில்கேந்திரம் வந்துறின்மன்னனாம்.

(இ-ள்.) லக்கினாதிபதி லாபம், ஒன்பது, பத்தாமிடங்களின் தலைவர்களை பொருந்தி அவ்வீட்டோன் கேந்திரத்திருந்தால் அரசனாவான், எ-று. 318

மன்னியலக்கினம் விருச்சிகம்
பன்னியலாப மாமைந்தொன்பதில்
அன்னியமூவரி லாரோனுமிருந்து
மின்னியகேந்திர மேவிடிலரசே.

(இ-ள்.) லக்கினம், விருச்சிகம், சிங்கம் லாபம், ஐந்து, ஒன்பது, இவ்விடங்களில் இவ்வீடுகளுக் கன்னியர்களாகிய மூவரில் யாராவதொருவர் இருந்து கேந்திரம் ஏறினால் அரசனாவான், எ-று. 319

மேவுமேழொன்பதாம் வீட்டினவலதிபன்
ஏவுமேழோன்பான் வீட்டினிலிருக்கத்
தாவியக்கன் குறையன்மனை
ஆவலாய்கோலே பூரண்டினிலரசே.

(இ-ள்.) ஏழு, ஒன்பதாமிடங்களுக்குத் தலைவன் அவ் வீடுகளிலேயே இருக்கச் சுக்கிரன்மட்டும் தனது வீட்டிலிருந்தால் இருபத்தெட்டாண்டில் அரசனாவான், எ-று. 320

ஆண்டினிற்கேந்திரவா னதினல்லோன்
ஈண்டிடும்பாவர்க ளொன்றுவிட்டொன்றாறில்
தாண்டியசக்கர யோகத்தனபதி
நீண்டியலபய வயதினிச்சயமே.

(இ-ள்.) கேந்திராதிபதி நல்லவனாயும், பாபக்கிரகங்கள் ஒன்றுவிட் டொன்று அவனைக்கூடிவந்தால் சக்கரயோகத் தனபதியாவது பி[illegible]வயதி லாகும், எ-று. 321

வேறு

நிச்சயக்கிரகமான்மனைபுற்று நின்றிடற்கேதாரயோகம்
இச்சயன்மைக்கூழ்வழிநடைக் கஞ்சானெழி லுபகாரமேசெய்வன்
மெச்சுமோரைந்துவீட்டினிற் கோள்கண்மேவிடிற்பாசகயோகம்
விச்சைசேர்சவுக்கியன் தனபதியழகன் வெகுஜனமுள்ளவனாமே.

(இ-ள்.) கிரகங்களெல்லாம் நான்கு வீடுகளில் நிறைந்தாயின் கேதார யோகமாம். பலன், இன்பனும், உழவனும், நடைக்கஞ்சாதவனும், உபகாரியுமாவன். ஐந்து வீட்டில் நிறைந்தால் பாசகயோகமாம். பலன், சவுக்கியவானும், தனபதியும், அழகுள்ளவனும், வெகு சனமுள்ளவனுமாவான், எ-று. 322

வேறு

ஆமெகிரகமேழுமனையமர்ந்தால் வீணையோகமினித்
தா[illegible]நிபுணனெழிலுடையன் சப்ததேசப்பிரியமுளன்
தோமிலாறிலொன்றிலுறச் சொல்லுமதிகயோகபலன்
மாமேவரசன்பிரதாபவந்தே யாண்டுநாளிருப்பனே.

(இ-ள்.) கிரகங்களெல்லாம் ஏழு வீடுகளில் நிறைந்தால் வீணையோக மாகும். பலன்: நிபுணனும், அழகனும், சதப்பிரியனுமாவான். இவைகள் நான்கு, ஏழு, ஒன்று இவ்விடங்களில் நிறைந்தால் அதிக யோகமாம். பலன்: அரசாதிபதியும், பிரதாபியும், நாடாளுமிருப்பவனுமாவான், எ-று. 323

இருபத்திரண்டிற்கோளிருக்கப் பக்ஷியோகபலன்
பொருந்துந்தேசசஞ்சாரம் புகலுஞ்ஞானிகலகமுளன்
வருந்துசசியிலிருபுறமும்வரவே நல்லோர்துரியோகம்
திருந்துயோகமுமிசுவரியன் தேசஜனத்துக்கதிபதியே.

(இ-ள்.) இரண்டு [illegible] நான்காமிடங்களிற் கிரகங்களிருக்கப் பக்ஷி யோகமாம். பலன், தேசசஞ்சாரியும், ஞானியும், கலகக்காரனுமாவான். சந்திரனுக்கு இரண்டுபக்கத்திலும் சுபக்கிரகங்கள் வந்தால் துரியோகமாம். பலன்: யோகனும், ஐஸ்வரியனும், தேசசனங்களுக்கு அதிபதியுமாவான், எ-று. 324

என்றுமொன்றேழ்சுபரிருக்க விளிகாலடந்திடுபவர்களும
அன்றேயுதிலவச்சிரயோக மாதியந்தத்தயிசுவரியம்
நின்றேசூரதத்துவமுங்கமும் வயதிற்றனைபதியாம
நன்றேமாறிக்கோள்வரினு நாடுமினியவையோகம்.

(இ-ள்.) லக்கினத்திலும் ஏழிலும் சுபக்கிரகங்களும் நாலிலும் பத்திலும் பாபக்கிரகங்களுமிருக்க, வச்சிரயோகமாம். பலன்: ஆதியிலும் அந்தத்திலும் ஐஸ்வரியமும், சூரத்துவமும் வயதில் தனுபதியுமாவான். இதன்னை மாறியாப் வந்தால் அவ்யோகமாகும், எ-று. 325

யோகத்துக்கமாமலக்கினத்துக்கொன்றேழு நல்லோர்முனியிருக்கப்
போகன்றனவானவாரசன் பொருந்தும்பின்னேகிரகமுறில்
ஆருமவயோகமதாமனி சன்மத்தினிருப்புறும்
தாகமுடையினைபரிருக்கிற் றுனமாசனைனவன்றே.

(இ-ள்.) லக்கினத்திற்கு முன்னும் சுபக்கிரகங்களிருந்தால் யவயோகமாம். பலன் போகனும், தனவானும், அரசனுமாவான். லக்கினத்துக்குப்பின்னேல் சுபக்கிரகங்களிருந்தால் அவ்வயோகமாம். அன்றி, சன்மலக்கினத்திற் கிரண்டுபக்கமும் சுபக்கிரகங்களிருந்தால் அரசனுவான், எ-று. 326

வருமேசென்மலக்கினுக்கிவக்கு மித்திரன்றன்வீடும்
பொருமேயுச்சமனையிரண்டிற் புகருங்கூடிற் றனவானும்
தருமேசென்மஞ்சிங்கமுறு தன்னிற்பரிதிதானிருக்க
அரிவைமனையிற்புகரிருக்க மன்னுநீசராசனுமாம்.

(இ-ள்.) சென்மலக்கினுதிபதி மித்துருஸ்தானத்திலும், இரண்டில் உச்சஸ்தானத்திலும் சுக்கிரனுங் கூடியிருந்தால் தனவானுவான். சென்மத்திலும், சிங்கத்திலும் சூரியனிருக்கக் கன்னியிற் புகரிருந்தால் நீசராசனுவான், எ-று.

அரசேமூன்றிலீரைந்திலாறி லிருக்கச்சென்மாதி
கிரசாயங்கல்லோர்தனைப்பார்க்கச் செகத்துக்கதிபனுகுமிவன்
சரமாந்துலாத்திற்புகர்மேடத்தன்னிற் செவ்வாய்கடககுரு
பொரவேயிருக்கத்தனைபதியாய்ப் பொருந்துமரசன்சுவ்வதே.

(இ-ள்.) மூன்று, பத்து, ஆறு, இவ்விடங்களில் லக்கினதிபதி யிருக்கவும், அதனை சுபக்கிரகங்கள் பார்க்கவும் செகத்தரசனாவான். சராசியாகிய துலாத்தில் சுக்கிரனும், மேடத்தில் அங்காரகனும், கடகத்தில் குருவுமிருந்தால் செல்வத்தோடு கூடிய அரசனுவான், எ-று. 328

கன்னிரிஷபஞ்சென்மமதாய்க் காலன்மதியோராயிருக்க
கொண்டுபரிதிசிங்கத்திற் கடாக்கிதனிற்குருவிருக்க

மன்றுகும்பச்சனிவரினும் லக்காலராஜயோகபலன்
மன்றேயுள்ளபூபதியாய்ப் பாருக்கரசாயிருந்திடுவான்.

(இ-ள்.) ரிடபலக்கினம் சென்மமாகவும் அதில் சந்திரனிருக்கவும், சூரியன் சிங்கத்திலும், விருச்சிகத்தில் குருவும் கும்பத்தில் சனியுமிருந்தாலும் [ராஜ]யோகமாம். பலன்: புராதன அரசனும் பூமிக்கிறையுமாவான், எ-று. 329

இடமாஞ்சென்மமகரமதாய்ச் செப்புங்காரிதானிருக்க
அடைவேசெவ்வாய்மதிகூடி யானகடகத்துறுசேய
தொடர்சேர்பரிதிசிங்கத்திற் சொல்லும்புதன்மிதுனத்திற
வடிவார்தேவிற்புகரிருக்க வாழுமர்க்கத்தரசனிவனே.

(இ-ள்.) சென்மலக்கினம் மகரமாகவும், அதில் சனியும், அங்காரகனும், சந்திரனும் கூடிக் கடகத்திலும், சூரியன் சிங்கத்திலும், புதன் மிதுனத்திலும், துலாவில் சுக்கிரனுமிருந்தால் அர்க்கத்திற்கரசனுவான், எ-று. 330

இவனேசன்மகான்கொண்ட தெல்லாக்கிரகமிருந்திடவே
அவனேசாங்கியயோக னதற்குப்பலன்கள்சவுரியவான்
தவமெய்ஞ்ஞானிபாக்கியவான் றன்னிற்குணவானுமென்றே
நவமாயுரைத்தார்சோதிடத்தோர் நறைமென்கமலமுகத்திருவே.

(இ-ள்.) லக்கினம் நான்கு ஒன்பதாமிடங்களில் எல்லாக்கிரகங்களு மிருக்கச் சாங்கியயோகமாம். பலன்: சௌரியவானும், தவசியும், மெய்ஞ்ஞானியும், பாக்கியவானும், குணசாலியுமாவானென்று புதுமையாகச் சோதிடர்கள் சொன்னார்கள் பெண்ணே!, எ-று. 331

உருவேயிரண்டாம்வீடுமுதற் செறியுமனைக்கொன்றென்றுநீக்கு
வரவேகிரகந்தானிருக்க வாழுஞ்சமுத்திரயோகபலன்
பொருவேசேனைக்கதிபதியாய்ப் பொருந்தும்பாரியனேகருளன்
தருபொன்கீர்த்திக்கதிகாரி தனவானரசன்வெகுபிள்ளை.

(இ-ள்.) இரண்டாவது வீடு முதற்கொண்டு இடையே ஒவ்வொரு வீடு விட்டுக் கிரகங்களிருந்தால் சமுத்திரயோகமாம். பலன்: சேனைபதியும் அநேக மனைவியருள்ளவனும், பொன் கீர்த்தி இவைகட்கதிகாரியும், தனவானும் அரசனும், வெகு பிள்ளைகளைப் பெறுவோனுமாவனும், எ-று. 332

பிள்ளையனுஷமகபதியின்பின் பாமவீட்டைத்தனிற்சேயும்
அன்றுஞ்சென்மமொழுகத்திற் சூழ்க்கேதுபரிதியுறவதனைத்
தொள்ளுமதியன்குருவேக்கிற் செறிமூன்றைந்திற்கிரகமிளா
தன்னிலிருக்கிற்யோகனைப்போற் றனத்துக்கதிபனெனச்சொல்லாய்,

(இ - ள்.) அநுடம், அஸ்வனி, அவிட்டம் இவைகளின் கடைப்பாதத்தில் அங்காரகனும், சென்மத்திலும் பத்தாமிடத்திலும் சூரியனுமிருக்க, அவர்களைச் சந்திரனும், குருவும் பார்த்தாலும், மூன்றிலும் ஐந்திலுங் கிரகமில்லா திருந்தாலும் குபேரன்போலும் தனபதியாவான், எ-று. 333

செல்லுஞ்சென்மமைந்தனிற் றேரோட்டிதேபரிதிதானிருக்க
வெள்ளுநான்கேழ்பத்ததனில் விரும்பிச்செவ்வாய்மேவிடினும்
ஒல்லும்லாபம்பன்னிரண்டி லுடனேபலனைப்புகர்மேவ
நல்லவிந்திரயோகமென நவில்வர்தமிழுக்கினியோர்கள்.

(இ - ள்.) லக்கினத்தில் ஐந்திலும் சூரியனிருக்க, நான்கு, எழு, பத்து, இவைகளில் அங்காரகனிருந்து லாபம் பன்னிரண்டு இவைகளில் சுக்கிரன், பலவானுயிருந்தால், இந்திரயோகமென்று தமிழ்நூல் வல்லவர் சொல்லுவர், எ-று.

இனியமகரஞ்சென்மமதா யிருக்கச்செவ்வாயதனிலுச்சம்
தனிலேநவத்தினபன்னிரண்டிற் றனித்தேபுகழுந்தானிருக்க
இனமாமிந்துகதிர்கூடி யேழினிற்கப்பிரபலமாய்த்
தனமேதிரளாயார்ச்சித்துச் சம்மானத்துமானபரன்.

(இ - ள்.) சென்மலக்கினம் மகரமாகவும், அங்காரகன் அதனின் உச்சனுகவும், ஒன்பதிலும் பன்னிரண்டிலும் சுக்கிரன் தனியாயிருந்து சந்திரனும், சூரியனுங்கூடி எழிலிருக்க அதிக செல்வமும், கப்பலுடையவனுமாவான், எ-று. 335

ஆனபரிதிசோமனிவ ரமர்ந்துசுபாங்கிசமேறித்
தானபலவானுகியிவர் தக்கவியத்திலடையாமல்
ஆனவுச்சவாங்கிசையி லமர்ந்தேசனியைமிகநோக்கில்
ஈனமறவேதிக்குபலவியைக் கின்புறுவன்சந்நியாசி.

(இ - ள்.) சூரியன் சந்திரன் இவர்கள் சேர்ந்து சுபாங்கிசத்திலேறிப் பலவானுய்ப் பன்னிரண்டாமிடத்தில் சேராமல் உச்சாங்கிசையிற் சேர்ந்து சனியை முழுப்பார்வையாகப் பார்த்தால், பலதேசங்களிலுஞ் சஞ்சரிக்கும் சந்நியாசியாவான், எ-று. 336

சீலலக்கினுதிபதி செறியுஞ்சுக்கிரன்றனுகி
நாலிற்காரிநின்றமனை நாடிச்சுக்கிரன்றனேக்க
வாலசன்னியாசியெனமகிழ்ந்தே விதேசசஞ்சாரஞ்
கோலுங்கொண்டேதிரிவனெனக் கூறுங்கணிதவல்லோரே.

(இ - ள்.) லக்கினுதிபதி சுக்கிரனுயிருந்து அவனுக்கு நாலில் சனியிருக்கும் வீட்டைச் சுக்கிரன் பார்த்தால் பால்ய சந்நியாசியாவான். திரிதண்டமேந்தி பலதேச சஞ்சாரஞ் செய்துகொண்டு திரிவான். எ-று. 337

வல்லோர்சென்மச்செம்பாம்பு வரவேயதற்கேழ்சாமனுற
செல்லுஞ்சோமற்கெட்டதனில் வெய்யோன்சமத்திரயோகபலன்

சொல்லுங்கிராமபுரந்தரனுந் துரையாய்லந்துபாலகனும்
நல்லவருவுமிருபதின்மேனடக்கும் யோகமிருமுன்றே.

(இ - ள்.) சென்மத்தில் கேதுவிருக்க அதற்கேழில் சந்திரனிருக்க அவனுக்கெட்டில் சூரியனிருக்க சமத்திரயோகமாம். பலன்: கிராமாதிகாரியும் துரையும், ரட்சகனும், இருபது வயதுக்குமேல் அநுலகுகும் யோகத்தை யநுபவிப்பவனுமாவான், எ-று. 338

நடத்தும்பத்துக்கதிபதிபு நான்கிலிருக்கநாதி
மிடத்தபத்திலுடனிற்க லக்கினுதிபசமுறில்
அடுத்தசாபயோகபலன் னினைகருந்தேனக்கதிபதியாம்
கொடுத்தனாதன்மீதிற கூறும்யோகமேம்தாண்டே.

(இ - ள்.) பத்தாமிடத்தான் நாலிலிருக்கவும் நாலாமிடத்தான் பத்திலிருக்கவும், லக்கினுதிபதி உச்சமுற்றால் சாபயோகமாம். பலன்: அநேக சேனைக்கதிபதியும், இருபத்தொன்று வயதுக்குமேல் எழுவருஷ யோகத்தை யநுபவிப்பவனுமாகலாம், எ-று. 339

ஆன்றுறுவேழுதன்மீதி லானசக்கரயோகபலன்
நீண்டவிவனுள்ளளவு நிறைந்தேபதந்திற்கருநாகம்
பூண்டபத்தாமிடத்தபதி பொருந்துசன்மந்தனிலிருக்க
வேண்டுஞ்சென்மன்பாக்கியத்தில் விளங்கிற்றேசாதிபதியாவன்.

(இ - ள்.) லக்கினத்திற்குப் பத்தாமிடத்தில் இராகுவும் பத்தாமிடத்தான் சன்மத்திலுமிருந்தால் சக்கரயோகமாம். பலன்: இருபத்தொரு வயதுக்கு மேல் ஆயுளுள்ளவரைக்கும் இருக்குமாம். அன்றி சென்மாதிபதி பாக்கியஸ்தானத்திலிருந்தால் தேசாதிபதியாவான், எ-று. 340

ஆறுன்பத்தாதிபனிருந்த லங்கிசாதிசென்மத்தேதான்
மேவும்பத்தையிருவோரும் விரும்பநாகயோகபலன்
கோலாம்வித்தைதனவானுங் கூறின்வயதுபதினுறின்
பூவுக்கரசாய்மூவாண்டு பொருந்திடக்குந்தானிதுவே.

(இ - ள்.) பத்தாமிடத்தானிருந்த அங்கிசாதிபதியும் லக்கினுதிபதியும் பத்தாமிடத்தை யிருவோரும் விரும்பநாகயோகமாம். பலன்: அரசனும் வித்தையும் தனவானுமாவான் வயது பதினுறுக்குமேல் பூமிக்கரசனுய் மூன்றுவருடம் அரசாட்சி செய்வான், எ-று. 341

இதுவேகுருவுமொன்பதினி லிருக்கவொன்பதினுதிபதி
அதிசேரமிலிருந்திடவேசோமன் சுபரோடேகூடிறினும்
சுதிசேர்நாகயோகபலன் கண்டவயதுபதினுறின்
புதிதாய்முன்றுடனாவுபிகப் பொலிந்துநாடுதேடுவனே.

(இ-ள்.) குரு ஒன்பதாமிடத்திலும், ஒன்பதாமிடத்தான் எழிலும், சந்திரன் சுபக்கிரகங்களுடன்சேர்ந்து எங்கேயாயினுமிருந்தால் காளயோகமாம். பலன்: பதினைந்து வயதுக்குமேல் மூன்றுவருடம் வரைக்கும் ஐந்நூறுபொன் தேடுவோனாவான், எ-று. 342

கெடும்லாபன் றனபாவத் திறல்சேரதிபனுச்சமெனின்
நாடுமைந்தாம்வீட்டாதி தன்னுத்தனத்தைப்பார்த்திடவே
கூடும்பெரியோகபலன் குதிரையானைகார்தேரும்
ஊடுமாறுதன்மேலே யொக்கும்வருஷகாலனாவே.

(இ-ள்.) லாபாதிபதியும் [illegible] ஸ்தானத்திலிருந்து தலைவனும் உச்சர்களாயும், ஐந்தாமிடத்தான் தனஸ்தானத்தைப் பார்க்கிலும், பெரியோகமாம். பலன்: ரதகஜதுரகபதாதி சேனைகளோடு முப்பத்தாறு வயதுக்குமேல் நான்கு வருடம் வரைக்கும் ஆளுவான், எ-று. 343

அளவேவியான்பான்றனிற்புகரு யமர்த்தியோன்பானுதிபதி
வளமாமதிக்கேயோன்பதிலில் வந்தாற்பதுமயோகபலன்
தளமேமடரசர்புடைசூழத் தாழ்ப்பாரண்டகத்திலிருக்
குளவாந்தானமைம்பதின்மே லொங்கும்வருஷமைந்தனவே.

(இ-ள்.) ஒன்பதாமிடத்தில் சுக்கிரனும், ஒன்பதாமிடத்ததிபன் சந்திரனுக் கொன்பதிலும் வந்தால் பதுமயோகமாம். பலன்: ஐம்பது வயதுக்குமேல் ஐந்துவருடம் வரைக்கும் தனங்கள் சூழ வீட்டிலிருந்தே உலகமாண்டிருப்பவனுதலாம், எ-று. 344

ஓங்கும்லக்கினாதிபதி யுற்றவீட்டதிபதிதான்
பாங்காய்க்கேந்திரந்திரிகோணம் பற்றிமூலத்திரிகோணம்
தாங்குமுச்சனானுந் தக்கபுரத்துக்கதிகாரம்
வீங்கும்பார்வமேழுத்தின் மேலொன்பானுமாண்டினதே.

(இ-ள்.) லக்கினாதிபதியிருக்கின்ற வீட்டுக்குடையவன் கேந்திரம், திரிகோணம், மூலத்திரிகோணம், பெற்று உச்சம் இவ்விடங்களிலானால் முப்பத்தைந்து வயதுக்குமேல் ஒன்பதுவருடம் வரைக்கும் ராஜாதிகாரஞ்செய்வன், எ-று. [illegible]

உளதேலக்கினாதிபதியுற்ற வீட்டுக்குடையோனும்
அளவாமதிவீட்டதிபதியுச்சனாகிச் சோமனோலேழிற்
களவேகேந்திரமேறிவரக் காகளயோகத்திரவியவான்
வளவனுகுனாலேழ்மேல் வயதாளளவும்ரசவாதி.

(இ-ள்.) லக்கினாதிபதியிருக்கின்ற வீட்டுக்குடையவனும் சந்திரன் வீட்டுக்குடையவனும் உச்சர்களாகிய சந்திரன் நாலிலும், எழிலும், கேந்திரத்திலும், ஏறிவந்தால் காகளயோகமாம். பலன்: திரவியனுமாவான், இருபத்தெட்டு வயதுக்குமேல் அரசனாகி ஆயுள்வரைக்கும் இரசவாதியாயிருப்பன், எ-று. 346

வாதிரண்டாமைந்தாதி வருமேபாக்கியாதிபனும்
ஓதுஞ்செனமத்தனிலிருந்து யோங்குமரசன்பார்வையுறில்
சதுதாத்திரியோகபலன் [illegible]னைவெருதேசாதிபதி
நீதிநடத்துமபன்னிருமே லாறும்வயதோராறனவே.

(இ-ள்.) இரண்டு, ஐந்தாதிபர்களும், பாக்கியாதிபனும் செனமத்திலிருந்து குருவின் பார்வையைப்பெற்றால் தாத்திரியோகமாம், பன்னிரண்டு வயதுக்கு மேல் ஆறு வருடம் வரைக்கும் வெகு தேசாதிபதியாய் நீதி நடத்துபவனுவான், எ-று. 347

வயதாறெட்டுமேன்மூன்று வருஷமி[illegible]ங் யோகபலன்
சயலாபாதியத்துச்சன் சங்கன்கூடியிருந்தமனை
நயவீட்டுடையோன்பத்தேழி னான்கி[illegible]மனமர்ந்திடவே
செயமாயரசர்க்கதிபதியாஞ் செப்பு[illegible]னே.

(இ-ள்.) லாபஸ்தானத்தில் உச்சனு[illegible]ராகுங் கூடியிருந்து, அவ்வீட்டுக்குடையவன் பத்து, எழு, நான்கு, [illegible] இவ்விடங்களிலிருந்தால் நாற்பத்தெட்டு வயதுக்குமேல் மூன்று வருடம் வரைக்கும் மிருதங்க யோகபலனுகிய அரசர்க்கதிபதியாதல், ஞானி, தனவானாக விருப்பன், எ-று. 348

செப்பும்லக்கினவர்க்கேற்ற செறிந்தேயிருக்கச்செனமாதி
ஒப்புஞ்சுபர்களுடன்கூடி யுறுஞ்சனமத்தைத்
தப்பாமுழுநோக்காகவினு சக்கிரயோகமாமியவான்
அப்பாலைம்பானைந்தின்மே லானவருஷகா[illegible]வெளித்தே.

(இ-ள்.) செனமாதி லக்கின வர்க்கமேறி சுபக்கிரகங்களுடன் சேர்ந்து சனம லக்கினத்தை முழுப்பார்வையாகப் பார்த்தால் சக்கிரயோகமாம். பலன்: ஐம்பத்தைந்து வயதுக்குமேல் நான்கு வருடம் வரைக்கும் சவுக்கியமாயிருத்தலாம், எ-று. 349

இன்தாங்கன்னிசெனமத்தா யிரண்டோடொன்பானதிபதி
தனியேசுங்கனிருந்தங்கி சுத்தோனுமரசனுடன்கூடி
மனுவாந்தனபாவத்திருக்க வயதுபதினறுதன்மேலே
கனியார்சீவனுள்ளளவு நடக்குஞ்சாம்ராச்யயோகம்.

(இ-ள்.) செனமலக்கினம் கன்னியாய் இரண்டு ஒன்பதாமிடத் ததிபர்களும் சுக்கிரனிருந்த அம்சத்தோனும் குருவுடன் கூடி இரண்டாம் வீட்டிலிருக்கப் பதினறு வயதுக்குமேல் உயிருள்ள வரைக்கும் சாம்ராச்சிய யோகம் நடக்கும், எ-று. 350

யோகமாதியந்தமனு முயமாதிருந்தக்கொதிபதி
பாகசெனமத்திரிகோணம் பத்திலிருக்கச்சேயுச்சம்

வாகுபெறவேபத்தாதி வந்தேறியிருக்கத்தூர்க்காதி
போகமுடனேவனங்களுக்குந் தனியேயரசாயிருந்திடுவான்.

(இ-ள்.) லக்கினத் தங்கிசாதிபதி சென்மம் திரிகோணம் பத்து இவ் விடங்களிலிருக்க அங்காரகன் உச்சம்பெற பஞ்சமத்திபன் ஏழில் வந்திருக்க ஆத்யந்த யோகமாம். பலன்: தூர்க்கையிலும் தேவதைகளும் வாழத்தக்க வனங்களுக்கு அரசனாயிருப்பன், எ-று. 351

பொருந்திவெய்யோன்பாக்கியத்திற் புகத்துடனுன்காதிபதி
இருந்திடிருக்கப்பத்தாதி சேர்ந்தோரிரண்டேழிலுற
வருந்தாத்தூர்க்காதித்திட[illegible]யோக வையமுழுதுமரசாளத்
தெரிந்தேதயோகபலனென்று செப்புங்கனிநமாதவனே.

(இ-ள்.) சூரியனனவன் சுகஸ்தானத்திற் போக அவனோடு நான்காம் வீட்டோன் சேர்ந்து இருக்க [illegible]ன் பத்தாம் வீட்டோன் சேர்ந்து இரண்டி லாவது ஏழிலாவது இருக்க குரு [illegible]திபதியாய் உலகமுழுதும் அரசாள்வா னென்று கணிதநூல் வல்ல மா[illegible] சொல்லுவர், எ-று. 352

மாதேநான்காமாதிபதி வந்தேயிரண்டாமாதியுடன்
கூடிநதடிப்பாக்கியத்தில் விரைந்தேயிருக்கப்பத்தாதி
போதுமிரண்டிற்பலவாறுய் பொருந்தியிருக்கலாபாதி
ஓதும்லக்கினாதிபதி யுச்சங்கோடிலைசுவரியன்.

(இ-ள்.) பெண்ணே! நான்காம் வீட்டோன் இரண்டாம் வீட்டானோடு கூடிப் பாக்கியஸ்தானத்திலிருக்க பத்தாம் வீட்டோன் இரண்டாமிடத்தில் இருந்த பலசாலியாயிருக்க லாபாதிபதியும் லக்கினாதிபதியும் உச்சரீனாயிருக்க ஐசுவரியனுவான், எ-று. 353

சாவேசென்மந்திரமாத் தங்கனிருக்கச்சென்மாதி
வரவேதிரிகோணத்துற்றான் மன்னனுருகுஞ்சிலபூமிக்
குரவோன்சேனைக்கதிபதியா மொருமைஞானி தூதகாதி
இரப்போர்தமக்கும்வேதியர்க்கு மீவான்சிவபரியந்தம்.

(இ-ள்.) மகரமே சென்மமாகவும் அ[illegible]த்தில் சந்திரனிருக்கவும், சென்ம லக்கினாதிபதி திரிகோணத்திற்றான் அரசனுவன். அன்றி, சேனைக்கதிபதியும், ஞானியும், தூதகாதிபதியும், தருமிஷ்டியும், ஐசுவரியத்தை இரப்பவர்க்கீவோனு மாவான், எ-று. 354

அந்தகான்காமிடந்தனக்கு மதிபனுச்சவீட்டோரன்
வந்துமைந்தாமதிபனுடன் மகிழவாய்க்கூடப்பாக்யாதி
மூந்துஞ்சமரயோகமென மொழியும்பலன்கள்சேனாதி
சொந்தவருஷமைம்பதின்மேல் முலைங்குவாசனுவானே.

(இ-ள்.) நான்காமிடத்தோன் உச்சனாகவும், அந்த உச்சவீட்டோன் ஐந் தாம் வீட்டோனோடு கூடிப் பாக்கியாதிபத்திலிருந்தால் சமர யோகமென்று சொல்லுவர், அதன் பலன்: ஐம்பது வயதுக்குமேல் அரசனுவான், எ-று. 355

ஆவாரைந்தாமதிபதியு மன்[illegible]பத்தாதிபனும்
போவாரொன்பான் றனிலிருக்கப் [illegible]ருந்தும்பத்தாமதிபதினைந்தில்
கோவேயாருஞ்சிவயோகம் [illegible]திரையாமினைகேரும்
மேவும்வெகுதேசாதிபதி விளங்குபரமாயுள்ளவளும்.

(இ-ள்.) ஐந்தாம் வீட்டோனும், லாபாதிபதியும் ஒன்பதாமிடத்தி லிருக்க பத்தாம் வீட்டோன் ஐந்திலிருக்கச் சிவயோகமா[illegible] நால்வகைச் சேனைகளுடனே பூமியையாளும் அரசனுவான், எ-று. 356

உள்ளபத்தாமதிபதியு மொன்பானுக்கிச[illegible]னைறி
மென்னயிரன்[illegible]த்திலுற விரும[illegible]ன்றனருசேரில்
கன்னவிஷ்ணு[illegible]லன் கதிக்கவா[illegible]
கொள்ளும்லக்ஷ்மீ[illegible]ான்றேடிக் கு[illegible]ருப்பனீரேழ்மேல்.

(இ-ள்.) பத்தாமிடத்தோன் ஒன்பதாமிடத்தோனது அம்சத்தேறி இரண்டாமிடத்திலிருக்க ஒன்பதாமிடத்தோன் இரண்டாம் ஸ்தானத்தைச் சேர்ந்தால் விஷ்ணுயோகமாம். பலன், மேலான அரசர்களெல்லாம் தன்னடி தொழ பதினேழு வயதுக்குமேல் லக்ஷ்மீயான் சம்பாதித்திருப்பன், எ-று. 357

மேலாம்பாக்யகேந்திரத்தின் மேவிக்குருவும்லாபத்தில்
தேனுங்கேந்திரச்சுக்கிரனுங்கிட்டி யிருவர்மனைமாறிச்
சாலவிருக்கவியன்யோகந் தனவான்கீர்த்திப்பிரதாபன்
பாலாய்ளரொன்பதின்மேலும் வயதாள்[illegible]மன்னரனும்.

(இ-ள்.) பாக்கியகேந்திரத்தில் குருவும், லாபகேந்திரத்தில் சுக்கிரனும் இருந்து இருவர் வீடுகளிலும், மாறி பரிவர்த்தனமாயிருக்க பிரமயோகமாம், அதன்பலன் தனவானும், கீர்த்திப்பிரதாபனுமாயிருந்து ஒன்பது வயதுக்குமேல் ஆயுள்வரைக்கும் அரசனாயிருக்கலாம், எ-று. 358

மன்னுபத்தாதிபனிருந்த வங்கிசாதிபதிபத்தில்
மின்னுமுச்சமாயிருக்க விலக்கினதியுடன்கூடச்
சொன்னகவுரியோகபலன் முரையாக்கீர்த்தியுதாரகுணன்
பொன்னுமணியுமாறுநிற் பொருந்துமாண்டுபன்னிரண்டே.

(இ-ள்.) பத்தாம் வீட்டோனிருந்த அம்சாதிபதி பத்திலேயே உச்சமா யிருக்கவும் இலக்கினாதிபதியோடு கூடவும் கவுரியோகமாம். அதன்பலன் முப்பத் தாறு வயதுக்குமேல் பன்னிரண்டு வருடம் வரைக்கும் துரையும், உதாரகுண னும், பொன்னுமணியும் உண்டாயிருக்கலாம், எ-று. 359

வையபாக்கியாதிபதியிருந்த வங்கிசையோனொன்ப
தாயவிச்சனோந்தாதி தொடர்ந்தேகூடியுறநோக்கக்
காயலக்ஷ்மியோகபலன் கனத்ததுரையாய்த்தனவானுய்ப்
பாயும்பரியுங்காற்பதின்மேற் படைப்பன்பத்தாண்டிவன்பாரில்.

(இ - ள்.) பாக்கியாதிபதியிருந்த அங்கிசத்தோன் ஒன்பதிலும், அவ்வீட்டுக் குச்சன் ஐந்தாம் வீட்டோனுடனிருந்தாலும் பார்த்தாலும் லட்சுமியோகமாம். அதன் பலன்: காற்பது வயதுக்குமேல் பத்துவருடம் வரைக்கும் துரையாய்த் தனவானுய் அரசபுரிவானும், எ-று. 360

பாரிலாபாதியனிருந்த வங்[illegible]ாதிபத்தில்
வுருங்கோளுமுச்சமதாய்ப் [illegible]ாக்[illegible]ாதியுடன்கூடப்
பெரும்பாரதியோகபலன் [illegible]ியகண்ணான்சிற்றானைகள்
நாரிவெகுவாமறுநான்மே லுதிப[illegible]பதெட்டினில்யோகம்.

(இ - ள்.) லாபாதிபதியிருந்த [illegible]ங்கிசாதிபதி லாபத்திலும், அவ்விடத்ததிபதி உச்சமாய்ப் பாக்கியாதிபதியுடன்கூடச் சரஸ்வதி யோகமாம். அதன்பலன்: இருபத்துநான்கு வயதுக்குமேல் எட்டுவருடம் வரைக்கும் பெருங்கண்ணன், சிற்றாணுகிய இவனுக்கு கல்வி யோகமாம், எ-று. 361

யோகமூன்றுலாபாதி யொருமித்தேகூறவேழாதி
வாகுபன்னிரண்டினிற்கவரசன் பனிரண்டாதிபர்
ஏகபாக்கியந்தன்னிலுறவிருவே கலாநிதியோகபலன்
போகியரசன்மதிமந்திரியொருந்தும் பதினெட்டினாதே.

(இ - ள்.) மூன்றாமிடத்தோனும் லாபஸ்தானதிபதியும் சேர்ந்து ஏழாமிடத்திலிருக்க ஏழாம் வீட்டோனும் பன்னிரண்டிலுமிருக்க, குருவும், பன்னிரண்டாம் வீட்டோனும், முதல் வீட்டினும் பாக்கியஸ்தானத்திலிருக்க கலாநிதியோகமாம். அதன் பலன் பதினெட்டு வருடம் அரசன், மந்திரி இப்படிப்பட்ட வாழ்க்கை பொருந்தி யிருப்பதாம், எ-று. 362

உன்னதசன்மாதிலாபத்திலுறவே யந்தலாபாதி
தன்னந்தசன்மத்தனிலிருக்கத் தனத்தானத்தான்பத்திலுறக்
கொள்ளும்பத்தோனிரண்டுறவே கொண்டுசன்மத்திரமாக
வள்ளலிந்திரயோகமெனவுழைத்தும் பன்னிரண்டுரைப்பாம்.

(இ - ள்.) லக்கினுதிபதி லாபத்திலும், லாபாதிபதி லக்கினத்திலும், தனுதிபதி பத்திலும், பத்தாமிடத்தோன் இரண்டிலும், இருந்து சென்மம் ஸ்திரராசியானல் இந்திரயோகமாம், எ-று. 363

உரைப்பாமதுராதல்லசனமுயர்ந்த அர்க்கத்ததிசதிபதியாய்ப்
பரப்புநிறைந்தவெகுபூமிபதியிற் காசாய்ப்பேரிகையும்

இரைக்குமல்லரிவாத்தியமு மினியதனவான்ஸ்திரீலோலன்
நரைக்குமுன்னையாறுதி னல்கும்வருஷமெட்டாமே.

(இ - ள்.) இதன் பலன் முப்பத்தாறு வயதுக்குமேல் எட்டு வருடம் வரைக்கும் நல்லவாக்கும், அர்க்கத்ததிபதியும், வெகு பூமிக்கதிபதியாய் பேரிகை மல்லரி வாத்தியமு மொலிக்க விருப்பவனும், ஸ்திரீலோலனுமா யிருத்தலாம், எ-று. 364

ஆமேதேனு[redacted]னமா பரசன்சங்சனிருவருறத்
தாமேலாபப்புதனுச்சத் தரிக்குமதனயோகபலன்
காமர்வனிதையிச்சிக்குங் கருணையுள்ளாசவுந்தரியன்
தோமின்மனோகரமந்திரியாய்த் துலங்கு[illegible]நுபான்மேலெட்டே.

(இ - ள்.) விருச்சிகம் லக்கினமாய்க் [illegible], சுக்கிரனும், அதிற்பொருந்த புதன் லாபமாகிய உச்சத்திலுமிருக்க மதன[illegible]யோகமாம். அதன் பலன்: இருபது வயதுக்குமேல் எட்டுவருடம் வரைக்கு[illegible]அநேக பெண்கள் இச்சிக்கத்தக்க சௌந்தரியனும் குற்றமற்ற மந்திரியு[illegible] யிருப்பதாம், எ-று. 365

எட்டுவரும்பதினைந்தி னிதன்மேல்யோகங்காளிதியாம்
மட்டேசென்மஞ்சராங்கிசத்தில் வரவேயோன்பான்சென்மமுறத்
தொட்டநான்கோனரசனுடன் றலங்கவைந்திற்பத்தாதி
ஒட்டியுருக்கலாபத்தி லோங்குமாசன்வெகுதேசம்.

(இ - ள்.) சென்மலக்கினம் சராம்சிசமாகவும், ஒன்பதாமிடத்தோன் சென்மத்திலும், நான்காமிடத்தோன் குருவுடன்கூடி ஐந்திலும், பத்துக்குடையவன் லாபத்திலுமிருக்க களாநிதியோகமாகும். அதன் பலன்: பதினைந்து வயதுக்கு மேல் எட்டுவருடம்வரைக்கும் வெகுதேசத்தை யரசாள்வன், எ-று. 366

தேசக்குருவுக்கொருமூன்றிற் செறிந்தேசுக்கன்றனிருக்க
வாசஞ்சுக்கற்கொன்பதினின் மதியானுறவேபத்தாதி
தேசநான்கிலுறத்தனவா னிருபனேழுவொன்பான்
போசனெனமென்மூவாண்டு பொருந்துநகரநாட்டரசே.

(இ - ள்.) குருவுக்கு மூன்றாமிடத்தில் சுக்கிரனும், சுக்கிரனுக்கு ஒன்பதில் சந்திரனும், பத்துக்குடையோன் நான்கிலுமிருக்க, இருபத்தேழு வயதுக்கு மேல் மூன்றுவருடம் வரைக்கும் நகரமாளும் அரசனயிருப்பன், எ-று. 367

அரசேலாபமிரண்டோன்பா னுதிபரவர்தம்மனையிற்
சிரசாயிருக்கமால்யோகஞ் சேனைக்கதிபன்பூபாலன்

பொரவேகீர்த்திக்கதிபதியும் பூமிக்கரசனமைச்சனுமாய்த்
தரைசேர்முப்பத்தாறின்மே லெட்டுவருஷந்தனஞ்செயனே.

(இ-ள்.) லாபம், இரண்டு, ஒன்பது இவ்விடத்ததிபர்கள் அவ்வவர்கள் வீட்டில் ஆகதியாயிருக்க மால்யோகமாம். அதன் பலன்: சேனாதிபதியும், பூவரசனும், கீர்த்திமானும், மந்திரியுமாய்ப் பின்னர் முப்பத்தாறு வயதுக்கு மேல் எட்டுவருடம் வரைக்கும் தனஞ்சயனைப் வாழ்வான், எ-று. 368

செயமேமேஷஞ்சென்மமதாய்ச் செங்கதிருறவேசனிபத்தில்
தயவாயிருக்கவொன்பதனில் குருவுமதியுந்தானுறவே
நயமேவிசுவாவசுயோக நடக்குந்தனவான்றேசாதி
பயமுநடத்தும்பதினொன்மேல் கண்டவருடம்பதினொன்றே.

(இ-ள்.) ஜன்மலக்கினம் மேஷமாய் அதில் சூரியனிருக்க, சனிபத்திலும் குருவும் சந்திரனும் ஒன்பதிலுமிருக்க விஸ்வாவசுயோகமாம். அதன் பலன்: தனவான், தேசாதிபதி, இது பதினொன்று வயதுக்குமேல் பதினொருவருடம் வரைக்கும் நடப்பதாம், எ-று. 369

அஞ்சேபாக்கியாதிபதி யிருந்தவங்கிசாதிபதி
துஞ்சாதுச்சமவனுடனே சொல்லும்லக்கினாதிபுற
விஞ்சாநாள்யோகபல னெல்லார்க்கரசன்ஸ்திரீலோலன்
வஞ்சமற்றேகுருபத்தி வமுத்துமாலேழ்பதினெண்ணே.

(இ-ள்.) பாக்கியாதிபனிருந்த அங்கிசாதிபதி உச்சனுடன்கூடி லக்கினாதிபதியோடிருக்க காளயோகமாம். அதன் பலன்: எல்லாருக்கும் அரசனும் ஸ்திரீலோலனும் குருபத்தி புள்ளவனுமாக எழுபத்திரண்டு வயதுக்குமேல் பதினெட்டு வருஷம் வரைக்கும் இருப்பதாம், எ-று. 370

எண்ணும்லக்கினங்கிசையில் பத்தாமிடத்ததிபனிருக்க
ஒண்ணும்பத்தாமங்கிசையி லுறசன்மாதிபரசனுடன்
கண்ணும்விவரையவர்பார்க்க காடுங்கார்முகயோகபலன்
பண்ணுஞ்ஞானிமூவொன்பான் பாரிலெட்டுவித்தையுளான்.

(இ-ள்.) லக்கினத்தங்கிசையில் பத்தாமிடத்தானிருக்க லக்கினாதிபதி பத்தாமங்கிசையிலிருக்கவும், சன்மாதிபதியும் குருவும் ஒருவருக்கொருவர் பார்க்கக் கார்முகயோகமாம். அதன் பலன்: ஞானியாவான் இருபத்தேழு வயதுக்கு மேல் (எண்வித வித்தையுள்ளவனவான்.) எட்டு வருடம் வரைக்கும் வித்தையை அப்பியசிப்பவனவான், எ-று. 371

வித்தைலாபத்ததிபனொன்றின் மேவலவைத்தமாதிபதி
புத்திலாபத்திருந்திடவே புகருங்கோன்மதியுடனே

பத்திலிருக்கமகபதிபோற் பாரைமுழுதமரசாள்வான்
உத்தயோகியேழாறில் யோகநடக்கும்பதினொன்றே.

(இ-ள்.) லாபாதிபதி ஐந்திலும் ஐந்துக்கதிபதி லாபத்திலுமிருந்து சுக்கிரனும் நான்காம் வீட்டுக்குடையவனும், சந்திரனும் கூடி எங்கிருந்தாலும் தேவேந்திரன்போல் உலகத்தையெல்லாம் அரசாள்வான். யோகியுமாவான். நாற்பத்திரண்டு வயதுக்குமேல் பதினொரு வருஷம் வரைக்கும் நல்லயோகம் நடக்கும், எ-று.

பதியாமரசன்மதிகுரும் புகர்மூவர்தனத்துறவே
விதியாம்பாக்கியாதிபதி விரும்புநோக்கமுற்றிடவே
சதிர்சேர்யோகங்கேதாரி காணும்பதாதியர்நிபரி
அதிசேனைபாரிரண்டான்ம் றெழுபத்தேழும்பிரபலமே.

(இ-ள்.) குரு சந்திரன் சுக்கிரன் இம்மூவரும் இரண்டாம் ஸ்தானத்திலிருந்து பாக்கியாதிபதியின் பார்வையைப் பெற்றால் சூரியயோகமாம். ஐம்பத்திரண்டு வயதுக்குமேல் ஏழு வருஷம் வரைக்கும் சதுர்வித சேனைகளுடன் பிரபலனுய் அரசாள்பவனவான், எ-று. 373

பலமாம்பத்திற்கருநாகம் பத்தாமாதிசனியிருவர்
பலமாய்மூன்றிலுற்றிடவே பகருஞ்சண்டமாருதமாம்
தலமேதோறுந்தன்மங்க டானஞ்செய்புந்சாத்திரவான்
உலவியுண்பான்பராக்கிரமன் யோகம்பதினெந்தன்மேலே.

(இ-ள்.) பத்தாமிடத்தில் ராகுவும் பத்தாமிடத்தானும் சனியும், மூன்றிலுமிருந்தால் சண்டமாருதயோகமாம். அதன் பலன்: தலங்கள்தோறும் தருமதானங்கள் செய்பவனும், சாத்திரவாராய்ச்சி புள்ளவனும், உலாவி புண்பவனும் பராக்கிரமசாலியுமாவான். இந்த யோகம் பதினெந்து வயதுக்குமேலுண்டாவதாம், எ-று. 374

மேலேபாக்கியாதிபதி மேவுமங்கிசாதன்றான்
எல்லெவர்தாங்கிசையேறி யிருந்தவங்கிசத்தோனேனும்
தூலமந்தவங்கிசையிற் றுலங்குமுச்சனேனும்
சாலலக்கினதிகேந்திரத்திற் சுக்கிரனுடனேதானுறவே.

(இ-ள்.) பாக்கியாதிபதி யிருக்கின்ற அங்கிசவீட்டாதிபன் தன்னுடைய அங்கிசத்திலேறி யிருந்தாலும் அந்த வங்கிசத்தில் உச்சனேனும் லக்கினாதிபதி சுக்கிரனுடன் உறவாய்க்கூடி கேந்திரத்திருந்தாலும், எ-று. 375

வேறு

தானுறும்பலன்சன்பாரி சாதமாந்தனவான்யோகம்
மானனையார்க்குநேயன் மன்னவர்கப்பங்கட்டும்

தேனுமிகன்கொடையான்காத்திரி செயுளனல்லூண்கீர்த்தி
ஆனதோரிருபதின்மே லாயுளின்பரியந்தந்தான்.

(இ - ள்.) அதற்குப் பலன்கள் பாரிசாதம்போல் தனவான் யோகமாம், அவன் ஸ்திரீகட்கு நேயனும் இராஜாதிராஜனும் சாத்திரி செயுள்வலனும் நல்லூண்கீர்த்தி இவைகளும் இருபது வயதுக்குமேல் ஆயுள்பரியந்தம் அனுபவிப்பவனுமாவான், எ-று. 376

வேறு

அந்தலாபனும்நவமனைக் கொன்பானதிபன்சோமனுடன்
வந்தலாபத்தனிலிருக்க வஞ்சென்மாதிநோக்குறில்
விந்தகேதாரயோகபலன் மேவும்பேரிமல்லாரி
சொந்தகரிமாவிருபதாமூன் றுடன்மேல்வருடமிருபதாமே.

(இ - ள்.) லாபாதிபதியிருந்த வீட்டுக்கு ஒன்பதாம் வீட்டுக்கதிபன் சந்திரனுடன்கூடி லாபத்திலிருந்து லக்கினாதிபதியின் பார்வையைப் பெற்றால் கேதார யோகமாம். அதன் பலன்: இருபத்துமூன்று வயதுக்குமேல் இருபதுவருஷம் வரைக்கும் சதுர்வித சேனைகளோடு அரசுபுரிவதாம், எ-று. 377

துலங்கும்பாக்கியாதிபதி சூழ்ந்தங்கிசாதிபதியுச்சம்
இலக்கிரண்டினுற்றிடவே யிரண்டாமதிபாக்கியத்தில்
பலங்கள்கொடுக்குஞ்சுபயோகம் படிப்பனீதியரசாள்வன்
குலங்கள்போற்றுமையொன்பான் கூறுமிருபத்தோராண்டே.

(இ - ள்.) பாக்கியாதிபதியானவன் அங்கிசாதிபதியோடு சேர்ந்து உச்சத்திலும் இரண்டாமிடத்திலும், இரண்டாமிடத்தோன் பாக்கியத்திலு மிருந்தால் சுபயோகமாம். அது நாற்பத்தைந்து வயதுக்குமேல் இருபத்தொரு வருஷம் வரைக்கும் படிப்பிலும் நீதியரசாள்வதுமா யிருப்பன், எ-று. 378

ஒன்றேயேழாமதிபதி யொன்பானிருக்கவொன்பதின்தோன்
நன்றேயேழிற்றாரையின் ராசிக்கதிபனிவர்களுடன்
ஒன்றியிருக்கச்சரிதாமயோகமதாற்சேனையுளன்
என்றேநீதிமுப்பதின்மே லியங்குமவ்வயதோரையாறே.

(இ - ள்.) ஏழாம்வீட்டுக்குடையோன் ஒன்பதிலும் ஒன்பதுக்குடையோன் ஏழிலும் நட்சத்திர ராசிக்கதிபன் இவர்களுடனும் கூடியிருந்தால் சரிதாமயோகமாம். அதன் பலன்: முப்பதுவயதுக்குமேல் முப்பதுவருடம் வரைக்கும் சேனைகளோடுகூடி நீதிசெலுத்துவோனுவான், எ-று. 379

ஐயாவிரண்டிற்குருவிருக்க வமர்ந்தோனாலிற்சுக்கிரனுறப்
பொய்யாதேழிற்செய்யமதியும் பொருசனிமாதிசபருடனே

னையாதிருக்கவிதன்பலன்க ளறிந்காம்யயோகமதாம்
கையம்புருத்திரபத்திரண்டு வருஷமாறுஞ்சவுக்கியமே.

(இ - ள்.) இரண்டாமிடத்தில் குருவும், நாலில் சுக்கிரனும், ஏழில் அங்காரகனும் சந்திரனும் லக்கினாதிபதி சுபருடனும் கெடாமலிருந்தால் காம்யயோகமாம். அதன் பலன்: இருபத்திரண்டு வயதுக்குமேல் ஆறுவருஷம் வரைக்கும் வையமாசாண்டு செளக்கியமா யிருப்பதாம், எ-று. 380

[illegible]மைவைத்தாமதி[illegible]ஒன்பான் வீட்டிலிருக்கலாபத்தோன்
தாயமதி[illegible]ரண்டி[illegible]ச் சோடசதானம்பண்ணுவனே
[illegible]சன்மான[illegible]கம்பெறுவனானியோகம்
காயபலன்[illegible]பானகனி[illegible]ண்டாக்காதே.

(இ - ள்.) ஐந்தாம்வீட்டுக்குடையோன் ஒன்பதிலும், லாபஸ்தானாதிபதியும், சந்திரனும் இரண்டிலுமிருக்கச் சோடசதானம் செய்வோனும், அரசசன்மானனும், எழிலான் கனயோகத்தை நாற்பத்தைந்து வயதுக்குமேல் மூன்றுவருஷம் வரைக்கும் பெறுவான், எ-று. 381

காணும்லாபாதிபத்தாச்சன் கண்டகங்களுடன்கூடி
வேணுஞ்சென்மாதிகேந்திரன் மேவியிவர்களிருந்திடவே
நாணும்பிரபையோகபல னடத்துந்தியாகிவெகுபோகி
தானுமரசன்சேனாதி தனிமூவைந்திரெட்டாண்டே.

(இ - ள்.) லாபஸ்தானத்திற்கு உச்சனான சுக்கிரனுடன்கூடி லக்கினாதிபதி கேந்திரத்திலேறியிருந்தால் பிரபையோகமாம். அதன் பலன் பதினைந்து வயதுக்குமேல் எட்டுவருஷம் வரைக்கும் தியாகியும், வெகுபோகியுமாதலாகிய சேனைகளோடு கூடிய அரசனுவான், எ-று. 382

ஆண்டமதியுங்குருவிருவ ரமர்ந்தேயொன்றிலுற்றிடவே
பூண்டவிரண்டோன்லாபத்திற் பொருந்தியிருக்கச்சென்மாதி
நீண்டசுபர்களுடன்கூடி நிற்கச்சகடயோகபலன்
வேண்டும்வருஷநாற்பான்மேல் விளம்புமூன்றுந்தேசாதி.

(இ - ள்.) சந்திரனும் குருவும் லக்கினத்திலிருக்க இரண்டாமிடத்தோன் லாபத்திலிருக்க லக்கினாதிபதி சுபக்கிரகங்களோடு கூடியிருக்க சகடயோகமாம். அதன் பலன்: நாற்பது வயதுக்குமேல் மூன்றுவருஷம் வரைக்கும் தேசாதிபதியா யிருத்தலாம், எ-று. 383

சாதிலக்கினாதிபதியிருந்தங் கிசையோனுடன்சசியும்
ஓதும்விசையபத்திடத்தோ னெங்கும்பார்வைநோக்குறவே
வாதபுடயோகபலன் மந்திரிமண்டலாதிபதி
நீதிநடத்துமம்பதினொன்றின் னேறும்வருஷமூன்றினுமே.

(இ - ள்.) லக்கினாதிபதியிருந்த அங்கிசத்தலைவனோடு சந்திரனும், இவருக்குப் பத்தாமிடத்தோனும் இவனைப் பார்க்கவும் யூபயோகமாம். அதன் பலன்: பதினொரு வயதுக்குமேல் மூன்று வருஷம் வரைக்கும் மந்திரியும் மண்டலாதிபதியுமா யிருத்தலாம், எ-று. 384

இனிதாம்லக்கினத்ததிப னிருந்தங்கிசாதி திரிகோணம்
மனிவாயுற்றேறுகுருசுங்கன் வரவேயிடவர்கடாமிருக்க
நனியாற்பத்தினிற்சனியுச்ச மாகிற்றாமயோகபலன்
தனியேபத்தோன்பான்மேலே தாணியாள்வனென்றிடான்பான்.

(இ - ள்.) லக்கினாதிபதி இருந்த அங்கிசத்தலைவன் திரிகோணத்திலிருந்து குரு சுக்கிரனிவர்கள் லாபஸ்தானத்திலிருக்கவும், பத்தில் சனியும் உச்சமானானால் [illegible]யோகமாம். அதன் பலன்: பத்தொன்பது வயதுக்குமேல் [illegible] வருஷம் வரைக்கும் [illegible], எ-று. 385

ஆறுனைமத்தாமதிபதிதா னோக்கேழொன்பானமர்ந்திடவே
தாறுமாசன்மாதி தானுங்கூடியங்குறினும்
நீறுஞ்சோமனொன்பதனி னிற்கக்கதிரோனுச்சமெனக்
கேளுங்காந்தர்வயோகமெனக் கிடைக்கும்பலன்களுரைத்திடுமே.

(இ - ள்.) ஐந்தாம் வீட்டோன் ஐந்து ஏழு ஒன்பது இவ்விடங்களிலிருந்து குருவும், லக்கினாதிபதியும் சேர்ந்து அங்கேயிருந்தாலும் சந்திரன் ஒன்பதிலும், சூரியன் உச்சனாகவுமிருந்தால் காந்தர்வ யோகமாம். இதன் பலன்கள் சொல்லுவிடத்து, எ-று. 386

உரைக்கும்பலவான்பிரசித்த னுைக்கும்புத்தியுள்ளவனும்
திரைக்குமரசனுபாரனைத் தானும்வெகுவாய்ப்பூண்டிடுவன்
ஆரைக்கும்புத்திசொல்லிடுவன் சுகந்தகீதப்பிரியனென
விரைக்குமறுபத்தாறதன்மேல் விளங்குவருடமெட்டுளதே.

(இ - ள்.) பிரசித்தவானும் பலவானும் புத்திசாலியும் அரசனும் ஆபரணலங்கிருதனும் யாவருக்கும் புத்திசொல்பவனும், சுகந்த வஸ்துக்களிலும் சங்கீதத்திலும் பிரியமுள்ளவனுமாய் அறுபத்தாறு வயதுக்குமேல் எட்டு வருஷம் வரைக்கும் அநுபவிப்பவனாவான், எ-று. 387

உளதேபத்தாமதிபதிதா னுற்றவங்கிசத்தோன்பத்தில்
அளவேசுங்கனுடன்கூட வானராசிக்கதிபதிதான்
கலவாயிருந்தங்கிசநாதன் காணுமுச்சம்பிரத்திமமாம்
இளகாவரசன்பூபால னிரெட்டதன்மேலேழென்ப.

(இ - ள்.) பத்தாம் வீட்டோனிருக்கும் அங்கிசத்தோன் பத்தாமிடத்திலேயே சுக்கிரனுடன் அவனிருக்கும் ராசிக்கதிபதி மறைந்திருந்து அங்கிசநாதன் உச்சமானால் பிரத்திமயோகமாம். அதன் பலன்: பதினாறு வயதுக்குமேல் ஏழுவருஷம் வரைக்கும் பூவைப்புரக்கும் அரசனாயிருப்பதாம், எ-று. 388

பதிசேர்பாக்கியாதிபதி யிருந்தங்கிசாதிபதிநான்கில்
அதிசேர்திற்கநான்காதி தாலங்குகேந்திரமுச்சத்தில்
விதியாதிற்கின்முதியோகம் விளங்குமரசர்சன்மானன்
அதிசேர்சுகவான்பாக்கியவான் காணுமிருப்பான்கோற்றவன்மேல்.

(இ - ள்.) பாக்கியாதிபனிருந்த அங்கிசாதிபதி நான்கிலும் நான்காமிடத்தோன் கேந்திரத்திலும் [illegible] உச்சத்திலுமிருந்தால் முதியோகமாம். அதன் பலன்: அரசசன்மானனும், [illegible]னும் பாக்கியவானுமாயிருந்து இருபது வயதுக்குமேல் அரசனாவதாம், எ-று. 389

தவமாஞ்சன்மத்துச்சனுறத் தாவீனிசுதனுமுழுநோக்க
நவமாமிடத்தோன்காரியுட னன்னைப்புலவனிதன்பெயரோ
சவனாசண்டயோகபலன் கருணையரசர்மதிமந்திரி
இவனன்வயதுபன்னிரண்டா மிதன்மேன்மூன்றுந்தனபதியே.

(இ - ள்.) சன்மத்தில் உச்சனிருக்க அவனை அங்காரகன் முழுப்பார்வை பார்க்க ஒன்பதாமிடத்தோன் சனியுடனிருக்கச் சண்டயோகமாம். அதன்பலன்: கருணையுள்ள அரசனுக்கு மதிமந்திரியாகவிருந்து பன்னிரண்டு வயதுக்குமேல் மூன்றுவருஷம் வரைக்கும் தனபதியாயிருப்பதாம், எ-று. 390

பதிசேர்தொன்பானதிபதி பண்பாய்மூன்றிலிருந்திடவே
அதிசேராசன்முழுநோக்கச் சொல்லுங்கானயோகபலன்
அதிசேருபன்முத்தழக ருடைபணிதியுள்ளவனும்
சுதிசேர்வயதுபதினாறிற் காணுமூன்றின்முகவசியம்.

(இ - ள்.) ஒன்பதாமிடத்தோன் மூன்றிலிருக்க அவனை குரு முழுப்பார்வைபார்க்க கானயோகமாம். அதன் பலன்: அழகிய ரூபலாவண்ணியனும், ஆடையாபரணங்களு முள்ளவனுமாயிருந்து பதினாறுவயதுக்குமேல் மூன்று வருஷம், வரைக்கும் முகவசிய முண்டாவதாம், எ-று. 391

வசயமைந்திற்குருவிருக்க வைந்தாமாதிசுபரிருவர்
கசையாய்க்கூடித்தானிருக்க நாடும்பத்தினிற்சனியுறவே
பொசியுமகிடயோகபலன் புடவிவனத்துக்கதிபதியாம்
முசியும்வருஷமுப்பத்தினமேன் மூன்றுமெட்டுமேயாசாம்.

(இ - ள்.) ஐந்தாமிடத்திற் குருவும் ஐந்தாமதிபன் இரண்டு சுபக்கிரகங்களுடன் கூடியிருக்கவும் சனி பத்திலுமிருக்க மகிடயோகமாம். அதன் பலன்: பூமிக்கும் வனத்துக்கும் தலைவனுமாயிருந்து முப்பது வயதுக்குமேல் எட்டு வருஷம் வரைக்கும் அரசாள்வதாம், எ-று. 392

வேறு

பனிரெண்டுராசியென்னும் பதிலக்கினமாகக்கொண்டு
இனியதாய்தந்தைபுத்திர ரிசைமனையுடன்வந்தோர்கள்
தனியுமாமத்தாயங்க டனலாபவாகனங்கள்
முனியும்பாக்கியகர்மங்கள் முதற்பலன்மொழிந்திடுரே.

(இ - ள்.) பன்னிரண்டு ராசிகளையும் அதற்குத் தக்கவாறுரைத்த கிரமப்படி அந்தந்த ராசியை முதல் லக்கினமாகக்கொண்டு தாய்தந்தையர் புத்திரர் மனைவி சகோதரர்கள், ஆயுள் பங்காளிகள் தனம் லாபம் வாகனம் பாக்கியம் கர்மம் முதலிய பலன்களைச் சொல்லுவீராக, எ-று. 393

பாக்கியத்திறையுங்காமத் தர்திபுமிலக்கினத்தோனும்
தாக்கியேகூடினுந் தயவுடனொன்றிற்கொன்று
நோக்கியகண்ணுற்றாலு நன்னியவறிவுகேள்வி
வாக்குகள்செழுத்துங்கோவாய் மன்னினில்வாழ்வன்கண்டீர்.

(இ - ள்.) பாக்கிய ஸ்தானத்தானும் தர்மாதிபதியும் லக்கினாதிபதியும் சேர்ந்திருந்தாலும், ஒன்றிற்கொன்று பார்வைபெற்றிருந்தாலும், நன்னிய வறிவு நல்லகேள்வி நல்லவசனம் இவைகளையுடைய அரசனாய் இவ்வுலகத்தில் வாழ்பவனாவான், எ-று. 394

ஒன்பதிற்கொன்பதேனு மொருபத்திற்குப்பத்தேனும்
ஐன்பதினைந்துமேழுந் தானத்துவீட்டோன்தன்னோ
டன்புடன்லக்கினாதி பனுமிடவல்துநோக்கத்
துன்பமற்றன்றிச்செல்வஞ் சூழ்மன்னனவன்சொல்லே.

(இ - ள்.) ஒன்பதிற் கொன்பனேனும் பத்திற்குப் பத்தானேனும் ஐந்து ஏழு இவ்வீட்டவர்களுடன் கலந்து லக்கினாதிபதியோடு கூடினாலும் அல்லது பார்வையைப் பெற்றாலும் துன்பமற்ற செல்வமிக்க மன்னவனாவான், எ-று. 395

ஆறுடனேழாமாதி பவருடன்லக்கினாதி
பேறுடன்கூடினாலும் பெருமையாய்க்கண்ணுற்றாலும்
வீறுடன்மிக்கசெல்வ மேன்மையாம்பாக்கியங்கள்
சேறுசெய்திருந்துவாழ்வன் செகத்துக்குமன்னனவன்.

(இ - ள்.) ஆறு ஏழு இவ்வீட்டுக் கதிபர்களோடு லக்கினாதிபதி சேர்ந்தாலும் பார்த்தாலும் மிக்க செல்வமும் மேன்மையும் பாக்கியங்கள் சேர்ந்து செகத்துக்கரசனாய் வாழ்வான், எ-று. 396

கேந்திரத்தானத்ததாதி திரிகோணத்தோனுங்கூடிச்
சேர்ந்திடவல்தொன்றுக்கொன் றிகழ்வேநோக்கினாலும்

பார்த்தவர்திசைகடன்னிற் பூணுமந்திரியோகங்கள்
சார்ந்திடுஞ்சத்தமாகச் சகலபாக்கியமென்றோதே.

(இ - ள்.) கேந்திராதிபதியும் திரிகோணாதிபதியுங் கூடினாலும் அல்லது ஒருவருக்கொருவர் குறைந்தபார்வை பார்த்தாலும் அவர்களுடைய திசைகளில் மந்திரியோகம் சாரும். அன்றிச் சகலபாக்கியமும் சேரும், எ-று. 397

வாகனாதியுங்கோணத்தி னாதியுங்கூடமற்றும்
தாகமாயொன்றுக்கொன்று சார்ந்துடன்பார்ப்பாராயின்
வளமாய்ப்பதுமத்தா[illegible] விலக்குமியோகமென்பர்
போகவான்சகலபா[illegible]ம் பூணும்பூபாலன்கண்டீர்.

(இ - ள்.) வாகனாதிபதியும் திரிகோணத்ததிபதியும் கூடினாலும் ஒருவருக்கொருவர் பார்த்தாலும் இலட்சுமி யோகமென்று சொல்லுவார்கள். அதன் பலன்: போகவானும் சகல[illegible]யங்களும் நிறைந்த அரசனுமாவான், எ-று. 398

தனபதிபாக்கியத்தோன் லாபத்தோன்சந்திரகேந்திரம்
தன்னில்மிகவிவர்களா[illegible] சார்ந்திடப்பன்னொன்றைந்தும்
வினவியகுருவினாட்சி வீடெனிற்செல்வமுள்ளன்
புனையிழையாளேலட்சுமி யோகமாய்ப்புகலுவாயே.

(இ - ள்.) புனைந்த ஆபரணமுடையாளே! தனாதிபனும் பாக்கியத்தானாதிபனும் லாபாதிபதியும் சந்திரகேந்திரத்திலிருந்து பதினொன்றும் ஐந்தும் குருவின் ஆட்சிவீடாயிருந்தால் செல்வமுள்ளவனாவான். லட்சுமியோகமென்று சொல்லுவாய், எ-று. 399

[illegible]ண்டினிற்கதிபன்பாக்கியந் தன்னிலும்லாபந்தன்னில்
கண்டிடாப்பாக்கியாதி தானுதிலாபத்தாதி
ஒன்றொடியுடனின்றாலு முயராஜயோகமுன்று
கொண்டற்கிரகஞ்சொந்தக் கிரகமுற்றிருக்கின்மன்னும்.

(இ - ள்.) இரண்டாமிடத்தோன் பாக்கியத்திலும், லாபஸ்தானத்தில் பாக்கியாதிபதியும் அன்றி லாபாதிபதி கூடவேயிருந்தாலும், ராஜயோகமாம். மூன்று சுபக்கிரகங்கள் ஆட்சியாயிருந்தாலும் அரசனாம், எ-று. 400

யோகபலன்

முற்றிற்று.

தரித்திர யோகம்

வேறு

கண்டசன்மலக்கினங்கள் காரியமனையாய திற்சோமன்
மண்டிருக்கவவன் றனக்கு வளர்பன்னொன் றிலரசனுறக்
கொண்டதரித் திரங்கடகம் குருலக்கினமாய திற்காரி
மிண்டியிருக்கப்பன்னொன் றில் வேந்தனிருக்கத் தரித்திரமே.

(இ - ள்.) சென்மலக்கினஞ் சனிவீடாய் அதில் சந்திரனிருக்க அவனுக்கு பதினொன்றில் குருவிருக்கத் தரித்திரனாவான். சென்மலக்கினம் கடகமாய் அதில் சனியிருக்க பதினொன்றில் குருவிருக்கவும் தரித்திரனாவான், எ-று. 401

மேவுங்குடும்பந்தனிற்பாவர் வெகுவாய்ப்பலன் றான்றிற்றப்
பாவக்கிரகந்தான்பார்க்கப் பரவுஞ்சன்மங்குடும்பத்தின்
கோவும்பலன்களற்றிருக்கக் குறைவேய்படைத் துக்தாலுண்ணத்
தீரவுமன்னங்கிடையாமற் சோம்பித்திரிப்பன்சுகமில்லான்.

(இ - ள்.) குடும்பஸ்தானத்தில் பாபக்கிரகங்கள் பலனற்றிருக்கவும், அன்றிப் பாபக்கிரகங்கள் பார்க்கவும், சன்மத்திலும் குடும்பத்திலும் பலமொன்று மில்லாதிருக்கவும், வறுமையடைந்து உண்ண அன்னங்கிடைக்காமல் சோம்பித் துக்கியுமாவான், எ-று. 402

தரிக்குஞ்சன்மலக்கினத்துஞ் சசிதானருந்தலக்கினத்தும்
பரிக்குமுபயபாரிசத்தும் பாவரிருக்கத்தரித்திரமாம்
விரிக்குமுன்னோர்பாரிசத்தின் மேவிலுடனே தரித்திரமாம்
தெரிக்கும்பின்னேயுறில்பாலி யத்திற்றரித்திரஞ்சேரும்.

(இ - ள்.) சென்மலக்கினத்திலும் சந்திரனிருந்த லக்கினத்திலும் அன்றி அவற்றிற்கு இரண்டு பக்கங்களிலும் பாபக்கிரகங்களிருந்தால் தரித்திரமாம். முன்னே யொருபக்கத்தில் பாபக்கிரகங்களிருந்தால் உடனேயும் பின்னே யிருந்தால் பாலியத்திலும் தரித்திரமுண்டாகும், எ-று. 403

சேருஞ்சன்மகேந்திரத்திற் றிரிகோணத்திற்குடும்பத்தில்
மேருவியத்திற்பாவர்நிற்கின் மிகவுந்தரித்திரயோகம்
வாருஞ்சன்மலக்கினத்தின் மதியுஞ்சனியுமருவுகினும்
நேருஞ்சன்மந்தனிற்பாவர் நிற்கிற்றரித்திரநிறையும்.

(இ - ள்.) சன்மத்திலும், கேந்திரத்திலும், திரிகோணத்திலும், குடும்பத்திலும், பன்னிரண்டாமிடத்திலும் பாபக்கிரகங்களிருந்தால் தரித்திரயோக

மாம். சென்மலக்கினத்தில் சந்திரனும் சனியுஞ் சேர்ந்திருந்தாலும், பாபக்கிரகங்களிருந்தாலும், நிறைந்த தரித்திரமுண்டாகும், எ-று. 404

நிறையுமிரண்டாமிடத்திற்கோ ளின்கமூன்றதாமிடத்தில்
உறையுங்கிரகமுண்டாயி லேதுங்கேமுத்திரயோகம்
குறையும்பலமேனையங்கைக்கொண்டே யுண்ணுங்குறைவுடையோன்
நறைசேர்குழலாயிரண்டிற்கோ ளன்னியில்லைநல்குரவே.

(இ - ள்.) இரண்டாமிடத்தில் எந்தக்கிரகமு மில்லாதிருக்க மூன்றாமிடத்தில் கிரகங்களிருந்தால் கேமுத்திரயோகமாம். அதன்பலமாவது, பிச்சையெடுத்துண்பதாம். அன்றி இரண்டாமிடத்திற் கிரகமிருந்தால் அப்படிப்பட்ட தரித்திரம் வருவதில்லை, எ-று. 405

குரவர்மதிக்குமுன்பின்னுங் குணமாயில்லார்குஅகாரேல்
வரவுசந்திரன்கேந்திரத்தின் மருவினுமிருபுறமும்
உரவோர்தாமில்லாதிருந்த லுண்டாங்கேமுத்திரயோகம்
திரவேசுகளைவெறுபாவஞ் செய்தார்க்கேந்திசெயலாமே.

(இ - ள்.) சந்திரனுக்கு முன்னும் பின்னும் சுபக்கிரகங்கள் இராவிட்டால் அன்றிச் சந்திரகேந்திரத்திலிருந்தாலும் இரண்டு பக்கமும் மித்துருக்கிரகங்கள் இல்லாதிருந்தாலும் கேமுத்திரயோகமாம். இப்படிப்பட்டயோகம் வெகுபாவம் செய்தவர்களுக்கே உண்டாவதாகும், எ-று. 406

செயலாருடலைச்சனிநோக்கத் திகழ்மேஷத்திற்செய்மதியும்
இயலாயிருக்கப்பிறந்தவனு மிரந்தேயுண்பனென்காரும்
மயிலார்சென்மமெட்டிடத்தைப் பங்குபாதன்பார்த்திடினும்
கயலார்விழியாய்சீர்கேடன் காணுமெனவேகருதிடுமே.

(இ - ள்.) சரீரஸ்தானத்தைச் சனிபார்க்கவும், மேஷராசியில் அங்காரகனும் சந்திரனுமிருக்கவும் பிறந்தவன், எக்காலும் இரந்துண்பவனேயாவான். அன்றி லக்கினத்தையாவது எட்டாமிடத்தையாவது சனி பார்த்தாலும் ஓ பெண்ணே! சீர்கேடனாவானென்று உணர்தல்வேண்டும், எ-று. 407

மேலாங்கிரகமெட்டுமொரு வீட்டிலொன் றியிருந்திடவே
சாலுங்கோள்கள்யோகமிது சாற்றுஞானிதரித்திரனும்
மாலையிரண்டுவீட்டிலுற வன்மைதான்கையோகங்கள்
நிலாய்மந்தனிட்டோனில்லா னவனேலச்சையிலான்.

(இ - ள்.) நல்லகிரகங்கள் எட்டும் ஒரேவீட்டிற் சேர்ந்திருக்க என்னயோகமென்றால் கோள்கள் யோகமெனப்படும். அதன் பலன்: ஞானியாவான். ஆனால் தரித்திரனுவான். அந்த எட்டு கிரகங்களும் நன்னான்காக இரண்டு வீடுகளிலும் இருந்தால் கையோகமுண்டாகும். அதன் பலன் கிட்டேனும் மந்தனும் லச்சையில்லாதவனுமாவான், எ-று. 408

ஆறென்மூன்றிராசிதனி லனுகிக்கிரகமிருந்திடவே
காணேருலயோகமதாஞ் சரீரந்தன்னிற்காயவடு

மானேருலத்திற்பாதகர்தான் வருமேயிவன்றன்காமதனுல்
ஊனப்படுத்துந்தரித்திரவா னுதவான்றரும்மருக்கின்வசனம்.

(இ - ள்.) மூன்று வீடுகளிலுமே அந்தக் கிரகங்களெல்லாம் நிறைவி னின்றால் குலயோகமாம். அதன் பலன் சரீரத்தில் காயவடுவும் குலபாதகமுடைய னும் இவன் கையால் ஒருகாசும் உதவாதவனும் தரித்திரனுமாவான், எ-று. 409

வாசமேழெட்டொன்பதுபத்தின் மருவியிருக்கிற்றிரியோகம்
நிசமாயினத்தொழில்புரிவன் சோம்பனீசகடையுடையன்
தசமேலாபமொன்றாகியக் தன்னிற்கிரகந்தாமுறவே
வசையாயினத்தொழில்புரிந்து மன்னுசெல்வுதொகுஞ்சமதாற்.

(இ - ள்.) இந்தக் கிரகங்களெல்லாம் ஏழு எட்டு ஒன்பது பத்தாமிடங்களிற் கூடியிருந்தால் திரியோகமாகும். அதன்பலன், ஈனத்தொழில் செய்பவனும் சோம்பியும் நீசடக்கையுடையவனுமாவான். பத்தாமிடத்திலும் லாபஸ்தானத் திலும், லக்கினத்திலும், பன்னிரண்டாமிடத்திலும் கிரகங்களிருந்தால் ஈனத் தொழில்செய்து அதனால் வயிறு நிறைந்து சொற்பதிரவியம் ஈட்டுபவனாவான், எ-று. 410

தாமேசன்மஞ்சந்திபுறவே தானுங்கேந்திரங்காரியுறில்
ஆமேவியத்திற்குருவிருக்கி லையமெடுப்பனெனப்புகல்வர்
தோமேவியமாவெட்டதனிற் றொடர்சன்மாதிதானிருக்கத்
திமைசரியுங்கோள்கூடத் தேசமெலாஞ்சுற்றிடுவன்.

(இ - ள்.) லக்கினத்தில் சந்திரனிருந்தாலும் கேந்திரத்தில் சனியிருந்தா லும் பன்னிரண்டாமிடத்தில் குருவிருந்தாலும், பிச்சையெடுப்பானென்று சொல் லுவர். அன்றி பன்னிரண்டு ஆறு எட்டாமிடங்களில் லக்கினாதிபதியிருந்தால் பாபக்கிரகங்கள் அவனைக்கூடினால் தூரதேசமுந் திரிபவனாவான், எ-று. 411

கடக்குந்தனபாக்கியமெட்டைந்தேனு காலிட்டிடிற்பாவருறக்
கொடுக்கும்வெகுவாய்த்தரித்திரங்கள் கூறுமூன்றுமனாபாயின்
கொடுக்குமுக்காலிரண்டிலரை குலவுமொன்றிற்காலாகும்
விடுக்குமிதனிலுறப்பாவர் விரவியிருக்கிற்றரித்திரமே.

(இ - ள்.) தனம் பாக்கியம் எட்டு ஐந்தாமிடங்களில் பாபக்கிரகங்களிருந் தால் மிக்க தரித்திரமுண்டாகும். இப்படிச்சொல்லப்பட்ட நான்குவீடுகளில் மூன்றில்மாத்திரமிருந்தால் முக்கால்தரித்திரமும் இரண்டிலிருந்தால் அரை தரித்திரமும் ஒன்றிலிருந்தால் கால்தரித்திரமுமுண்டாகும், எ-று. 412

மேவுமொன்பானதிபதியைவிட வெட்டாதிபலவானாய்த்
தாவியிருக்கத்தரித்திரமே தபனனீசாங்கிசத்தன்னில்
மேவியிருக்கலாபாதிவிரவத் தரித்திரயோகம்
ஏவும்விழியாய்சோதிடத்தோ ரியம்பும்பலன்களிவையாமே.

(இ - ள்.) ஒன்பதாம் வீட்டோனைவிட எட்டாம்வீட்டோன் அதிக பலவா னானால் மிக்க தரித்திரயோகமாம். சூரியன் நீசாங்கிசத்திலிருந்து அவனை லாபாதிபதி கலந்திருக்கவும் தரித்திரயோகமாம். அம்மைப்பொருவும் கண்மடை யாய்! சோதிடர்கள்சொல்லும் பலன் இதுவேயாகும், எ-று. 413

அங்கவீனம்

வேறு

கண்டபன்னிரண்டாம்வீட்டோன் கனத்திரிகோணமேறிக்
கொண்டகேந்திரத்திலிற்க வவனோடுகூடிராகு
அண்டியேபிறகப்பாவ ரவர்களைப்பார்த்திருக்க
எண்டிசையுமிலங்க வீனனாயிருப்பனென்னே.

(இ - ள்.) பன்னிரண்டாம் வீட்டுக்குடையவன் திரிகோணத்திலேனுங் கேந்திரத்திலிருக்க அவனோடு ராகுவும் கூடியிருக்க அவர்களைப் பாபக்கிரகங்க ளும் பார்த்திருந்தால் எட்டுத்திக்குகளுக்கு மடங்கிய இவ்வுலகத்தில் அங்கவீனனா யிருப்பானென்றுரைக்க, எ-று. 414

சோமனுதிற்பன்னிரண்டில் றொடர்ந்தேதிற்கவோரிரண்டில்
ஆமேசெவ்வாய்தானுறவே யவரைப்பாவர்மிகநோக்கப்
போமாமங்கவீனமெனப் புகல்சேர்கல்லோர்பார்வையுறில்
இமையில்லாத்திரிக்காங்கந் செப்பாய்பலனீசித்திரத்தே.

(இ - ள்.) சந்திரனானவன் ஆறிலும் பன்னிரண்டிலும் தொடர்ந்திருக்க இரண்டாமிடத்தில் அங்காரகனிருக்க இவ்விருவரையும் பாபக்கிரகங்கள் முழுப் பார்வையாய்ப் பார்க்கவும் அங்கவீனமேயாகும். ஆயின் சுபக்கிரகங்கள் பார்த்தால் நிர்க்காங்கமாகும் என்று பலன் சொல்லுக, எ-று. 415

மிக்கதகாரிகுருபரிதி செவ்வாய்ராகுகேந்திரத்தில்
அக்குமுடனேதிரிகோணத் தனுகாதிருக்கப்பலனில்லார்
வந்தாலங்கவீனமுறும் மருவும்தேசசஞ்சாரம்
நொந்தேபுதல்வர்நாசமுறு நொய்யன்மடியன்கண்டிடே.

(இ - ள்.) சனி குரு சூரியன் அங்காரகன் ராகு இவர்கள் கேந்திரத்திலும், திரிகோணத்திலும் சேர்ந்திருந்து அந்த விடங்களில் பலனில்லாதவர்கள் வந்து சேர்ந்தாலும் அங்கனமேயாகும். அன்றி தேச சஞ்சாரம் புதல்வர் நாசம் நொய் தல் தரித்திரம் முதலியவை யுண்டாமென்றுணர்வீராக, எ-று. 416

வேறு

இந்துவோடசுபர்கூடி ரண்டெட்டிற்கள்ளன்
முந்திரண்டிற்சேய்மாந்தி மூழ்ப்பாவருறிற்றோயன்
அந்தமறப்பொய்யன்பெண்டிர் வியபிசாரியாண்மையில்லான்
சிந்தனைவியபிசாரத்து னிசயிலான்றீயனுன்னே.

(இ - ள்.) சந்திரனுடன் பாபக்கிரகங்கள் சேர்ந்து நான்காமிடத்திலிருந்தால் கள்ளனும் இரண்டாமிடத்தில் அங்காரகன் குளிகனோடு மூழுப்பாவரோடு கூடியிருந்தால் கொடிய நோயனும் பொய்யனும் வியபிசாரமனைவியை யுடையவனும் ஆண்மையில்லாதவனும், இவனும் வியபிசார முள்ளவனும் கொடிய துன்பவனு மாவான், எ-று. 417

வேறு

விடுமிலக்கின மீதிற்குசனுற
உடனிரண்டிடத் தோனுமாறுதிபன்
திடமுடனிவர் சேர்ந்திடிற்காதறும்
கொடியபாம்பினு ராகுநிற்கொய்படும்.

(இ - ள்.) லக்கினத்தில் அங்காரனிருந்து இரண்டாமாறாமிடத் ததிபதிகள் பலமாய் ஒன்று சேர்ந்திருந்தால் காதறுபடும். இவர்களோடு ராகுவும் சேர்ந்தால் அறுபடுவான், எ-று. 418

நித்தியபலன்

வேறு

செங்கதிருறு நக்ஷத்திர முதலாய்த் திங்கணக்ஷத்திரமட்டும், சேரவே யெண்ணியிரண்டினிற் பெருக்கித் தெரிந்தவன்சன்ம நாண் முதலாய்ப், பொங்கமாயற்றை நக்ஷத்திரமளவும் பொருந்திய தொகை யுடன்வரம், போத மூவகையுங்கூட்டி யொன்பதினிற் பொற்புடன் கழித்தசேடங்கள், இங்கிதஞ்செறியுமிரவி சந்திரன் சேயிராகுபொன் சநி புதன்கேது, இனியசுக்கிரனு மகாதிசைப்படியே மிசைதொகை பாதி நாழிகையாம், அங்கதுநித்திய பலனதுபோல வறிந்து நித்திய பலனுரைமின்.

(இ - ள்.) சூரியனிருக்கும் நட்சத்திரமுதல் சந்திரனிருக்கும் நட்சத்திரம் வரைக்கு மெண்ணிவந்த தொகையை இரண்டாற் பெருக்கி வைத்துக்கொண்டு அத்துடன் அவனுடைய சென்ம நட்சத்திரமுதல் அன்றையநாம் வரைக்கு மூண்டான நாட்களையும் ஒன்றுசக்கூட்டி ஒன்பதுபெருக்குக் கொடுத்தால் சேஷமே சூரிய சந்திர செவ்வாய் இராகு குரு சநி புதன் கேது சுக்கிரதிசை வரிசைப்படி அவ்வவர் திசைத்தொகைகளின் பாதி நாழிகையாக திசைப்பலன் போலவே நித்தியபலனும் சொல்லுக, எ-று. 419

வேறு

இரவிராகுபுகரொருமூன்றதாம்
குருமதிவமாங்கிசன்பன்னிரண்

டொருபுதனுக்குறுஞ் சனிகேதுமெட்
டுறுதிசைக்குறி நாழிகையாதிடே.

(இ - ள்.) சூரியன் ராகு சுக்கிரன் இவர்களுக்கு மும்மூன்று நாழிகையாகவும், குரு சந்திரன் இவர்களுக்கு ஒன்பதுநான்பது நாழிகையாகவும், அங்காரகனுக்கு பன்னிரண்டு நாழிகையாகவும், புதனுக்கு பதினொரு நாழிகையாகவும், சனி கேது இவர்களுக்கு எட்டெட்டு நாழிகையாகவும் அவ்வவர்கள் திசைகட்கு நித்திய நாழிகை சொல்லுக, எ-று. 420

துவாதசபாவ பலன்கள்

முதலாம்பாவம்

இலக்கின பலன்

ஆட்சியுச்சிலுயர்ந்தோன் மற்றுங்கோள்கள்
காட்சியுறு லக்கினத்திலும் பலமாய்க்கண்ணில்
அட்டமகுழுவிரண்டாங் குசனோடுற்கதிரோனெட்டில்
சிறப்புற்சாதகிண்டமிருக்கிற் பலன்களில்லை.

(இ - ள்.) மேஷம் சிங்கம் ரிஷபம் இவ்விடங்களில் சூரியனும் மற்றுக் கிரகங்கள் உபயராசிகளிலும் பலமாயிருந்தால் இரட்டைப்பிள்ளை பிறக்குமாம். அங்காரகன் ஏழிலும் சூரியன் எட்டிலுமிருந்து மற்றகிரகங்கள் சராசியிலிருந்தால் பலன்களில்லையாம், எ-று. 421

சந்திரன்பாவராசிதனிற் குசன்திரேக்காணத்
தந்திடிற்சிகிச்சியநாடி துறம் பன்னிரண்டினுமல்லோர்
வல்லுநனிருக்கிற்பெற்ற மகவுடன்பிறக்கும்பாம்பு
செந்திருமாதேபாம்பாய்ச் செனிக்கிறுசெனிக்குந்தானே.

(இ - ள்.) லட்சுமிபோல்வாளே! சந்திரன் பாபராசியிலும் அங்காரகன் திரேக்காணத்திலுமிருந்து அந்தச் சந்திரனுக்கு இரண்டு பன்னிரண்டாமிடங்களில் பாபக்கிரகங்களிருக்கப் பிறக்கும் பிள்ளையுடன் பாம்பும் பிறக்குமாம். அன்றி அந்தப்பிள்ளையே பாம்பாய்ப் பிறந்தாலும் பிறக்குமாம், எ-று. 422

நாலிடத்ததிபன் பாக்கியாதிப னிலக்கினத்தில்
சாலவேயவர்பார்க்கத் தாலுநில்ராசபுத்திரியன்
கோலியசனியோனேழிற் குசனுடசுக்கனிருந்து
மாலிவன்வியத்துனிற்க மருவுவன்றகப்ப னூரில்.

(இ - ள்.) நாலாம் வீட்டுக்குடையோன் பாக்கியன் தானுதிபதி லக்கினத்தில் சுபக்கிரகங்களின் பார்வையைப் பெற்றிருந்தால் ராஜபுத்திரியனுவான். சனி ஏழிலும் ஏழில் அங்காரகனும் சுக்கிரன் சந்திரன் புதன் இவர்கள் பன்னிரண்டிலிருக்கப் பிறந்தவன் தகப்பன் ஊரில் வசிப்பான், எ-று. 423

பண்ணும்லக்கினத்தைதிங்கு பாராமலிருக்கவிக்கு
கன்னியராசிலக் கினஞ்சராராசியாக
ஒன்னியகுதன்சராங்கி சம்பெறவுதித்தானுகில்
தின்னமாய்த்தகப்பன்தேசாந் திரத்திறிரிவன்றனே.

(இ - ள்.) லக்கினத்தைச் சந்திரன் பாராமலும் அவனிருப்பது சராராசியா கவுமிருக்க செவ்வாய் சராம்சத்தையும் பெற பிறந்திருந்தால் இவன்தகப்பன் தேசாந்திரம் திரிவான், எ-று. 424

பரிதிக்கோரிரண்டிற்பாவக் கிரகங்கள்பாவராசி
மருவிடிற்றந்தைதேசாந் திரத்துவும்மற்றும்பாவர்
உரிமையாம்பாவராசி புதிந்திரக்கையைந்தெழுன்பான்
பெரும்பாவக்கிரகத்தந்தை சிறைபடுவான்பரதேயத்தில்.

(இ - ள்.) சூரியனும் இரண்டாமிடத்தில் பாவக்கிரகங்களிருந்து அதுவும் பாவராசியானால் இவன் தந்தை தேசாந்திரியாவான், அன்றி பாபக்கிரகங்கள் பாவராசியிலிருந்து சூரியனுக்கு ஐந்து ஏழு ஒன்பது இவ்விடங்களில் பாபக்கிர கங்களே யிருந்தாலும் இவன் தந்தை அன்னியதேசத்தில் சிறைப்பட்டிருப்பான், எ-று. 425

செய்க்குப்பன்னொன்றிலிருந்து சேர்கிலோருழவிக்கினம்
ஆக்கியகல்லோர்காணி லவனைமற்றோர்வளர்ப்பர்
விக்கிபாவர்காணில் வியந்தாங்குழவிபோகும்
பாக்கியர்க்கைக்காணிற் றகப்பன்வாழ்பதியிற்சென்னம்.

(இ - ள்.) அங்காரகனுக்கு பதினொன்றில் சந்திரனிருந்தால் குழந்தைக்கு ஜனனமாம். அவனைச் சுபக்கிரகங்கள் பார்த்தால் அக்குழந்தையை அன்னியர் வளர்ப் பார்கள், பாபக்கிரகங்கள் பார்த்தால் குழந்தை மரிக்கும் பாக்கியர் சந்திரனைக் கண்டால் அக்குழந்தை தகப்பனூரில் பிறக்கும், எ-று. 426

நீசத்தானத்தினல்லோர் நின்றுசந்திரனைக்காணில்
போகவர்மாதத்தின்கீழ் பிறந்திடும்பின்னையென்றே
பூசல்செய்பாபர்நீசம் பொருந்தியசசியைக்காணில்
ஏசுநீசர்வீட்டிற்பிறந்ததே யெனச்சொல்வாரே.

(இ - ள்.) நீசஸ்தானத்தில் சுபக்கிரகங்களிருந்து சந்திரனைக்கண்டால் அப்பின்னை மாதத்தின்கீழ் பிறக்குமென்று சொல்வார்கள். பாபக்கிரகங்கள் நீசம்பெற்ற சந்திரனைக்கண்டால் அக்குழந்தை நீசர்வீட்டிலேயே பிறந்ததென்பார், எ-று.

இந்துவுநல்லோரோக ராசியிலிருக்கிற்காண்கில்
பந்தமாமனிதரில்லாப் பதியிலுற்பவிக்கப்பண்ணும்
சந்திரற்கேழிற்காரி தபனனுக்கேழிற்சேயும்
வந்திடத்தந்தைதாய்க்கு வருத்தமுமிட்டமாமே.

(இ - ள்.) சந்திரனும் சுபக்கிரகங்களும் ஒரேவீட்டிலிருந்து லக்கினத்தைக் கண்டால் யாருமில்லா ஊரில் பிறக்கும்படிச் செய்யும், சந்திரனுக்கு ஏழில் சனியும் சூரியனுக்கு ஏழில் அங்காரகனுமிருக்க, தாய் தந்தையர்களுக்கு அரிட்ட மூண்டாம், எ-று. 428

சனிக்கேழிடத்திற்செவ்வாய் தானுறிற்குழவிக்கினம்
பனிகொளிலக்கினதி பாவரோடிசைந்தாரெட்டில்
உதயிருபன்னிரண்டி லுற்றிடில்ரோகவானும்
நவல்சென்மலக்கினதி பலமிலாதிருக்கில்நோயாம்.

(இ - ள்.) சனிக்கு ஏழில் அங்காரகனிருந்தால் குழந்தைக்கு ஜனமாகும். லக்கினாதிபதி பாபக்கிரகங்களோடு சேர்ந்து ஆறு, எட்டு, பன்னிரண்டா மிடங் களி லிருந்தால் ரோகவானாவன். லக்கினாதிபதி பலமற்றவனா யிருந்தால் நோயுண் டாகும், எ-று. 429

ஆறாடனிரண்டிற்றினதிபனங்குசனுமூன்றில்
விறாடனிலக்கினத்தின் மேவிற்காதறுமறுத்தல்
சிறியசெனிபிக்ரோகந்தேருதற்கைக்கன்வீட்டில்
பேறாடன்காரிநிற்கின் புதசனுப்பிறப்பன்காணே.

(இ - ள்.) ஆறு இரண்டா மிடங்களின் தலைவர்களும் அங்காரகனும் மூன் றிலும் லக்கினத்திலு மிருந்தால் காதறுபடும். அப்படி அறுவிட்டால் காது நோயாவதுண்டாகும். புதன் வீட்டில் சனி இருந்தால் பேடியாய்ப் பிறப் பான், எ-று. 430

புத்திவீட்டினிற்பிறக்கப் புதனுறுமிடத்தினிற்க
அத்தவாறுமிடத்தினதிபன்லக்கினத்தினிற்க
நித்தையாமணியுமாவ ணிலவுசன்மாதினிற்க
மந்தனும்புதனுங்கூடில் வடிவின்றிக்குள்ளனாவான்.

(இ - ள்.) புதனுடைய ஆட்சி வீடு லக்கினமாய்ப் பிறந்து அந்த லக்கினாதி பதி ஆறுமிடத்திலும் அவ்வீட்டோன் லக்கினத்திலிருக்க அந்தக் குழந்தை பேடியாவான். அன்றி லக்கினாதிபதியோடு சனியும் புதனும் கூடினால் குள்ள னாவான், எ-று. 431

வடிவுளதகனிற்றேளின் மங்கலனிருக்கவேதான்
முடவன்லக்கினத்தினிற்க மூன்றினிற்பிருகுமேவ
உடலின்முருகனாவ னுயர்குசனேனையாகில்
அடல்சனிநிரீக்கணமாகிடிற்சிறையிலான்றும்.

(இ - ள்.) மேஷத்திலும் விருச்சிகத்திலும் அங்காரக னிருக்கவும், சனி லக்கினத்தி லிருக்கவும், மூன்றாமிடத்தில் சுக்கிரனிருக்கவும் பிறந்தவன் மிக்க குள்ளனவன், அன்றி அது அங்காரகனேனையாகவும் சனி நிரீக்ஷணத்திலு மானால் அவன் சிறையானவனாவான், எ-று. 432

வேறு

ஒன்றேழெட்டொடுவியத்திற் சுபிபாவருடனே
உத்தமர்நோக்கறனிற்கி லியுருங்கேந்திரத்தில்
நன்றிபவியன்றிப்பிறக்குஞ் சேய்குருடுதானே
நவில்வியமெட்டாறுதி பாபர்களேயாயின்
வென்றியோடெங்கிருக்கி லவன் துர்ப்பலனேயாவன்
மேவியசன்மாதிபதி தான்பாவனுமிக்
கொன்றைமுடியோனருளா லேவியமாறெட்டிற்
கூடினன்மையென்றென்றே கூறிவர்பாவலரே.

(இ - ள்.) லக்கினம் ஏழு, எட்டு, பன்னிரண்டாமிடங்களில் பாபக்கிரகங்களோடு கூடிச் சுபக்கிரகங்களின் பார்வையில்லாமல் சந்திரனிருந்தால் அந்தக் கேந்திரத்தில் பிறக்குங் குழந்தை குருடாகும். பன்னிரண்டு, எட்டு, ஆறு மிடங்களி னதிபர்கள் பாபர்களாய் எங்கே யிருந்தாலும் அவன் துர்ப்பலனே யாவான். லக்கினாதிபதியே பாவியாய் பன்னிரண்டு ஆறு எட்டில் இருந்தால் நல்லதென்றே நல்லாருளாலே சொல்லுவர் பெரியோர், எ-று. 433

பாவர்கள்சன்மதிலுஞ் சன்மத்தாதி
பலமின்றிப்பயிலநோய் கேந்திரகோணத்
திவர்களுற்றாற்கோபி யாவன்சென்மத்
திறைதின்றவீட்டோ னெட்டாறீராறில்
மேவியதுர்ப்பலன்சன்ம கன்மனெட்டோன்
மிசைச்சனியிந்நால்வர் திசையெய்தும்போது
மேவிடுந்துர்ப்பலர் திசைக்குட்சனிசஞ்சார
மெய்திடிடோவரிட்ட மெனவிளம்புமாறே.

(இ - ள்.) பாபக்கிரகங்கள் சன்மத்திலும் சன்மாதிபதி பலமில்லாமலு மிருந்தால் ரோக முண்டாகும். கேந்திரத்திலும், கோணத்திலும் பாபக்கிரகங்களிருந்தால் கோபியாவான். சென்மாதிபதி யிருந்த வீட்டுக்குடையவன் எட்டு, ஆறு, பன்னிரண்டிலிருந்தால் துர்ப்பலன், சன்மன், கர்மன், (பத்தாமிடத்தோன்,) எட்டிடத்தோன், சனி இந்நால்வர் திசைகள் வரும்போதும் துர்ப்பலர் திசைகளில் சனி சஞ்சாரஞ் செய்தாலும் அரிட்டமென்றே சொல்ல வேண்டும், எ-று. 434

ஆறிற்செங்கதிரதற்கேழ் சனிசெவ்வாய்நிற்கில்
அரிட்டமாகுங்காரி யரவொடுசென்மத்தும்
வீறுசெவ்வாய்நான்கிற் செங்கதிரோனேழின்
மேவியகாடனிலுடனே வியமேயாகும்
கூறுசசிக்கிருபாலுந் தீயோரிற்கில்
குழவியொடன்னைக் கரிட்டமேகூறலாகும்

சிறுகர்க்கடலக்னமாய் மூன்றாறிற்றீயோர்
செம்மையோர்பன்னிரண்டிற் றீதென்பருளோர்.

(இ - ள்.) ஆறில் சூரியனும், அதற்கேழில் சனியும் செவ்வாயுமிருந்தால் அரிட்ட முண்டாகும். சனியும், ராகுவும் சென்மத்திலும், அங்காரகன் நான்கிலும், சூரியன் ஏழிலும், இருந்தால் உடனே சிலநாளில் மரிக்கும். சந்திரனுக்கு இரண்டு பக்கங்களிலும் பாபக்கிரகங்களேயிருந்தால் குழந்தைக்குந் தாய்க்கு மரிட்டம் சொல்லவேண்டும், கடக லக்கினமாயிருந்து மூன்று ஆறுமிடங்களில் பாபக்கிரகங்களும், பன்னிரண்டில் சுபக்கிரகங்களு மிருந்தாலும் தீமையே யென்று சொல்லுவர் பெரியோர், எ-று. 435

அறுஞ்சன்மத்திலக்கினாதிபதி பாவனுப்வியமாறெட்டில்
மருவின்மெய்தனக்[illegible]ன்மை வருந்[illegible]க்கியுமுண்டாம்
உருவமாமிலக்கின[illegible]பதி யுத்தமத்தநிபனுமிப்
பெருமைசேர[illegible]தான்பானிற் பலனெனவிரைவிற்சொல்வாய்.

(இ - ள்.) சென்மலக்கினாதிபதி பாவியாய் பன்னிரண்டு ஆறு எட்டாமிடங்களிலிருந்தால் சரீரசுகமும், சவுக்கியமு முண்டாகும் இலக்கினாதிபதி உத்தமஸ்தானத்திற்குத் தலைவனும் பெருமைபொருந்திய ஐந்து ஒன்பதாமிடங்களிலிருந்தால் நல்ல பலனுண்டாமென்று சொல்லுவாயாக, எ-று. 436

வேறு

விரவியதோர்சரீரகாரகனும் வெய்யோன்
வியமெட்டிற்சனிதன் வீட்டிலுற்றால்
உருவுகுறைந்திடு மங்கத்தானமாகும்
ஒன்பதுபன்னொன் றிரண்டி லுற்றிட்டாலும்
பரவியதோரிமேஷத் துறினும்மெய்யிற்
பழுதறவெசவுந்தரிய பானுமாவான்
வரியுவிழுங்குழற்கொவ்வை மதுரச்செவ்வாய்
மட்டிலவுஞ்செங்கமல மலரின்மாதே.

(இ - ள்.) சரீரகாரனாகிய சூரியன் பன்னிரண்டு எட்டாமிடங்களாய், சனியின் வீட்டிலிருந்தால் உறுப்பு குறைந்து அங்கவீனனாவன். அன்றி ஒன்பது பதினொன்று, இரண்டாமிடங்களி லிருந்தாலும், சிங்கம் மேஷம் இவைகளிலிருந்தாலும் அங்கவீன மில்லாமலே ரூபலாவண்ணியத்துடன் பிறப்பானென்று வண்டு மொய்க்குங் கூந்தலையும் செவ்வாயையு முடைய லட்சுமிபோல்பவளே! * அறிபக்கடலை, எ-று. 437

வேறு

இடபமேடமன் டிம்மூன்றிராசியும்
அடருமலக்கின மாகவுதனுளே

தொடருமாவிடாகுறச் சூழ்ந்திடப்
படருமுத்தமமென்று பகர்வரே.

(இ-ள்.) ரிஷபம், மேஷம், கடகம் இம்மூன்றும் லக்கினமாய் அதில் ராகு இருந்தால் உத்தமமாமென்று சொல்லுவர், எ-று. 438

பகருலக்கினமன் பத்திலிரண்டினில்
வகையினிற்க லலதுலாபாதிபும்
இகலிற்பத்தி லிரண்டிலிருந்திடத்
துகளிலாத்திற் றேன்றுஞ்சுகமதே.

(இ-ள்.) லக்கினாதிபதி, பத்து, இரண்டாமிடங்களில் நிற்கவும், அல்லது லாபாதிபதியானவன் பத்து இரண்டாமிடங்களி லிருக்கவும் இருபது வயதில் சுகமுண்டாகும், எ-று. 439

வேறு

சுகந்தருஞ்சன்மலக்கினஞ்சரமாய்த் தோன்றிலாபத்திறைதிபனும்
மிகுந்திடுந்திரமேற்பாக்கியாதிபனும் விரும்பியவுபயலக்கினமேல்
நகர்ந்திடுமேழாமதிபதிமூவருந்திசை வாதைசெய்விக்கும்
பகர்ந்திடுமூவர்பதிமூவர்பதியுமிம்மூவர் பற்றியவிடங்களுந்தீதே.

(இ-ள்.) சன்மலக்கினம் சராசியாயிருந்து லாபாதிபதி திரராசியிலும், பாக்கியாதிபதி உபயராசியிலுமிருந்தால் ஏழாமிடத்தான் இவர்கள் மூவர் திசைகள் வரைக்கும் வாதை செய்விக்கும், இவையன்றி மூவரிடங்களும், இவர்கள் இருக்கிற விடங்களும் தீமையையுடையதே யாகும், எ-று. 440

தீதுறுஞ்சென்மகாலமிதிலெட்டிற் செங்கதிர்நிற்கிலேசுரமாம்
சீதமதிங்களுறிற்சலகண்டங் குசனுறிலாயுதப்பீடை
சோதிசேர்புந்திவியாதிபொன்மிருத்யு சுக்கிரனுற்றதரித்திரமாம்
ஓதியசனிதாயர்க்குறுந்தோஷ மொருவருநிற்கவொண்ணாதே.

(இ-ள்.) சென்மகாலத்தில் எட்டாமிடத்தில் சூரியனிருந்தால் சுரமும், சந்திரனிருந்தால் சலத்தால் கண்டமும், அங்காரகனிருந்தால் ஆயுதத்தால் பீடையும், புதனிருந்தால் வியாதியும், குருவிருந்தால் மிருத்யுவும், சுக்கிரனிருந்தால் தரித்திரமும், சனியிருந்தால் தாய்க்குத் தோஷமு முண்டாகும். ஆகையால் அவ்வெட்டாமிடத்தில் யாவரு மிருக்கக்கூடாது. ஆனால் எட்டுக் கிறைவனே நின்றால் ஒருவாறு நல்லதே, எ-று. 441

தேவர்கள்முதசந்திரன்முதலாய்ச் செங்கதிரளவிமட்டெண்ணி
மேவியதொகையைமூன்றினிற்பகுத்து மிச்சதொன்றாக்கவொன்றேல்
ஏவியதாழ்ச்சியிரண்டதேயாயி னினியதாதைக்குமையோகம்
பூவுண்மூன்றுறிற்பிதாவினுக்கதிகம் புத்திரற்கென்றுமிக்கிடுமே.

(இ-ள்.) சந்திரன் முதல் சூரியனிருக்குமிடம் வரைக்கும் வந்த தொகையை யெண்ணி மூன்றாற் பாகித்து கழித்து மிருந்தது ஒன்றானால் தந்தைக்குத் தாழ்ந்த யோகமாகும், இரண்டானால் தகப்பனுக்கு சமயோகமும், மூன்றானால் பிதாவுக்கு மேல் அதிக யோகமாமென்று சொல்லக்கடவாய், எ-று. 442

வேறு

அறிந்தலக்கினத் ததிபனுச்சமே
செறிந்துகேந்திரஞ் சேர்ந்துநல்லோருடன்
உறைந்துதூய குறைமனையுற்றிட
நிறைந்தசீவன் பெறுவனுநிச்சயம்.

(இ-ள்.) லக்கினாதிபதி உச்சனாயிருந்து கேந்திரத்திலேறி நல்லோர்களோடு சேர்ந்து சுபர்கள் வீட்டிலிருந்தால் நிறைந்த ஆயுள் பெறுவதுண்மை, எ-று. 443

வேறு

நிச்சயமாய்ச்சன்மாதிபதி திரலக்கினத்தும்
நீடுதிரவங்கிசத்து மனைதான்கேந்திரமாய்
இச்சையுடனிருக்கிலவ னிருந்தலக்கினந்தன்னில்
இனியவெருபலன்பெறுவ னவைசுபாங்கிசமாய்ப்
அச்சமறநிற்கிலவன் சிவபாரியந்தம்
ஆபரணத்துடன்கூடி யம்புவியில்வாழ்வன்
மெச்சியசன்மாதிபதி மறைகேந்திரத்தின்
[illegible]ராசியுமாகி வியாதியுற்றிடுவன்.

(இ-ள்.) லக்கினாதிபதி திரலக்கினத்திலும், திரவங்கிசத்திலு மிருந்து அவையும் கேந்திரமாயிருந்தால் அவனிருந்த ஸ்தலத்திலேயே அநேக பலன்களைப் பெறுவன். அவைகள் சுபக்கிரகங்களின் அங்கிசமானால் ஆயுள் வரைக்கும் ஆபரணங்களோடும் வாழ்வன் லக்கினாதிபதி பலமற்றவனாய் கேந்திரத்திலிருந்தால் கோபம். வியாதி யுறுவான், எ-று. 444

உற்றிடுஞ்சென்மத்ததிபதி யீரைந்திலிருக்க
உண்மையுடன்பத்ததிபதி யுபயலக்கினமாய்ப்
பற்றிடும்வியாழெட்டிற் சுபர்நோக்கிறில்
பயில்தந்தைபுத்திரனும் பகருவெருவாதே
வெற்றிகொளும்லக்கினத்தின் மிகுபாவிருக
மேவியசன்மாதிபதி மிகுபலவானாக
குற்றமுறும்பிணிகொள்வன் சுபர்சன்மகண்டால்
குணமாய்ப்பிணிவேறு கொடுமையுஞ்செய்யாதே.

(இ - ள்.) லக்கினாதிபதி பத்திலும், பத்துக்குடையோன் பலவீனப்பட்டுப் பன்னிரண்டு எட்டாமிடங்களில் சுபக்கிரகங்களின் பார்வையைப் பெற்றிருந்தால் மிக்க வயதுள்ள தந்தை புத்திரனாவான். லக்கினத்தில் பாபிகளிருக்கவும், லக்கினாதிபதி மிக்க பலவானாகவு மிருந்தால் நோய்க்குட்படுவான். சுபக்கிரகங்கள் பார்த்தால் அந்நோய் நீக்கி வேறெந்த கொடுமையும் செய்யாது சுகமடைவான், எ-று. 445

செய்யபுதன்பாவரங் கிசையினின்றாலும்
செறிந்தாந்தவுபயவங் கிசத்திநின்றாலும்
ஐயமறவேநிற்கிற் பிள்ளையிரட்டையதாம்
அந்தனுவேலக்கினமாய்ப் பிறபாநியாகில்
டையவதனின்றவர்கிம் காக்கிசத்திற்றுநேர
பரிந்துநிற்கப்புதன்சனியப் பதியினைப்பார்த்துத்
தூய்யகருக்கொண்டிருந்த மையுடனேகூடத்
தோன்றவேசிறுகுழவி தான்றோன்றுந்தானே.

(இ - ள்.) புதன் பாவராங்கிசையி லிருந்தாலும், உபயவங்கிசத்தி லிருந்தாலும் இரட்டைப்பிள்ளை பிறக்கும், தனுவே லக்கினமாயிருந்து அதில் பிறபாதியாறுல் அதிலிருந்தவர்கள் சிங்கவங்கிசத்தி லிருந்தாலும், புதனும், சனியும் அவ்வீட்டைப் பார்த்தாலும், கருப்பையோடுகூட குழவி வெளிப்பட்டுவிடும், எ-று.

வேறு

தோன்றுஞ்சன்மத்திரவி புதன்வெள்ளிபாசன்
தொடர்ந்தேயுற்றிடில்வலம் பக்கத்தின்மறுச்சொல்லேன்
ஊன்றுசெவ்வாய் திங்கள் சனிக்குவையிடப்பக்கத்
துறையுமறுவென்றென்றே யுரைப்பனக்கேண்மின்
என்றசுடர்க்கதிபனுற்றால் வயிற்றின்மதிசிரத்தில்
இயல்செவ்வாய்க்கிருப்பிடத்தி லெழிற்புதன்பக்கத்தில்
ஆன்றமறுவாசனுக்கு முகத்திவ்வெள்ளி தொடையில்
அருஞ்சனிக்குக்காலிடத்தி லாமறுவாமென்னே.

(இ - ள்.) சன்மலக்கினத்தில் சூரியன் புதன் சுக்கிரன் குரு இவர்களிருந்தால் அச்சாதகனுக்கு வலப்பக்கத்தில் ஒரு மறுவுண்டு. அன்றி அங்காரகன், சந்திரன், சனி இவர்களிருந்தால் இடப்பக்கத்தில் ஒரு மறுவுண்டு. அன்றி சூரியனிருந்தால் வயிற்றிலும், சந்திரனிருந்தால் தலையிலும், செவ்வாயிருந்தால் இடுப்பிலும், புதனிருந்தால் பக்கத்திலும், குருவிருந்தால் முகத்திலும், சுக்கிரனிருந்தால் தொடையிலும், சனியிருந்தால் காலிலும் மறுவிருக்கும், எ-று. 447

மறுவிலாச்செங்கதிர்கின்றி டத்துவிற்பிறந்தான்
வார்த்தைப்பிரசண்டனதி சூரனுமாயிருப்பன்

உறுகலையினன்றனமு மில்லான்சிங்கத்தில்
உதித்தவனிராக்கனிலான் மேடத்திரவிநிற்கப்
பிறந்தவன்கண்டத்திபிராய்த் தனத்திர்ணார்சசிப்பன்
பிறைநிடேலக்கினமாய்க் கதிரிருக்கப்பிறந்த
சிறுவன்விழியுன்னதவான் றிரவியவான்போலே
செவ்வமாய்க்கதிர்நிற்கத் திரவியங்கண்ணிலனே.

(இ - ள்.) தநுசு லக்கினமாய் அதில் சூரியனிருக்கப் பிறந்தவன் பிரசண்ட வார்த்தையாளனும் அதிசூரனுமாயிருப்பன், சிங்கத்தில் சூரியனிருக்கப் பிறந்தவன் வஸ்திர தனமும் தரித்திரனுமாவான். மேஷத்தில் சூரியனிருக்கப் பிறந்த இராத்திரியிற் கண்ணில்லாதவனாவான். கர்க்கடகத்தில் சூரியனிருக்கப் பிறந்தவன் கண்டத்திபிராய், அதிக தனமும், அழகிய கண்களையுடையவனுமாவான். துலாம் சென்மமாய் அதில் சூரியன் நிற்க திரவியமும் கண்ணுமில்லாதவனுமாவான், எ-று. 448

வேறு

கன்னிரிடபந்தகர்சிங் கங்கண்டசன்மலக்கினமாய்ப்
பன்னுசனிசெவ்வாய்கூடி பார்க்கிற்கொடிரண்டுளதாகும்
தன்னுசெவ்வாய்கண்பார்வை தான்செங்கொடியோன்றேகுற்றும்
என்னுசவுரிபார்வைக்கே யிருக்குங்கரியகொடியொன்றே.

(இ - ள்.) ரிஷபம், மேஷம், சிங்கம் இவை லக்கினங்களாகில் அதை சனி செவ்வாய் இருவருஞ் சேர்ந்து பார்த்தால் இரண்டு கொடியுண்டாகும். அங்காரகன் பார்த்தால் செங்கொடியாகும், எ-று. 449

கொடியபாம்பினுடனிரவி கூடியிருக்கிற்கொடிதலையாம்
கொடியசன்மமெட்டாதி கொருங்கிற்றோகசிரனுமாம்
படியிற்செவ்வாய்சனிசென்மம் பற்றியிருக்கிற்கல்லெரிப்பாம்
உடனேயவன்றன்விழிதனக்கே யுறக்கமிதியுண்டாமே.

(இ - ள்.) ராகு கேதுக்களுடன் சூரியனும் கூடியிருந்தால் தலையில் கொடியுண்டாகும் லக்கினாதிபதியும், எட்டாமிடத்தரசனும் சேர்ந்தால் ரோகமுடையவனாவான். அங்காரகனும், சனியும் சென்மத்திலிருந்தால் கல்லெரிப் புண்டாகும் அன்றியும் அவன் கண்ணுக்குப்பார்வை குறைவுமுண்டாகும், எ-று. 450

உண்டாஞ்சன்மந்திரமாயினதிலே சன்மத்தோனுமுறப்
பண்டேசனித்தனிரமத்தின் பதியாயிருப்பனட்டமத்தான்
மிண்டார்திரமாகிச்சனித்த வீட்டின்மரிப்பன்சன்மசரம்
கண்டாலவேதேசசஞ்சாரங் காணுமென்றேசுருதிதமே.

(இ - ள்.) சன்மலக்கினம் ஸ்திரமாயிருந்து அதில் சன்மாதிபனும் இருந்தால், இறக்குமளவு தாசனாயிருப்பன், லக்கினத்துக்கு எட்டாம்வீடு ஸ்திரமா

விருந்தால் பிறந்த அவ்வீட்டிலேயே யிறப்பான். சன்மலக்கினம் சரமானால் விதேச சஞ்சாரமுண்டாம், எ-று. 451

சருதுஞ்சன்மமுடயமதாய்க் கண்டார்சிலநாள்விதேசத்தில்
பரிதிசன்மாதிபனுகிற் பரவுக்கிரியிற்சஞ்சாரம்
சிரரோகஞ்சற்றுண்டென்பர் செவ்வாய்சன்மாதிபனுகில்
உருவாயுதத்தாலக்கினியா லுறுநோய்காட்டுமுண்மையிதே.

(இ - ள்.) சன்மலக்கினம் உபயராசியானால் சிலநாள் விதேச சஞ்சாரமும் சூரியன் லக்கினாதிபதியாயின் மலையின் சஞ்சாரமும், சிரோரோகமும் உண்டென்பார். அன்றி அங்காரகன் சென்மாதிபதியானால் ஆயுதத்தாலும் அக்கினியினாலும் நோயுண்டாவது உண்மையாகும், எ-று. 452

உண்மைப்புதன்சன்மாதிபனே யுளதாவித்தைகணிதமுடன்
வண்மைவியாபாரத்தொழிலேவரும் பொன்வெள்ளியினாலும்
பண்மைசுருதிபுணர்தனவான் பாங்கிற்சனித்தபதிநீங்கான்
தன்மைபகாச்சுபகர்மத் தலைவனென்றேசாற்றிடுமே.

(இ - ள்.) புதன் சன்மாதிபதியா யிருந்தால் வித்தை, கணித வியாபாரத் தொழில் இவைகளுண்டாகும். சன்மம் குரு, சுக்கிரனுடைய வீடானால் சுருதி புணர்வோனும், தனவானும், பிறந்த விடத்தைவிட்டு நீங்காதவனும் சுபகாரியத் தலைவனுமாவான், எ-று. 453

சாற்றுமதிசன்மாதிபனே சரீரகாந்தியுளனாகவான்
சேற்றுச்சரக்கைவிற்றுண்பனிவ்வு சன்மத்தைப்பார்க்கில்
போற்றுந்தந்தையருகிருக்கச் சனித்தானென்றேபுகல்வார்கள்
ஆற்றுஞ்சரத்தின்மதியிருக்க வந்தான்றந்தையன்றெனவே.

(இ - ள்.) சந்திரன் சன்மாதிபதியாயிருந்தால் சரீரகாந்தியும், சுகமுள்ளவனும் சரக்கு வியாபாரியுமாவான். அன்றி அச்சந்திரன் சன்மவீட்டைப் பார்க்க தந்தையிருக்கும்போது பிறந்தவனென்றுஞ் சரராசியில் சந்திரனிருந்தால் தகப்பன் பிறந்த அன்றைக்கு வாதனென்றுஞ் சொல்லுவர், எ-று. 454

எனவும்வெள்ளிபுதனடுவி லிந்துவிருக்கவந்தருகே
வினவிற்றந்தையிருந்திடுவன் வெய்யோன்சரத்தின்மதிபத்தில்
தனதாயிருக்கப்பிதாவிருக்குந் தலத்திற்சனித்தானென்பர்
சினமார்சனிசென்மத்தேழிற் செவ்வாயேனும்பிதாசேதம்.

(இ - ள்.) சுக்கிரனுக்கும், புதனுக்கும் மத்தியில் சந்திரனிருந்தால் சமீபத்தில் தந்தையிருப்பான். சூரியன் சராசியிலும் சந்திரன் பத்திலும் இருக்க பிதா விருந்த விடத்திலேயே சனித்தவனவன். சனி சன்மத்திலும் அங்காரகன் ஏழிலு மிருந்தாலும் தகப்பனுசேதமாகும், எ-று. 455

தேசார்மனிதலக்கினமாய்ச் செவ்வாய்ப்பார்க்கச்சனித்தவனும்
மாசார்மசக்கரையென்றே வழுத்தலாகுஞ்சனிசெவ்வாய்
நேசார்திரிகோணத்தின்மதி நிற்கப்பிறந்தசேயினையே
கூசாளன்னையெறிவாளப்பதைக் குருநோக்கிற்கைக்கொள்வாளே.

(இ - ள்.) மிதுனம், கன்னி, துலாம், கும்பம் என்னும் இலக்கினங்களாய் இவைகளை அங்காரகன் பார்க்கப் பிறந்தவன் மசானக்கரையிற் பிறந்தவனென்றே சொல்லலாம். சனியும், அங்காரகனும் நேசமாய் இவர்கள் திரிகோணத்தில் சந்திரனிருக்கப் பிறந்தவனைத் தாய் எறிய கூசாளாம். அந்தச் சந்திரனைக் குருபார்த்தால் கைக்கொள்வாள், எ-று. 456

கொள்ளும்பாவமதிசன்மத்துறுக்கச் செவ்வாய்சனியேழில்
மெள்ளவிருக்கிற்குருநோக்க விரும்பிடுமுத்தார்வளர்க்கவுய்வன்
தெள்ளும்புதன்பாம்பரசன் மதிசேர்ந்துசன்மத்திருந்திடவே
பின்னைபிறக்கில்வமிசத்தைக் கெடுப்பனெனவும்பேசுவரே.

(இ - ள்.) பாபச்சந்திரன் சன்மத்தில் சேரவும், அங்காரகனும் சனியும் ஏழி லிருக்கவும், அவர்களைக் குருவும் பார்த்தால் பிறர்வளர்க்க வளர்வன் புதன் ராகு கேது குரு இவர்கள் சந்திரனுடன் சேர்ந்து சன்மத்திலிருக்கப் பின்னைபிறந்தால், வமிசத்தைக் கெடுப்பவனவன், எ-று. 457

பேசும்லக்கினஞ்சரலக்கினம் பிறக்கத்துமனிருந்திடவே
வீசம்வாழுன்குறையும்விதி பாதனிருக்கிற்புகழ்நாசம்
மாசில்பரிவேடனக்கமதிபோஞ் சக்கிரசாபனுமின்
மேசின்குலங்களைக்கந்து சன்மேமலிதனம்போமெனப்பேசே.

(இ - ள்.) ஜன்மலக்கினம் சரலக்கினத்தில் துமனிருந்தால் ஆயுள்குறையும் வியதிபாதனிருந்தால் கீர்த்திநாசம். பரிவேடனிருந்தால் புத்திபோகும் சக்கிர சாபனிருந்தால் குலங்கள் நசிக்கும், தூசனிருந்தால் தனம் நாசம் என்று சொல்லுக, எ-று. 458

பேசும்லக்கினமீனண்டுற் பிறந்தவர்களுக்கெல்லாம்
பாசமாம்மகாதிசையின் பலன்களைப்பார்க்கும்போது
தேகஅசுரியபாம்பின் றிசைவரிற்பார்க்கும்போது
தூசுபொன்சோபநற் சுபபலன்பெறுவர்தாமே.

(இ - ள்.) லக்கினம், மீனம், கடகம், இவற்றில் பிறந்தவர்களுக் கெல்லாம் மகாதிசைப் பலன்களைப் பார்க்கும்போது ராகுதிசை வரும்போது சுபாக்கியங் களையும், வஸ்திரம் பொன் சோபனம் சுபகாரிய நடாத்தல் முதலிய பலன்களைப் பெறுவர், எ-று. 459

தாரிசெறிமகரக்கன்னி தனிற்பிறந்தோர்கட்கெல்லாம்
பார்செறிமகாதிசையின் பலன்களைப்பார்க்கும்போது

சீர்பெறுகேதுவான திசைவரும்போதுசெல்வம்
ஊர்திசாரசாரச் சன்மானமுண்டாங்கண்டீரே.

(இ - ள்.) மகரம் கன்னி இவற்றில் பிறந்தவர்களுக் கெல்லாம் மகாதிசைப் பலன்களைப் பார்க்கும்போது கேது திசையில் செல்வம், அரசரால் சன்மான முதலியவை யுண்டாகும், எ-று. 460

வேறு.

பேசுஞ்சன்மசரராசி பிரியாச்சரத்திலாதிபனும்
பாசஞ்சரத்திலுறத்தோன்றிப் பார்க்கிற்றூலசரீரனுமாம்
வீசுலக்கினஞ்சரமாயவ் வீட்டுக்குடையோன்சரத்திருக்க
தேசம்விடுத்தேசஞ்சாரந் திகழுத்திகிலெனைச்சொல்வாய்.

(இ - ள்.) சன்மலக்கினம் சராசியாயிருந்து அதற்கு அதிபனும் சரத்திலேயே யிருந்து லக்கினத்தைப் பார்த்தால் ஸ்தூல சரீரமுள்ளவனுவன். லக்கினம் சரமாய் அவ்வீட்டுக்குடையவனும் சரத்திலேயே யிருந்தால் தேசசஞ்சாரஞ்செய் வானென்றே சொல்லுக எ-று. 461

முதல்பாவம்

முற்றிற்று.

இரண்டாம்பாவம்

நேத்திர பலன்

எழிற்கண்ணதிபன் றீக்கோளா யெட்டினிற்சனியோடிந்தும்
பழிகொளாறுமிடத்திற் பானுவேற்பூனைக்கண்ணும்
விழிகள்கோன்பாவனுய் லக்கினதிசைமேவியாறெட்
டொழிவியத்துகூலோகப்புத் துறுங்குருடாகத்தானே.

(இ - ள்.) நேத்திரஸ்தானுதிபதி பாபக்கிரகமாய் எட்டினில் சனியும் சந்திரனுமிருந்து ஆறாமிடத்தில் சூரியனிருந்தால் பூனைக்கண்ணுகும், நேத்திராதிபதி பாவியால் லக்கினுதிபதியைச் சேர்ந்து ஆறு எட்டு பன்னிரண்டாமிடத்தி லிருந்தால் கர்ப்பத்திலேயே கண்குருடாயிருக்கும். கர்ப்பத்தரிக்குங்கால் மாதாவு தரத்தில் மலசல நிறைந்திருந்தால் சனிக்குங் குழந்தை குருடாகும், எ-று. 462

சுக்கிரநேத்திராதிபதியெனத் தோன்றியெட்டில்
திக்கவோராறில்வெய்யோ னிற்கிற்கண்ணேறுபிற்காலம்
தக்கவேறரிமேஷத்திற் சனிகுசன்றானுற்றாலும்
மிக்கதாமதாத்தான மெழிற்கொடிசுற்றித்தோன்றும்.

(இ - ள்.) சுக்கிரன் நேத்திராதிபதியா யிருந்து எட்டாமிடத்திலிருக்கவும், ஆறாமிடத்தில் சூரியனிருக்கவும் பின்காலத்தில் கண்ணேறுயுண்டாகும். ரிஷபம், சிங்கம் மேஷம் இவ்விடங்களில் சனி குசர்களிருந்தால் உதட்டிற் கூனமுண்டாம். பின்னையும் கொடிசுற்றிப் பிறக்கும், எ-று. 463

லக்கினத்ததிபனேடு மிரண்டுடைத்ததிபன்சுங்கன்
இக்கெனக்கூடமூன்றிற் செங்கதிர்நிற்குமாகின்
ஒக்கவேகண்ணில்லாம லுதிப்பனுதித்தனல்லால்
மைக்கணும்மதியுற்றன் மாலைக்கண்ணாகுமென்றே.

(இ - ள்.) லக்கினதிபதியோடு இரண்டுக்குடையோனும் சுக்கிரனும் கூடி மூன்றாமிடத்திற் சூரியனுமிருந்தால் கண்ணில்லாமற் போகும். சூரியனல்லாமல் சந்திரன் குரு இருந்தால் மாலைக்கண்ணுகும், எ-று. 464

குறைவில்நேத்திராதிசுங்கன் லக்கினத்தோனுங்கூடி
நிறையமூன்றுமிடத்தி னிற்கினேத்திரனேயாகும்
கறைகுழலக்கினுதி யிரண்டுடைத்ததிபன்வெள்ளி
அறையவோரிடத்தினிற்கி லக்ககுருவன்கண்டீர்.

(இ - ள்.) நேத்திராதிபதியும் சுக்கிரனும் லக்கினுதிபதியுங்கூடி மூன்றாமிடத்திலிருந்தால் கண்ணேறுயுண்டாகும். லக்கினுதிபதியும் இரண்டுக் குடையவனும் சுக்கிரனும் கூடி ஒரேவீட்டிலிருந்தால் குருடனுவான், எ-று. 465

வேறு.

நேத்திரத்தானத்ததிபதி சுங்கனுமி
நிறைசன்மாதிபைக்கூடி நின்றிடினின்றால்
நேத்திரரோகம் மத்தநேத்திராதி
நிலவாதிப்புகருடனே யிரண்டினின்றால்
நேத்திரத்தானிசுகபோடு மெளிகொடாது
நின்றகடகத்தனி லுற்பவிக்கப்போது
நேத்திரத்தான்மதிசுங்கன் கூடிநின்றால்
நிகழ்பிறவிக்குருடனுமாய் நிற்பன்றானே.

(இ - ள்.) நேத்திராதிபதி சுக்கிரனுய் அவன் லக்கினுதிபதியோடு கூடி மூன்றிலிருந்தால் கண்ணேறுயுண்டாம். நேத்திராதிபதி சந்திரனுய் சுக்கிரனுடன் இரண்டிலின்றால் இராத்திரியில் கண்தெரியாது. கடகலக்கினத்தில் பிறந்தவனு

யினும் சேத்திரஸ்தானாதிபதியும் சந்திரனும் சுக்கிரனும் கூடியிருந்தாலே பிறவிக் குருடனாவான், எ-று. 466

சிங்கமேநேத்திரத் தானந்தானுகிச்
செங்கதிர்சுக்கன்கூடிச் சிங்கத்தேற
அங்கவரோடெந்தத் தானாதிபதியேனு
மவரவர்தங்காரகரா யினும்வந்தாற்றானும்
தங்கியபேர்க்குரியர்தமக் கெய்துநேத்திரநோய்
தனதுபதியாகிலுச்சத் தானாகினன்மை
துங்கமதிவியத்துறிலோ விழியொன்றேயூனம்
சூரியனுங்கூடிவ்விழி யோவிரண்டும்போமே.

(இ - ள்.) சிங்கராசி நேத்திரஸ்தானமா யிருந்து சூரியனும் சுக்கிரனுஞ் சேர்ந்து சிங்கத்திலிருக்க அவர்களோடு எந்த இராசிக்கதிபதியேனும் அவ்வவர்களுடைய காரகர்களாயினும் வந்துசேர்ந்தால் கண்ணோயுண்டாம். அந்தக்காரகர்களுக்கு அவ்வவீடு ஆட்சியாயினும் உச்சமாயினும் நன்மையாம். சந்திரன் பன்னிரண்டிலிருந்தால் ஒருகண்ணும் கூடச் சூரியனுமிருந்தால் இரண்டு கண்களும் குருடாம், எ-று. 467

வேறு

சோதிலக்கினத்திற் குசன்சூழ்ந்திட
ஆதுமட்டமத்தோன் கேந்திரத்துறப்
போதவட்டமத்திற் பாவர்போந்திட
ஏதநேத்திரநோ யாம்வந்தெய்துமே.

(இ - ள்.) நேத்திரலக்கினத்தில் அங்காரகனும் அட்டமாதிபதி கேந்திரத்திலும் அவ்வட்டமத்தில் பாபக்கிரகங்களு மிருந்தால் நேத்திர ரோகமுண்டாகும், எ-று. 468

வேறு

சேருஞ்சுக்கன்சென்மாதி திங்கள்கூடியாறெட்டில்
சேரும்வியத்திற்பலமற்றே நிற்கின்மாலைக்கண்ணாகும்
ஏருங்கதிரோன்சென்மாதி யிரண்டாமாதிவெள்ளியொன்றாய்த்
திரும்வியமாறெட்டி லுறச் செப்பும்பிறவிக்குருடனாமாம்.

(இ - ள்.) சுக்கிரனும் சன்மாதிபதியும் சந்திரனுங்கூடி ஆறு எட்டு பன்னிரண்டாமிடங்களில் பலமற்றிருந்தால் மாலைக்கண்ணாகும், சூரியனும் சன்மாதிபதியும் இரண்டுக்குடையோனும் சுக்கிரனும் ஒன்றாய்க்கூடி பன்னிரண்டு ஆறு எட்டாமிடங்களி லிருந்தால் பிறவிக்குருடனாவான், எ-று. 469

ஆமேயிரவிசுக்கிரன்சென் டாதிசென்மத்தாதிபிவர்
தாமேகூடியவரவர்க டானந்தனக்காறெட்டுவிய

தாமேயிருக்கிலவரவர்க டிருட்டிக்கூனஞ்சார்ந்திடுமே
காமேசொல்வம்பலப்பார்வை நயனபலன்கண்டிடநுஞ்சொல்லாய்.

(இ - ள்.) சூரியன் சுக்கிரன் இரண்டுக் குடையோன் சென்மாதிபதி இவர்கள் கூடி அவ்வவர்களுடைய ஸ்தானங்களுக்கு ஆறு. எட்டு பன்னிரண்டாமிடங்களி லிருந்தால் அவர்கள் கண்களுக் கூனமுண்டாகும் என்று பெண்ணே!. சொல்லுக, எ-று. 470

சொல்லும்பலனேத்திரத்தானந் சூழ்ந்தாராதிபாராற்பலன்கள்
எல்லோன்செவ்வாய்மேனோக்க விந்துங்குருவுஞ்சமபார்வை
வெல்லும்புதற்கும்வெள்ளிக்கும் விழிபக்கத்தேநோக்கியிடும்
நல்லாராகுசனிதனக்கே நயனக்கீழ்நோக்காயிடுமே.

(இ - ள்.) கேந்திரத்தானத்திலிருக்கிற ஒதிபர்களாற் பலன்சொல்லுமிடத்து சூரியன், அங்காரகர்களுக்கு மேற்பார்வையும், சந்திரனும் குருவும் சமபார்வையும், புதனுக்கும் சுக்கிரனுக்கும் பக்கத்துப் பார்வையும், ராகு, சனியும் கீழ்ப்பார்வையு முடையவர்களாவார்கள், எ-று. 471

இடுஞ்சென்மாதிதனைச்சனிகண்டிடக் கண்ணோயாமிரண்டாதி
உடன்சூரியனுங்கூடிநிற்க மற்றுங்குளிகனுடன்சனிதான்
அடைந்துநோக்கக்கண்ணோயா மவ்வீடேசரராசியெனில்
தொடர்ந்தேகண்ணீர்பாயித் துளிக்குமவன்றன் விழிதனிலே.

(இ - ள்.) லக்கினாதிபதியைச் சனி பார்த்தால் கண்ணோயாம், அன்றி, இரண்டுக்குடையோனும், சூரியனும், குளிகனுடன் சனியும் சேர்ந்து பார்க்கவும் கண்ணோயாம். அந்தவீடு சலராசியாகுதல் அவனுடைய கண்ணில் நீர் வந்துகொண்டேயிருக்கும், எ-று. 472

சோதிரவியும்பாவருடன் சூழ்ந்துபலமேற்றேவியத்தின்
மீதிலிருக்கவலக்கண்போம் விரவுஞ்செவ்வாய்பலனற்றே
ஏதவியத்திலுறைந்திடிலோ விடக்கண்ணுனமிவ்விருவர்
தீதாம்வியத்திற்கூடிநிற்கத் தெரியாதிரண்டுமிட்டிடுமே.

(இ - ள்.) சூரியன் பாபக்கிரகங்களோடு கூடிப் பலமற்றுப் பன்னிரண்டில் வந்திருந்தால் வலதுகண்போகும். அங்காரகன் பலனற்று பன்னிரண்டில் இருந்தால் இடதுகண்போகும், இவ்விருவருங்கூடி குற்றஞ்செய்கிற பன்னிரண்டாமிடத்திலிருந்தால் இரண்டு கண்ணும் தெரியாதாம், எ-று. 473

இட்டமுடனேசனிசெவ்வாய் சேர்ந்திரண்டிற்பன்னிரண்டில்
கிட்டியிருக்கில்விழிக்கூனங் கிரணரவிசந்திரன்வியத்தில்
ஒட்டியிருக்கில்விழிகோயு முற்றாந்தகனுப்பிறக்கும்வரை
அட்டாவிசேயமதியசன் சுக்கனேவரெக்குலினும்.

(இ - ள்.) சனியும் அங்காரகனுஞ்சேர்ந்து இரண்டு பன்னிரண்டா மிடங்களிலிருந்தால் கண்ணுக்கூனமுண்டாம். சூரியனும் சந்திரனும், பன்னிரண்டிலிருக்கில் கண்ணோயுண்டாம். சூரியன் அங்காரகன் சந்திரன் குரு சுக்கிரன் இவ்வைவர்களும் எங்கேயிருந்தாலும் குருடனாய்ப் பிறப்பன், எ-று. 474

வாக்கோனிரவிவெள்ளி பனிரெண்டிலா திருக்கவவருடனே
பொக்குஞ்சன்மாதிபன் கூடிப் பொருந்திற்பிறவியந்தகனும்
தங்குமைந்தாமாறுநிதானுந் சன்மந்தனிலிருக்கச்
சுக்கனிரண்டாதிபைக்கூடிற் சொல்கண்பிடுங்கப்படுங்கண்டீர்.

(இ - ள்.) சூரியன், சுக்கிரனிவர்கள் பலமற்றிருக்க அவர்களோடு சன்மாதிபதியும் சேர்ந்தால் பிறவிக் குருடனாவான். இந்த ஆறக்குடையவர்கள் சன்மத்திலிருக்கவும், சுக்கிரன் இரண்டுக்குடையோனுடன் கூடினால் கண்பிடுங்கப்படும், எ-று. 475

காணுநேத்திரயோகமினிக் கதிர்சேர்மதியுங்காரியிவர்
வேணுமிரண்டிலாறெட்டில் வியத்தினிற்கோர்கமிகத்
தோதா[illegible]யிரண்டிற்பன்னிரண்டிற் சோமன்பரிதிகூடினும்
பூணுமெ[illegible]டிரண்டதனிற் பொல்லரிருக்கக்கண்ணோயே.

(இ - ள்.) சூரியன் சந்திரன் சனி இவர்கள் இரண்டு ஆறு எட்டு பன்னிரண்டாமிடங்களிலிருக்க மிகுந்த கண்ணோயுண்டாம். இரண்டு பன்னிரண்டாமிடங்களில் சந்திரனும் சூரியனும் கூடியிருந்தாலும், அன்றி எட்டு இரண்டாமிடங்களில் பாபக்கிரகங்களிருந்தாலும் கண்ணோயுண்டாம், எ-று. 476

வேறு

வேல்விழிமாதே வலம்புவலக்கண்
சாலவிரண்டா மிடங்கொண்டும்
ஏனுமிடக் கண்ணீராறும்
சுபாசுபங்களைத் தேர்ந்தே.

(இ - ள்.) வேல்போலும் கண்ணாய்! இரண்டாமிடத்தைக்கொண்டு வலக்கண் பலத்தையும், பன்னிரண்டா மிடத்தைக்கொண்டு இடக்கண் பலத்தையும் சொல்லுக, எ-று. 477

வாக்குப்பலன் (வேறு)

குடும்பத்தானாதிபோடு குலவியபுதனுங்கூடி
உடன்மடவாருந்தானத் துற்றிடி லூமையாகும்
இடும்புமூன்றுமாதி லக்கினத்ததிபன்றானும்
இடம்பெறக்கூடி லூமையாகியே திரிவன்றானே.

(இ - ள்.) குடும்பஸ்தானாதிபதியோடு புதனுங்கூடி ஆறாமிடத்திலிருந்தால் ஊமையாகும். மூன்றுக்குடையோனும், லக்கினாதிபதியும் கூடினால் ஊமையாய்த் திரிவன், எ-று. 478

வேறு

வாக்குத்தானாதிபோடு புதனுங்கூடி
வருஞ்சென்மமூன்றாறின் மருவி லூமை
ஆக்குமவருடனெந்தத் தானத்ததி
யவரவர்தங்காரகரா கிலும்வந்துற்றால்
ஊக்கமுறவவரு மூமையாவர்
குற்றவர்தம்பதியாகி லுச்சமாகில்
வாக்கனமறமொழிவன் கண்டீர்மண்டும்
வனமுமுமுக்கனியுமென வழுத்துமாதே.

(இ - ள்.) வாக்குஸ்தானாதிபதியோடு புதனுங்கூடி சென்மம் மூன்று ஆறுமிடங்களிலிருக்க ஊமையாகும். அவர்களோடு எந்தத் தானாதிபதியோடு, அவரவர்களுடைய காரகர்களாவது கூடினால் ஊமையாவார். அப்படிச் சேர்ந்த இடம் அவரவர்களுக்கு ஆட்சியானாலும், உச்சமானாலும், நல்ல வாக்குடனிருப்பனென்றும் அறிவாய் பெண்ணே! எ-று. 479

வேறு

மாதுலமன்னனோடு வாக்குத்தானாதிகூடிக்
கேதுவியமாறெட்டிற் கூடினூமையாவான்
ஓதியதந்தைதாய்மற் றோர்தானந்தனக்கவ்வாறு
நீதியாயிருக்கி லூமை நிச்சயமென்றுகூறே.

(இ - ள்.) புதனுடன் வாக்குஸ்தானாதிபதியுங் கூடிப் பன்னிரண்டு, ஆறு, எட்டாமிடங்களிற் கூடினால் ஊமையாவான். தந்தை தாய் மற்றவர்கள் ஸ்தானங்களுக்கும் இப்படியே யிருந்தாலும் ஊமையென்றே நிச்சயமாய்ச் சொல்லுக, எ-று. 480

கூறியலக்கினாதி சுக்கிரன்கூடியாறெட்
டேறியவியத்தினிற்க வூமையாமிரண்டாமாதி
பேறுடனவரைக்கூடி லூமையாய்ப்பின்மற்றோரும்
சேறிடாதவரைக்கூடி லூமையாய்த்திரிவன்றானே.

(இ - ள்.) லக்கினாதிபதி சுக்கிரனோடு கூடி ஆறு, எட்டு, பன்னிரண்டாமிடங்களி லிருந்தால் ஊமையாம், அன்றி, இரண்டுக்குடையோன் சுக்கிரனைச் சேர்ந்தால் ஊமையாம். மற்றைய கிரகங்களும் சுக்கிரனைக்கூடினாலும் ஊமையே யாவான், எ-று. 481

வித்தியாபலன் (வேறு)

சனியலாதவர் தானமேகூடிப்
புனிதராயிருக்கப் புலவனுக்கமைத
இனிதெனவுரைத்தே யெண்டிசையெங்கும்
மனுவுடனீதி மன்னனாகுவனே.

(இ - ள்.) சனி தவிர மற்றைய ஆறு கிரகங்களும் ஒன்றாய்க்கூடி சுகமாயிருந்தால் புலவனாய்க் கவிதை புனைந்துக் கீர்த்திபெறுவோனாவான், எ-று. 482

வேறு

பொன்புதனிரண்டுடன்கோவும் பொருந்தியகேந்திரத்தில்
பின்றிரிகோணமேறிற் பெற்றிடும்வித்தைதலாபம்
இன்பமாயிவரெட்டாறி லிருந்திடிலில்லைவித்தை
அன்புசேர்கணக்கனுச்ச மாகினல்வித்தைகூறே.

(இ - ள்.) குருவும், புதனும், இரண்டாமதிபனும் கேந்திரத்தில் அல்லது திரிகோண மேறினல் வித்தை லாபமுண்டாம். இவர் எட்டு ஆறாமிடங்களில் இருந்தால் வித்தையில்லையாம். புதன் உச்சமானாலோ நல்ல வித்தை புண்டாகும், எ-று. 483

கூறியபுதனுமேழா பதிபனுங்குருவுங்கூடிப்
பேறுடன்றிரிகோணங்கள் கேந்திரம்பிடித்திட்டாலும்
வீறியதனதுவீட்டும் விரும்பியவிரண்டாம்வீட்டும்
சீறிடாதிருந்தபோது திடவித்துவானுமாமே.

(இ - ள்.) புதனும் ஏழுக்குடையோனும், குருவும் கூடி திரிகோணம் கேந்திரங்களி லிருந்தாலும், தன் வீட்டிலும் இரண்டாம் வீட்டிலும் இருந்தாலும் பலத்த வித்துவானவான், எ-று. 484

ஆனகேந்திரத்திற்புந்தி யிருக்கவிரண்டாம்வீட்டாதி
தானுமேயுச்சமாகத் தரும்புகருபயமேவ
ஊனமின்மூன்றினல்லோ ருறவெள்ளியுச்சமாக
மானிலத்துதித்தகாளை சோதிடம்வழுத்தவல்லான்.

(இ - ள்.) கேந்திரத்தில் புதனும், இரண்டுக்குடையோன் உச்சனும், சுக்கிரன் உபயராசியிலும், மூன்றில் சுபக்கிரகங்களும், சுக்கிரன் உச்சமாகவும் பிறந்தவன் சோதிடம்சொல்ல வல்லவனவான், எ-று. 485

வேறு

வல்லிரண்டிடத் தோன்குருசுக்கிரன்
செல்லுமூலத்திரி கோணமுச்சமாம்
அல்லபாவ ரனுகநோக்காவிடில்
நல்லதர்க்கம் படிப்பனலம்பெற.

(இ - ள்.) இரண்டுக்குடையோனும், குருவும், சுக்கிரனும், மூலத்திரிகோணம், உச்சம் இவ்விடங்களில் பாபக்கிரகங்களின் சேர்க்கையும் பார்வையுமில்லாதிருந்தால் நன்மையாய்த் தர்க்கம் படிப்பவனவான், எ-று. 486

நலந்திறக்கதிரண் டாம்வீட்டதிபனுங்
குலந்தெறிந்த குருவும்பலமதாய்ப்
பலந்தெறிந்த புகர்பார்க்கநின்றிடில்
இலந்தெறிந்த விலக்கணம்பேசுவான்.

(இ - ள்.) இரண்டுக்குடையோனும், குருவும் பலமாய்ச் சுக்கிரன் பார்வை பெற்றிருந்தால் சாமர்த்தியமாய் இலக்கணம் பேசுவோனவன், எ-று. 487

வேறு

பிரசன்னசேர் திரிகோண கேந்திரத்தும்
பிரியமுடன்புதனிற்கிற் றமிழ்வித்தைபெருகும்
திருக்குமிலாதுயர்செவ்வா யொன்றிருந்தகாலத்
தெலுங்குவித்துவானவன் கருங்கோளேறிற்கில்
நிரக்கவேதுருக்காரியர் பாஷைதமக்கு
நிபுணவித்துவானவன வெள்ளிகுருமேவில்
இரக்கமாஞ்சாஸ்திரங்க டமக்குமதிவல்ல
திடவித்துவானென்றே செப்பிடவுமாகும்.

(இ - ள்.) புதன் திரிகோண கேந்திரங்களிலிருந்தால் தமிழ் வித்தை புண்டாம். அவ்விடம் செவ்வாயிருந்தால் தெலுங்கு வித்துவானவான். ராகுவிருந்தால் துருக்கு ஆரியபாஷைக்கு வல்லவனவன். சுக்கிரன் குருவுமிருந்தால் சாஸ்திரங்களில் வல்ல வித்துவானென்று செப்பலாம், எ-று. 488

ஆகுமிரண்டாதிபனும் புதனுமுச்ச
மாயிருக்கச்சன்மத்தி லரசனிற்க
ஏகனுப்சனிபெட்டிலுறக் கவிதவித்தை
இவனுக்குக்கோபுராங்கிசத்தின்மந்தனிருக்க
வாருடனங்காரக னங்கிசத்தரசனிற்க
மறையோதுவானிரண்டா மாதிகதிராகத்
தாகமுடன்செங்கதிரைத் தமனியனுங்காணத்
தர்க்கசாஸ்திரப்படிக்குத் தாழ்டீகனுங்கண்டீர்.

(இ - ள்.) இரண்டுக்குடையோனும், புதனும் உச்சமாகவும், ஜென்மத்தில் குருவும், சனியெட்டில் தனியனாயிருந்தால் கவிதவித்தையும், இவனுக்குக் கோபுராங்கிசத்தில் சனியும், அங்காரகன் அங்கிசத்தில் குருவுமிருந்தால் வேதமோத வல்லவனவன். இரண்டுக்குடையோன் சூரியனும், அவனைக் குருகாண பிரபல தர்க்கம் படிப்பவனவன், எ-று. 489

கண்டசன்மலக்கினத்திற் சுக்கிரன்பொன்னிருவர்
கலந்துநிற்கவேந்தனு நற்கதிரோன்றானுமே
மண்டயசிங்காங்கிசத்தி லேறிநிற்கவக்க
மற்றுஞ்சுக்கிரன்கடக வாங்கிசத்தின்மன்ன
அண்டியிருந்தப்படியிருக்கச் சனித்தான்றனல்ல
அவனியிற்சாத்திரமாறு மறிந்திடுவானென்றே
எண்டிசையெங்கும் பாவுகீர்த்திமானுகி
இருப்பனெனக்கலைவல்லோ ரியம்பிடுவர்தாமே.

(இ - ள்.) ஜன்மலக்கினத்தில் சுக்கிரனும் குருவும் இருவருங் கலந்து நின்றாலும், குருவும், சூரியனும், சிங்காங்கிசத்திலேறி யிருந்தாலும், சுக்கிரன் கடகாங்கிசத்தி லிருந்தாலும், வந்துபிறந்தவன் உலகத்தில் ஆறுசாஸ்திரங்களையு மறிந்து கீர்த்திமானுயிருப்பனென்று சொல்லுவர் பெரியோர், எ-று. 490

வாரேறுமுலையாய்கேள் சன்மந்தன்னின்
மதிமகன்சூரியன் குருவுமமர்ந்திருந்தில்
சீரேறுதனம்படைத்துப் புலவனாவன்
செங்கதிர்சுக்கிரன்புந்தி திங்கள்சனியும்
பாரார்பொன்னிவர்க ளொருவீட்டிற்கூடில்
பரிமளிக்கும்வித்தைப் பிரபலனுமாகித்
தாரேறுபுயவலியன் றனவானாவன்
சாத்தகுணவானுமாய்த் தரையில்வாழ்வன்.

(இ - ள்.) கச்சிறுக்கிய தனபாரமுடையாளே! சன்மலக்கினத்தில் புதனும், சூரியனும், குருவுமிருந்தால் சிறப்பமைந்த செல்வமுடைய புலவனாவன். சூரியன், சுக்கிரன், புதன், சந்திரன், சனி, குரு இவர்கள் ஒரு வீட்டிற் கூடினால் பரிமளிக்கும் வித்தைப் பிரபலனும் புயவலியனும், தனவானும், சாத்தகுணனுமாய்த் தரையில் வாழ்வன், எ-று. 491

தனபலன்

சென்மாதிபதிக்கிரண்டா மிடத்தினல்லோர்
திறன்மூன்றாமிடத்தீயோர் நான்கினல்லோர்
நன்மார்க்கமுடனிருந்தாற் றனவான்சன்ம
லக்கினத்தோனுபயத்தி னண்ணினும்பொன்னுளனும்
சன்மார்க்கமுடனந்த தனபாவத்தில்
தரும்பாக்கியலாபாதி தரித்திற்பார்க்கில்
நன்மார்க்கமறவனைக் குபேரன்போலத்
தொலைவிலாத்தனம்படைப்ப னெனச்சொல்வர்சால.

(இ - ள்.) ஜென்மாதிபனுக்கு இரண்டாமிடத்தில் சுபக்கிரகங்களும், மூன்றாமிடத்தில் பாபக்கிரகங்களும், நான்கில் சுபர்களும் நன்மையுடனிருந்தால் தனவானாவன். சன்மலக்கினத்தோன் உபயராசியி லிருந்தாலும், திரவியமுள்ளவனே யாவன். அந்தத் தனஸ்தானத்தில் பாக்கியாதிபதியும், லாபாதிபதியும் இருந்தாலும், பார்த்தாலும் அவனைக் குபேரனைப்போல் செல்வமுடையவனென்று சொல்லுவர், எ-று. 492

சாதகன்லக்கினமுதலாய் லக்கினாதி
தானிருந்தவீடளவு மெண்ணிக்கண்ட
ஓதுதொகைலக்கி னதிபனைத்தொட்டே
உடனெண்ணிக்கண்டதனை பாவர்வீடேல்
ஏதமுறுந்தரித்திரயோ கங்களாகும்
இனிமையுள்ளோர்வீடாயிற் றனவானாவன்
போதுசன்மந்தனக்கேதி ராறிரண்டும்
புனிதர்மனையாகிற்பொன் னுளனேயாவன்.

(இ - ள்.) ஜாதகன் லக்கினமுதல் லக்கினாதிபதியிருக்க வீடுவரைக்கும் எண்ணிக் கண்ட தொகையை லக்கினாதிபதியைத் தொட்டு அதையுஞ் சேர்த்து எண்ணிப்பார்த்தால் அது பாவர் வீடாயின் தரித்திரயோகமாகும். சுபர்வீடாயின் தனவானாம். சன்மத்தில் ஐந்து பன்னிரண்டு இரண்டாமிடங்கள் சுபர் வீடுகளேயாயின் திரவியமுள்ளவன், எ-று. 493

ஆவன்சன்மத்திற்சனியு மடுத்தநான்கிலம்புலியும்
மேவுமேழிற்செவ்வாயும் விளங்குபத்தில்வெய்யோனும்
கோவும்புதன்சுக்கிரன்றானுங் கூடியொருவீட்டினிலிருக்கப்
பூவுக்கரசாய்த்தனவானாய்ப் பொருந்திவாழ்வன்கண்டேரே.

(இ - ள்.) சன்மத்தில் சனியும், சனிக்கடுத்த நான்கில் சந்திரனும், ஏழில் அங்காரகனும், பத்தில் சூரியனும், புதனும், சுக்கிரனுஞ் சேர்ந்து ஒரு வீட்டிலும் இருக்க உலகத்திற்கரசனும், செல்வமுடையவனும் வாழ்வன், எ-று. 494

கண்டுமொழியாயெட்டாறிற் கருதுமூன்றிற்பன்னொன்றில்
நின்றிருந்துலக்கினத்தைப் பாரா திருக்கின்மிகச்செல்வம்
கொண்டுவாழ்கற்கதுசாரி குலவியீசனல்வருநீசம்
அண்டியிருக்கினீசர்மனை யனுகிற்றனவானாவானே.

(இ - ள்.) கற்கண்டைப்போல் இனிய சொல்லாய்! எட்டு, ஆறு, மூன்று, பதினொன்றாமிடங்களில் பாவிகளிருந்து லக்கினத்தைப் பாராதிருந்தால் மிகுந்த செல்வமுண்டாம். இந்தவிடத்தவரும் நீசம்பெற்றிருந்தாலும், நீசர் மனையை யடைந்திருந்தாலும் தனவானேயாவான், எ-று. 495

புவிந்துலக்கினத்துக் கதிபனுச்சராசியிலும்
மனைவலுமதிசர்மனை விரும்பியிருக்கிற்றனவானும்

...ரமுஞ்சந்திரனுடனே யுச்சமுற்கோள்சேர்ந்திடினும்
காவுங்குடும்பனுச்சமனை நக்கோர்நிற்கத்தருஞ்செல்வம்.

(இ - ள்.) சந்திர லக்கினத்ததிபன் உச்சராசியிலும், அல்லது நீசர் வீட்டிலுமிருந்தால் தனவானவான். அன்றிச்சந்திரனோடு உச்சக்கிரகஞ் சேர்ந்தாலும் குடும்பாதிபதி உச்சவீட்டில் சுபக்கிரகங்களிருந்தால் செல்வமுண்டாகும், எ-று. 496

செல்வத்தருபத்தாமதிபதி சென்மாதிபனும்
வல்வந்தருகுடும்பாதிபனும் வானக்கிளைசமனனும்
செல்வத்திகழுங்கேந்திரமதனிற் சுபர்களிருக்கும்
நல்வந்துசிறுவயதிற் றனபதியாகுவன்றனும்.

(இ - ள்.) செல்வத்தைக்கொடுக்கும் பத்துக்குடையோனும், சென்மாதிபதியும், குடும்பாதிபனும் பொருந்திய வீட்டோன் அங்கிசாதிபதியும் கேந்திரத்திலிருந்து அவர்களைச் சுபக்கிரகங்கள் கண்டால் சிறுவயதிலேயே குபேரனைப்போல் வாழ்வான், எ-று. 497

கண்ணுறுஞ்சென்மத்ததிப னவின்மூன்றதிபனும்
ஒண்ணிப்பமாகப் புருஷைக்கோனுநோக்க
வண்ணந்தருமூன்றதிபன் மருவப்பதிகாண
அன்னைசிறுவன்றாய் மாமன்பொன்னும்வருமே.

(இ - ள்.) சென்மாதிபதியும் மூன்றாம்வீட்டுக்குடையோனும் புருஷக்கிரகத்தில் பார்வையையும், மூன்றுக்குடையோன் தன் வீட்டிலிருக்கப் பார்க்க அண்ணன், தாய், மாமன் இவர்களுடைய திரவியமும் வந்துசேரும், எ-று. 498

வருஞ்சென்மலக்கினத்து மாமதியிருந்தவீட்டும்
இருபுறத்தன்னினல்லோ ரிருந்திடிற்றனவானவன்
ஒருமனைதன்னி லுற்றோ ரோதியபலனிற்பாதி
தருமொருபுறத்தினிற்கிற் றனமுண்டாய்பங்கதாமே.

(இ - ள்.) சன்மலக்கினத்திலும், சந்திரனிருந்த வீட்டிலும் இரண்டு பக்கத்திலும் சுபக்கிரகங்களிருந்தால் தனவானவான். ஒரு வீட்டிலிருந்தால் சொன்னபலனிற் பாதியும், ஒருபக்கத்திலிருந்தால் கால்பங்கு தனமுமுண்டாகும், எ-று. 499

பாங்காரு மூன்றுமிடப்பார்த்திபன்
ஓங்குமோன்பதா மதிபுடனுற
ஈங்கிவர்க்கு மினியசிநேகனும்
ஆங்குறத்தமையன் பொன்னனுறுமே.

(இ - ள்.) மூன்றுக்குடையோன் ஒன்பதாமதிபனோடு கூடி சுபராயிருந்தால் தமையன் செல்வமும் வந்துசேரும், எ-று. 500

அருணகிரிதிசேர்வகையா லவனாற்றந்தையர்பொன்
அன்னைக்கம்புவிசெவ்வா யாற்றனதுபொருளை
கருதுருபுதனாற்பகைஞர் பொருளரசன்றன்னால்
நல்லுறவோர்கிரிசுக்க னாற்றுமனைவியரால்
பணமருவுங்காரியினா லடிமையுள்ளோர்பொருளும்
பண்பொடுசேவித்தவர்பொன் பாங்குடன்வந்தடையும்
குணமொடுலக்கினஞ்சோமன் றனக்குப்பத்தாரும்
குடிவீட்டுக்குடையோனைக் கொண்டுபலன்கூறே.

(இ - ள்.) செல்வஞ்சேரும் வகை எப்படியென்றால், சூரியனால் தகப்பன் செல்வமும், சந்திரனால் தாய்ச்செல்வமும், அங்காரகனால் தன் செல்வமும், புதனால் பகைவர் செல்வமும், குருவால் சுற்றத்தார் செல்வமும், சுக்கிரனால் மனைவி செல்வமும், சனியால் அடிமையுள்ளோர் செல்வமும் வந்தடையும். இது லக்கினத்திற்கும், சந்திரனுக்கும் பத்துக்குடையோனைக் கொண்டு பலன்சொல்லுக, எ-று. 501

கூறிலாபாதிபோன்ப தாமதிபனுடனே
கூடினாற்பழையதனங் குறைவகலச்சேரும்
பெருடன்பத்தாமதி பாக்கியத்துற்றிடினும்
பெருமைசெறிபத்ததி பிரபலமாக்கோளாய்
வீறுடனுத்தமர்மனையி லிருந்தருமத்துடனே
விரவுபிரயாசமறவே நிதியம்படைத்திடுவன்
ஈறில்குருதனஞ்சேரும் பத்தாதிமெலிந்தே
இருக்கிலொருவரைச்சேவித் தெய்துபொருளற்பம்.

(இ - ள்.) லாபாதிபதி ஒன்பதுக்குடையானோடு சேர்ந்தால் பழைய செல்வஞ்சேரும். பத்துக்குடையோன் பாக்கியத்திலிருந்தாலும் பத்தாதி பிரபல கிரகமாய் சுபக்கிரகங்கள் வீட்டிலிருந்தாலும் தருமசிந்தையோடு கஷ்டமில்லாமல் செல்வந்தேடுவன். குரு தனத்திலும் பத்துக்குடையோன் பலமில்லாமலுமிருந்தால் ஒருவரைச் சேவித்தே அற்ப திரவியந் தேடுவோனவான், எ-று. 502

பொருள்செறிபத்தாமதிபன் பிரபலவுத்தமனாய்ப்
பொருந்திப்பத்தினிலிருக்க யாகாதிகருமம்
அருளுடனேபுரிந்துதனந் தேடியினிதிருப்பன்
அமர்நடன்றமாதிபல மாகச்சென்மத்தேதான்

மருளுந்தூர்ப்பலனுக லாபாதிமூன்றில்
மருவிஇடன்பிறந்தவர் தன்பொருள்வந்துசேரும்
தேருள்சன்மஞ்சந்திரலக்கி னத்திருந்தார்வகையில்
சேர்ந்தவராரோவவர்பொருள் சேருமிவன்றனக்கே.

(இ - ள்.) பத்துக்குடையோன் பிரபலனும், சுபனும் பத்தினிலிருந்தால் யாகாதிகிரியைகளால் தனத்தேடி சுகமாயிருப்பான். மூன்றுக்குடையோன் பலவானாய், சன்மாதிபதி தூர்ப்பலனாய் லாபாதிபதி மூன்றிலிருக்க கூடப்பிறந்தவர் செல்வமே வந்துசேரும். சென்ம லக்கினத்திலும், சந்திர லக்கினத்திலும் எந்தக்காரகர்களிருக்கின்றனரோ அவர்களுடைய பொருளும் இவனுக்கு வந்து சேரும், எ-று. 503

தனஞ்சேரும்வகையோன்ப த்தாமதிபன்றிசையில்
தரும்பத்தாதிபன்புசிப்பி லப்போகோசரத்தில்
இனஞ்சேர்நான்காதிபன்பத் தாமிடத்திலிருக்க
இயல்பத்தாமதிபனுக்கு நாலாம்ராசியிலும்
கனஞ்சேருங்குசனுடைய கேந்திரத்திலேனும்
கலந்துநிற்கப்புராதனமாங் காணிமனையதனில்
முனஞ்சேர்பத்தாமதிபன் றிக்கினிலிட்டேபம்
முதற்கொண்டுவாழ்வரென மொழிந்திடுவர்தக்கோர்.

(இ - ள்.) ஒன்பதுக்குடையோன் திசையில், பத்துக்குடையோன் புசிப்பிலும், அப்போது கோசாரத்தில் நான்குக்குடையோன் பத்திலிருப்பினும், பத்தாம் வீட்டோனுக்கு நாலாம் ராசியிலும், அங்காரக கேந்திரத்திலும் கலந்து இருப்பினும் புராதன காணி, மனையதனில் பத்துக்குடையோன் திக்கில் புதைய லெடுத்து வாழ்வாரென்று சொல்லுவர் பெரியோர், எ-று. 504

தக்கரிஷபத்தின்மதி விருச்சிகத்திலரசன்
தானிருக்கிற்றனவானுஞ் சுக்கிரன்வீட்டரசன்
மிக்கசுருவிற்குசனு மிருக்கவளர்பிறையும்
வேந்தனுடனேகூடப் புதனரசன்கூடி
நிற்கலக்கினந்தன்னிற் சுக்கிரனுமிருக்க
நிறைந்ததனவான்கல்வி நிபுணனுமாயிருப்பன்
சுக்கிரனுச்சம்பெறலக் கினத்தரசநிறைந்த
சோமனைப்பாவர்கள்காணிற் றுலங்குதனம்படைப்பன்.

(இ - ள்.) ரிஷபத்தில் சந்திரனும், விருச்சிகத்தில் குருவும் இருந்தால் தனவானாவான். சுக்கிரன் வீட்டில் குருவும், மகரத்தில் அங்காரகனுமிருந்தாலும், வளர்பிறைச் சந்திரனும் குருவுடன் கூடியும், புதனும் அரசனுங் கூடியுமிருக்க லக்கினத்தில் சுக்கிரனுமிருக்க நிறைசெல்வ முடையவனுவன், கல்வி சாமர்த்தியமுமாயிருப்பன். அன்றி சுக்கிரனுச்சம் பெற்று லக்கினத்திலுள்ள குருவோடு கூடிய சந்திரனைப் பாவர்கள் காணின் இலங்கு செல்வம் படைப்பான், எ-று. 505

படைத்தவொன்பதாமதிப னாறினிலின்றிடவே
பண்புடையமாதுலன்றன் பொன்பரிந்துசேரும்
எடுத்தவொன்பதாமதிபன் பொன்னுறையாறில்
இருந்தக்காலம்மாமிக் கிசைந்தபொருள்சேரும்
தொடுத்தவைந்தாமதிபதியுஞ் சுபனும்பாக்கியத்தில்
சூழ்ந்திருக்கிற்புத்திரிக்குத் துலங்குமணஞ்சூட்டி
அடுத்திருக்குமருமகன் றேடியதனங்களெல்லாம்
அடைந்துசுகவானாகி யம்புவியில்வாழ்வன்.

(இ - ள்.) ஒன்பதுக்குடையோன் ஆறிலிருக்க மாமன் திரவியம் வந்து சேரும். ஒன்பதுக்குடையோன் குருவாகி ஆறிலிருந்தால் மாமி திரவியம் வந்து சேரும். ஐந்துக்குடையோனும், சுபனும் பாக்கியத்திலிருக்கப் பெண்ணுக்குக் கலியாணஞ்செய்து மருமகன்தேடிய செல்வங்களையெல்லாம் பெற்றுச் செல்வமுடையவனும் புவியில் வாழ்வன், எ-று. 506

அம்புவியிற்குருவும் பத்தாமதிபதியும்
அன்புறுசுபனுமாய் லக்கினத்ததிக்கு
இம்பவியின்மித்துருவா யிருவருடன்வெய்யோனும்
இசைந்திருக்கிற்பிதாநிதிய மெய்துமிவன்றனக்கே
விம்பமதியன்கூடி லன்னைசெம்பொன்மேவும்
மேதினிமைந்தன்கூடில் மேவலர்பொன்சேரும்
கம்பமாகடலன் மித்துருதனமமரசன்
தன்னையுநிற்பிராதாபொன்றே யியைந்துசேரும்.

(இ - ள்.) குருவும், பத்துக்குடையோனும் சுபர்களாய் லக்கினாதிபதிக்கு மித்துருக்களாய் இவர்களுடன் சூரியனும் சேர்ந்திருந்தால் தகப்பன் செல்வஞ் சேரும், சந்திரன் ஒத்திருந்தால் தாய்ச்செல்வஞ் சேரும். அங்காரகன் கூடினால் பகைவர் செல்வஞ்சேரும். புதன் கூடினால் மித்துரு செல்வஞ் சேரும். குருகூடினால் பிராதா செல்வஞ் சேரும், எ-று. 507

வேறு

சேருஞ்சுக்கிரன் கூடிற்றெரிவையர்
ஆறுமாஞ்சனியிற் கடித்தோர்பொருள்
கூறுபாம்புகள் கூடினத்தொழில்
சாரவேபுரிவார் தனஞ்சாருமால்.

(இ - ள்.) சுக்கிரன் கூடினால் பெண்சாதி செல்வஞ்சேரும். குரு கூடினால் அடுத்தவர்கள் செல்வஞ்சேரும். ராகு கேதுக்கள் கூடினால் சனத்தொழில் செய்வோர் செல்வஞ் சேரும், எ-று. 508

சாருபத்தாமதிபன் சுபக்கோளாகத்
தக்கோர்வீட்டிற்பிறையு மரசன்றானன்றிச்
சேரும்பொன்னவனீசமத்த மனமாகித்
தீயோர்வீட்டினிலிருக்கத் திரவியங்களில்லான்
நேரும்பத்தாமதிபன் நான்கிடத்திலிருக்க
நிட்சேபங்கண்டெடுப்ப னிறைந்தகல்வியாலும்
பாரின்மேவிய தமரோரார்தங்களாலும்
பரிவுடன்பொன்சேருமெனவே பரித்துரைத்தே.

(இ - ள்.) பத்துக்குடையோன் சுபனாய், தருத்தவர்கள் வீட்டில் சந்திரனும், குருவுமன்றி பொருள் சேரும். குரு நீசம், அஸ்தமனம் பெற்று தீயோர் வீட்டிலிருந்தால் செல்வமில்லை, பத்துக்குடையோன் நான்கிலிருந்தால் புதையல் கண்டெடுப்பன். அன்றிக் கல்வியாலும் சுற்றத்தாராலும் பொருள் சேரும் என்று சொல்லுக, எ-று. 509

வேறு

கூறும்இரண்டாமிடக் கேந்திரத்தினில்
வீறுமன்னவன் மேவஇரண்டாதிபன்
ஊறுமாறெட்டாறு வியத்துறில்
ஏறுந்தனதனஞ் சற்றுமில்லையே.

(இ - ள்.) இரண்டாமிடத்தான் கேந்திரத்தில் குருவிருக்க, இரண்டுக்குடையோன் ஆறு, எட்டு, பன்னிரண்டில் இருந்தால் தகப்பன் செல்வஞ் சிறிதுமில்லையாம், எ-று. 510

வேறு

சாலமதிதனக்கிரண்டிற் சனிதானிற்கில்
சந்திரனுந்தனக்கு நான்காம்வீட்டாதி
மேலவர்களுடன் கூடிக்கேந்திரங்கள்
மீதிருந்தாற்றந்தைபொருள் வேற்றோர்கொள்வர்
பாலருக்குச்சேராது பாலன்றானும்
பாக்கியவானெனி வெருபணங்கட்டேடி
ஞாலமதில்கீர்த்தி யாதிபனும்பூமி
ராசரைச்சேவித்திருப்ப னலமாய்த்தானே.

(இ - ள்.) சந்திரனுக்கிரண்டில் சனியும் சந்திரனுக்கு நான்கிறைதி சுபர்களுடன் சேர்ந்து கேந்திரத்திலுமிருந்தால் தகப்பன் செல்வத்தை அந்நியர்கள் கொள்ளுவார்கள். பிள்ளைக்குச் சேராது, ஆனாலும் புத்திரனானவன் உலகத்தில் அதிகமாகச் செல்வங்களைத்தேடி அரசரைச்சேவித்து சுகமாயிருப்பான், எ-று.

வேறு

மேதருநான்காமாதி விரவுகேந்திரங்கடன்னில்
ஆதவனிருக்கவேதா னந்தநான்காமிடத்தில்
ஓதியநல்லோர்மேவி லுறுபிதாதனத்திற்காக
பாதியுமிவனுக்கில்லை பரதேசத்திடையிற்செல்வன்.

(இ - ள்.) நான்குக்குடையோ னிருக்குங் கேந்திரத்தில் சூரியனிருக்கவும் அந்த நான்கில் சுபர்களிருந்தாலும் தந்தை செல்வத்திலொரு காசுமில்லாமல் பரதேசியாவான், எ-று. 512

வேறு

ரண்டாமாதிதான்மிகவேயிருந்து கேந்திரமேறிமிகக்
கொண்டேதனத்துக்காரகனுங் குருவியுச்சமாகியிவர்
மிரண்டாயிருக்கத்தனபதியாய் விளங்கியிருப்பனறிவுள்ளோன்
பண்டேசகத்திற்பொன்றேடிப் பதியிலிருப்பனெனச்சொல்லும்.

(இ - ள்.) இரண்டுக்குடையோன் கேந்திரமேறி தனகாரகன் சேர்ந்து உச்சமாகி யிருக்கத் தனபதியா யிருப்பன். அறிவுள்ளவனுமவன் இன்னுஞ் செல்வந்தேடி வாழ்வன், எ-று. 513

சொல்லுமிரண்டாமதிபதி சூழ்ந்துலாபத்தினிலிருக்க
வெல்லும்லாபன்பாக்கியாதி விரும்பியிரண்டிலுற்றிடவே
நல்லகுணமுந்தருமனுமாய் நான்குலட்சம்பொன்றேடி
அல்லலறவேவாழ்ந்துண்டே யவனிதன்னிலிருந்திடுவான்.

(இ - ள்.) இரண்டுக்குடையோன் லாபத்திலும், லாபாதிபதியும், பாக்கியாதிபதியும் இரண்டிலுமிருந்தால் நற்குணம், தருமமுடையவனாய் நான்குலட்சம் பொன்றேடி வாழ்பவனுவன், எ-று. 514

இந்தவில்லேலக்கினமா யிதிலேகுருவுந்தானுறவே
பொருந்துந்துலாத்திற்சனியுச்சம புகலாபாதிபனுன்கிடத்தில்
இருந்தியிருக்கத்தனந்தேடித் திகழ்வனீதிதவறாமல்
தெரிந்தேபலரைரக்ஷித்துச் செம்பொன்கோடிதேடுவனே.

(இ - ள்.) தனுசுலக்கினமாய் குருவும் அந்த வீட்டிலிருந்து துலாத்தில் சனி யுச்சனும், லாபாதிபதி நான்கிலுமிருந்தால் கோடிப்பொன் தேடியிருப்பன். அன்றி நீதிதவறாமற் பலரை ரட்சிப்பன், எ-று. 515

வருமேதனுசுகுடமீனம் வாழுங்கன்னிரிஷபமுடன்
புரமேய்ந்தகோளித்தமிவை புகுந்தாற்றேவர்க்கரிதாய
திரமேயோகவுங்கோடி செம்பொன்றேடி ராச்சியங்கள்
உலகமேயாள்வன் லக்கின மோங்கித்தனுசிற்பிறந்திடவே.

(இ - ள்.) ஜன்மம் தநுலக்கினமா யிருந்து தநுசு கும்பம் மீனம் கன்னி ரிஷபம் இவ்விடங்களில் சுபக்கிரகங்களிருந்தால் தேவர்களும் பிரமிக்கத்தக்க அநேக திரவியத்தேடி ராச்சியங்களை யாள்வான். அவனும் தநுசு லக்கினமாயிருந் தால், எ-று. 516

வேறு

எய திரேக்காணத் திரைபுகர்கூட
தூயலாபாதி சுபர்வர்க்கமேவிட
ஆயவுலகிலரும்பொருள் கோடிதான்
நேயமாய்த்தேடுவ னென்றுமொழிந்திடே.

(இ - ள்.) திரேக்காணத்தில் குருவும் சுக்கிரனும் கூடவும், லாபாதிபதி சுபவர்க்க மேறவும் உலகில் அதிக செல்வந்தேடி வாழ்வன், எ-று. 517

கிரகரசம் (வேறு)

இலகுமிரண்டின்மூன்றிடத்தி னிரவியுறிற்கார்ப்புடன்சுடுகை
நிலவுக்குச்சீதளந்துவர்ப்பு நீடுகுசர்க்குக்குளிர்மைகைப்பே
அலகுபுதற்குச்சலமுமே யாம்பொன்னுக்குமதுரமழல்
கலைச்சனிக்கேகஷாயந்தண் கமழ்சுக்கிரற்குப்புளிகுளிர்ச்சி.

(இ - ள்.) இரண்டிலும், மூன்றிலும் சூரியனிருந்தால் கார்ப்புடன் சுடுகையை விரும்பும். நிலவுக்குச் சீதளம் துவர்ப்பும், அங்காரகனுக்கு குளிர்மை கைப்பும், புதனுக்குச் சலமும், குருவுக்கு மதுரம் அழலும், சனிக்கு கஷாயமும் கமழும், சுக்கிரனுக்குப் புளிப்பும் குளிர்ச்சியும் வேண்டும், எ-று. 518

இரண்டாம்பாவம்

முற்றிற்று.

மூன்றாம்பாவம்

சகோதரபலன்

துலங்குமூன்றாமிடந்தன்னிற் றுணைவர்பலனைச்சொல்லுங்கால்
இலங்குமூன்றாம்திபதியு மிருந்தார்கண்டார்தமைக்கொண்டு
நலங்கொளுச்சம்பகைநீச நட்புமறிந்தேதுபுரைசெய்யப்
பலன்கொள்பெண்ணாண்கிரகங்கள் பார்த்துத்துணைவர்பலன்சொல்லே

(இ - ள்.) விளங்காநின்ற மூன்றாமிடங்கொண்டு சகோதரர்கள் பலனைச் சொல்லுமிடத்து மூன்றுக்குடையவனையும், அவ்வீட்டிலிருந்தாரையும் பார்த் தாரையும் மூன்றாமிடத்தானிடம் சேர்ந்தாரையும் அவர்களைப் பார்த்தாரையுங் கொண்டு உச்சம், பகை, நீசம், நட்பு இவைகளையுமறிந்து பெண், ஆண் கிரகங் களைப் பார்த்துச் சொல்லுக, எ-று. 519

சொல்லுகுசன்மூன்றாமிடத்தி லிருக்கிற்பார்க்கிற்றுணைவரற்பம்
வெல்லும்பதினொன்றிற்குசனு மேவின்மூத்தோர்மிகவுண்டாம்
வல்லவிரண்டாமிடத்திற்சேய் மருவவுடனேவருந்துணைவர்
நல்லமும்மூன்றாய்ப்பார்த்து காரியாணித்தனையுன்னே.

(இ - ள்.) அங்காரகன் மூன்றிலிருந்தாலும், பார்த்தாலும் சகோதரர் அற்பம். பதினொன்றில் இருந்தால் மூத்தசகோதரர் மிகவுண்டாம். இரண்டி லிருந்தால் உடனே சகோதரர் பிறப்பார்கள். மும்மூன்றாய்ப் பார்த்துக் கணக்கிட்டுச் சொல்லுக, எ-று. 520

வேறு

உன்னுமூன்றாமிடத்ததிபன்குசன்
நன்னர்நான்காமதிபனுங்கூடினும்
தன்னமூவருநான்குறத்தந்துணை
அன்னர்பங்குமனைவந்துசேருமே.

(இ - ள்.) மூன்றுக் குடையோனும், அங்காரகனும், நான்குக்குடையோ னும் கூடினாலும் இம்மூவரும் நாலிலிருந்தாலும் தம் துணைவர்களுடைய பங்கு மனை வந்து சேரும், எ-று. 521

வேறு

சேருஞ்செவ்வாய் புடத்தைவைத்துக்கொண்டு
செயபகருங்கோள் புடத்தையெடுக்கிலப்போ

நேருமக்தராசியிற் பொன்மருவும்போது
 கிற்குமினையோர்க்கரிஷ்டங் கருங்கோட்டன்னைப்
பாருமக்கப்படத்தி லங்காரகனைவாங்கிப்
 பண்பொருமின்றிடுராசி தன்னிலானவந்தால்
ஊருமுற்றுமையச் சேட்டன்பார்விட்டே
 உயர்பாமபதியனுருகுமென வுரைசெய்வாயே.

(இ - ள்.) செவ்வாய்ப் புடத்தை வைத்துக்கொண்டு ராகுபுடத்தை யெடுத்தால் அப்பொழுதுண்டாகின்ற ராசியில் குருவரும்போது இருக்கின்ற கனிஷ்டர்களுக்கரிஷ்ட முண்டாகும், ராகுவை அந்தஸ்புடத்தில் வாங்கி அங்காரகனையும் அந்தஸ்புடத்தில் வாங்கிகின்ற ராசியில் குருவந்தால் ஜேஷ்ட சகோதரன் மரிப்பனென்று சொல்லுவாய், எ-று. 522

உறைசெறிமூன்றுமாதிலாபாதிபதிக்கே
 உறவாகமூன்றுதி யுயர்ந்தபிரபலனை
வரவுடன்மித்திரருடனே கூடியேலாப
 மதியிருக்கவவருடனே வந்துதான்கூடித்
திரமுடனேயிருந்த தொகைப்படி
 திரிபூமானெனக்கிரகச் செயலறிந்துபகர்மின்
கரியகுழன்மதிவதனக் காவியக்கண்ணிளிய
 கனியமுதம்போலு மொழியாங்கன்னியாரே.

(இ - ள்.) மூன்றுக்குடையோன் லாபாதிபனுக்கு மித்துருவாகவும், பிரபலனாகவுமிருந்து மித்திருடன் கூடி லாபஸ்தானத்திலிருந்தால் அவருடன் எத்தனைப்பேரிருக்கின்றனரோ அத்தனை சகோதரர்களுண்டாவார்கள். ஓ பெண்களிற் சிறந்த நங்காய்! கிரகச் செயல்களையறிந்து பூமானென்றுஞ் சொல்லுவாய், எ-று. 523

ஆர்கடக்தேண்மீன லக்கினத்தைக்கண்டே
 அன்புடனேநவபாகம்பண்ணி யைந்தாம்பங்கில்
பாரிலுதித்தான்பின்னே பிறந்தகன்னிக்குப்
 பக்குவமெப்படியென்னி லக்கடகமாயின்
காரிவெகுதாலகாயம் முடையனாவன்
 கவிதேளாகிற்பேய்போற் கால்குறுகிப்பருத்துச்
சேரவுருக்குலைந்திருப்பானா மீனமாகில்
 செப்பகான்முடமாகித் திரிந்திடுவனென்னே.

(இ - ள்.) கடகம் விருச்சிகம் மீனம் இந்த லக்கினங்களை ஒன்பது பங்கு பண்ணி ஐந்தாம் பங்கில் உலகத்திலுதித்தால் அவனுக்குப் பின்னே பிறந்த

பெண்ணுக்குப் பக்குவமெப்படியென்றால், கடகமானால் தாலகாயமும் விருச்சிகமானால் பேய்போல் கால்குறுகிப் பருத்து உருக்குலைந்தும் மீனமானால் கால் முடமாயும் திரிவான், எ-று. 524

வேறு

சன்றுமூன்றுமதிபதிபுடத்தி லேற்றிடுசெவ்வாய்புடத்தையுங்கூடித்
துன்னிரண்டுராசிகுருவருங்காலந் துணையுதிப்புடற்கூட்டிப்
பின்னியராசியங்கிசமட்டாய் மேஷமுதலாயெண்ண
மன்னியதுணைவர்தொகையுரும்பாவர் மருவிடி லழிந்திடுமென்னே.

(இ - ள்.) மூன்றுக்குடையோன் ஸ்புடத்தில் அங்காரகன் ஸ்புடத்தையுங் கூட்டிவந்த ராசியில் குருவருங்காலத்தில் சகோதரருண்டாம். இப்புடக்கூட்டிய ராசி அங்கிசம்வரைக்கும் மேஷமுதலா யெண்ணிப்பார்க்க சகோதரர்களதுதொகை ஏற்படும், அதில் பாவர் சேர்ந்தால் அழிந்திடுமென்று சொல்லுக, எ-று. 525

வேறு

ஆறுமிடத்திரா யகருங்கோள்
 வீறுயிருக்கமேவு மவன்றிசை
பெறும்வளிதும் பெலமுள்ளசகோதரம்
 நீறும்புயிர்விடு கேடியோரறிய.

(இ - ள்.) ஆறும்வீட்டில் ராகு பலத்துடனிருக்க அவன் திசைவரின் பலமுள்ள சகோதரம் பல்லோரறிய இறக்கும், எ-று. 526

வேறு

அறிதானத்தியோன்பானுக் கொன்பானுதும்
 அன்னைக்கேநான்கினுக்கு நான்கினுதும்
செறிகனிட்டற்கொருமூன்றின் மூன்றினுதும்
 சேட்டனுக்கபதின்னொன்றின் பதின்னொன்றுதும்
உறுமாமன்றனக்கும் புத்திரற்குமைந்துக்
 கோரைந்தினுதுமுயர் சகோதரங்கள்
கூறுக்குமலங்கிசராசி யாண்பெண்ணோர்ந்தே
 கவிலுவாயந்தொகையி னளவேயென்று.

(இ - ள்.) தகப்பனுக்கு ஒன்பதுக்கு ஒன்பதாலும், தாய்க்கு நான்குக்கு நான்கினாலும், கனிஷ்ட சகோதரர்க்கு மூன்றுக்கு மூன்றினாலும், ஜேஷ்ட சகோதரனுக்கு பதினொன்றுக்குப் பதினொன்றாலும், மாமனுக்கும், புத்திரற்கும் ஐந்துக்கு ஐந்தினாலும் சகோதரர்களுதித்தல் வேண்டும். அங்கிச ராசியினால் ஆணென்றும் பெண்ணென்றும் அறிந்து சொல்லுவாய் பெண்ணே, எ-று. 527

கர்ணபூஷண பலன்

மூன்றாமிடத்திற்சுபக்கிரக முற்றப்பலமாயுறநோக்க
மூன்றுமாதிபலவானாயிருக்க மூன்றிலுச்சருறத்
தோன்றுகர்ணபூஷணங்கள் சூடியிருப்பன்சுகமாக
அன்றகர்ணாபரணத்தை யணிப்பாரிவரென்றறைவாரே.

(இ-ள்) மூன்றாமிடத்தில் சுபக்கிரகங்களிருந்து பலமாய்ப் பார்க்கவும் மூன்றுக்குடையோனும் பலமாயிருக்கவும், அதிலே உச்சனிருக்கவும் கர்ணாபரணங்கள் அணிந்திருப்பான். ஆகையால் இக்கிரகங்களே கர்ணாபரணத்தை அணிப்பரென்று சொல்லலாம், எ-று. 528

அறையுமூன்றிற்சுக்கிரனே யமர்ந்தான்முத்தாக்கடுக்கனுறும்
இறைவனிருக்கிலபரஞ்சி யிரவிசெவ்வாய்க்கிரத்தினங்கள்
அறையும்புதற்குச்சாமவன்ன மணியுஞ்சேருமிறைவல்லால்
நிறையுமதியுற்றிடிற்சகலா பரணம்பெறுவர்நிச்சயமே.

(இ-ள்) மூன்றில் சுக்கிரனிருந்தால் முத்தாக்கடுக்கனும், குருவிருந்தால் அபரஞ்சியும், சூரியனும் செவ்வாயுமிருந்தால் இரத்தினமும், புதனிருந்தால் சாமவர்ணாபரணமும் சேரும், அன்றி வளர்பிறைச்சந்திரனிருந்தால் நிச்சயமாய் சகலாபரணமு முண்டாகும், எ-று. 529

வேறு

நிச்சயமாக்காரியுறிற் றிருமேனிக்கடுக்கன்
நீள்கருக்கோனிலுஞ் செம்பாம்புக்குச்சிவப்பாம்
அச்சமறமூன்றதி யிருக்கின்றவீட்டுக்
காதிபலனாயிருந்தா லணிசெவிப்பூணுண்டாம்
உச்சிதமாயிவையெல்லா மிடக்காதுக்கென்ப
உயரும்லாபாதிபதி யுறைந்தருளும்வீட்டோன்
இச்சையுடன்கேந்திரத்தி னல்லோர்கண்டிடவே
இருக்கில்வலச்செவிவளம் பூணியப்பவும்பூண்டிடவே.

(இ-ள்) சநியிருந்தால் வடசுவர்ணக்கடுக்கனும், ராகுவிருந்தால் நீலக்கடுக்கனும், கேதுவிருந்தால் சிவப்புக்கடுக்கனும், மூன்றுக்குடையோனிருக்கின்ற வீட்டுக்கதிபதி பலவானாயிருந்தால் கர்ணபூஷணமுண்டாகும். இப்பொழுது சொன்னவைகளெல்லாம் இடதுகாதுக்கென்றே சொல்லுவார்கள். லாபாதிபதி யிருக்கும் வீட்டுக்குடையோன் கேந்திரத்திலேறி நல்லோர் பார்வையைப்பெற்றால் வலச்செவி ஆபரணத்தைச் சொல்லலாம், எ-று. 530

போஜன பாத்திரபலன்

எண்ணியஇரண்டாமாதி லாபமூன்றாதி
இதமிலாப்பாவியர்கண்டிடத் தனியேநின்றால்
உண்ணவுதற்சலகமில்லா னுகந்திரண்டாம்வீட்டில்
உயருருசெங்கதிரோன் பெற்றாலகிலுள்ளோர்காண
நண்ணியதோர்சனிமேவ இரண்டாம்வீட்டாதி
நண்பொடுமூன்றாம்வீட்டி லயர்ந்துநிற்கத்தானும்
புண்ணுடனேசுபர்பார்க்கில் வரும்வெள்ளிக்கலமே
பாவக்கோள்விழிநோக்கப் படைப்பதுவெண்கலமே.

(இ-ள்) இரண்டுக்குடையோன், லாபாதிபதி, மூன்றுக்குடையோன் இவர்களைப்பாவிகள் கண்டாலும் தனியே நின்றாலும் உண்ணப்பாத்திரமில்லாதவனாவன் இரண்டாம் வீட்டில் சூரியனிருந்து சநியும் கலந்தாலும், இரண்டுக்குடையோன் கட்டாய் மூன்றிலிருந்தாலும் சுபக்கிரகங்களும் பார்த்தாலும் வெள்ளிப்பாத்திரமுண்டாகும் பாபக்கிரகங்கள் பார்த்தால் வெண்கலபாத்திரமுண்டாகும், எ-று. 531

மூன்றும்பாவம்
முற்றிற்று.

நான்காம்பாவம்

வாகன பலன்

சசிவாகனாதிசன்மத்தாதி யிம்மூவர்கூடில்
அசுவவாகனமுண்டாகு மவருடன்வெள்ளிகூடில்
வசையிலாக்தோளியுண்டாம் வாகனத்தானத்தாதி
ருசியின்றிவியத்திலின்றி யுற்றிடிற்சிவிகையுண்டே.

(இ-ள்) சந்திரன், வாகனாதிபதி, சன்மாதிபதி இம்மூவரும் சேர்ந்தால் அஸ்வவாகனமும், அவருடன் சுக்கிரனும் சேர்ந்தால் தண்டிகையும், வாகனாதிபதி யஷ்டவிரண்டிலில்லாம லிருந்தால் பல்லக்கு முண்டாம், எ-று. 532

பரிவுடன்பாக்கியாதிபதி வாகனத்தானத்தில்
குருசுக்கிரனேகூடி யிருந்திடுவல்லதுநோக்கில்
கருதியவனத்தண்டிகைவரு மிவரொடிந்து
பிரியமாய்நிற்கிற் பூச்சக்கரக்குடைபெறுவர்தாமே.

(இ - ள்.) பாக்கியாதிபதியை வாகனஸ்தானத்தில் குரு சுக்கிரர்களோடு கூடியிருந்தாலும், பார்த்தாலும், கனகதண்டிகையும், இவரோடு சந்திரனும் கட்டாய் கூடியிருந்தால் பூச்சக்கிர குடையுமுண்டாம், எ-று. 533

பூசக்ரக்குடைசத்தானைப் பொருந்தியேழுதிபனிற்கில்
விசாமரையுண்டாகு மிருபாக்கியத்தோனுங்கோன்
பாசமாம்பத்தினிற்கப் பத்தாதிபதிசன்மத்தில்
தேசமாய்நிற்கிற்சிங்கா தனமுளனிருப்பன்பாரில்.

(இ - ள்.) குடைக்குரியவரோடு ஏழுக்குடையோன் சேர்ந்திருந்தால் சாமரையும், பாக்கியாதிபதி நாலுக்குடையோன் இவர்கள் உறவாய் பத்திலிருந்தால், பத்துக்குடையோன் சன்மத்தில் கட்டாயிருக்க சிங்காதனமுமுள்ள அரசனுவன், எ-று. 534

வேறு

பரவுவாகனாதிபதி பாக்கியத்தினிற்கப்
பாக்கியத்தானதிபதி கேந்திரத்தைப்பற்ற
இருவர்நிற்குமிவை கஸ்லோரிருக்குமனையாயின்
இனியசுபக்கிரகத்தோ டிசைந்துமிகக்கூட
விரவுலக்கினாதிபதி வாகனகேந்திரத்தில்
மேவுகினுங்கனக தண்டிகையுமிகுதனமும்
மருவுமதயானை வாகனங்களுமுண்டாக
வரங்கொடுப்பன்வாகன காரகனுஞ்சுக்கிரனே.

(இ - ள்.) வாகனாதிபதி பாக்கியத்திலும், பாக்கியாதிபதி கேந்திரத்திலு மிருந்து அவர்கள் நின்ற வீடுகள் சுபர் வீடுகளாயும் சுபக்கிரகங்களோடும் சேர்ந்திருக்கவும், அன்றி லக்கினாதிபதி வாகனகேந்திரத்திலிருந்தாலும், கனகதண்டிகையும், மிக்கதனமும், யானைமுதலிய வாகனங்களு முண்டாகும் இவை கொடுப்பவன் சுக்கிரனேயாவன், எ-று. 535

சுக்கிரனுன்காதிபுடனே கூடினலும்
துலங்குமிவிருவர் கேந்திரத்தினிலுற்றாலும்
திக்கெனநான்காதி சசியுடன்லாபத்துறினும்
திறல்பலவாகனமுண்டு தீதகலநான்கில்
தக்ககுருவிருந்திடவே வாகனத்தான்
தன்னுடன்சுக்கிரன்கூடிற் றண்டிகையுண்டாகும்
மிக்கசுங்கன்றன் வாகனுதிபோகி
மேருசன்மாதிபைக்கூடில் வெறுஞ்சஞ்சாரமேயாம்.

(இ - ள்.) சுக்கிரன் நான்குக்குடையோனுடன் சேர்ந்தாலும் இருவரும் கேந்திரத்திலிருந்தாலும், நான்குக்குடையோன் சந்திரனுடன்கூடி, லாபத்திலிருந்தாலும், மிக்க வாகனமுள்ளவனுவன், அன்றி நான்கில் குருவும், வாகனாதிபனுடன் சுக்கிரனும் கூடியிருந்தால் தண்டிகையுண்டாம் சுக்கிரன் வாகனாதிபதியாயிருந்து சன்மாதிபதியைக் கூடினல் வெறுஞ் சஞ்சாரியேயாவான், எ-று. 536

சாரமுறுஞ்சோமனுக்கு மூன்றிற்சுக்கிரனுந்
தானிருக்கச்சுக்கிரனர் தமக்குமேமூன்றில்
வீரமுறுமதியிருக்க வன்றியேயின்னும்
விளைவியொருவரையொருவர் பார்த்துமேநிற்கப்
பாகமுறுங்குடும்பத்தா னத்தைநல்லோர்நோக்கிப்
பார்த்தாலுமிலக்கினத்தைப் பார்க்கினும்வாகனங்கள்
செருமிகவென்றேன்றே நல்லோர்கள்சொன்னர்
சிலைப்புருவக்கயலொத்த விழித்தெரிவைகேளாய்.

(இ - ள்.) சந்திரனுக்கு மூன்றில் சுக்கிரனும், சுக்கிரனுக்கு மூன்றில் சந்திரனுமிருந்து ஒருவரை யொருவர் பார்த்தாலும், அன்றி குடும்பஸ்தானத்தை சுபர் பார்த்தாலும் அன்றி அவர்கள் லக்கினத்தைப் பார்த்தாலும் வில்போலும் புருவம் வேல்போலுங் கண்களுடைய பெண்ணே! வாகனங்கள் மிகவுண்டாமென்று சொல்லுவர், எ-று. 537

வேறு

நாலிடத்ததிபன்றனு மிலக்கினத்துறபல்லக்கின்
மேலுமுந்செல்வமெய்தி மேதினிதன்னில்வாழ்வன்
கோலியலக்கினத்திற் குருவுறவவனைநல்லோர்
சாலவும்பார்க்கமேலாந் தண்டிகைமருவும்வாகாய்.

(இ - ள்.) நான்குக்குடையோன் லக்கினத்திலிருந்தால் பல்லக்கேறத்தக்க செல்வம் பெற்றுவாழ்வன் லக்கினத்தில் குருவிருந்து அவனை சுபர் பார்க்க தண்டிகையுண்டாகும், எ-று. 538

வேறு

வாகனாதிமருவுமனைதனைக்
காகவிரைந்தகத்துக்கதிபனும்
ஏகவிட்டுக்கிறைவனைக்கூடில்
போகவான்வெகுபூமிக்கரசனே.

(இ - ள்.) வாகனாதிபதியிருக்கும் வீட்டுக்குப் பத்துக்குடையோனும் லக்கினாதிபதியைக் கூடினல் போகியும் வெகுபூமிக் கரசனுமாவான், எ-று. 539

வேறு

அரசேகேள்வாகத்தானதி நின்றராசி
அன்பொடுநல்லோர்வீடாய்ப் பணபரகேந்திரமாய்
உரைசெறியசனித்தகிறு குடிசையுமாடாங்காம்
உகந்தருளன்னைக்கின்ற முண்டாம்வாகனத்தோன்

வரிசையாய்ச்சனிகுருவேல் மதயைந்தண்டிகையாம
வளர்கலைமாமதியாகிற் பூச்சக்கரக்குடையாம்
விரைசெறிசுக்கிரனாகிற் பல்லக்குண்டிபானி
மேவிலொருகாம்புதற்கு விதித்தபல்லக்காமே.

(இ - ள்.) வாகனஸ்தானாதிபதியிருந்த வீடு நல்லோர் வீடாய் பணபர கேந்திரமாயிருக்கச் சனித்தது குடிசையாயினும் அதுபெரிய கடைசாலையாம் அன்றித் தாய்க்குச் சுகமுண்டாம். வாகனாதிபதி சனி குரு இவர்களில் ஒருவனாக யிருந்தால் மதயானை தண்டிகைகளுண்டாம் பூர்வபக்ஷத்து சந்திரனாயின் பூச்சக் கரக் குடையுண்டாம் சுக்கிரனாயின் பல்லக்குண்டாம் சூரியனாயின் எருதாம் புதனாயின் பல்லக்குண்டாகும், எ-று. 540

வேறு

பலன்தருவாகனாதி பன்புதனுடத்திநேடு
நலந்தசுக்கிரன்புடத்தைக் கூட்டியேகண்டராசி
தலந்தனிலசன்வந்து தான்சேரிகேந்திரத்தும்
நலந்திரிகோணமீது நண்ணில்வாகனமுண்டென்பார்.

(இ - ள்.) வாகனாதிபதி ஸ்புடத்தோடு சுக்கிரஸ்புடத்தையுங் கூட்டிக்கண்ட ராசியில் குருவந்து சேர்ந்து கேந்திரத்திலும், திரிகோணத்திலு மிருந்தால் வாகனமுண்டென்று சொல்லுவர், எ-று. 541

வேறு

பலர்புகழுஞ்சுக்கிரற்கு மூன்றிலேழில்,
பண்புடன்சந்திரனிருக்கச் சசிக்கேழ்மூன்றில்
நலமருவுஞ்சுக்கிரன்று னிருக்கவேதான்
நண்பொடுவாகனமுண்டு நான்காமதி
நிலவுநல்லோருடன்கூடிச் சந்திரகேந்திரத்தில்
நிற்கில்வாகனமுண்டு நிதியுமிகத்தேடி
உலகில்கெடுநாளரசன் போலவேவாழ்வன்
உணர்புத்திமானென்றே யுரைத்தனர்நல்லோரே.

(இ - ள்.) சுக்கிரனுக்கு மூன்றிலும் ஏழிலும் சந்திரனும், அவனுக்கு மூன்றில் ஏழில் சுக்கிரனுமிருந்தால் வாகனமுண்டு. நான்குக்குடையோன் சுபரோடு கூடிச் சந்திரகேந்திரத்திலிருந்தால் வாகனமுண்டாகும். அன்றி உலகத்தில் நெடுஞ்செல்வந்தேடி புத்திமானென்று சொல்லும்படி நெடுநாள் வாழ்வான், எ-று. 542

உரைத்திடுநான்காமதி லக்கினாதி
புடன்கூடத்திபோச்ச [illegible]
நிரைத்தொருவீட்டினி லிருக்கவந்தவீடு
திடுசன்மத் [illegible] சுகமேயாயின்

கரைத்தபரிவாகனக்குளோன் புத்திமானும்
நன்புடனேமன்னனை யெங்காளுஞ்சேவிப்பன்
இரைத்திடுசன்மாதிபதி நான்காதிநல்லோர்
இவர்மூவர்கேந்திரத்தி லிருக்கின்பமுண்டாம்.

(இ - ள்.) நான்குக்குடையோன் லக்கினாதிபதியுடனும் பாவர்களுடனுங் கூடி ஒருவீட்டிலிருக்க அந்த வீடு சன்மாதிபனுக்கு உச்சவீடானால் பரிவாக னமுமுள்ளவனாவன். புத்திமானும் அரசனைச் சேவிப்பவனுமாவான். சன் மாதிபதி, நான்காதிபதி நல்லோர் இம்மூவரும் கேந்திரத்திலிருந்தால் சுகமுண் டாகும், எ-று. 543

ஆமிரவிமதிநல்லோர் மூவரொன்றாய்க்கூடி
அன்பொடுகேந்திரத்திருக்கின் மதயானைசேரும்
நிமமொடுசன்மாதி பத்தாமாதிபரும்
நிறைந்தசுபருடன்கூடிக் கேந்திரத்தினிற்கில்
வாமமுறுமதகரி வாகனஞ்சேரும்பருவ
மானசவுந்தரமனையாள் மருவுமதிவினாறும்
நேமமிலாச்சன்மாதி லாபாதிநல்லோர்
சேர்ந்துகேந்திரத்திருக்கிற் சிந்தூரமுண்டாமே.

(இ - ள்.) சூரியன் சந்திரன் சுபர் இம்மூவரும் ஒன்றாய்க்கூடிக் கேந்தி ரத்திலிருந்தால் மதயானையும் சன்மாதிபனும், பத்துக்குடையோனும் சுபருடன் கூடிக் கேந்திரத்திலிருந்தால் மதயானைவாகனமும் சேரும். அன்றி சுந்தர மனை வியும், அறிவுள்ளவனுமாவான். சன்மாதிபன், லாபாதிபன், சுபர் இவர்கள் சேர்ந்து கேந்திரத்திலிருக்கினும் யானையுண்டாம், எ-று. 544

உண்டாமவிப்பிரனானாலும் [illegible] திகதனமுடையன்
உறுசன்மத்திற பத்தி லுத்தமர்களிருக்க
மிண்டாருசன்மாதிபன் பத்தாமதிபனேனும்
விரும்பியநல்லோர் தாமுமேவிநிற்க
வண்டாருங்குழலின் மடவாயரசராலும்
மாணிக்கமணிசேரு மன்னரைச்சேவித்தே
கொண்டாடுசத்திர சாமரைகள்மிகவுள்ள
கோமானாகுவனென்றே கூறுவர்மேலோரே.

(இ - ள்.) அன்றிப் பிராமணர் அரசனாலும் மிக்க செல்வம் பெறுவான். சன்மத்திலும், பத்திலும் சுபர்களிருக்கவும், சன்மாதிபன் பத்துக்குடையா னோடு சேர்ந்து நல்லோரையும் கூடியிருந்தால் ஓ பெண்ணே! அரசரால் மாணிக் கஞ்சேரும். அன்றி அரசசேவைசெய்து சத்திரசாமரைகள் மிகுதியுமுள்ள கோமானாவனென்று சொல்லுவர் பெரியோர், எ-று. 545

கூறுஞ்சன்மாதிபன் பத்தாமிடத்திலிருக்கக்
குலவுபத்தாதிப னுன்காமிடத்திற்கூட
வீறுடனுன்காமாதிபதி யுச்சமாகில்
வேந்தனுஞ்சகலவாகன வெகுவிலாவினோதன்
பேருடன்பத்தாமாதிபதி நான்கினிற்கப்
பெருமையுடனுன்காதிபதி பத்தினினிற்கத்
தேறுசன்மாதிபதி யுச்சமாய்மேவத்
திரசகலவாகனங்கள் சேருமன்னனாமே.

(இ - ள்.) சன்மாதிபதி பத்திலும், பத்தாதிபன் நான்கிலுமிருக்க அதில் நான்காதிபன் உச்சமாகில் அரசனாவான். சகலவாகன விலாஸவினோதனுமாயிருப்பன் அன்றி பத்துக்குடையோன் நான்கிலும், நான்குக்குடையோன் பத்திலும் சன்மாதிபனுச்சமாயிருக்கச் சகலதுகனஞ்சேரும். அரசனுவான், எ - று. 546

மன்னியதிரண்டாமதிபன் லாபத்திலிருக்க
மற்றுமந்தலாபாதி லக்கிரண்டின்மேவ
உன்னியநான்காமதிபதி யுச்சமாக
உபயசகலவாகனங்க ளுளவேந்தனவன்
சொன்னவிரண்டாமதிபன் லாபாதிபருவர்
தொடர்ந்திரண்டாமிடத்திருக்கச் சூழ்பத்தாமதிபன்
பின்னுமுச்சனுயிருக்க வரக்கோனியுண்டாய்ப்
பெருஞ்செல்வமுடனே பேசுவர் நூல்வல்லோர்.

(இ - ள்.) இரண்டுக்குடையோன் லாபத்திலும் அந்த லாபாதிபன் இரண்டிலும் நான்குக்குடையோன் உச்சமாயிருந்தால் சகல வாகனங்களுள்ள அரசனுவன். இரண்டாமதிபன் லாபாதிபதி இவர்கள் சேர்ந்து இரண்டாமிடத்திலும், பத்துக்குடையோன் உச்சனுமாயிருக்க தண்டிகையோடு வாழ்வாரென்று சொல்லுவர், எ - று. 547

மாதுருபலன்

வேறு

அன்னைதன்றனக்கதிபதியட்டமத்திற்காரி
தன்னுடன்கூடிற்பின்கோசர மன்னைக்கேதாண்பாணின்
மன்னியகாரிமேவின் மாதாவுக்கரிட்டஞ்சொல்லும்
மன்னியசுக்கிரனுச்ச மேவிடிலனைகாண்வாய்.

(இ - ள்.) தாய்வீட்டுக்குடையோன் அட்டமத்தில் சநியுடன் கூடியிருந்தால் பின் கோசரமாம். அதற்கு ஐந்து ஒன்பதாமிடங்களில் சநியிருந்தால் தாய்க்கு அரிட்டமும், சுபக்கிரகங்கள் உச்சமாகவிருந்தால் சவுக்கியமுண்டாம்.

நாலிரண்டேழிடத்தி னதிபாபரான றுவ்வர்
நாலிரண்டேழிடத்திற் சனிகுசனுடனேகண்ணில்
நாலிரண்டேழிற்செவ்வாய் சனியுநாரிபார்க்க
சாலவன்னைக்கரிட்டஞ் சாற்றுவர்சனியைக்கொண்டே.

(இ - ள்.) நான்கு இரண்டு ஏழு என்னும் இவ்விடங்களுக்குத் தலைவரான மூவரும் அந்த விடங்களின் முறையே சநி, அங்காரகர்களுடன் கலந்திருந்தாலும், அன்றி அங்காரகன் மாத்திரமிருந்தாலும், சநி பார்த்தாலும் சநியைக்கொண்டு தாய்க்கு அரிட்டஞ் சொல்லுவர், எ - று. 549

சனிகுசர்க்கேகதிதிருபான்பான் றனிச்சனியுதிற்றுயிலார்சொல்
இனியபொன்பார்க்கினிற்பட ணிலக்கினத்திற்றுதிற்க
முனியவளிக்கைதேரக்க மூத்துமேழிடத்திற்செவ்வாய்
தனியுமவக்கபின்னை தனைப்பிறந்தார் வளர்ப்பார்காணும்.

(இ - ள்.) சநி, அங்காரகர்களுக்கு ஐந்து ஏழு ஒன்பதாம் வீடுகளில் சந்திரனிருந்தால் தாயிறப்பள். குரு பார்த்தால் உயிர்பிழைப்பள். லக்கினத்தில் சந்திரனிருக்க சத்துருக்கள் அவனைப்பார்க்கவும் ஏழாமிடத்தில் அங்காரகன் தனியாயிருக்கவும் பிறந்த பிள்ளையை அந்நியர் வளர்ப்பார்கள், எ - று. 550

கதிரவற்கிரண்டிற் பன்னிரண்டினிற்காரிநிற்க
மதிதனக்கிரண்டிற்பன்னி ரெண்டினின்மைந்தனிற்கக்
கதிர்குசன்கூடமற்றுங் காரிசந்திரனுங்கூட
அதிபனுந்தன்னைத்தாய்க்கு மரிட்டமென் றறைகள்பண்பே.

(இ - ள்.) சூரியனுக்கு இரண்டு பன்னிரண்டில் சநியும், சந்திரனுக்கு இரண்டு பன்னிரண்டில் சநியும், சூரியனும் அங்காரகனும் பின்னும் சநியும் சந்திரனும் கூடியிருந்தால் தந்தைதாயிருவர்க்கும் அரிட்டமுண்டாமென்று சொல்லுவாய், எ - று. 551

வேறு

பன்னிரண்டினிரண்டினிற் சன்மத்திலிருந்து
பாவருடன்கூடிநிற்கப் பார்த்தவனைக்கரிட்டம்
அன்னியதிபன் றிசையின்மாதுருத்தானத்துக்
கைந்தொன்பானிற் காரியுமரிட்டமதாம்
மன்னியமாதுருத்தானம் றனக்கட்டமத்தில்
மந்தனுன்காதிபனு மருவியுநிற்கிட்டம்
என்னுமாதனக்கதிபனுடனே செவ்வாயேனும்
இராவிபதாலிதுக்கூடி விட்டதோஷபுத்திரனில்.

(இ - ள்.) பன்னிரண்டு இரண்டு சன்மம் இவைகளில் சந்திரன் பாவர்களுடன் கூடியிருந்தால் தாய்க்கு அரிட்டமாம். தாய் ஸ்தானாதிபன் திசையில் தாய் ஸ்தானத்திற்கு ஐந்து ஒன்பதாமிடங்களில் சநியின் அரிட்டமாம்.

மாதுரு ஸ்தானத்திற்கு அட்டமத்தில் சனியும், நான்குக்குடையோனும் சேர்ந்திருந்தால் அரிட்டமாம். நான்காதிபனுடன், அங்காரகனேனும் சூரியனேனும் சேர்ந்தால் புத்தியில் நோயுண்டாகும், எ-று. 552

புந்தியுநான்காதிபனுந் தீயோர்வீட்டிற்
புகழ்க்கோணேக்கற வருநாளரிட்டமாகும்
சிந்தையுடனான்காதிபுடன்றனுதி
சேர்ந்தெங்கேகிடக்கினும்பொன்சேதமன்னைக்
கந்தநான்காதிபுடன் காரிசெவ்வா
யனுகிலமர்திசையிலன்னைக் கரிட்டமாகும்
வந்துசெவ்வாய்நான்கிலுறிற் சனியுமிந்து
மருவியெங்கேநின்றுமரணமற்றங்கதமே.

(இ - ள்.) புதனும், நான்குக்குடையோனும் பாவர்கள் வீட்டில் சுபர் பார்வையில்லாதிருக்க கேசிட்டகாலத்தில் அரிட்டமுண்டாகும். நான்குக்குடையோனேடு தனாதிபதி சேர்ந்து எங்கேயிருந்தாலும் அன்னைக்குப் பொன் சேதமாம். நான்காதிபனுடன், சனி, அங்காரகன் சேர்ந்தால் இவர்கள் திசையில் அன்னைக் கரிட்டமுண்டாகும். அங்காரகன் நான்கிலும், சனியும் சந்திரனும் சேர்ந்து எங்கேயிருந்தாலும் மரணமுண்டாகும், எ-று. 553

வேறு

அந்தங்கமதாய்மாதுருத்தானுதி வியந்திலுபநான்கில்
மெய்த்துங்கலவெண்மதியிருக்க வதற்கேழ்காரிமேவுகினும்
புந்திசெறிசுக்கிரற்கேழிற்பூமி சுதனும்பொருந்திடில்
சித்திமன்னைதனக்கரிட்டந் சேருநற்கோள்செறியினன்றாம்.

(இ - ள்.) மாதுருஸ்தானதிபதி அந்தங்கமதாய் பன்னிரண்டிலிருக்க சந்திரன் நான்கிலும் அதற்கேழில் சனியும், சுக்கிரனுக்கு ஏழில் அங்காரகனும், சேர்ந்தால் தாய்க்கரிட்டமாம். சுபர்களிருந்தால் நன்மையாம், எ-று. 554

செறிபுமிரவியுடன்காரி சேர்ந்துகுடும்பத்தினிலிருந்தே
அறியுமூன்றுமதிபனையு மன்னைபதியா னாமிடமும்
பிரியமறவேசனிபார்க்கப் பெலமற்றிந்தோடமிருந்த
மறுதிக்கோனுன்காதி யுச்சமாகுனும்மாதாவே.

(இ - ள்.) சூரியன், சனியும்சேர்ந்து குடும்பத்திலிருக்க மூன்றுமதிபனையும், அன்னைபதியையும், நான்கையும் சனிபார்த்தாலும் சந்திரனேடு ராகு கேதுக்களும் பலமற்றிருந்தாலும், பாபக்கிரகங்களும் நான்காமதிபனும் உச்சமானுலும்மாதாமரிப்பாள், எ-று. 555

மாதாபதிமிற்சனிவெள்ளி மாநாகமூன் றுமைதற்கேழ்
மீதானைத்திற்சரியுற வெய்யோனுடன்மூன்றுதியைந்திற
நீதாமிருக்கச்சனியவனைத் தெரிந்துபார்க்கக்குடும்பத்தை
எதானங்காரகன்பார்க்க வீன்றாட்கரிட்டமெனச்சொல்லே.

(இ - ள்.) மாதுருஸ்தானத்தில் சந்திரன் சுக்கிரன் ராகு இம்மூவரும், அதற்கேழிலும், ஐந்திலும், சனியும், சூரியனும், மூன்றுமதிபனும் ஐந்திலும் பகைநீசங்களாக இருந்து அவர்களைச் சனிபார்த்தாலும் குடும்பத்தை அங்காரகன் பார்த்தாலும் தாய்க்கு அரிட்டமாகும், எ-று. 556

சொல்லார்மேடலக்கினத்துக் கன்னைபதியிற்சுக்கிரபுதன்
உல்லாசங்கள்பெறநிற்க வதற்கேழுசனுறச்சசிக்குப்
பொல்லாவேழிற்சனியிருக்க வன்னைக்கன்னைபோமுச்சம்
நல்லமதியுநல்லோரு மன்னைக்கரிட்டநல்காரே.

(இ - ள்.) மேஷ லக்கினத்துக்கு மாதுருஸ்தானத்தில் சுக்கிரன் புதன் இவர்களும் அதற்கேழில் குருவும், சந்திரனுக்கு ஏழில் சனியுமிருந்தால் தாயிக்குத் தாயிறப்பாள். உச்சர்களும் வளர்பிறைச் சந்திரனும், சுபர்களும் தாய்க்கு அரிட்டந் தரமாட்டார், எ-று. 557

நல்காரசனிசெவ்வாயிரண்டு நான்காமிடத்தைப்பார்க்கில்
ஒல்காதிருக்கிற்காரகனு மொழிவாய்விரையமுற்றிடவே
சொல்லாவன்னைதனக்குநோய் சினத்தேயராவுந்சேர்ந்துற்றுல்
நில்லாளன்னைபொன்றேக்கி னிறப்பள்நிலானினிலத்தே.

(இ - ள்.) சனி, அங்காரகனிவர்கள் இரண்டு நான்காமிடங்களைப் பார்த்தாலும், இருந்தாலும் காரகன்விரயமடைந்தாலும், அன்னைக்குறும் நோயைச் சொல்வான், ராகு, கேதுக்கள் இவர்களுடன் சேர்ந்தால் அன்னைமரிப்பள், குருபார்த்தால் சிலநாளிருந்து மரிப்பள், எ-று. 558

நிலத்திறனுன்காமிடத்தைக்கோ ரிரண்டாமிடத்திலிருந்தவர்கள்
பலத்தைக்குடும்பாதிபன்பலத்தைப் பெற்றதாயும்பலன்பெறுவள்
நலத்தநான்காமதிபனுச்ச நண்ணியாணக்கிசத்திலிருந்தால்
குலத்துக்கொழுநன்றண்டிப்புக் குள்ளாதானக்கொடிதானே.

(இ - ள்.) நான்காமிடத்திற்கு இரண்டில் இருந்தவர்களும் குடும்பாதிபதியும் பலத்தைப் பெற்றதாயும் பலன் பெறுவள். நான்குக்குடையோன் உச்சம் பெற்று ஆணக்கிசத்திலிருந்தால் புருஷன் தண்டனைக்குட்படான், எ-று. 559

கொடியகிராதவன்புடத்துக் குள்ளம்புலியைத்தான்வாங்கிப்
படியுமிராசிதனிலரசன் பற்றுங்காலசிரியாணம்
கடியமதியின்புடத்துக்குள் காரிபுடத்தைத்தான்வாங்கி
யரகேடிராசிதனிற்காரி வருநாளன்னைநிரியாணம்.

(இ - ள்.) சூரியன் ஸ்புடத்துக்குள் சந்திரனை வாங்கிவரும் இராசியில் குரு வருங் காலத்திலும், சந்திரஸ்புடத்துக்குள் சனிஸ்புடத்தை வாங்கிவரும் இராசியில் சனி வருகாலும் தாய்மரிப்பள், எ-று. 560

ஆணிமதியந்தனக்கேழிற் செவ்வாயுறின்மனைக்கரிட்டம்
காணியாமாதுருத்தானங் கடகமாகப்பிறைநிற்கில்
பூணும்வயதுபூரணமாம் பொல்லாரிரண்டுபுறமிருக்க
ஏணுமதியநடுவிருக்க வன்னைக்கரிட்டமிசைத்திடுமே.

(இ - ள்.) சந்திரனுக்கு ஏழில் அங்காரகனிருந்தால் தாய்க்கரிட்டமாம். மாதுருஸ்தானம் கடகமாய் அதில் சந்திரனிருந்தால் பூர்ணவயதாம். இருபக்கத்திலும் பாபிகளிருக்க நடுவே சந்திரனிருக்கத் தாய்க்கு அரிட்டமுண்டாகும், எ-று.

இசைந்தவன்னைபிதாத்தானந் திரைவாரியுடன்கூடி
அசைந்திடாதெட்டாறு வியத்துறினுநீசமாகவுமே
நிசந்தானுறவேயிருக்கிற்றாய் தின்றந்தையிருவருக்கும்
கசந்தேபிரியமில்லாத கடினமைந்தனுக்கனமே.

(இ - ள்) மாதுரு பிதுர்ஸ்தானங்களில் குரு சூரியனுக்கூடி எட்டு ஆறு பன்னிரண்டாமிடங்களி லிருந்தாலும் நீச்சம் பெற்றிருந்தாலும், தாய்தந்தையர் இருவர்களுக்கும் பிரியப்படாத கடும்புத்திரனைவான், எ-று. 562

கண்டவன்னைபிதாத்தானக் கடவுளிசைத்தெங்கேயுறினும்
மண்டுபிரவிமதிகூடி மாதாபிதுர்ஸ்தானத்தில்
அண்டியிருக்கிற்பிதாவுடனே யன்னைக்கெய்துமனுமரணம்
பண்டுநான்கொன்பதற்கிறைவர் பலத்தாற்பாலன்பரிவுசொல்வாம்.

(இ - ள்.) மாதுர் பிதுர் ஸ்தானாதிபதிகள் எங்கேயிருந்தாலும் சூரியனும் சந்திரனுங்கூடி மாதுர் பிதுர்ஸ்தானத்திலு மிருந்தாலும் மாதாபிதா இருவரும் ஒன்றாய் மரிப்பர். இனி நான்கும் ஒன்பதாமிடங்களின் தலைவர்கள் பலத்தால் புத்திரன் விஷயம் சொல்லுவோம், எ-று. 563

சொல்லுநான்கொன்பதுக்கிறைவர் தொடர்ந்துதனபாக்கியபாபந்
தல்லவறவேயிருந்தாலு மடைவேயுச்சகேந்திரத்து
வெல்லுந்திரிகோணங்களிலு மேவிற்றந்தைதாய்மைந்தர்
எல்லையில்லாச்சந்தோஷ மெய்திவிருப்பரென்பாரே.

(இ - ள்.) நான்குக்கும் ஒன்பதுக்கும் உடையவர்கள் தனம் பாக்கியம் பாபம் இவைகளிலும், உச்சம் கேந்திரம் திரிகோணம் இவைகளிலு மிருந்தாலும், தந்தை தாய் மைந்தர் இவர்கள் மிக்க சந்தோஷத்தை யடைந்திருப்பார்கள், எ-று. 564

எண்பானொன்பானதிபதி யினியபலமாய்ச்சன்மாதி
முன்பாநான்காமதிபதி மூவர்பலன்களற்றிருக்க
அன்பாயீன்றதாயுதாத்தனுருங் கரிட்டத்தந்தனில்
வன்பாய்விருந்திமரிப்பளெனை வருத்தார்சுருதிவல்லோரே.

(இ - ள்.) ஒன்பதுக்குடையோன் பலவானும் அவனும், சன்மாதிபனும், நான்குக்குடையோனும் ஆகிய இம்மூவர் பலமற்றிருக்கப் பிள்ளையைப்பெற்ற அன்றைக்கே தாய் இறப்பாள், எ-று. 565

இந்துசேயாறுமாதி யிவர்களுங்கூடிநாலில்
வந்துதானிருக்கின்ற மாதாவுஞ்சோரம்போவள்
அந்தநான்கொன்பதின்ற கதிபர்கள்கூடிக்கோணம்
சந்திகேந்திரத்தின்மேவத் தாயுடன்கட்டைகண்ணும்.

(இ - ள்.) சந்திரன் அங்காரகன் ஆறுக்குடையோன் இவர்கள்கூடி நாலில் இருந்தால் தாய்சோரம் போவாள். நான்கு ஒன்பது ஜென்மம் இவற்றிற் கதிபர்கள் சேர்ந்து திரிகோணத்திலும், கேந்திரத்திலுமிருந்தால் தாயுடன் கட்டை ஏறுவாள், எ-று. 566

க்ஷேத்திரபலன்

பத்துநான்காதிபன்செவ்வாய பெட்டிரபன்னிரண்டில்
உற்றநீசத்தானத்தி லுறிற்பங்குமனையுமில்லை
மற்றிவர்பலமுற்றுக்க [illegible] மனைபங்குமுண்டாம்
பெற்றநான்பதிபனுச்சம் பெறின்மாடகூடமுண்டாம்.

(இ - ள்.) பத்துக்கும் நான்குக்குமுடைய[illegible], அங்காரகனும் ஆறு எட்டு பன்னிரண்டு உச்சம் நீசன் இவ்விடங்களில் [illegible] பங்குமனையில்லை. இவர்கள் பலப்பட்டிருந்தால் அவையுண்டாம். நான்[illegible]குடையோன் உச்சம்பெற்றால் மாடகூடமுண்டாகும், எ-று. 567

கூடமாளிகைகிளர்நான் கொடியபாபனுங்க[illegible]டனுங்கில்
நீடவாழ்ந்திடவன்றேனும் கெருக்கிலின்[illegible]டாமே
நாடுநல்லோர்களாயி னன்மனைபாவரா[illegible]
வீடுமேயெபோழாய்க் கிடக்குமென் [illegible]வுமுங்கும்.

(இ - ள்.) நான்குக் குடையோன் [illegible]இலேயே யிருக்க அவனை நல்லோர் காணின் மாடமாளிகை யுண்டாகும். பாவர் பார்த்தால் வீடு பாழாய்க்கிடக்குமாம், எ-று. 568

ஏழுக்குநான்காமதிபதியும் வளர்சந்துருநேசத்திலுற
ஒழுக்குமியத்தாதிபன்மனைத்தி லுறச்சன்மாதிசெங்கதிரும்
முழுக்குநான்காதிபன்கூட நல்லோர்நோக்குறுதிருக்கத்
தழுக்கும்பங்குமனையெல்லாந் தானும்பதிபோக்கப்பாதே.

(இ - ள்.) நான்குக்குடையோன் சத்துரு நீசஸ்தானங்களிலும், பன்னிரண்டுக்குடையோன் தனத்திலும், சென்மாதிபனும், சூரியனும், நான்காமிடத்திலும் கூடவும், நல்லோர் பார்வை பெறாதிருக்க பந்து மனைகளெல்லாம் பறிகொடுக்கப்படும், எ-று. 569

தப்பாதாறுமதிபதியுந் நான்பத்தீசுரனிருந்திடவே
ஒப்பாஞ்சென்மத்தனிற்செவ்வாய் புதனுமசுபக்கோளுறப்பார்க்க
இப்பார்தன்னிற்சத்துருவா லிருப்பார்மனைபங்குள்ளவெல்லாம்
செப்பார்பூமியாவினொடுமனைக்குச் சேருந்தின்னாத் திறனுமே.

(இ - ள்.) ஆறுக்குடையோன் பத்து வரு இடங்களிலும், அக்காரகன் சென்மத்திலுமிருந்து சுபர் இருக்கவும் பார்வை பெறாதிருக்கவும் சத்துருக்கள் செல்வமனையாவும் இவனைச்சேரும், எ-று. 570

நாலாமிடத்திருதிபனும் வக்கிரதிபனுடன்கூடி
மேலாய்நாவிலுதிலொருவன் வீட்டிலிருந்துமிகவாழ்வன்
சேறநாலாமதிபனுடன் சேரும்பாவரெத்தனையோ
மாலாய்மனைத்தனைவீடு கட்டிச்சேதம்வழங்குவனே.

(இ - ள்.) நான்குக்குடையோனும், லக்கினாதிபதியுங்கூடி நாலிலிருந்தால் ஒருவன் வீட்டிலிருந்து இனிமையாய் வாழ்வன். நான்குக் குடையனோடு எத்தனைப் பாவர்கள் சேர்ந்திருக்கின்றனரோ அத்தனை வீடுகள் கட்டியிழந்திடுவன், எ-று. 571

வேறு

வழங்கும்லக்கின மதிபதியே
முழங்குமாறின் முக்கோணுமைத்திடல்
தழங்குஞ்சென்மத் தனைப்பாவர்கண்டிடல்
பழங்கனமனை பங்கும் விற்றொன்னே.

(இ - ள்.) லக்கினாதிபதி பன்னிரண்டில் ஆறு, பன்னிரண்டாமிடங்களிலிருக்க சென்மலக்கினத்தைப் பாவர் பார்த்தால் பூர்வீகமனைப் பங்கில்லாதவனுவன், எ-று.

வேறு

பங்கமில்லியத் தினமன்னவன் பன்னிரண்டாமிடத்தில்
தங்கநல்வீடு கட்டிச் சுகபோக்கியமுஞ்சேர்ப்பன்
இங்கிதவியத்தோன் தன்னோடு கூடத்தன்னைக்கோசநத்திடும்
சங்கையத்தனையாய்வீடு கட்டிசமர்த்தன்றுனே.

(இ - ள்.) பன்னிரண்டுக் குடையோன் இரண்டில் தங்க நல்ல வீடுகட்டிச் சுகபோக்கியமுஞ் சேர்ப்பன். பன்னிரண்டுக் குடையனோடு எத்தனைக் கிரகங்கள் இரண்டில் கூடியிருந்தனவோ அத்தனை வீடுகட்டும் சாமர்த்தியவானுவன், எ-று. 573

தானமாஞ்சென்மவீடு சரமெனிற்பரதேசத்தில்
ஆனதோர்திரங்களாயின் மருவுவன்சுதேசந்தன்னில்
சனமிதுபயமாயின் பரதேசத்திலேயிற்பாதி
னனமில்சுதேசந்தன்னிற் பாதிநாளுறைவன்கண்டே.

(இ - ள்.) சென்மலக்கினம் சரமானல் பரதேசத்திலும் ஸ்திரமானல் சுதேசத்திலும் உபயமானல் பரதேசத்திற் பாதிநாளும் சுதேசத்தில் பாதிநாளுமாய் வாசஞ் செய்வன், எ-று. 574

கண்டபன்னிரண்டாம்வீடு சுபருடன்மேலோர்வீடாயின்
இண்டிறனகரத்தினிடை சேர்ந்துறுவிருப்பன்
பண்டுகுத்திரர்தம்வீடாய் பாபர்க்குறவுமாயின்
மண்டுகுத்திரிருக்கு மனைக்கருகிருந்துவாழ்வன்.

(இ - ள்.) பன்னிரண்டாம்வீடு சுபர்வீடாயின் நல்லநகரத்தின் சமீபமாக விருப்பன். க்ஷுத்திரவீடாய் லாபாதிபதிக் குறவானல் க்ஷுத்திரர்வீட்டுக் கருகிலிருந்து வாழ்வன், எ-று. 575

இருந்தபன்னிரண்டாமதி யின்றுநாய் துணைவர்தந்தை
பொருந்தியமனைவிமக்கள் டானத்திற் போயினின்றாலும்
திருந்துமத்தானத்ததி தன்னுடன் சேர்ந்துற்றாலும்
அருந்துணையானவீடு மவரவர்தமக்கேயாகும்.

(இ - ள்.) பன்னிரண்டுக் குடையோன், தாய், துணைவர், தந்தை, மனைவி, மக்கள் ஸ்தானங்களிற் போயிருந்தாலும், அன்றி அவ்விடங்களின் அதிபர்கள் தன்னுடன் சேர்ந்திருந்தாலும், அந்தந்தவீடு அவரவர்களுடையதேயாகும், எ-று.

பாவிதயம்

மாலையநாலாமிடத்தன்னை மருவிப்பாவர்ளிருக்க
மேலாய்நோக்கச்சென்மாதி மீண்டும்பலன்கள் நற்றிருக்க
எல்லாம்பாவருடன்கூடி யிருக்கநல்லோர் பார்வையாய்
பாலோனிதயம்விடுமென்றே பகர்ந்துரைப்பர்பாரோரே.

(இ - ள்.) நாலாமிடத்தில் பாவர்களிருந்தாலும் பார்த்தாலும் சென்மாதிபதி பலனற்றிருந்தாலும், அன்றிப் பாவர்களுடன்கூடி சுபர் பார்வையைப் பெறாதிருந்தால் பலன் அதிக விதயம் கெடுமென்றே பெரியோர்கள் சொல்லுவர் எ-று. 577

வேறு

பாதுஞ்சென்மாதி நான்காமதி
பாக்கியத்தாருதிவிலை மூன்றுமேபொருந்த

சேரவேயாரிடத்து மலதாருதி
செறிக்குருமங்கிசத்துத் திடமாய்த்திக்க
வீரியகாலாதிபதி யுடன்பாம்பெது
மிக்கசனிதன்னுடனே மேவிடினும்
தேரிவிதுபாவிஷய மென்றுசொல்வர்
சிலைப்புருவக்கயற்கணுடைத் தெரிவையாளே.

(இ-ள்.) சன்மாதிபன், நான்குக்குடையோன், பாக்கியாதிபதி இம்மூவரும் ஆறாமிடத்திலும் அல்லது ஆறாமிடத்தோனிருக்கும் அம்சத்திலுமிருக்கவும், நான்குக்குடையோனோடு ராகு கேதுவானவனும் சனியானவனும் சேர்ந்திருந்தால் பெண்ணே! இது அன்னிய விஷயமென்று சொல்லுவர் பெரியோர், எ-று.

ஆறாமிடத்ததிபனுடன் குமரன்சன்மத்தில்
சேர்ந்திருக்கவவனுடனே இராகுமேம்படச் சேர்ந்திருக்கப்
பாரில்மிகச்சனித்தவனும் பரவுங்குலபுத்திரனல்லன்
ஏருங்கடைசிக்குலத்தான் என்பான்றந்தையென்றிலகும்.

(இ-ள்.) செவ்வாயும் நாலுக்குடையோனும் சென்மத்திலும் ராகுகேதுக்களுடன் கூடியிருக்கப்பிறந்தவன் குலபுத்திரனல்லன். இவன்றந்தை கடைக்குலத்தவனாவான், எ-று. 579

வேறு

இலக்கினமூன்றாமிடத்திற் குசன்கருங்கோள்கோடல்
எழிற்பகினிசங்கம மாறுதிபன்றனுடனுந்
சலமிவெட்டாதிபனிதனுஞ் செவ்வாயுடனுஞ்
சசியுடனுங்கூடிலவள் சங்கமமாகும்
கலமவியும்வெருடனே கரும்பாம்புகீசன்
கவில்சனிருத்திரன்வெள்ளி கண்ணில்வைசியனுமாம்
குலவியசூரியன்கூடின் மறைவனென்றே
கூறினரிப்படித்தெரிந்து கொண்டிடியேவேண்டும்.

(இ-ள்.) மூன்றில் அங்காரகனும், ராகுகூடினதும், பகினிசங்கமம். ஆறுக்குடையோனானதும் எட்டுக்குடையோனானதும் செவ்வாயுடனாவது, சந்திரனுடனாவது கூடில் அவன் சங்கமமாகும். இவருடன் ராகுகூடில் கீசனும், சனிகூடில் ருத்திரனும், சுக்கிரன்கூடில் வைசியனும், சூரியன்கூடின் பிராமணனும், சங்கமருடர்களாவாரென்றின்னம் அறியவேண்டும், எ-று. 580

வேண்டுதொலைமாதிபாருமாதிபனும்
மெய்யிற்றாப்பலாசு விரைந்துடன்கூடிடினும்
தீண்டிவிறையும்பிருகுசு தாட்பலதோயாக
திண்டிறனாகாமிடத்தைப் பாவர்கணோக்கிடினும்

பூண்டசலாதிசசியொடு கருங்கோள்கூடப்
பொருந்தியசன்மாதி நான்காறெனுமாதிபன்
சண்டியரிவெமாதிடத்தி லிவர்சால்வர்கூடி
இருந்தக்கால்பாவிஷய மெனப்புகலுவாரே.

(இ-ள்) நாலுக்குடையோன் ஆறுக்குடையோன் இவர்கள் தாட்பலவாகக் கூடினாலும், சந்திரனும், சுக்கிரனும் [illegible]பலவாகவும் நான்காமிடத்தைப் பாவர்கள் பார்த்தாலும், நாலுக்குடையோ[illegible], ராகு இவர்களுடனும், சன்மாதிபதி, நான்கு ஐந்து, ஆறாமிடத்ததிப[illegible]டனுங்கூடி மாதுர்ஸ்தானத்திற்கு ஏழி லிருந்தாலும் பாவிஷயமென்றே சொல்லுவார், எ-று. 581

வேறு

சிறந்தமதியையுஞ் சன்[illegible]மையும்
அதிர்ந்தபார்வைக வாசகி[illegible]
உறைந்தகதிர்கதி பொன்பதினுற்றிடில்
பிறந்தசெய்பாச சாதகம்போற்றுமே.

(இ-ள்.) சந்திரனையும், சென்மத்தையும் குருபாராவிட்டாலும், சூரிய சந்திரர்கள் ஒன்பதாமிடத்தி லிருந்தாலும் பிறந்தபின்னை பாசாதக முடையதாகும், எ-று. 582

போற்றும்லக்கினம் பொருந்துங்கதிர்மதி
தோற்றியிருக்கத் தரைகுமாசனும்
சாற்றியசீசன் சனிவொங்கிசையில்
ஏற்றியிருக்க விதுபாசாதகம்.

(இ-ள்.) லக்கினத்தில் சூரிய சந்திரர்களும், குரு நீசமடைந்து சனி கோங்கிசையிலு மிருந்தாலும் பாசாதகமாகும், எ-று. 583

பரிதியின்கிழமை பண்புறுசோதி
அருகியதுதிகை அமர்ந்திடிலேனும்
பெருகியவிதனும் பெறுநாளிரேவதி
உருகியசத்தமி யுறும்பாசாதகம்.

(இ-ள்.) ஞாயிற்றுக்கிழமையில் வருஞ் சோதி நட்சத்திரம், துதிக்கைத் திதி இவைகளிலேனும், புதன்கிழமையில் இரேவதி நட்சத்திரம் சத்தமி திதி இவைகளிலேனும் பிறந்தால் பாசாதகமாம், எ-று. 584

உறுஞ்சனிக்கிழமை யுற்றுபின்னவிட்டம்
திறந்துவாதசி நாளினிற்பிறந்தோன்
அறிந்திடுமிவ்பாச சாதகமென்றே
சிறந்தாறறிந்தோர் செப்புவர்தாமே.

(இ-ள்.) சனிக்கிழமையில் அவிட்ட நட்சத்திரத்தில் பிறப்பதும், இவை தனி நிதியும்வரப் பிறந்தோரும் பாசாதகருள்ளவனென்றே சாஸ்திரமாராய்ந்த பெரியோர் சொல்லுவர், எ-று. 585

மதுராரிட்டம்

செங்கதிரிருக்குஞ் செவ்வாயக்கினிதிசையில்
தங்கியங்கிசையோன் தன்மனையிருந்தினை
மங்குரிப்சன் பமைதச் சேய்பார்த்திடில்
பொங்கியசிரசு பொடிபடுவரே.

(இ-ள்.) சூரியனிருக்கும் அக்கினிதிசையில் தங்கி அங்கிசையோன் லக்கினவீட்டிலிருந்தாலும், அதை அங்காரகன் பார்த்தாலும் சிரம் பொடிபடுவர், எ-று. 586

வெண்பா

மூன்றுமதிபதியு மூரிச்சனியுடனே
தோன்றிமைந்தாமிடத்திற் சூழ்ந்திடினும்—ஆன்றகதிர்
ஆறெட்டாமிடத்தாறு லவன்றாய்போமென்றே
கூறுஞ்சாமண்டிற் குறித்து.

(இ-ள்.) மூன்றுக்குடையோன் சனியுடன்கூடி ஐந்தாமிடத்திலும் சூரியன் ஆறு, எட்டு என்னுமிடங்களில் இருந்தால் அவன் தாய் ஐந்தாமாண்டில் இறப்பாள், எ-று. 587

குறித்ததாய்தந்தை குலவுமனைக்கதிபர்
மறித்தவர்கண்மாறி மனையுறினும்—சிறந்தேதல்
அத்தமனமாயிடினு மன்னையுமரணம்
சித்தமெனச்சொற்றிடு நீதேர்ந்து.

(இ-ள்.) மாதுர், பிதுர்ஸ்தானங்களுக்குத் தலைவர்கள் தங்கள் தங்கள் மனைகளில் மாறி பரிவர்த்தனை மேவியிருந்தாலும், அத்தமனமானாலும் தாய் உடனே மரணமாவாள், எ-று. 588

நான்காம்பாவம்

முற்றிற்று.

ஐந்தாம்பாவம்

புத்திரபாவம்

அஞ்சிற்கஞ்சிற்காரி மதியுடனேந்தீறைடாவியுதில்
அஞ்சுமாமன்சுபர்நோக்கிற தாயாயில்லைப்பூசத்தில்
விஞ்சுபாதமதிவிசையல்லின்க்கன்னியாமாகும்
வஞ்சிமெழுக்கிதோருமாடமானைத்தேகைருக்கண்டவர்.

(இ-ள்.) அஞ்சுக்குடையவன், சந்திரன், அங்காரகன் இவர்களுடன் சூரியனுமிருந்தால் மாமன் மரிப்பான், சுக்கிரன் பார்த்தால் துன்பமில்லை. பூசத்தில் கடைசிசரணம் பாதமானாலும் தாய்க்குத் தாய்மரிக்கும். அவன் பிறைக்கில் மாமனுக்கே அரிட்டமுண்டாம், எ-று. 589

மருவுஞ்சன்மலக்கினத்தில் வாழுஞ்சன்மாதிபனோடும்
அருளுமைந்தாமிடத்திபனனுமீங்பார்க்கிலன்புடனே
ஒருவர்தமதுமனையினின்மற் றொருவர்மாறுகவுதித்திற்
பெருமைப்புதல்வர்பிறந்திடுவர் பிறந்தானமனுக்கஞ்சாரே.

(இ-ள்.) சன்மலக்கினத்திலிருக்கும் சன்மாதிபதியோடு ஐந்துக்குடையோன் சேர்ந்தாலும், பார்த்தாலும், ஒருவர் வீட்டிலொருவர் மாறிநின்றாலும் பெருமையான பிள்ளைகள் பிறப்பார்கள். அப்படி பிறந்தவர்கள் யமனுக்கஞ்சார்கள், எ-று. 590

வேறு

அஞ்சாமிடத்தி லாதவனாற்றேருதம்
அஞ்சுமக்கச்சனிமூலிக் கருகன்றந்தைக்கே
துஞ்சாமதிக்கன்னை புதனுக்கன்னை
கறுமதுக்காசனுக் கன்னை கற்றமாகும்
கஞ்சாருக்கரியோன் கதறுசெவ்வாய்
தன்னனிடி யம்மானுக்கு தோஷமாகும்
மஞ்சாருக்குன்மைவாய மசந்திரன்பேல
வர்திடுவசத்தானமத்திய முதித்தரனே.

(இ-ள்.) அஞ்சாமிடத்தில் விருப்பமாய் தோஷம் வரும் விதம் எப்படியென்றால் சனியிருந்தால் குழந்தைக்கும், சூரியனிருந்தால் தந்தைக்கும் சந்திரனிருந்தால் தாய்க்கும், புதனிருந்தால் மாதுலர்க்கும், குருவிருந்தால் பிதுர்

ளர்க்கத்தார்க்கும், ராகு விருந்தால் பிள்ளைகளுக்கும், அங்காரகனிருந்தால் மாம னுக்கும் தோஷமுண்டாகும். இதன்றியும் பெண்ணே! குருவைந்தி லிருந்தால் பிள்ளைகளுற்பத்தியே அற்பமாகும், எ-று. 591

உதித்தவோரைத்தாமாதி யைம்பவனைக் குறுமல்
மதித்திடுதார் நோக்கமின்றேல் மகவில்லைசுபாங்கிசத்தில்
பதித்துறிலாயிளையுண்டாம் பஞ்சமத்தாமதிபன்மூன்றில்
விதித்திடும்படி யெரிதின் வெகுத்தகிளர்தாம்றமாம்.

(இ-ள்.) லக்கினம் ஐந்துக்குடையோன் அவ்விடங்களை விடமலும் அம் மனைகளைப் பாராமலுமிருந்தால் பிள்ளையில்லை. சுபாங்கிசத்தில் இருந்தால் பிள்ளை யுண்டாம், ஐந்துக்குடையோனை மூன்றிலிருந்தால் புத்திரற்பமாம், எ-று. 592

புத்திரத்தாதிபனைப் புகழ்வீட்டதில்
புத்திரமில்லைநல்லோர் கூடிடிற்பிறந்துசாவர்
ஒத்திடுபாவர்சேரின் மகவில்லைபெருகுங்குடும்பம்
வித்தகையோரையார்க்கு மகவில்லைவிளம்புங்காலே.

(இ-ள்.) புத்திர ஸ்தானாதிபதி பகைவன் வீட்டிலிருந்தாலும் புத் திரரில்லை. நல்லோர் சேர்ந்தால் பிறந்து சாவார்கள். பாவர் சேர்ந்தால் மக வில்லை, கிடைய குடும்பியோரையோர்க்கும் புத்திரருண்டாவதில்லை யாரும், எ-று.

விளம்புமேழாமிடத்தோன் மேவுச்சநீசமின்றிக்
களங்கமில்லா திருக்கிற் கருதுமூத்தாளுக்கில்லை
இளங்கொடியாளுக்குண்டா மேழோனுச்சநீசம்
வளம்பெருமங்கிசத்தின் மருவிடின்மகவுண்டாமே.

(இ-ள்.) ஏழுக்குடையோன் உச்சநீசங்களின்றி யிருந்தால் மூத்தாளுக் குப் புத்திரரில்லை, இளையவளுக்குண்டு. ஏழோன் உச்சநீச அம்சத்திலிருந் தால் மகவுண்டாம், எ-று. 594

வேறு

அஞ்சாமிடத்திற்செங்கதிரோ டரவுடனுங்கனிருக்கின்
மஞ்சார்குழலாய்தனக்கும் மைந்தன்றனக்கும்பகையே
செஞ்சரர்களுத்திரவ்யமுஞ் சேதமுண்டாந்திண்மையுடன்
துஞ்சாதிருந்தகைக்கண்விடமே யாமபோலதிலக்கணமே.

(இ-ள்.) ஐந்தில் சூரியனும் ராகு அல்லது கேதுவும் கூடியிருந்தால் தகப்பனுக்கும் புத்திரருக்கும் பகையுண்டாகும். அதினால் தனமிழும் திரவிய மும் சேதமுண்டாகும். அப்படி மனையிலிருப்போர் இருவர் இடம்விட்டுப்பிரிந்த தாயபோலவும் இருந்து இடைச்சலமாம், எ-று. 595

வேறு

லக்கினாதிபதிக்கு நாலாமவன்
துக்கநல்லுறவாகவுந் தானதில்
தக்கதந்தை தனக்குப்பின் மைந்தர்கள்
மிக்கபூமியில் மேவுவர்சாற்றிமே.

(இ-ள்.) லக்கினாதிபதிக்கு நாலுக்குடையோன் உறவாகவிருந்தால் தகப் பனுக்குப் பின் பிள்ளைகள் பூமியிலிருப்பார்கள், எ-று. 596

வேறு

காணுமலக்கினத்திற்செவ்வாய் தனக்கேழிற்காரியின்னும்
கோணுமூன்றாஞ்சில்வெய்யோ னிப்படிக்குலவிநின்றால்
ஆணுடன்பெண்ணுமில்லை பஞ்சாதிபாவனேழில்
பூணேழோன்பாவனையு மற்றிடிற்புதல்வனில்லை.

(இ-ள்.) லக்கினத்தில் செவ்வாயும் அவனுக்கு ஏழில் சனியும் பன்னிரண் டில் சூரியனும் இருந்தால் ஆண் பெண் இரண்டுமில்லை. அஞ்சுக்குடையோன் பாவியாய் ஏழிலும், ஏழோன் பாவியாய் ஐந்திலுமிருந்தாலும் புதல்வனில்லை, எ-று.

புத்திரஸ்தானத்தாதி பொருந்துமங்கிசையைத்தொட்டு
மெய்த்துலக்கினமட்டெண்ணி மேவியேகண்டலக்கம்
எத்தனையோ தானத்தைத் தொகைப்படியினியமைந்தர்
சித்தமாய்ப்பெறுவரென்று தெரிந்தவருரைசெய்வாரே.

(இ-ள்.) புத்திரஸ்தானத்தார் அம்சை முதல் லக்கினம் வரைக்கு மெண்ணிவந்த லக்கினம் எத்தனையோ அத்தனை மைந்தர்களைப் பெறுவர் என்று அறிந்து கூறுவர், எ-று. 598

உரைசெறியவியோகங்க ளொண்மதிக்கேழில்வெய்யோன்
பரவியேதானின்றாலும் பயில்சனிக்கேழிற்புத்தி
தீரமுடனின்றபோதுந் திகழிரட்டைராசி
இரவிமேனிடச்செவ்வாய் பார்த்திடிலவியோகமூன்றும்.

(இ-ள்.) சந்திரனுக்கு ஏழில் சூரியனும் சனிக்கு ஏழில் புதனிருந்தாலும், இரட்டை ராசியில் சூரியனிருக்க அங்காரகன் இவர்களைப் பார்த்தாலும், இம்மூன்றும் அவியோகமாகும், எ-று. 599

மூன்றும்பின்னுதயராசி முதலொரைந்தையாயதற்குள்
தான்றமிக்குற்றபோது மிரட்டையோற்றையிலுமிக்கு
தோன்றிடச்செவ்வாய்புந்தி பார்க்கிலுஞ்சோமன்காரி
ஆன்றவங்கிசமுமலக்கின மாயிடலவியுமாமே.

(இ - ள்.) பின்னுதயமாகிமுதல் ஓற்றையாய் அதில் சந்திரனிருந்தாலும் இரட்டை ஓற்றையில் சந்திரனிருந்து அங்காரகன் புதனும் பார்க்க சந்திரன் சனி இவர்களின் அம்சம் வக்கிரமாகுதல் அலியாம், எ-று. 600

அலியட்டமாதிபைத் தாமீடத்தினி லிருக்கவைத்தாம்
வலியவீட்டதிபனொட்டின் மருவிசேயபார்நோக்கின்றி
நலியபுத்திரருமில்லை நவிலக்காமதிபன்றனும்
மெலிவதாய்வியமமெட்டின் மேவிலுமில்லைமைந்தர்.

(இ - ள்.) அட்டமாதிபதி ஐந்தாமிடத்திலிருந்தும் சுபர் நோக்க மில்லாதிருந்தால் புத்திரரில்லை. அந்தக்குடையோன் பன்னிரண்டு ஆறு எட்டா மிடங்களிலிருந்தாலும் புத்திரருண்டாவதில்லை, எ-று. 601

மைந்தர்தானக்கள்காரி புந்திதன் மனையதாக
அந்தவீட்டதனைக்காரி குளிகனோடெய்திப்பார்க்கில்
சுந்தரத்தந்தனுண்டாஞ் சுபர்பலமுடனேவைத்தில்
வந்திடவைத்தோர்நோக்க மற்றிடத்தாலவாழ்வன்.

(இ - ள்.) புத்திரஸ்தானங்கள் சனி புதன் இவர்கள் வீடாகவும், அதில் சனி குளிகனோடு சேர்ந்திருந்தாலும் பார்த்தாலும் தத்துப்பிள்ளை யுண்டாம். சுபர் பலப்பட்டு ஐந்தில் வந்து அவ்வைந்தாம் வீட்டோன் பார்வையுற்றிருந்தாலும் தத்தாகவே வாழ்வன், எ-று. 602

வாழ்மீனலக்கினத்துக் கைந்தினில் மன்னனுச்சந்
தாழ்விலா திருக்கிற்பெண்க டன்னையேபெறுவனந்தான்
கின்குசனுமாதி பூவைதாரேயமில்லார்
சூழ்வேபார்க்கிற்சத்துருக்களாற் சுதர்க்குப்பீடை.

(இ - ள்.) மீனத்திற்கைந்தில் குரு உச்சமாயிருக்க, பெண்களையே பெறு வன். ஐந்தாக்குடையோன் அங்காரகன் ஆறாக்குடையோன் இவர்கள் மூல வையும் சத்துருக்கள் பார்த்தால் பகைவர்களால் பிள்ளைகட்குப் பீடையுண் டாம், எ-று. 603

வேறு

பீடிலக்தாமதிபது மைந்தினில்
நீடுபோவுடன் கூடினின்றிடில்
நாடிநோக்குற நல்லகுழவியும்
வாடித்தேவதை வஞ்சனையாலுமே.

(இ - ள்.) ஐந்தாக்குடையோனும் ஐந்தில் பாவரோடு கூடியிருந்தாலும் பார்க்கப்பட்டாலும், நல்லகுழவியும் தேவதைவஞ்சனையால் வாடும், எ-று. 604

வேறு

வஞ்சனைகாலினி லன்பிலர்வர்த்திட மைந்தனில மன்னாதும்
விஞ்சிப்பாரிபோடன்குற வியன்மதிலன்பிலர்மின்றிடும்

தருசமெனுஞ்சிறுமைந்தனுந் தாய்பரந்தன்னிலிறந்திடும்
அஞ்சிவனந்தனில்வந்து மையார்வருகண்டிடவுங்கெடும்.

(இ - ள்.) நாலில் பாவர்களும், ஐந்தில் குருவும் சனியும் பன்னிரண்டில் பாவர்களும் இருந்தால் தாய் கையிலேயே பிள்ளையிறந்திடும். அன்றி ஐந்து ஒன்பதாமிடங்களில் வருவோர் கோபிக்கவும் இறக்கும், எ-று. 605

கேடறுபுத்திரநாதனுங்கிளர்மதி சுக்கிரன்மூவருஞ்
கூடிடமடந்தையிராசியிற் கோதையராங்கிசைமீதினில்
நீடியிருந்திடுவோர்களை நேயமிலார்விழிநோக்குறில்
நாடியபெண்பிள்ளையேபெறு நாவலர்கண்டறிவார்களே.

(இ - ள்.) புத்திரநாதனும், சந்திரனும், சுக்கிரனும் கூடி பெண்ராசியில் பெண்ணாங்கிசையி லிருப்பவர்களைப் பார்த்தால் பெண்பிள்ளைகளே பெறுமென்று சொல்லுவர், எ-று. 606

வார்சடையார்முடிமேலுறு மாமதிமேவுமனைக்குமே
ஏர்பெறுசன்மமனைக்குமே யெண்ணியொரைந்துதலத்தையும்
பாரினிலுத்தமரானவர் பார்வையுறிற்சிறுபாலராம்
காரிமுதற்கொடும்பாவரே காணினிலைச்சிறுபாலனே.

(இ - ள்.) சந்திரன் இருந்த வீட்டுக்கும் லக்கினத்திற்கும் மத்தியிலிருக்கும் ஐந்திடங்களையும் சுபர் பார்த்தால் சிறுபாலருண்டாம். சனி முதலிய பாபிகள் பார்த்தாலில்லை, எ-று. 607

பாலர்பிறந்திறுமைந்திலே பாம்பொருகேதுபரித்துறில்
பாலர்பிறந்திறுமைந்திலே பாம்கருநாகமமர்ந்துறில்
சீலசன்மாதியைந்தாமிடஞ் சேரவைத்தாதிதிடம்பெற
வாலிபத்தன்னின்மைந்தரும் வந்துபிறந்துவளருவார்.

(இ - ள்.) ஐந்தில் கேதுவிருந்தாலும் ராகுவிருந்தாலும், பாலர்கள் பிறந் திறப்பார்கள், லக்கினாதிபதி ஐந்திலும், ஐந்தாக்குடையோன் பலப்பட்டு மிருந் தால் வாலிபத்தில் பிள்ளைபிறந்து வளரும், எ-று. 608

வளருஞ்சன்மாதிபமேழுற மற்றுள்ளாதிபேழாதியும்
கிளரமிழ்ந்தொருவீட்டுறக் கேடறவோரிரண்டாதியும்
தளர்வறலேசன்மபீதுறத் தான்வருமைந்தர்சமர்த்தராய்
உளருமிரண்டிறைமைந்தினி லுறமகவுண்டுறபார்வையே.

(இ - ள்.) சன்மாதிபதி ஏழிலும் காலுக்குடையோனும், ஏழாமதிபனும் ஒரேவீட்டிலும் இரண்டுக்குடையோன் சன்மத்திலிருக்கப் பிறக்கும் பிள்ளைகள் சமர்த்தராயிருப்பர். இரண்டாமதிபன் ஐந்தினில் குருபார்வையைப் பெற்றிருந் தால் பிள்ளைகளுண்டாகும், எ-று. 609

பாரினிலைந்தாமதிபதி பஞ்சபுட்டனில் நடபுடத்தையுஞ்
சூரியதேவர்புடத்தையுந் தொகைகொண்டு கூட்டியராசியில்
தார்புனையும்புயராசனுந் தகைகளையுண்டென்செறிகாலமே
வீரியவானொருமைந்தனும் மேவுவனென்பு விபீதிலே.

(இ - ள்.) ஐந்தாமிடத்துடையோனிருக்கும் ஸ்புடத்தையும் சூரியன் ஸ்புடத்தையும் கூட்டியராசியில் குருவருங்காலத்தில் வீரியவானும் ஒரு புதல்வன் பிறப்பன், எ-று. 610

மதியிலைந்தாதிபுடத்தினி விரவிமைந்தனுமெனவாங்கியே
போதுறுமராசியின்மன்னுறும் போதினுமெமதுபுத்திரன்
கோதறுமன்னன்புடத்தினிற் குளிகனைவாங்கியராசியில்
ஏதமில்சனிவருபோதிரா தேகமரித்திடும்பாலரே.

(இ - ள்.) ஐந்தாமிடத்துடையோன் ஸ்புடத்தில் சனிஸ்புடத்தை வாங்கினதிலிருக்கும் ராசியில் குருவரும்போது புத்திரனிறப்பன். அன்றி, குரு ஸ்புடத்தில் குளிகன் ஸ்புடத்தை வாங்கிய ராசியிலும் சனி வந்தால் புத்திரனிறப்பான், எ-று.

வேறு

அதிர்த்திடும்பரிதிக்கேந்திரந்தன்னில் விடபுவியிருந்திடப்பிதாவில்
அடம்பமாம்புதல்வர்சரித்திரஞ்சசிதானறுமிடமேயபணபரத்திருக்கில்
செறித்திடுந்தந்தைதனக்கிணைகதனுந் திங்களாபோக்கிலியத்தில்
சேர்ந்திடும்பிதாவினைநிகர்புத்திரனுஞ் செங்கதிரோனுறும்பதிக்கே
நிறைந்தருளைந்தேழொன்பது வியத்தினில்வுறைவுறுமதனைகான்
நீடுகட்டாகியுச்சமாயிருக்க நிருபனுமதிதனைக்காண
உடைத்திடுந்தந்தைக்கதிகமாஞ்செல்வமுள்ளபுத்திரனெனச்சொல்லும்
உலவுமம்மதியைச்சக்கிரன்காணி லுரணர்வெருபோகவானுமே.

(இ - ள்.) சூரியகேந்திரத்தில் சந்திரனிருந்தால் பிதாவுக்குப் புத்திரநஷ்டமாம். சந்திரன் பணபரத்திருந்தால் தந்தைக்கொப்பான பிள்ளையுண்டாம். சந்திரன் ஆபோக்லியத்திலிருந்தால் பிதாவைக்காட்டிலுயர்ந்த புத்திரனுண்டு. சூரியனுக்கு ஐந்து ஏழு ஒன்பது பன்னிரண்டாமிடங்களில் சந்திரனிருந்து அந்த வீடு கட்டு ஆட்சி உச்சங்களாயிருக்க குருவும் சந்திரனைப் பார்த்தால் தந்தையை விட செல்வம் அதிகமுள்ள புத்திரனுண்டாம். சந்திரனைச் சுக்கிரன் பார்த்தாலோ வெகு போகவானுவன், எ-று. 612

வேறு

போகமானமைந்தாமதிபன்லாபதி பொருந்தியேமித்திருவாக
வாருசேரைந்தாமதிபதியுச்சனுமாய் வளர்பெறுமையதுமேயாயின்
மோகமாயவாபத்தினிலிருக்க முறைதவிரதபுத்திரர்கள்
ஆகவேபலருண்டவருடன் கூடுமைந்தனைபுகல்வருண்டாமே.

(இ-ள்.) ஐந்தாமுடையோனும் லாபாதிபனும் மித்துருக்களாக இவர்களில் ஐந்தாமுடையோன் உச்சனும் சுபனுமாய் லாபஸ்தானத்திலிருந்தால் முறை தவறாத புத்திரர்களநேகருண்டாவார், எ-று. 613

ஆமெனுமைந்தாதிபனுதித்த ஸனனுமிலோடெவருமின்னையுமாதாம்
ஆமெனுமைந்தாமதிபனும்பாம்பு மொக்கவேயெட்டினிற்கூடில்
தேமெனும்தந்தைபுத்திரனுவன் றிருந்துமைந்தாதிபனுடனே
தோமெனும்பாம்புமிரவியுங்கூடிற் றுடரிருக்கன்போலிருப்பன்.

(இ - ள்.) ஐந்தாமுடையோனும் சூரியனும் சேர்ந்தாலும் வெகுபிள்ளைகளுண்டாம். ஐந்தாமுடையோனும் ராகுவும்கூடி எட்டிலிருந்தால் தத்தபுத்திரனுவான். ஐந்தாமுடையவனோடு ராகுவும், சூரியனும் கூடினால் மிருகங்கள் போலிருப்பன், எ-று 614

இமைத்திடுமினலக்கினமாகவினிய கோணிடத்தினிற்குசனும் [ருக்கும்
பொருந்தியேயிருக்கினிவனிவன்முன்னோன் புகழ்பெறுதந்தையுமை
வருந்தியவிரோதம்வினைத்திடும் பொல்லாவஞ்சகராவர்மாநிலத்தில்
இருந்திலப்படியல்லாமலேயிருக்கிற் றினமுறவாகவாழ்ந்திருப்பர்.

(இ - ள்.) லக்னம் மிதுனமாக கோணத்தில் அங்காரகனும் இருக்கில் இவன் முன்னோன் தந்தையர் மூவர்க்கும் விரோதமுண்டாம். வஞ்சகர்களாவார்கள். இப்படி யில்லாதிருந்தால் சாந்தவுறவாக வாழ்வர், எ-று. 615

வேறு

இருந்தபுத்ர மிறைவனைந்தாதிபன்
பொருந்துமித்துருவாய்ப் புண்ணியனுமாய்ப்
பரிந்தவுத்தமர் வீட்டுறைப்பாலனும்
வருந்திடான்றனைத் தேடிவருகுவான்.

(இ - ள்.) ஐந்தாமுடையோனும், ஒன்பதாமுடையோனும் மித்துருவாயும் சுபர்களாயும், சுபர்கள் வீட்டிலிருந்தால் பாலகனும் தனைத்தேடி வருந்தாமல் வாழ்வன், எ-று. 616

வாக்கியனைந்தாமாதி குருவுடன்கூடி
மைந்தனேழாமைந்தின் மருவிநிற்கில்
முழங்கிடவேதத்து புத்திரனுமாவான்
முயன்றைந்தாமாதி குசன்சனியம்சத்தில்
தழைந்துகுசன்பார்க்கவிற்றி லவ்வரியர்கள்
தமரிடத்திற்போயவனர்வன் சனியம்சத்தில்
அழுங்கிடவேயிரவிதானிறைமைந்தி
லெருங்குமகிரியிலென்றே யறையலாமே.

(இ - ள்.) ஐந்துக் குடையோனும் அங்காரகனுங்கூடி சனியின் பார்வையைப்பெற்று ஐந்திலிருந்தால் தத்தபுத்திரனுவான். ஐந்துக்குடையோன் குசன் சனி அம்சங்களில் சனி நிற்க பார்க்க அன்னிய சுற்றத்தாரிடத்தில் வளருவன். சனியம்சத்தில் சூரியனேறி ஐந்தில் நின்றால் குழந்தையில்லையென்று சொல்லலாம், எ-று. 617

வேறு

நல்லதோரைந்தாமதிபரவி நற்சனியங்கிசமேறி
அல்லொர்சனிகண்டிடவுமைந்திடத்தி லமர்ந்திடிற்பாவிஷயத்தால்
வல்லமைப்புதல்வனுளனென்ன மொழிவர்மற்றுமைந்தாமிடத்தன்னில்
சொல்லியகுசனுங்காரியங்கிசத்திற் சூழ்ந்திடக்கருச்சரோணிதமாம்.

(இ - ள்.) ஐந்துக்குடையோன் சூரியன் சனி இவர்கள் அங்கிசத்திலேறி சனி கண்டிடவும், ஐந்திலிருக்கிலும் பாவிஷயத்தில் வலியபுதல்வன் ஒருவன் பிறப்பன். ஐந்தில் அங்காரகனும், சனியங்கிசத்தில் சேர்ந்தால் கருச்சரோணிதமாகும், எ-று. 618

ஆனலக்கினத்திற்சந்திரனிருக்க வாதினிற்சுக்கனுமற்றிடவும்
தானுமம்புதல்வனைகனுமிரவி சந்திரனிருவருங்கூடி
ஊனமின்னியகேந்திரத்திலிருக்கி லுரிமைசெய்பாவபிதாவினுக்கே
சனமின்மரணதகனகாலைக் கிரண்டேனுமுடையராகிக்கே.

(இ - ள்.) லக்கினத்தில் சந்திரனும், ஆதில் சுக்கிரனும் இருந்தால் ஒரே புதல்வனும். சூரியசந்திர ரிருவருங்கூடி சுபகேந்திரத்திலிருந்து உபயராசியானுல் தந்தைக்கு சமக்கடனைச்செய்யான் மரணதகன காலங்களில், எ-று. 619

வேறு

வல்லவர்பாராதிருக்க வைந்தாம்வீட்டில்
காடுமைந்தாமதிபனுட னென்னியேனும்
வல்லகுருமபாம்பிருக்க வாக்காய
வகைகிறுள்மைந்தரில்லை மகிழ்ந்தாகம்
ஒல்லையுடன்பிரதிட்டை செய்யின்மைந்தர்
உண்டாகுமுயாங் கேந்திரகோணத்துள்
மல்லல்சுபக்கிரகத்தின் பார்வையுமருவ
மைந்தரில்லைசெபயோம வகையிலுண்டாம்.

(இ - ள்.) ஐந்தாமிடத்தைச் சுபர் பாராதிருக்க அதற்குடையோனுடனுவது தனியாயாவது அதில் ராகுவிருக்க நாகதோஷத்தால் புத்திரரில்லை. அதற்கு உடனே நாகப்பிரதிஷ்டைசெய்தால் புத்திரருண்டாவர். கேந்திர

கோணத்தில் சுபக்கிரகங்களின் பார்வையில்லாதிருந்தால் மைந்தரில்லை, ஆனல் செபம், ஓமம் இவைகளால் புத்திரருண்டாவர், எ-று. 620

உண்டாமைந்தாம் வீட்டோருமாதி
உடன்கூடிநல்லோர் கண்ணுறுமனிற்க
அண்டாதசத்துரு சாபத்தினுலே
ஆனதொருமகவில்லை மைந்தாம்வீட்டில்
பிண்டாகவைந்தாதி யிருக்கநல்லோர்
விழிப்பார்வையறத் தீயோர்மிகநோக்கிக்
கண்டார்களெனிற் றெய்வசாபத்தினுலே
காளையர்களிலேயோம கன்மஞ்செய்ய.

(இ - ள்.) ஐந்தாம் வீட்டுக்குடையோன் ஆறுக்குடையவனோடு சேர்ந்து நல்லோர் பார்வைபெறுதிருந்தால் சத்துருசாபத்தால் மகவில்லையாம். ஐந்தில் ஆதியாக ஐந்தாம் வீட்டிலிருந்து சுபர் பாராமல் பாவிகள் பார்க்கத் தெய்வசாபத்தால் கர்மமேவிட்டு ஓமகன்மஞ்செய்ய பிள்ளையில்லையாம், எ-று. 621

செய்யவொருசாமிடத்திற் றீயோர்நிற்கச்
சேருமைந்தாமதிபனுடன் சனியுங்கூடப்
பையவேபன்னிரண்டா மிடத்திற்பாவர்
பற்றிநிற்கத் தாய்சாபம்பாலரில்லை
ஐயமறவோமங்கள சபங்கடான
மன்புடனேசெய்விக்கு மவர்தமக்குத்
துய்யதிருமைந்தர் பலருண்டாமென்று
சுருதிகளியாகமங்கள் சொல்லுந்தானே.

(இ - ள்.) நாலில் பாவர்களும், ஐந்துக்குடையோனுடன், சனியும் கூடப் பன்னிரண்டாமிடத்திலும், பாவர் தொடர்ந்திருக்க தாய் சாபத்தால் பிள்ளையில்லை. ஆனல் ஓமம் ஜபம், தானம் இவைகள் செய்வித்தாலபின் பலபிள்ளைகள் பிறக்குமென்று ஆகமங்கள் சொல்லும், எ-று. 622

வேறு

சொல்லுமிரண்டிற்பன்னிரண்டிற் சுபக்கோள்பாவர்மனையாயின்
செல்லும்பாக்கியாதிபதி வியத்திலிருக்கவோரைந்தில்
நில்லும்பாவர்சன்மாதி நின்றேறத்தமனமாகி
நல்லிக்கூடிற்குலநாசமுண்டாம் புத்திரர்தானுமில்லை.

(இ - ள்.) இரண்டு பன்னிரண்டாமிடங்களில் சுபக்கோளிருந்து பாபர் வீடாயினும், பாக்கியாதிபதி பன்னிரண்டிலேறி, ஐந்திலிருக்கும் பாவர்கள் சன்மாதிபதியோடு அஸ்தமனமாகிக் கூடின் குலநாசமாம். புத்திரருமுண்டாவதில்லை, எ-று. 623

தானுஞ்சன்மனியமெட்டிற் சனிசேய்பாவருநதிற்க
தானேபுதல்வர்தாமில்லை வளஞ்சேர்புத்திசுக்கிரனும்
ஆனபத்திலேயெட்டி லமருமைந்திலெட்டாதி
யனபாவர்சன்மாதி யுற்றேயபுற்றிற்புதல்வரிலை.

(இ - ள்.) சன்மம், பன்னிரண்டு, எட்டாமிடங்களில் சனி அங்காரகன் பாவிகளிருவர்களிருந்தால் புத்திரரில்லை. புதனும் சுக்கிரனும் பத்திலும், எட்டிலும், ஐந்திலும், எட்டுக்குடையோன், பாபிகள் சன்மாதிபதி இவர்கள் பத்திலுமிருந்தாலும் பிள்ளைகளில்லையாம், எ-று. 624

புதல்வர்காரகன்புத்திரற் பொருந்துமைந்தாதிபன்புடமாம்
இதனைகூட்டுமிராசிதனி லேறமற்றகுருவருங்கால்
மதலைதோன்றும்புடங்கூட்ட வருமிராசியங்கிசைபட்டும்
இதனின்மேடமுதலெண்ணச் செய்தாள்பாவர்காணச்சேதம்.

(இ - ள்.) புத்திரகாரகன் புடத்தில் ஐந்துக்குடையோன் ஸ்புடத்தையுங் கூட்டும் ராசியில் குருவருங்காலத்தில் புத்திரருண்டாவர். புடங்கூட்ட வருகின்ற ராசியின் அங்கிசைவரைக்கும் மேடமுதலாயெண்ணச் செய்விறாய், பாவர்வரினும் புத்திரசேதமுண்டாம், எ-று. 625

வேறு

சேத்தைவைத்திற் சிறந்தமதியுதில்
நீதிசேர்பிள்ளை யொன்றுதிசேயியில்
போதமற்றும் பிறைமுப்பதுதானிலை
வேதமுற்றவ சோதிடரென்பவே.

(இ - ள்.) ஐந்தில் சந்திரனிருந்தால் ஒரு பிள்ளைதானிருக்கும். மற்றப் பிள்ளைகளிறக்கும் என்று பெரியர் சொல்லினர், எ-று. 626

ஒன்பதாம்வீட்டுக் குடையவன்குருவாய்
இன்பமாய்ச்சனி யெய்திலேபீர்க்கிட
அன்புபுத்திரே டாதவனென்றுநில்
பின்புபிள்ளையை பன்னியர்பெறுவார்.

(இ - ள்.) ஒன்பதுக்குடையோன் குருவாய் அவனைச் சனிவந்து பார்க்கவும் புதனும் சூரியனும் எங்கேயிருந்தாலும் அப்பிள்ளையை அன்னியர்கள் வளர்ப்பார்கள், எ-று. 627

ஐந்தின்வீட்டிற் கதிபதிபாவரை
வந்தாறெட்டுப் பன்னிரண்டின்மன்னவோ

செந்திறுஐந்தவர் இட்டுபுற்றிடில்
கந்தம்பன்னிரண் டாண்டினிருசமே.

(இ - ள்.) ஐந்துக்குடையோன் பாவியாய் ஆறு, எட்டு, பன்னிரண்டாதி பர்களோடு சேர்ந்தாலும், சுபர்பார்வையைப் பெற்றாலும், பன்னிரண்டு வருஷத் தில் அப்பிள்ளை சாகும், எ-று. 628

வேறு

புத்திரனேறாமாதி பொருந்துங்கேந்திரகோணத்தில்
உற்றிடப்பலவானுகி யொங்குமாறதிபன்றானுந்
சித்தமாய்க்கூடினலுந் தரிசனைப்பார்வையானுந்
சுத்தமாய்ப்புதல்வரில்லை யெனமறைசொல்லுந்தானே.

(இ - ள்.) புத்திரகாரகன் ஐந்துக்குடையோனிருக்கும் கேந்திரகோணத்தி லிருக்கவும், ஆறுக்குடையோன் பலப்பட்டு அவனுடன்கூடினாலும், பார்த்தாலும் சுத்தமாகப் பிள்ளையில்லையென்று வேதங்கள் சொல்லும், எ-று. 629

ஐந்தாம்பாவம் முற்றிற்று.

ஆறாம்பாவம்

சத்துரு பலன்

கூறுமாறுமிடத்திற் குறித்திடும்பலன்தனைநில்
வீறுகல்கொர்கடாமு மெலிவுற்றுயத்தார்கள்
பேறுடன்வழக்கிட்டுள்ள பெருந்தனம்பிரிக்கத்தாவென்
றேறியம்பலத்திளிற்ப செதிரிக்கேவசீமையென்றும்.

(இ - ள்.) ஆறுமிடத்துப்பலன்களைச் சொல்லுமிடத்து ஆறில் சுபர்களிருந் தால் பங்காளிகள் வழக்குத்தொடுத்துப் பங்குபாகம் ஜெயிப்பார்கள், எ-று. 630

என்னுமம்புவிமிஇன்ன யாவர்க்கும்வலியனுவன்
துன்னியவிகாதமேதான் சொல்லுவரெவர்கண்டாலும்
மின்னியகுரூதியோரை மெலியவேபண்ணுவிப்பன்
கன்னியேயாதினல்லோர் காதலித்திருத்தக்காலே.

(இ - ள்.) ஆறில் சுபக்கிரகங்கள் விருப்பியிருந்தால் எவர்பார்த்தாலும் விகாதஞ் சொல்லுதலையடைந்த வலியனுவன். பங்காளிகளெல்லாரும் மெலி விப்பான், எ-று. 631

காதலாறுமிடத்திற் கடினராகிக்கோணிற்கில்
தீதுபொல்லார்க்குப்பொல்லாக் குரைத்துவேலவனைப்போல
ஏதிலார்தங்கட்கெல்லா மிடியெனிவ்வியனுலிப்
பூதலத்தெவரும்வந்து புகழ்ந்திடப்பொருந்திவாழ்வன்.

(இ-ள்.) ஆறில் பாவக்கிரகங்கள் பொல்லார்க்குப் பொல்லாக்கொடியராய் ஏதிலார் யாவர்க்கும் சுப்பிரமணியனைப்போல் வலியனும் யாவராலும் புகழப் பட்டு வாழ்வான், எ-று. 632

பொருந்துசிங்கத்தைக்கண்டு புடைபடுமிடமேபோல
இருந்தசத்துருக்களெல்லா மிரந்துகைகூப்பிநிற்பர்
திருந்தியகுபேரன்போலச் செல்வமுண்டாகப்பாரில்
வருந்திடா திருப்பனாறின் மருவுதீக்கோளிருக்கில்.

(இ-ள்.) ஆறில் பாவக்கிரகங்கள் நிற்பதால் சிங்கத்தைக்கண்ட யானை போல் சத்துருக்கள்பயந்து கைகூப்பிநிற்பர். அன்றிக் குபேரன்போல் செல்வ முண்டாயிருப்பன், எ-று. 633

கோளினிற்கரியராகு கூறுமாறிடத்தினிற்கில்
தாளினிற்றளைகள்பூண்டே தலைபடக்கொலைவில்லோர்
நாளுமேபலரும்போற்ற நன்மைபெற்சீர்த்திமானாய்
தேள்முதல்விடங்கள்சற்றுந் தீண்டிடாதிடவானுமே.

(இ-ள்.) ராகு ஆறிலிருந்தால் யாதொன்றில் தலைப்பட்டாலும் சீர்த்தி மானும் யாதொரு விஷஜந்துக்களும் தீண்டப்பெறுதலறுவான், எ-று. 634

திடமுறுமாறுமாதி பாவனுங்கேந்திரத்தில்
வடிவுறநல்லோர்காண மருவின்மந்திரியுமாகிப்
படிமிசையெவரும்போற்றப் பயில்பிரதாபனாகிக்
கொடியவர்தமக்குமின்றே கூறுவன்குணவானாகும்.

(இ-ள்.) ஆறுக்குடையோன் பாவியாய்க் கேந்திரத்தில் சுபர்காண விருந் தால் மந்திரியாய் வாழ்ந்து பூமியில் யாவரும் துதிசெய்ய பிரதாபவானாகியும் கொடியவர்களைத் தண்டிக்கும் குணவானுமாவான், எ-று. 635

சோகபலன் (வேறு)

ஆறுக்குமீட்டதிபன் லக்கினத்ததிபனும்
அணிகதிரோனுடன்கூடிற் சுரகண்டமாகும்
பேறுமிர்த்துடன்கூடிற் சகலகண்டகுசன்பால்
பொருந்தையுடன்கூடி லாயுதவிரணகண்டம்
தாறுருஞ்சனிகூடி னீசர்தன்னாற்கண்டம்
சோராரல்வருங்கண்டந் சுக்கன்கூடினே.

வீறுருமுடைவராற் கண்டக்கண்டங்கள்
விடவரவைகூடிலத்த விஷப்பாம்பாலேதான்.

(இ-ள்.) ஆறுக்குடையோனும் லக்கினாதிபனும், சூரியனுடனே கூடினால் சுரகண்டமும், சந்திரனுடன் கூடினால் சலகண்டமும், அங்காரகனுடன் கூடி னால் ஆயுதவிரணகண்டமும், சனிகூடினால் நீசரால் கண்டமும், சுக்கிரன் கூடி னால் கன்னியரால் பெண்களால் கண்டமும், இராகு கேதுக்கள் கூடிடில் விஷப் பாம்புகளினால் கண்டமுமுண்டாகும், எ-று. 636

அறுக்கிகழுஞ்சன்ம காலாதிபாமும்
அட்டமத்தாதிபையுங் கூடுறவுமாதில்
உறைமத்திடியனுமுண்டிய சீரணத்தாற்கண்டம்
உற்றிடும்லக்கினவாகனாதிபோடு
செறிந்தசனியுதில் விஷபட்சணத்தாற்கண்டம்
செப்பியோனதிபுடன் சனியுஞ்சேர்ந்து
பிறந்திடிலக்கினத்ததி விட்டுனிற்கப்
பெறில்விஷபட்சணகண்டம் பேசுஞ்சாதகமே.

(இ-ள்.) சன்மாதிபனும், நான்குக்குடையோனும் அட்டமாதிபதியைச் சேர்ந்தாலும், ஆறிலிருந்தாலும் அஜீரணத்தால் கண்டமும், லக்கினாதிபதி வாகனாதிபதிகளோடு சனி யிருந்தால் விஷபட்சணத்தால் கண்டமும், நாலுக் குடையவனோடு சனி சேர்ந்து லக்கினத்திலிருந்தாலும் விஷபட்சணத்தால் கண்டமும், நாலுக்குடையவனோடு சனி சேர்ந்து லக்கினத்திலிருந்தாலும் விஷ பட்சணத்தில் கண்டமுண்டாம், எ-று. 637

சாதகலக்கினத்ததி வாகனாதி
தம்மிருவருடன் பாம்புந்தானுங்கூடில்
ஓதியபந்தனமரண நல்லோர்வீடாய்
உதித்தலக்கினத்ததி யோகேழ்மையத
நீதியுடனேழதிபன் லக்கினத்துள்
நிற்கிலவன்றனதுபட்டணின்றேனுமாம்
போனதயனுமரணம் பண்ணுவடாகினன்று
பேசினர்சாதகநிபுணப் பெருமையோரே.

(இ-ள்.) லக்கினாதிபதி வாகனாதிபதி இவர்களோடு ராகு சேர்ந்தால் பந்த னத்தால் மரணமும், அதுசுபர்வீடாய் லக்கினாதிபதி ஏழிலும் ஏழுக்குடையோன் லக்கினத்திலும் இருந்தால் தாம் தகப்பன்மார்க விறப்பார்களென்று சாதகம் வல்லவர்கள் பேசினார்கள், எ-று. 638

பெருமைசேர் மாறுக்குமதிபனோடு
பெருமைபாவர்கூடி லக்கினத்திலேட்டில்

அருமையுடனுற்ற சித்தப்பிரமைகொண்டிட
அக்கத்திலும் விரணமாகும்பின்னும்
உரிமையுள்ளவர்கள் தானங்கொட்டுல்
உற்றிடினிச்சோவியென்றே புனைக்கிலன்றும்
இருமைசெறிதக்கதாய் பிராதாமைந்தர்
இவர்க்குமின்னியர் அனக்குமெனச்சொல்வரே.

(இ-ள்.) ஆறாம்பாவத்துடையவனோடு பாவிகள்கூடி லக்கினம் எட்டு இவ்விடத்தனிலிருந்தால் சித்தப்பிரமையுள்ளவன் தேகத்திலும் விரணமுண்டாம். அவ்வாறனுடைய ஆட்சிவீடுகளுக்கு நீட்டில் இருந்தாலும் இந்த நோயானது தந்தை, தாய், பிராதா, மைந்தர், மனைவியர் யாவருக்குமிந்த நோயுண்டாமென்று சொல்லுவர், எ-று. 639

சொல்லியவாறுமிடத்திற் சுபக்கிரகமேமைத்
துலங்கியவாறுடையதுங் கேந்திரத்திலிருக்க
நல்லுவர்கள்நடிடின் குருதிக்குபகாரஞ்செய்வன்
காரிகையாலனுக்கோர் கவிகுழுயில்லே
அல்லவுற்றிக்கோடு பாபியினில்மையுளாம்
அடைத்திடுவினை றிகளுக்கு வலியுருவன்
மூலமுறைமைதாரமனை முற்றுத்தீபாலும்
முறைவக்கிசமிகமைமை முறைமுறையின்றுதே.

(இ-ள்.) ஆறில் சுபரும், ஆறாமுடையோன் கேந்திரத்திலும் சுபர் பார்வையைப் பெற்றிருந்தால் பகைவரில்லாதவன். அவனுக்கொரு நோயில்லை. [illegible] பார்வையாயின் [illegible]யாம். எதிரிகளுக்கெல்லாம் வலியுள்ள விருப்பன் பெண்ணே!, எ-று. 640

அயலின் வேறு

இராகுசனிபுவியோருருக்கொருவர் நிசைத்துப்பார்த்திடி வலியாகும்
பாவியசனிபுதனுமேயாந்தப்படி விழிநோக்குவியலியாம்
வாரிடுசெவ்வாயிட்டை பொற்சுழியினிலவர் தருமியனுடன்மருவ
விரவியமதியாணவிசுத்திற ஜெவ்வளிவிடாவைமுவியாம்.

(இ-ள்.) சூரியசனிசனிருவரும், ஒருவருக்கொருவர் பார்த்தாலும் சனியும் புதனும் அப்படியே பார்த்தாலும், அங்காரகன் இரட்டை பொற்சுழியில் சுக்கிரனுடன் சேர்ந்தாலும், சந்திரன் ஆணையிசர்ந்திருந்த அது சுக்கிரன் வீட்டிலும் அலியாம், எ-று. 641

ஆதியசன்மத்தினின்மதியிருக்க வாதவன்புதன்சனியுமைவர்
ஏரிசேரிட்டைராசியிலிருக்க மற்றுமிவருக்கடையுடைய

யோகமாயங்காரகாரகனுமிப்பிராக்க முதின்முலைமாதனையாகத்திந்த
வகமாக்குறியுற்றவன்னைக்காய் செய்துநினைவென்றுரைக்கும்.

(இ-ள்.) சன்மத்தில் சந்திரன், சூரியன், புதன், இம்மூவரும் இரட்டைராசியிலும், இம்மூவரையும் அங்காரகன் பார்க்கினும் அலியாய்ப் பிறப்பது உண்மையென்றே புணர்வாய் பெண்ணே!, எ-று. 642

ஆறும்பாவம்
முற்றிற்று.

ஏழாம்பாவம்

களத்திரபலன்

சாதகமுறுங்காலையினிற் சுக்கிரன்றன்னோடு
தக்கவிரகன்பதிகூடில் விப்பிரர்கன்னியராம்
சோதிரவிருதன்கூடிற் சுத்திரியர்மயிலாம்
சோமனுங்சுதன்கூடல் வைசியர்குலத்தோர்கை
நூகலமேற்சனிகூடிற் சூத்திரர்கன்னிகையாம்
பொருமிகுபாம்புடன்கூடிற் கீழ்க்குலத்துதித்த
பேதையர்களுடன்கூடி யதுவரைப்புரிந்து
பிரியாமலிருப்பரெனப் பெருமன்னிகைசெப்புவனே.

(இ-ள்.) பிறக்கும்போது சுக்கிரனுடன் குரு கூடுகில் பிராமணப் பெண்ணும், பிரகாசம் பொருந்திய சூரியனும் அங்காரகனுங்கூடில் க்ஷத்திரியப்பெண்ணும், சந்திரன் குமாரனாகிய புதன் கூடுகில் வைசியனுடைய பெண்ணும், சனி கூடுகில் சூத்திரப்பெண்ணும், ராகு கேதுக்கள் கூடுகில் புலைப்பெண்ணுமே முறைமையே களத்திரமாக அவர்களுடன் கூடிப்பிரியாமலிருப்பர், எ-று. 643

வரிசைபெறுகளத்திரத்தா னுதிப்பினக்கூடி
சுக்கிரகமொத்தியலுடன் பட்டிருவிலமைப்பவன்
உரியகளத்திரமாகியறிபவைனப்பால்
உற்றிடினாகினோன் காணிலுத்தமமற்றிவர்தாம்
அரிபிட்டுதாமலியமுதிருனும் பாவர்களோகாணை
அமர்ந்திடிநுமத்திமமா மருநிசெவ்வாயிருவர்
புவியுடன்களத்திரத்துறுதியின் படைவர்க்கனி
பெருகுசுபக்கோள்களுடனே பெற்றிடுத்தமங்கள்.

(இ - ள்.) களத்திரஸ்தானாதிபனைக் குருபகிரகம் வந்தினையோ அந்தினை விவாகஞ் செய்துகொள்வன். களத்திரகாரகன் சுபமாயிருந்தாலும் சுபர்பார்த்தாலும் உத்தமம். இவர்கள் கேந்திரத்திலும், பன்னிரண்டிலுமிருந்து பாவிகள் பார்த்தால் அதமமாம். ராகு அங்காரகன் இருவரும் களத்திரஸ்தானத்திலிருந்தால் மனைவிக்கனிஷ்டமுண்டாம். அவர்களைச் சுபர் பார்த்தால் உத்தமமாம், எ-று.

வேறு

களத்திரலக்கினாதி கலந்துதம்மனையினிற்கில்
கிளர்த்திடுபாப்பலரைக்கூடிக் கிடைப்பதிதான்றேனிவாகம்
களத்திரகுடும்பத்தாதி கண்டபாவர்வெள்ளிகூடில்
வளத்தியாய்முகன்றென்றுமின் மருவிடும்மனைவிக்கினம்.

(இ - ள்.) களத்திராதிபதி லக்கினாதிபதியுடன் கலந்து தன்வீட்டிலிருந்தால் பலபேரைக்கூடி இரே விவாகம் நடக்கும். களத்திராதிபனும், குடும்பாதிபனும் பாவிகளுடனும், சுக்கிரனுடனும் கூடினாலும், மூன்று, ஒன்று, ஆறுமிடங்களிலிருந்தாலும் மனைவிக்கினமுண்டாகும், எ-று. 645

சனமிலக்கினதிபேழா மாதிபனுங்கூடித்
தானமாம்வியமாறெட்டிற் றாநிற்கிலிவாகமில்லை
ஆனவேழிடங்கள்சத்தியா யேழாமாதிபரீனறுடு
ஊனமில்பலர்கள்கூடி லொருத்தியொன்றுமைவெள்ளிக்கே,

(இ - ள்.) லக்கினாதிபனும், ஏழுக்குடையோனுங் கூடி பன்னிரண்டு, ஆறு எட்டாமிடங்களிலிருந்தால் விவாகமில்லை. ஏழாமிடம் சத்தியாய் அவ்வீட்டுக்குடையவனோடு பலருஞ் சுக்கிரனும் கூடியிருந்தால் ஒருத்தியே மனைவியாவள், எ-று. 646

வெள்ளிசெய்யேழினிற்கில் விதலையாந்தாரமனைப்பன்
ஒள்ளியமதிசெயாறுமதிபருறு நிற்றுமாகாவில்
தெள்ளியதாய்நிற்கிலேனும் சென்மமொன்பானுலாயும்
வள்ளலின்மால்வர்கூடின் மறுமோர்விகயமுண்டாம்.

(இ - ள்.) சுக்கிரனும் அங்காரகனும் ஏழிலிருந்தால் விதலை ஸ்திரீயை விவாகஞ் செய்துகொள்வன். சுக்கிரனும் அங்காரகனும் ஆறுக்குடையவனோடு சேர்ந்து நான்கிலிருந்தாலும், இவர்களிருவரும் சென்மம், ஐந்து, நான்கு, ஆறு இவ்விடங்களில் கூடினாலும் மற்றுமொரு விதவையுமுண்டாகும், எ-று. 647

ஓரேழிற்பாவர்நிற்கக் களத்திரரோகமுண்டு
சூரியனுடனேபாம்பு சூழ்ந்திரண்டெட்டதினிற்கில்
நாரிக்குமெவகுரோகமாட்டு மிதிரண்டாமிடந்தைக்
கூரியர்பார்க்கினிற்கில் நோய்கொண்குடும்பமேனதூ.

(இ - ள்.), ஏழில் பாவிகளிருந்தால் களத்திரத்திற்கு ரோகமுண்டு. சூரியனும் ராகுவுஞ் சேர்ந்து இரண்டிலிருந்தாலும் களத்திரத்திற்கு வெகுரோக முண்டாம். இரண்டாமிடத்தைப் பாவிகள் பார்த்தாலும் அதிலிருந்தாலும் களத்திரத்திற்கு ரோகமுண்டாம். அன்றிக் குடும்பமும் ஏழைக் குடும்பமாகும், எ-று. 648

வேறு

எழ்வீட்டினிற்கதிபன் சாத்தினிற்கில்
இருமனைவிதிரமதனிலிருக்கக்கூறு
தாழ்வில்லுபயத்தி லிருக்கின்மாதர்
சாவின்றிப்பலருளராக் தானத்தாதி
வாழிடநோக்கியேகோளாற் பலன்களகூடும்
மற்றுமிலக்கினத்தால் சுங்கன்வீட்டில்
சூழ்கிறுஞ்சுங்கனைக்கூடச் சுங்கன்பார்க்கத்
தாயன்திரீலோலனெனவே சொல்லலாமே.

(இ - ள்.) ஏழுக்குடையோன் சரத்திலிருந்தால் இரண்டு களத்திரமும், ஸ்திரத்திலிருந்தால் ஒருமையும், உபயத்திலிருந்தால் சாவாமல் பல களத்திரமும் உண்டாகும். களத்திராதிபன் பார்த்தால் பலன் கூடும். லக்கினாதிபன் சுக்கிரன் வீட்டிலிருந்து அவனைக் கூடினாலும் அவனைச் சுக்கிரன் பார்த்தாலும் ஸ்திரீலோலனென்றே சொல்லலாம், எ-று. 649

வேறு

சொல்லுமேழாமிடத் திந்துசுக்கிரன்
மெல்லமேவிறு மிக்கசனிகுசன்
அல்லதீரவுமின் மனையாகுமே
இல்லையத்தீதை விள்ளப்புதல்வரே.

(இ - ள்.) ஏழில் சந்திரனும், சுக்கிரனுமிருந்தால், சனி அங்காரகனிவர்களிருந்தாலும் மனைவியில்லை. இருந்தால் உண்டானாலும் புத்திரர்களுண்டாவதில்லை, எ-று. 650

வேறு

இல்லேழுமிரண்டாமாதி சுக்கிரனிவர்களமூவர்
பொல்லாரோடெட்டிமாதி யெட்டிற்பன்னிரண்டிற்போந்து
சல்லாபமுடனின்றிருக்க பட்டமுடன்பாவர்கூடில்
சொல்லுருத்திரர்கைக்குமாகோ அட்டிவன்றேநைகில்லான்.

(இ - ள்.) ஏழு இரண்டாமிடங்களைக் குடையோர்களும், சுக்கிரனும் பாபிகளோடு சேர்ந்து ஆறு, எட்டு, பன்னிரண்டில், உச்சாசத்தோடிருக்கும்போது பாவிகள் கண்டு சேர்ந்தால் ஒரு பெண்ணை விவாகஞ் செய்வன். ஆனால் அவன் இறப்பன், எ-று. 651

இன்றிரண்டேழாமதி லிறைக்குகேந்திரகோணத்தில்
ஒன்றியேயிருக்கிலேக தாரமாறுமவன்றோ
வென்றிகொள்ளிருகுபாவ ருடன்கூடிமெய்யாறெட்டில்
குன்றிடாதிருக்கில்வேசைக் காந்தனாமுலகினாலே.

(இ-ள்.) இரண்டு, ஏழுக்குடையவர்கள் கேந்திரம் திரிகோணங்களில் சேர்ந்திருந்தால் ஒரே தாரமுண்டாம். அவர்கள் சுக்கிரனுடன் பாவிகளோடும் கூடி, மெய் ஆறு எட்டாமிடங்களி லிருந்தால் வேசிலோலனாவான், எ-று. 652

கூடியேழாமதிருடும்பாதி பதியின்றோர்கள்
ஏறியேதிரிகோணத்தாம் கேந்திரத்தினிலாகிற்பப்
பேறுடையவர்தம்வீட்டிற் பிரியமாயிருந்தாலும்
வேறுமோர்தாரம்வேண்டான் விரும்புவனேகதாரம்.

(இ-ள்.) ஏழுக்குடையோன், குடும்பாதிபதி யிவர்கள் திரிகோணத்திலும், கேந்திரத்திலு மேறியிருந்து அபிகளுடைய வீட்டில் ஆகியாயிருந்தால் வேறு தாரம் விரும்பாமல் ஒரேதாரம் விரும்புவோனாவான், எ-று. 653

களத்திரகாரகனுமேழா மதிபனுந்தனித்துக்கூடி
ஆரவேபாவர்மத்தி யத்துறவேழிற்பாவர்
சேறவேயிவரைப்பாவர் நெறியினாக்குறவிருந்தால்
பாரியார்தனக்கிட்டம் பண்ணுமென்றறிந்துகொள்ளே.

(இ-ள்.) களத்திரகாரகனும் ஏழுக்குடையோனும் தனித்தும், கூடியும் பாவிகள் மத்தியிலிருந்தாலும் அவர்களைச் சேர்ந்தாலும், அவர்கள் பார்வையைப் பெற்றாலும் மனைவிக்கரிட்டமுண்டாகும், எ-று. 654

கொள்ளுநற்காரிவெய்யோன் கூடக்கன்னியிலேவிற்கத்
தெள்ளியதாயாக்கவீடு சென்மவன்னமேயாக
மென்னவேயாசன்குருவும் மீனத்தினின்மேவிநிற்கத்
துள்ளியமனைவிதானும் துன்புற்றிட்டமாவள்.

(இ-ள்.) சனியும் சூரியனும் கூடி கன்னியிலிருக்கவும் அர்சவீடு சென்ம லக்கினமாகவும், குரு மீனத்திலிருந்தால் களத்திரம் துன்பத்தோடு அரிட்ட மடையும், எ-று. 655

ஆதிலக்கினத்துக்கேழி லம்புலிதனக்குமேழில்
பூமியல்லேவர்பாவை பொருந்திடிலுண்டாம்பெண்மேக
மேவபாக்கைவயபாவர் இவ்வருண்டானபோது
மானவியார்கட்டமை மணந்திடாவருத்தமுமே.

(இ-ள்.) லக்கினத்திற்கேழிலும், சந்திரனுக்கேழிலும், சுபர் பார்வையுண் டானால் மனைவி வாய்ப்பள். பாவர் பார்வையுண்டானால் விதவையுண்டாகாது, குருசுவோடென்று மவான், எ-று. 656

ஆமேழாமதிபன் தாரகாரகனிசமாகித்
தாமிவர்வியமாறெட்டிற் றுயிமனிசிக்கினம்
வாமக்கிரன்வாழ்வீட்டின் மன்னவன்வியமாறெட்டில்
ஏமுற்றிருக்கிற்கொண்ட மனைவியர்பாக்குழுமே.

(இ-ள்.) ஏழுக்குடையோனும் களத்திரனாரும் நீசத்தையடைந்து பன் னிரண்டு, ஆறு, எட்டாமிடங்களிலிருந்தால் மனைவிக்கீனமுண்டாம் சுக்கிர னிருக்கும் வீட்டுக்குடையோன் பன்னிரண்டு, ஆறு, எட்டாமிடங்களிலிருந் தால் எத்தனை மணம்புரிந்தாலும் மரித்துக்கொண்டேயிருப்பார்கள், எ-று. 657

சுறிலவேழாமதி யேதமாம்பாவர்வீட்டில்
ஆறநாயந்தைப்பார்க்கிற் கலியாணந்தூரதேசம்
வீறதாங்களத்திராதி சுபாங்கிசமேவிற்கிட்டல்
பேறுடன்திசைகளேழா மதிபனைப்பிடித்துச்சொல்வாம்.

(இ-ள்.) ஏழுக்குடையோன் பாவிகள் வீட்டிலிருந்தாலும் பார்த்தாலும் தூரதேசத்தில் கலியாணமாம். களத்திராதிபதி சுபாங்கிசமேறினால் சமீபத்தி லாகும். இதனை ஏழுக்குடையோனைப் பார்த்துச்சொல்லுவோம், எ-று. 658

வாமசூரியன்கிழக்குமன்னுசுக்கிரற்கக்கினி
பூமிசேய்தனக்குத்தெற்குப் பெரும்பாம்புநிருதியாகும்
தாமதசனிக்குமேற்கு சசிக்குவாயுவீசற்காகும்
சேமமாம்வடக்குப்புத்தி நிருபர்க்கீசானதிக்கே.

(இ-ள்.) சூரியனுயிருந்தால் கிழக்கிலும், சுக்கிரற்கு அக்கினிமூலையிலும், அங்காரகனுக்குத் தெற்கிலும், ராகு கேதுக்களுக்கு நிருதியிலும், சனிக்கு மேற் கிலும், சந்திரனுக்கு வாயுமூலையிலும், புதனுக்கு வடக்கிலும், குருவுக்கு ஈசானத் திக்கிலுமாகும், எ-று. 659

வேறு

இக்கணவேழோன்வியத்திலாறெட்டிற் செறிந்திடியாவனுமிருக்கத்
தக்கவன்றனைப்பார்த்தவர்களத்தனையுந் தாரமாங்களத்திராதிபனும்
ஒக்கவேபாவருடனுறவேழிலே கருபாம்புறவதற்கு
மிக்ககேந்திரத்திற்பாவர்பார்த்திருக்க விரும்புவன்குலகாற்பெண்ணை

(இ-ள்.) ஏழுக்குடையோன் பன்னிரண்டு ஆறு, எட்டாமிடங்களிலி ருந்து பாவியாயிருக்க அவனை எத்தனைபேர் பார்க்கின்றார்களோ அத்தனை தாரமுண்டாகும். களத்திராதிபனும் பாவருடன் கூடியிருக்கவும் ஏழில் ராகு வும் கேந்திரத்தில் பாவிகளும்பார்க்க காலுகாற்பெண்ணை விரும்புவன், எ-று.

பெண்ணனிக்கைத்திடு மேழாமிடத்திபன் பெலனிக்கதிருடன் கூடில், எண்ணமீசைத்திடு மெட்டாமினில் வியத்திலிருக்கில் வாலிபத் திலேமனையாள், இன்னணைசைத்திடுவன் களத்திராதிபனுமிக்க நற்கோ

ருடன்கூடில், பன்னிரண்டைக்குருமனை விதிகோளைப் பார்த்திடிற் பாவியாய் யிருப்பன்.

(இ - ள்.) ஏழுக்குடையோன் சூரியனுடன் சேர்ந்தாலும் எட்டு ஆறு பன்னிரண்டாமிடங்களி லிருந்தாலும் வாலிபத்திலேயே மனைவி யிறப்பள். களத்திராதிபன் சுபர்களோடுகூடினால் நல்ல மனைவியும், பாவிகள் பார்த்தால் பாவியுமாவாள், எ-று. 661

பூரவியாஞ்சனியேழா திபனுடப் பன்னிரண்டா றிருநான்கில்
மேவிடில்விதவைகாரிகையைச்சேர்வன் மிக்கவேழாமிடத்ததிபன்
காவிரண்டானபாம்பொடுங்கூடி நாடிவெட்டா றினில்விபத்திற்
தாவியேயிருக்கின்மாகுலத்துத் தையலைச்சேர்வனென் றுரைக்கும்.

(இ - ள்.) பாவியாகிய சனி ஏழுக்குடையவனாய் அவனுக்குப் பன்னிரண்டு ஆறு எட்டாமிடங்களிலிருந்தால் விதவைப் பெண்ணைச் சேருவான் ஏழுக்குடையோன் ராகுவுடன்சேர்ந்து எட்டு ஆறு பன்னிரண்டாமிடங்களி லிருந்தால் ஈனகுலத்துப்பெண்ணைச் சேர்வானென் றுரைப்பார், எ-று. 662

உரைக்குமேழா திகாரிவாழ்மனையி லுற்றிடக்காரிதான்பார்க்க
இருக்கவேழிடத்துக்கொன்பதா திப னெட்டிலாயினுஞ்சனிவீட்டில்
பெருக்கவேயிருக்கிலவன்குலமனையைப் பிறர்தமைச்சேர்த்தவரவர்கள்
பொருள்களைவாங்கியவச்செலவிபுசிக்கும் புண்ணியவானெனமடிகதனும்.

(இ - ள்.) ஏழுக்குடையோன் சனி வாழ்வீட்டில் இருந்தாலும் சனிபார்க்க விருந்தாலும், ஏழுக்கு ஒன்பதாமதிபன் எட்டிலிருந்தாலும், சனிவீட்டிலிருந்தாலும், தன்மனைவியை அந்நியரைச் சேரச்செய்து பொருள் வாங்கி புசிக்கும் புண்ணியவான், எ-று. 663

புகலுமேழா திபரபலனுடப் பொருந்துமித்துருக்களோக்கூடி
இகலிலாபத்தலத்தினிலிருக்க விருந்தபோதெனைப்படிமனைவி
திகழுடனானேயத்தனைபத்தான் திரமுபயங்களோயாயின் [ஓம்
சுகமுடனிருப்பானசரமெனிற்சிறிது தோஷமாமரிட்டமேசொல்

(இ - ள்.) ஏழுக்குடையோன் பிரபலனாய் மித்துருக்களோடுகூடி லாபஸ்தானத்திலிருந்தால் எத்தனைபேரிருக்கனரோ அத்தனை களத்திரம் வாய்க்கும். அந்த லாபஸ்தானமும், ஸ்திர உபயங்களானால் சுகமாயிருப்பான். சரமானால் களத்திரத்திற்கு அரிட்டமுண்டாம், எ-று. 664

சொல்லியகன்னிலக்கினமாகச் சோமனுஞ்சனியுங்கேந்திரத்தில்
மெல்லவேயிருக்கச்சதமனைவியரை விருமணம்புரிந்துபூபதியாய்
வல்லவனுமேழிற்சுக்கிரனு மருவுசன்மத்தினிற்குருவும்
அல்லலற்றிருக்கின்மனைவியர்களை நயமாய் ரட்சிக்கமாட்டான்,

(இ - ள்.) கன்னிலக்கினமாய் சந்திரனுஞ் சனியும் கேந்திரத்தி லிருந்தால் நூறுபெண்களை விவாகஞ்செய்து பூபதியாயிருப்பன். ஏழில் சுக்கிரனும் சன்மத்தில் குருவும் அன்பமறிருந்தால் மனைவியர்சேருவார். ஆனால் அவர்களை ரட்சிக்க மாட்டான், எ-று. 665

மாட்டினிற்கிறைசுக்கிரன் சூரன் சோமன்மன்னமனையிராசியோனவர்
கூட்டியோரிடத்திற்கூடிடின்மனைவி யிலாமலேவிபினியனுபத்திரிவன்
நாட்டுமித்திரவிபுதன்சனிவெள்ளி நயந்துறின்மனைவிமக்களையும்
ஒட்டிவிட்டேதேசாந்தரந்தன்னி லுழலபினியுடனுழலைந்தலைவன்.

(இ - ள்.) ரிஷபராசிக்குடையவனும் சுக்கிரன் அங்காரகன் சந்திரன் குரு சூரியனிவர்கள் ஓரிடத்தில் கூடியிருந்தால் மனைவியில்லாமல் ரோயால் வருந்தித் திரிவான். சந்திரன் சூரியன் புதன் சனி சுக்கிரன் இவர்கள் கூடியிருந்தால் பெண்சாதி பிள்ளைகளைத் துரத்திவிட்டு தேசாந்திரங்களில் நோயுடன் அலைவான், எ-று. 666

அலைவுறுஞ்சன்மத்தாதிபன் செறிந்தவங்கிசாதிபன்றனதகத்தில்
நிலைமையாமனைவிகுருவருங்கால் நிச்சயமணம்புரிந்திடுவன்
குலமுறுஞ்சன்மந்தனக்குமேலேழாம் ராசியங்கிசத்தினிற்குருவும்
பலமுடனேவத்துறுமெபோதும் பரிபாய்க்கொள்வனற்பெண்ணை.

(இ - ள்.) சென்மாதிபதியிருக்க வங்கிசத்துக்குடையோன் வீட்டில் குரு வருங்காலத்தில் விவாகஞ் செய்துகொள்வான். சன்மத்திற்கு ஏழாம் ராசியினங்கிசத்தில் குருவருங்கால் நல்ல பெண்ணையே மனைவியாகக்கொள்வான், எ-று. 667

வேறு

பெண்கொளுங்காலத்து சந்திரனிருந்த பெரும்பதிக் கிறைவனைற்
படரும், பிறைபுனைமனைக்கேழாமிடத்ததிபன் பெற்றதற்புடத்தைப்
புனற்பட்டப், பண்கொளுமொத்த ராசியோவந்தப் பதியிலப் பதிதிரி
கோணம், பத்தியேயாசனுற்றிடிகாலம் பரிணமணம் புரிவைக்குரு
வும், எண்கொளுமுச்சாங் கிசம்பெறின்மனைவி யினியளாங் கோனுத
புஞ்சிறப்பாம், இரணியன் றுலையாங் கிசத்துறின்மனைவி ரண்டிநீடுங்கி
சமேறில், தன்கொண்மூன்றாமித் திராங்கிசத்தாருத்தி சத்தருவன்
கசேமறில், அதயிதேனபீசாங் கிசத்தினிலாசன் றரிக்கினெனக்குலக்
கொடுக்கே.

(இ - ள்.) விவாகஞ்செய்யுங் காலம் சந்திரனிருந்த வீட்டுக்குடையோன் ஸ்புடத்தையும் அவனிருந்த வீட்டுக்கு ஏழாமிடத்தோன் ஸ்புடத்தையும் கூட்ட வருவது எந்த ராசியோ அதற்கு திரிகோணமாய்க் குருவருங்காலத்தில் மணம் புரிவான். அக்குருவும் உச்சாங்கிசம் பெற்றிருந்தால் மனைவி இனியளும் சிறப்பி னளுமாவாள். குரு துலாங்கிசத்திலிருந்தால் இரண்டு மனைவியரும், மீன அங்கிசத் திலிருந்தால் மூன்று மனைவியரும், மித்திராங்கிசமேயின் ஒரு மனைவி

யும், சந்திரன் அங்கிசத்தோனின் மனைவிசோயாளியும், நீசாங்கிசத்தோனின் மனைவிக்கு ஈனத்துவமு முண்டாகும், எ-று. 668

கொடியிடையாய் கேளிரண்டாந் தீபன் குணகுணகார நம்புடத்தில், குலவியமதனுடன் புடத்திலேவாங்கிக் குறித்தராசியிற் குருவருநாள், குடியிடைமனைவிக் கரிட்டமாமென்னுஞ் சொல்லிரண்டாதிபன் புடத்தில், குழந்திடுங்குளிகன் புடத்தினை யெடுத்துத் தோன்றியராசியிற்சனியும், வடிவுடன் வருநாள்களத்திரத்தனக்கு வருநிரியாணமென்றுரைப்பர், மதிநேமேழாமதிபதிபுடத்தில் வருகால மிருத்துவை யெடுக்கின், பிடிபடும் ராசியிற்றானிக்கே பெற்றிடுமாதமத்தநாளில், பிறை நுதற்றிதை முகமதிகருங்கட் பெண்ணணங்கேயெனப் பேசே.

(இ-ள்.) பிறைச்சந்திரனை யொத்த முகமுடையாய்! இரண்டாமதிபன் குணகுணகார ஸ்புடத்தில் இமயனுடைய ஸ்புடத்தை வாங்கிக் குறித்த ராசியில் குரு வருகின்ற காலில் மனைவிக்கரிட்டமுண்டாகும். இரண்டிக்குடையோன் ஸ்புடத்தில் குளிகன் ஸ்புடத்தை எடுத்து வருகின்ற ராசியில் சனிவரும் காலில் களத்திரத்திற்கு நிரியாணமுண்டாம். ஏழுக்குடையோன் ஸ்புடத்தில் மிருத்துகாலவித்துருவை யெடுக்க வரும் ராசியில் வரும் மாதத்தில் அந்த நாளில் நிரியாண முண்டாமென்று பேசுக, எ-று. 669

சேயிரண்டாமிடத்தனிவிராவி பெரிதுமில்லிடம் புசித்திடு, பிறருடைமாந்திருக்கிற் சலந்திறுக்கண்டம் பின்குசனுறிலனல் குளிப்பன், பாசமாம்புந்தி பாவரைக்கூடிற் பசிதனை பொறுக்கொணாதிருப்பன், சேசமாம்சிருக்கு பாவரைக்கூடி தின்றிடுமிடம் புசித்திடுவன், திறைசனியிருந்தால் வியாதியாயிருப்ப னிண்டதோர்பாம்பிருவரையும், தொடர்ந்திடும் பாவபகத்தாற் சிலனை யொழிக்கவே றுனிவன், தெரிந்த நல்லோர்கள் பார்வையுண்டாயின் தீர்க்கசிவன் பெறுந்திருவே.

(இ-ள்.) இரண்டில் சூரியனிருந்தால் விடமும் புசிப்பன். தேய்பிறைச் சந்திரனுடன் சலகண்டமும், அங்காரகனுடன் அக்கினி கண்டமுமுண்டு. புதன் பாவிகளோடு கூடினாற் பசிபொறுக்கொணாதிருப்பவனும் குரு கூடின் பரிகலத்தை வெறுப்பவனும், சுக்கிரன் பாவரைக்கூடின் விடம் புசிப்பவனும் சனி கூடினால் வியாதியாயிருப்பவனும், ராகு கேதுக்களைக் கூடினால் பாசபந்தத்தால் ஜீவனை யொழிப்பவனும், சுப பார்வை பெற்றால் தீர்க்காயுளுடையவனு மாவான் எ-று. 670

திருவளர்மதி சுக்கிரனுமேழிடத்திற் செறிந்தகத்தமனமதாயிருக்கில், சலத்துயிர்விடப்ப னெழிலிடந்தனிற் செங்கதிரிருக்க வந்தியனாம், மருவுசூரியனுக் காமனுடன்கூடின் மனைவியை மருவிடாவஞ்சன், மன்னுசங்கராசன்னுடன்மனைவி சதிக சாபன் றுதின்மனைப்பன் வளர்பிறைவேட மூற்றிடுவோர், சருவியே

சண்டைக்காரியாயிருப்ப டக்கிதோர் குசனுறில்வந்தி, தனைகவமேசர் விதியாதன்னுறிற்கர்ப்பந் தரித்திடாமற் கலைந்திருப்பன், ருசமையாய் நிறைந்த மதியுமேழிற்றிடன் மைந்தருங் குணமும் உள்ள மெல்லியலை மணந்தினி திருப்ப னுண்மையீதென வுணர்ந்திடுமே.

(இ-ள்.) சந்திரனுஞ் சுக்கிரனுஞ் சேர்ந்து ஏழாமிடத்தில் அஸ்தமனமாயிருந்தால் சலத்தில் உயிர்விடுப்பன். ஏழில் சூரியனிருந்தால் மலடியாவான். சூரியனும் காமனுங்கூடினால் மனைவியைச் சேராத வஞ்சகனாவான். சங்கராசன் கூடினால் மனைவி இறப்பாள். பரிவேடங்கூடினால் சண்டை பிடிப்பவளாவாள். அங்காரகனிருந்தால் வந்தியாவள். விதியாதனிருந்தால் கர்ப்பந் தரிக்காமல் கலைவைப் பெறுவள். வளர்பிறைச் சந்திரன் ஏழிலிருந்தால் பிள்ளைகளையும், நற்குணத்தையு முடைய பெண்ணை மணப்பான், எ-று. 671

உணர்ந்திடும் புந்தியேழினி லிருக்கவுருப்பெறும் புதல்வனைப் பெறுவன், உற்றவேழாதி யிரவிதாமனிவ புடன்செறிந் தேழினிலிருக்க, மணந்திடுமிருதி மனைவியத்தனையு மரிக்குமென் றறைப்பரேழிடத்தில், மன்னுதாமாதி லொருவர் வந்திடுங் களத்திரக்கானி, அதனைத்திடுஞ் சசிலக்கினத்திறுக் மப்பதிப்பலனெனவறிக, ஆனதோர்மதிதன் னங்கிசத்தேறி மன்புடனேழிடத்திருக்க, குணந்திகழுந்தார்ச் சுந்தரிசேர் குளிர்மனை யேழிடமாகக், கோதறுகதிரங்கிச மதியாகிற் கொழுநரும் பலரெனக்கூறும்.

(இ-ள்.) புதன் ஏழிலிருந்தால் சுபுத்திரனைப் பெறுவன். ஏழுக்குடையோன் சூரியன் தாமனிவர்கள் சேர்ந்து ஏழிலிருந்தால் விவாகஞ்செய்யு மனைவியரனைவரும் இறப்பார். ஏழில் தாமாதி இத்தப்பேரில் ஒருவரிருந்தால் களத்திரத்திற்கு ஹானியுண்டாம். சந்திரலக்கினத்திற்கு ஏழாமிடமும் அப்பலனேயாகும். சந்திரன் தன் அங்கிசத்திலேறி ஏழிலிருந்து ஸ்திரீமனை ஏழதாக சூரியனங்கிசையில் சந்திரனிருந்தால் அவளுக்கும் புருஷர் பலபேராவார்கள், எ-று. 672

வேறு

குடும்பங்களத்திரமாறு தி கூடிப்புகரும்பாவருடன்
நிடமேசன்மத்தனிலிருக்கச் சனித்தோன்சமனகாதாரம்
வடிவாருஞ்செல்விக்கிச்சிப்பன் வாழும்பாக்கியதானத்தில்
அடவெபிலர்கடாமுற்று மியபுதியும் பாமென்பார்.

(இ-ள்.) குடும்பாதிபன், களத்திராதிபன், ஆறுக்குடையோன் இவர்கள் கூடியும், சுக்கிரன் பாவிகளோடு கூடிச் சன்மத்திலிருக்கப் பிறந்தோன் வடிவுடைய பரதாரத்தை இச்சிப்பன். பாக்கியஸ்தானத்தில் முறையே இவர்களிருந்தாலும் இப்படியே யாகும், எ-று. 673

ஆமெகக்கினோடாதி யாருமதிகூடித்
நாமேமூவரொருவீட்டிற் றங்கிற்போகந்தானில்லை
நேமேயிரண்டுமூன்றதி செறுக்காறெட்டிற்பன்னிரண்டில்
காமேகூடியிருந்திடிற் களோகக்கள் கட்டுமே.

(இ - ள்.) சுக்கிரன் ஏழுக்குடையோன் ஆறுமதியன் இவர்கள்கூடி ஒரு வீட்டிலிருந்தால் போகமில்லை. இரண்டு மூன்றாமிடங்களுக்குடையவர்கள் ஆறு எட்டு பன்னிரண்டாம் இடங்களில் சேர்ந்திருந்தால் களோக முண்டாகும், எ-று. 674

காட்டுஞ்சன்மமேழாதிகண்ட கேந்திரகோணத்தில்
கூட்டியிருக்கவவர்வீட்டோன் கொண்டலக்கினந்தான்மேவி
நீட்டும்பாவர்விலனன்றே சேசமறிந்தேகவிவர் திசையில்
ஊட்டும்புசிப்பிவிலவன்பாரி யுகக்கேகவிவேறோடுறுமாணம்.

(இ - ள்.) சன்மம், ஏழுக்குடையவர்கள் கேந்திரகோணங்களில் இருக்க அவர்வீட்டோன் லக்கினத்திலிருந்தால் இவனை பலவானென்று அவன் திசை சுபுத்தியில் அவனும், அவளும் மரிப்பார்கள், எ-று. 675

சத்தமவட்டமாதி தன்னுடன் பாவரேனும்
ஒத்துடனேத்தானந் தானுடன்பாவரேனும்
சித்தமாம்வியத்திலன்னவன் சேயுடன்கூடினாலும்
ஒத்தகல்விவாகம்ரெண்டா யுறுமணம்புரிவனன்றே.

(இ - ள்.) ஏழு எட்டிக்குடையவர்களோடு பாவிகளானாலும் அந்த வீட்டுடன் பல பாவிகளானாலும் சேர்க்கும், பன்னிரண்டில் இரு அங்காரகனுடன் கூடினாலும் இரண்டு விவாகஞ் செய்துகொள்ளுவன், எ-று. 676

எதிடயிரண்டாமாதி யிருவரிலொருவரேனும்
தாழ்ப்பவிலராகத் தானுதிலக்கவீட்டில்
வாழ்பெருமபாவர்நிக்க வுறுமணமிரண்டுசெய்து
வாழ்பவர்புவியிலென்று வழுத்தியமறையில்லோரே.

(இ - ள்.) ஏழு இரண்டுக்குடையவர்களில் ஒருவராவது பலவீனரா யிருந்தால் அந்த வீட்டில் பாவிகளிருந்தாலும் இரண்டு விவாகஞ் செய்துகொண்டு வாழ்வானென்று சொல்லுவர், எ-று. 677

வல்லவிரண்டிலேழுபாவர் வந்துற்றுமேழாமேழில்
சொல்லும்பாவர்நாலுமிவர் சுகமாமதயவீனிலும்
வெல்லும்பீதமதியோனை விரும்பிப்பாவர்நோக்குற
நல்லமணங்களிரண்டென்று நவில்வர்களிந்நாவலரே.

(இ - ள்.) இரண்டில் பாவிகளிருந்தாலும், ஏழிலும் அப்படியே யிருந்தாலும் அந்த வீட்டிலும், அந்த வீட்டுக்குடையோனைப் பாவர்கள் பார்த்தால் இரண்டு விவாகஞ்செய்து கொள்வானென்று சொல்வர்பெரியோர், எ-று. 678

ஏற்றியசன்மமிரண்டு மேழினிற்பாவரேனும்
சேர்ந்தியாங்களத்திராதி நீசரத்தமனமேனும்
வேற்றாசத்துருவீடேனும் விரும்பியேயின்றதாகில்
போற்றுவர்களத்திரங்க ளிரண்டெனப்புகல்வர்தாமே.

(இ - ள்.) சன்மம் இரண்டு ஏழாமிடங்களில் பாவராகிலும், களத்திராதிபன் நீசனாலும் அத்தமனமானாலும், சத்துரு வீடானாலும், விரும்பியிருந்தால் இரண்டு களத்திரங்கள் உண்டாமென்று சொல்லுவர், எ-று. 679

மேவியகளத்திராதி விரும்புகேந்திரகோணத்தில்
பாவியர்கொத்திரட்டும் பரிந்துறப்பத்தோன் கூடந்
தாவியபேழானந்தை தரிப்பசொ[illegible]த்திரங்கண்டால்
தேவியுமனைகமாகத் திடமணம்புரிவன்றானே.

(இ - ள்.) களத்திராதிபன், கே[illegible]கோணங்களிலும், பாவிகள் வீட்டிலும், கட்பிலும், பத்துக்குடையோனுடன் ஏழோனக்கிசையிலேறி ஆட்சி ஸ்தானத்தைப் பார்த்தால் அநேக களத்திரங்களை மணஞ்செய்வான், எ-று. 680

ஆணோ தாரேழிடத்தி லரசனும்பலமதாகி
ஈனமில்பனிக்குதானு மிருந்திடவனுவதாகத்
தெனிர்குடும்பாதி சினைசாக்கிசையிருக்கவேதான்
தானதிருபமுள்ள தனபதிசாரியன்றே.

(இ - ள்.) ஏழில் குருபலப்பட்டு, சுக்கிரனும் கெடாமல் பலப்பட்டு இருக்கவும் குடும்பாதிபன் மித்துருவாக்கிசையி லிருக்கவும் அதிரூபமுள்ள தனவான் பெண்ணை மணப்பன், எ-று. 681

சயலாபாதிபேழா னிருவரும்பலமாய்க்கூடித்
தாயகோணத்திருக்கச் சுபருடைப்பார்வையாகில்
கேடமாமினைமப்பெண்க ளிகைநிலனுள்ளாரக
ஆயிலம்மனங்கள்கூட்டி யவனியிலிருப்பன்றானே.

(இ - ள்.) லாபாதிபதி, ஏழுக்குடையோன் இவ்விருவரும் பலமாய்க்கூடி திரிகோணத்திலிருந்து சுபர்பார்வையைப் பெற்றால், உயிருடன் இருக்கவும் அநேக பெண்களை விவாகஞ் செய்வான், எ-று. 682

இருத்திடுமிரண்டேழாதி லக்கினகோபுராக்கிசைக்குள்
பரித்துறம்பததாமாதி பண்புடனேழிலுறுநல்

தெரிந்தநற்களத்திரங்கொடுத்தமெனக்கொள்ளவென்றே
புரிந்திடுங்கனிதுறவின் புண்ணியரோதினரே.

(இ - ள்.) இரண்டு, ஏழுக்குடையோர்கள் சுக்கிர கோபுராம்சைக்குள்ளும் பத்துக்குடையோன் ஏழிலுமிருந்தால் பத்துப் பெண்களை விவாகஞ் செய்துகொள்வனென்று சொல்லுவர், எ-று. 683

துதியேகளத்திராதி புயர்சுபராசியேறி
மீனமந்திசைகலவீட்டாய் மேவிடபனிலிருந்தாலும்
நிதியிப்படியேபோலாக நிறையும்பத்ததிபன்றேனும்
மேதினியுள்ளவன்கூட மோகனப்பெண்கள்கொள்வான்.

(இ - ள்.) களத்திராதிபதி சுபர் ராசியிலேறி அந்த அம்சமும் சுபர் வீட்டாய் இருக்கவும், சுக்கிரனும், அப்படியே யாகவும், பத்துக்குடையவனேனும் பலவான் ஆகவும் மோகனப்பெண்களைக் கொள்ளுவான், எ-று. 684

கொள்ளுமேற்களத்திராதி குருவுடன்கூடினாலும்
தெள்ளியபார்வையுற்றுத் திடமுளதலத்திருந்தும்
வெள்ளியேயிருந்தாலும் மிக்குபலமாகவுற்றால்
ஒள்ளியதானதர்ம முள்ளவளுறுவட்டானே.

(இ - ள்.) களத்திராதிபதி குருவுடன் கூடினாலும், பார்வையைப் பெற்று வலியுள்ள ஸ்தலத்திலிருந்தாலும், சுக்கிரன் பலப்பட்டிருந்தாலும் தானதர்ம முள்ள மனைவி வாய்ப்பாள், எ-று. 685

வக்குலக்கினத்துநீசம் வரவேபுதனும்பாவருடன்
இக்காலசமுத்தமனமிருந்தங்கிசைசத்துருவின்
சொக்குமந்திசைக்கேறியினும் தாரத்தர்பாவர்களத்திரத்தில்
உத்திமிருக்கவேசியார் புயர்ந்தகுலமுந்தாழ்வாமே.

(இ - ள்.) லக்கினத்துக்கு, நீசமாக புதன் பாவருடனும், சந்திரன் நீச அம்சமாய் சத்துரு அம்சையிலிருந்து சொக்கு அம்சையிலேறினும் தாரத்தர் பாவிகள் களத்திரஸ்தானத்திலிருந்தாலும் வேசி மனைவியாய் வாய்க்க உயர்ந்தகுலமும் தாழ்நிலை யடையும், எ-று. 686

ஆமேகளத்திராதிபதி யாசனுமிப்பாவருடன்
தீமேபாவராசியினும் நீசத்திருக்கப்பாவர்களும்
தாமேசேர்க்கையானாலும் சனிசேர்அம்சைபுற்றாலும்
போமேசோரம்கனியாய் புறம்புமனையானவள்போல.

(இ - ள்.) களத்திராதிபதி குருவாய் பாவருடன் கூடிப் பாவராசியிலும் அல்லது பாவிகள் பார்க்கினும், சனியம்சத்திலிருந்தாலும் வெளிப்போனதவள் போலிருந்து உள்ளுக்குள்ளே சோரம் போவாள், எ-று. 687

போருங்களத்திராதிபதி புகராய்ப்பாவருடன்கூடி
எருதும்பாவர்பார்த்திருக்க வெழிலார்சத்துருவம்சையில்
அருதும்பாவராம்சையி லமர்ந்தேதானிருக்கவன்னியர்பால்
தாகமுடனேசஞ்சரித்துச் சமர்த்தாய்ச்சோரஞ்செய்திடுவள்.

(இ - ள்.) களத்திராதிபதி சுக்கிரனும் பாவருடன் கூடியும் பாவிகள் பார்க்கவும் சத்துருவம்சை, பாவிகளம்சையில் இருக்கவும் அந்நியரிடம் வாசஞ் செய்து சமர்த்துடன் சோரம் போவாள், எ-று. 688

ஏழாமிடத்தோன்பாவருடனிரண்டிலிருக்கச்செய்பார்க்கச்
சூழும்வியபசாரத்தொழிலாம் சுதனுமுண்டாமெனச்சொல்வர்
வாழுமிலக்கினத்துடையோனும் வரவாறெட்டுப்பன்னிரண்டில்
தாழ்வாயிருக்கப்பன்னிரண்டு தாரங்கொள்வன் தப்பாதே.

(இ - ள்.) ஏழுக்குடையோன் பாவர்களுடன்கூடி இரண்டிலிருக்க அவனை அங்காரகனும் பார்த்தால் வியபசாரத்தால் பிள்ளையுண்டாம். லக்கினாதிபதியும், ஆறு எட்டு பன்னிரண்டாமிடத்தில் தாழ்ந்திருந்தால் தவறாமல் பன்னிரண்டு விவாகஞ் செய்வான், எ-று. 689

கொள்ளும்வாபாதிகளத்திராதி கூடினும்பார்த்தாலும்
தெள்ளும்பலவானுகியிவர் திரிகோணத்திலிருந்திடினும்
உள்ளவிவாகமூன்றென்றே யுரைப்பர்கனிதவல்லோர்கள்
கள்ளவிடமேபோல்விழியிருட்டின் குழனற்காரிகையே.

(இ - ள்.) வாபாதிபன், களத்திராதிபதி இவர்கள் கூடினாலும், பார்த்தாலும் பலவானுகி இவர்கள் திரிகோணத்திலிருந்தாலும் விவாக மூன்றென்று சொல்லுவார்கள் பெரியோர் பெண்ணே!, எ-று. 690

லக்கினத்தனக்கேழ்தன்னில் வியத்திரிற்சோமனாலும்
புக்கவேபாவராக்கிசையிற் பொருந்தியேயிருக்கக்காலே
சுக்கிரன்பாவரோடுத் துலக்கவேயிருக்கனி
கைக்கொள்ளும்புருடனுப களைவினக்கொல்வன்கண்மடவாய்.

(இ - ள்.) லக்கினத்திற்கேழிலும், பன்னிரண்டிலும், சந்திரன் பாவாம்சத்தில் பொருந்தியிருந்தாலும், சுக்கிரன் பாவிகளோடு கூடினாலும் அவன் தனது நாயகியைக் கொல்லுவான், எ-று. 691

ஏழாம்பாவம் முற்றிற்று.

எட்டாம் பாவம்

ஆயுட்பலன்

அட்டமத்ததிபன்பாக்கி யாதிபனுடனிருக்கில்
அட்டமத்ததிபன்பாவி யாதிபனுடையவில்லை
அட்டமத்ததிபனுச்ச மாகினுமானதற்கோள்
அட்டமத்ததிபன்றன்னைப் பார்க்கினாயுளுண்டிருப்பன்.

(இ-ள்.) எட்டுக்குடையோன் பாக்கியாதிபதியோடாவது பாவியோடாவது, உச்சனாயினும் சுபக்கிரகங்களின் பார்வையைப் பெற்றாலும் சந்தேகமில்லாமல் ஆயுளையுடையவனாயிருப்பான், எ-று. 692

பங்குபாதகன்செவ்வாயைப் பெற்றபுசிப்பிற்சனி
தங்கியதிசையிற்செவ்வாய் தானுகந்திடுபுசிப்பில்
அங்கவனட்டமாதி திசையினிலவன்புசிப்பில்
மங்குகோசரன்றுயின் வருத்துநோய்மாயத்தானே.

(இ-ள்.) சனி அங்காரகனைப் பற்றிய புசிப்பில் சனிதிசையினும், அங்காரகன் புசிப்பில் அட்டமாதிபன் திசையினும் அவன் புசிப்பில் கோசாரம் சஞ்சாரத்தால் வருத்துநோய் மாறும், எ-று. 693

வேறு

ஆறெட்டுபன்னிரண்டா மதிபரோடு
மலதிவர்மூவர்க்கதிபனாம் பாவிலேனும்
விரிட்டசனிமேவிற் சரிசிலை
மேவியவெட்டாதிபன்கேந்திரத்திலேனும்
பெறிட்டன்மாதியுந் தூரப்பலனுமப்
பெறினவெட்டான்டுணை பேசுவாரும்
கூறிட்டசன்மாதி பலவாறுங்
குலவும்வெகுவாயுந்தன்றோ வுடலாரும்.

(இ-ள்.) ஆறு எட்டு பன்னிரண்டாமிடங்களின் அதிபர்களோடும் அல்லது இம்மூவருக்கும் ஈசர் ஒன்பதாமிடங்களில் சனியிருந்தால் அரிஷ்டை-

யும் எட்டுக்குடையோன் கேந்திரத்திலாவது சன்மாதிபதி ஆயுள்பலனுடன் மும்மத்திரண்டு வயதென்று பலவாறும் பெருவழியென்றுஞ் சொல்லலாம், எ-று.

வேறு

கடகமுதலாறு ராசிக்குள்ளே குருவிருக்க
மகரமுதலாறுக்குள்ளே சனிமேவிடினும்
பெருங்கடகேந்திரத்திற் சுக்கிரபுதனும்பெருகிடில்
மாறுதலைத்தீர்க்காயுளுடன் வைப்பதன்னில்வாழ்வானே.

(இ-ள்.) கடகமுதலிய ஆறு ராசிக்குள் குருவும், மகரமுதல் ஆறு ராசிக்குள் சனியும் கடகேந்திரத்தில் சுக்கிரனும் புதனுமிருந்தால் தீர்க்காயுசாய் வாழ்வான், எ-று. 695

வாழுமகரமுதலாறின் மந்தனிருக்கக்கடகமுதல்
ஆறும்ராசியாறுக்குட் சோமனிருக்கக்கேந்திரத்தில்
விழுமாசுரமந்திரிக்கை வைத்தியம்பொற்சனிருக்க
ஏழுக்கதிரோனைக கேந்திரக்கி மாறுண்டே.

(இ-ள்.) மகரமுதலாறு ராசிக்குள் சனியும், கடகமுதலாறு ராசிக்குள் சந்திரனும் கேந்திரத்தில் குருவுமிருந்தால் தீர்க்காயுசாம். அன்றி ஏழில் அங்காரகனும் சுக்கிரனுமாகவில் குரு எழினும் கேந்திரத்திலிருந்தாலும் ஆறுவயதாம், எ-று. 696

ஆண்டமீனமுதலாறி லாசனிருக்கத்தனுமுதலாய்த்
தீண்டுமிராசியோராறில் திரிகோணக்கேந்திரத்தன்னில்
நீண்டபுதனுஞ்சுக்கிரனு நிற்கிற்றீர்க்கவிலைமாம்
பாண்டியமகாராசன்கொடியைப் பழித்தகருங்கட்பைங்கொடியே.

(இ-ள்.) மீனமுதல் ஆறுக்குள் குருவும், தனுசு முதலாறுக்குள்ளும் திரிகோண கேந்திரங்களிலும் புதன் சுக்கிரனுமிருந்தால் தீர்க்காயுசாமென்று பாண்டிக்கொடியை ஜெயித்த கட்பைக்கொடியையுடையாய்! நீ அறிக, எ-று. 697

கொடியேயகுருசுக்கிரனுங்கா மிடத்திற்குடிகொண்டேயிருக்க
செடியசன்மலக்கினத்தி னிலையிருக்கவிவர்க்குத்
தடியசனியீசுரனிருக்க கண்டவயதாமொரு நூறே
பிடியுமின்பேட்டன்னமுமுன்பின்னே நெகாடுமாவேனே.

(இ-ள்.) பெண்ணே! குரு சுக்கிரர் காமத்திலும் சென்மலக்கினத்தில் சந்திரனும், இவர்களுக்கு கவிலீல் சனியுமிருந்தால் வயது நூறென்று சொல்லுவார், எ-று. 698

அடிக்குஞ்சன்மமுதலுங்கா மிடத்துமன்றேகலாறாகவிடபும்
படிக்குமபுதன்கவிராசன் புசித்ததாயிருக்கிற்குருவும்

அடிக்கும்புகரென்றெண்ணுற் றெட்டுமுப்பத்துமூன்றாகும்
அடுக்கும்வெள்ளிக்கறுபத்தா றாசானிருந்தாலாறுமே.

(இ - ள்.) சன்மமுதல் நான்காமிடத்தல் புதன் சுக்கிரன் குரு இவர்க ளிருந்தால் நூறு வயதாம். அன்றி புதனொருவனேயிருந்தால் முப்பத்துமூன்று வயதாம், சுக்கிரனிருந்தால் அறுபத்தாறு வயதாம், குருவிருந்தால் நூறு வயதாகும், எ-று. 699

ஆமெட்டாமத்திறைவிபனு மட்டத்திலமர்ந்திருக்கச்
சோமன்பாவருடன்கூடி யிரண்டாமெட்டுமாறுமீந்திருக்கில்
தாமும்வயதைம்பத்தெட்டாந் திருமஞானிதானவன்
காமன்கணையைப்பழித்தவிழிக் கடிந்துமருட்டுங்கண்ணுனே.

(இ - ள்.) அட்டமாதிபதி யதிலேயிருக்கச் சந்திரன் பாவிகளுடன் கூட இரண்டு ஆறு எட்டாமிடங்களி லிருந்தால் ஐம்பத்தெட்டு வயதாகும். ஞானியு மாவான் மங்கையே, எ-று. 700

கண்ணேர்தும்பலக்கினமே சன்மலக்கினமாய்ப்
பண்ணுதத்திகெட்டாக்கிசைசிறப்பி னுமாசனபதிக்கு
எண்ணுர்பாவர்கேந்திரத்தி லில்லாதிருக்கவில்வுலகில்
தண்ணுர்குருவுமறுபதாக்குந் தானுந்திடேவர்தப்பாதே.

(இ - ள்.) கும்பமே சன்ம லக்கினமாய் அதற்கெட்டா மஸ்தானத்தில் குரு விருக்கவும், பாவிகள் கேந்திரத்தி லில்லாதிருக்கவும் அறுபது வருஷம் வரைக் கும் தப்பாமல் வாழ்வர், எ-று. 701

தப்பாவில்லைலக்கினமாய்த் தன்னிற்குருவுந்தானிருக்க
இப்பார்புகழுமங்கிதனுரும் பாம்பேசேர்ந்தேயிருந்தாலுட
செப்பாமெழுபத்தைந்தாகு மேவும்பாவர்கேந்திரத்தில்
துப்புார்சன்மத்தாதிபெட்டு நிலவாண்டிருபத்தெட்டாமே.

(இ - ள்.) தனுசுலக்கினமாய் அதில் குருவும், அங்காரகன், சந்திரன், ராகு இவர்களும் கூடியிருந்தால் எழுபத்தைந்து வயதாகும், பாவிகள் கேந்திரத்திலும் சென்மாதிபதி எட்டிலுமிருந்தால் இருபத்தெட்டு வயதாம், எ-று. 702

எட்டாம்பாவர்க்கிசைசரி யினிமேயிருக்கக்கேந்திரத்தில்
மட்டார்பாவர்தாமிருக்க வயதுமறுபத்தாறாகும்
செட்டார்சுபாக்கிசைதன்னில் சென்மாதிபனுந்தானிருக்க
எட்டாமிடத்திப திசேர்ந்திருக்கில் ஐம்பதெனப்பாரே.

(இ - ள்.) பாவக்கிரகசரிசுபக்கிரகங்களும், கேந்திரத்தில் பாவிகளு மிருந்தால் அறுபத்தாறு வயதாம், சுபாக்கிசையில் சென்மாதிபனும், எட்டு ஆறு மிடங்களில் எட்டுக்குடையோனு மிருந்தால் ஐம்பது வயதென்பர், எ-று. 703

என்பாரெட்டாமதிபதியும் லக்கினத்திறைவியதும்
ஒன்பானுந்திறற்கோனே அதிபோக்கந்தனக்கருமென்மைத்தர்
அன்பாயிருப்பர்சன்மத்தி லையகுதிச்சந்திரனிருக்க
வன்பாம்புவியத்திற்குருவுருக்கில் வயதுமிருபத்தெட்டாமே.

(இ - ள்.) எட்டுக்குடையோனும் லக்கினாதிபதியும் ஒன்பதுக்குடையோ னும் சுபர்களானால், மைத்தர்களுமிருக்க தந்தை பிறப்பன். சன்மத்தில் ராகு சூரியன் சந்திரனிவர்களும், பன்னிரண்டில் குருவுமிருந்தால் இருபத்தெட்டு வயதாம், எ-று. 704

வேறு

ஆருலக்கின மெட்டாதிபதியே
வாருகேந்திரத் தெய்தமற்றெட்டனில்
தாகமோடேயாயினுந் தானுநில்
எருவன்பன்னிரண்டு கண்டமே.

(இ - ள்.) லக்கினாதிபதி, எட்டுக்குடையோன் இவர்கள் கூடி கேந்திரத்தி லிருக்கவும், எட்டில் பாவிருந்தாலும் பன்னிரண்டே வயதாம், எ-று. 705

வேறு

கண்டகெழுபட்டாமிடத்திற் கதித்தநல்லோர்தாமிருக்க
அண்டுகன்றுனைறிழபன்னிரண்டு லசைபதுமத்தீர்க்காயுளுண்டாம்
கொண்டவெட்டாதிபனுஞ்சக் கொளச்சென்மாதிபனாறுனும்
மிண்டுயினிமேபார்கரணக் கேந்திரத்திலிருக்கவெகுவயதே.

(இ - ள்.) ஏழு எட்டு ஆறாமிடங்களில் சுபக்கிரகங்களும், மூன்று பதினொ ராமிடங்களில் பாவிகளுமிருந்தால் தீர்க்காயுசுண்டாம். எட்டுக்குடையோன் உச் சமாகவும், சென்மாதிபனும் சுபர்களைக் கேந்திரத்திலிருந்தாலும் வெகு வய துண்டாகும், எ-று. 706

தேரும்வயதினைவுரைப்பக்கேண்மின் சன்மாதிபன்றனக்கும்
வரும்பரித்தேதோன்றனக்கு முறைமற்றீர்க்காயுளுண்டாம்
வருஞ்சமமேனமத்திமமா மெட்டிட்டாண்டேயினிருப்பன்
செரும்பகையதாகிலற்ப நிலத்திறைவெட்டாண்டிருப்பன்.

(இ - ள்.) வயதினளவைச் சொல்லக்கேளுங்கள்: சன்மாதிபனுக்கும் சூரிய னுக்கும் உறவானால் தீர்க்காயுசுண்டாம். சமமானால் மத்திமமாம். அறுபத்து நான்கு வருஷங்களே யிருப்பன்: பகையானால் அற்பவயதாம். முப்பத்திரண்டு வருஷமேயாகும், எ-று. 707

இருக்குமறைபுகழ்சோனிறைபன் வீட்டகேந்திரத்தில்
வருக்கமுடன்பூரணமயேதான் மாமைவுதாசீந்திரத்தில்

பெருக்கமுடன்மத்திமமாயது சிறந்தியமாயதன்னில்
அருக்குமற்பமாயதி லற்பஞ்சாற்றக் கேள்மின்றனையிதே.

(இ - ள்.) அற்பவயதுள்ளவன் விசாகநட்சத்திரத்திலும், பூரண வயதுடைய வன் மரணமதை நட்சத்திரத்திலும், மத்திம வயதுடையோன் தனயிலும் அற்பமதி லற்பஞ் சொல்லுகின்றேன் சேனன், எ-று. 708

சிருந்தன்மாதிபாவாங்கிசத் தரிக்கில்வயதற்பத்தி லற்பம்
வருசன்மாதிசுபாங்கிசத்தில் வரவுற்பத்தின் மத்திமமாம்
அருள்சன்மாதி நேர்கேந்திரக்கிலோர் காண லற்பத்தினிற் றீர்க்கம்
உருமத்திமம் தீர்க்கந்தனக்கு முனைவிட்டபடிக்கண் டுரைமானே.

(இ - ள்.) சன்மாதிபன் பாவாங்கிசத்திலிருந்தால் வயது அற்பத்தினற்ப மாம். சுபாங்கிசத்திலிருந்தால் அற்பத்தில் மத்திமமாம். சன்மாதிபனை சுபர் பார்த்தால் அற்பத்தில் தீர்க்கமாம். மத்திமம் தீர்க்கமாம். இவைகளுக்கெல்லாம் உளவினைக்கண்டு உரைப்பாயாக, எ-று. 709

கதிரோனுதயமுதற் சனனகாலமளவுக்கடிகைதனை
எதிராவெண்ணியிரண்டரையி னீக்கியோரைலக்கினமாம்
சதிராய்ச்சன்மவீட்டாற்றைத் தாண்டிச்சீவன் முதலாம்
அதிராய்ச்சன்மவீட்டைப் பாகிற் சனமமுதலதாகிடுமே.

(இ - ள்.) சூரியனுதயமுதல் சனனம் வரைக்குமுள்ள நாழிகைகளை எதி ராக வெண்ணி இரண்டரைக்குக் கொடுத்தால் ஓரை லக்கினமாம். அதில் சன்ம முதலாகவும் சொன்னவேண்டும், எ-று. 710

வேறு

சரமதனிற்சரத்திரக்கிற் றிரத்தான்மத்திமமாம்
தபவிலிருதாற்றுபயங்கட்டாலற்பமாரும்
திரமதனிற்றிரமதுசு சரத்தானமத்திமமாம்
திரத்திலுபயம... ...கீழ்வந்தாகும்
வருமுபயந்தனிலுபய மத்திமமேயாகும்
மற்றமதிற்சரமதில வயதற்பமாமே
பெருமையுடனுபயத்திற் றிரத்தீர்க்கமாமே
பெற்றிடிபூரணவயது பெற்றிடுவர்தாமே.

(இ - ள்.) இலக்கினபதி சரத்திலும் அஷ்டமாதிபதி சரத்திலுமிருந் தால் ஆயுள் தீர்க்கமும், ஸ்திரம் மத்திமமும், உபயம் அற்பமும், லக்கினபதி ஸ்திரத்திலும், அஷ்டமாதிபதி ஸ்திரத்திலுமிருந்தால் அற்பமும், சரம் மத்திம மும் உபயம் தீர்க்கமும், இலக்கினபதி உபயத்திலும், அஷ்டமாதிபதி உபயத் திலுமிருந்தால் மத்திமமும், அதில் சரம் அற்பமும், அதில் ஸ்திரம் தீர்க்க வய தும் பெற்றிடுவர், எ-று. 711

பெருந்திரிகோணங்களிற் கேந்திரத்தினல்லோர்நிற்கப்
பின்னுஞ்சன்மாதிபன் பொன்னுடனுன்னிற்க
உறுவதாயுண்டெனவு முலகிலெங்கோர் சொல்வர்
உற்றசன்மமோடெட்டாதிபனுமுடன் கூடி
மருவுமாறாமிடத்திற் சனிபார்க்கநிற்கில்
வாழ்விலேயரிட்டமெனவே வழுத்தலாகும்
சிறுகுழவியிலக்கினத்திற் செய்யோனுடனிற்கன்
செறியுமிருவரைக்காரி தெரிசிக்கிலரிட்டம்.

(இ - ள்.) திரிகோணம் கேந்திரங்களில் சுபரும் சன்மாதிபதி குருவு டன் சேர்ந்து காணிலிருந்தால் பூரணவயதாம். சன்மாதிபனும் எட்டுக்குடை யோனுங்கூடி ஆறாமிடத்திலும் சனிபார்க்கவிருந்தால் இளமையிலேயே அரிட்ட முண்டாம். லக்கினத்தில் அங்காரகனும், எட்டில் சந்திரனும் இருக்க இவர் களைச் சனி பார்த்தால் அரிட்டமுண்டாம், எ-று. 712

மானிடருக்கயன்விதித்த வாண்டைமூன்றாக்கின்
வருமுப்பான் மூன்றாகு மகிதற்பமென்ப
தானறுபத்தாறு மத்திம ...தீர்க்கம் ...
தாழ்வறமூன்றுக்கு... பங்கொன்றினை மூன்றாக்கில்
பானமொழியாய் பன்னொன்றும் பங்கொன்றுதனக்கே
பகர்ந்திடுமேயற்பத்தில் லற்பமத்திமதீர்க்கம்
ஆனமத்திமதீர்க்கத்தை யிவ்வாறே பகிர்ந்து
அறிந்திடுவீர் பயமாய்..க ளாயுளினைக்கண்டே.

(இ - ள்.) மனிதர்களுக்குப் பிரமன் விதித்த ஆயுளை மூன்றாகப் பாகித்தால் ஒருபங்குக்கு வருவது முப்பத்து மூன்றும், அது அற்பவயதாம், அறுபத்தாறு மத்திமமாம். மற்றவை முழுமையும் தீர்க்கமாம். தவிர ஒரு பங் குக்கு வந்த முப்பத்து மூன்றை அப்படி மூன்றாகப் பங்கிட்டால் ஒரு பங்குக்கு வரும் பதினொன்றை அற்பத்தில் அற்பமென்றும், இருபத்திரண்டை அற்பத் தில் மத்திமமென்றும் முப்பத்துமூன்றை அற்பத்தில் தீர்க்கமென்றும் சொல் லுக. இம்மூன்றையும் இவ்வாறே பகிர்ந்தறிந்துகொள்க, எ-று. 713

வேறு

அட்டமாதிபனுங் குருவுமேகூடிப்
பாலுமன்னிரண்டி லடுத்திருக்கில்
அட்டாயுதத்தால் மரணமுற்றிடுவோர்
குற்றந்தானெனப் படுக்காயம்
உட்டிருதியன் பாம்புடனேய
மெட்டாடுறைந்திடிற் கள்ளராலிட்டம்

தொட்டலக்கினெ மெட்டாதிசேர்ந்து
அருந்துறமிளையுறிற் கண்டமே.

(இ - ள்.) எட்டுக்குடையோனும் அங்காரகனுங்கூடி ஆறு பன்னிரண்டா மிடங்களிலிருந்தால் அட்டாயுதத்தால் மரணமாம். சுபர் சேர்ந்து பார்க்கக் காய முண்டாம். எட்டுக்குடையோன் ராகுவுடன்கூடி பன்னிரண்டு எட்டு ஆறுமிடங் களிலிருந்தால் கள்ளரால் அரிட்டமுண்டாம். லக்கினத்தில் எட்டுக்குடையோன் சேர்ந்து தன் வீட்டிலுமிருந்தால் சகண்டமுண்டாம், எ-று. 714

கண்டமெட்டாதி வாகனுதிபனைக்
கலந்துபன்னிரண் டெட்டெட்டில்
மிண்டியநீசர் சத்துருபவனமில்
மேவில்வாகனத்தா லாமரணம்
மண்டியெட்டதிபன் சனிபவனத்தில்
வசின்மரத்தின் வீழ்ந்திறப்பான்
அன்றியோனெட்டே சனிசரக்கேசம்
புக்காதசன்னி வாதமதீருகும்.

(இ - ள்.) எட்டுக்குடையோன் வாகனுதிபனைக் கலந்து பன்னிரண்டு ஆறு எட்டாமிடங்களிலும், நீச சத்துருக்ஷேத்திரங்களிலிருந்தால் வாகனங்களால் மரணமாம். எட்டுக்குடையோன் சனி வீட்டிலிருக்கில் மரமேறி வீழ்ந்து இறப்பான். அன்றி லக்கினாதிபதி எட்டுக்குடையோன் இவர்கள் சரராசிகளி லிருந்தால் ஜன்னி வாதத்தால் இறப்பான், எ-று. 715

சூரனுக்காலமீர்த் திசோரெட்டாய்
அனைரக்கி ஒழியுங்கூடிப்
பாரமாங்கலை ராகு விடியோதனும்
படிதானிதேனை மறுமனை
சேரவெட்டோதி நீசத்தில்
செறிந்துபன்னிரண்டு கவெட்டுடன
வீரமாகவுறுதே நெஞ்சினுளம
வியாதியால் வியாபடைந்திடுவன்.

(இ - ள்.) லக்கினாதிபதியுடன் எட்டுக்குடையோனும், லக்கினாதிபனும் கூடுதல் கவ்வுப்பட்டாலும் இடியேறால் வீழ்ந்திறப்பான். அன்றி அட்டமா திபதி நீசமடைந்து, பன்னிரண்டு ஆறு எட்டாமிடங்களில் ராகுபார்த்தால் குன்மரோகத்தால் இறப்பான், எ-று. 716

அடைந்திதிரெச மத்தாதிபனோடு
எட்டமத்தாதிப னோடும்

மிடைந்திடுக்குளிகன் தன்னுடன்கூடி
விபயெட்டாமிடத்தினின் மேவ
கடந்தகால்கைகள் பின்னமேபட்டு
கவினைத் தொலைத்தன் மடிவன்
தொடர்ந்தகுக்காரிகள் வடிவுடன் காணில்
சொல்லைகா லுனைறுப்பிருப்பன்.

(இ - ள்.) லக்கினாதிபதியானாலும், அட்டமாதிபதியானாலும் குளிகனுடன் கூடி பன்னிரண்டு எட்டு ஆறுமிடங்களிலிருந்தால் கால் கை பின்னப்பட்டு அத னால் இறப்பான். சுபர்பார்த்தால் கைகால்கள் பின்னப்பட்டிருப்பன், எ-று. 717

இருந்திடுக்சன்மத் தனிற்சனி குளிக
னிருவருங் கூடியேதின
மருவியமீமா றெட்டுவிர்த்திருக்கல்
மன்னுநன் மரணமேயாகும்
பொருந்துமாதித்தன் புடத்தினையுடன்
புடத்தையுங் கூட்டிமீராசியினில்
அருந்தவமன்ன பொருந்தக்கொண்டே
உணவினிற் றன்புறத்திடுவன்.

(இ - ள்.) சன்மத்தில் சனியும் குளிகனுங் கூடியும், பன்னிரண்டு ஆறு எட்டாமிடங்களில் சந்திரனுமிருந்தால் மரணமேயாகும். ஆதித்தன் ஸ்புடத்தில் இகைகண்டன் புடத்தைக்கூடும் ராசியில் குருவந்தால் வியாதியால் வருந்துவான், எ-று. 718

இடுமையாதித்தன் புடத்துடன் குளிக
னிசைத்திடு புடத்தையுங்கூட்டி
மடந்தராசியிற் சூரியன் வருங்காலம்
கவியுதாபிசந்திரன் புடமும்
கடுந்திறக்குளிகன் புடத்தையுங்கூட்டிக்
கண்டராசியிற் பிறைவருநாள்
அடுஞ்சாக்கடுமாவடு வரிருவனே
பயில்கையுறான கண்ணுதே.

(இ - ள்.) சூரியன் ஸ்புடத்தோடு குளிகன் ஸ்புடத்தையுங் கூட்டிவரும் ராசியில் சூரியன் வரும்போது கோபுண்டாம். சந்திரன் ஸ்புடத்தையும் குளிகன் ஸ்புடத்தையுங் கூட்டிவரும் ராசியில் சந்திரன் வருங்காலத்திலும் கோபுண்டாம் பெண்ணே! எ-று. 719

காரினிற்சன்ம லக்கினக்குளிக
னவினிறகண்டகன் முதலாம்

கோளுடன் காலிருக் குளிகனுங்
கூட்டியராசி லக்கினத்தில்
மாறுகோளமிக்கால்லைக்கூட்டும்
வகையதிற் குளிகலக்கினத்தில்
நீளமட்டளவு மசபதிமுதலாய்
நிறைந்த நக்ஷத்திரங்கண்டே.

(இ - ள்.) லக்கினம், குளிகன், இவைகளுடன் முதலான காலயிருந்து இர் காலுங் கூட்டிய ராசிலக்கினத்தில் மரணமாம். இக்காலவையும் கூட்டும் விதத்தில் குளிகலக்கினத்தில் நீளம் மட்டங்களின் அளவையும் அசுவினி முதலிய நக்ஷத்திரங்களால் கண்டும், எ-று. 720

கண்டபின்குளிகனின்ற லக்கினத்தின்
கடிகையிற் சென்றமட்டத்து
கொண்டது நக்ஷத்திரங்களைக்கண்டு
குதிரைமட்டுடன்னி முன்னிருந்து
இன்டிறற்றொகையுங் கூட்டிதல்படமாம்
தெரிந்துமுன்சொன்ன நால்வருக்கும்
மண்டிபிபடி யெண்ணியபடக்கூட்ட
வந்திடு மாரணலக்கினமே.

(இ - ள்.) அப்படி பார்த்துக்கொண்ட பின்பு குளிக நின்ற லக்கினத்தில் கடிகையை சொல்லனைதையறிந்து அந்த நக்ஷத்திரத்தைக்கண்டு அதுமுதல் அஸ்வினிவரைக்கு மெண்ணி முன் தொகையுங் கூட்டுதல் படமாம். அது போலவே முன் நால்வர்க்கும் படக்கூட்ட மாணலக்கினம் வரும், எ-று. 721

வேறு

லக்கினத்தனக்கெட்டாதிபன் குளிகனவிவிருபத்திரண்டான
சனிதிரையக்காறு திபன்காரி நால்வருமிருந்தவக்கினையோன்
தக்கதோர்பலன்களான்றியற்றிடுவோன் மன்னைதிரையருளானில்
தனித்தலக்கினமிரண்டாமிடமெட்டாந் தானமும்பன்னிரண்டிலும்
இக்கிரகசனிசர்ச்சரன்வருக்காலது நிகழக்கிட்டமனமென்று
செப்பியவர்வராகமிகிரர்கள் செகத்திலவ்வோர்களுமறிய
மிக்கதோர்குளிகன்சனிகருடாகம் விரவசன்மத்திலிருக்க
விபத்திளிலெட்டாதிசன்மாதி மேலிருந்தால் மொசித்திடுவன்.

(இ - ள்.) லக்கினத்திற் கெட்டுக்குடையோன், குளிகன், இருபத்திரண்டாவது திரேக்காணாதிபன், சனி இந்நால்வரு மிருந்த அம்சத்திற்றான் தக்க பலன்களின் றிலிருக்க அவர்களுடைய தசாதிசை வருகையிலும் ஜன்ம லக்கினத்திற்கு இரண்டு, எட்டு, பன்னிரண்டாம் இடங்களிலுள் சனியிருக்கையா

ல் மரணமாமென்று வராகமிகிருரைத்தனர். அன்றி, குளிகன், சனி, ராகு, இவர்கள் சன்மத்திலும், அஷ்டமாதிபதியும், சன்மாதிபதியும், பன்னிரண்டி லிருந்தால் நோயால் வருந்துவான், எ-று. 722

வேறு

இடமுதற்சன்மத்ததிபெட்டாதிப னிருவருக்கூடியவயத்தில்
இடமுடன்வாயத்ததிபனுமாய்ச் சேர்ந்திடுவவர்களுடனே
வயுமுடனேவாயபதிக்கோனும் வந்ததான்கூடியூனில்வருந்தத்
அடலுயிர்விடும்போதருகினிலிருப்பார் சொல்லும்வாயத் திசைமரணம்.

(இ - ள்.) சன்மாதிபதி எட்டுக்குடையோன்கூடி வாயத்திலும் இவர்க ளுடன் வாயாதிபதியுஞ் சேர்ந்து இருக்க இவர்களோடு பாவிகள் யாராவது வந்து சேர்ந்தால் வாயாதிபன் திசையில் மரணமாவர், எ-று. 723

மரணமாகண்டமீவது பத்தாமதிபதி தூர்ப்பலனுக்
கிரணமாகப்பெர்வருதிசைப்பகளிற் கிட்டியபொசிப்பவர்பலனும்
முரணுமயிருவர் தமக்குமேவிசோக முண்டிடும்பகையதாயிருக்கில் [ஸ்.
தாரணியிட்டம்பப்பதியினிற்செல்லுமத்தகையவன் றுரைக்கவேண்டுமோ

(இ - ள்.) பத்துக்குடையோன் தூர்ப்பலனும் மாரக திசையிற் கிட்டிய பொசிப்பு அவர் பலனும் இவர் தமக்குமே உண்டிடும் பகையாயிருந்தால் அவர் கள் திசையில் உயிர்விடுவன், எ-று. 724

வேண்டுநான்காமதிபதியுடனு மேவுமெட்டாதிபன்றானும்
சண்டியெனதுவீட்டினிலிருக்க விறப்பதுகாலமூழ்ப்பதியில்
தூண்டுயோவியத்திலாமினிலிருந்திற் பாரதேயத்திலிறப்பன்
நீண்டுக்காக்காவுஞ்சேசன் புக்டாயிலே கிரக்திடுககருக்கரோரணர்க்கே.

(இ - ள்.) நான்குக்குடையோனோடு எட்டுக்குடையோனுஞ் சேர்ந்து தன் வீட்டிலிருந்தால் தப்பகுளிலேயே இறப்பான். பன்னிரண்டு ஆறாமிடங்களி லிருந்தால் பரதேசத்தி லிறப்பான், எ-று. 725

ஆரணக்கேக்கெட்டுபக்துதிக்காணுக் கடற்குளிகன் றுமைவீட்டுக்
கோணையற்றொன்பதிற் சனியுருகாளிக்கருபரவினிலுதித்தால்
சீரணிகுளிகற்கேழிடத்தனக்குத் திரிகோணமதிற்சனியுதித்தால்
தாரணியறியக்கண்டவன்றுரைப்பர் சாதகநிபுணமாதவரே.

(இ - ள்.) பெண்ணின் மகம் பிறந்தவனுக்கு குளிகனிருக்கும் வீட்டுக்கும் ஒன்பதில் சனியிருந்தால் அனுபமாம். இராத்திரியில் பிறந்தவனுக்கு குளிகனுக்கு ஏழாமிடத்திற்குத் திரிகோணத்தில் சனி இருந்தாலும் கண்டமுண்டாமென்று சொல்வர், எ-று. 726

மாதவமேஷமுதற்கருராகம் வாழ்மனைபாவுமட்டெண்ணி
மீதிமீனமட்டுமிருதொகைதன்னில் விளங்கவேபெருக்கிமுன்னான்கின்
போதவேகழித்துமிக்கலக்கினத்தில் புணர்திரிகோணராசியினில்
ஏதமாங்காரிமருவுநாட்கண்ட மிவையெலாங்கோசரத்தனக்கே.

(இ-ள்.) மேஷமுதல் ராகு இருக்கும் வீடுவரைக்கும் மேஷம் மீனமட்டும் வரும் தொகையில் இரண்டால் பெருக்கி பன்னிரண்டில் கழித்து மிகுந்த லக்கி னத்தில் புணர் திரிகோணராசியில் சனி வரும் காலில் கண்டமுண்டாம். இது கோசாரத்திற்காகும், எ-று. 727

தனக்குமோரெட்டாமதிபதியுடனங்காரனுமினனுமேகூடி
எனக்கதிருசனுமெட்டினிலிருக்க விருவருமெட்டிடம்பார்க்கக்
கனத்துயர்வெற்பிலேறிவீழ்ந்திறப்பன் காளியொடுபுகர்கூடில்
சினத்துறுவிலங்குகொண்டிறக்கு மெனவிதித்திடுவார்கள்.

(இ-ள்.) எட்டுக்குடையவனோடு சூரியனும், அங்காரனுங்கூடி எட்டி லிருக்கவும், இருவரும் எட்டாமிடம் பார்க்கவும் மலையேறி விழுந்திறப்பான். இவர்களோடு சுக்கிரனுஞ் சேர்ந்தால் விலங்குகளால் மடிவன், எ-று. 728

வாருறுமுலையாய்சனிமதியிருவர் மருவியட்டமத்தினிலிருக்கக்
காரிசந்திரனெட்டதிபனோக்கிடக் கண்டகக்கிணற்றில்வீழ்ந்திறப்பன்
கூரியசெவ்வாய்சனிசசிமூவர்கூடி முன்போலவேயிருக்கில்
பாரினிற்றன்கையாலுயிர்மாய்ப்பன் பல்கலைப்புலத்தகுமடியே.

(இ-ள்.) கச்சிறுக்கிய தனத்தாளே! சனியும், சந்திரனுங் கூடி அட்டமத்தி லும், சனியும், சந்திரனும், எட்டுக்குடையோனைச் சேர்ந்தாலும் பார்த்தாலும் கிணற்றில் வீழ்ந்திறப்பன். அங்காரகன், சனி, சந்திரன் இவர்கள்கூடி முன் போலிருந்தால் தன்கையால் உயிர் விடுவன், எ-று. 729

படிதருஞ்செவ்வாய் சனியிவரெட்டிற் பதிந்துலக்கினத் தன் னில், கொடியவெயோனிக் கெட்டினிலிருக்கக் கொடுமையாய்ச் சஸ்த் திரம் வீழ்ந்திறப்பன், முடவனுங்கதிரு மெட்டினிலிருக்க மூண்டமே கோதரவியாதி, அடல்சனிகதிர் தேய்பிறையு மெட்டுறையி லக்கி னமாயுத மரணம்.

(இ-ள்.) அங்காரகன் சனி இவர்கள் எட்டிலும், லக்கினத்தில் சூரியனும், எட்டில் சந்திரனுமிருந்தால் சஸ்த்திரத்தில் விழுந்திறப்பன். சனியுஞ் சூரியனும் எட்டிலிருந்தால் மகோதர வியாதியுண்டாம். சனியும், சூரியனும் தேய்பிறைச் சந்திரனும் எட்டிலிருந்தால் அக்கினியாலும், ஆயுதத்தாலும் மரணமாம், எ-று.

மரணமார்வனைவேயொன்பதிலிரவி மைந்தனுங்கூடியேயிருக்கக்
காரணமாமெட்டிற்குசனுமேயுதிரங் கமழ்கசோணிதமெலாமுலர்ந்து
இரணமாயெலும்புக்கூடாயிறப்பன் றேய்பிறைசனிகுசனெட்டில்
தரணியோரறியப்பாசபந்தத்தா றன்னுயிர்மாய்ப்பனென்றுரைப்பர்.

(இ-ள்.) ஏழு, ஒன்பதாமிடங்களில் சூரியனும், சனியும் கூடியும், எட் டில் அங்காரகனுமிருந்தால் ரத்தமெல்லாம் வற்றி எலும்பாயிறப்பன். தேய் பிறை சந்திரன், சனி, அங்காரகன் இவர்கள் எட்டிலிருந்தால் பாசபந்தத்தால் இறப்பன், எ-று. 731

உரைத்திடும்பாவரொன்பதிலேழி லுறைதரவட்டமத்தன்னில்
நிரைநிறையக்காரனுமிருக்க நீடுமிம்மூன்றானிடத்தினையும்
இரைத்திடுநல்லோர்பார்வையற்றிருக்க விலங்குடனிருந்தவன்றனது
கரத்தினையும்பிணைத்திடுவன் காணெனச்சொல்லுவர்கண்டாய்.

(இ-ள்.) பாவிகள் ஒன்பது, ஏழாமிடங்களிலும், அட்டமத்தில் இரேக்கா ரதிபனுமிருக்கவும், இம்மூன்று வீடுகளையும் நல்லோர் பார்வையிருக்க விலங்கு பூட்டியிருந்து தன்கையிலேயே தானிறப்பன், எ-று. 732

கண்டலக்கினக்கன் கன்னியாயிதனிற் கருதிடாப் பாவருமிருக்க, எண்டிசை புகழ்மீனத்தினிற் பானிருந்திட வட்டமத்தன்னில், மன் டியபிறையுஞ் சுக்கிரனுமிருக்கின்மாதர்செய் வாதையான்மடிவன், கொன் டையம்பயின் மாவடுவிடம் போற்கட்கிருந்தகம் போதுறுமென் மொழி யாய்.

(இ-ள்.) லக்கினம் கன்னியாய் அதில் பாவிகளும் மீனத்திலும் அப்படி யேயும் அட்டமத்தில் சந்திரனும், சுக்கிரனுமிருந்தால் தாயின் வாதையால் மடிவன். கொண்டை முதலியவை பொருந்தும் மிழிமடவாய், எ-று. 733

மொழிகதிர்சனிதேய்பிறைகுசனிவர்மூவர்ச்சியாக்கூடிலக்கினத்தில்
பொழிதிரிகோணத்தனிலேமேவப்புண்ணியர்கண்டிடா திருக்கக்
கழிபுகைப்பூயதீயினாற் கொள்ளிக்கட்டையான்மருவல்சுடவே
அழிபடுமெய்யில்வருந்தமுற்றிறப்ப னவன்றனாவிதிவசமே.

(இ-ள்.) சூரியன், சனி, தேய்பிறைச்சந்திரன், அங்காரகன் இவர்கள் கூடி லக்கினம், திரிகோண வீடுகளி லிருந்தாலும், அவர்களைச் சுபர் பாரா திருக்க புகையாலும், தீயாலும், கொள்ளிக்கட்டையால் சுடவும் வருந்தி அவன் இறப்பது விருப்பன், எ-று. 734

வசருடனெட்டிக்கதிர்சனிசெவ்வாய் மருவவேலக்கினத்தனனில்
இசைபுதன்றேய்ந்தபிறைதகருநாக மிருக்கின்மெய்புழுத்துடன்மடிவன்
புசபலகாரிதேய்பிறையெட்டிற் பொருந்திடவவர்தமைச்செவ்வாய்
நிசருடன்பார்க்கிலரசனாற்கிருமி நிறைந்திடுமியுளிறப்பன்.

(இ-ள்.) எட்டில், சூரியன், சனி, அங்காரகன் இவர்களும் லக்கினத்தில் புதன் தேய்பிறைச் சந்திரன், ராகு இவர்களுமிருந்தால் மெய்புழுத்திறப்பான். சனி, தேய்பிறைச் சந்திரன் இவர்கள் எட்டிலிருக்க அவர்களை அங்காரகன் குரு இவர்கள் பார்க்க ராசனாற்கிருமித்துயரா லிறப்பான், எ-று. 735

மருவியபத்திற்சூரியனாறின் மங்களன்வியத்தினிற்காரி
விரவியவிரண்டிற்கரியகோளிருக்க மேவலர்சூளியநுணைத்தால்
சருவியசூளிசக்கட்டிநால்வருத்திச் சந்திரமுற்றிருந்தவன்றன்
கருவிகள்பிரிந்தேசோபமுற்றிறப்பன் காசினியதனிற்றிண்கானே.

(இ-ள்.) பத்தில் சூரியனும், ஆறில் அங்காரகனும், பன்னிரண்டில் சனியும் இரண்டில் ராகுவுமிருந்தால் சூளியநுணைத்தால் சூளிசக்கட்டிநால் வருந்தி யிறப்பான், எ-று. 736

காலையோரேழிற்சூரியன்செவ்வாய் கருதுமெட்டினிற்சனியாறில்
சாலவேருறுநற்றேய்பிறையுறச் சன்மத்தனிலெட்டினிற்புதனும்
சேமமாயிருக்கிலிடியினன்மடிவன் றிரயக்காரணியர்தன்னில்
மேவிருபத்திரண்டினாந்தனதுவீடு லக்கினமெனவிளம்பும்.

(இ-ள்.) ஏழில் சூரியன், அங்காரகன், எட்டில் சனியும், ஆறில் தேய்பிறைச் சந்திரனும் சன்மத்திலும், எட்டிலும் புதனும் இருந்தால் இடியினு லிறப்பான். திரயக்காணியர் இருபத்திரண்டுக் குன்னாகும் வீடுலக்கின மென்று சொல்லும், எ-று. 737

விரும்புமாறெட்டும்பன்னிரண்டதிபன் மேவியபாவிதானுகில்
உளர்ந்தெதிநற்பாயுள்சுபர் பார்க்கிலே நெடிதீர்க்கமாமென்றே
களர்ந்தெதிரல்லோர்பாவருமாகில் கண்டமுமத்திமமாதே. [வே.
இளம்பிறைநுதல்வேற்பொரு கயற்கண்ணுக்கிசைத்திடுமியிருளரனால்

(இ-ள்.) ஆறு, எட்டு, பன்னிரண்டா மிடங்களுக்குத் தலைவர்கள் பாவி களாயிருந்தால் அற்பாயுசுண்டாம். சுபர் பார்க்கில் தீர்க்காயுசாம். நல்லோர் பாவரோடு கூடினால் மத்திமமதாகும் எ-று. 738

நாளெனும்வியமாறெட்டினிலதிபனன்று கேந்திரத்தினிலிருக்கில்
வாள்விழியணங்கேயற்பமாயு சுத்தான்மத்திமம்பணபரத்திருக்கில்
தாள்செறியணங்கேயாபோக்கியத் தானுறிலாகுமாறுண்டே
கோளினிற்சூரியன்மனைவருங்காரி குலவியாயுளதுநீடுக.

(இ-ள்.) பன்னிரண்டு ஆறு எட்டாமிடங்களின் தலைவர்கள் கேந்திரத்தி லிருந்தால் அற்பாயுசும், பணபரத்திலிருந்தால் மத்திம ஆயுசும், அபோக்கி லியத்திலிருந்தால் தீர்க்காயுசும் உண்டாம். அன்றி சூரியன் வீட்டில் சனிவரும் நாள்களிலும் நெடுமையுண்டாம், எ-று. 739

இதுநூம்வியமாறெட்டினிலதிபன் னிவர்களிற்பலன்கருதிலொரு
போதுந்தனக்கேயவர்கள்திசையிற் பொருந்திடகண்டமாமதாம்
ஈதினில்வியமாறெட்டினிலதிபன் மேனிபேதிசைகளுங்கூடி
ஏதுமாகட்டுமவர்திசையத்தால் நியல்புடன்கண்டமாகுமாம்.

(இ-ள்.) பன்னிரண்டு, ஆறு, எட்டாமிடங்களின் தலைவர்களால் பலன் ஒன்றுமில்லாதபோது அவர்கள் திசையில் கண்டமாகும். மூவர் திசை களுங்கூட தொகையாய் நடக்கும் திசையிலும் கண்டமுண்டாகும், எ-று. 740

காலமாம்பரிதிலக்கினத்திருந் கருதயித்தருவேயாயின்
தாலமாக்கீர்க்கமாமிதனையுரைப்பர் சொல்லியசமமேயாயின்
மூலமாமத்திமம்பகையாயினுமன்று முட்பமாக்குமென்றே
கோலமாம்லக்கினமாக்கினைசமதிக்குக் கூறியசனிவரிறுமன்பம்.

(இ-ள்.) சூரியனும், லக்கினாதிபதியும், மித்துருவானால் தீர்க்காயுசும், சம மானால் மத்திம ஆயுசும், பகையானால் அற்பமுமென்று சொல்லவேண்டும். அன்றி லக்கின லக்கினாதிபதியில் சனியிருந்தாலும் துன்பமாம், எ-று. 741

அன்பமேயமில்லாவுச்சலக்கினத்தைத் தொடர்ந்து முப்பதுபங்கதாக்கி
வன்பொடுசூரியன்பத்தாம்பங்கு மதிமூன்றாருசனிருபத்தெட்
டொன்பதாம்புதன்மூன்றவதாம் னொருமெழுபதுருபகாருபத்தேழ்
மூன்புசனியிருபதாம்பங்கே முழுதீசமாம்பமென்றனரே.

(இ-ள்.) உச்சலக்கினத்தை முப்பது பங்காக்கி அதில் சூரியன் பத்தாம் பங்கிலும், சந்திரன் மூன்றாம்பங்கிலும், அங்காரகன் இருபத்தெட்டாம் பங்கிலும், புதன் பதினைந்தாம் பங்கிலும், குரு பதினேழாம் பங்கிலும், சுக்கிரன் இருபத் தேழாம் பங்கிலும், சனி இருபதாம் பங்கிலும் வர பூரணவயதாம். மற்று சீசமாகில் அற்பாயுசாம், எ-று. 742

சென்மதாரகைக்காறெட்டு கேந்திரத்திசையது மாரகமதனுள்,
வன்மைமோரெட்டிற்கெட்டாது பின்னவருமாறிலக்கு மாறெட்டாம்,
பன்மைதாரகையின் றிசையின்மாரகமாம் பார்க்கவேயிட்டபுயமைந்
தால், நின்மைகாலமுமலருடை புகப்பிறந்தேசுமேயாருக்கண்டமே.

(இ-ள்.) ஜென்மநட்சத்திரத்திற்கு ஆறு, எட்டாவது நட்சத்திரங்களின் திசைகளிலும், எட்டிற்கு எட்டு, ஆறுக்கு ஆறு, எட்டுக்கு ஆறு ஆகிய நட்சத்

சகங்களின் திசைகளிலும் மாரகமாகும். இரட்டையாய் வந்தால் அந்தந்தத் திசாநாதர்களுடைய திசையில் மாரகமாகும், எ-று. 743

வேறு

கண்டகன்மந்தராசி கருதியாறுதிபன்பார்க்கக்
கொண்டசெவ்வாய்லாபத்திற் கூறுந்திராசிக்குடையோன்
பண்டேயென்பதினிலிருக்கப் பாக்கியாதிரத்திலுற
உண்டாஞ்சத்துருவாகத்தா லோமம்பன்னவருமரணம்.

(இ-ள்.) ஜென்மம் சராசியாய் அதை ஆறுக்குடையோன் பார்க்க அங்காரகன் லாபத்திலும், ஸ்திராசிக்குடையோன் ஒன்பதிலும், பாக்கியாதிபதி ஸ்திரத்திலும் இருந்தால் சத்துருவினாக ஒக்கிரிகையால் மரணமுண்டாம், எ-று. 744

வருகாலிடத்திலக்கினத்தில் வருமாங்கேதுசனிகளுடன்
அருள்சேர்ந்திருக்கச்சூனியமு மபிசாரத்தாலுமரணம்
திராளம்வியத்திற்கேதுவுறத் தேடிப்பாவர்நோக்கப்
பரவேயம்மையான்மரணம் பொன்பார்த்திடிலோவடுவுண்டாம்.

(இ-ள்.) நான்கிலும், லக்கினத்திலும், கேதுவும், சனியும், சேர்ந்திருந்தால் சூனியத்தாலும், அபிசாரத்தாலும், மரணமுண்டாம். பன்னிரண்டில் கேது இருந்து அவனைப் பாவிகள் பார்க்க அம்மையால் மரணம். குரு பார்த்தால் வடுவுண்டாகும் மரணமில்லை, எ-று. 745

12-ராசிக்கும் சுபாசுபக்கிரகமாரக பலன்

வேறு

சாற்றியதுவாதசமாம் லக்கினத்தன்னிலோர்ந்து
சேர்த்தியாய்ச்சுபரும்பாவர் நிறையோகமாரகங்கள்
போற்றியேயவர்தம்வீட்டிற் பின்பலமுரைக்குநாளின்
தேற்றமேயறிந்துகொண்டு செப்பலுமுரைப்பாயுநாளே.

(இ-ள்.) பன்னிரண்டு லக்கினங்களையுமறிந்து சுபாவர்கள் இருக்கும் யோகத்தையும், மாரகத்தையும் அவ்வவர்கள் வீட்டில் பலம்சொல்லும் நாளி லறிந்து பலன் சொல்லுக, எ-று. 746

தானுறுமேடத்தோற்குச் சனிபுகர்புந்திபாவர்
வானுறும்பரிதிதேவ வான்குருசுபனுமென்றே
தானுறுமிவர்கள்கூடக் கடினமாம்பலன்களற்பம்
தேனுஞ்சுக்கிரன்றன் திசையிற்றான்மாரகங்கள்.

(இ-ள்.) மேடத்துக்கு சனி, சுக்கிரன், புதன், பாவிகள், சூரியன், குரு, சுபர்கள் இவர்கள்கூடினுல் பலன் அற்பம். ஆனுல், சுக்கிரன் திசையில் மாரகமுண்டாகும், எ-று. 747

வேறு

களிமேவிடபத்தோர்க் காசன்புகர்சூரியன்குரு
உளமாம்பாவிகதிர்சனியு முயர்சுபருமேயாகங்கள்
வளமார்புகருக்கான்குடும்ப மாரகத்தோனும்பாவி
புளகார்திங்கியுங்கொங்கை பூவைக்குரலாரும்மானே.

(இ-ள்.) இருஷபஜென்மத்துக்கு, குரு, சுக்கிரன், சூரியன், பாவிகள்; சூரியனும், சனியும் சுபர்கள் இவர்கள் கூடின் நல்லயோகமாம். சுக்கிரன் யோககாரகன் குடும்பமாரகனும். ஆகையால் அவனும் பாவியென்றறிவாய் பெண்ணே!, எ-று. 748

மாதேமிதுனலக்கினத்திற் கரசன்செவ்வாய்கதிர்பாவர்
ஆதிசுக்கிரன்சுபருரு மதியுஞ்சனியுமற்பபலன்
வாதேறும்பாவர்திசையதனில் மல்லுமாரகமென்னே
தேடேயினியமுதமொழிச் செவ்வாய்முதலவ்சிறுநுதலாம்.

(இ-ள்.) மிதுனலக்கினத்திற்கு குரு, அங்காரகன், சூரியன், பாவிகள் சுக்கிரன் சுபன் சந்திரனும், சனியும் அற்பபலனைக் கொடுப்போர், ஆகையால் தேன்போல் சொல் முதலியவையுடைய நங்காய்! பாவிகள் திசையில் மாரகமென்று சொல்லுக, எ-று. 749

நந்துங்கடகம்புகர்புந்தி புகர்கோய் செப்பாவர்குருசெவ்வாய்
இதமார்சுபனுஞ்சேயோக மிருக்கும்பரிதிமாரகனும்
முதலிலிங்கம்புகர்புந்தி மோதும்பாவர்சேய்சுபனும்
மதில்யோகம்பொன்வெள்ளி மறைமுக்கோணுடன்மாரகன்மாதே.

(இ-ள்.) கடக லக்கினத்திற்கு புதன், சுக்கிரன், பாவிகள் குரு, அங்காரகன் சுபர்கள் சூரியன் மாரகன் அங்காரகனால் யோகமுண்டாகும். சிம்மலக்கினத்துக்கு, சுக்கிரனும், புதனும் பாவிகள். அங்காரகன் சுபன், குரு, வெள்ளி யோகர் சூரியன் மாரகர்களும், எ-று. 750

மாதேகன்னிசெய்யதிலோன் மன்னும்பாவர்புகன்சுபனும்
காலேயோகம்புந்திபுகர் கன்மாரகன்சுக்கிரன்பாவி
போனாற்றுலாத்திற்செய்பரிதி குருவும்பாவர்சனிபுதனும்
மேலாஞ்சுபர்கண்மதிபுந்தி யோகமாரகன்செவ்வாயே.

(இ-ள்.) கன்னி லக்கினத்திற்கு அங்காரகன், சந்திரன், குரு இவர்கள் பாவிகள், புதன் சுபனும், புதனும் சுக்கிரனும் யோககாரர்கள். ஆனுல் சுக்கிரன் மாரகனும். துலா லக்கினத்திற்கு அங்காரகன், சூரியன், குரு, பாவிகள். சனியும், புதனும், சுபர், சந்திரன், புதன், யோகர், அங்காரகன் இவர்கள் மாரகர்களாம், எ-று. 751

ஏயதென்புதன்சேயும்பரிதிக்கே யியன்றபாவரிக்குசுபன்
தாயயோகமதிகாரத் தொடர்க்குருவேமாரகனும்

ஆயதனுவில்புகர்பாவி யாரல்பரிதிசுபராகும்
யோகயோகம்புத்திபுகர் நீண்டசனியுமாரகனே.

(இ - ள்.) விருச்சிக லக்கினத்திற்கு புதன் அங்காரகன் சுக்கிரன் பாவிகள், சந்திரன் சுபன், சந்திரனும் சூரியனும் யோககாரர்களாம் குரு மாரகனும் ஆம். தனுசு லக்கினத்திற்கு சுக்கிரன் பாவி, அங்காரகனும் சூரியனும் சுபர், புதனும் சுக்கிரனும் யோகமாம், எ-று. 752

மகரஞ்சுறவிற்குருசெவ்வாய் மதியும்பாவர்புகர்புந்தி
ஆருஞ்சுபராமாயோக மருளுஞ்சுக்கிரன்மாரகன்கும்
பகார்குரும்பக்குருமதிசேய் பாவர்சுக்கிரன்சுபனுநும்
தாகார்யோகம்பனிக்குபுதன் றன்னுமாரகன்முன்பாவி.

(இ - ள்.) மகரலக்கினத்திற்கு, குரு அங்காரகன் சந்திரன் புதனும் சுக்கிரனும் சுபர்களாம், சனி மாரகனும். கும்பலக்கினத்திற்கு குரு சனி அங்காரகன் பாவிகள் சுக்கிரனும் சுபனும் யோககாரனுமாவான், புதன் மாரகனும், குரு முன்போலப் பாவிகளாம், எ-று. 753

பாவிமீனஞ்சனிபுதன்பரிக்கு சூரியன்பாவியரே
மேவுஞ்செவ்வாய்மதிசுபராம் விளங்கும்யோகக்குருவால்
தாவுமாரகன்சேயென்றே சாற்றுத்துவாதசலக்கினத்தை
ஆவலறிந்தேசுபாசுபங்க ளறிந்துரைப்பன்பரே.

(இ - ள்.) மீன லக்கினத்திற்கு, சனி புதன் சுக்கிரன் சூரியன் பாவிகள் அங்காரகன் சந்திரன் சுபர்கள், குரு குசன் யோகர், சனி அங்காரகன் இவர்களால், மாரகமுண்டாகும் என்று சொல்லும் பன்னிரண்டு லக்கினங்களின் சுபாசுபங்களை அறிந்துசொல்ல வன்மையாம், எ-று. 754

பண்பாறதிபன் லக்கினதி பாவனுஇப்பலமறவே
நண்பாமேமுழுதுற்றிருக்க நல்லோர்காணுமாதமிரண்
டெண்பார்லக்கினதிபதிக் கெட்டின்மிகவேபாவர்களும்
இன்பாய்நோக்குற்றிடவே இங்கனுன்கில்லைமரணம்.

(இ - ள்.) ஆறுக்குடையோனும், லக்கினாதிபனும், பாவிகளாய் பலமற்று வழியிருந்து நல்லோர் பார்வையைப் பெறுமற்போனால் இரண்டு மாதத்திலும் இலக்கினாதிபதிக்கு எட்டில் பாவிகளும் அவர்கள் பார்வையையும் பெற்றால் நான்கு மாதத்திலும் மரணமுண்டாம், எ-று. 755

இலன்றன்லக்கினதி பதிபாவியவபலமறவே
சுவனேபார்வைவர்ச்சிதமாய்ச் சொல்லுமாறதிகடனில்

தலமாமெட்டிற்பன்னிரண்டிற் றக்கபாவர்நோக்குறக்
கலனமுடனேயிருமாதங் காணுமரணக்கனமே.

(இ - ள்.) லக்கினாதிபதியே பாவியாய் பலமற்று சுபர் பார்வையில்லாதிருந்தால் ஆறுமாதத்திலும், ஆறு எட்டு பன்னிரண்டாமிடங்களில் பாவிகள் பார்வையிருந்தால் எட்டுமாதத்திலும் மரணமாம், எ-று. 756

கண்டவமாபக்கத்திற் சாதனுஞ்சேரமனெட்டாறில்
கொண்டசன்மமிதிபாவர் கூடிநோக்கவீரைந்தே
மண்டுமெட்டிற்சென்மத்தில் வந்தேபாவர்தானிருக்க
மிண்டாய்நல்லோர்நோக்கமிலா மேவின்வருஷமொன்றிலுமே.

(இ - ள்.) தேய்பிறைச்சந்திரன், எட்டு ஆறு ஜென்மங்களிலும் பாவிகள் கூடியும், பார்த்தும் இருந்தால் பத்துமாதங்களிலும் பாவிகள் எட்டிலும் ஜென்மத்திலும் நல்லோர் பார்வையைப் பெறாதிருந்தால் ஒருவருடத்திலும் மரணமாம், எ-று. 757

ஒன்றேசனிவக்கிரமா யோதும்புந்திசெவ்வாயும்
அன்றேயொருவீட்டிலுறவே யாறைந்தெட்டுப்பன்னிரண்டில்
நின்றேசன்மமோரிரண்டி னிற்கக்குசன்றனுற்றாலும்
நன்றேசுபர்நோக்கமிலா மேவின்வருஷமொன்றிலுமே.

(இ - ள்.) சனி வக்கிரம்பெற்று புதனும் அங்காரகனும் ஒரு வீட்டினிலும் ஆறு ஐந்து எட்டு பன்னிரண்டாமிடங்களிலும், லக்கினத்திலும், இரண்டிலும், அங்காரகனும், சுபர்கள் பார்வையில்லாதிருந்தால் இரண்டு வருஷத்தில் மரணமாம், எ-று. 758

காருஞ்செவ்வாய்தனக்கெட்டி லண்ணிக்குருவுந்தானிருக்கக்
கோருஞ்பரிதிசெவ்வாயுங் கொண்டமதியைப்பார்த்திடவே
மீருஞ்சுக்கிரன்கன்னிநட்டு மேவிநோக்கமில்லாத
ஆறும்வருஷமூன்றெனவே யறைவர்கனிதவல்லோரே.

(இ - ள்.) அங்காரகனுக்கு எட்டில் குருவும், சூரியனும் அங்காரகனும் சந்திரனைப் பார்த்தும், சுக்கிரன் கன்னியிலுற்று பாராமலும் இருந்தால் மூன்று வருஷத்தில் மரணமென்று சொல்லுவர், எ-று. 759

வல்லசன்மந்தனக்கெட்டு வாழுமதற்கோரெட்டதினை
நல்லோர்பார்க்கதிரிகோணத்தை நாடும்பாவரொருவரே
சொல்லுஞ்சன்மராசிக்குச் சுபக்கோடிருஷ்டிவர்ச்சிதமாய்
ஒல்லும்பாவர்பார்வையுற வோங்குவருஷமைந்திற்சாவாம்.

(இ-ள்.) ஜென்மத்துக்கு எட்டையும், அதற்கு எட்டையும், சுபர்பார்க்க திரிகோணத்தில் பாவிகளிருந்தால் நான்கு வருஷத்திலும் ஜென்மராசிக்கு சுபர் பார்வையின்றி பாவர்கள் பார்வையிருந்தால் இரண்டு வருஷத்திலு மரணமாம், எ-று. 760

சாமெவ்வமாமெட்டதனிற் சனிகுரும்பரிதிராகுமதி
ஆமேயிருக்கச்சுபர்திருஷ்டி யல்லாதவெபேதாராதாரும்
கூமேசன்மமுன்பின்னுந் தக்கபாவரிருந்திடவே
போமேநல்லோர்பார்வையிலாப் போதுமரணமேழ்தனிலே.

(இ-ள்.) பன்னிரண்டு ஆறு எட்டாமிடங்களில், சனி சூரியன் ராகு சந்திரன் இவர்கள் சுபர் பார்வையைப் பெறாதிருந்தால் ஆறு வருஷத்திலும், ஜென்மத்திற்கு முன்னும் பின்னும் பாவிகளிருந்து சுபர்பார்வை யில்லாதிருந்தால் ஏழு வருஷத்திலும் மரணமாம், எ-று. 761

தனிசேல்சன்மஞ்சேயுமதி தன்னிலொருவரின்றனும்
இனிமேயாண்கிற்பாவர்களு மெட்டிற்பரிதிசேய்மதியும்
மனுக்குந்திருக்கவின்னமொரு மதிவீட்டோசன்மாதி
சனிகுருபரிதியுற்நல்லோர் தானும்பாரார்சென்மரணம்.

(இ-ள்.) ஜென்மத்தில் அங்காரகன் சந்திரன் இவர்களில் ஒருவராகிலும் நாலில் பாவிகளும், எட்டில் சூரியன் அங்காரகன் சந்திரனும், சந்திரன் வீட்டுக்குடையோன் ஜென்மாதிபதி சனி சூரியன் இவர்கள் சேர்ந்து நல்லோர் பார்வையைப் பெறாதிருந்தாலும் மரணமாம், எ-று. 762

மரணஞ்சன்மபதியானாலாம் வாழுமெட்டிற்குருபுகரும்
திரமாய்ப்பாவர்நோக்குறாத் தெரிக்கவயதுமெட்டினதாம்
பரிதிமதியுமட்டுஞ்சேர் பண்பாங்காரிபதினொன்றில்
வரவேயொன்பதிதுமரணம் வகையாயுன்னிரதிந்திடுமே.

(இ-ள்.) ஜென்மலக்கினம் சீதனமும் நலனுமாக இருந்து அதற்கு எட்டில் குருவும், சுக்கிரனும், பாவிகள் பார்வையைப் பெற்றிருந்தால் எட்டு வருஷத்திலும், சூரியனும், சந்திரனும் எட்டிலும், சனி பதினொன்றிலும் இருந்தால் ஒன்பது வருஷத்திலும் மரணமாம், எ-று. 763

அறிந்தேயெட்டிற்கதிர்புகரு மாசபார்வைதானுமிலாச்
செறிந்தேயிருக்கவின்னமொரு செப்புநாலிற்சந்திரனைப்
பிறிந்துபார்க்குஞ்சேய்பரிதி பின்புநல்லோர்பார்த்தால்
இறந்தேயிருக்குமொன்பதினி லினைப்பேகாணின்பலனிதுவே.

(இ-ள்.) எட்டில் சூரியனும், சுக்கிரனும், குருவின் பார்வையில்லாதிருந்தாலும், நாலிலிருக்குஞ் சந்திரனை அங்காரகனும் சூரியனும் பார்க்கவும், சுபர் பாராமலுமிருந்தால் ஒன்பது வயதில் மரணமாம், எ-று. 764

இதுவேகேந்திரமேவியவ சிராகுகேதுவிருந்திடவே
அதனுள்பாவர்நோக்குறுத வானபத்திலுமரணம்
மதிசேர்பரிதிகூடியொரு மனையிலிருக்கத்சன்மத்தைத்
துதிசேர்நல்லோர்பாராக்கால் சொல்லும்பதினொன்றுவயதே.

(இ-ள்.) இராகு கேதுக்கள் கேந்திரத்திலும் பாவிகள் பார்வையைபெற்று மிருந்தால் பத்துவயதிலும், சந்திரனும் சூரியனும் சேர்ந்து ஒரு வீட்டிலிருக்கவும், சன்மத்தைச் சுபர்பாராதிருந்தால் பதினொன்றுவயதிலும் மரணமாம், எ-று.

வயதேசன்மங்கேதுகதிர் மதிதானிருக்கச்சுபர்திருஷ்டி
சயமேயில்லாப்பன்னிரண்டிற் சாருங்குமனிறுமரணம்
நயமாமொன்றிலெட்டாதி நன்னனியிருக்கவோராறில்
செயமேகான்றிற்சேயுறவே நிம்பன்பதின்மூன்றெனச்சொல்லும்.

(இ-ள்.) சன்மத்தில் கேது சூரியன் சந்திரனிவர்களிருந்து அவர்களை சுபர் பாராவிட்டால் பன்னிரண்டு வயதிலும், சன்மத்தில் எட்டுக்குடையோனிருக்க ஆறிலும், நாலிலும் அங்காரகனுமிருந்தால் பதின்மூன்று வயதிலும் மரணமாம், எ-று. 766

சொல்லுமாறெட்டிற்பாவர் சூழ்ந்தேயிருக்கச்சன்மாதி
வெல்லுமாபோகிவியத்தின் மேவியிருந்தாற்பதின்மூன்றும்
வல்லோரதிபன்சென்மாதி வரவேபரிதியுடன்கூட
நல்லோர்பாராக்கேந்திரத்தி னன்னாலும்பாவர்நாலைந்தே.

(இ-ள்.) ஆறு எட்டாமிடங்களில் பாவிகளும், சென்மாதிபன் ஆபோக்கிலியத்திலும், இருந்தால் பதினாறு வயதிலும், சுபர் வீட்டோனும் சென்மாதிபனும் சூரியனுடன்கூட சுபர் பாராமல் கேந்திரத்தில் பாவிகளுமிருந்தால் இருபது வயதிலும் மரணமாம், எ-று. 767

காலேலோமற்றிருபுற மிராகுசெவ்வாய்சனிகேது
ஆலேயிருக்கச்சன்மாதிபாய் பலன்களற்றிடவே
மேலாம்பாவருடன்கூட வேண்டியிருக்குமிப்படியே
சீலமையையந்திரினின்மரணந் செப்புங்கணிதமாதவரே.

(இ-ள்.) சந்திரனுக்கு இரண்டு பக்கங்களிலும் இராகு அங்காரகன் சனி கேது இவர்களும், சன்மாதிபதி பரிவில்லாமல் பாவிகளுடன் கூடியிருந்தால் இருபத்தைந்து வயதில் மரணமாமென்று கணிதநூல் வல்லவர் சொல்லுவர், எ-று. (

மகரக்கன்னி லக்கினமாய் வந்தாசியுந்தானிருக்கப்
பெட்டுத்தேயாசன் விரயமெட்டுற் போகவிருபத்தொருகும்
சாதிசன்மமெட்டதிபன் சரியாய்ப்படமேடுனிருந்தால்
ஓதுங்கேந்திரமுறமெட்டு முற்றிருகேதுறுமெய்வன்பான்.

(இ - ள்.) கன்னிலக்கினமாய் அதில் சனியும், குரு பன்னிரண்டு எட்டா மிடங்களிலுமிருந்தால் இருபத்தாறுவயதிலும் சன்மாதிபனும் எட்டுக்குடையோ னும் சனியுடனாயும், கேந்திரத்திலும் கேது எட்டிலுமிருந்தால் இருபத்தேழு வயதிலும் மரணம், எ-று. 769

பாலுடைநல்வள்கேதுசகுரும்பாம்பு செவ்வாயோன்றெட்டில்
தேனையிருக்கப்புகப்புந்தி தெவாகுருவுங்கேந்திரத்தில்
வினையுற்றவிருபத்தெட்டாகு மெட்டிற்கதிர்மூன்றில்
சனைமதியுஞ்சனிபாவருட னேற்கிருபத்தொன்பானே.

(இ - ள்.) சனி கேது ராகு அங்காரகன் இவர்கள் சென்மத்திலும், எட்டி லும், சுக்கிரன் புதன் குரு இவர்கள் கேந்திரத்திலுமிருந்தால் இருபத்தெட்டு வயதிலும், எட்டில் சூரியனும், சந்திரன், சனி இவர்கள் மூன்றிலுமிருந்து பாவி கள் பார்வையைப் பெற்றால் இருபத்தொன்பது வயதிலும் மரணமாம், எ-று. 770

ஒன்பான்தேய்பிறைசுபத்தான் மூன்றேழ்பட்டமாதிபதி
அன்பாயக்கேந்திரமுறமெட்டில் வன்பாவர்தானிருக்கப்
பின்பாமலக்கினாதிபதி பலன்களில்லாதிருந்திடவே
துன்பமுப்பதினை வதிர்த்து சுகமாயுரைத்தென்பிகளாமும்.

(இ - ள்.) தேய்பிறைச் சந்திரன் சுபர் வீட்டிலும், அட்டமாதிபதி கேந் திரத்திலும், பாவிகள் எட்டிலும், லக்கினாதிபதி பலமில்லாமலு மிருந்தால் முப் பது வயதுவரைக்கும் சுகமாய் வாழ்வன், எ-று. 771

வாழ்நாளிற்சுக்கிரனும் வக்கிரமெட்டிற்பாவருடனச
குழுநல்லோர்பார்வையறத் தொடர்ந்தேக்கிற்சக்கினியால்
வழிமனையாடன்றனு மொன்குப்பாம்பின்கடியாலும்
ஆழியுலகோர்தாமறிய வாருமரணைக்கண்டதே.

(இ - ள்.) நான்கில் சுக்கிரனும், எட்டில் பாவிகளும் சுபர்பார்வையற்றிருந் தால் அக்கினியாலும், மனைவியாலும் பாம்பின் கடியாலும் மரணமுண்டாம், எ-று.

கண்டகிரண்டிற்பன்னிரண்டிற் காறுதோசெவ்வாய்சோமனுற
பண்டேழேமுதிலெட்டிற்கரும்பாம்பு மாசநுற்கின்முப்பான்
கொண்டவட்டமாதிபதி கேந்திரமேவிலக்கினாதிபதி
வண்டுபகன்கள்வாய்ச்சிதமேல் வயதுமுப்பத்திரண்டாமே.

(இ - ள்.) இரண்டில், அங்காரகனும், சந்திரனும், ஏழிலும் எட்டிலும், ராகுவும், குருவுமிருந்தால் மு[ப்]பது வயதிலும், அட்டமாதிபதி கேந்திரத்திலும் லக்கினாதிபதி பலன்களற்று [இ]ருந்தால் முப்பத்திரண்டு மரணமாம், எ-று. 773

ஆமேயாசன்சுக்கிரனு மதியுங்கேந்திரந்தான்மேவத்
தாமேலக்கினாதிபதி தானும்பாவருடன்கூட
நிமைகூறாபோக்கியத் தேய்ந்தமதியுந்தானிருக்கத்
தோமேமரணமாமிதெனச் சொல்லுவர் கணிதவல்லோரே.

(இ - ள்.) குருவும், சுக்கிரனுஞ்சேர்ந்து கேந்திரத்திலும், லக்கினாதிபதி பாவருடன் கூடியும் தேய்பிறைச் சந்திரன் ஆபோக்கியத்திலுமிருந்தால் முப் பத்தாறு வயதில் மரணமென்று சொல்லுவர் பெரியோர், எ-று. 774

வல்லமிதுனலக்கினமாய் வாழும்பருதிதானிருக்கப்
பொல்லாதிரண்டுபாரிசமும் புகவாறரசன் முப்பத்தேழ்
நல்லும்பாவர்கேந்திரத்தி லுறச்சன்மாதிபன்னிரண்டில்
வெல்லுமெட்டோன்லக்கினத்தின் மேவின்முப்பத்தெட்டாமே.

(இ - ள்.) மிதுனலக்கினமாய் அதில் சூரியனும், பாவிகள் இரண்டு பக்கங் களிலும், ஆறில் குருவுமிருந்தால் முப்பத்தேழு வயதிலும், பாவிகள் கேந்திரத் திலும் சன்மாதிபதி பன்னிரண்டிலும், எட்டுக்குடையோன் லக்கினத்திலும் இருந்தால் முப்பத்தெட்டு வயதிலும் மரணமாம், எ-று. 775

மேலாஞ்சன்மத்திராசி மேவுமொன்றிலெட்டாதி
சாயுமிருக்கச்சுபரெட்டிற் றந்தால்வயதுமென்னைந்தாம்
கேடெட்டாதிகேந்திரமே செவ்வாய்லக்கினந்தானிருக்கக்
காலவாதின்மூன்றுசனி கதிருமென்னைந்தாம்வயதே.

(இ - ள்.) சன்மலக்கினம் ஸ்திரராசியும், அதில், எட்டுக்குடையோனுஞ் சுபர் பார்வையுமிருந்தால் நாற்பது வயதிலும், எட்டுக்குடையோன் கேந்திரத்தி லும், அங்காரகன் லக்கினத்திலும், ஆறிலும் மூன்றிலும் சனியும், சூரியனுஞ் சேர்ந்திருந்தாலும் நாற்பது வயதில் மரணமாம், எ-று. 776

வயதேசோமன்லக்கினத்தில் வர்க்கோத்தமனுமுற்றபாவர்
நியமேபார்க்கச்சுபர் திரிகோணங்கேசமில்லாவாறெட்டில்
பயமேசன்மமெட்டாதி பதியங்கிசைபற்றுபாவருடன்
சயமேதிகழவெட்டாதி சன்மத்திருக்கிலைம்பதுமே.

(இ - ள்.) சந்திரன் லக்கினத்தில் வர்க்கோத்தமனுயும், பாவர் பார்க்கவும், சுபர் பாராமலும், ஆறு எட்டு சன்மம் எட்டுக்குடையோன் அங்கிசை இவைக ளும் பாவருடன் கூடியும், எட்டுக்குடையோன் சன்மத்திலுமிருந்தால் ஐம்பது வயதிலும் மரணமாம், எ-று. 777

வேறு

அம்பாழுடையாரசிக்கதிபதி
இன்பாய்லக்கின நாயகந்தேய்ந்திட
துன்பமதிசனிபனிரெண்டெட்டினில்
அம்பமைம்பத்திரண்டினிற்சொல்லுமே.

(இ-ள்.) உடைய லக்கினத்துக் குடையோன் லக்கினத்திலும் சந்திரனும் சனியும் பன்னிரண்டில், எட்டாமிடங்களிலு மிருந்தால் ஐம்பத்திரண்டு வயதில் மரணமாம், எ-று. 778

சொல்லுஞ்சன்மா திருந்தேகப்பட்டுற
வல்லசந்திரன்மனைபற்கதிபதி
வெல்லுமசந்திரந்கேட்டின்மேவிடல்
புல்லோர்கூடிற்போமைம்பதினொன்றே.

(இ-ள்.) சன்மாதிபன் எட்டிலும் சந்திரனிருக்கும் வீட்டுக்குடையோன் அவனுக்கு எட்டிலு மிருந்தாலும், பாவிகள் சேர்ந்தாலும், ஐம்பத்தொன்று வயதில் மரணமாம், எ-று. 779

காலாந்தசன்மாட்டுக்குருசனியில்
மேலாயராகன்விரும்பியிருந்திட
சேலாதிராகுவுஞ்செவ்வாயெட்டினில்
மாலேமதிறபட்டிடுங்கணகண்டமே.

(இ-ள்.) சன்மம் சுகஸ்தானம் தனில் குருவும், ஆறில் ராகுவும், எட்டில் அங்காரகனுமிருந்தால் ஐம்பத்தாறு வயதில் மரணமாகும், எ-று. 780

கண்டவாறுகருதிடுமெட்டினில்
கொண்டகோள்களேகூடியதுதனில்
மண்டியிருக்கில்வயதைம்பத்தெட்டினில்
அண்டமாதவர்தீர்த்துரைத்தனரே.

(இ-ள்.) எட்டாமிடங்களில் மேற்சொன்ன கிரகங்களெல்லாம் கூடியிருந்தால் ஐம்பத்தெட்டு வயதில் மரணமாமென்று பெரியோருரைத்தனர், எ-று. [illegible]

உரைத்திடும்பத்தினிலாதித்தனும்
திரைத்தகாரிசென்மமேவிடில்
புரைத்தவெட்டினிற்புரவலனுற்றிட
நிறுத்துமாண்டறுபதிற்பகருமே.

(இ-ள்.) பத்தில் சூரியனும் சென்மத்தில் சனியும், எட்டில் குருவுமிருந்தால் அறுபது வயதில் மரணமாம், எ-று.

அறுபதிலின்னமுஞ்சென்மனிற்காரி
உறுமலர்ச்சுகமாலினிற்சந்திரன்
புறமெவுழிற்செவ்வாய்பத்தினிற்கதிர்குரு
இறுபுகர்புந்தியிருடன்கூடிடல்.

(இ-ள்.) சனி சன்மத்தில், சந்திரன் நாலிலும், அங்காரகன் பத்திலும், சூரியனும் குருவும் சுக்கிரனுடனும், புதனுடனும் கூடினால் அறுபத்தோர் வயதில் மரணமாம், எ-று. 783

கூடியவெட்டாமறுபதிபாவனும்
நாடியசந்திரனன்னிடுங்கோணத்
தாடியகேந்திரந்தன்னிற்கூடில்
ஆடியவறுபத்தைந்தினிற்போகும்.

(இ-ள்.) எட்டுக்குடையோன் பாவியாய் சந்திரனுக்கு கோணத்திலும், கேந்திரத்திலுமிருந்தால் அறுபத்தைந்து வயதில் மரணமாம், எ-று. 784

போகிடுங்காரிபுகுமனைநீச
மாகியகேந்திரகோணமாகிடில்
மேசமிலக்கினமெழின்மன்னநல்லோர்
ஆகியவருடனுகிலெழுபதே.

(இ-ள்.) சனியிருக்கும் வீடு நீசம் கேந்திரம் கோணம் இவையானால் லக்கினத்தான் சுபர்மனையில் நல்லோருடன் கூடியிருந்தால் எழுவயதில் மரணமாம், எ-று. 785

எழுந்திடுலக்கினத்தெய்தகுறகோணுறத்
தழுவியகேந்திரஞ்சந்திரன்மேவிடில்
அழித்திடுகோணக்காரியமர்ந்துறி
லெழுகிறுபின்செல்வமோடெழுபதினாலே.

(இ-ள்.) லக்கினத்தில் சுபரும், கேந்திரத்தில் சந்திரகோணத்தில் சனியுமிருந்தால் எழுபத்து நான்கு வயது செல்வத்தோடு வாழ்ந்து பின்னிறப்பான், எ-று. 786

நாலாந்துசெவ்வாய்காடுடையத்தினில்
ஏலாம்பரிதியேழிலமர்ந்திட
நீலக்காரிநீசமுற்றிடில்
மாலாயெழுபத்தைந்தின்மரணம்.

(இ-ள்.) ஐந்தில் அங்காரகனும், ஏழில் சூரியனும், சனி நீசமுமடைந்திருந்தால் எழுபத்தைந்தாவது வயதில் மரணம், எ-று. 787

மரணமரியுமவனைகேந்திரத்தில்
குருவுடன்மதியுங்கூடியிருந்திட

திரன்சுபர்நோக்கத்தேசத்தரசனாய்ப்
புவியினிலெழுபத்தொன்பதும்போருந்துமே.

(இ-ள்.) கேந்திரத்தில் குருவும், சந்திரனுங்கூடியும் சுபர் பார்க்கவுமிருந்தால் அரசனும். எழுபத்தொன்பது வயதுவரைக்கும் இருந்து வாழ்வன், எ-று.

மேவியலக்கினவீடாறாவும்
தாவியநல்லோர்தானுறவேழ்முதல்
பாவர்களுறிவேபரதேசத்தரசாய்
சாவதுமெண்பதிற் சாற்றிடுவாரே.

(இ-ள்.) லக்கினமுதல் ஆறுவீடுவரைக்கும் சுபரும் ஏழுமுதல் மற்றைய வற்றில் பாவிகளுமிருந்தால் பரதேசத்தரசனும் எண்பதில் மரணமுண்டாகும், எ-று. 789

சாற்றிடுமின்னார்தானெண்பதனில்
ஏற்றிடுலாபத்திருந்தங்கிசபதி
போற்றுமெய்வீட்டினிற்புகிலதற்குடையோன்
கேர்த்தியகேந்திரத்துறினிச்சயமே.

(இ-ள்.) லாபத்திலிருந்த அம்சாதிபதி எந்தவீட்டிலாயினும்வா, அவ்வீட்டுக்குடையோன் கேந்திரத்திலிருக்கவும் எண்பது வயதிலேயே மரணமுண்டாம், எ-று. 790

நீச்சவெட்டாறுநிலவுடன்சன்மம்
இச்சைதற்குருவும்லாபமூன்றினில்
அச்சபாவர்தொடர்ந்தேயிருந்திடில்
அச்சமிதொண்ணூறென்பவிளம்புமே.

(இ-ள்.) எட்டு, ஆறாமிடங்களில் சந்திரனும், சன்மத்தில் குருவும், லாபத்திலும், மூன்றிலும் பாவிகளும் சேர்ந்திருந்தால் தொண்ணூற்று வயதில் மரணமாம், எ-று. 791

இறுஞ்சன்மாதிபதிமபலமுற
உறுஞ்சுபர்நோக்ககன்னிக்கேந்திரத்
துறினேலட்சுமிதொடர்ந்துவரசாய்
தெரிந்திடுநூறெனச்செப்புமாதவனே.

(இ-ள்.) சன்மாதிபதிக்கும் பலமிருந்து சுபர்சேர்க்கையுமடைந்து கேந்திரத்தி லிருந்தால் லட்சுமி தொடர்ந்து அரசனும் நூறு வயது வரைக்கும் வாழ்வன், எ-று. 792

எட்டாம்பாவம் முற்றிற்று.

ஒன்பதாம் பாவம்

பிதுர்ப்பலன்

ஈதுமைக்கொன்பானுதி கதிருடனேகூட
ஓதிடுங்காரிபார்க்க வுதம்பிதாவிற்கரிட்டம்
ஈதுமைக்கொன்பானுதிபதிகதிருடனேகாரி
ஆதிசேயிவர்தாமூன்றி லுற்றிடதந்தையுடனேபோமே.

(இ-ள்.) சொல்லும்படியான ஐந்து, ஒன்பதுக்குடையோர்கள் சூரியனுடன் கூடவும், சனி பார்க்கவும் பிதாவுக் கரிட்டமுண்டாகும். 5-6, அதிபர்கள் சூரியன், சனி, அங்காரகனிவர்களுடன் கூடி மூன்றிலிருந்தால் தந்தையுடனே மரிப்பன், எ-று. 793

உடன்சன்மலக்கினத்துத் தொன்பதிலெட்டிற்பத்தில்
முடவன்சேரிவியிற்த அரனிலொருவரிற்கத்
திடமுறுமிதாவுக்கினரு சன்மத்திற்செவ்வாயேழில்
அடல்கதிர்க்கையம்பொன்னுரக் காண்டுமூன்றிருப்பன்றந்தை.

(இ-ள்.) லக்கினத்திற்கு ஒன்பது ஐந்து பத்தாமிடங்களில் சனி, அங்காரகன் சூரியன் இம்மூவரில் ஒருவரிருந்தாலும் தகப்பனுக் கரிட்டமுண்டாகும். சன்மத்தில் அங்காரகனும் ஏழில் சூரியனும் இருந்தால் சந்தேகம். குருவுமிருந்தால் தந்தை மூன்றுவருஷ மிருப்பான், எ-று. 794

வேறு

தந்தைபதியிற் சனிநிற்கச்செவ்வாய்
தானுங்கேந்திரத்துறி லரிட்டந்தைக்
கந்தவனுக்கட்டமத்துறு சன்மாதியுடனும்
ஆதவன்செவ்வாய்கூடி யனுகிலோர்க்கரிட்டம்
பந்துசன்மத்துக்கைந் தொன்பானிற்பாவர்
பாம்புகேந்திரத்திலுறத் தந்தைக்கினம்
விந்தமலரண்பனுக்கேழ் சனிசேய்நிற்கில்
மேலோர்நோக்குறாதிருக்கில் வீயுமொன்பானே.

(இ-ள்.) பிதுர்ஸ்தானத்தில் சனியும், கேந்திரத்தில் அங்காரகனும் இருந்தால் தகப்பனுக் கரிட்டமுண்டாகும். அட்டமத்தில் சன்மாதிபனுடன் சூரியன் அங்காரகனும் கூடியிருந்தாலும் தந்தைக் கரிட்டமுண்டாம். சன்மத்திற்கு ஐந்து ஒன்பதாமிடங்களில் பாவிகளும், ராகு கேந்திரத்திலுமிருந்தால் தந்தைக் கேடுமுண்டாகும். சூரியனுக்கு ஏழில் சனியும், அங்காரகனு மிருந்தாலும் சுபர் பார்வையற்றிருந்தாலும் தந்தை மரிப்பன், எ-று. 795

வேறு

ஒன்பானிடத்திற்சனியைத்தி விரவியுடனே யுமுமபராம்பும்
அன்பாயிருக்கத்தந்தை தனக்கரிட்டமையா காமாதிபதி
இன்பமுச்சமாயிருக்கவில்லை யரிட்டம்பிணிகாட்டும்
பொன்பார்த்தருளச்சனியிராசி நின்றாற்பிணிபோகுமன்றே.

(இ - ள்.) ஒன்பதில் சனியும் ஐந்தில் சூரியனும் ராகுவுமிருந்தால் தந்தைக் கரிட்டமுண்டாகும். ஒன்பதுக்குடையோன் அஸ்தி உச்சம் பெற்றால் அரிட்டம் உண்டாவதில்லை, பிணிகாட்டும். இவர்களைக் குருபார்க்கும்படி சனியுஞ் சூரியனு மிருந்தால் நோய் நீங்கும், எ-று. 796

கண்டசனியுங்கதிரோனுங் கதித்தவோன்பானதிபனும்
அண்டியொருவீட்டினிலிருக்க வையர்க்கரிட்டமவனாம்பொன்
மண்டிநோக்கவத்ததி மனையோனுச்சமயிருக்க
பிண்டாய்சிலனாளிருந்தரிட்ட மேவுமிடம்போலவிழுமானே.

(இ - ள்.) சனியும், சூரியனும், ஒன்பதுக்குடையோனும் ஒருவீட்டிலிருந் தால் தந்தைக் கரிட்டமாம். அவரைக் குரு பார்க்கினும் ஒன்பதுக்குடையோன் உச் சமாயிருக்கவும் சிலநாள் சென்றபின் அரிட்டமுண்டாகும் பெண்ணே!, எ-று. ()

மானேபிதுர்காரகனொன்பான் மனைவியாதிபனுஞ்சனியாகித்
தானேபாவருடன்கூடத் தருபன்னிரண்டெட்டாறினுநத்
தேனேபிதுர்ஸ்தானந்தன்னிற் செம்பாம்பிருக்கவம்மனையில்
ஊனேசெறியுஞ்சனிவருநா ளுடனே தந்தைக்குமரிட்டம்.

(இ - ள்.) பிதுர்க்காரகனும், ஒன்பதுக்குடையோனுஞ் சனியாய் பாவருடன் கூடி பன்னிரண்டு, எட்டு, ஆறுமிடங்களிலும், பிதுர்ஸ்தானத்தில் கேதுவுமிருந் தால் அவ்வீட்டுக்குச் சனிவரும்போது உடனே தந்தைக் கரிட்டமுண்டாம், எ-று. 798

உறுஞ்சன்மத்திற்செவ்வாயுமொன்பா னிடத்திற்சனியிருக்கப்
பெறுந்தந்தைக்குவருமரிட்டம் பிதாத்தானதிபதியுடனே
குறுஞ்செவ்வாயுஞ்சனிமூவர் கூடியிருக்கலிலோர்கள்
அறிந்தெங்கேதானிருந்தாலு மையரகரிட்டமென்பர்.

(இ - ள்.) சன்மத்தில் அங்காரகனும், ஒன்பதில் சனியுமிருந்தால் தந்தைக் கரிட்டமுண்டாம். பிதுர்ஸ்தானாதிபதியுடன் அங்காரகன், சனி இவர் கூடியும் கபர்கள் எங்கிருந்தாலும் தந்தைக்கரிட்ட முண்டாம், எ-று. 799

என்பார்சன்மத்தனிற்காரி யிரவிசேர்மூவருமிருக்கத்
தன்பானைத்திற்குசனிருக்கத் தந்தைக்கரிட்டந்தானேனும்
அன்பார்குசன்செம்பாம்பிரவி பாசமூவருடன்கூடப்
பின்பாராமன்மூன்றாண்டிற் பிதாவுக்கரிட்டம்போமே.

(இ - ள்.) சன்மத்தில் சனி, சூரியன், சந்திரன் இம்மூவர்களும், ஐந்தில் அங்காரகனுமிருந்தால் தந்தைக்கரிட்டமுண்டாம். அங்காரகன், கேது, சூரியன் இவர் மூவரும் ஒன்றாய்க்கூடி நவாம்சோக்காரரனால் தந்தைக்கு மூன்று வருஷத் தில் அரிட்டமுண்டாம், எ-று. 800

யோகமெட்டோன்பதுபத்திற் பெரியபாவருறவென்பான்
சேகமெட்டாறெட்டியத்தி ற்றிகப்பலன் கனிக்கிற
தேசைமொன்பதிற்குசனை யுறவுக்கதிரோனுறிடினும்
விசமொன்பதினிற்பாவர் பெண்பிதாவெம்புவிர்பிரியும்.

(இ - ள்.) எட்டு, ஒன்பது, பத்தாமிடத்தில் பாவிகளும், ஒன்பதாமிடத் தான் எட்டு, ஆறில் பன்னிரண்டில் பாவர்களும் பகைமனிருக்கவும், ஒன்பதில் அங்காரகனுடன் சூரியனுடனிருந்தாலும், அதில் பாவிகளிருப்பினால் தந்தை இறப்பன், எ-று. 801

வேறு

பிரியமுடனேயொன்பதாமிடத் ததிபன்புடத்தில்
பெருகுஞ்சனிதன் மனைவராக்கிப் பெற்றிராசியிலே
... யனுர் தாமருவுங்காலம்
... வருடத்தில் வருமவர்தம்
குரிகாணுடையிதியவன் புடத்தைதவத்துக்கொண்டு
குலைமொன்பதாமிடத்தேதான் புடமதனைவாங்கிச்
செறியுமத்தராசியே மாதங்களாகத்
தெளிக்துமபிதாக்கிரியாணைக் கனியருளுவீரே.

(இ - ள்.) ஒன்பதுக்குடையோன் ஸ்புடத்தில் குளிகன் ஸ்புடத்தை வாங்க வரும் ராசியில் குருவருங்காலத்தில் அந்த வருடத்திற்குள் கிரியாணம் வரும். சூரியன் ஸ்புடத்தை வைத்துக்கொண்டு அதில் ஒன்பதாமிடத்தே தான் ஸ்புடத்தை வாங்க வரும் ராசி எதுவோ அதுவே மாதத்தில் தந்தை கிரியாணமாமென் றுரைப்பீராக, எ-று. 802

வேறு

அருணோதந்தைகாரகனையபதிதநுபலனகுணைசெப்ப
பரிதிக்கிருபுறமாமோனும் பாவிருக்கப்பாவர்களும்
குரிதாய்நோக்கமிருந்தாலுஞ் சொல்லுங்குழவிகருப்பத்தில்
தெரியவிருக்கப்பிதாவரிட்டஞ் செப்புக்கனிதவல்லோரே.

(இ - ள்.) பிதுர்க்காரகனையுணர்க்கு பலன்கள் சொல்லுதற்குச் சூரியனுக் கிருபுறங்களிலும் பாவிகள் இருந்தாலும் பார்த்தாலும் குழந்தை கர்ப்பத்தில் தெரியவிருக்கும்போதே தந்தைக்கரிட்ட முண்டாமென்று கணிதவல்லவர் சொல் லுவர், எ-று. 803

பாக்கியபலன் (வேறு)

உறுமொன்பதாமிடத்தே தான் வெகுபலனாகுமி
உற்றவிடத்ததிபதி கேந்திரத்திற்பாக்கியவான்

பெருந்தனத்தலைவ னதிகன் கீர்த்திமானரசர்
பிரியமுறச்சஞ்சரிப்பன் பிரதாபசாலி
அறிவுறுபாக்கியாதிபதிபிதிர் காரகனைக்கூடி
அறிவுறப்பிதாவுரை கேட்டருள் [illegible]ரிடுவன்பானை திபன்
புரியாமவிருந்த நவாங்கிசத்தாதிபதி[illegible]யப்
பிதுர்க்காரகன்பார்க்கக் குருபத்[illegible]ப்பிரியன்.

(இ - ள்.) ஒன்பதுக்குடையோன் பலவா[illegible]ய் இருந்த வீட்டுக்குடையோன் கேந்திரத்தானால் பாக்கியவானும், தலை[illegible]யைவிடக் கீர்த்திமானும் அரசன் விரும்ப வாழ்பவனும் பிரதாபசாலியும் பா[illegible]கியாதிபன் பிதிர்க்காரகனைக் கூடி அதிலிருந்தால் பிதா சொல்புத்தி கேட்பவனு[illegible], ஒன்பதுக்குடையோன் பிரியாம லிருந்த நவாம்சத்துக் குடையோன் வீட்டை[illegible] பிதுர்க்காரகன் பார்க்க குருபத் திப் பிரியனுமாவான், எ-று. 804

பிரியமுடன்பிறைக்கைந்தாம் வீடுசா[illegible]மாய்
பெருகியலக்கினத்துக் கைந்தாம்[illegible]டுசரமாய்
நிறையும்பூரணமான வயிச்சியவரிய[illegible]ன்பர்
நின்சரமுந்திரமாகி னிகழ்ந்துபலன்[illegible]டு
அருமைபெறுஞ்சரத்துபய மாகிற்காற்பங்காய்
ஐயிச்சுவரியமெனப்பகர்வ ரம்புலிக்குஞ்சனக்
குரிமனைமுதற்கொண்டு லக்கினத்துக்கைத்
குணமுடனேகண்டுபலன் கூறிடவேண்டும்.

(இ - ள்.) சந்திரனுக்கும் லக்கினத்திற்கும் ஐந்தாம்வீடு சரமானால் பூரண வயிசுவரியவானும், சரம் திரமானால் அரையயிசுவரியவானும், சரம் உபயமானால் கால் ஐசுவரியவானுமாம். ஆகையால் சந்திரனுக்கு லக்கினத்திற்கு ஐந்தாமிடத் தைக்கொண்டே இப்பலன் கூறவேண்டும், எ-று. 805

வேண்டியதோரொன்பதா மதிபதியுங்குருவும்
விரும்பியகேந்திரத்திரி கோணங்களிலேமனில்
ஆண்டதைகபாக்கியவா னிவரிருவருடனும்
அன்புடனொன்பானிடத்தி லனுகினும்பூவர்
பூண்டுவருமகாதிசைலாபாதி புசிப்பிலேதான்
பூரணபாக்கியஞ் சேருமேழாதிபனைத்
தீண்டியலாபாதியுமவாய்க் கூடினல்லோ
செறியுமனையுமிவர்க டிசையிற்பாக்கியமே.

(இ - ள்.) ஒன்பதுக் குடையோனும் குருவும் கேந்திர திரிகோணங்களில் இருந்தாலும் இவர்களோடு பாக்கியாதிபனுஞ் சேர்ந்து ஒன்பதிலிருந்தாலும் இவர்கள் மகாதிசையில் லாபாதிபன் புசிப்பில் பூரணபாக்கிய முண்டாகும், ஏழுக் குடையோனை லாபாதி சேர்ந்தாலும் அவன் சுபர்வீட்டிலிருந்தாலும் அவர்கள் திசையில் நல்ல பாக்கியமுண்டாம், எ-று. 806

மேயலாபாதிபமேழாதிப மித்துருவாய்
மேவினர்கள்வீட்டிலுறச் சன்மாதிபதியு
மாயுமிவர்மூவருமொன்றாய்க் கூடியிருக்கில்
ஐசுவரியஞ் சிவ[illegible]யமட்டுண்டென்னும்
மேயுமுடனொன்பதா ப[illegible]த்ததிபன்சாதி
இசைபுரிக்கே யவர்மா[illegible]ன்றிருபர்களினாலே
ஆயசவுபாக்கியங்கள் சே[illegible]ருமென்றேநல்ல
சோதிடநூலினையுணர்[illegible]தோர் சொல்வர்கண்டுமே.

(இ - ள்.) லாபாதிபதியும் [illegible]ழுக்குடையோனும் மித்துருக்களாய் சுபர் வீட்டிலும் சன்மாதிபனுங் கூடி[illegible] மூவரும் ஒன்றாய்க்கூடியிருந்தாலும் ஆயுள் வரைக்கும் ஐசுவரியமுண்டாம்[illegible] ஒன்பதுக்குடையோன் சாதிபதித்து அவர் மாபின் அரசரால் சவுக்கியங்க[illegible]ண்டா மென்று நல்ல சோதிட நூலுணர்ந்தோர் சொல்லுவர், எ-று. 807

களத்திரலாபாதிபதி [illegible]க்கியாதிபனும்
களத்திரத்தான[illegible]திருக்கப் பாக்கியலாபத்தான்
[illegible] மாகி [illegible] கேந்திரமாயுச்சவீடாக
[illegible]திபன் சுபக்கிரகமாகி
மண்டியபாக்[illegible]லாபத்தானத்திலிருக்க
வரும்பலபாக்கியமவன்றன் மனைவிக்குஞ்சுகமாம்
இன்மதலாக்கோளியதா மிவர்களொடுஞ்சான்றோர்
சேர்ந்திடும்பாவாதிபர்க்குஞ் செல்வஞ்சேரும்.

(இ - ள்.) லாபாதிபனும், பாக்கியாதிபனும் களத்திரஸ்தானத்திருக் கவும் பாக்கிய லாபஸ்தானங்கள் கேந்திரமாயும் உச்சமாயுமிருந்து ஏழுக்குடை யோன் சுபனாய் பாக்கிய லாபஸ்தானங்களிலிருக்கவும் பாக்கியம்பெருகும் அவர் மனைவிக்குஞ் சுகமுண்டாகும். இவர்களுடன் சேரும் பாவிகட்குஞ் செல்வஞ் சேரும், எ-று. 808

சேருமொன்பானிடத்திருந்த பாக்கியவாதிபனும்
திறல்குருவுநீசமத்தமனைத்தெரியக்
கூறியபாவியுமாய்ச் சத்துருவீட்டிலிருக்கக்
குலவுவியமாறெட்டிற் கூடியுநின்றாலும்
சேரும்பாக்கியகட்டம் பாக்கியவாதிபனும்
திருபனுகின்றிடுவீட்டோ னீசமத்தமனமாய்
பாரினிலிரப்பான் பாக்கியாதிகுருவுடனே
பாவிகள்கூடினும்புசிப்பன் பலிகரந்திலெடுத்தே.

(இ - ள்.) ஒன்பதுக்குடையோனும், பாக்கியாதிபனும், குருவும், நீச அத் தமனங்களிலும், பாவிகளுமாய்ச் சத்துரு வீடுகளிலும், பன்னிரண்டு, ஆறு

எட்டாமிடங்களிலும் கூடி நின்றால் பாக்கியம் கஷ்டமாகும். பாக்கியாதிபதி யும் குருவுமிருந்த வீட்டுக்குடையோன் நீசம் அஸ்தமனமானால் இரந்துண் பன். பாக்கியாதிபன், குரு இவர்களுடன் பாவிகள் கூடில் கையில் பலி யெடுத்துப் புசிப்பான், எ-று. 809

வேறு

எடுத்தபத்தாமதிபதியேழினை
கடுத்தமித்திர ராகிப்பலனுடனா
கொடுத்தவுத்தமர் வீட்டினிற்சூழ்ந்திட
படைத்தபாரியினால்வரும் பாக்கியம்.

(இ-ள்.) பத்துக்குடையோனும், ஏழுக்குடையோனும் மித்துருக்களாய்ப் பலத்துடன் சுபர்வீட்டிலிருந்தால் மனைவியால் பாக்கியமுண்டாம், எ-று. 810

வேறு

பாக்கியஞ்சேர்வகை பிருகுபதியாசசி கூடிப்
பத்தாமிடத்திற்கும் பலன்றனைவாய்பவன்
தேக்கியசத்தியவசனன் கல்விசெறிபுகழ்வன்
இராஜாவெகுமானஞ் செய்யமகிழ்ந்திடுவன்
தாக்கியபொன்சனி புதமதிசெவ்வாயைச்சேரனத்
தாமொருவீட்டினிலிருக்கத் தனவானுமாகி
ஊக்கமுமுமுடியரசர் சன்மானஞ்செய்ய
உலகில்வெகுபாக்கியமு முண்டாங்கண்டீர்.

(இ-ள்.) சுக்கிரன் சந்திரன் குரு இவர்கள்கூடிப் பத்தாமிடத்திலிருந் தால் தனவானும், சத்திய வசனனும், கல்விமானும், ராஜவெகுமானம் பெறு வோனும் குரு சனி புதன் சுக்கிரன் அங்காரகன் இந்த ஐவரும் ஒரு வீட்டிலிருந் தால் தனவானும், அரசசன்மானனும், வெகு பாக்கியவானுமாவான், எ-று. 811

வேறு

கண்டபத்தாமாதிபதி கருதுமுச்சர்வீட்டிலிருந்
தண்டிப்பத்தாமிடம்பார்க்கிலவன் பூமியினுண்டாஞ்செல்வம்
மீண்டுநீசசத்துருக்கள் வீட்டிலிருந்தேதமிகநோக்க
அண்டுந்துராதேசத்து மந்நியராலுமைசுவரியம்.

(இ-ள்.) பத்துக்குடையோன் உச்சர்வீட்டிலிருந்து பத்தைப்பார்த்தால் பூமியினால் செல்வமுண்டாம். நீசர் சத்துருக்கள் வீட்டிலிருந்து பார்த்தால் தூரதேசத்தாலும் அன்னியராலும் ஐசுவரியமுண்டாம், எ-று. 812

ஒன்பதாம்பாவம் முற்றிற்று.

பத்தாம் பாவம்

கன்ம பலன்

பத்தாமிடத்திலட்டமத்தோனும் பாவருடனேகூடிநிற்கப்
பத்தாமதிபன்பெறவே பாவர்பார்க்கத்துர்க்கன்மம்
பத்தாமதிபன்பலவானுடன் சுபக்கோளுடனும்பரிந்தேழில்
ஒத்தவன்ஜென்மத்தி லிருந்திடுங்கருமமுளனாவன்.

(இ-ள்.) பத்தில் அட்டமாதிபதி பாவிகளுடன் கூடியிருந்து பத்துக்கு டையோன் பலம்பெற்று பாவிகள் பார்த்தால் துர்க்கர்மமுண்டாம். பத்துக்குடை யோன் பலவானாய் சுபர்களுடன் கூடி ஏழிலும், நாலிலும், ஜென்மத்திலுமிருந் தால் சற்கருமமுண்டாம், எ-று. 813

ஆறன்ஞானிசனிகாவிலமர்ந்தா லத்தச்சனிபத்தில்
மேவித்தீர்த்தயாத்திரை யை விரும்பித்தவமேவிரும்பிடுவன்
தாவுற்சன்மாதிபன்பத்திற் றாக்கிற்கன்மமுளன்பத்தில்
கோவுங்கன்மகாரகனும் பலமிற்கன்மங்குறைவில்லான்.

(இ-ள்.) சனி காவிலிருந்தால் ஞானியும் பத்திலிருந்தால் தீர்த்தயாத்தி ரையை விரும்பித் தவம் புரிபவனும், ஜன்மாதிபன் பத்திலிருந்தால் கர்மியும், பத்தில் குருவும், கர்மகாரகனும் பலப்பட்டிருந்தால் குறையாத கர்மமுடையவனு மாவான், எ-று. 814

குறைவிலோன்பதாமிடத்திற் கோவும்பலமாய்ச்சுபர்வீட்டில்
உறையச்சுபக்கோள்பார்க்க மதியுந்துசலராசியிலிருக்க
நிறைந்ததகங்காதிதோயமவன் பின்னுமிலவுச்சம்பெறவே
அறையும்பத்திற்சுக்கிரனுந் தீர்த்தம்பலவுமாடுவானே.

(இ-ள்.) ஒன்பதில் குரு பலப்பட்டுச் சுபர் வீட்டிலிருந்தாலும் சுபர்பார்த் தாலும்; சந்திரன் சலராசியிலிருந்தாலும், கங்காதீர்த்தமும், சந்திரன் உச்சம் பெற்றுச் சுக்கிரன் பத்திலிருந்தால் பல தீர்த்தங்களுமாடுவான், எ-று. 815

வேறு

ஆடிடும்பத்தாமதிபன் சுபருடன்
கூடிமற்றிருபாலுற்ற கோற்றவர்
நீடிநிற்கநிரந்தர மன்பொடும்
தேடியேசிவ பூசைகள்செய்வனே.

(இ-ள்.) பத்துக்குடையோன் சுபருடன்கூடி மற்ற இரண்டு பக்கங்களிலு முள்ளவர்கள் நீடியிருக்கச் சதா சிவபூஜை செய்வான், எ-று. 816

செய்யசந்திரன் சன்மந்தனக்குமே
துய்யபத்தா மதிபர்சூழ்ந்திடும்
மெய்யிலங்கிசையோன் பலமேபெறில்
பொய்யறச்சுப கன்மம்புரிவனே.

(இ - ள்.) சந்திரன் சன்மத்திலும் பத்துக்குடையோன் அங்கிசத்திலு மிருந்து பலப்பட்டால் சுபகர்மம் செய்வான், எ-று. 817

புகர்குருசேய்சனி பொன்மால்பதிக்குமே
பரிவுடனொரு வீட்டினைப்பற்றிட
அரியசற்குண சன்மார்க்கனாகிய
தெரிவருஞானச்சிந்தைச் சிவயோகியாம்.

(இ - ள்.) அங்காரகன் சனி குரு புதன் சுக்கிரன் இவர்கள் ஒரு வீட்டி லிருந்தால் சிவயோகியாவான், எ-று. 818

வேறு

ஆமெனும்பத்தாதிபனற்கோளேயாய்த் தனலாபபாக்கியத்தில்
சீமையாயுச்சகேந்திரங்களிலிருக்க நற்கன்மமேபுரிவதில்
தோமுறும்பாவனுநீசமத்தமனுமச் சொல்லும்மாறெட்டீனிரண்டியத்தில்
தாமுறினல்லோர்தம்மையும்பழித்துத் தக்கதுர்க்கன்மமேபுரிவன்.

(இ - ள்.) பத்துக்குடையோன் சுபனாய் தனம் லாபம் பாக்கியம் உச்சம் கேந்திரத்தி லிருந்தால் நற்கருமமும்; அவன் பாவியாய் நீசம் அத்தமனம் ஆறு எட்டு பன்னிரண்டாமிடங்களிலு மிருந்தால் நல்லவர்களையும் நிந்தித்து துர்க்கர்ம முஞ் செய்வான், எ-று. 819

புரியுமீரைந்தாமதிபனற்கோளாய்ப் புகலபலவானுமாய்ப்பத்தில்
தெரிவுற்றிடில்யாகாதிகன்மங்கள் செய்வனீராறிடத்ததிபன்
பரிவுடன்வியத்தானத்தைக்கூடிப் பண்புறுஞ்சுபபலமுடனே
அரியதோர்வியத்திலுறத்தனபதியா யனைத்தகன்மமேசெய்வன்.

(இ - ள்.) பத்துக்குடையோன் சுபனாய், பலவானுமாய் அதிலேயே யிருந் தால் யாகாதி கர்மங்களும், அவன் பன்னிரண்டுக்குடையோனைக் கூடி சுப பலத்துடன் பன்னிரண்டிலிருந்தால் மிக்க செல்வமுடையவனாய்ச் சுபகர்மமுஞ் செய்வான், எ-று. 820

செய்யகன்மாதிகுருவுமாயுச்சஞ் செறிந்தசுக்கிரனுடன்கூடில்
துய்யயாகாதிகன்மமேபுரிவன் சூழ்ந்தகன்மாதிபத்தானும்
பய்யவேகுருசுக்கிரனுமேபார்க்கில் பண்ணுவன்யாகமேபலவும்
மெய்யகன்மாதிகுருவுமாய்நல்லோர் வீட்டிலிருப்பினும்யாகமே.

(இ - ள்.) கர்மாதிபதி குருவாய் அவன் உச்சம்பெற்ற சுக்கிரனுடன்கூடி னால் யாகாதிகர்மங்களும், கர்மாதிபதியை குருவும் சுக்கிரனும் பார்த்தால் யாகம் பலவும், கர்மாதிபதிகுருவாய் சுபர்வீட்டிலிருக்கவும் யாகமேவிரும்பிச் செய் வான், எ-று. 821

விரும்புசுக்கிரனுங்குருவுமே பலமாய்மேவும் வீட்டதிபனற்கோளாய்
இரும்பலவானுமிருக்கமற்றவரோ டெத்தனைசுபக்கிரகங்கள்
பொருந்தியுமுடனேகூடினவிருக்கும் பெருமகம்புரிவனென்றுரைக்கும்
அரும்புகன்மாதிகுருவுமாய்ப்பலமேயாகில் வேதங்கள்மூன்றறிவன்.

(இ - ள்.) சுக்கிரனும் குருவும் பலமாய் யிவர்களிருக்கும் வீட்டுக்குடை யோன் சுபக்கிரகமாயும் பலவானுமாயிருந்தால் அவரோடு எத்தனை சுபக்கிரகங்க ளிருக்கின்றனவோ அத்தனை யாகஞ் செய்வான். அன்றி கர்மாதிபதி குரு வாய் பலப்பட்டிருந்தால் மூன்று வேதங்களறிவானவன், எ-று. 822

அரியகன்மாதிபாவனும்பாவ ரகத்திலிருந்துகன்மத்தைக்
குறியுடன்பார்க்கிற்றுத்திரகன்மங் கூடிடப்பாவதுர்க்கன்மம்
செறியுடன்புரிந்திங்கிசைபெறவிருப்ப னிறைநந்திடுங்குருசாதகமும்
செறியுமல்வினையாற்சுபபலத்துற்றிதாக் கிஞ்சுபமின்றிரானமே.

(இ - ள்.) கர்மாதிபதி பாவியாய் பாவர்வீட்டிலிருந்து கர்மஸ்தானத்தைப் பார்த்தால் ருத்திரதுர்க்கர்மமுண்டாம். அதனால் அநேக நிந்தைகள் புரிந்திருப் பன்; நீசபலம் அதிகமும், சுபபலம் கொஞ்சமுமாயிருக்கும், எ-று. 823

சிரமுறுமொன்பானதிபதிகுருவாய்ச் செய்யவொன்பதிற்குருவுறினும்
வரமுறும்பலர்களிடத்துபதேச வசனமும்வித்தையும்பெறுவன்
உரமுடனொன்பானதிபதிமாரி லுறையுபதேசமும்பெறுவன்
பரமுறுமிவர்களுச்சகேந்திரத்திற் பற்றிடஞானமேபலிக்கும்.

(இ - ள்.) ஒன்பதுக்குடையோன் குருவாய் அதிலிருந்தால் பலபேரிடத் தில் உபதேசமும் பெறுவன் இவர்கள் உச்சகேந்திரத்தி லிருந்தால் ஞானமுண் டாகும், எ-று. 824

வேறு

பலிக்குமேடமிடபமுடன் பகர்ந்தசிங்கம்பத்தாக
வலிக்குஞ்சுபக்கோளின்முடிநு மன்னுமவர்நோக்குறினும்
ஒலிக்கும்வேதமதிற்சொன்ன வுத்தமத்தன்மங்கடனைச்
சலிக்கச்செய்வினைசொல்வர் தக்ககணிதவல்லோராம்.

(இ - ள்.) மேஷம் ரிஷபம் சிங்கம் பத்தாமிடங்களில் சுபக்கிரகங்க ளிருந் தாலும் அவர் பார்த்தாலும் வேதத்தில் சொல்லிய தர்மங்களையெல்லாம் செய்து முடிப்பானென்று சொல்லுவர் பெரியோர், எ-று. 825

ஆகுஞ்சன்மலக்கினத்தி லனுகும்பாகுமேழில்
வேகமுடனே தானிருக்க வேண்டுங்கேந்திரங்களிபுகர்
தாகமுடனேபுதன் மூவர் தானுங்கூடச்சண்டாள
யோகமெனவேதானுரைப்ப குன்மைகன்மகாசாரம்.

(இ - ள்.) ஜென்மலக்கினத்திலிருக்கும் ராகு ஏழிலிருந்தாலும், கேந்திரத்தில் சனியும், சுக்கிரன், புதனிவர்கள் கூடினாலும் சண்டாள யோகமாம். அநாசார கர்மமுண்டாம், எ-று. 826

உண்மைபாக்கியாதிபனு முற்றேஜென்மத்துடனிரும்
வண்மைபெறவேயோரைந்தில் வந்துசுபக்கோள்நோக்கமில்லாத்
திண்மையாநிலொருமூன்றில் தீயோர்வந்தா லுனையிய
எண்மையுடனே யநாசார மதுசீசக்கன்மியவனே.

(இ - ள்.) பாக்கியாதிபனும் ஜென்மசூரியனும் ஐந்தில் வந்து சுபக்கோள் பார்வையில்லாமலும், ஆறிலும் மூன்றிலும் பாவிகளுமிருக்க அநாசார நீசகர்மியாவான், எ-று. 827

சந்நியாசி யோகம் (வேறு)

தேசுடையபத்தாமாதி நான்கிடத்திளிலிருக்கச்
செப்பியலாபாதிபதி திரிகோணத்தெய்தப்
புச்சனுமம்பாம்பல்லா தொருநான்குகிரகம்
பொருந்திப்பத்தினிலிருக்கும் போதுசந்நியாசியுமாம்
இசைகொளுனாம்வீடு முதற்பத்தாமீஸ்மட்டு
மேசேருவீட்டிலுங்கோ ளொழியாமலிருக்கில்
காசினியில்வாழ்பவர்க்குத் தேசிகனேயாகித்
துதித்திடுசந்நியாசியென வேகருதல்வேண்டும்.

(இ - ள்.) பத்துக்குடையோன் நாலிலும், லாபத்துக்குடையோன் திரிகோணத்திலும், ராகு கேதுக்களல்லாது நான்குகிரகங்கள்சேர்ந்து பத்திலுமிருந்தால் சந்நியாசியோகமாம், நான்குமுதல் பத்தாம் வீடுவரைக்கும் கிரகங்கள் நீங்காதிருந்தால் சந்நியாசியில் குருவாகவும் வாழுவான், எ-று. 828

வேண்டுஞ்செவ்வாய் ரவிமதிமூவர்கூடி
விரும்பபத்தாமிடத்திருக்க மின்னேர்போன்றனைக்கும்
சண்டியதோர்விரிவில்லாச் சந்நியாசியாவன்
இனியபுதன்சநிசேர் வுச்சமாயிருக்கத்
தாண்டுவியத்தானத்திற் சுக்கிரனேயிடவும்
சனியொருவனுநிற்கக் கிரணனைப்பார்க்கப்
பூண்டுவருஞ்சன்மமுத லாதியத்தமாகப்
புகழ்ந்திடுசந்நியாசியெனப் போற்றிடவிருப்பன்.

(இ - ள்.) அங்காரகன் சூரியன் சந்திரன் இம்மூவர்கூடி பத்திலிருந்தால் சந்நியாசியாவான். புதனும் சூரியனும் உச்சமாயும் சுக்கிரன் பன்னிரண்டிலும் சநி தனியனாய்ச் சுக்கிரனைப் பார்த்தாலும் பிறந்ததுமுதல் மரணம் வரைக்கும் சந்நியாசியாயே யிருப்பானென்று சொல்லும்படியிருப்பன், எ-று. 829

பத்தாம்பாவம்

முற்றிற்று.

பதினோராம்பாவம்

ஆதாய பலன்

வியமாறெட்டாதிபன்கூடி மேவினுந்தனியேனும்
நயமாய்ப்பாவத்துறிற்பாவர் நண்ணிற்பார்க்கிலாபமில்லை
சுபலாபாதியுச்சனுமாய்ச் சுபர்மத்தியிலேதானிருக்கில்
சுபலாபத்திற்சுபரிருக்கச் சாரும்லாபத்திரளாக.

(இ - ள்.) பன்னிரண்டு ஆறு எட்டாதிபர்கள் சேர்ந்திருந்தாலும் தனியாயினும் 11-ம் பாவத்திலிருந்தாலும், பாவர்களிருந்தாலும் பார்த்தாலும் லாபமில்லை. லாபாதிபதி உச்சனாய்ச் சுபக்கிரகங்களின் மத்தியிலிருந்தாலும் லாபத்தில் சுபரிருந்தாலும் அளவற்ற லாபமுண்டாகும், எ-று. 830

திரலாபாதியுச்சத்திற் செறிந்துலாபத்தினிலிருக்க
மரவாய்ச்சன்மாதிபன்பலமாய் மருவலாபம்வருஞ்சகிப்பன்
விரவாய்லாபாதிபனிருந்த வீட்டுக்கிறைகேந்திரமேவ
உரவோரவனைக்கூடக்கண் டுறலாபங்களுண்டாமே.

(இ - ள்.) லாபாதிபதி உச்சத்திலிருந்து லாபத்திலுமிருந்தாலும் ஜென்மாதிபதி பலப்பட்டிருந்தாலும் மிகுந்த லாபமுண்டாம். லாபாதிபதியிருந்த வீட்டுக்குடையோன் கேந்திரத்திலிருக்க அவனை மித்துருக் கிரகங்கள் பார்க்க மிகுந்த லாபமுண்டாகும், எ-று. 831

உண்டாம்லாபாதிபனிருக்குந்திக்கிற் பலன்களுரைசெய்வாம்
திண்டாமரைக்கண்பனிழுக்குத் தருஞ்சுக்கிரற்கக்கினிமூலை
கண்டாய்குசன்சன்றெறக்காமூலை காரிமேற்குச்சசிவாயு
கொண்டேயிருக்கும்புதன்வடக்கு குருவீசானங்கொண்டுவரும்.

(இ - ள்.) லாபாதிபதியிருந்த திசையின் பலனைச்சொல்லுங்கால் சூரியனிருந்தால் கிழக்கிலும், சுக்கிரனுக்கு அக்கினி மூலையிலும், அங்காரகனுக்கு

தெற்கிலும், ராகுவிற்கு நிருதி மூலையிலும், சனிக்கு மேற்கிலும், சந்திரனுக்கு வாயுமூலையிலும், புதனுக்கு வடக்கு மூலையிலும், குருவுக்கு ஈசானமூலையிலு மிருக்கே லாபம் வருமாம், எ-று. 832

வரும்லாபாதிபன் லாபத்தானத்திலிருந்தோன்
மதிபிரவியிவர்நால்வர் மகிழ்பலமேபெற்றுப்
பெருமையுள்ளோர்வீட்டினின்ற கிரகத்தோடிருக்கப்
பெறும்வீட்டுக்கதிபதியுமே பலவானாயின்
இருநிதிகனன்றாய்ப்பலிக்கு மயிஸ்வரியனாவான்
கிட்டியிவர்மகாதிசையிற் றினந்தனங்கள்சேரும்
தரும்லாபாதிபனிரவியாகி மதியுடனும்
தான்கூடப்பார்க்கவெகு தனலாபமுண்டாம்.

(இ-ள்.) லாபாதிபதியும் அவ்விடமிருந்தவனும், சந்திரனும் சூரியனும் ஆகிய நால்வரும் பலப்பட்டுப் பெருமையுள்ளோர் வீட்டிலிருப்பவரோடு கூடியிருக்கப் பெறும் வீட்டுக்குடையோனும் பலவானானால் பயிர் நன்றாய்ப் பலிக்கும். ஐஸ்வரிய முள்ளவனாவன். அன்றி இவர்களுடைய மகாதிசைகளில் மிக்க செல்வம் சேரும். அன்றி லாபாதிபதி சூரியனாயிருந்து சந்திரனுடன் கூடினும் பார்க்கினும், தானுமே லாபத்தைப் பார்க்க மிக்க செல்வமுண்டாம், எ-று. 833

உண்டானலாபாதிபதி யாகுஞ்சசியை
உம்பர்கோனுங்குருவும் முகந்துநோக்க
மீண்டானசகலபாக் கியலாபஞ்சேரும்
மிக்கலாபாதிபெயவர் வீட்டிலிருந்தாலும்
கொண்டாடுமவரவர்க்கு வெகுலாபமுண்டாம்
குறித்தஜென்மாதிபன்லா பத்தானத்திருக்கவு
கண்டாயமொழியாய் லாபாதிநின்றதிசையில்
கருதியலாபங்கள்வரும் காணுமெனப்புகல்வார்.

(இ-ள்.) லாபாதிபதியான சந்திரனைக் குருபார்த்தாலும் சகல பாக்கியமுஞ் சேரும். அன்றி, லாபாதிபதியார் வீட்டிலிருந்தாலும் அவரவர்களுக்கு மிக்க லாபமுண்டாகும். அல்லாமல் ஜென்மாதிபதி லாபத்தானத்திலிருக்கவும் லாபாதியிருக்கின்ற திசையில் நினைத்த லாபங்களெல்லாம் கைகூடுமென்று சொல்லாய் பெண்ணே! எ-று. 834

பதினோராம்பாவம்

முற்றிற்று.

பன்னிரண்டாம் பாவம்

கூறியவியத்திற்காரி சனிகதிர்குருசேய்வெள்ளி
ஏறிடிற்குழவியன்னை பிதாமகன் றுணைவரில்லாள்
ஆறுபேருக்கிட்டமப்பதிசாமேற்றீதாம்
மாறிலாவவர்நிச்ச நன்றெனவழுத்துவாரே.

(இ-ள்.) பன்னிரண்டாமிடத்தில் சனி சந்திரன் குரு அங்காரகன் சுக்கிரன் இவர்களிருந்தால் பிள்ளை தாய் தகப்பன் சகோதரர் மனைவி இவ்வறுவருக்கும் அரிட்டமாம். அந்த வீடு சமமானால் தீதாம். அவ்வீடு உச்சமானால் நல்லதென்று சொல்லுவார்கள், எ-று. 835

வார்மைசேர்வியத்தானத்தில் மன்னவன்றபர்கோனாகிச்
சீர்மைசேர்கேந்திரத்து மூலர்த்துச்செறிந்துநிற்கில்
யார்மைசேர்வியத்தினல்லோ பரிக்குறிப்பார்க்கில்மேலாம்
கூர்மைசேர்பரியங்கத்திற் குலவுபூச்சாங்கள்கூடி.

(இ-ள்.) பன்னிரண்டாமிடத்தில் குரு சுபனாகி கேந்திரத்திலும், உச்சத்திலுமிருந்தால் அவ்விடத்தில் சுபக்கிரகங்கள் இருந்தாலும் பார்த்தாலும் மிக்க மேன்மையுண்டாகும், எ-று. 836

குழும்செம்பட்டுமெத்தைத் தூக்கமேற்கட்டிதூபம்
தாழுஞ்சங்கிலிவிற்றொங்குஞ் சப்பிரமஞ்சமீது
ஏழுகல்லிசையாள்கொண்டே யேந்திமைமாரிசைப்ப
வாழுமன்னவனுமென்று வழுத்துவர்மறைவல்லோரே.

(இ-ள்.) சங்கிலியாற்கட்டி ஊஞ்சலாடும் மஞ்சத்து செம்பட்டு மெத்தைமீது வீற்றிருக்க பெண்கள் இனிய இசைவாசிக்க வாழும் மன்னவனவனென்று பெரியோர் சொல்லுவர், எ-று. 837

வல்லதோர்வியத்தானதி மற்றுமெட்டாமிடத்திற்கச்
சொல்லியசனியும்பாம்புஞ் சூழ்ந்துபன்னிரண்டினிற்க
நல்லவர்பார்வைசற்று மயத்திடாதிருக்கிற்பாரில்
புல்லதுமெத்தையாக விருந்திடுவன்போந்தே.

(இ-ள்.) பன்னிரண்டிக்குடையோன் எட்டு ஆறாமிடங்களிலும் சனியும் ராகுவும் பன்னிரண்டிலிருந்து சுபர் பார்வையைப் பெறாதிருந்தால் புல்மெத்தையில் சயனித்திருப்பான், எ-று. 838

விரையபலன் வேறு

போந்தசெயபாக்கியத்தாதி பொருந்துபன்னிரண்டின்மேவ
ஏத்தும்பதிநிர்லாபாதிபதி யிருவர்தமக்குமுறவாக

ஆர்த்தபி திரின்றனம்போல வதிர்த்துவிருணம்பொன்றேடி
வேர்த்தனுவன் மைந்தருக்கு மிவைக்கீதவிருக்கும் வெருதனங்கள்.

(இ - ள்.) பாக்கியாதிபதி பதினொன்றிலும், பிதுர்க்காரகன் லாபாதிபதி இவ்விருவருக்கும் உறவாயிருந்தாலும் பிதுரின் செல்வம்போல் பொன்தேடி வேர்த்தனுவன். அச்செல்வம் தன் புத்திரர்க்கும் விருத்தியாயிருக்கும், எ-று. 839

வேறு

கோலலாபக் குரிசில்வியத்துற
மேலவியத்தனும் மேவுதனத்துற
ஆறுமேதனத் தாதிபலமறச்
சாலமன்னர் தனங் கொள்வர்தண்டமாய்.

(இ - ள்.) லாபாதிபதி பன்னிரண்டிலும், பன்னிரண்டுக் குடையோன் தனத்திலும், தனாதிபதி பலமற்று மிருந்தால் தன் தனத்தை மன்னர்கள் தண்டமாய்க் கொள்வர், எ-று. 840

மாய்வியத்தனும் வித்துதனத்துற
மெய்த்தனாதி வியத்தனிலேயுற
நேர்சென்மாதி நிர்க்கணமன்றினாய்
தாய்தனங்களெல் லாந் துரைகொள்வாரே.

(இ - ள்.) பன்னிரண்டுக் குடையோன் தனத்திலும், தனாதிபதி பன்னிரண்டிலும், சென்மாதிபதி நிர்க்கணமுமானால் துரைகள் இவன் தனத்தைக் கொள்வர், எ-று. 841

கொள்ளுமீரண்டாமதிபதியுங் குலவுலாபக்கிசாதிபதியும்
மெள்ளக்கூடிப்பலமறவு மெய்யாதிபனுந் தூர்ப்பலமாய
உள்ளிருக்கவன்றேடு முடைமைப்பொருள்களுள்ளவெல்லாம்
கள்ளராசராக்கினியுங் கதர்ந்துகொள்வர்கண்டாயே.

(இ - ள்.) இரண்டுக்குடையோனும், லாபக்கிரகாதிபனும் கூடிப் பலமற்றும் சரீரகாரகனும் அற்பலமாயிருந்தால் அவன் தேடிய பொருள்களெல்லாவற்றையும் கள்ளர் அரசர் அக்கினி இவர்கள் கொள்வார்கள், எ-று. 842

வேறு

கண்டபன்னிரண் டாமிடக்காவலன்
கொண்டலக்கின மேழிற்குடிகொள
மண்டுபொன்னணி தானியமாதியும்
கெண்டைபோல்விழிக் கின்றுசுவைந்தியே.

(இ - ள்.) பன்னிரண்டுக் குடையவன் லக்கினம் ஏழாமிடங்களிலிருந்தால் கெண்டைபோலுங் கண்ணாய்! பொன்னாபரணம் தானியம் இவைகள் மாறிப்போம், எ-று. 843

வஞ்சியேபத் ததிபதியானவனும்
விஞ்சியேபல னன்றிவியத்துறில்

அஞ்சியைம்ப தாம்வயதாவன்
தஞ்சமான தனங்கள்வழுவுமே.

(இ - ள்.) பத்துக்குடையோன் பாவியாய் பலமற்றுப் பன்னிரண்டிலிருந் தால் ஐம்பதாவது வயதில் அவனுடைய தனங்களெல்லாம் அழியும், எ-று. 844

வேறு

வழுத்தியபன்னிரண்டா மனைக்குமன்பாவனுதி
அழுத்தியவவினைப்பாவ ராறுகிடும்பார்த்துநிற்கப்
பழுப்பொரோப்பாவிசிந்தை முயற்சியாலவன்பொன்னெல்லாம்
இழுக்குறக்கொழிதுள்ளார்க்கே யீந்தவன்கீர்த்திபெய்பன்.

(இ - ள்.) பன்னிரண்டுக் குடையோன் பாவியாய் அவனோடு பாவிகள் சேர்ந்தும் பார்த்துமிருந்தால் அவன் தன்னுடைய செல்வத்தையெல்லாம் பாவிகளுக்குக் கொடுத்துக் கீர்த்திபெறுவன், எ-று. 845

ஏற்கவேபன்னிரண்டி லிரசுணியன்வெள்ளிதாய
நீர்க்கசந்திரன்பொல்லாத சேராதபுதனிந்நால்வர்
மார்க்கமாய்கூடிற்றன்ம வகைதனிற்செலவாமென்று
லக்காற்சுருதிவல்ல வேதியரோதினாரே.

(இ - ள்.) பன்னிரண்டில் குரு சுக்கிரன் வளர்பிறைச்சந்திரன் பாவிகளைச் சேராத புதன் இவர்கள் கூடினால் தர்மவிஷயத்தில் செலவாகுமென்று சுருதி வல்ல பெரியோர் சொல்லுவர், எ-று. 846

ஓதியபன்னிரண்டா மதிபனோடுற்றபாவர்
மீதியாகல்லோர்வீட்டி லிற்கினல்லோரைக்கூடில்
நீதமாப்பலவானாகத் திகழ்வியத்ததிபன்றண்டில்
போதவேசெம்பொன்றேடிப் புதைப்பன்மற்றொருவர்க்கீயான்.

(இ - ள்.) பன்னிரண்டுக்குடையவனோடு சேர்ந்த பாவிகள் சுபர்வீட்டிலிருந்தாலும் அவர்களுடன் கூடினாலும், பலப்பட்டிருக்கும் பன்னிரண்டுக்குடையோன் அதிகமாயிருக்கப் பொன்னைத் தேடி ஒருவருக்கும் ஈயாமல் புதைத்து வைப்பன், எ-று. 847

ஆனதோர்பாக்கியாதி தனாதியைந்தாமிடத்தும்
ஊனமில்லாத்தமாதி யொன்பதிலிரண்டிலிற்கத்
தானமிம்மூன்றுமேபெருமிலக்கினத்தானினிற்க
ஈனமிலவன்பொன்னெல்லாங் கடன்கொடுத்திகழ்ந்துபோவான்.

(இ - ள்.) பாக்கியாதிபனும் தனாதிபதியும் ஐந்திலும் ஐந்துக்குடையோன் ஒன்பதிலும் இரண்டிலுமிருக்க அன்றி மூவருங்கூடி லக்கினத்திலிருந்தால் அவன் திரவியங்களையெல்லாம் கடனாகக்கொடுத்திருப்பன், எ-று. 848

வன்புறுமீரண்டாமாதி மார்க்கான்டனுடனேகூட
இன்புறுவியத்தானாதி யினியீரண்டிடத்தினிற்கத்

அன்புறுமட்டமத்தி லாபாதிகூழ்ந்துநிற்கப்
பொன்பலவெல்லாஞ்சேதம் போய்விடும்புகழுமில்லான்.

(இ - ள்.) இரண்டிக்குடையோன் சூரியனுடனும், பன்னிரண்டிக்குடை யோன் சுபருடன் இரண்டிலும், அட்டமத்தில் லாபாதிபனுமிருந்தால் பொன் னெல்லாமழியப் புகழில்லாதவான், எ-று. 849

வேறு

புகழும்வெள்ளியும் பொன்னும்பிறைதனை
மகிழுநோக்குற மந்தனாலத்தற
திகழும்லோகத் தனமுடனோவியோர்
இகழுமொருகாசொன்றுமில்லான்.

(இ - ள்.) சுக்கிரனும் குருவும் சந்திரனைப் பார்க்கவும், அவ்வாயில் சனியி ருக்க உலகத்தார் இகழும்படி ஒருகாசுமில்லாத லோபியாவான், எ-று. 850

ஈதலேபுதேவர்க் கொன்றுரைப்பது
ஓதுமொன்பதாம் வீட்டுக்குடையவன்
சாதிவர்க்கத் தவர்தமக்கேகிதி
வாதியாமன் மகிழ்ந்துவழங்குவன்.

(இ - ள்.) தகப்பன் வம்சத்து வர்க்கத்தாருக்கே தனது செல்வத்தை ஈவா னுவான், எ-று. 851

வேறு

ஓதிகதிருக்தேய்பிறையும் கூடிவியத்திலுறத்தனத்தை
நீதியரசர்கைகொள்வர் நிலவுங்குருவும்வியத்திலும்
போதுதனங்கண்மிகத்தேடிப் பொருந்துந்தன்மம்புரிந்தருளி
மீதுசிறிதுதனமிக்கவாழ் வன்புவியில்வெகுகாலம்.

(இ - ள்.) சூரியனும், தேய்பிறைச் சந்திரனுங்கூடி பன்னிரண்டிலிருந் தால் இவன் செல்வத்தை அரசர் கைக்கொள்வர். சந்திரனும் குருவும் பன்னி ரண்டிலிருந்தால் உலகத்தில் மிக்க செல்வத்தேடித் தருமஞ்செய்து மிகுதி செல் வத்தோடு வாழ்பவனுவான், எ-று. 852

வேறு

காலமாம்வியத்தன்னி லங்காரகன்
சாலநிற்கத் தனித்துக்கண்ணோக்குறில்
ஞாலமிதிற் புதைத்திடுபொருள்
வாலேக்கெடரியா மன்மறக்குமே.

(இ - ள்.) பன்னிரண்டில் அங்காரகன் தனித்திருக்க அவ்வது அதனைப் பார்க்க உலகத்தில் புதைத்துவைத்த பொருளை வைத்தவிடந்தெரியாமல் மறப் பவனுவான், எ-று. 853

பன்னிரண்டாம்பாவம்

முற்றிற்று.

கர்ப்பத்தானமறிய

கர்ப்பத்தானலக்கினத்தில் விளம்பும்பலன்கள்புகலலுறும்
கர்ப்பத்திரிகோணத்திருக்கக் கருவினுதித்ததாணாகும்
இர்ப்பசசிக்குஞ்சூரியற்கு மேழிற்சனிசெவ்வாயிருந்தால்
பொர்ப்புகுவையும்புருடனும் பூவைதனக்குநோய்வருமே.

(இ - ள்.) கர்ப்பத்தான லக்கினத்தில் சொல்லும் பலன்களாவன: குரு திரி கோணத்திலிருக்க கருவிலுதித்தது ஆண்குழவியாகும். சந்திரனுக்கும், சூரியனுக் கும் ஏழில் சனி செவ்வாயிருந்தால் பெண்சாதி புருடனிருவருக்கும் நோயுண்டா கும், எ-று. 854

வருந்தருசூரியர்க்குமுக்காண்கி விரண்டின்மந்தன்செவ்வாயும்
தெரிந்தேதகடும்வேளையினிற் சேர்ந்தாற்கிட்டஞ்செழுமதிக்கும்
பரிந்திரண்டின்முந்நான்கிற் பந்துபாதன்குசன்கூடி
இருக்கபோதுபுணர்ந்திடவே பேழைக்கிட்டமெய்திடுமே.

(இ - ள்.) சூரியனுக்குப் பன்னிரண்டிலும், இரண்டிலும் சனியும், செவ் வாயும் சேரும் வேளையிற் சேர்ந்தார்க் கரிட்டமுண்டாகும். சந்திரனுக்கு இரண் டிலும், பன்னிரண்டிலும், சனியும் அங்காரகனுஞ் சேர்ந்திருந்தபோது புணர்ந் தால் பெண்ணுக்கரிட்டமுண்டாகும், எ-று. 855

எய்திடினத்தமதிதனக்கு நான்கில்வியத்திலிரவிகுசன்
வைதிக்கூடியிருக்கிலந்த மாதுக்கரிட்டம்புணர்நாளே
செய்திமதிக்கிருபுறமுந் தீயோரிருக்கத்திருக்கரிட்டம்
உய்துமுதயத்தாண்கிரக மானுக்கிசையிலுறவாணும்.

(இ - ள்.) பலமற்ற அமாபக்ஷ சந்திரனுக்கு நான்கிலும், பன்னிரண்டிலும் சூரியனும், அங்காரகனுமிருக்கும் வேளையிற் சேர்ந்தாலும் அந்தப்பெண்ணுக் கரிட்டமாம், புணர்வேளையில் சந்திரனுக்கு இருபக்கத்திலும் பாவக்கிரகங்களி ருந்தாலும் அப்பெண்ணுக் கரிட்டமாம்; உதயத்தில் ஆண்கிரகம் ஆணக்கிசையி லிருந்தால் அக்குழவி ஆணும், எ-று. 856

ஆனமதியின்கலைக்குப்பெண்ணுகுங் கடிகையைந்துக்குள்
தானுங்குறையாதிடுக்கிவன் றன்னிக்குறையாதிருந்திடுமே
தேனின்மொழியாயிரவிகலை செல்லிற்செல்வனப்போது
ஊனக்கடிகைசென்றபடி யுயிருண்டென்பாருறவோரே.

(இ - ள்.) சந்திரகலைக்குரிய பெண்டிலை ஐந்துக்குள் கொஞ்சமுங் குறை யாதிருந்தால் தீர்க்காயுசுண்டாகும். தேன்போலும் சொல்லாய்! சூரியகலைசென் றால் எத்தனை கடிகை சென்றதோ அவ்வளவே ஆயுசுண்டென்று சொல்லுவர் பெரியோர், எ-று. 857

உயரும்பவனோனெதிராகி லுபயமாகுமிருபுறமும்
பெயரப்பாவர்சூழ்புகுதப் பெற்றதலியாம்பின்னுமவர்
உயரமனேவயுதுக்காணு முபயருகாமுறமலத்தின்
பெயரும்தகைமதனைப்போலிப் பிள்ளைக்குணமும்பெற்றிடுமே.

(இ - ள்.) காற்றினெதிராயின் குழலி யிரண்டாகும். இருபக்கத்திலும் கலை பெறவும் பாபக்கிரகங்கள் சூழியிலேறவும், பிறந்தபிள்ளை அலியாம் பின்னும் அவ்வவர்கள் உயரத்தனவே உருவங்காணும். அன்றி இருவர்வயிற்றிலும் மலமுண்டாயின் மந்தகுணமுள்ள பிள்ளையே யுண்டாகும், எ-று. 858

பெண்கள் ஜாதகம்

வேறு

திருவனையமடவார்க ளம்புவியின்மீது
செனித்தபலசாதகத்தின் திறமைகூறும்
கருவுதயகாகலக்கினஞ் சசிலக்கினமும்
கண்டுவடிவிடனிறமுங் கருதிடவேண்டும்
மருவியசத்தமராசியா லாடவன்குணமும்
மகிழுநற்குணமுந்தெரிந்து வழுத்தலுமேவேண்டும்
உருவுதயலக்கினத் திங்கிருக்கிலழகுள்ளான்
ஓரேழிற்சசியுறப் பார்த்தாலழகுள்ளானே.

(இ - ள்.) லட்சுமிபோலும் பெண்கள் உலகத்தில் பிறந்த பல சாதகத்தின் வகையாவதெப்படியென்றால்:—சென்மலக்கினத்தையும், சந்திரலக்கினத்தையுங் கண்டு அவளுடைய அழகு, நிறமுதலியவற்றையும், சத்தமராசியைக் கொண்டு அவள் குணத்தையும் அவள் நாயகன் குணத்தையும் சொல்லவேண்டும். அப்படி சொல்லுங்கால் சென்மலக்கினத்தில் சந்திரனிருந்தால் அவள் அழகுள்ளவளும் ஏழிலிருந்தால் கணவன் அழகுள்ளவனுமாவான், எ-று. 859

உள்ளபிறைலக்கினமுஞ் சன்மலக்கினமும்
உறுமிரட்டையாகில் வடிவுடையமயிலாகும்
தெள்ளியவம்மனையிரண்டு நல்லோர்கள்காணில்
திராகப்பணியணிவள் செகத்திருவேயாம்
கொள்ளுமிருமனையொற்ற யாகிலாண்சொரூபி
கூறுநல்லோர்கண்டிடி னற்குலநெசல்வக்குலவும்
கன்னுமும்பாவர்த்த ராசியிரண்டினிலே
கலந்துதிக்கிற்கண்டிடிற் பொல்லாப்பாவக்கனமே.

(இ - ள்.) சந்திர லக்கினமும் சன்ம லக்கினமும் இரட்டையாகியாகில் மயிலன்னளும், அவ்விடிரண்டையும் சுபர் பார்த்தால் விருத்த ஆபரணமணி

பவளும், அதிருபவதியும், அவ்விரண்டும் ஒற்றையானால் ஆண் ரூபியும், நல்லோர் பார்த்தால் நற்குலம், செல்வமுடையவளும், அந்த ராசி யிரண்டிலும் பாவிகள் கலந்திருந்தாலும் பார்த்தாலும் பாவியுமாவாள், எ-று. 860

கன்னிகேள்சன்மத்திற் பிறைசுக்கனிருக்கில்
கழற்பெருமையுடன்சுகியாய்க் காசினியில்வாழ்வள்
உன்னுமுதயத்திலிருந்தும் புதனுமேகூடல்
உணர்வள்பலகலைபோகி யோதியநற்குணத்தாள்
இன்னஞ்சன்மந்தனனில் புதனுஞ்சுக்கிரனும்
இருக்கக்கான்ஞானியதி ரூபியினிதுரைப்பள்
மின்னுமொருமூன்றகத்திற் சுபக்கோள்சனிக்கில்
வெருதனாற்குணத்தயவு விரகிசகமுள்ளாள்.

(இ - ள்.) பெண்ணே! சன்மத்தில் சந்திரனும் சுக்கிரனுமிருந்தால் பெருமையுடன் சுகவாழ்க்கையளும், சந்திரனும், புதனும் சேர்ந்தால் பலகலை யுணர்ந்தவளும், புதனும் சுக்கிரனுமிருந்தால் ஞானியும், அதிக ரூபியும் இனிய வசனியும், மூன்றில் சுபரிருந்தால் தனமும் நற்குணமும், தயவு சகவிவை யுள்ளவளுமாவாள், எ-று. 861

உள்ளபலபாவிரட்டி லிருந்தக்கால்விதவை
யுளதாவதென்மொனி மேலொரட்டமதிபன்
தெள்ளியவஞ்சிக்கிறைவ னஷ்டகவர்க்கத்தில்
சேர்வருடமெத்தனையோ வத்தனையாண்டதனில்
மெள்ளவிதவையுமாவாள் செனனிலைமேலோர்கள்
மேவிவள்கணவனைத்தான் விட்டுமுன்போய்விடுவன்
கள்ளமுழுங்கீதனிடமாங் கன்னிபெனுமூன்றில்
கலைமதிமேவிற் புத்திரரற்பகாணும்.

(இ - ள்.) பல பாவிகள் எட்டிலிருந்தால் எட்டுக்குடையோன் அங்கிசக் கிறைவன் அஷ்டவர்க்கத்தில் எத்தனை வருடம் சேர்வனோ அத்தனை வருடத்தில் விதவையும், இரண்டில் சுபரிருந்தால் கணவனுக்குமுன் இறப்பவளும், விருச்சிகம், ரிஷபம், கன்னி இவ்விடங்களில் சந்திரனிருந்தால் புத்திராற்பமா யுடையவளுமாவாள், எ-று. 862

காணியாஞ்சனியுமே பலத்திருக்கவேதான்
கணக்கன்மதிபிருவினைக் காரகத்திருக்க
ஆணியத்தாரசியொற்றை யாகவுமேசென்மம்
அடுக்கமற்றேரொற்றைகளி லன்புடனேயிருக்க
நீணிலத்திற்பிறந்தாடன் புருடனுக்காகாரசாய்
திருப்தியாய்ச்சுவாமியாய் தேசமுடனிருப்பள்
பேணியதோரேழிற் நீக்கோருமும்மூன்றிற்
பெருமையுள்ளோருறச் சகியாயிப்பெண்ணுவள்.

(இ-ள்.) சனி பலத்திருந்து புதன், சுக்கிரன் இவர்கள் சுவாவீட்டி லிருக்க அது ஒற்றை ராசி சென்மமாகவும் மற்றவர்கள் அவன் புருடனுக்கு அரசி யாயும் கிருபதியாயும் சுவாமியாயு மிருப்பவளும், ஏழில் பாவிகளும், ஒன்பதில் சுபரு மிருந்தால் சந்யாசிப் பெண்ணுமாவாள், எ-று. 863

ஆகரெட்டைராசிதனிற் குருசெவ்வாய்புந்தி
அதிபலமாயிருந்தக்கா லவனியின்மேற்குலவு
வாருடனேபலகலைக ளறிந்திடுநற்குணமும்
மாதருக்குண்முக்கியமா மயிலுமாகுவளே
சேகரமாய்பரிதிமதி கூடியெதிர்க்கிற்
றெரித்துபலவிதத்தொழிலே செய்துசீவிப்பள்
மோகமுடன்கதிர்செவ்வாய் கூடியுமேதிர்க்கிற்
முழுப்பாவியாவளென்றே மொழிந்திடுவர்பலரும்.

(இ-ள்.) ரெட்டை ராசியில் குரு, அங்காரகன், புதன் இவர்கள் பலமா யிருந்தால் நற்குலம், பலகலை யறிவள், நற்குணமுடையவளும், பெண்களுக்குள் மேலவளுமாம், சூரிய சந்திரர்கள் கூடியிருந்தால் பலவித தொழில் செய்து ஜீவிப்பவளும், சூரியனும் அங்காரகனுஞ் சேர்ந்தால் முழுப்பாவிய ளென்று சொல்லுவர் பெரியோர், எ-று. 864

வேறு

பலரும்பணிகதிர்புந்திகண் மருவும்பொருதெழில்சேர்
பலர்சிந்தனையறிவாள்புகழ் பாவுஞ்சுக்சரீர
இலருங்கதிர்குருவொன்றிடி லதிவஞ்சனையாள்முன்
அனுகுந்தொழிலறியாள்பிற கறிவாள்வருசுகரும்
மலரம்புயவதிபன்பிரு குடன்வந்துறின்மற்போர்
வலையுங்கொடியவளாயுத வகையாகிதிதேடும்
சலமுண்டிடுகதிர்மந்தனை யனுகும்பொழுதங்கிற்
றரயிந்தனைசெம்போடு தாரகிற்றுமிருப்பாள்.

(இ-ள்.) சூரியன், புதன் இவர்களிருந்தால் பலர் சிந்தனையறிபவளும், சரீரியும், சூரியனும் குருவும் சேர்ந்தால் வஞ்சகியும், முன்பின் அறிபவளும், சூரியனும், சுக்கிரனுங் கூடினால் சண்டைக்காரியும், ஆயுதத்தால் செல்வந் தேடு பவளும், சூரியனும், சனியும் சேர்ந்தால் பின்னை தாவிற்று ஜீவிப்பவளுமாவாள், எ-று. 865

உய்யும்மெருதொடுகோளிவை யுதயம்மதில்மதியம்
உலைக்குசதிரையெத்திசை யுறுமங்கிசையாகில்
மையுற்றியகுவளைசெழு மலர்போலிருகண்ணுள்
வகையுந்தொகையறிவாள்சில வழிசாலவுரைப்பாள்

எய்யுஞ்சனிதிரையைத் தசமெனுமங்கிசைபெண்ணில்
இருவோர்களுவோர்தாமுன மென்னும்படலார்க்கே
மெய்யுஞ்சொடுமெண்டாயிரு வீட்டுக்கிறையிருவர்
மினர்கேத்திரமாயத்துற வேலாகனமுண்டாம்.

(இ-ள்.) ரிடபம், துலாம் இவற்றில் சந்திரனிருந்து அங்காரகனங்கிசை யானால் அவள்வளைக, தொகைகளை யறிந்து லிவழி செல்பவளும், சந்திரையம் பத்தாவதங்கிசையானால் இருபுருஷரை யுடையவளும், இந்த இரண்டாமிடங்க ளுக்குடையவர்கள் க்ஷேத்திரத்தி லிருந்தால் வாகன முடையவளுமாவாள், எ-று.

முண்டாசியவைத்தாமிறை புச்சக்குருவாகி
உணர்வாளியவள்ள வுருவம்முளனுவன்
கண்டாகியமீனபுறமுடி குறிக்கிசைகணவன்
கரவாகனமுளனுவன வில்சுக்கிரனுகில்
மிண்டாகியவெள்ளிக்கிசை பல்லக்குளவேந்தன்
விரவுஞ்சனியாகிற்பரி வெண்சந்திரமுள்ளான்
கொண்டாடியகன்மாதிபன் குருசுக்கிரனுகில்
கறைக்திணிவேலின்று கொமுகன்சதகீரீவி.

(இ-ள்.) ஏத்துக்குடையோன் உச்சகுருவானால் பெண்ணை புருடனும் அவன் கடகத்திலிருந்தால் அவளுக்கிசைந்த கணவனும், நரவாகனனும், சுக்கிர னானால் பல்லக்குள்ள அரசனும், சனியானால் சந்திரமுள்ளவனும், கர்மாதிபன் குரு, சுக்கிரர்களாய் ஏத்திலிருக்கச் சதகீவியானவனும் புருடனுவான், எ-று.

சீவித்திடுகுருசுக்கிர னுறுமனைசேரில்
தெரிவைக்கிசைகணவன்பிணி செறிமெய்யினனுவன்
பூவைக்குறுமேழாமிற்குறு புரிசுக்கிரன்மேவின்
போர்க்கேதவிமற்பாயசு புல்லாடன்மெய்யாவன்
பாவைக்குறுமைத்தாமிறை பவ்வாயினியவராய்ப்
பண்பாகியவெண்பான்மதி பற்றப்பயிலுன்பான்
ஏவுற்றமனைக்காகிபி லாபத்துமினின்றேன்
எய்தும்பொருளுண்டானவை யெல்லாமிவளுக்காம்.

(இ-ள்.) குரு, சுக்கிரர்கள் ஆறிலிருந்தால் அவளுக்கிசைந்த கணவனும் பிணியாளனும், பன்னிரண்டிலிருந்தால் அற்பாயுசுடையவனும், ஏத்துக்குடை யோன் சுபனும் மித்துருவாயும், ஒன்பதிலிருக்கவும், ஒன்பதுக்குடையோன் லாபத்திலிருக்கவும் தந்தை செல்வமும் இவளுக்குண்டாம், எ-று. 868

ஆமெட்டதிபன்காரியோ டனுகிப்பதிதெனின்றிட
டமிழ்ந்தவயதாமல ரத்தங்கதமாயின்

போமற்பமதாயாயுசு பொன்றும்வியன்மன்னன்
புரிகேந்திரலாபத்திரி கோணப்பதிபுக்கி
தாமெத்தனைபோரோடுறி லாமத்தனைமனையாள்
தரிலற்றிடுவியாற்பதி சரமேலெனுரில்
நீமத்திரமாகிற்றம தாரத்தகமணமே
நிறைவாழுபயம் மென்னிலோகீடும்மதிதாரம்

(இ-ள்.) எட்டுக் குடையவனோடு சனி சேர்ந்து பதினொன்று, எட்டாமிடங்களிலிருந்தால் தாரவையனும், அவர்கள் அஸ்தங்கதமானால் அற்பாயுசும், பன்னிரண்டுக்குடையோன் கேந்திரம், லாபம், திரிகோணம் இவைகளில் சேர்ந்து எத்தனை பேரோடிருக்கின்றானோ அத்தனை மனைவியரும் பன்னிரண்டாம்வீடு சரமாய் அயனுமிருந்தாலும், ஸ்திரவானும் தமதுமிதும், உபயமானால் அதிதாரத்திதும் கலியாணம் நடக்கும், எ-று. 869

வேறு

தாரமுமும்பன்னிரண்டா மதிபன்றனும்
சுபக்கோளாய்ப்பகலாலுய்ச் சுகவானுமின்
பாரமனைமென்மெத்தை மாடங்கூடும்
பரிவுடனேயுண்டான வப்பதியினிலேவாழ்வன்
சேருமுதயந்திரமா யெழுந்தாம்வீட்டில்
சேர்ந்தவரெத்தனையுண் டத்தனைசேயுண்டாகும்
பாரறியச்சென்மம் வாமியமாகின்மூன்றும்
பதியுற்றோரெத்தனை யப்பாலருளராகும்.

(இ-ள்.) பன்னிரண்டுக்குடையோன் சுபனும் பல முள்ளவனும் சுகருமானால், மெத்தை மேடையாகிய வீட்டில் வாழ்வான். ஜன்மம் ஸ்திர லக்கினமாய் ஏழு ஐந்தாம் வீடுகளிலிருக்குங் கிரகங்களத்தனைப் பின்னைகளுண்டாம். ஜென்மம் வாமியமானால் மூன்றாம் வீட்டிலிருக்கும் கிரகங்களத்தனைப் பின்னைகளுண்டாம் எ-று. 870

தாகமுடனேமைந்தா மூன்றதிப[illegible]டனே
சனிகூடிலோகுழவிதனக் க[illegible]வயதாம்
ஆகமகிழொன்பதா மதிபதியா[illegible]றெட்டில்
அமரிற்குத்திரர்தமக் கு[illegible]பித்திடுசேயாகும்
ஏரும்வியத்தினிலிருக்கில் [illegible]சேயாகும்
ஏழிலொன்பானமனைக்கதிப னிரவியுடன்கூடில்
பாகவியமெட்டதைப் பற்றிலொன்பானமனையோன்
பரிந்திருந்தவீட்டோனப் படியிருக்கிலிதனை.

(இ-ள்.) ஏழு, ஐந்து, மூன்றுக்குடையவர்களோடு சனி சேர்ந்தால் குழந்தைக்கு அற்பவயதாம். ஒன்பதுக்குடையோன் ஆறு, எட்டாமிடங்களிலிருந்

தால் குத்திரர்க்குப் பிறந்த பிள்ளையாம். பன்னிரண்டிலிருந்தால் பிராமணப்பிள்ளையாம், ஏழில் ஒன்பதுக்குடையோன் சூரியனுடன்கூடி யிருந்தாலும், ஒன்பதுக்குடையோன் பன்னிரண்டு எட்டு ஆறுமிடங்களிலிருந்தாலும், அவனிருந்த வீட்டுக்குடையோன் அப்படியிருந்தாலும் விதவையாவாள், எ-று. 871

வையகமென்னொன்பதா மதிபனேகலோர்
மன்னாயிறுமத்திமிலே விதவையாவள்
செய்யவொன்பது நீடிச்ச னுகிப்பாவனுமாய்த்
தெரிவைசுமங்கலியாகித் தீர்க்கவயதுள்ளாள்
துய்யசன்மமொன்பதா மதிபவிருவர்
தொடர்ந்துமாறுகசிற்கிற் றேஞ்றமுடனிறப்பள்
வெய்யநோரெட்டினிற் சந்திரபாகவானிருக்கில்
விதவையெனப்பேர்படைத்து மேதினியிற்றிரிவள்.

(இ-ள்.) ஒன்பதுக்குடையோன் சுபர்வீட்டிலிருந்தால் மத்திமில் விதவையாவாள். அவன் உச்சனும், பாவியுமானால் சுமங்கலியாய்த் தீர்க்கவயதாவாள். சன்மம் ஒன்பதுக்குடையோர்கள் மாறி மாறியிருந்தால் மகவுடனே மரிப்பாள், எட்டில் சந்திரனிருந்தால் விதவையாவாள், எ-று. 872

திருசெய்யாயிருமனையுஞ் சனனமதாயதனில்
திக்கருநடவேசெவ்வாய் திரிம்சிசாம்சிசமாய்
பரிவில்லாப்பாவிசனி திரிம்சிசாம்சிசமாய்ப்
பாவிலானாடிமைப் படுவளெனச்சொல்லும்
குருதிரிம்சிசாம்சிசமாகிற் பதிவிரதையாகும்
குளிர்மேமதியம்சமா சாருமாகொள்ளுத்
திரிவெள்ளியம்சிசைக்கு மெய்யதிருப்பமாய்
வெகுவயதாய்ப்பரபோகம் விரும்புமினியவளாம்.

(இ-ள்.) அங்காரகனுக்குரிய [illegible]ருவீடுமே ஜென்ம[illegible]மாய் அதில் சந்திரனும், அங்காரகன் திரிம்சிசாம்சிசமும், ச[illegible]யும் அப்படியேயானால் பின்னைகளில்லாமல் அடிமையாவாள். குரு திரிம்சி[illegible]சமானால் பதி[illegible]ரதையாவாள். புதனம்சிசமானால் ஆசாரமுடையவளாவாள். [illegible]கிரனம்சிசைக்கு அதிருபியும், வெகு வயதுள்ளவளும், பரபோகம் விரும்புவ[illegible]ளாவாள், [illegible]-று. 873

இனியவெள்ளியிருமனையு[illegible] சன்மமதாயதனில்
இருந்திருக்கச்செவ்வா[illegible] சமாயிற்றிடுவாள்
சனியினம்சிசமாகிற் கண[illegible]யும்விட்டே
சந்தசலமாய்வேறொருவன் றனக்குப்பாரியுமாம்
சனிகுருவம்சிசமாகி [illegible]யுள்ளாள்
நாடிபுதனம்சிசத்தி [illegible]யுமாம்

கனிமொழியாளக்கிய லங்கிசமாயிற்றன்சொல்
கதித்தினியாளாயிருப்பள் காசினியோர்போற்ற.

(இ - ள்.) சுக்கிரனிருவீடும் சென்மமாய் அதில் சந்திரனிருக்க அங்காரகனங்கிசமானால் கொடியவளும். சனியங்கிசமானால் வேறு கணவனையுடையவளும் குருவங்கிசமானால் நற்குணமுள்ளவளும், புதனங்கிசமானால் ஞானியும் சுக்கிரனங்கிசமானால் தன் சொல்லில் பிரதாபமுடையவளுமாயிருப்பாள், எ-று. 874

பொற்புடைபுதனிருமனையுஞ் சன்மமதாயதனில்
புனிதமதியேயிருக்கப் பூசுதனங்கிசமாய்
ஏற்றமதாய்வேலைசெய்வள் சனிதன்னங்கிசையாய்
இருப்பளவிவடிவாகக் குருவாகிலினியாள்
சாற்றிசையெனிலும் புதனங்கிசைதனக்கேஞானி
நாடுசுக்கிரனங்கிசைக்கு நற்குணமுமுள்ளாள்
தேற்றுகடகஞ்சென்மமாய்த் திங்களிருக்கச்
செவ்வாயங்கிசமாகிற் சேர்வள்பலருடனும்.

(இ - ள்.) புதனிருவீடும் சன்மமாய் அதில் சந்திரனிருக்க செவ்வாயங்கிசமானால் பெருமையான வேலைசெய்பவளும், சனியங்கிசமானால் அவிவடிவினளும், குருவங்கிசமானால் இனியவளும் புதனங்கிசமானால் ஞானியும், சுக்கிரனங்கிசமானால் நற்குணமுள்ளவளும், கடகமிலக்கினமாய் அதில் சந்திரனிருக்க செவ்வாயங்கிசமானால் பலருடன் சேர்பவளுமாவாள், எ-று. 875

உடன்கடகஞ்சென்மமதா யதிலிருக்குமதியிருக்க
உயர்சனியங்கிசமாயு றுமுகணவன்றனையே
இடறுடனேகொல்வதற்குச் சினமாயிருப்பள்
இந்துபுதனங்கிசைக்கே சிற்பத்தொழில்கள்செய்வாள்
அடல்குருவங்கிசையாயில் குணமினியள்வெள்ளி
அங்கிசையாற்சாது வாகிபுவியிருப்பள்
மடமயிலேசெவ்வாய்க்கிசையென் றுரைத்தவெல்லாம்
வருந்திரிம்சாங்கிசையாய் மருவிதிக்கண்டுணர்வாய்.

(இ - ள்.) கடகஞ் சென்மமாய் அதில் சந்திரனிருக்க சனியங்கிசமானால் கணவனைக்கொல்ல எண்ணுபவளும், புதனங்கிசமானால் சிற்பத்தொழில் செய்பவளும், குருவங்கிசமானால் இனியவளும், சுக்கிரனங்கிசமானால் சாதுவுமாவாள். ஆயின் பெண்ணே! இவ்விடத்தில் அங்கிசமென்று சொன்னது திரிம்சாங்கிசமென் றுணர்வாயாக, எ-று. 876

உணர்சிங்கஞ்சன்மமதாய தினிற்றுமதியிருக்க
உயர்செவ்வாயங்கிசையா யுரைக்கின்றசனி

சினிசனிக்கக்கன் னிருவாங்கிசமேயாயின்
பிறர்முகம்பார்ப்பாளரசன் பின்னுமங்கிசைக்குத்
தனியரசர்க்கேதேவி தானாயிருப்பள்
தக்கபுதனங்கிசைக்கே சீரவருக்கமதாய்
பணிபலவுஞ்செய்தொருவர்க்கே யடிமையாகிப்
பாதவித்தேயிருப்பளெனப் பகர்வர்தக்கோரே.

(இ - ள்.) சிங்கம் சென்மமாய் அதில் சந்திரனிருக்க அங்காரகனங்கிசையானால் அசாரமுடையவளும், சனி சுக்கிரனங்கிசமானால் பிறர்முகம் பார்ப்பவளும், குருவங்கிசமானால் அரசமகிஷியும், புதனங்கிசமானால் ஒருவர்க் கடிமைப்பட்டு வருந்தியிருப்பவளுமாவாளென்று பெரியோர் சொல்வர், எ-று. 877

தக்கதுலாமீனமனையில சன்மமாகிச்
சந்திரனப்பதியிலுறக் காண்குருசெவ்வாயின்
மிக்கதிரிம்சாங்கிசமேல் யாடிபினற்குணத்தாள்
வீறுசனியங்கிசமேல் வெருகாமியாவள்
சுக்கிரனங்கிசையாகில் லோசிகமாம்புருடன்
தோளிணைவன்சோமனுரை சதுனங்கிசைக்குப்
பக்குவமெய்ஞ்ஞானியாய்ச் சுபகாமங்கள்
பண்ணுவளென்றேயுரைப்பர் பாரினிலுள்ளோரே.

(இ - ள்.) துலாம் மீனம் இவைகள் சன்மமாய் அதில் சந்திரனிருக்க குரு அங்காரகர்களின் திரிம்சாங்கிசமானால் நற்குணமுள்ளவளும், சனியங்கிசமானால் வெருகாமியும், சுக்கிரனங்கிசமானால் அசோகியும், புருடனைச் சேர்பவளும், புதனங்கிசமானால் மெய்ஞ்ஞானியும் சுபகாரியஞ் செய்பவளுமாவாளென்று பெரியோர் சொல்லுவர், எ-று.

கல்லசனிவீடிரண்டும் லக்கினமாயதனில்
காதிபுகன் மதியுறக் குருவங்கிசைமேல்
அல்லலுறுந் தாதியாம் காரிங்கிசமாய்
அவனிமிக்கிழ்ச்சாதியொடு கூடியிருக்கிறவள்
வல்லகுருவங்கிசைக்கே பதிவிரதையாவாள்
மகிழ்வெள்ளியங்கிசைக்கே மலடியேயாவள்
சொல்லினசைப்புதனங்கிசமாகில்பேசூரும்
சுகமுடனேகணவனுடன் ரேமுகமாய்ப்பீர்ப்பாள்.

(இ - ள்.) சனி வீடு இரண்டும் லக்கினமாய் அதில் சந்திரனிருக்க அங்காரகன் அங்கிசமானால் தாதியும், சனி யங்கிசமானால் கீழ்ச்சாதி புருடனை மணப்பவ

னும், குருவங்கிசயானுல் பதிவிரதையும், சுக்கிரனங்கிசமானுல் மலடியும், புதன் அங்கிசமானுல் கணவனுடன் சுகமாய் வாழ்பவளுமாவாள், எ-து. 879

பரிவாகச்சனிபுத னேழாமிடத்தினிற்கப்
பயில்குருவுக்கேழ்வீடு பசவுசாமாயின்
இரிவனைவள்பார்க்கிலெங் காளும்வழிநடக்கித்
திபாசிக்கணைவிட்டுச் செல்லாமலிருப்பள்
வருராசியுபயமாய்ச் சிலைகாளுனினும்
வழிநடையிற்சிலைாளும் வருத்திபுமேதிரிவள்
அரிபேழாமிடத்திருக்கப் பாவருமேபார்க்கில்
அவன்மீதிற்கொழுநனுக்கன் பின்றியிகழ்ந்திடுவள்.

(இ - ள்.) சனியும் புதனும் ஏழிலும், குருவும் ஏழாம்வீடு சரமுமானுல், அவள் கணவன் எக்காலும் நடந்து திரிபவளாவாள். ஸ்திராசியானுல் கணவனை விட்டகலாள், உபயமானுல் சிலகாள் வரினும், சிலகாள் வழிநடையிலு மிருப்பாள். சந்திரன் ஏழிலிருந்து பாவர் பார்வைபெற்றல் அவள்மேல் கணவனுசைப் படாமல் இகழ்வன், எ-து. 880

இடுசெவ்வாய்கதிர்கூடி யெங்கேகினுறுனும்
இவ்வாறுமாலிபத்தன்னி லமங்கலியாவள்
வடுவாகுஞ்சனிகதிரைக் கூடியேபிறக்கில்
மன்னியதிக்கோள்பார்க்க வாலிபத்திலமாக்கும்
கொடுமையுள்ளோர்பலரேழா மிடத்திருக்கிற்பார்க்கில்
கொழுநன்வாலிபத்திறப்பன் கொடியகன்னிகைக்கூடல்
சடுதிமின்மீண்டொருவனுக்கே பார்யுமோரிதத்
தனியிருக்கவேண்டுமெனவே சாற்றல்வேண்டும்.

(இ - ள்.) அங்காரகனும் சூரியனுங்கூட எங்கேயிருந்தாலும் இவளும் வாலிபத்திலேயே விதவையாவாள். சனியும் சூரியனுங்கூடி நின்றாலும் பாவிகள் பார்த்தாலும் வாலிபத்தில் கைமைக்கும். பலபாவிகள் சேர்ந்து ஏழிலிருந்தாலும் பார்த்தாலும் அவள்கணவன் வாலிபத்தில் இறப்பான். சுபர்சேர்ந்தால் சீக்கிரம் பிரிந்து வேறொருவனுக்கு மனைவியாயிருப்பாளென்று சொல்லவேண்டும், எ-து. 881

வேண்டிடும்பாவக்கிரகம் பலன்கருமேயின்றி
விரும்புமேழிடத்திருக்க வவளையுமோக்கினோர்
ஈண்டியேதாம்பார்க்கில் லக்கணவன் வேண்டா
திகழ்க்கேதாட்டிவிட்டிடுவனே பின்னர்[illegible]
மீண்டதுசன்வெள்ளியுந் தன்னங்கிசத்தினிற்க
நிகழ்த்துமிவ்வாழேழுரி நீக்கியுமவீடு

பூண்டுமேழாமிடமேபாகி லவள்வேறோர்
புருடனையேயிச்சித்துப் போய்விடுவளென்றுர்.

(இ - ள்.) பாவக்கிரகங்கள் பலனற்று ஏழிடத்திருக்க அவர்களைச் சுபர் பார்த்தால் அக்கணவன் வேண்டாமென்று ஓட்டிவிடுவன். அன்றி அங்காரகனும், சுக்கிரனும் தங்களுடைய அங்கிசத்திலிருக்கவும் இவர்கள் மாறுகவிருக்கவும் அவ்வீடு ஏழாகவும் அவள் வேறொருவனை விரும்பிப் போய்விடுவள், எ-து. 882

என்றுமேழாமிடத்திற் சனிசெவ்வாய்சோமன்
இத்தமுவருங்கூடி யிருக்கிலவம்போவள்
வென்றசனிசெவ்வாயின் வீடேலக்கினமாய்
விரவுகுசனங்கிசமாகச் சென்மத்தன்னில்
துன்றுமிருகைற்றமதி சுக்கிரனுமிருக்கச்
சூழ்ந்ததீக்கோள்பலருந் தொடர்ந்துமேநோக்க
தின்றிடுவோமவடியா மவளுமவளாயும்
சேர்தனிற்பலபேரை சேசித்தேசேர்வர்.

(இ - ள்.) ஏழில் சனி அங்காரகன் சந்திரன் இவர்கள் கூடியிருந்தால், சோரம்போவாள். சனி, அங்காரகர்களின்வீடே லக்கினமாய் அது அங்காரகனங்கிசமாக சென்மத்தில் சந்திரனும், சுக்கிரனுமிருந்து அவர்களைப் பாவிகள்பார்க்க விருந்திருந்தால் மலடியாவள். அன்றி, அவளுமவள் தாயும் பலரை சேசிப்பவர்களாவார்கள், எ-து. 883

சேருதயலக்கினமுஞ் சிந்துக்கோரேழில்
செவ்வாயுஞ்சனியிருவர் சேர்ந்துமேநிற்க
காரிபதத்தனிற்பிணிகொண் டிருந்துபாதவிப்பாள்
காடுமீவர்கல்லோர்க லங்கிசையினன்றும்
பாரிலேநாரிடைதொடைகள் சோபனமுள்ளவளாய்ப்
பார்த்தாலினிதயத்திற் பசுமுமுறவிருப்பள்
தாருதயத்துக்கேழு சனிவீடதனில்
தாவிதரிப்பவனிழுவன் சற்குணமில்லையென.

(இ - ள்.) உதயலக்கின லங்கிசத்தாசிரு ஏழில் அங்காரகனும், சனியுங்கூடியிருந்தால் அவள் வாய்நோயால் வருந்துவாள். நல்லோர்களங்கிசமானுல் நன்றும். இடைதொடைகள் அழகுள்ளவளாய் கணவனுக்குப் பிரியமுள்ளவளாயிருப்பள். லக்கினத்துக் கேழாம்வீடு சனிவீடானுல் புருஷன் கிழவனும் சற்குணமில்லாதவனுமாவான், எ-து. 884

சற்குணருசேர்லக்கினத்துக் கேழாகும்ராசி
தன்னரசதின்வீடாகியவன் றன்னுடையங்கிசையால்

சிற்குணமாயவள்கணவன் ஸ்திரீலோலனுவன்
செறிபிருகுராசியா மங்கிசமேசேரில்
நற்குணஞ்சேர்சீமானு மழகுடையனவன்
நாடுபுதனங்கிசையாய் ராசியுமேயாகில்
சொற்கலைஞானியுமாவன் சோமனுமேயாகில்
தோகைபலருடன்கூடிச் சுகித்துவாழ்ந்திருப்பன்.

(இ - ள்.) லக்கினத்துக்கு ஏழாம்வீடு அங்காரகன்வீடாய் அவனங்கிசையானுல் அவள் கணவன் ஸ்திரீலோலனவன். சுக்கிரனது ராசியாய் சுக்கிரனங்கிசமானுல் நற்குணமும், சீமானும் அழகுடையவனுமாவான். புதனங்கிசமாய் அந்த ராசியுமானுல் சாத்திரஞானியாவான். சந்திரனங்கிசமானுல் அநேக பெண்களுடன்கூடிச் சுகிப்பவனுவான், எ-று. 885

வேறு

இந்துவசுரகுருவுடனே யேழிலிருக்கக்கிழப்புருடன்
வந்தேதிபொல்லாரேழி லுற விதவையாவள்வாலிபத்தில்
தொக்கேகும்பக்தேன்மேடந் துலைநஞ்சுறுமீன்லக்கினமாய்
பந்திமதியம்புகர்கூடிப் பாவர்பார்க்கில்விபசாரி.

(இ - ள்.) சந்திரனும் சுக்கிரனும் ஏழிலிருந்தால் கிழப்புருடனவன். பாவிகள் அதிலிருந்தால் வாலிபத்தில் விதவையாவள். கும்பம் மேடம் மகரம் மீனம் இவை லக்கினமாய் அவற்றில் சந்திரனும் சுக்கிரனும்கூடப் பாவிகள் பார்த்தால் விபசாரியாவாள், எ-று. 886

சாரவெட்டிற்பாவர்களுந் தானுமிருக்கவிரண்டதனில்
ஏருஞ்சுபர்களிருந்திடவே போங்கிமரணஞ்சுமங்கலியாய்
சேருமேழாமிடத்தானு நிறைந்தபுகரின்மனையாயின்
பாகோரமியவனுக்கலப் பாவையாகுங்கண்டீரே.

(இ - ள்.) எட்டில் பாவிகளும், இரண்டில் சுபரிருந்தால் சுமங்கலியாய் மரிப்பாள். ஏழாம்வீடு சுக்கிரன்வீடாயின் பலருக்கும் அநுகூலம் விளைக்கும் பெண்ணுவாள், எ-று. 887

கண்டேவேழாமனைபுரைக்குங் கதிரோன்வீடாயிருந்திடவே
மிண்டேசொல்வாளவன்கணவன் வினவும்பரிதியதிலிருந்தால்
கொண்டோனோட்டிவிடுவனெனக் குழம்புதனின்மனையாயின்
பண்டேபுலவராவர்குரு பண்பமனையிற்குணவானே.

(இ - ள்) ஏழாம்வீடு சூரியன்வீடானுல் கணவனிடம் அகடவிகடம் பேசுவாள். அதில் சூரியனிருந்தால் கணவன் அவளையோட்டிவிடுவான். அது புதன் வீடானுல் புலவராவர். குருவீடாயின் நல்லகுணவானுவன், எ-று. 888

குணமாமேழிற்பாவர்களுங் கூடிப்பலன்களற்றிடவே
மணமாச்சோக்கமுற்றதனுன் மகிழ்கனழுகில்லாதவனே
இணமாயேழேசமனையாயிருக்க வதிபன்சாத்திலுறச்
சினமேசாரங்கிசையாத்திரையாக் கிரமேயாகிற்றீர்க்கமுளன்.

(இ - ள்.) ஏழில் பாவிகள் கூடிப் பலன்களில்லாதிருக்கப் புருஷன் அழகில்லாதவனுவன். அது சரமாகவும் அதற்குடையோனும் சரத்திலிருக்கவும் அங்கிசையும் சரமானுல் யாத்திரைபோவன். ஸ்திரமானுல் தீர்க்கவயதுள்ளவனுவன், எ-று. 889

தீர்த்தமேழிற்சனிசெவ்வாய் சேரிந்தால்விதவைவாலிபத்தில்
தீர்த்தவேழிற்சுபர்பாவர்நின்றால் கமனம்பரபுருடன்
வார்த்தலக்கினமிப்பாக மூரைத்தாற்றிரங்கிசாதிபதி
வர்த்தபலன்கள்ஸ்திரீகளுக்கு மியல்பாயறிந்தேதயுரைத்திடுமே.

(இ - ள்.) ஏழில் சனி அங்காரகர்களிருந்தால் பாலியத்தில் விதவையாவள். அதில் சுபரும் பாவிகளும் கலந்திருந்தால் பரபுருட கமனமுடையளாவள். பார்த்துலக்கின மூப்பாகமாய் திரங்கிசாதி பலன்களை ஸ்திரீகளுக்கு நன்மையை யறிந்து சொல்லுக, எ-று. 890

உரைக்குங்கதிர்மதியங்கிசையா லொக்குந்தன்னில்விபசாரி
நிறைமக்குஞ்செவ்வாய்தானுகி னீண்டலக்கினமவ்வீடாய்
மரிக்கும்பிள்ளையுள்ளெல்லாம் வாழும்புந்தியங்கிசையில்
கரைத்தகிழவியானுலு நாடுங்கமனம்பரபுருடன்.

(இ - ள்.) சூரிய சந்திரர்களங்கிசையானுல் விபசாரியாவாள். அங்காரகனங்கிசமாய் லக்கினமும் அவ்வீடேயானுல் பிள்ளைகளெல்லாம் இறக்கும். புதனங்கிசமானுல் அவள் கிழவியானுலும் பரபுருடகமன முண்டாகும், எ-று. 891

புருடக்கிரகங்குருவங்கிசையில் பிறந்தாள் மகவுந்தனமுண்டாம்
குருடப்புகரினங்கிசையாற் அரும்போகந்தனமுளதே
வருடக்காரியங்கிசையில் வளருஞ்சனிவீடுலக்கினமாய்
இருடிக்கமனம்பரபுருடன் சிந்தைநோக்கபெரும்புலமே.

(இ - ள்.) புருடக்கிரகங்கள் குருவங்கிசையிலிருக்கப்பிறந்தால் பிள்ளைகளும் தனமுமுண்டாம். சுக்கிரனங்கிசையால் போகமும் தனமுமுண்டு. சனியங்கிசையாதும் சனிவீடே லக்கினமாயுமிருந்தால் பரபுருட கமனமுண்டாம், எ-று.

பலக்குரைக்கும்ஸ்திரீகளுக்குப் பகருமெட்டாமிடம்விதவை
தலக்குமேழாமிடந்தன்னுற் சுழுமகிழ்நன்பலமறியப்
பிலக்கொள்லக்கினமதுகொண்டு பேசுமொன்பானபுத்திரரும்
ஐலக்கணதீர்த்தேதமியவுரைப்பர் தாமுக்கணிதவல்லோரே.

(இ-ள்.) ஸ்திரீகளுக்குப் பலனுரைத்தால் எட்டாமிடத்தால் விதவையும், ஏழாமிடத்தால் சுகமும் கணவன் பலமும், லக்கினத்தால் அழகும், ஒன்பதால் புத்திரரும் ஆகிய இவைகளை ஸ்தவமறிந்து பலனைச் சொல்லுவர் பெரியோர், எ-று. 893

வல்லமதியாமிவள்சன்மம்வருமே ஸ்திரீகள்மனையாயின்
நல்லசுபருநோக்குமுற நாடும்வடிவுமாபரணம்
சொல்லுமிவ்விடமாண்டோன்றமைந்தோன்றப்புருடக்கிரகமிதை
நல்கிப்பார்க்கப்புருடவடிவுற்றேயிருக்குமிவளுக்கே.

(இ-ள்.) சன்மத்தில் சந்திரனிருக்க அது ஸ்திரீ வீடாயின் சுபரும்பார்க்க நல்வடிவும் ஆபரணமுமுண்டாகும். இவ்வீடுகள் ஒற்றையாயின் ஆண்கிரகங்கள் இதைப்பார்க்க இவள் புருடவடிவாயிருப்பாள், எ-று. 894

தனையார்குருசுக்கிரர்சென்மத்தனைச் சந்திரலக்கினத்தை
முனமேநோக்கவாலிபத்தின் முற்றும்போகமணமும்
தனிசூழ்மதியலக்கினத்தைச் சனிசேய்பாவர்நோக்குற
மனமேசயிக்கத்தலைநரைத்து வாழ்க்கைப்படாளிம்மாநிலத்தே.

(இ-ள்.) குரு சுக்கிரர் சென்மலக்கினத்தையும், சந்திரலக்கினத்தையும் பார்க்க வாலிபத்தில் விவாகமாய் போகக்கூடும். சந்திரலக்கினத்தை சனி அங்காரகன் பாவிகள் இவர்கள் பார்க்கக் கிழவியாகியும் கலியாணமாகாமலே யிருப்பாள், எ-று. 895

மானேசுக்கன்செவ்வாயின் மனையிலிருக்கமதியனும்
மனைச்சனியின்வீட்டிலுற வோங்கும்பாவர்மிகநோக்கித்
தானேயிவர்கள்லக்கினத்தி லிருக்கவிவளும்விபசாரி
தேனேமொழியாய்சுகிருவின் சித்தையறிந்துசொல்லுகவே.

(இ-ள்.) சுக்கிரன் அங்காரகன் வீட்டிலும், சந்திரன் சனி வீட்டிலுமிருக்கப் பாவிகள் பார்க்கவும் அன்றி இவர்கள் லக்கினத்தில் பிறந்தாலும் விபசாரியாவாளென்றறிந்து பெண்ணே! நீ சொல்லுக, எ-று. 896

சொல்லுநவாங்கிசைக்கேழ்மனையுங் கொடுஞ்செவ்வாய்மனையுமாய்
வல்சனியுமிருக்கிடல் வருமேயோனிரோகமுடன்
நல்லமதியுஞ்சுக்கிரனு கயக்கூடிலக்கினத்தில்
அல்லலுறவேயிருந்ததனை லவுகுஞ்சுகமுமுண்டாமே.

(இ-ள்.) நவாங்கிசைக் கேழாம்வீடு அங்காரகன் வீடாய் சனியிருந்தால் யோனிரோகமும் சந்திரனுஞ் சுக்கிரனுங்கூடி லக்கினத்திலிருந்தால் அழகுஞ்சுகமுமுண்டாகும், எ-று. 897

உண்டாமதியும்புதனிவரு முற்றசென்மத்திருந்திடவே
பண்டேவித்துவத்தன்மையுள்ளாளென் றும் பகர்வார்மறைவல்லோரே

சண்டேபுதனுஞ்சுக்கிரனுங் காணும்லக்கினமுற்றதனால்
கொண்டமகிழ்நன்பிரியமெனக் கூறுஞ்சௌரியமுள்ளாளே.

(இ-ள்.) சந்திரனும் புதனுஞ் சன்மத்திலிருந்தால் பண்டிதையும், புதனுஞ் சுக்கிரனுமிருந்தால் கணவனிடம் பிரியமும் சௌரியத்தவளுமாவாள், எ-று.

உள்ளசுபர்களுடன் அமனை யுற்றசென்மமுதற்கொண்டு
மெள்ளவிருக்கத்தனாவிடம் விரும்புஞ்சுகமுமுடையாளாள்
அள்ளும்பாவிகொட்டிலுறச் சூழ்க்கேதவிதனையாயிருப்பாள்
கள்ளவிழ்குழலாய்முதலிவுகள் ஏருதிநோக்குகன்றனே.

(இ-ள்.) சுபர்கள் சென்மவீடுமுதல் மூன்று வீடுகளிலுமிருந்தால் தனவாபமும், அழகும், சுகமுமுள்ளவளும், பாவிகள் எட்டிலிருந்தால் விதவையாவாளென்று விளம்பேற்கண்ணே! நீ அறிக, எ-று. 899

கன்னேமெட்டின்பதியுங் காணமொருவனங்கிசத்தில்
கன்னியிருக்கவல்வீட்டோனையக்கேதவெட்டிலிருந்ததனால்
சண்ணுஞ்சுமங்கலிமரணமெனை விளிதாங்கன்னிகேளிடம்
ஒன்னுஞ்சிங்கமிதின்மதிப் புற்றுமடைபுத்திரனே.

(இ-ள்.) எட்டுக்குடையோன் நின்றவங்கிசத்திலிருந்து அவ்வீட்டோன் எட்டிலிருந்தால் சுமங்கலியாய் மரணமாவாள். கன்னி, விருச்சிகம், ரிஷபம், சிங்கம் இவைகளில் சந்திரனிருந்தால் அற்பபுத்திரருண்டாவர், எ-று. 900

பெண்கள் ஜாதகம்

முற்றிற்று.

வியாதியறியும்படி

புலையேலக்கினதிபதி புதன்குசனமிதுனகன்னி
மேவிடுமபதிபார்க்கில் வினைக்குட்டசனத்தில்ரோகம்
வைந்தசனிக்குதுன்று மதிபரிதைப்பசனிக்கூடல்
பானைபோச்குஞ்சனையிப் பலர்முல்லைபாலுங்கொள்வன்.

(இ-ள்.) பெண்ணே! லக்கினாதிபதியும், புதனும், அங்காரகனும் மிதுனம் கன்னி இவ்விராசிகளிலிருந்து அவர்களைப் புதன் பார்க்கில் ஆசனத்தில் ரோகமுண்டாம். சந்திரனுக்கு மூன்றும் வீட்டுக்குடையவனோடு சூரியன் கூடினால் கொடுஞ்சையா யிஷத்துப பலிபேர் மூலோப்பாலையுக் குடிப்பவனுமான், எ-று. 901

பத்தாமவன்றதிபன்றன்னோடு பாவிசெவ்பார்க்கிற்கூடி
மெத்தியவோகாரதி மேவிடின்மேயபுத்தரம்
அத்தலத்திலாறதிசைக்கு ளனுகுகீர்ழிவிரோகம்
உத்தமர்சென்மமொட்டோடாமூட்டிறிலைப்பாயுந்தான்.

(இ - ள்.) பத்து மூன்றாமிடங்களின் அதிபர்களை சந்திரன் பார்த்தாலும், அன்றி அவர்களுடன் கூடி ஒரு ராசியிலிருந்தாலும், பத்தாம் வீட்டுக்குடையோன் திசைக்குள் கீர்த்தியுண்டாகும். சுபக்கிரகங்கள் லக்கினம் எட்டாமிடம் அதற்கு எட்டாமிடம் இவைகளிலிருந்தால் அற்பாயுசுண்டாகும், எ-று. 902

மூன்றொன்றுமதிபனோடு மொழிபுதன் குசனுங்கூடில்
சோரன் றுயிர்விடுத் துநின்ற துவாரமுமிரண்டதாகும்
வென்றிடுமிவர்களோடே சனியுமிசைந்துகூடில்
கான்றிடுசலத் துவாரங் கல்லடைப்பாகுமன்றே.

(இ - ள்.) மூன்று லக்கினம் இவ்விடங்களினதிபர்களோடு புதனும் அங்காரகனும் கூடினால் நீர்த்துவாரம் இரண்டாகும். இவர்களோடு சனியுங் கூடினால் சலத்துவாரத்தில் கல்லடைப்புண்டாகும், எ-று. 903

வேறு

மறையவன் லக்கினாதி வாழ்குருக்கோளுமூன்றில்
உறையின்மூன்றதிபனோ டமரிலண்டவாதரோகம்
நறைகமழ்குருசன்சன்மத்தி னண்ணிடிற்சனியும்பார்க்கில்
முறைமையாற்சிரம்பிளந்து மூக்குமங்கேயாமாய்வன்.

(இ - ள்.) குரு லக்கினாதிபதியோடு ராகு இவர்கள் மூன்றாமிடத்தி லிருந்தாலும், அன்றி மூன்றிடத்தானோடு கூடியிருந்தாலும், அண்டவாதரோக முண்டாகும். அங்காரகன் லக்கினத்திலிருக்க அவனை சனியும் பார்த்தால் தலை புடைத்து அந்த கோவிலேயே மரணமாவான், எ-று. 904

மாயுஞ்சசியுந்தீயோரை மருவிப்பாவமத்தியத்தில்
ஏயுமிருக்கசென்மாதிக் கில்லைப்பலமேனோயுமினியாம்
தீயபாவர்மத்தியத்திற் றிகழ்சென்மாதியுற்றசென்மம்
தாயபாவர்சசிபலமற் றமர்ந்தாற்பிணியராவரே.

(இ - ள்.) சந்திரன் பாபக்கிரகங்களுடன் சேர்ந்து அவர்கள் மத்தியிலிருக்கவும், சென்மாதிபதிக்கு பலமில்லையானால் நோயுண்டாகும். பாபக்கிரகங்களின் மத்தியில் சென்மாதிபதி யிருக்க, அன்றி சென்மத்தில் பாபக்கிரகங்களும் சந்திரனும் பலமற்றிருந்தாலும் நோயாளனவான், எ-று. 905

வாரெட்டாதிசத்துருநீ சத்திலிருக்கமதிப்பாவர்
சேருஞ்சென்மத்துச்சென்ம முடையோன்பாவருடன்கூடி
ஏர்சென்மாதிகுளிகனுட னிருக்கவிந்துசனிகூடி
சேருமாறில்வியத்திலிற்கச் சிறுவன்பிணியானுமரணம்.

(இ - ள்.) எட்டுக்குடையவன் பகைதானத்திலும், நீசஸ்தானத்திலு மிருக்கவும், பாவக்கிரகங்கள் சென்மத்தில் இருக்கவும், சென்மாதிபதியும் பாவக்கிர

கங்களுடன்கூடிக் குளிகனுடனிருக்க சந்திரனும் சனியுங்கூடி ஆறில் பன்னிரண்டிருக்கவும் அக்குழந்தை வியாதியால் மரணமாகும், எ-று. 906

மருவெட்டாதிசென்மத்தின் மற்றுமிரண்டோனெட்டில்
தருஞ்சென்மாதிசனிகூடச் சசியும்பாவருடன்கூட
உருவில்லாதரோகமதா மொன்றிலெட்டிவிரவியுடன்
பெருஞ்சென்மத்தாதியுறிற் பித்தரோகப்பிணிகுளிப்பன்.

(இ - ள்.) எட்டுக்குடையோன் சென்மத்திலும், இரண்டுக்குடையோன் எட்டிலுமிருக்க சென்மாதிபதியைச் சனியும், சந்திரன் பாவருடனும் கூடி வாதரோகமுண்டாகும். லக்கினத்திலும் எட்டிலும் சூரியனோடு சென்மாதிபதியும் கலந்திருந்தால் பித்தரோகமுடையவனாவான், எ-று. 907

குளிகன்கருங்கோள் சென்மத்திருந்தாலும்
குளிகன்றிரிகோணங்களினுமெட்டா மிடத்துங்குலவுகினும்
குளிகன்செவ்வாய்தான்காதியுடனே கூடியிருந்தாலும்
தெளியோர்வினையிற்சிற்றண்டத்திரண்டு திரண்டுபெருத்திடுமே.

(இ - ள்.) குளிகனும் ராகுவும் சென்மாதிபதியுடன் கூடி சென்மத்திலிருந்தாலும் குளிகன் திரிகோணத்திலும் எட்டாமிடத்திலு மிருந்தாலும், குளிகன் அங்காரகன் காலகாய் வீட்டோன் இவர்களுடனிருந்தாலும் ஒருபக்கத்து விரை அண்டம்பெரிதாகும், எ-று. 908

பெருக்குஞ்சன்மாதிபனுடனே பெரும்பாவக்கோளுடன்குசனும்
இருக்கப்பார்க்கக்கல்லதனுலேயும் பட்டுப்பிரணமதாம்
தரிக்கும்வைசூரிதன்னிலுஞ் சரீரத்தன்னில்வடுவுண்டாம்
முருக்கங்கோலமலைக்கனியுமென முதிரச்சிவந்தனிதழ்மானே.

(இ - ள்.) சன்மாதிபனோடு பாபக்கிரகங்களும், அங்காரகனும் இருந்தாலும் பார்த்தாலும் கல்லடியால் விரணமுண்டாகும். அன்றி வைசூரியாலும் தேகமெல்லாம் வடுவுண்டாகுமென்றும் அறிவாய் பெண்ணே! எ-று. 909

மானேலக்கினாதிபன்ராகுமதி செய்புதனோடவர்களும்
தானேலக்கினமாறெட்டிற் றரிக்கிற்காதுவிடத்தன்னில்
ஈனமாயினன்குட்ட மிரவிசேய்மால்சன்மாதி
தேனுமாறிற் சேர்ந்தெங்குட்டமுமா.

(இ - ள்.) லக்கினாதிபதி ராகு, சந்திரன், அங்காரகன், புதன் இவ்வைவர்களும், லக்கினம் ஆறு எட்டாமிடங்களி லிருந்தால் காதுவீட்டில் வெண்குட்டமுண்டாகும். சூரியன் அங்காரகன் புதன் சென்மாதிபதி இவர்கள் சன்மத்திலும் எட்டாமிடத்திலுமிருக்கச் செங்குஷ்டமுண்டாகும், எ-று. 910

வேறு

குட்டமாஞ்சனிராகு சென்மாதிபர்
எட்டிலாறினிற்கு பலன்கெடில்
செட்டதாகிய காலிற்செங்கருங்
குட்டமெய்யுறுமெனக் கண்டுகொள்கவே.

(இ-ள்.) சனி, ராகு, சன்மாதிபதி இம்மூவரும் எட்டு ஆறாமிடங்களி லிருந்தும் பலன்கெடுமானால் காலில் செழுத்த கருங்குஷ்டமுண்டாமெனக் கண்டு கொள்க, எ-று. 911

வியாதி தோன்றுமிடம்

கொள்ளுமாங்கிரகஞ்சென்னி ரவிமதிகுளிர்த்திங்கள்
ஒள்ளியகண்டத்தங்காரக னிடக்கரத்திற்புந்தி
வள்ளலாம்வலக்கைமன்னன் மார்பிற்சுக்கிரன்முழந்தாள்
தெள்ளியசனிகால்பாம்பு செறிந்ததோரிடத்திற்குட்டம்.

(இ-ள்.) சூரியன் சந்திரனிவர்களால் தலையிலும் அங்காரகனால் கண்டத்திலும், புதனால் இடதுகரத்திலும், குருவால் வலதுகரத்திலும், சுக்கிரனால் மார்பிலும், சனியால் முழங்காலிலும், ராகு கேதுக்களாற் பாதத்திலும் குட்டமுண்டாகும், எ-று. 912

குட்டமாக்குருங்கோளுந் சென்மாதியும்
இட்டிலக்கின மேழுறக்கேடிலா
எட்டினிற்சனியெய்த முன்சொன்னநோய்
மட்டிலாமல் வருமென்றுரைக்குமால்.

(இ-ள்.) ராகுவும், சென்மாதிபனும், சேர்ந்து லக்கினத்திலும் ஏழாமிடத்திலுமிருந்து எட்டாமிடத்திற் சனியிருக்க குட்டநோய் அதிகமாய் வருமென்று சொல்லுவர், எ-று. 913

வேறு

மாலையாசன்பாவருடன் மருவியிரண்டாறெட்டுறச்
சாலவுமைலக்கினத்தைச் சாவர்நோக்கிற்சயரோகம்
மேலுமுடனேதேய்ந்தபிறை சவராசியிற்பாவரைக்கூடிக்
காலவெட்டொன்றிலுறச் சயரோகங்கள்காட்டுமே.

(இ-ள்.) குரு பாபக்கிரகங்களோடு சேர்ந்து இரண்டு ஆறு எட்டாமிடங்களிலிருக்க, அவனையாவது லக்கினத்தையாவது பாபக்கிரகங்கள் பார்க்க க்ஷயரோகமுண்டாகும். தேய்பிறைச் சந்திரன் சராசியில் பாபக்கிரகங்க

ளோடு கூடியிருந்தாலும் அப்படியே ஆறு, எட்டு முதலாமிடங்களி லிருந்தாலும் க்ஷயரோகமே யுண்டாகும், எ-று. 914

காட்டுக்குசன்சன்மத்திலுறக் கணக்கன்பாவருடன்கூடிச்
சூட்டுமிரண்டெட்டினிலிருக்கச் சுரரோகங்கள்சன்மாதி
யிட்டும்பிருகினுடன்கூடி யெட்டிலிருக்கச்சென்மாதி
மீட்டுநீசத்தாருந்தானத்தி லிருக்கப்பிரமியநோய்.

(இ-ள்.) அங்காரகன் சன்மத்திலிருக்கப் புதன் பாபக்கிரகங்களுடன் சேர்ந்து இரண்டு எட்டாமிடங்களிலிருக்கச் சுரரோகமுண்டாகும், அன்றி சென்மாதிபதி சுக்கிரனுடன்கூடி எட்டாமிடத்தி லிருக்கவும், சன்மாதிபதி பகை வீட்டிலிருக்கவும் பிரமியநோயுண்டாகும், எ-று. 915

நோயுமாறெட்டாதிபனு ராகுவுங்கருங்கோளுடன்கூடிப்
போயுமிரண்டாமிடத்திருக்கப் புதல்சன்மத்திற்குசனிருக்க
ஆயும்பாவர்சன்மத்தை யடர்ந்துநோக்கக்குருபுனைத்துச்
செயும்வாதைப்படுமென்றுசொன்னார் செகத்திற்றெரிந்தோரே.

(இ-ள்.) ஆறு, எட்டாமிடங்களுக் கதிபர்கள் ராகுவோடுகூடி இரண்டாமிடத்தி லிருக்கவும், சன்மத்தில் அங்காரகனிருக்கவும், பாபக்கிரகங்களெல்லாம் சேர்ந்து சென்மத்தைப் பார்க்கவும், கொப்புளங்களுண்டாய், பாதையை யுண்டாக்குமென்று பெரியோர் சொன்னார், எ-று. 916

வேறு

தெரிந்துசனியுந் தேய்பிறைபாவரோ
டிருந்துலக்கினத் தெய்தவாறுடையவன்
பொருந்திரண்டா மிடத்தினிற்புக்கிட
வருந்திடக்குன்ம ரோகமும்வந்திடும்.

(இ-ள்.) சனியும், தேய்பிறைச்சந்திரனும், பாபக்கிரகங்களோடு சேர்ந்து லக்கினத்திலிருக்கவும், ஆறக்குடையவன் இரண்டாமிடம் வரவும் குன்மமுண்டாகும், எ-று. 917

வேறு

வந்தவாறுமதிபதியு மருவுஞ்சன்மம்பத்தேழில்
ஐந்திலிருக்கச்சன்மமதி லங்காரகனுமமர்ந்திடவே
முந்திலவ்வொர்பாராமற் கூடாதிருந்தாலுமோமம்
வந்தவாபிசாரத்தா லரோகம்வருந்தும்பிணியாமே.

(இ-ள்.) ஆறக்குடையோன் சன்மம், பத்து, ஏழு, ஐந்தாமிடங்களிலும் சன்மத்தில் அங்காரகனும் இருந்தாலும் அவனை சுபக்கிரகங்கள் பாராதும், கூடாது மிருந்தாலும் ஓமாபிசாரத்தால் ரோகமுண்டாகும், எ-று. 918

வேறு

பிணிகொளாறுமதிபன் சன்மாதிபும்
மணிகுசனுடன்கூடிச் சன்மத்தினில்
தணியுமூவர் தங்கியிருந்திடிற்
பிணியுமபிசாரத்தினும் பீடையாம்.

(இ - ள்.) ஆறுக்குடையோன் சன்மாதிபதி அங்காரகன் இவர்களுடன் கூடிச் சன்மத்திலிருந்தால் அபிசாரத்தால் பிணியும் பீடையுமுண்டாகும், எ-று.

வேறு

பிடியரும்லக்கினத்திற் கருங்கோன்மூன்றிடத்தில்
பெருகுசனியுறவண்டம் பெருக்குமவன்றனக்கே
கூடியசன்மத்திரவி குசனுமேகூடிற்
குன்மவலியாம்பார்க்கிற் கொடுமூச்சுண்டாகும்
நீடுசன்மாதிபன்செவ்வா யிருவருமேகூட
நின்றிடுதீயோர்காணி னிறைந்துமிகக்கூடில்
கேடுபடுங்கல்லெரிபுந் தலையுதனிற்பட்டுக்
கிளைஅடிகாயமுண்டாமே கிடைக்குந்தானே.

(இ - ள்.) லக்கினத்தில் ராகுவும், மூன்றாமிடத்தில் சனியுமிருக்க அண்டம் பெருக்கும். அன்றி சன்மத்தில் சூரியனும் அங்காரகனும் கூடியிருந்தால் குன்மவலியாம். பார்த்தால் பெருமூச்சுண்டாகும். சென்மாதிபதியும் அங்காரகனுமே கூடி அவர்களைப் பாபக்கிரகங்கள் கண்டாலும் கூடினாலும் கல்லெறிபும் தலையில் ஒருவகையான கிளை நோயுமுண்டாம், எ-று. 920

தானமெனும்லக்கினத்திற் சனிராகுநிற்கில்
சருவிபேய்பிடித்துச் சஞ்சலமுற்றிடுவன்
ஆனவமாவாசிதனிற் குசன்சன்மத்திருக்க
அவனைத்தீயோர்காணி லனிவயிற்றிவலியாம்
காணிலமென்சனி சன்மத்திருக்கச்சூரியனும்
ராகுவுங்கூடிப்பார்க்க வன்செறியாயுதத்தால்
ஊனமுறும்வயிற்றி லுதரநோயதாகும்
உலகினிலிப்படிப் பிணிகண்டுரைபகருவீரே.

(இ - ள்.) லக்கினத்தில் சனியும், ராகுவுமிருந்தால் பேய்க்கோட்படுவான். அமாவாசையில் அங்காரகன் சன்மத்திருக்கவும் அவனைப் பாபக்கிரகங்கள் கண்டால் வயிற்றுவலியுண்டாம். சனி சன்மத்திலிருக்க அவனைச் சூரியனும் ராகுவுங் கூடிப்பார்க்க ஆயுதத்தால் நோயும் அதனால் வயிற்றிலும் நோயுண்டாகும், எ-று. 921

உரைபகருக்கனும் கருநாகந்தானும்
உரைவீட்டோதிபதி யாறுமதிபதியும்
பெருமையுடனிவர்மூவர் தாமுங்கூடிமேலா
பேசியசென்மாதிபதி மகாதிசையில்
மருவியவன்றன் புசிக்கு மந்தனுடனில்
வலியதத்ரோகமே வருமெனவும்பகர்வர்
பரிவுடனேபுதன்கூடில் ரோகசரீரனுமாம்
பரித்தானவ்வோர்விழி நோக்கப்பரிகாரமாமே.

(இ - ள்.) கறுத்த கண்ணுடைய ராகு இருந்த வீட்டுக்குடையோனும் ஆறுக்குடையோனும், ராகு இம்மூவரும் சேர்ந்தால் இலக்கினத்துக்குடையோன் திசையில் சனிக்கிழமையில் புசிக்கும்வேளையில் தத்தரோகம் வருமென்று சொல்லுவர். அவர்களோடு புதனுங்கூடினால் ரோகசரீரனுவான், அவர்களை சுபர்பார்க்க அந்நோய் பரிகாரமாகும், எ-று. 922

பரிதிசனியுடன்கூடி யட்டமத்திலிருக்கப்
பாழுமகோதரநோயால் பரதவிக்கச்செய்திடுவர்
கருதியசன்மமுமே நாலாமிடங்கடமதில்
கதிரோனுங்குசனுங் கவ்வியுமேயிருக்கத்
திருவளரப்பத்தாமிடத்திற் சனியுமேநிற்கத்
திகழுதனமாவத்தன்னிற் றேய்ந்தபிறையிருக்கத்
தரிதனிற்பாம்பர் திரிகோணத்திலிருக்கச்
சூலைநோயாளனென்றேசாறு மெனச்சொல்லும்.

(இ - ள்.) சூரியன் சனியுடன்கூடி அட்டமத்திலிருந்தால் மகோதரநோயாளும், ஜன்மம் நாலாமிடங்களில் சூரியனுடனுடு அங்காரகனுடனு இருந்தாலும், பத்தாமிடத்தில் சனியிருந்தாலும், தனஸ்தானத்திலும், பாவஸ்தானத்திலும், தேய்பிறைச் சந்திரன் இருந்தாலும், ராகு கேதுக்கள் திரிகோணத்திலிருந்தாலும், சூலைநோயால் சாவானென்று சொல்லுவர், எ-று. 923

வேறு

தற்கலக்கினத் ததிபதிசனியுமே
இத்தகைரெட்டுப் பன்னிரண்டிசைத்திடில்
அத்தனிரணத் திரசினிலாமெனச்
சித்தமாதவர் தெளிந்துகண்டாரே.

(இ - ள்.) லக்கினாதிபதியும், சனியும், ஆறு எட்டு பன்னிரண்டாமிடங்களில் இருந்தால் சிரசில் விரணமுண்டாகுமென்று சொல்லுவர், எ-று. 924

வேறு

கண்டசன்மலக்கினமுன் காலுமைந்துமொன்பதினில்
கொண்டபரிதிமதியிருக்கக் கூறுகாலேழீரைந்தில்
திண்டாயரசன்சனியிருக்கச் செவ்வாய்மந்தன்வாரமதில்
அண்டிசனித்தோனுன்மத்தனுகுஞ் சடவானுவானே.

(இ - ள்.) ஜென்மலக்கினத்திலும், ஐந்து, ஒன்பதாமிடங்களிலும், சூரியனும், சந்திரனும், நாலு, பத்தாமிடங்களில் குருவும் சனியும் இருந்தால் செவ்வாய்க்கிழமை, சனிக்கிழமைகளில் பிறந்தோனுனல் உன்மத்தனும் வஞ்சகனுமாவான், எ-று. 925

ஆவார்சன்மலக்கினத்துக் கனுகுக்கேந்திரந்சோமனுமில்
பாவாய்கிரகநோக்கமிலாப் பசாசயோகமுன்மத்தம்
பூவேன்சன்மங்கேந்திரத்தில் புகருமதியுந்தானிருக்க
நாவோர்பாவரைந்தெட்டி னன்னிமுயல்கண்டமுமாம்.

(இ - ள்.) ஜென்மலக்கினத்துக் கேந்திரத்தில் சந்திரன் இருந்து அதனை வேறு கிரகங்கள் பாராதிருந்தால் பசாசயோகமாம். உன்மத்த முண்டாகும் அன்றி ஜென்மத்திலும் கேந்திரத்திலும் சுக்கிரனும், சந்திரனும், ஐந்து, எட்டாமிடங்களில் பாவிகளுமிருந்தால் முயலகண்டரோக முண்டாகும், எ-று. 926

கண்டவேணிபரிவேடக்காலுஞ் சன்மத்தாறுமே
சென்றவெட்டிருமூன்றிற் செவ்வாயென்றுதானிருக்கக்
கொண்டசன்மத்திரிகோணங் குருவுமில்லாதிருந்தால்
பண்டேகுமாரகண்டமெனப் பகர்வாய்வளிப்புந்தான்வருமே.

(இ - ள்.) பரிவேடம் ஜென்மத்திலும் எட்டு ஆறுமிடங்களில் அங்காரகனுமிருந்து, ஜென்மம் திரிகோணங்களில் குருவில்லாதிருந்தால் குமாரகண்டவலி உண்டாகும், எ-று. 927

வருமேசன்மத்துசனிசெவ்வாய் வந்திரண்டுற்பன்னிரண்டில்
புரவேயெட்டிலக்கினுதிபதி புகயேகேந்திரத்தினிலேயோர்கள்
உரவோரில்லாதானிருக்க வுண்டாமினரோகமுடன்
தருமேசரியவாதியந்தந்தானும் பிணிகொண்சாற்றிடுமே.

(இ - ள்.) ஜென்மத்தில் சனியும் செவ்வாயும் இரண்டு பன்னிரண்டாம் இடங்களில் பொருந்தவும், எட்டில் லக்கினுதிபதியும் இருந்து கேந்திரத்தில் சுபக்கிரகங்களும் மித்துருக்கிரகங்களும் இல்லாமலிருந்தால் சனரோகமுண்டாகு மென்று சொல்லுவர் பெரியோர், எ-று. 928

சாற்றுந்தனமீனமகரமுடன் றுலையிந்தராசியிலும்
தேற்றியங்கிசனாலுஞ் சேர்ந்தபாவர்தானிருக்கப்

போற்றுமதனுனிலக்கினுதி புகவேசுட்டரோகமென
ஆற்றிலினியவரானவர்களுரைப்பர்பெருமையினுல்.

(இ - ள்.) தனுசு, மீனம், மகரம், எந்தராசிகளானுலும் அவற்றின் அம்சிசமானுலும் அவற்றுள் பாவிகளிருந்து அதில் லக்கினுதிபதியுமிருந்தால் குட்டரோகமுண்டாகுமென்று பெரியோர் சொல்லுவர், எ-று. 929

பெருங்கைசன்றாவிருச்சிகமும் பேறுமேடமிடபமுடன்
ஒருமையாசியானுலு முற்றவங்கிசந்தன்னுலும்
வருமேபாவருடனகூடிவந்து சன்மத்தாதிபனும்
புரவெண்ணிற்குட்டமெனப் புகல்வாரறிவுக்கினியோரே.

(இ - ள்.) விருச்சிகம், மேஷம், ரிஷபம், எந்தராசிகளானுலும் அவற்றின் அம்சிசங்களானுலும் ஜென்மாதிபதி பாவிகளுடன் கூடி அவைகளில் வந்திருந்தாலும், குட்டமென்றே சொல்லுவர் பெரியோர், எ-று. 930

இனியசோமன்கிரணத்தி லியன்றபாவர்மிகவுறவே
தனியேயொன்பதெட்டுவியந்த சதிதானிருக்கிலுன்மத்தம்
குனியேகலைகப்பிரியமினைக் கொல்வன்கோபிதானுதி
கனியேசோம்பித்திரிவனிவனுயக் குழற்சிரவல்லியே.

(இ - ள்.) மனைவிகட் கத்தலையுடையாய்! சந்திரகிரணத்தில் பாவிகளும் ஒன்பது, எட்டு, பன்னிரண்டாமிடங்களில் சந்திரனுமிருந்தால் உன்மத்தம் கலகப்பிரியம், கோபம், சோம்பல் இவைகளைக்கொண்டுள்ளவன் ஆவான், எ-று. 931

வல்லையிரண்டிற்சனிராகு வந்தேதயிருக்கவிரண்டாதி
சொல்லும்பலன்காற்றிருக்கச் சூழும்வீட்டிற்குடையோனும்
நல்லவிரண்டுநோக்கமுற நாடுங்காரிகருநாகம்
வெல்லுந்திசையிலிரண்டாதி மேவத்தந்தரோகமிதே.

(இ - ள்.) கொடியன்னாய்! இரண்டில் சனியும் ராகுவுமாக இரண்டுக்குடையோன் அப்பனுடன் அவனிருக்கும் வீட்டிற்குடையோன் இரண்டைப் பார்க்கவிருந்தால் சனி, இராகு திசைகளில் இரண்டுக்குடையோன் புத்தியந்தரங்களில் தந்தரோகம் உண்டாகும், எ-று. 932

நாய்கடியறிய

வேறு

தக்கரண்டாமிடத்திற் சனியுடன்
ஒக்கபாவர்கள் கூடியுறைந்திட
மிக்கபாவர் வெகுண்டதைப்பார்த்திட
குக்கல்கண்டு பயத்தகலைவனே.

(இ-ள்.) இரண்டாமிடத்தில் சனியுடன் பாவிகள் சேர்ந்திருந்தாலும் பாவிகள் பார்த்தாலும் குக்கலைக்கண்டு பயந்து குலைப்பான், எ-று. 933

நேயரெண்டா மிடத்தினிசனும்
தூயரெண்டா மதிபனுஞ்சூழ்ந்திட
ஆயபாவரனுங்கிட நோக்கிட
நாயுமேகடித்திட்டிட நாணுவார்.

(இ-ள்.) இரண்டாமிடத்தில் நீசக்கிரகமும் இரண்டுக் குடையோனும் பாவிகளோடு சேர்ந்திருந்தாலும் அவர்களுடைய பார்வையைப் பெற்றிருந்தாலும், நாய்கடித்து வருந்துவான், எ-று. 934

பாம்புக்கடியறிய

வேறு

எட்டாமிடத்திற்கொடியவிராகு விருக்கினியரெண்டில்
அட்டர்கூடநோக்கமுதற் தொடர்ந்துவிஷதிருஷ்டங்களுமாம்
மாட்டார்சன்மாதிபனுமுமன்னன் கருங்கோளிர்மூவர்
பட்டாபெருவீட்டினிலிருக்கப் பாம்பாலரிட்டம்படுவாரே.

(இ-ள்.) எட்டில் ராகுவும், இரண்டில் அஷ்டகிரகங்களு மிருந்து பார்த்தால் விஷதிருஷ்டங்கள் உண்டாகும் அன்றி ஜென்மாதிபன், ஆறக்குடையோன், ராகு இவர், மூவரும் ஒருவீட்டிற் கூடியிருந்தால் பாம்பால் அரிஷ்டமுண்டாகும், எ-று. 935

வேறு

பார்செறிச்சி கரும்பாம்புக்கூடியே
ஏர்செறியேழினி லெட்டிலாற்றிடில்
சீர்செறிதமனியன் ஜென்மமேனினும்
கார்செறிவிஷத்தினா லெட்டிற்கண்டமே.

(இ-ள்.) சந்திரனும், ராகுவுங்கூடி ஏழு, எட்டாமிடங்களிலும், குரு ஜென்மத்திலும் இருந்தால் எட்டாவது வயதில் விஷத்தால் கண்டமுண்டாகும், எ-று. 936

அர்க்குணமறிய

வேறு

இத்துடன்பாவக்கிரகங் கூடிநான்கில்
இறந்தாக்காற்றிருடனு மிரண்டாம்வீட்டில்

வந்துகுளிகன் செவ்வாய்பாவர்கூடில்
வழுத்துவன்பொய் தூர்ப்பலவான் மனைவிவிபசாரி
விந்தாவிந்தவாவிறுன் தூர்வியாபாரன்
தூர்ப்போசனங்கடமைச் சுவையுடனேபுசிப்பன்
சந்ததமுநாய்போலக் கூப்புவதல்லாற
சற்றுமிதம்பேசரியான் சினன்றேருகிறானே.

(இ-ள்.) சந்திரனோடு பாவக்கிரகங்கள் கூடி நான்கிலிருந்தால் திருடனுவன். இரண்டில் குளிகன், அங்காரகன், பாவிகள் இவர்கள் கூடில் பொய் பேசுதல், தூர்ப்பலம் விபசாரமனைவி, தூர்வியாபாரம், தூர்போசனம், நாய்போலக் கதறுதல், உபசாரம் பேசாமை, ரோகம் முதலியவைகளை யுடையவனுவன், எ-று. 937

நெய்யிற்கையிடுகை

வேறு

வருஞ்சன்மமிரண்டேழி லெட்டிலிரவிதானிருக்கப்
பாருஞ்செவ்வாயல்லாமன் மற்றையோர்கள்பார்த்தருள
நெருக்கனலிற்காய்ந்திட்ட நெய்யிற்கையும்வெந்துவிடும்
சேரும்வைசூரிதன்னுலும் வாதையென்றுசெப்பிடுமே.

(இ-ள்.) ஜென்மம், இரண்டு, ஏழு, எட்டாமிடங்களில் சூரியனிருக்க அவனை அங்காரகனொழிந்த கிரகங்கள்பார்க்க நெருப்பிலிட்ட நெய்யில் கை வெந்துவிடும், அன்றி வைசூரியாலும் வருத்தப்பட வருமென்றும் சொல்லுவர், எ-று. 938

குளிகன்செவ்வாய்த்தன்னுடனே கூடிச்சன்மம்வியமாதில்
அளியநண்டிற்றுனிருக்க வாதித்தன் கண்பார்வையுறில்
தெளிவென்றுலகோர்புகழமத்தக் தெய்வச்சபையிற்செக்குழலில்
ஒளியிற்காய்ந்தநெய்யிற்கையிடுவன் தப்பாதுண்மையிதே.

(இ-ள்.) குளிகன், அங்காரகன், இவர்கள்கூடி ஜென்மம் பன்னிரண்டு, ஆறுமிடங்களிலும், கர்க்கடகத்திலுமிருக்க அவர்களை சூரியன் பார்த்தால் சத்தியத்தின்பொருட்டு சபையோர்மத்தியில் சுகநெய்யிற் கையிடுவன், எ-று. 939

ஆயுதவிரணமறிய

வேறு

ஏயதேய்பிறை யேழுறவாறிடத்
தூயனும்மியத் தூற்றிடப்பாவர்கள்
ஆயபேர்கண்டார்ந்து கண்ணேறுக்குறக்
காயம்பட்டிடாகு தைதுண்டாய்விடும்,

(இ-ள்.) தேய்பிறைச் சந்திரன் ஏழிலும், ஆறுக்குடையோன் பன்னிரண்டிலும், பாவிகள் பார்வையைப் பெற்றிருந்தால் காயம்பட்டு ஒருகை துண்டாய் விடும், எ-று. 940

ஏற்றலக்கின மெட்டாதியாயினும்
கூற்றன்றனைக் குளிகனைக்கூடியே
போற்றப்பன்னிரண் டாறெட்டிற்புக்கிடில்
தோற்றங்கா லிருதுண்டமதாகுமே.

(இ-ள்.) லக்கினாதிபதியும் எட்டுக்குடையோனும் குளிகனைச் சேர்ந்து பன்னிரண்டு, ஆறு, எட்டாமிடங்களிலிருந்தால் கால் இருதுண்டாகும், எ-று. ()

எட்டுக்குடைச்செவ்வா யிருவோர்களும்
முட்டவாறின் முன்னாங்கிழமைந்திடில்
துட்டர்கையிற் சரிகையிறுதுமே
வெட்டவாவி விடுவதுதிண்ணமே.

(இ-ள்.) எட்டுக்குடையோனும் அங்காரகனும் ஆறு, பன்னிரண்டாமிடங்களில் இருந்தால் துஷ்டர் வாளினால் வெட்ட வுயிர்விடுவது திண்ணம், எ-று. ()

வேறு

இன்னியசன்மத்திற்சனிபாம்பு தென்னைவிற்சுக்கிரன்றானும்
அன்னவமாவாசையிற் பிறந்தோனடர்ந்தகால்கரந்தடிப்படுமே
என்னியகரும்பாம்பிரவியும்பிறையு மிசைந்தொருவீட்டினிலிருக்க
மின்னினிலாவிசெல்லவேசென்னி தேடிபட்டவனியில்விழுமே.

(இ-ள்.) ஜென்மத்தில் சனியும், ராகுகேதுக்களும், கன்னியில் சுக்கிரனும் இருக்க அமாவாசையில் பிறந்தோன் கைகால்கள் தடுபடுவான், அன்றி ராகுவும், சூரியனும், சந்திரனும், ஒருவீட்டில் சேர்ந்திருந்தால் தலையறுந்து சாவான், எ-று. 943

விழுமியகதிர்சன்மத்துறச்செவ்வாய் மேவியட்டமத்தினிலிருக்க
வழுவுறத்தேய்ந்தமதிகரும்பாம்பு மருவியோர்காலினிலிருக்கச்
செழுமையிற்பிறந்தோனுடலிருபிளவாஞ் சென்மத்திற்சனியிருக்கத்
தழலியசெபாம்பிரவியும்கூடிற் சரீரமேபிளந்திருகூறும்.

(இ-ள்.) சூரியன் ஜென்மத்திலும் அங்காரகன் எட்டிலும், தேய்பிறைச் சந்திரனும் ராகுவும், ஒரேகாலிற்சேர்ந்து ஓரிடத்திலிருக்கவும் பிறந்தோன் சரீரம் இருபிளவாகும் அன்றி ஜென்மத்தில் சனியும் சந்திரன் ராகு கேது சூரியன் இவர்களும் கூடியிருந்தாலும் சரீரம்பிளந்து இரு கூறாகும், எ-று. 944

வேறு

கூறும்லக்கினத்தாதி யெட்டாதிபும்
வீறுகாலமிருந்தாலுங் கூடிடில்
சீறுமேகத்திரளிடி வீழ்ந்துடல்
கீறதாகவிறந்திடை மாள்வரே.

(இ-ள்.) லக்கினாதிபதியும் எட்டுக்குடையோனும் காலமிருந்தாலுங் கூடினால் இடிவிழுந்து சாவான், எ-று. 945

வேறு

கூறியவிரண்டிலரசனுமிருக்கக் குருவுமும்மூன்றினிற்சனியும்
ஆறுபன்னிரண்டிலரசனுமிருக்க வறுபடுங்கரங்குசனாசன்
சீறுமெட்டேழிலிறுமைந்திற் செய்புதன்சனியிராகுவே
வீறுடன்கால்களிப்படுமென்றே விளம்பினர்வேதவேதியரே.

(இ-ள்.) இரண்டில் குருவும், மூன்றில் சனியும், ஆறு பன்னிரண்டாமிடங்களில் சூரியனுமிருந்தால் கையறுபடும். அங்காரகனும், குருவும் எட்டு ஏழாமிடங்களிலும், பத்தில் அங்காரகன், புதன், சனி, ராகு இவர்களும் இருந்தால் கால்கள் அறுபடுமென்று சொல்லுவர் பெரியோர், எ-று. 946

வேதனுங்குருசுக்கிரனுமோராறின் மேவிடச்சனியும்பார்க்க
ஓதியகருங்கோளிலக்கினத்திருக்க விற்றசன்மாதிபராகுறவும்
இதமுசிரம்போமுடனினிற்காரி செறியமற்றோர்மனைதனில்
ஆதவன்கருங்கோள்சந்திரனிருக்க வனிபுதாம்இருபிளவாம்.

(இ-ள்.) குருவும், சுக்கிரனும், ஆறிலிருக்க சனிபார்க்கவும் லக்கினத்தில் ராகுவும், ஆறில் சென்மாதிபதியும் இருந்தால் தலையற்றுப்போகும். சென்மத்தில் சனியும், மற்றவீடுகளில் சூரியன் ராகு சந்திரன் இவர்களும் இருந்தால் வயிறு இருபிளவாம், எ-று. 947

வேறு

பிளவுபட்டிடும் பெருடல்ரெண்டினில்
வளமைசூரியன் மற்றும்பவிக்குசன்
இளவதேய்பிறை யெட்டிலுறச்சனி
அளவதாய்ப்பிறை தன்னைநோக்கிடில்.

(இ-ள்.) இரண்டில் சூரியனும், பன்னிரண்டில் அங்காரகனும், எட்டில் தேய்பிறைச் சந்திரனும் இருக்க அச்சந்திரனை சனி பார்த்தால் சரீரம் பிளவுபடும், எ-று. 948

கண்டதேய்பிறை சூரியன்காரிசேய்
மண்டிநால்வரு மெட்டிடவர்க்குநப்
பண்டுசுவ்வர் பாராதிருந்தகைகால்
துண்டமாகித் துயரின்மடிந்திடும்.

(இ - ள்.) தேய்பிறைச் சந்திரன், சூரியன், சனி, அங்காரகன் இவர்கள் நால்வரும், எட்டாமிடங்களில் வாசி சுபர் பாராதிருந்தால் கைகால் துண்டமாய் வருந்தி இறக்கும், எ-று. 949

மதிக்குதேய்பிறை வந்துசன்மத்துறப்
படிக்குமெட்டினிற் பானுகுசன்சனி
தொடர்ந்துமேவருங் குடிபுறத்துரை
கடுத்துவாளினுங் கண்டதுண்டஞ்செய்வன்.

(இ - ள்.) தேய்பிறைச்சந்திரன் ஜன்மத்திலும், சூரியன், அங்காரகன், சனி இவர்கள் சேர்ந்து எட்டிலுமிருந்தால் வாளினால் கண்டதுண்டஞ் செய்வான், எ-று. 950

இலங்கைராசிமானசங்கை

விழுச்சாயை சபிண்டத் துருவம்

வேறு

மீனமேடங்கன்னிதுலாம் விருப்புற்றுநூற்றெழுபதுடன்
ஆனவெட்டேடவிடைசிங்கமாகுங் குடத்தேள்மூன்றுநூறில்
ஈனமொன்பதன்றெனுவெழில்சேர் மிதுனமகரமிவைக்
கானமூன்றுநூற்றிருபான்மூன்றுமிலங்கைவிநாடியென்ப.

(இ - ள்.) மீனம், மேஷம், கன்னி, துலாம், இவற்றின், விநாடி இருநூற்று எழுபத்தெட்டு, ரிஷபம், சிங்கம், கும்பம், விருச்சிகம் இவற்றிற்கு மூந்நூற்றொன்றும், கடகம், தநுசு, மிதுனம், மகரம் இவற்றிற்கு முந்நூற்றிருபத்து மூன்றும் என்று இலங்கைக்கு விநாடிசொல்வர், எ-று. 951

என்னுந்தேசவிழுச்சாயை யியன்றதுரைக்கொருநூறும்
மன்னுமையேழாங்காஞ்சிக்குறைவர் நூறேடைப்பானேழ்
பன்னுஞ்சோழநாட்டிற்கே பகர்வாய்நூற்நாற்பானும்
தென்னபெங்களூர்தனக்கே யிருநூற்றிருபதெனச்செப்பே.

(இ - ள்.) தேசவிழுச்சாயையானது மதுரைக்கு நூற்றுமுப்பத்தைந்தும், காஞ்சிக்கு நூற்றைம்பத்தேழும், சோழநாட்டிற்கு நூற்றுநாற்பத்து நான்கும், பெங்களூருக்கு இருநூற்றுப்பத்துமாமென்று சொல்லுக, எ-று. 952

செப்பியதோர்சபிண்ட முதலிருபானான்கும்
திகழிரண்டோபதினாறு செறிமூன்றினுக்கோ
ஒப்புறுமாறேடரையே வீசமாகும்
உயர்த்துருவமிவைமூன்றை விழுச்சாயைதன்னால்
தப்பாமற்றனித்தனியே பெருக்கிவருந்தொகையை
சார்மேடம்விடைமிதுனந் தன்னின்முறையாக
இப்புவியோர்புகழிலங்கை காசிதனிற்கழிய
இயதேசராசி யளவாகுமெனலாமே.

(இ - ள்.) சொல்லியமுதல் சபிண்டம் இருபத்துநான்கும், இரண்டாவது பதினாறும், மூன்றாவது அரையே வீசமுமாகும் இதுவே துருவம் இவை மூன்றையும் விழுச்சாயையால் தனித்தனியே பெருக்கிவருந் தொகையை மேடம், ரிஷபம், மிதுனங்களில் முறையாக இலங்கைராசியிற் கழித்தால் தேசராசியளவாம் என்று சொல்லலாம், எ-று. 953

வேறு

ஆனபெண்ணு மரியுடனண்டினும்
வானேகோணுக்கேதற்கு நூலும்முறை
ஆனவாறுடன் கூட்டுகமீன்குடம்
மானுக்கெசான்ன முறைப்படிவோங்கியே.

(இ - ள்.) கன்னி, சிங்கம், கடகம், துலாம், விரிச்சிகம், தநுசு இவைகளின் கூட மீனம் கும்பம் இவைகளையும் கூட்டி சொன்னவரிசைப்படி வாங்குக, எ-று.

சீவனம்

வேறு

அம்புவியோர்செய்தொழிலாம் சீவனமுண்டாகும்
அவையன்றிலக்கினத்தோமதிவன் முப்பேனக்கும்
தம்பமொடுபத்தாம்வீட் டாங்கிசையிலிருக்கோர்
தம்மிலதிகப்பலமாய்த் தரித்தவாங்கிசைதான்
வெம்புரவிக்கேதோ ரங்கிசத்தனையன்பலமே
மேவியல்லைக்கோலும் விற்றுணைவேகொள்வன்
செம்பொன்விற்பது ராசிபலனாலுக்கோரை
திக்குபலமுண்டாயிற் செய்வனவித்தியங்கள்.

(இ - ள்.) உரைத்தோர் ஜீவனத்தை புரைக்குங்கால், லக்கினம், சந்திரன் சூரியன் வீடு இவர்களுக்குப் பத்தாம்வீட்டாங்கிசையில் இருந்தோர்களை விட்ட

பலத்தாரங்கிசை சூரியனங்கிசையாய்ப் பலப்பட்டிருந்தால் புல்லும், வைக்கோலும் விற்றுண்பவனும், ராசிபலமானாலும் செம்பொன் விற்பவனும், ஓரைதிக்கு பலமானால் வயித்தியஞ் செய்பவனுமாவான், எ-று. 955

களங்கமில்லாவெண்டிங்க ளங்கிசமேயாக்கி
கமழுமிலக்கினத்திரையைக் காணமுதலாகில்
விளங்கியகற்பயிர்த்தொழிலே புரிந்துணவுகொள்வன்
மெலியரெண்டாந்திரையைக் காணமேயாயின்
வளங்கெழுசித்துவிற் சம்பான்கப்பல்சேர்க்கோட்டி
வாழ்வன்மூன்றாந்திரையைக் காணமேயாயின்
இளம்பிடியோதிமந்தனையும் பழித்தநடைமடவார்
இணக்கத்தாற்சீவன முண்டென்பரினியோரே.

(இ - ள்.) சந்திராங்கிசமாய் லக்கின முதற் றிரேக்காணமாயின் பயிர்த்தொழில் செய்பவனும், இரண்டாவதானால் கப்பலோட்டியும், மூன்றாவதானால் பெண்கள் சிநேகத்தால் சீவனமுமுண்டென்பார் பெரியோர், எ-று. 956

இனியசெவ்வாயங்கிசத்தி லக்கினமேபலமாய்
இரும்புவெள்ளிசெம்பொனும் விற்றிருப்பனவாங்கிசைதான்
கனியபலமாயிடி லக்கினியிலுறுதொழிலே
நடத்திடுவன்றிரிங்கிசாங்கிசம் பலமேயாயின்
கனியுறுமாயுதம்பிடித்துச் சேவிப்பனேழாம்
தானமதுபலமாயிற் றக்கதொழில்செய்வன்
கனிமொழியாயிரவிமுதல் சனிமட்டுமெண்ணிக்
கண்டதுசத்தாங்கிச மேழாம்பலன்கண்டீரே.

(இ - ள்.) அங்காரகனங்கிசத்து லக்கினம் பலமாயிருந்தால் இரும்புவெள்ளி, பொன் இவைகள் விற்பவனும், நவாங்கிசம் பலமாயிருந்தால் அக்கினித்தொழிலால் ஜீவிப்பவனும், திரிங்கிசாங்கிசம் பலமாயிருந்தால் ஆயுதம்பிடித்துச் சேவிப்பவனும், ஏழாம் ஸ்தானம்பலமாயிருந்தால் குலாசாரத்தொழில் செய்பவனுமாவானென்றும் பெண்ணே! சூரியன்முதல் சனிவரைக்கும் எண்ணிக்கண்டது சத்தமங்கிசம் ஆகையால் ஏழாம்பலனைக் காண்பீர், எ-று. 957

கண்டபுதனங்கிசத்தின்பல னவாங்கிசையே
காவியங்கற்பன் றுவாதசாங்கிசமேயாயின்
மிண்டுசிற்பசாஸ்திரமேயறிந் துணவுகொள்வன்
மேவுந்திரிசாங்கிசமே யெழுதுந்தொழிலான்
கொண்டவறுபதிலோரை யங்கிசமேற்கணிதந்
குறித்திடுவன்புதனிருந்த ராசிதனைப்பிரித்து

மண்டியபடியறுகுசெய்யு மொற்றைப்பங்கில்
வந்துபுதனிருக்கிலனவே வழுத்தல்வேண்டும்.

(இ - ள்.) புதனங்கிச நவாங்கிசைகளின் பலன் காவியங் கற்பவனாவான் துவாதசாங்கிசமானால் சிற்பசாஸ்திரத்தால் ஜீவனஞ்செய்வான். திரிசாங்கிசமானால் எழுதுந்தொழில் ஜீவிப்பன் அறுபதில் ஓரையங்கிசமானால் கணிதத்தால் ஜீவிப்பன் புதனிருந்த ராசியைப்பார்த்து அறுபதுபங்காக்கி அதில் ஒற்றையில் புதனிருந்தாலே முன்சொன்ன கணித சீவனமாம், எ-று. 958

வேண்டுகுருவங்கிசத்தின் முதற்றிரையக்காணம்
விப்பிராற்பலனிரண்டாந் திரையக்காணத்தான்
பூண்டதேவதைகளாற் பலன்மூன்றாங்காணம்
புண்ணியத்தாற்பயனுந்தச் சுக்கிரனங்கிசைக்குத்
தாண்டுசாபிகளெருமைபெறு மூன்றாங்காணம்
தக்கவெள்ளிவிற்ப னடுத்திரையக்காணத்தான்
மீண்டுமுதற்றிரையைக் காணமதுவேயாயின்
விரவுநவரத்தினமே வியாபாரஞ்செய்வன்.

(இ - ள்.) குருவங்கிசத்தில் முதல் திரேக்காணத்திற்குப் பிராமணராலும் இரண்டாந்திரேக்காணத்திற்குத் தேவதைகளாலும் மூன்றாந் திரேக்காணத்திற்குப் புண்ணியத்தாலும் சுக்கிரனங்கிசத்தில் மூன்றாந் திரேக்காணமானால் பசு எருமை முதலியவற்றாலும் இரண்டாந் திரேக்காணத்திற்கு வெள்ளிவிற்றும் முதல் திரேக்காணத்திற்கு நவரத்தின வியாபாரஞ்செய்தும் பிழைப்பான், எ-று.

செய்யசனியங்கிசத்திற் பலன்சிறுவன்றனுந்
செப்பியதிரிங்கிசமேற் பிரயாசத்தொழிலாம்
வெய்யபாவக்கிரகம் லக்கினத்தைப்பார்க்கில்
மெத்தவேசுமைசுமந்து மெய்க்குணவுகொள்வன்
ஐயவிலக்கினந்தனை நீசருங்கண்டக்கால்
ஆகாதகாரியங்க ளவத்தொழிலேசெய்வன்
துய்யசனியங்கிசத்திற் சுபக்கிரகங்கள்கூடில்
துலக்கிடவேதான் சிற்பத்தொழில்செய்துவாழ்வன்.

(இ - ள்.) சனியங்கிசத்தின் பலனாவது அது திரிங்கிசமானால் கஷ்ட வேலையாலும் பாவிகள் லக்கினத்தைப் பார்த்தால் சுமைசுமந்தும் லக்கினத்தை நீசர்கண்டால் ஆகாத அவத்தொழில் செய்தும் சனியங்கிசத்தில் சுபக்கிரகங்கள் கூடினால் சிற்பத்தொழில் செய்தும் சீவிப்பான், எ-று. 960

வேறு

ஆதவன் சசிலக்கின மிவைமூன்றுக் கதிபரிலதிகமாம் பலத்தோன், அடைந்தவங்கிசத்தான் பரிதியங்கிசமாயம் பொன்னும் வைக்கலும்விற்று, நீதியாய் வயித்தியங்களுஞ் செய்வன் கிள்பிறையங்கிசமாயின், நீரினிற்சோங்கு நடத்தியேயுய்வன் நிலமகனங்கிசையாயின், ஓதுமக்கினியாலிரும்பு பொன் வெள்ளி யுருக்கவாயுதங்களினாலும், உணவுகொண்டிடுவன் புந்தியங்கிசமேலுரைத்திடு கணிதமுங் கணக்கும், நிதமுசிற்பத்தொழில்கள் காவியத்தாற்சீவனம் வேந்தனங்கிசைக்குத், தெய்வமாமறையோர் பெரியவராலும் சீவனம் புரிந்திருப்பன்.

(இ - ள்.) சூரியன் சந்திரன் லக்கினம் இம்மூன்றுக்கதிபரில் அதிக பலமுடையோனடைந்த வங்கிசம் சூரியனங்கிசமானால் பொன் வைக்கல் விற்றும் வயித்தியஞ்செய்தும் சீவிப்பன் சந்திர னங்கிசமானால் நீர்சோங்குசெய்து பிழைப்பன். அங்காரகன் அங்கிசமானால் அக்கினியாலும், இரும்பு பொன் வெள்ளி எழுது இந்த ஆயுதங்களாலும் சீவிப்பன். புதனங்கிசமானால் கணிதம் கணக்கு | சிற்பத்தொழில் காவியமிவைகளால் சீவிப்பான். குருவங்கிசைக்கு பெரியோர்களாலும் அந்தணர்களாலும் சீவிப்பான், எ-று. 961

வேறு

இருக்குசுக்கிர னங்கிசமேறினே
தெரிந்தரத்தினம் வெள்ளியாற்சீவனம்
பொருந்தசனங் கிசம்புகவினமாய்
வருந்திடுந்தொழிற் செய்வன்வலமிலான்.

(இ - ள்.) சுக்கிரனங்கிசமானால் ரத்தினம் வெள்ளி விற்றுச் சீவிப்பான் சனியங்கிசமானால் ஈனமாய் வருந்தும் தொழில்செய்து ஜீவிப்பான், எ-று 962

கேந்திரபலன்

வேறு

திக்குப்பலமாவது செய்திபத்தில்
தொக்கக்குருபுந்தி யிலக்கினத்தாற்றல்
தக்கச்சனியேழினிற் சூழ்ந்திடுவ் வல்லன்
லக்கிரன்சனிநாலில் வலியெனச்சொல்லே.

(இ - ள்.) கேந்திரபலமாவது அங்காரகனும் சூரியனும் பத்திலும் குருவும் புதனும் இலக்கினத்திலும், சனி ஏழிலும் சுக்கிரனும் சந்திரனும் நாலிலுமிருந்தால் வலியென்று சொல்லுக, எ-று. 963

வேறு

பத்தாகுமதிபதியை யிரவிசசிபார்க்க
பகிர்ந்திவர்மூவருங்கூடப் பத்தாம்வீட்டதிபன்
மெத்திரவிசசி வீட்டினிலுமிருக்க
வெற்றிமுடியாசர்பக்கன் மேவியவர்தம்மைப்
புந்தியுடனேசேர்ந்து சேவைமேசெய்வன்
புகழ்பத்தாமதிபன் பூபுத்திரனைக்கூடில்
சித்தமாய்ச்சேனுபதிக டமைச்சேர்ந்தே
சீவனம்பண்ணுவனென்றே தெரிந்துரைசெய்வாரே.

(இ - ள்.) பத்துக்குடையோனை சூரியனும் சந்திரனும் பார்த்தாலும், மூவரும் கூடினாலும், பத்துக்குடையோன் சூரியசந்திரர் வீட்டிலிருந்தாலும், அரசரிடம் சேர்ந்து ஜீவிப்பன். பத்துக்குடையோன் அங்காரகனைச் சேர்ந்தால் சேனுபதிகளைச் சேர்ந்து ஜீவிப்பானென்று சொல்லுவர் பெரியோர், எ-று. 964

செய்யபத்ததிபன்புதனைச் சேர்ந்துமேகிற்கில்
ஸ்திரீகளினுடபுத்திரியாற் மெரிகணிதத்தாலும்
தூயகுருவுடன்கூடிற் புராணசாத்திரத்தால்
சுருதியாலமைச்சராசிரியர் துரைகட்டமால்
வையமெல்லாம்புகழ் பாக்கியத்தோடுசீவிப்பன்
மகிழுஞ்சுக்கிரனுடனே வந்துமிகக்கூடில்
பையமறையோரமைச்சர் பரிகரியவெருமை
படைத்துமரத்தினக்கிரயம் பண்ணியுஞ்சீவிப்பன்.

(இ - ள்.) பத்துக்குடையோன் புதனுடன் சேர்ந்திருந்தால் ஸ்திரீகளாலும், புத்திரியாலும், கணிதத்தாலும், குருவுடன் சேர்ந்தால் புராணசாஸ்திர சுருதிகளாலும், அமைச்சர் ஆசிரியர் துரைகளாலும் உலகத்தார் புகழும்படி பாக்கியத்துடனிருக்கும், சுக்கிரனுடன் சேர்ந்தால் பிராமணர் அமைச்சர் இவராலும், குதிரை யானை எருமையாதிகளாலும் ரத்தினம் விற்றும் ஜீவிப்பான், எ-று. ()

சீவியமார்ச்சனியும் பத்ததிபனுங்கூடில்
சிலம்பங்கள்படிப்பித்துத் திருடியுமேதிரிந்து
பாவங்கடமையொருவர் தமக்குப்போதிப்பித்தும்
படர்வனத்திலிங்கிசைகள் பண்ணிமரம்வெட்டிப்
பூவுலகிற்சீவிப்பன் பத்ததிசெவ்வாய்
பொருபாம்புமூவர்களுமே பொருந்திநிற்கில்
தாவுகளில்விஷப் பிரயோகங்களேயேசெய்துந்
தரணியிலே திருடியுமே சீவிப்பன்றனே.

(இ-ள்.) சனியும் பத்துக்குடையோனுஞ் சேர்ந்தால் சிலம்பங்கள் படிப்பித்தும், திருடியும், பாலகர்களைப் போதித்தும், வனத்திலிம்சைசெய்து மரம் வெட்டியும் பத்துக்குடையோன் அங்காரகன் ராகு இவர்கள் கூடினால் விஷப் பிரயோகஞ் செய்தும், திருடியும் ஜீவிப்பான், எ-று. 966

தானமாமைந்தாகு மதிபதிபாவியுமாய்த்
தக்கவாளெயிற்றரவந் தன்னையுமேகூடி
சனமிலாதிருமூன்றிலே யிருந்தக்காலும்
எண்ணியமூன்றுமதிபன் பாவியுமேயாகி
ஊனமுறும்பாம்புடனே கூடியெங்கேயேனும்
உற்றாலுமவன்மனையா ளுடனேமற்றோரை
மானமறக்கூட்டியவன் கைப்பொருளைவாங்கி
வயிறுவளர்ப்பானெனவே வழுத்துவர்மாதவரே.

(இ-ள்.) ஐந்தாம் வீட்டோனை பாவியாய் கேதுவைக்கூடி ஆறிலிருந்தாலும், மூன்றுக்குடையோன் பாவியாய் ராகுவுடன்கூடி எங்கே யிருந்தாலும் மனைவியை மற்றோர்க்குக் கூட்டிக்கொடுத்து வயிறு வளர்ப்பான், எ-று. 967

வழுத்தியசுக்கிரன் செவ்வாய்சனிபுந்தியரசன்
மருவவினைத்தொழிலாய் வயிறுவளர்த்திடுவான்
செழித்தபிறைசசிவெள்ளி செவ்வாய்புந்தியுமே
செறியுமரம்வெட்டிவிற்றே சீவனமேசெய்வன்
இழுத்தமுடன்வெள்ளி குருசெவ்வாய்கூடில்
ஏழைதுக்கமுளன் கணக்கெழுதியுஞ்சீவிப்பன்
பழித்தசனிகுருவெள்ளி பதங்கன்செவ்வாயும்
பரிந்துறின்மந்திரவித்தை பண்ணியினிருப்பன்.

(இ-ள்.) சுக்கிரன், அங்காரகன் சனி, புதன், குரு இவர்கள் சேர்ந்தால் ஈனத்தொழில் செய்து வயிறு வளர்ப்பன், சந்திரன், சனி, சுக்கிரன், அங்காரகன், புதன் இவர்கள் கூடினால் மரம்வெட்டி விற்று சீவிப்பன். சுக்கிரன், குரு, அங்காரகன் இவர்கள் கூடினால் துக்கமுள்ளவனும் கணக்கெழுதிச் சீவிப்பவனுமாவான். சனி, குரு, சுக்கிரன், ராகு, அங்காரகன் இவர்கள் கூடினால் மந்திர வித்தை செய்து சீவிப்பான், எ-று. 968

இருந்ததனலாப பாக்கியாதிகுசனானால்
இயல்சேவகவிருத்தி யினியவர்க்குச்செய்வான்
செறிந்தபுதனாயின் வித்தைவாகனங்களென்று
சொல்லியகுருவாயின் சகலபாக்கியவான்

அருந்தவஞ்சேர்பிருகாயின் பூவிலாபமேவும்
அரவுசனியாயிற் சோரங்களினைதியினால்
வருந்துமீனத்தொழிலே புரிந்துசீவிப்பன்
மதிவதனத்திலகநுதல் வளர்வஞ்சியரே.

(இ-ள்.) தனம் லாபம் பாக்கியம் இவைகட்குடையோன் அங்காரகனானால் சேவகவிருத்தி செய்வான். புதனானால் வித்தை வாகன முதலியவையுள்ளவனாவன். குருவானால் சகல பாக்கியவானாவான். சுக்கிரனானால் பூலாபமுடையனாவான். ராகு, சனி இவர்களானால் சோரத்தினால் ஈனத்தொழில் புரிந்து சீவிப்பான் என்று சந்திரமுக முதலிய வனப்புகளை யுடையவளே நீ அறிக, எ-று. 969

வேறு

வஞ்சிபேசனி செவ்வாய்மதிமகன்
செஞ்சொல்சுக்கிரன் தேவர்கடன்குரு
அஞ்சுபேருமொன்றாக வமர்ந்திடில்
துஞ்சுமீனத்தொழில் செய்துவாழ்வனே.

(இ-ள்.) பெண்ணே! சனி, அங்காரகன், புதன், சுக்கிரன், குரு இவர்கள் ஒன்றாய்ச் சேர்ந்தால் ஈனத்தொழில்செய்து வாழ்வன், எ-று. 970

வேறு

கண்டசன்மகேந்திரத்திற் காணுமைந்தெட்டொன்பதனில்
பண்டேசோமன்புகரிருக்கப் பாரிதனக்குமறுபுருடன்
கொண்டேவிடுத்துச்சீவனமாய்க் கொள்வன்கூறும்புவியோர்க்குக்
கெண்டைவிழியின்பார்வையினாற் கிட்டியணையுந்தனத்தாளே.

(இ-ள்.) சன்மம் கேந்திரம் ஐந்து எட்டு ஒன்பதாமிடங்களில் சந்திரனும் சுக்கிரனுமிருந்தால் தன் மனைவிக்கு வேறு புருஷர்களைத் தேடிவிட்டு அதனால் சீவிப்பானென்று கெண்டைபோலும் பார்வையினால் அனையும் ஸ்தனமுடையாளே! நீ அறிவாயாக, எ-று. 971

துர்ப்பிட்சகாலம்

வெண்

மந்தனுயிருபாதி யாசனிக்கால்வர் மாறியேகூடில்வினையும், மழைபயிரற்பமிவரிருவர்க்கு மற்றொருபத்தினிலொருவர், இந்தவா யிருக்கின் வெட்டையாலெதாடிடபடுத்தேகள் கோள்சிக்கமீனம், இனிய கும்பத்திலிருக்கி லிப்புவியிலிறைபுதன் மனுஷியருமடிவர், அந்தவீட் டின் முன்சொன்ன நால்வராதித்தன் குசனொடுங்கூடி, அமரவேவருடி

களிருந்த லூரெங்குமலகை நாய்களிருடிகொள்ளும், தந்திரஞ்சுருதி மொழிப்படிபுரிந்து தக்கதோர் வேள்விகளெல்லாம், தான்மறுத்திடு மம்புவிகள் காடாகுந்தானெனச் சாற்றுவர் பெரியோர்.

(இ - ள்.) சனி, ராகு, கேது, குரு இவர்கள் மாறிமாறிச் சேர்ந்தால் மழையும் பயிரும் அற்பமாம். இவ்விருவருக்கும் பத்தில் ஒருவர் இப்படியிருந்தால் உயர் உஷ்ணகாலமாம். ரிஷபம், விருச்சிகம், துலாம், சிங்கம், மீனம், கும்பம் இவ்விராசிகளில் புதனிருந்தால் மனுஷர் விருதியாய் மடிவார்கள். அந்த வீடுகளுக்காறில் முன்சொன்ன நால்வர் சூரியன், அங்காரகன் இவர்கள் கூடியிருந்தால் குடிகளிருந்த ஊரெங்கும் பிசாசு நாய் நரி வசிக்கும். வேதத்திற் சொல்லப்பட்டுச் செய்யும் வேள்விகளெல்லாம் மறுத்திடும். ஊர்கள் காடாகுமென்று சொல்லுவர் பெரியோர், எ-று. 972

சாற்றியவரசனோடுசனியாதல் தரைசுதனுதல்பாம்பாதல், தானுறக்குருவுக் கேழினின்றாலுங் 'தகர்க்கிறையோடு பாம்புறினும், போற்றியகுசனைக்காரி கூடினுமம்புவைமீன்றேள், கடையினிலும்புணரிஷபத்தின்மத்தியிலேனும் பொருசிங்கத்தாதியிலேனும், கூற்றமாஞ்சனி நின்றான் மழையின்றிக்குவலயத்துளபவுயிரும், கொடும்பசியாலுஞ் சமர்க்களத்தாலுங் குறைமாண்டிடுமெனக்கூறே, ஏற்றமன்னிடபந் தேள் தனுசுசிங்கம்மீனமிவையினிற் காரிசேயாதல், இருந்தவக்கிரத்தானாகில்மன்னவர்க்கே யிடுக்கணுண்டெனவுரைத்திடர்.

(இ - ள்.) குருவாவது சனியாவது அங்காரகனாவது பாம்புகளாவது குருவுக்கு ஏழிலிருந்தாலும், மேஷத்திற்குடையவனோடு ராகுவிருந்தாலும், அங்காரகனை சனி சேர்ந்தாலும், மீனம் விருச்சிகக் கடையிலும், ரிஷபத்தின் மத்தியிலும், சிங்கத்தின் முதலிலுமானாலும், சனியிருந்தாலும் மழையில்லாமல் உலகவுயிர் பலரும் கொடிய பசியாலும், போர்க்களத்தில் குறைபட்டும் உயிரிழப்பர். மீனம், ரிஷபம், விருச்சிகம், தனுசு, சிங்கம் இவைகளில் சனியாவது அங்காரகனாவதிருந்து வக்கிரமானால் அரசர்க்கே துன்பமுண்டாகுமென்றுஞ் சொல்லுக, எ-று. 973

இடம்பைசேர்வெள்ளிக் கேழினிற்குருவுமிருந்திடின் மாரிபெய்யாதாம், இரும்புதன்வெள்ளி காப்பனிளிரவி யிருக்கவெய்யோற்கு முன்சனிசேர, உடன்கலந்திருக்க மாரியுமறுத்தே யுலகினிற்பஞ்சமென்றுரைக்கும், உயர்சனிதனக்கு மூன்றுபன்னொன்றி லும்பர் கோன்குருவும் வந்துறையில், கெடும்புவிதன்னி னரர்பசுமுதலாய் நின்றநாற்காலுயிர் தனக்கும், கேடியாள்பவர்க்குந் துன்பமேயாகு நின்றிடுங்காதற்கே, திடம்பெறவைந்தாம் வீட்டினிலரசன்சேர்ந்திருந்தகாலையினில், செகமொருமூன்றி லுளபலவுயிர்க்குந்தீங்குறு மென்றுரைசெய்வர்.

(இ - ள்.) சுக்கிரனுக்கேழில் குருவிருந்தால் மழைபெய்யாதாம். புதன், சுக்கிரன் இவர்கள் மத்தியில் சூரியனிருந்தாலும், சூரியனுக்குமுன் சனி அங்காரகன் இவர்கள் கலந்திருந்தாலும், மாரிவறண்டு உலகத்தில் பஞ்சமுண்டாம். சனிக்கு மூன்று பதினொன்றாமிடங்களில் குருவந்திருந்தால் நரர் பசு முதலிய நாற்கால் ஜெந்துக்கள் அரசர் இவர்கட்குத் துன்பமுண்டாகும். சனிக்கு ஐந்தாம் வீட்டில் குருவிருந்தால் உலகமூன்றிலுமுள்ள உயிர்கட்கெல்லாம் துன்பம் வருமென்று சொல்லுவர், எ-று. 974

மறுமையிலடையுமிடம்

வேறு

பன்னிரண்டாமதிபனைச் சேர்ந்தவராற்சொல்லும்
பலன்குருசுக்கிரனாயிற் றெய்வலோகம்
மின்னுகதிருடன்கூடி யிராஜயோகம்
வெண்மதியுமுடன்கூடிற் பிதிர்லோகந்தான்
மன்னுகுசனைக்கூடில் வீரசொர்க்கம்
மந்தன்பாம்புடன்கூடின் மாலைபதியாகும்
உன்னுபுதன்கூடி லெங்கெங்கேதாம்போய்
உற்றிருக்கவேண்டுமெனி லங்குறையலாமே.

(இ - ள்.) பன்னிரண்டுக்குடையோனைச் சேர்ந்தவர்களால் அடைவதாய்ச் சொல்லும் பலன்கள்: குரு சுக்கிரர்களானால் தெய்வலோகமும், சூரியனானால் இராஜயோகமும், சந்திரனானால் பிதிர்லோகமும், அங்காரகனானால் வீர சொர்க்கமும், சனி, ராகு கேதுக்களானால் மறலியூரும், புதனானால் எங்குசெல்ல விருப்பமோ அங்கங்கும் போய்ச் சேரலாம், எ-று. 975

மாரகதிசையறிய

வேறு

மாரகத்தின்றிசையறிய வருநான்காந்திசைசனியேயைந்தாறும்
பார்நனைக்குஞ்சுதன்செவ்வாயைந்தாகுந்திசை தானேபாரிந்தாறும்
பேருதித்தவாறாகுந் திசையாசானாலும்பின்புராகு
சீருதித்தவேழாகுந்திசையானாலும் மரணந்திண்ணந்தானே.

(இ - ள்.) மாரகத்தின் திசைவிவரம் எப்படியென்றால் நான்காவது திசை சனியானாலும், அங்காரகதிசை ஐந்தாவதானாலும், குருதிசை ஆறாவதானாலும், ராகுதிசை ஏழாவதானால் அத்திசைகளிலும் மரணமுண்டாவது நிச்சயமே. ()

கிரகதிசையறிய

வேறு

கார்த்திகைமுதல்மூவொன்பானாள்களும் பகல்திங்கள்செவ்வாய்
கார்த்தவிராகுப்போன் சுன்கவின் புந்திகேதுவெள்ளிச்
சீர்த்தவர்க்கிம்முறையாகச் செப்பியதிசைகளாகும்
வார்த்தையற்றைநாண்மீது மிவ்வாறேகொள்ளற்பால.

(இ - ள்.) கார்த்திகை நட்சத்திரமுதல் பரணிநட்சத்திரம் வரைக்குமுள்ள 27-நட்சத்திரங்களையும் சூரியன், சந்திரன், அங்காரகன், ராகு, குரு, சனி, புதன், கேது, சுக்கிரன் இவர்களுக்கு வரிசையாக ஒவ்வொரு நட்சத்திரமாகக் கொண்டு மூன்றுமுறை மடக்கிவர ஏற்படுவதாகிய நட்சத்திரங்கள் மூன்றிலொவ்வது ஜென்மமானால் அவ்வவர்கள் திசைகளென்றறியவேண்டும். மற்றைய நட்சத்திரங்களையும் இப்படியே கொள்ளவேண்டும், எ-று. 977

கிரகதிசாவருடமறிய

சூரியன்றிசையாண்டாறு திங்கட்குப்பத்துச்செவ்வாய்க்
காருமேழ்ராகுக் கதைபதினெட்டுப்பொன்னுக்
கீரெட்டுமேந்தற்கியம்பு பத்தொன்பதாகும்
புந்திக்கோர்பானேழ்சிக்கேழ் வெள்ளிக்கைநான்கே.

(இ - ள்.) சூரியனுக்கு ஆறு வருஷமும், சந்திரனுக்கு பத்துவருஷமும் அங்காரகனுக்கு எழுவருஷமும், ராகுவுக்கு பதினெட்டுவருஷமும், குருவுக்கு பதினாறுவருஷமும், சனிக்குப் பத்தொன்பது வருஷமும், புதனுக்கு பதினேழு வருஷமும், கேதுவுக்கு எழுவருஷமும், சுக்கிரனுக்கு இருபது வருஷமும் திசைகளாகும், எ-று. 978

புத்திபிரிக்கவகை.

கோள்களின்றிசையிற்புத்தி குறித்திடற்றிசையோனுண்டை
நீள்புத்திநாதனுண்டா னேர்படப்பெருக்கிக்கண்டே
வாளமர்தொகையொன்றிற்கு மருவுநாண்மூன்றதாகும்
வாள்கடல்கெண்டைவண்டு வசனமாம்விழியினளே.

(இ - ள்.) கிரகங்களின் திசைகளில் புத்தியை எடுப்பதெப்படியென்றால் திசாதிபதியின் மொத்தவருஷத்தைப் புத்திநாதன் திசை மொத்தவருஷத்தால் பெருக்கிவந்த தொகையை மீண்டும் மூன்று நாளால் பெருக்கநாளாகும். அதை மீண்டும் முப்பதால் வகுக்க அவரவர்கட்குரிய புத்தி மாதநாட்களாகும் என்று உணர்வாய் பெண்ணே! எ-று. 979

சித்திரம் பிரிக்கவகை

அவரவரபகாரத்தி னுண்டொன்றின்மூன்றுநாளும்
நவிலுமாதங்கால்நாளு நாளொன்றிற்பாதிக்கன்னல்
இவைமூன்றுதொகையைச்சேர்க்கத் தான்வருஞ்சித்திரந்தான்.

(இ - ள்.) அவரவர்களுடைய அபகாரத்தில் வருஷம் ஒன்றுக்கு 3-நாளும், மாதம் ஒன்றுக்குக் கால்நாளும், நாளொன்றுக்கு அரைக்கன்னலுமாகக் கொண்டு இவை மூன்றையும் திசை வருஷத்தால் பெருக்கிவந்த தொகையைச் சேர்க்கச் சித்திரமுண்டாம், எ-று. 980

உட்சித்திரம் பிரிக்கவகை

வெண்பா

ஒருநாளுக்கோரரை நாழிகையாந்தோற்றும்
ஒருநாழிகைக்கரைவிநாடி—யுருவமாம்
எத்திசைக்குமிவர் வருடங்கொண்டெண்ணச்
சித்தனைக்குட் சித்திரமாச்செப்பு.

(இ - ள்.) ஒருநாளுக்கு அரைநாழிகையும், ஒருநாழிகையும், அரைவிநாடியு மாகக்கொண்டு எத்திசைக்கும் அந்தந்த வருஷத்தைக்கொண்டெண்ண வருவது உட்சித்திரமென்று சொல்லுக, எ-று. 981

கூடுபலனைக்கொடுவென்பான் போதகனும்
வேறுமுன்னித்தடுப்பான்வேதகனும்—தேறுபலன்
கூட்டுவிப்பான்பாசகனுங் கோள்மாயத்திசைக்கே
ஈட்டுபொருள் காரகனிவான்.

(இ - ள்.) பலனைக் கொடுவென்பான் போதகனும், அதை மறுப்பவன் வேதகனும், பலனைக்காட்டுவிப்பவன் பாசகனும், அந்தத்திசைகளுக்குப் பொருளீவோன் காரகனுமாவார்கள், எ-று. 982

பானுதிசைக்குமந்தன் பாசகனுஞ்சுக்கிரனே
மானேகேள்வேதகனு மன்னவனும்—தேனனையாய்
காரகனுஞ்செவ்வாயுங் காசினியுங்காசினியோர்தாமறிய
ஏரணியும் போதகனுமே.

(இ - ள்.) சூரியதிசைக்கு சனிபாசகனும் சுக்கிரன் வேதகனும், குருகாரகனும், அங்காரகன் போதகனு மாவார்கள், எ-று. 983

இந்துதிசைக்குவெள்ளி யேற்றபோதார்பாசகனும்
விந்தைமலர்கண்பனே வேதகனும்—மந்தனை
சங்காரதிபுடைசூழ் காரினியிற்காரனும்
அங்காரகன் போதகன்.

(இ - ள்.) சந்திரதிசைக்கு சுக்கிரன் பாசகனும், சூரியன் வேதகனும், சனி காரகனும், அங்காரகன் போதகனுமாவார்கள், எ-று. 984

மங்களனூர்தந்திசைக்கு மார்த்தாண்டன்பாசகனும்
திங்களரும்போதகனுந் தேயிழையீர்—பொங்குபுகழ்
மேவியபுதன்வேதகனு மித்தாரணியோரறிய
ஆயசனி காரகனாகும்.

(இ - ள்.) அங்காரகதிசைக்கு சூரியன் பாசகனும், சந்திரன் போதகனும், புதன் வேதகனும், சனி காரகனுமாவார்கள் என்று அறிவீர் நங்கைமீர்! எ-று. 0

புந்திதிசைக்குப் பூரவலனைபோதகனும்
சந்திரனைபாசகனுந் தானவன்—இந்துநுதல்
மின்னனையீர்செவ்வாயும் வேதகனும்வெள்ளியோ
மன்னுபுகழ் காரகனுமாம்.

(இ - ள்.) சந்திரன்போலும் நெற்றிவாய்ந்த பெண்காள்! புதன் திசைக்கு குரு போதகனும், சந்திரன் பாசகனும், அங்காரகன் வேதகனும், சுக்கிரன் காரகனு மாவார்கள், எ-று. 986

வேந்தன்மகாதிசைக்கு வெய்யவனைவேதகனும்
போந்துவருஞ்செவ்வாயே போதகனும்—சாந்திசெறி
சந்திரனைகாரகனுந் தையலேகாரணியில்
மந்தனை பாசகனே.

(இ - ள்.) பெண்ணே குருதிசைக்கு சூரியன் வேதகனும், அங்காரகன் போதகனும், சந்திரன் காரகனும், சனி பாசகனுமாவார்கள், எ-று. 987

வெள்ளிமகாதிசைக்கு வேந்தனைபோதகனும்
தெள்ளுபுதன்பாசகனுந் செங்கதிரும்—மெள்ளவரும்
காரகனைதானுருக்காரியே வேதகனும்
வாரணியுங் கொங்கைமயிலே.

(இ - ள்.) கச்சிறுக்கிய கொங்கையாய்! சுக்கிரதிசைக்கு குரு போதகனும், புதன் பாசகனும், சூரியன் காரகனும், சனி வேதகனுமாவார்கள், எ-று. 988

சனியின்றிசைக்குச் சசிபோதகனும்
இனியசெவ்வாய் வேதகனென்றேத்தும்—கனிமொழியாய்

வெள்ளியேபாசகனும் வேந்தனேகாரகனும்
தெள்தமிழோர் நுரைத்தசீர்.

(இ - ள்.) கனிசொல்லுடையாளே! சனிதிசைக்கு சந்திரன் போதகனும், அங்காரகன் வேதகனும், சுக்கிரன் பாசகனும், குரு காரகனுமாவார்களென்று பெரியோர் கூறினர், எ-று. 989

ஒருவர்மகாதிசைக்கு ளுற்றபலன்பலனுன்னா
வருவர்கவக்கிரகர் மாதே—அவரவரில்
போதகனும்பாசகனும் போற்றுபொருள்காரகம்
வேதகனும் மாகிவருவார்.

(இ - ள்.) பெண்ணே! ஒருவர் திசையிலுண்டாம் பலனை யுன்னவருவோர் நவக்கிரகர்களே. ஆனால் அவரவர்களும் போதகன் பாசகன் காரகன் வேதகன் என்கிற பெயரோடு வருவார் என்றறிக. இராகு கேதுகளுக் கிவையில்லையாம், எ-று. 990

இந்தப்படிநால்வரெய்தி யொருவர்திசைக்குள்
வந்துபலனுண்ணும் வகையறிந்தே—சிந்தித்
துரைத்தபலனெத்திருக்கு மொண்டோடியேகேளாய்
தரைத்தமிழோர் தாமறியத்தாம்.

(இ - ள்.) ஒள்ளிய வளையுடையாய்! இப்படி நால்வரும் ஒருவர் திசைக்குள் வந்து பலனுண்ணும் விதத்தை யறிந்து சொல்லச் சர்வ பலன்களும் ஒத்திருக்குமென்று அறிவாயாக, எ-று. 991

திசாபுத்தி பலனறிய

சூரிய திசாபுத்தி பலன்

வேறு

அருக்கினிலருக்கன்புத்தி யறிபகானூற்றெட்டுக்கு
கருகொடுமிற்றுத்தேடு கலகமந்தணனாற்பீடை
வருத்தமாக்தலைநோயுண்டாம் வலக்காதில்வலியுண்டாமே
பெருக்கசீரிழிவுமேட மாதத்திற்பீடைதானே.

(இ - ள்.) சூரியதிசையில் சூரியபுத்தி நாள் நூற்றெட்டில் (3 மாதம் 18 நாள்) கேடு, கலகம், பிராமணரால் பீடை, தலைநோய், வலது காதில் வலி சீரிழிவு, சித்திரைமாதத்தில் பீடை இவைகளுண்டாம், எ-று. 992

இரவியிலிந்துபுத்தி யினியநாற்றெண்பதுக்கும்
அரசரான்மகிழ்ச்சிபாட மதிகவாகனமுமுண்டாம்
பாவியமணமாம்பெண்ணாற் பகையிடக்கண்ணினோயாம்
இரமெனுங்கடகத்திங்க ளதிகனுக்கானே.

(இ - ள்.) இதில் சந்திரபுத்தி நூற்றெண்பது நாட்களில் (6 மாதம்) அரசரால் மகிழ்ச்சி லாபம் வாகனம் விவாகம் பெண்ணால் பகை இடது கண்ணோய் ஆடிமாதத்தில் கொடிய நீங்கு இவைகளுண்டாம், எ-று. 993

ஆதித்தன் றன்னிற்செவ்வாய் புத்திர நூற்றிருபத்தாறும்
வாதித்தவியாதிசண்டை வழக்குகல்வாட்சிபீடை
சாதித்தவுற்றூர்க்கேடு தனம்பொருட்சேதமாகும்
போதித்தபொருளுஞ்சாரும் பூமியின்பலனுகாதே.

(இ - ள்.) இதில் அங்காரகபுத்தி நூற்றிருபத்தாறு நாட்களில் (நாலுமாதம் ஆறுநாள்) வாது வியாதி சண்டை வறட்சி பீடை சாதிப்பால் நீங்கு தனவிரயம் பொருள்கள் நஷ்டம் பூமி பலனின்மை இவைகளுண்டாம், எ-று. 994

சூரியன் றனிலேராகு சுகத்தையேசொல்லவென்றால்
வரியானமுந்நூற்றிரு பத்துநான்குநாளும்
பாரியவிழ விதத்தாற் படைபயம்பிறந்தார்பின்னம்
வீரியமைந்தன்றேசாந் திரத்தினின் மேவுவானே.

(இ - ள்.) இதில் ராகு புத்தி முந்நூற்றிருபத்துநான்கு நாட்களில் (பத்து மாதம் இருபத்துநான்கு நாள்) இடியாலும் விஷத்தாலும் படையாலும் பயம். பின்னோர்கள் சேதம், குமாரன் தேசாந்திரம் போதல் இவைகளுண்டாம், எ-று. ()

எதிருமங்கதிரிற்பொன்னி னிருநூற்றெண்பத்தெட்டும்
கதிபெறுமுற்றார்நட்புங் கல்வியுஞ்செல்வமுண்டாம்
மதியுறுமிராசசேவை மக்களுஞ்சுகமுண்டாம்
அதிகசத்துருவைவெல்லு மதிசயமிருதியாமே.

(இ - ள்.) இதில் குரு புத்தி இருநூற்றெண்பத்தெட்டு நாட்களில் (மாதம் ஒன்பது, நாள் பதினெட்டு) பலர் சிநேகம், கல்வி, செல்வமிவைகளுண்டாதல், இராஜசேவை, மக்களும் சுற்றமுமுண்டாதல், சத்துருவை வெல்லுதல் என்னும் இவைகளுண்டாம், எ-று. 996

நன்கதிர்சனிமுந்நூற்று நாற்பத்தோடிரண்டினுக்கும்
மன்பயமக்கள்பீடை மனத்துயர்பகைவருண்டாம்
தன்பொருட்சேதமுந்தி யடுப்பதுசரீரபீடை
இன்பமேயில்லைமன்னி லவர்களும்பகைவராமே.

(இ - ள்.) இதில் சனி புத்தி முந்நூற்று நாற்பத்திரண்டு நாட்களில் (மாதம் பதினொன்று, நாள் பன்னிரண்டு) பயம், மக்களுக்குப் பீடை, மனத்தில் துன்பம், பகைவர் பெருக்கம், பொருட்சேதம், சரீர பீடை, இன்பமென்ப தின்மை, நல்லவர்களும் பகைவர்களாதல் என்னும் இவைகளுண்டாம், எ-று. 997

நற்கதிர்வன்னியிற்புந்தி நாளதுமுந்நூற்றாறும்
வற்கமும்பகையுநாரு மனத்திலேசரீரபீடை

சுற்றவிரோசமுந்திக் கடுப்பதுவழக்குமுண்டாம்
சொற்புகழ்மன்னனுசந் துக்கமுமிகுதியாமே.

(இ - ள்.) இதில் புதன்புத்தி முந்நூற்றாறுநாட்களில் (மாதம் பத்து, நாள் ஆறு) சுற்றத்தார்பகை, மனதில் திகில், சரீரபீடை, வயிற்றுக்கடுப்பு, வழக்கம், அரசருசம், துக்கம் என்னும் இவைகளுண்டாம், எ-று. 998

ஆதித்தன்றனிலேகேது வனுமிநூற்றிருபத்தாறும்
சோதித்தகிளைவருக்குந் தூரதேசத்திற்போவார்
வாதித்தவிசனமுண்டாம் வழக்குண்டுமனைவேறாகும்
பேதிக்குமுற்றார்கேடு பிணக்குண்டுபலன்செய்யாதே.

(இ - ள்.) இதில் கேதுபுத்தி நூற்றிருபத்தாறு நாட்களில் (மாதம் நான்கு நாள் ஆறு) மறதி, தூரதேசம்போதல், விசனமுண்டாதல், வழக்கு, வீடுவிட்டு வீடுபோதல், சுற்றத்தார் கேடு, பிணக்கு என்னும் இவைகளுண்டாம், எ-று. 999

அருக்கனில்வெள்ளி முந்நூற்றறுபதுநாளினாளும்
இருக்கவிமானஞ்செல்வஞ் செம்பொன்னுமிகவுமுண்டு
வருத்தமாஞ்சரீரநோயு மலர்க்கண்ணில்வியாதிதானும்
உருக்கியபிணியுந்தீரு முன்னைமயக்கருமமன்றே.

(இ - ள்.) இதில் சுக்கிரபுத்தி முந்நூற்றறுபது நாட்களில் (ஒருவருடம்) கலியாணம் செல்வம் திரவியம் இவைகள் மிகுதியாயுண்டாதல். வருத்தம், சரீர ரோகம் கண்ணோய் உண்டாம். முன்னோய்த்தீரும். நற்கருமமுமுண்டாம், எ-று.

சந்திர திசாபுத்தி பலன்

சந்திரன்றன்னிலேதான் றனக்குநாள்வருமுந்நூறும்
விந்தயாக்கன்னிசேர்வள் வீரமன்றேருக்குமுண்டாம்
முந்தியகாரியங்களினைத்தது முடியுமேதும்
இந்திரன்றனைப்போன்மைந்த னினிதுடனுண்டாங்காண்மே.

(இ - ள்.) சந்திரதிசையில் சந்திரபுத்தி முந்நூறு நாட்களில் (மாதம்பத்து) பெண்சேர்தலும், வெற்றியுண்டாதலும், நினைத்தகாரியம் முடிதலும், இந்திரன் போல் பிள்ளைகளுண்டாதலும் என்னும் இவைகளுண்டாம், எ-று. 1001

நன்புதமதியிற்செவ்வாய் நாளிருநூற்றுப்பத்தும்
பண்பிலாவழக்குச்சண்டை பயித்தியங்களவுநோயாம்
தன்பொருள்சேதங்குட்டந் தழற்பயமேழுமாதம்
இன்பெருந்தனையேழுறு மெத்திறைழுக்கலைஞ்சேரும்.

(இ - ள்.) இதில் அங்காரகபுத்தி இருநூற்றுப்பத்து நாட்களில் (ஏழுமாதம்) வழக்கு சண்டை பயித்தியம் களவுநோய் பொருட்சேதம் குஷ்டம் அக்கினி

பயம் சித்திரைமாதத்தில் விலங்கிட்டுக் கொள்ளுதல் பெண் கலகம் இவைகளுண்டாம், எ-று. 1002

அம்புலிதனிலேராகு ஐந்நூற்றுநாற்பதுக்குள்
செம்பொனுஞ்சேதமாகுஞ் செற்றலர்பயம்வியாதி
நம்பியர்துன்பம்ராச நிஷ்டூரமிகவுமாகும்
வம்பலர்குழலிறுனே மதிவையர்பீடையாமே.

(இ - ள்.) இதில் ராகுபுத்தி, ஐந்நூற்றுநாற்பது நாட்களில் (ஒருவருடம் ஆறுமாதம்) செம்பொன்சேதம், பகைவர்பயம், வியாதி, பெரியோரால் துன்பம், ராசநிஷ்டூரம், பிள்ளைகள்பீடை இவைகளுண்டாம், எ-று. 1003

கன்றிசேர்மதியிற்பொன்ன நானூற்றெண்பதுக்கும்
வென்றிசேர்குதிரையானை மேன்பொருடானியங்கள்
குன்றெனுமலேயாய்ச்சேருங் கொற்றவனாலின்பம்
கன்றுனன்காரியுண்டாங் கன்னியைப்பெறுவர்தாமே.

(இ - ள்.) இதில் குருபுத்தி நானூற்றெண்பது நாட்களில் (ஒருவருடம் நான்குமாதம்) குதிரை, யானை, பொருள், தானியங்கள் சேர்தல், அரசனாலின்ப முண்டாதல், புகழ்ப்பிராப்தி, புத்திரப்பேறு இவைகளுண்டாம், எ-று. 1004

மதிதனிற்சனிபுத்தி மாதம்பத்தொன்பதுக்கும்
பதிகெடுங்கன்றுகாலி பற்றுமனைதிற்றுக்கம்
விதிபுரமனையாளோடு மெய்பொருட்சேதமாகும்
சதிபெறுகழுத்தோடுலே கோள்வருஞ்சாற்றினேனே.

(இ - ள்.) இதில் சனிபுத்தி பத்தொன்பது மாதங்களில் பதிகெடுதல், பசு முதலியவை கெடுதி, மனைதுக்கம், மனைவி பொருள்சேதம், கழுத்தவுடன் கோள்களுண்டாதல் என்னும் இவைகளுண்டாதல், எ-று. 1005

சந்திரன்றன்னிற்புத்தி தான்பதினேழுமாதம்
அந்தரக்கலகம்போக மகிமையக்கட்பேறும்
சிந்தைதிசேர்சசயோகஞ் சேர்ந்திடுமினத்தெல்லாம்
முந்தியன்றதலபம் புரட்டாசிமுடிவிற்றுனே.

(இ - ள்.) இதில் புதன்புத்தி பதினேழுமாதங்களில், கலகம், போகம், மக்கட்பேறு, ராஜயோகம், நினைத்தகாரியஞ் சித்தி, விந்தை, புரட்டாசிமாதமுடிவில் லாபம் இவைகளுண்டாகும், எ-று. 1006

திலகினிற்கேதுக்கேழு மாதமுமேருப்பாற்பீடை
தொலைவிலாச்சரீரம்விக்குஞ் சுற்றஞ்சாமிடக்கண்ணோயாம்

மலைவருபயமுமுண்டா மதிதண்டனையுமுண்டாம்
பலசனம்வெறுப்புவந்து நாசமாம்பகையுண்டாமே.

(இ - ள்.) இதில் கேதுபுத்தி எழுமாதங்களில் நெருப்பால் பீடை, சரீரம் வீக்கம், சுற்றநஷ்டம், இடக்கண்ணோய், பயம், தண்டனை, பலர்வெறுப்பு, நாசம், பகை இவைகளுண்டாம், எ-று. 1007

வட்டமாதியில்வெள்ளி மாதங்களிருபதுக்கும்
இட்டமாம்வியாதியுண்டாஞ் சேர்த்திடுவித்தங்காட்டும்
நட்டமாமர்த்தநாச நாளிலேவிரோதமுற்றார்
கஷ்டமாஞ்சத்துருவாலே காரியஞ்சேதமாமே.

(இ - ள்.) இதில் சுக்கிரபுத்தி இருபதுமாதங்களில் வியாதியுண்டாதல், விசனம், பொருட்சேதம், விரோதம், சுற்றத்தார்கஷ்டம், சத்துருவால் காரிய பங்கம் என்னும் இவைகளுண்டாம், எ-று. 1008

வெண்மதிதனிலேவெய்யோன் வேண்டியவாறுமாதம்
உண்மதிசரமேபித்த முருவமுங்குலைந்துவேறாய்
கண்மதியங்கந்தன்னிற் கடுவலிநோயுமுண்டாம்
பண்புறுகுணத்திறுனே பலனுண்டுபலன்சொல்மாதே.

(இ - ள்.) இதில் சூரியபுத்தி ஆறுமாதங்களில் உட்காய்ச்சல், பித்தம், ரூபமாறுட்டம், கண் சரீரம் இவைகளில் வலியும் நோயும் உண்டாதல் என்னும் இவையுண்டாமென்று நற்குணத்தாய் நீயறிந்து செப்புக, எ-று. 1009

செவ்வாய் திசாபுத்தி பலன்

கன்றிசெய்சேயின்மாத நாலுநாளிருபத்தேழும்
கன்றிடுங்காலினுய்கள் கடித்திடுமேடமாதம்
வென்றிசேர்மன்னரச்சம் வெப்புநோய்தீசராலே
கொன்றிடுந்தனின்மாதத் துடன்வெட்டுங்குத்துமாமே.

(இ - ள்.) அங்காரகதிசையில் அங்காரகபுத்தி நான்குமாதம் இருபத்தேழு நாட்களில் காலில் நாய்கடித்தல், சித்திரைமாதத்தில் அரசரால் பயம், நோய், கார்த்திகை மாதத்தில் தீசரால் வெட்டுங் குத்துமுண்டாதல் என்னும் இவைக ளுண்டாம், எ-று. 1010

செவ்வாயில்ராகோராண்டுஞ் சேர்ந்தநாள்பதினெட்டுக்கும்
ஒவ்வாதவிருத்திற்றெரைத் திங்களிலுற்றோர்நாசம்

இவ்வாறுமேகக்கட்டி யிருந்திடுந்தலம்வேறுகும்
கொல்லையாய்மானேகுட்டங் குரூரமாம்பீடையாமே.

(இ - ள்.) இதில் ராகுபுத்தி ஒருவருஷம் பதினெட்டு நாட்களில் கார்த்திகையில் விஷத்தால் பயம் சுற்றத்தார் நாசம், வீடுவிட்டு வீடுமாறுதல் அன்றி பெண்ணே! குட்டமும் குரூரமுமான பீடையும் உண்டாகுதலாம், எ-று. 1011

முழங்கியசேயிற்பொன்னன் முந்நூற்றுமுப்பத்தாறும்
வழங்கிடுமர்த்தநாச மன்னராற்பகையுமுண்டு
தழங்கிடுந்திசைதொடங்குச் சத்துருபலருமாவர்
அழுங்கலிக்காலிற்செல்வ மரசராலுறவுமாமே.

(இ - ள்.) இதில் குருபுத்தி முந்நூற்று மூப்பத்தாறுநாட்களில் (மாதம் பதினொன்று, நாள் ஆறு) பொருட்சேதம், அரசரால்பகை, அந்தத்திசைமுதல் பலபகைவர்களுண்டாதல், செல்வம் நாசமாகும்; ஆனல் அரசரால் உறவுண்டாதல் என்னும் இவைகளுண்டாம், எ-று. 1012

மருவியசேயிற்காரி மாதமீராறுமொன்று
கருதியநாளொன்பானுங் கலகமாம்வழக்குச்சண்டை
பொருபடையர்த்தநாசம் பொருந்தியமெய்யிற்குட்ட
மருவியநிலையுங்கெட்டு மனத்தினிற்கிலேசமாமே.

(இ - ள்.) இதில் சனிபுத்தி பதின்மூன்றுமாதம் ஒன்பதுநாட்களில் கலகம், வழக்கு, சண்டை, அர்த்தநாசம், குட்டம், வீடழிதல், கிலேசம் என்னும் இவைகளுண்டாம், எ-று. 1013

முந்தியசேயிற்புந்தி முந்நூறோடைம்பத்தேழும்
செந்திருவரிவைசேர்வள் செல்வமுமிகுதியாகும்
வந்திடுநோயுந்தீரு மருவியகன்னிமாதம்
சிந்தையாமரவுதீண்டு தீயபலன்செய்யாதே.

(இ - ள்.) இதில் புதன்புத்தி முந்நூற்றைம்பத்தேழு நாட்களில் (பதினொருமாதம் இருபத்தேழுநாட்கள்) பெண்சேர்தல், செல்வமிகுதியு முண்டாதல், நோய்தீர்தல், புரட்டாசிமாதத்தில் சர்ப்பந்தீண்டுதல் என்னும் இவைகளுண்டாம், எ-று. 1014

வெய்யவன்றனிலேகேது சேர்ந்திடுமாதநான்கு
உய்யுநாளிருபத்தேழு முடன்பகைமாதராலே
மெய்யிலேவியாதிதோன்று விஷபயமிகுதியாகும்
தையலர்பொருட்டானிந்தை சத்துருமிகுதியாமே.

(இ - ள்.) இதில் கேதுபுத்தி நான்குமாதம் இருபத்தேழுநாட்களில் பெண்டிரால் பகை, வியாதி, விஷபயம், தையலர்பொருட்டு நிந்தை, மிகுந்த சத்துருக்கள் இவைகளுண்டாம், எ-று. 1015

நீடியசேயிற்சுக்க னற்றிங்களீரேழுக்கும்
நீடியபொருளுஞ்சேரு நேரிழையவளுஞ்சேர்வள்
தேடியதெய்வபூசை செய்வன்மாதவர்கள்சேர்வர்
வாடியசிரங்குதேமல் வாகனம்பெறுவர்தாமே.

(இ - ள்.) இதில் சுக்கிரபுத்தி பதினான்கு மாதங்களில் பொருள் சேர்தல், பெண்சேர்தல், தெய்வபூசை செய்தல், பெரியோர்கள் சேர்க்கை, சிரங்கு தேமல், வாகனமிவையுண்டாதல் என்னும் இவைகளுண்டாம், எ-று. 1016

அங்கியிற்பரிதிதிங்க ளொன்பானாறுமாகும்
மங்கியகுட்டங்கண்ட வியாதியாமனநீந்துக்கம்
செங்கனற்பயமுண்டாகுஞ் சீர்மறையவரால்துன்பம்
இங்கிதமனையாளோடு மெவர்களும்பகையவராமே.

(இ - ள்.) இதில் சூரியபுத்தி மாதம் நான்கு ஆறுநாட்களில் குட்டம் கண்டவியாதி, மனோதுக்கம், அக்கினிபயம், பிராமணரால் துன்பம், மனைவி நோய், எவர்க்கும் பகை என்னும் இவைகளுண்டாம், எ-று. 1017

கலமுறுசேயிலிந்து காட்டியதிங்களேழும்
பலமுறும்பூமிலாபம் பலித்திடுங்கன்றுகாலி
இலகியபொன்னுமுத்து மின்பமாமாடையுண்டாம்
தலமதுபேதம்பின்பு தளர்ச்சிவந்தெய்துந்தானே.

(இ - ள்.) இதில் சந்திரபுத்தி ஏழுமாதங்களில் பூலாபம், கன்றுகாலி, பொன், முத்து, இன்பம், வஸ்திரம் இவைகளுண்டாவதுடன் இடமாறுதல், தளர்ச்சி இவைகளும் உண்டாம், எ-று. 1018

இராகு திசாபுத்தி பலன்

இராகுவிலிராகுமாத நாலெட்டுநாளீராறும்
வாருமுடைவெந்துயர மனத்துயர்விடத்தாற்பீடை
ஏகமாமனையாள்துன்ப மிகுத்திடுந்தலபேதங்கள்
காகமோர்கிருத்தனாலே கலகமுங்கோளுமுண்டாமே.

(இ - ள்.) இராகுதிசையில் இராகுபுத்தி மாதம் முப்பத்திரண்டு நாள் பன்னிரண்டில் அரசநாசம், மனத்துயரம், விஷத்தால் பீடை, மனைவி துன்பம், ஸ்தலபேதம், கருத்தவரால் கலகம் கோள் என்னும் இவைகளுண்டாம், எ-று.

பாரியவிராகின்மன்னன் பரிவுடன்புசிக்குந்திங்கள்
நாலிரொருபத்தெட்டு நாளுமெட்டிடின்பம்

ஆசிரியாலேசெல்வ மரசரான்மகிழ்ச்சியுண்டாம்
காரியமெல்லாங்கூடும் காரிகைமணமுண்டாமே.

(இ - ள்.) இதில் குருபுத்தி இருபத்தெட்டு மாதம் இருபத்துநான்கு நாட்களில் இன்பம், ஆசிரியரால் செல்வம். அரசரால் மகிழ்ச்சி, காரியமெல்லாங் கைகூடுதல், விவாகம் என்னும் இவைகளுண்டாம், எ-று. 1020

வடிவுளவிராகிற்காரி மாதமுப்பதுநான்கும்
படிமிசைநாளாறுக்கும் பகைமனத்திடர்வியாதி
முடியாதவழக்குச்சண்டை மூண்டிடும்வாதபித்தம்
இடியுறுசெங்கைசோதி சதயமுமிகுதிநோயே.

(இ - ள்.) இதில் சனிபுத்தி முப்பத்துநான்கு மாதம் ஆறுநாட்களில் பகை, மனோதுக்கம், வியாதி, தீராவழக்கு, சண்டை, வாதம், பித்தரோகம், செங்கை சோதி, சதயம், இவைகளில் மிக்கநோய் என்னும் இவைகளுண்டாம், எ-று.

வந்திடுமிராகிற்புந்தி மாதமுப்பதின்மேனுட்கள்
முந்தியமூவாறுக்குமுயர்சியாம்வாழ்வுண்டாகும்
சிந்தைதாிற்றெய்வபத்தி சிலபொருள்வந்துசேரும்
விந்தையாம்மழலைசேரு மேதுமுபகையுண்டாமே.

(இ - ள்.) இதில் புதன்புத்தி முப்பது மாதம் பதினெட்டு நாட்களில் வாழ்வு, தெய்வபக்தி, சிலபொருள் சேர்க்கை, பிள்ளையுண்டாதல் பகை என்னும் இவைகளுண்டாம், எ-று. 1022

மருவியராகிற்கேது மாதமீராறுமிக்க
கருதியநாண்மூவாறு கடிவிஷத்தாலேபயம்
தருமகவுக்குப்பீடை சரீரமெலிவுநோயாம்
அரிவையர்தமக்குத்துன்ப மரசராலச்சமாமே.

(இ - ள்.) இதில் கேதுபுத்தி பன்னிரண்டு மாதம் பதினெட்டு நாட்களில் விஷத்தால் பயம், மகவுக்குப் பீடை, சரீரம் வீங்கி நோக்காடு. பெண்சாதிக்குத் துன்பம், அரசரால் அச்சம் என்னும் இவைகளுண்டாம், எ-று. 1023

மன்னியவிராகில்வெள்ளி மாதமோமுப்பத்தாறும்
பொன்னுடன்பொருளுஞ்சேரும் பூஷணமிகுதியுண்டாம்
மன்னியமங்கைசேர்வ னரசரான்மகிழ்ச்சியுண்டு
பின்னும்வஞ்சனையாற்றுன்பம் பீடைவந்தகன்றுபோமே.

(இ - ள்.) இதில் சுக்கிரபுத்தி முப்பத்தாறு மாதங்களில் பொன், பொருள் சேர்க்கை, பூஷணமுண்டாதல், மங்கைசேர்தல், அரசரால் மகிழ்ச்சி, வஞ்சனையால் துன்பம், பீடைவந்தொழிதல் என்னும் இவைகளுண்டாம், எ-று. 1024

ராகுவிலிரவிமாதம் பத்துடனுண்மூவெட்டும்
வாகுநாகுலத்தாற்சண்டை மன்னராற்றஞ்சமாகும்
சேருமமனையாள்பிள்ளை பிரசூதருசிதுக்காகும்
ஆகமூவிதத்தாலைய மிருப்பிடமகலுந்தானே.

(இ - ள்.) இதில் சூரியபுத்தி பத்துமாதம் இருபத்துநான்கு நாட்களில் குலத்தால் சண்டை, மன்னரால் ஆதரிப்பு, பெண்சாதி பிள்ளைபெறுஅ சிறு காதல், மூவிதத்தால் ஐயம் இருப்பிட நீங்குதல் என்னும் இவைகளுண்டாம். ()

உதித்திடுமிராகுவிக்தி லுயர்திங்களீரொன்பானும்
மதித்திடும்பத்துநாச மனைவியாற்பொருளுஞ்சேதம்
கதித்திடுமதத்தமோணத் திசையினிற்கால்கணோவு
விதித்திடுதலம்விட்டேகும் விஷத்தினுற்றுன்பமாமே.

(இ - ள்.) இதில் சந்திரபுத்தி பதினெட்டு மாதங்களில் பத்துநாசம் மனைவியாற் பொருள் கஷ்டம், அத்தம் ஓணம் இத்திசைகளில் கால்கள் இவைகள் நோவு, ஸ்தலமாறுதல், விஷத்தால் துன்பம் என்னும் இவைகளுண்டாம், எ-று.

இன்புறுமிராகிற்செவ்வாய் மாதமீராறுமிக்க
வன்புநாகாண்மூவாறு மக்கினிபயங்கிலேசம்
மன்பகைவிஷத்தாற்பீடை மருவுசண்
துன்பமாக்களவுசண்டை துயர்மனைகிலேசந்தானே.

(இ - ள்.) இதில் அங்காரகபுத்தி பன்னிரண்டுமாதம் பதினெட்டு நாட்களில் அக்கினியால் பயம், கிலேசம், பகை, விஷத்தால் பீடை, சண்டாளரின் பம், களவு சண்டை, மனைவியால் கிலேசம் என்னும் இவைகளுண்டாம், எ-று.

குரு திசாபுத்தி பலன்

மருவியபொன்னின்மன்னன் மாதமையைந்துநாளோ
ஒருபதினெட்டினுக்கு முயர்பிரதாபமிக்க
பொருளுடன்றனியங்கள் பூஷணம்பூமிலாபம்
அரிவையர்சேர்த்தியின்ப மரசரான்மகிழ்ச்சியாமே.

(இ - ள்.) குருதிசையில் குருபுத்தி இருபத்தைந்துமாதம் பதினெட்டு நாட்களில் பிரதாபம், பொருள், தானியம், பூஷணம் இவைகள் லாபம் பெண் சேர்க்கை இன்பம், அரசரால் மகிழ்ச்சி இவைகளுண்டாம், எ-று. 1028

பொருந்தியகுருவிற்காரி புகழ்திங்களாகும்பத்து
வருந்தியநாளீராறும் வாகனம்பொருளும்வாய்க்கும்
திருந்தியகால்கைவாதஞ் சேபிழைதனக்குத்துன்பம்
இருந்திடம்வெற்றியில்லை யிடர்வந்துநீங்குந்தானே.

(இ - ள்.) இதில் சனிபுத்தி பத்துமாதம் பன்னிரண்டு நாட்களில் வாகனம் பொருள், கால்கைவாதம், மனைவிக்குத் துன்பம், இருக்குமிடத்தில் ஜெயமின்மை, துன்பம் வந்து விலகுதல் என்னும் இவைகளுண்டாம், எ-று. 1029

மருவியகுருவிற்புத்தி மாதமோவிருபத்தேழும்
அறுவதுநாளோடாறு மாடலும்பாடன்ஞானம்
வருவதுபூசையாலும் வளருமாதர்மைந்தர்
பெருகிடுஞ்செல்வமன்றுந் பெருமையும்புகழுண்டாமே.

(இ - ள்.) இதில் புதன்புத்தி இருபத்தேழுமாதம் ஆறுநாட்களில் ஆடல் பாடல் ஞானம் பூசை மைந்தர்க்கரிட்டம் செல்வப்பெருக்கம் அரசரால் பெருமையும் புகழும் பெறுதல் என்னும் இவைகளுண்டாம், எ-று. 1030

பாவியகுருவிற்கேது பதினொருமதிநாளாறும்
திரமுளமாதர்கேடு திரிபுமேதேசமெங்கும்
உரமுளவுற்றார்மற்றும் புறவினர்பகையதாகும்
திரவியமனையாடன்று னில்விட்டுப்போவதாமே.

(இ - ள்.) இதில் குரு திசையில் கேதுபுத்தி பதினொருமாதம் ஆறுநாட்களில் மாதர் கேடு, தேசமெங்குந் திரிதல், சுற்றத்தார்பகை, மனைவியால் இடமாறுதல் என்னும் இவைகளுண்டாம், எ-று. 1031

மருவியகுருவில்வெள்ளி மாதமுப்பத்திரண்டு
நிறைபரிகட்டுவர்க்க நிலையாம்பொருளுஞ்சேரும்
பொரையுளகன்னிமாதம் பூமியும்போகமுண்டாம்
குறைகடற்சுற்றத்தோடு குணமுடன்வாழ்வர்காணே.

(இ - ள்.) இதில் சுக்கிரபுத்தி முப்பத்திரண்டு மாதங்களில், பசு, குதிரை வர்க்கம், பொருள்சேர்க்கை, புரட்டாசி மாதத்தில் பூமியும், போகமுண்டாதல் சுற்றத்தோடு கூடிவாழ்தல் என்னும் இவைகளுண்டாம், எ-று. 1032

உலகுறுகுருவிற்பானு வொன்பதுமாசமீரொன்பதாறும்
கலமுறுமர்த்தலாப காரியகருமங்கூடும்
பலகுறைநெருப்பிற்காற்றிற் பிணிபலர்பகையும்பீடை
கலகமாமகத்திற்பின்பு காரியகன்மையாகும்.

(இ - ள்.) இதில் சூரியபுத்தி ஒன்பதுமாதம் பதினெட்டு நாட்களில் செல்வலாபம், செய்கருமம் கூடுதல், நெருப்பினாலும் காற்றினாலும் நோயாலும் பயம் பலர் பகை, பீடை, வீட்டிற்கலகம். பின்னர் காரியம் கன்மையாதல் என்னும் இவைகளுண்டாம், எ-று. 1033

நின்றதிகாரிகுருவிற்கு சேர்பதினறுமாதம்
வென்றிசற்சிவிகைமுத்து வெண்குடையணியுமுண்டாம்
அன்றனமனையாண்மைந்த ரறிவுளோர்பொருளுஞ்சேரும்
என்றுசற்கருமமெல்லாந் தெய்வத்தாலெய்துந்தானே.

(இ - ள்.) இதில் சந்திரபுத்தி பதினறுமாதங்களில் பல்லக்கு, முத்து, வெண்குடை, ஆபரணம், மனைவி, மைந்தர், அறிவுள்ளோர், பொருள், இவை சேர்தல், சற்கருமங்களெல்லாம் தெய்வத்தால் நிறைவேறுதல் என்னும் இவைகளுண்டாம், எ-று. 1034

பாங்குளபொன்னிற்செவ்வாய் பதினொன்றுமதிநாளாறு
தீங்குறுவினைகளுண்டாந் திருடராற்றழலாற்றுன்பம்
ஆங்குறுமுற்றார்சேத மல்லதுபிணியுமுண்டாம்
நீங்கியேநிலைவிட்டேகு நினைத்ததுமுடிந்திடாதே.

(இ - ள்.) இதில் அங்காரகபுத்தி பதினொருமாதம் ஆறுநாட்களில் தீயவினைகள் திருடராலும், அக்கினியாலும் துன்பம், சுற்றத்தார் கஷ்டம், நோய் நிலைமாறுதல், நினைத்தகாரியம் முடியாமை என்னும் இவைகளுண்டாம், எ-று.

மாதங்கக்குருவில்ராகு மாதமோரிருபத்தெட்டும்
ஓதியநாண்மூவெட்டு முடன்பகைசிறுவழக்குச்
சேதமாம்பொருள்விரோதஞ் சேயிழைதனக்குத்துன்பம்
ஆதுகண்மிகவுண்டாகுந் தொடர்ந்திடுஞ்செல்வம்போமே.

(இ - ள்.) இதில் ராகுபுத்தி இருபத்தெட்டு மாதம் இருபத்துநான்கு நாட்களில் பகை, சிறுவழக்கு, பொருட்சேதம், விரோதம், மனைவிக்கு துன்பம். ஆதுகள் மிகவுண்டாதல் என்னும் இவைகளுண்டாம், எ-று. 1036

சனி திசாபுத்தி பலன்

காரியிற்காரிமாதங் கருதியமுப்பத்தாறும்
வீரியமூன்றுநாளு மெய்பிணிவியாதிதோன்றும்
சீரியவடிமைமைந்தர் செல்வமுங்குறையும்பின்னும்
கூரியவுறவுதன்றுங் கொடும்பகைதானுண்டாமே.

(இ - ள்.) சனிதிசையில் சனிபுத்தி மாதம் முப்பத்தாறு, மூன்றுநாட்களில் சரீரநோய், அடிமை, மைந்தர், செல்வம் குறைதல், சுற்றத்தாரால் பகை இவைகளுண்டாம், எ-று. 1037

பங்கினிற்புத்திமாத காலெட்டுநாளொன்பானும்
இங்கிதகல்விஞான மெழிலுடைப்பொருளுஞ்செல்வம்

மங்கையர்மருவிக்கூடும் மைந்தருஞ்சுற்றமுண்டாம்
பொங்கமாய்மன்னராலே புகழ்ந்துவாழ்ந்திருப்பர்தாமே.

(இ - ள்.) இதில் புதன்திசை மூப்பத்திரண்டு மாதம் ஒன்பது நாட்களில் கல்வி, ஞானம், பொருள், செல்வம் இவைகளும், பெண்டிரும் மைந்தரும் சுற்றமும் உண்டாதல், அரசரால் புகழ்ந்து வாழ்தல் என்னும் இவைகளுண்டாம், எ-று. 1038

படிமிசைசனியிற்கேது பதின்மூன்றுமதிநாளொன்பான்
கடியதோர்வலக்கால்வாதங் காணுமேபித்தரோகம்
மிடியதுமைந்தராலே விதைபயமர்த்தநாசம்
கொடியிடையவளாற்றுன்பங் கோளினாற்கலகமாமே.

(இ - ள்.) இதில் கேதுபுத்தி பதின்மூன்றுமாதம் ஒன்பது நாட்களில் வலதுகால் வாதம், பித்தரோகம், மைந்தரால் தரித்திரம், விதைபயம், செல்வநாசம், மனைவியால் துன்பம், கோளினால் கலகம் இவைகளுண்டாம், எ-று.

முனிவுறுசனியில்வெள்ளி மாதமோமுப்பத்தெட்டு
இனியதோர்பணிகல்லோர்தம் மின்பமும்வெற்றியுண்டாம்
வனிதையர்சேர்வர்லாப மக்களுஞ்சுற்றமுண்டாம்
தனியொருபகையுமுண்டாந் தன்னையும்வெல்லவாமே.

(இ - ள்.) இதில் சுக்கிரபுத்தி முப்பத்தெட்டு மாதங்களில் நல்லாபரணம், பெண்சுகம், வெற்றி, பெண்கள்சேர்க்கை, லாபம், மக்கள், சுற்றமுண்டாதல், தனியாயொரு பகை வருதல், தன்னையும் வெல்லும் சாமர்த்தியம் என்னும் இவைகளுண்டாம், எ-று. 1040

பரவியசனியிற்பானு பதினொன்றுநாளீராறும்
உரமுளரத்தமேக முதரத்திற்சூலைகண்ணோய்
திரமுளமனையாண்மக்கள் சிறித்திடுநோயினாலே
கரமதுவெரிவாங்காலுங் கடுவலிவாதமாமே.

(இ - ள்.) இதில் சூரியபுத்தி பதினொருமாதம் பன்னிரண்டு நாட்களில் ரத்தமேகம், வயிற்றில்சூலை, கண்ணோய், மனைவியும் பிள்ளைகளும் நோயினா லிளைத்தல், கைகால் எரிச்சல், வலிவாதம் என்னும் இவைகளுண்டாம், எ-று.

மதமுறுசனியிலிந்து மாதம்பத்தொன்பதுக்கும்
விதமதாங்கலகம்பீடை வீட்டினில்வழக்குச்சண்டை
பதனமாம்பணிபூணாரம் பல்வளம்பொருளுஞ்சேதம்
அதனமாந்தலங்கள்விட்டே யலதியான்மீள்வர்தாமே.

(இ - ள்.) இதில் சந்திரபுத்தி பத்தொன்பது மாதங்களில் கலகம், பீடை வீட்டில் வழக்கு, சண்டை, ஆபரணம், பூணாரம், பலவளப்பம், பொருள் இவை சேதம் இடம்விட்டுமாறுதல் என்னும் இவைகளுண்டாம், எ-று. 1042

பன்னிரச்சனியிற்செவ்வாய் பதின்மூன்றுநாளொன்பானும்
குலங்களிளைபிக்க கொடும்பகைபழியுங்காட்டும்
அலைந்திடுதேசமெங்கு மனைவரும்விரோதமாவர்
தலங்களிற்பொன்னுஞ்சோரந் தமைவிட்டுப்பிரியுந்தானே.

(இ - ள்.) இதில் அங்காரகபுத்தி பதின்மூன்றுமாதம் ஒன்பது நாட்களில் குலத்தில் ஈனம், மிகுந்த பகை, பழி, தேசமெங்குந்திரிதல், அனைவரும் விரோதம், பொன் சோரம், இடம்விட்டு மாறுதல் என்னும் இவைகளுண்டாம், எ-று.

முன்னாமெசனியில்ராகு முப்பதுமதிநாளாறும்
சொன்னமுஞ்சேதமாகும் விடமதுஅரத்திதீண்டும்
இன்னமுஞ்சரீரமெங்கு மேறுதன்வியாதியுண்டாம்
அன்னியர்பகையதாகு மல்லலுமிகுதியாமே.

(இ - ள்.) இதில் ராகுபுத்தி முப்பதுமாதம் ஆறுநாட்களில் சொர்னஞ் சேதம், விஷம் தீண்டுதல், சரீரத்தில் வியாதி, அந்நியர் பகை, துன்பம், என்னும் இவைகளுண்டாம், எ-று. 1044

முன்றுறுசனியின்மன்னன் முப்பதுநாளீராறும்
அன்புறுமடியார்சேவ ராடையாபரணமுண்டாம்
இன்பமாமரசராலே யெண்ணியகருமமாகும்
மின்கொடியுடனேசுற்ற மிகுதியாம்பலனுண்டாமே.

(இ - ள்.) இதில் குருபுத்தி முப்பதுமாதம் பன்னிரண்டு நாட்களில் அடியார் சேர்க்கை, ஆடையாபரணமுண்டாதல், அரசரால் நினைத்தகாரியம் முடிதல், பெண்ணுண்டாதல் என்னும் இச்சுபபலன்களுண்டாம், எ-று. 1045

புத திசாபுத்தி பலன்

வலம்புரிபுதனிற்புத்தி மாதமோரிருபத்தெட்டும்
துலங்குநாண்மூன்றொன்பானுஞ் சுற்றமுந்துணையுமுண்டாம்
பலந்தருமர்த்தலாபம் பாக்கியமிகவுமுண்டு
நலம்பெருஞானகல்வி நாடியகருமமாமே.

(இ - ள்.) புதன் திசையில் புதன்புத்தி இருபத்தெட்டுமாதம் இருபத்தேழு நாட்களில் சுற்றம், சகாயம், அர்த்தலாபம், மிகுந்த பாக்கியம், ஞானம், கல்வி, நாடிய கருமமாதல் என்னும் இவைகளுண்டாம், எ-று. 1046

பரிக்கிடும்புதனிற்கேது பதினொருமாதம்பின்னும்
வருக்குநாளேழுவென்பாறு மாதலந்தனைவிட்டேகும்
பொருக்கிடும்வியாதிபீடை பொருட்சேதமுற்றார்கேடு
மருக்கிடுருணத்தாற்றுன்ப மனமதாகிலேசந்தானே.

(இ-ள்.) இதில் கேதுபுத்தி பதினொருமாதம் இருபத்தேழுநாட்களில் இடம் விட்டு மாறுதல், வியாதி, பீடை, பொருட்சேதம், சுற்றநாசம் மருக்கிடு ருணத்தால் துன்பம், மனக்கிலேசம் என்னும் இவைகளுண்டாம், எ-று. 1047

வாசமாம்புதனில்வெள்ளி மாதமுப்பதுமேனான்கு
நேசமாமக்கட்பேறு மனைவியுடனேயின்பம்
பாசமாஞ்சுற்றம்வித்தை பலவணிமற்றுமுண்டாம்
தேசமேபோனோர்மீள்வர் சேரிழைமணமுமாமே.

(இ-ள்.) இதில் சுக்கிரபுத்தி முப்பத்துநான்கு மாதங்களில் மக்கட்பேறு மனைவியுடன் கூடிய இன்பம், சுற்றம், கல்வி, பல ஆபரணம், இவைகளும் தேசாந்திரம்போனோர் வருதல், விவாகம் என்னும் இவைகளுண்டாம், எ-று. ()

நேருற்றபுதனிற்பானு நீடியமாதம்பத்தும்
சீருற்றநாட்களாறுஞ் செந்தழற்பயங்கிலேசம்
பாருற்றமனைவிபீடை பகைவருமிடையூறுண்டாம்
வாருற்றகொங்கையாளே மன்னராற்றுன்பமாமே.

(இ-ள்.) இதில் சூரியபுத்தி பத்துமாதம் ஆறுநாட்களில் அக்கினியால் பயம். கிலேசம் மனைவி, பீடை, பகை, இடையூறு, அரசரால் துன்பம் என்னும் இவைகளுண்டாம், எ-று. 1049

வாரணப்புதனிற்சோமன் மாதமேபதினேழுக்கும்
பூரணமானசோகை கண்டபின்புறங்கால்வீக்கும்
காரணக்கலகம்பெண்ணிற் கனபீடைசிறுகுமுண்டு
தாரணிதன்னின்மாந்தர் தமக்கெலாம்பகையதாமே.

(இ-ள்.) இதில் சந்திரபுத்தி பதினேழுமாதங்களில் சோகைகண்டு பின்பு புறங்கால் வீக்கம், பெண்ணால் கலகம், மிகுந்த பீடை, சிறுகு, உலகமக்கட்கெல்லாம் பகை என்னும் இவைகளுண்டாம், எ-று. 1050

பன்னியபுதனிற்செவ்வாய் பதினொன்றுநாளேழொன்பான்
தன்னிலேபித்தரோகங் காமாலைதலைநோக்காடு
வன்னியர்பகைவிரோத மாயுதத்தாலேபீடை
முன்னெருபகையுமுண்டு முடியவேகலகந்தானே.

(இ-ள்.) இதில் அங்காரகபுத்தி பதினொருமாதம் இருபத்தேழு நாட்களில் பித்தரோகம், காமாலை, தலைநோய், அந்நியர் பகை, ஆயுதத்தால் பீடை, முன்பகை, கலகம் என்னும் இவைகளுண்டாம், எ-று. 1051

நற்புதன்றனிலேராகு முப்பதுநான்மூவாறும்
நிற்பதோர்நிலைவிட்டோடு நீசரால்விஷத்தாலேபயம்
மற்பொருள்சண்டையுண்டா மனத்திடர்த்தனானி
சொற்பனந்தலைநோய்பித்தஞ் சூட்சமாமன்னந்தானே.

(இ-ள்.) இதில் ராகு புத்தி முப்பது மாதம் பதினெட்டு நாட்களில் இடம்விட்டு மாறுதல், நீசராலும், விஷத்தாலும் பயம், சண்டை, மனத்துன்பம், பொருட்சேதம், சொப்பனம், தலைநோய், பித்தம், அன்னக்குறைவு என்னும் இவைகளுண்டாம், எ-று. 1052

புத்திமிற்பொன்னன்மாதம் புகழ்பெறவிருபத்தேழும்
வந்தநாளாறினின்ப மன்னரான்மகிழ்ச்சியாகும்
சிந்தையிற்கிலேசமில்லை சிறுவருந்தனமுமுண்டாம்
மைந்திறாமணமதாகும் பாக்கியங்களுண்டாமே.

(இ-ள்.) இதில் குரு புத்தி இருபத்தேழு மாதம் ஆறு நாட்களில் இன்பம், அரசரால் மகிழ்ச்சி, மனக்கிலேசமின்மை, மக்களுஞ் சுற்றமு முண்டாதல், விவாகம், பாக்கியம் என்னும் இவைகளுண்டாம், எ-று. 1053

கன்றிசேர்புதனிற்காரி காலெட்டுமதிநாளொன்பான்
இன்றிகெண்மைமாறு மெதிர்த்திடும்பகையுமுண்டாம்
சென்றிடுமலக்காறோயாற் றிசையுத்தரத்துன்பம்
மன்றிடுமுற்றார்கேடு மனமதிற்கிலேசமாமே.

(இ-ள்.) இதில் சனிபுத்தி முப்பத்திரண்டுமாதம் ஒன்பது நாட்களில் நன்மை, பகை, வலக்கால் நோய், உத்திரடத்திசையில் துன்பம், சுற்ற கஷ்டம், மனக்கிலேசம் என்னும் இவைகளுண்டாம், எ-று. 1054

கேது திசாபுத்தி பலன்

கண்டிபர்கேதுக்கேது நாலுமாதிருபத்தேழும்
வேண்டியமனையாண்மக்கட் சீனத்தவெறுப்புண்டாகும்
பூண்டிடும்விலங்கால்ச்சண்டா திபுள்ளோர்தேறும்
ஆண்டதுவருதைத்தார்க்குந் திசையதுவைதிதானே.

(இ-ள்.) கேது திசையில் கேது புத்தி நான்கு மாதம் இருபத்தேழு நாட்களில் மனைவி மக்கள் சகோதரர் இவர்கள்மேல் வெறுப்பு, புரட்டாசி மாதத்தில் காலில் விலங்கிடுதல், அந்தத்திசையில் அவதி என்னும் இவைகளுண்டாம், எ-று.

பூரியபேகேதில்வெள்ளி புத்திரீரேழுமாதம்
பாரியுமக்கட்பேறும் பலித்திடுங்கன்றுகாலி
காரியமெல்லாங்கூடும் நடையிற்பீடையுண்டு
வீரியமனையாணோயா மீளவுமகன்றுபோமே.

(இ - ள்.) இதில் சுக்கிரபுத்தி பதினைந்து மாதங்களில் மனைவியும் மக்கட்பேறும்; கன்று காலியுமுண்டாவதுடன் காரியங் கைகூடுதல், நடையிற் பீடை, மனைவி நோய்ப்பட்டகலுதல் என்னும் இவைகளுண்டாம், எ-று. 1056

அந்தமாங்கேதிற்பானு நாற்றிங்களாறுநாளும்
சிந்திடும்பூமிவிட்டுத் தேசம்போய்வருவன்பின்பு
சுந்தரமேனியெங்குஞ் சுரத்தலைநோயுண்டாகும்
மந்தரமுலையினாளே மனதிற்கிலேசந்தானே.

(இ - ள்.) இதில் சூரியபுத்தி நான்கு மாதம் ஆறு நாட்களில் இடம் விட்டுத் தேசாந்திரம் போய்வருதல், சுரம், தலைநோய், மனக்கிலேசம் என்னும் இவைகளுண்டாம், எ-று. 1057

சாதகேகேளிந்து தன்புத்தியேழுமாதம்
மாதரால்வழக்குச்சண்டை மைந்தர்க்குப்பீடையுண்டாம்
பேர்தலைகன்றுகாலி பொன்னாபரணமுண்டாம்
சீதளமுகத்தினாளே தீங்குவந்தகன்றுபோமே.

(இ - ள்.) இதில் சந்திரபுத்தி ஏழு மாதங்களில் பெண்களால் வழக்கு, சண்டை, மைந்தர்க்கும் பீடை, கன்று, காலி, பொன், ஆபரணம் இவை யுண்டாதல் தீமை வந்தொழிதல் என்னும் இவைகளுண்டாம், எ-று. 1058

கடையரவதனிற்செவ்வாய் கதத்திடுமாதநாலு
இடையுறுமிருபானேழ்நா ளிடர்பயமர்த்தஹானி
படையுறுவழக்குச்சண்டை பலபலவிரோதமாகும்
தடையுறும்பெண்ணாற்கேடு தழல்பயமிகவுண்டாமே.

(இ - ள்.) இதில் அங்காரகபுத்தி நாலு மாதம் இருபத்தேழு நாட்களில் துன்பம், பயம், செல்வநாசம், வழக்கு, சண்டை, பலபல விரோதம், பெண்ணாற் கேடு, அக்கினி பயம் என்னும் இவைகளுண்டாம், எ-று. 1059

கேதுவில்ராகுபுத்தி கேள்பன்னிரண்டுமாதம்
மீதியீரொன்பானாளும் விஷபயம்வந்துசேரும்
மாதர்கடமக்குப்பீடை மன்னவனாசமாவன்
போதவேயர்த்தநாசம் புகழ்நிலைநின்றிடாதே.

(இ - ள்.) இதில் ராகுபுத்தி பன்னிரண்டுமாதம் பதினெட்டு நாட்களில் விஷபயம், மனைவிக்குப்பீடை, அரசன்கேடு, பொருட்சேதம், புகழ்நில்லாமை என்னும் இவைகளுண்டாம், எ-று. 1060

பரிபுளகேதுவுக்குள் பாக்குளமன்னன்புத்தி
ஒருபதினொன்றுநாட்க ளோராறுமர்த்தலாபம்
மருவியமன்னர்சேர்த்தி விஷபயம்வந்துதீரும்
திருவெனமனையாள்சேர்வள் செல்வமுமிகுதியாமே.

(இ - ள்.) இதில் குருபுத்தி பதினொருமாதம் ஆறுநாட்களில் அர்த்தலாபம், அரசசேர்க்கை, விஷபயம், மனைவி சேர்க்கை, செல்வமிகுதியாதல் என்னும் இவைகளுண்டாம், எ-று. 1061

சதிபுகுகேதுவுக்குட் சனிபுத்தியானமாதம்
பதின்மூன்றுநாளொன்பானும் பலபொருட்சேதமாகும்
மதிகலம்பேதமாகு மங்கத்திற்சொறிசிரங்கு
மதிமுகத்தரிவைபீடை மனமதுகிலேசமாமே.

(இ - ள்.) இதில் சனிபுத்தி பதின்மூன்றுமாதம் ஒன்பதுநாட்களில் பல பொருட்சேதம், இடமாறுதல், சரீரத்தில் சொறிசிரங்கு உண்டாதல், பெண்களால் பீடை, மனக்கிலேசமென்னும் இவைகளுண்டாம், எ-று. 1062

குலமுனைகேதிற்புந்தி குறித்திடும்புத்திமாதம்
கலமுறுபத்துமொன்றுநாளிருபத்தேழுக்கும்
தலமதுவிட்டுப்போகுந் தமரினாற்பயமுண்டாகும்
நிலைமையாய்ப்புத்திரசாப நினைத்ததுமுடிந்திடாதே.

(இ - ள்.) இதில் புதன்புத்தி பதினொருமாதம் இருபத்தேழு நாட்களில் இடம்விட்டுமாறுதல், சுற்றத்தாரால் பயம், புத்திரசாபம், எண்ணியகாரியம் கைகூடாமை என்னும் இவைகளுண்டாம், எ-று. 1063

சுக்கிர திசாபுத்தி பலன்

வண்மையாம்புகரில்வெள்ளி மாதங்கணாற்பதுக்கும்
உண்மையாம்பணிகள்முத்து முயர்குடைபுரவியானை
தண்மையாம்புன்மைநீங்கி தாளிலேதனமுஞ்சேரும்
எண்மையங்கிசத்திற்றுக்க மெய்துமைப்பசியிற்றானே.

(இ - ள்.) சுக்கிரதிசையில் சுக்கிரபுத்தி நாற்பதுமாதங்களில் ஆபரணங்கள், முத்துக்குடை, குதிரை, யானை இவைகளுண்டாதல், நன்மையுண்டாய்த் தனலாபமுண்டாதல், ஐப்பசியில் துக்கமுண்டாதல் என்னும் இவைகளுண்டாம், எ-று. 1064

சிறந்திடும்புகரிற்பானு திங்களீராறுந்துன்பம்
குறைந்திடுந்தனமுநாளிற் கொடும்பகையரசராலே
பறந்திடுமனையாண்மக்கள் பலருடன்வழக்காமென்க
உறைந்திடுதெய்வமுன்னூ றுறவுதுபகையதாமே.

(இ - ள்.) இதில் சூரியபுத்தி பன்னிரண்டு மாதங்களில் துன்பம், தனக் குறைவு, அரசரால் பகையுண்டாதல், மனைவிமக்களுடன் வழக்கிடுதல், தெய்வம் சுற்றத்தார்க்குப்பகை என்னும் இவைகளுண்டாம், எ-று. 1065.

மருவியபுகரிற்சோமன் மாதமோரிருபதுக்கும்
கருதியகருமநாளில் வந்துகைகூடுமென்க
அருகுறுமனையாளாலே யடர்பகைவந்திடும்
கருதியவின்பமாதர் தம்மொடுபிணக்கமாமே.

(இ - ள்.) இதில் சந்திரபுத்தி இருபது மாதங்களில் கருமங் கைகூடுதல், மனைவியால் பகை, இன்பம், பெண்களிடத்திணக்கம் என்னும் இவைகளுண்டாம், எ-று. 1066

புண்ணியபுகரிற்செவ்வாய் புகறிங்களீரேழுக்கும்
நண்ணியபூமியுண்டா காரியார்க்கருமநாசம்
எண்ணியதேவர்சேவை யிருவராற்பகையுண்டென்னும்
கண்ணினோய்மெய்யிற்குட்டங் கண்டதுதிருந்தானே.

(இ - ள்.) இதில் அங்காரகபுத்தி பதினான்குமாதங்களில் பூமியுண்டாதல், மனைவியால் காரியபங்கம், தேவசேவை, இருவரால் பகை, கண்ணோய் குட்டம் இவைகளுண்டாம், எ-று. 1067

திருந்தியபுகரில்ராகு திங்களோர்முப்பத்தாறும்
பொருந்தியமுனியைப்போலே பூமியிற்றபசுசெய்வன்
வருந்தியமைந்தராலே வருங்கலகங்கண்மெத்த
அருந்தியமருந்தினாலே விஷமதாயலைவன்றானே.

(இ - ள்.) இதில் இராகுபுத்தி முப்பத்தாறு மாதங்களில் தபசு செய்தல், மைந்தரால் கலகம் வருதல், தின்றமருந்து விஷமதாய் அலைதல் என்னும் இவைகளுண்டாம், எ-று. 1068

முன்புறுபுகரின்மன்னன் முப்பத்திரண்டுமாத
மின்புறுதானியங்க ளெய்துமேயர்த்தலாபம்
அன்புறுமறையோராலே யதிசயமிகவுமுண்டாம்
மன்புகழ்தோணியவிட்டத் திசையினில்வருந்தமாமே.

(இ - ள்.) இதில் குருபுத்தி முப்பத்திரண்டு மாதங்களில் தானியலாபம், அர்த்தலாபம், மறையோரால் அதிசயமுண்டாதல், தோணி, அவிட்டம் இத் திசைகளில் வருத்தம் என்னும் இவைகளுண்டாம், எ-று. 1069

சாலவேவெள்ளிதன்னிற் சனிமாதமுப்பத்தெட்டும்
மூலமாநோயினாலே முடங்கியேமிகுக்கைகால்
வேலிலுறும்வியாதிதுன்ப மெய்யினில்ரோகமுண்டு
ஆலமாம்விஷம்போலன்ன மரோசிகமாகுந்தானே.

(இ - ள்.) இதில் சனிபுத்தி முப்பத்தெட்டு மாதங்களில் மூலநோய், கைகால் நோய், சரீரத்தில் ரோகம், துன்பம், அன்னத்துவேஷம் என்னும் இவைகளுண்டாம், எ-று. 1070

வெள்ளியிற்புந்திமாதம் விரும்புமுப்பத்துநான்கும்
தெள்ளியமனையாண்மக்கள் சிறப்பொடுபொருளுண்டாகும்
வள்ளியகல்விஞானம் வாக்கினிற்பாடலாகும்
உள்ளியசிற்பநூலே வன்மைகள்பலவுண்டாமே.

(இ - ள்.) இதில் புதன்புத்தி முப்பத்துநான்கு மாதங்களில் மனைவி மக்கள் சிறப்பு, பொருள்சேர்க்கை, கல்வி, ஞானம், வாக்கினால் பாடுதல், சிற்பநூல் வன்மைகள் என்னும் இவைகளுண்டாம், எ-று. 1071

இட்டமாம்வெள்ளிதன்னிற் கேதுவீரேழுமாதம்
துட்டமாமிருகத்தாலே துன்பமுமிகவுண்டாகும்
அட்டமாமனையாடன்னி லனுபோகத்தாலேநோயாம்
இட்டமாய்விஷத்தான்வீட்டிற் றீண்டியேமிகுந்தானே.

(இ - ள்.) இதில் கேதுபுத்தி பதினான்கு மாதங்களில் துட்டமிருகத்தால் துன்பம், மனைவியின் சம்போகத்தால் நோய், விஷத்தீண்டியிறக்கல் என்னும் இவைகளுண்டாம், எ-று. 1072

புத்தியின்பலன்கடம்மைப் பொதுமையாயுரைத்தாரேனும்
சித்தமாய்க்கோள்களின்ற திரிகோணங்கேந்திரமுச்சம்
தத்தியவியமாறெட்டிப் பகைநீசந்தான்சேரம்சம்
ஒத்தநல்லாதிபத்தியம் வர்க்கமோடவஸ்தைவக்கிரம்.

(இ - ள்.) புத்தியின் பலன்களைப் பொதுவாகச் சொன்னாலும் கிரகங்கள் நின்ற திரிகோணம், கேந்திரம், உச்சம், பன்னிரண்டு, ஆறு, எட்டாமிடங்கள், பகை, நீசம் இவைகளின் அம்சங்கள், ஆதிபத்தியம், வர்க்கம், அவஸ்தை, வக்கிரம், எ-று. 1073

பாவத்திற்கண்டயோக மவயோகத்தன்னைப்பார்த்தும்
பூவருமானேநல்ல பலன்களைப்புகலவேண்டும்
தாவருமித்திரமுட்சித் திரத்திற்கும்புத்திபோல
ஓவறப்பலன்கள்சொல்வ ருயர்மதியுள்ளோர்தாமே.

(இ - ள்.) கண்டயோகம் அவயோகம் இவை முதலியவற்றைப் பார்த்து பெண்ணே! நல்ல பலன்களைச் சொல்லவேண்டும். அன்றி சித்திரவட்சித்திரங்களுக்கும் புத்திபோலவே பார்த்து மதியுள்ளோர் பலன்கள் சொல்லுவார்கள், எ-று. 1074

மகாதிசை பலனறிய

வெண்பா

சீரார்திசாபலனைத் தேர்ந்துபின்சொல்லவெண்பாப்
பாவோர்முன்னையாளும் பாடவே—மோராருங்
கையானைவித்தமலர் மையானைக்காத்தமழுக்
கையான்சுதன் முன்னோன்காப்பு.

(இ - ள்.) திசாபலன்களை யாராய்ந்து வெண்பாவாகப் பாடுதற்கு மன்மதனைக் காய்ந்த மழுக்கையோனுடைய பாலகன் தந்த—விநாயகனே காப்பாவான், எ-று. 1075

சூரிய மகாதிசை பலன்

அக்கினியால்பீடை பயமைவிருத்திபொன்சேதம்
விக்கபயஞ்சத்துருவால் மேவுபகை—யொக்கவே
கண்ணோய்சிரோகங் காதரபிதாவிருத்தி
பொன்னுறுமிரவி திசைக்கே.

